சுதேசமித்திரன்

விஜயதசமி மலர்

SWADESAMITRAN

4 அணா

VIJAYADHASAMI NUMBER

Established 1909. Tel: GOKUL. Phone: No. 55.

டி. எஸ். ஆர்.

கம்பெனி, கும்பகோணம்.

அநேகம் பொருள் காக்ஷி சாலைகளில்
தங்கம், வெள்ளி பதக்கங்கள் பரிசு பெற்றதும்,
உயர்தர டாக்டர்களால் பரீக்ஷித்து
ஆமோதிக்கப்பட்டதுமான எங்கள்

சந்தனாதித் தைலம்

அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

மூளைக்குக் குளிர்ச்சியையும், சரீரத்திற்கு ஆரோக்கியத்தையும், கூந்தலுக்கு
வளர்ச்சியையும் கவர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றது.

கோகுல் வாஷிங் சோப்

ஆடைகளை மாசற வெளுப்பதில் நிகரற்றது

முக்கியக் கவனிப்பு:

கோகுல் கூந்தல் தைலம் வாங்குபவருக்கு 28X21 அழகிய
ஆலிலை கிருஷ்ணன் படம் ஒன்று இனாம்.

கோகுல் கார்டுன் சோப் அநேக கட்டிகளில் பைசா முதல் ரூபா வரை
நாணயங்கள் வைக்கப்பட்டிருக்கிறது.

எல்லா விடங்களிலும் கிடைக்கும்.

மற்ற வாசனை சாமான்களடங்கிய காட்லாகிற்கு எழுதவும்.

Branch: MANNARGUDI, Agencies Throughout India & Burma.



புதிய **சென்னை சர்வகலாசாலை** கட்டிடம் பூராவும் 250 **இந்தியா** விசிறிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்தியா

அல்லது

பாரத்

விசிறிகளை

நிர்மாணித்

துள்ள

ஆயிரக்கணக்

கான

பொது

ஸ்தாபனங்

களில்

சில

கஷ்டப்பட்டு அனுபவித்தவர்களுக்கு

நன்றாகத் தெரியும்



மற்ற தேசத்தவர்களைவிட இந்தியர்களுக்கு நன்குதெரியும்-கடும் கோடையின் கஷ்டத்திலும் சகிக்க முடியாத எழ்மையிலும் கஷ்டப்பட்டவர்களுக்கு—இந்தியாவிற்கும் இந்தியர்களுக்கும் தேவை என்னஎன்பதுநன்கு தெரியும்.

இந்தியா—ரோட்டாஸ்—பாரத்—தாரா விசிறிகள் இந்தியாவில் இந்தியர்களாலேயே தயாரிக்கப்படுகின்றது. இங்குள்ள நிலைமையும், தேவையும் அவர்கள் நன்கு அறிந்ததே.

பூராவும் முதல்தர சாமான்களைக் கொண்டு தயாரிக்கப்படுவது. இந்திய சீதோஷ்ண நிலைக்கு ஏற்றபடியுள்ளது. ஆனால் வெகு மிதமான விலை. குறைந்த மின்சாரம் செலவாவதால், உங்கள் மின்சாரச் செலவில் விசேஷ சிக்கனமேற்படும். சப்தமும் தொந்திரவுமின்றி வேலை செய்வதற்குச் சிறந்தது. வருஷக் கணக்காக வேலை செய்யவே அழுத்தமாகக் கட்டப்பட்டிருக்கிறது.



இந்தியா எலக்டிரிக் வர்க்ஸ் லிமிடெட்.

12-A, லிங்க செட்டித் தெரு : : மதராஸ்.



சென்னை, இம்பீரியல் கெமிக்கல் இண்டஸ்டிரீஸ் (இந்தியா) லிமிடெட்டின் ஆபீஸ்கள் சென்னை துறைமுகத்தாரால் 50 பாரத் விசிறிகள் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன.

"சிவபெருமான் கிருபை"

"சொல்லு பாப்பா"

தியாகராஜ பாகவதரின் ஸ்பெஷல்

இவற்றை

ஓடியன் ரிகார்ட்

CA 1159-ல் கேளுங்கள்

★

"ஜெயபாரத"

"ஒருவிதத் தொழில்"

அஸ்வத்தம்மா பாடிய

அழகிய தேசிய கீதங்கள்

இவற்றை ஓடியன் ரிகார்ட்

CA 1160-ல் கேளுங்கள்

ஸரஸ்வதி ஸ்டோர்ஸ்,

மவுண்ட் ரோட் : : சென்னை.

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ், லிமிடெட்.

(ஸ்தாபிதம் 1912)

போன் { ஆபீஸ்: 110. தொழிற்சாலை: 99. }

தந்தி: "Motor"

தலைமை ஆபீஸ்: மதுரை.

★

பிராஞ்சுகள்:

காரைக்குடி, புதுக்கோட்டை, திருநெல்வேலி

★

ஜெனரல் மோட்டார் இந்தியா லிமிடெட்

தயாரிக்கும் கீழ்க்கண்ட புகழ்பெற்ற கார்களுக்கு டிஸ்டிரிபியூட்டர்கள்.

செவ்ரோலட், பியூக், ஓபல், வாக்ஸால், பாண்டியாக்.

மதுரையிலும்,பிராஞ்சுகளிலும் ஸர்வீஸ் ஸ்டேஷன்களில் நவீன இயந்திர சாதனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சிறந்த நிர்வாஹம். நாங்கள் விற்கும் கார், டிரக்குகளுக்கான உண்மையான பிரத்யேக பாகங்களின் ஸ்டாக் ஏராளம் கைவசமிருக்கின்றன.

ஓபல், ஓல்ட்ஸ் மோபைல் கார்கள், பெட்போர்ட் டிரக்குகள்

இவற்றிற்கு

வட ஆற்காடு, தென்னாற்காடு, சேலம், திருச்சினப்பள்ளி, தஞ்சை, ஜில்லாக்களுக்கும்

பிரெஞ்சு எல்லைகளான, புதுச்சேரி காரைக்காலுக்கும்

டிஸ்டிரிபியூட்டர்கள்.

★

எமது சப் - டீலர்கள்

திருச்சினப்பள்ளி ஆடோமோபைல்ஸ் லிமிடெட், திருச்சினப்பள்ளி.

மாடர்ன் ஆடோ சேல்ஸ் அண்டு ஸர்விஸ், தஞ்சாவூர்.

ஆடோ சப்ளைஸ் கம்பெனி, சேலம்.

W. A. BEARDSELL & Co., LTD.

SECOND LINE BEACH,

MADRAS.

Managing Agents

Mettur Industries Ltd.

Distributors

India Tyres.

Luxram Electric Lamps.

'Taxina' Spray & Brushing Paints.

Sole Agents

Bowater-Lloyd Papers & Boards.

Pearl Assurance Co., Ltd.

National Guarantee & Suretyship Assn.

China Underwriters.

Courtaulds (India) Ltd.

Bisleri Patent Medicines.

சுதேசமித்திரன் விஜயதசமி மலர்

விஷய அட்டவணை

காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமான் சுபாஷ் போஸ் செய்தி 9
இந்தியாவின் ராணுவப் பிரச்னை—
ஸ்ரீமான் எஸ். ஸத்தியமூர்த்தி, எம். எல். ஏ. 10
தக்ஷிண சங்கீதத்தின் தற்கால நிலை—சங்கீத ரத்னாகரம்
ஸ்ரீமான் அரியக்குடி ராமானுஜ ஐயங்கார் 12
பொருமைக்கு அயலுமில்லை உறவுமில்லை—
மகாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி
டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் 13
ஸ்ரீ மகாபாரதத்தின் சிறப்பும் அதன் கால நிர்ணயமும்
—மகாமஹோபாத்யாய பாஷாபாரத துரந்தர
எம். வி. ராமானுஜாசாரியார் 15
இந்தியாவின் புராதன அரசியல்—
ராவ்பகதூர் கே. வி. ரங்கஸ்வாமி ஐயங்கார் 20
ஸமஷ்டி செல்வநிலை—
டாக்டர் பி. எஸ். லோகநாதன் 24
ஸ்ரீ வேதாந்த தேசிகன்—
ஸ்ரீமான் ஏ. ஸ்ரீநிவாஸராகவன், எம். ஏ. 28
தமிழைப் பேணின சில அரசர்கள்—
ஸ்ரீமான் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார் 33
பிராயோபவேசமும் தீப்பாய்தலும்—
ஸ்ரீமான் மு. இராகவய்யங்கார் 39
மொழி ஆராய்ச்சி—
ராவ்பகதூர் எஸ். வையாபுரிப்பிள்ளை, பி.ஏ., பி எல். 43
சித்ரப்படங்கள் 49
பூவும் பூவையரும்—
வெள்ளவத்தை ஸ்ரீமான் குல சபாநாதன் 57
நான்பெற்ற இன்ப வெள்ளம்—கௌண்டின்யன் 61
முத்துலக்ஷ்மி—கே. எஸ். என். 65
சித்ரப்படங்கள் 69
சரணாகதம்—ஸ்ரீமான் தி. ரா. ர. சபேசய்யர் 73
பகடு பரிசளித்த பாவலன்—
ஸ்ரீமான் எஸ். சோமசுந்தர தேசிகர் 80
நிர்வாணதேசம்—ஸ்ரீமான் கி. வா. ஜகந்நாதன் 81
இந்தியாவில் தொழிலாளர் முன்னேற்றம்—
ஸ்ரீமான் பி. சிவராவ் 83
பிரிவு—ஸ்ரீமான் பெ. கோ. சுந்தரராஜன் 87
இந்தியாவின் புதிய அரசியல்—
ஸ்ரீமான் என். டி. வரதாச்சாரி, அட்வொகேட் 91
கமலநாதன் ஆடிய கோலை நாடகம்—
ஸ்ரீமான் எஸ். ரங்கராஜ ஐயங்கார், எம். ஏ., பி.எல். 97
ஆசார்ய சங்கரர்—டாக்டர் வே. ராகவன் 107
கம்பன் கடல் சித்திரம்—
ஸ்ரீமான் எஸ். வி. வரதராஜ ஐயங்கார் 109
ஜாவா தீவின் புராதன நாகரீகம்—குறள் 113
சிரவணம் அல்லது ஹரிகதை—
காயகசிகாமணி ஸ்ரீமான் எல். முத்தையா பாகவதர் 119
ஸ்வர்ணபூமியின் தாய்—
ஸ்ரீமான் கா. சீனிவாஸாச்சாரியார் மொழிபெயர்ப்பு 121
பஸ் பிரயாணம்—
சங்கீத வித்வான் முசிறி சுப்ரமணிய அய்யர் 125
வர்ணப்படங்கள்—
காகாசுரன்
ராதாகிருஷ்ணன்
கிரிஜாபரிணயம்
காவேரி ஜனனம்

Index to Advertisers.

Ambi's Cafe 42
Anglo-Indian Drug & Chemical Co. 68
Alliance Co. 17
Amrutanjan Ltd. 23
Appasamy Chetty & Co. 7
Bombay Life AssuranceCo., Ltd. 63
Bombay Fire & General Ins. Co. Ltd 78
Bathgate & Co. 105
Bengal Lamp Work 110
Beardsell & Co., Ltd. 5
Central Talkie Equipment Co. 54
Chandanmal & Co. 32
Chimanlal Pratapchand. 32
Cuticura 86
Castophene Manufacturing Co 118
Calcutta Chemical Co. 121, 124
Curzon & Co. 21
Chas. Morgan & Co., Ltd. 129
Daggette & Ramsdell 95
Diamond Recording Co. 128
Dowells Electrical Co. 12
Eveready 96
Famous Pictures 84
Flit 108
Govt. Soap Factory 33
Govt. Silk Weaving Factory 35
Gabrial Pharmacy 56
Gopalakrishna Kone 67, 76, 90
Ganga Works 67
Guardian of India Ins. Co., Ltd. 68
Gibbs Dentifrice 83
General Swadeshi's Ltd. 111
General Ass. Society Ltd. 10
Hindustan Co-op. Ins. Society Ltd. 101
India Electric Works Ltd. 2
India Life Benefit Ass. Society Ltd. 36
Indian Bank Ltd. 42
Indo Union Ass. Co., Ltd. 47
Iyer & Co., M. R. V. 56
Indo-Commercial Bank Ltd. 58
Indian Mutual Life Assn. Ltd. 16
John Dickinson & Co., Ltd. 25
Jwalasingh & Sons. 126
Kanaka Films Ltd. 37
Kumbakonam Bank Ltd. 38
Kannan Devan Hills Produce Co., Ltd. 48
Kumbakonam Provision Stores 82
Kalzana 88
Kesari Kuteeram 93
Kader Sahib & Sons, M. 98
Kopran Chemical 103, 127
Kailas Bros. M 126
Dr. K Krishnamurti 11
Lakshminarayana Chetty, A. V. 39
L'Union, Fire, Accident & Gl. Ins. Co., Ltd. 47
Lakshmi Insurance Co. Ltd. 66
L'Concord Insurance Co. Ltd. 78
Lux 87
Lakshmi & Co. 113
Laljee Godhoo & Co. 7
Marshalll Sons & Co., (India) Ltd. 31
Madras United Artists Corpn. Ltd. 115
Madras Peoples Bank Ltd. 22
Madras Safe Deposit Co., Ltd 53
M. & S. M. Railway Co., Ltd. 59
Dr. Mathuram A. 62
Mayura Films Ltd. 75
Modern Automobiles 98
Mysore Cafe 100
Mahalakshmi Studios Ltd 106
Mohan Movietone Co. 114
Murugan Talkie Films 122
Mohamed Ebrahim & Co. 19, 126
National Indian Life Ins. Co., 76
New Asiatic Life Ins. Co. Ltd. 90
National Insurance Co., Ltd. 110
New Field & Co. 119
Nagalingappa & Co., T. C. 120
National Mutual Assurance of India Ltd. 23
New India Ass. Co., Ltd. 131
Oriental Govt. Security Life Ins. Co., Ltd. 8
Pears 94
Parvathi Medical Hall 102
Philips Electrical Co., (India) Ltd. 130
Radha Bros. 26
Raghavendra Rao, K. 39
R. M. S. & Co. 104
Roy & Co., 105
Rane (Madras) Ltd. 132
Saraswathi Stores 3
Salem Sanker Films Ltd 29
South India Co-op. Ins. Society Ltd. 27
Sundaram Iyengar & Sons. T. V. Ltd. 4
Subramania Iyer, V. N. 38
Satagopachari, V. K. 40
Southern India Confectionery Factory 41
Sarada Vilas Press. 41
Sitaram, T. V. 43
Sarangapani Alvar N. A. P. 45
Swaminatha Iyer R. Prof. 45
South Indian Railway Co Ltd. 55
Sanatogen 85
Sunlight. 92
South India Fire & Gl. Ins. Co., Ltd. 93
Sri Lakshmi Jewellery Mart 97
Swaminathan V. S. 100
Steradent 112
Sarangapani Devasthanam 123
Sound Products Co. 128
South India Chemicals 14
T. S. R. & Co. 1
Tropical Insurance Co, Ltd,. 82
Tata Iron & Steel Co, Ltd. 124
Universal Fire&General Ins. Co.,Ltd. 53
United Chit Funds Ltd. 22
Vim 89
Vanguard Insurance Co., Ltd. 99
Visvanatham & Co. S. 116
Varjeevandas Hirjee & Co. 126
Warden Insurance Co., Ltd. 44
Western India Life Insurance Co., Ltd. 74
Water Supply Specialists Ltd. 77
West End Watch Co. 18
Zam-Buk 125

எஸ்.ஜி

தான் அசல் பட்டணம்

பெருங்காயம்

எங்கும் கிடைக்கும்

மார்க்கைக் கவனித்து வாங்குங்கள்.





உலகம் உன்னத வேகமாய் ஓங்கிச் செல்கிறது!

நாகரிகம் நாளொரு வண்ணமாய் வளர்ந்து வருகிறது!!

வாழ்க்கையின் வேகத்திலும், வியர்வையிலும் விறுவிறுப்பிலும் என்ன சந்தர்ப்பம் நேர்ந்தபோதும் உங்களுக்கு ஆதரவையும், அமைதியையும், நம்பிக்கையையும், பொறுப்பையும், பலத்தையும், தைரியத்தையும் எல்லாவற்றையும் சமாளிக்கவல்ல சக்தியையும் கொடுக்கக்கூடியது :

ஜீவ பாதுகாப்பு

என்னும்

"லைப் இன்ஷ்யூரன்ஸ்"

நம்பிக்கையான, சுலபமான, நயமான, சந்தர்ப்பத்துக் கிசைவான ஜீவ பாதுகாப்பை உங்களுக்கு அளிக்கக்கூடிய ஸ்தாபனம் இதுவே.

பழமையானது
பலமானது
பெயர்பெற்றது
நேர்மையானது
நிறைந்த நிதியுடையது

இந்த வேகப் போக்கில் உங்கள்

பாதுகாப்பு

ஸ்திரமா, நிச்சயமா ?

ஓரியண்டல், லைப்

கவர்ன்மேண்ட் செக்யூரிடி

அஷ்யூரன்ஸ் கம்பெனி, (லிமிடெட்)

அர்மீனக்காரத் தெரு, சென்னை.

தலைமை ஆபீஸ்: பம்பாய்.

இதில் நீங்கள் ஒரு பாலிஸியை எடுத்துக் கொண்டால் உங்களுக்கு நிரம்பிய பாதுகாப்பு கிடைக்கும். இது நிச்சயமே!

By Courtesy "Grihalakshmi"

காகாசுரன்

காங்கிரஸ் தலைவர்

ஸ்ரீமான் சுபாஷ் போஸ் ஆசி.

"மித்திரன்" நீடூழி வாழ்க

காங்கிரஸ் மகா சபைத் தலைவர் ஸ்ரீமான் சுபாஷ் சந்திரபோஸ், 'சுதேசமித்திரன்' வாரப் பதிப்பு விஜயதசமி மலருக்குப் பின் வரும் செய்தியை அனுப்பியிருக்கிறார்:—

'மித்திரன்' விஜயதசமி மலர் வாசகர்களுக்கு நமது பூஜா உத்ஸவ மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்வதில் நானும் கலந்து கொள்ளுகிறேன். தென்னிந்தியாவில் பொது மக்களிடையே இந்திய தேசீய உணர்ச்சியை யுண்டுபண்ணுவதில் தங்கள் பத்திரிகை செய்துள்ள அரிய சேவையை எப்பொழுதும் மறக்க முடியாது. 'மித்திரன்' பழைய ஆசிரியரான காலஞ்சென்ற ஸ்ரீமான் எ. ரங்கஸ்வாமி அய்யங்கார் இந்திய காங்கிரஸ் மகா சபைக்குச் செய்துள்ள அரிய ஊழியத்தையும் நான் ஒருக்காலும் மறக்க முடியாது.

இத்தேச மகா ஜனங்களுக்கு மிகவும் உபயோகமான சேவையை இன்னும் புரிந்து கொண்டு 'மித்திரன்' நீடூழி காலம் வாழ வேண்டுமென்று நான் மனப்பூர்வமாகப் பிரார்த்திக்கிறேன்.

சுபாஷ் சந்திரபோஸ்

இந்தியாவின் ராணுவப் பிரச்னை

—:[:o:]:—

(ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி, எம். எல். ஏ.)

இந்தியாவுக்குப் பூர்ண சுயராஜ்யம் கிடைத்துவிட வேண்டுமென்று நாம் ஆத்திரமடைந்திருக்கிறோம். ஆனால் நமக்கு என்ன ஆத்திரமிருந்தாலும் சரி, அதில் சில விஷயங்களை நாம்: புறக்ணிக்க முடியாது. அப்படிப்புறக்கணிக்க முடியாத விஷயங்களில் இந்திய ராணுவப் பிரச்னை ஒன்றாகும். இந்தியா மிகப் பெரும்பாலும் பாதுகாப்பற்ற தேசம். இதில் யாரையும் குறைத்துக் கூறுவது இப்பொழுது எனது உத்தேசமல்ல. ஆனால் ஒன்று நான் திட்டமாகக் கூறவேண்டும். இந்தியா இப்பொழுது கூலிக்கு மாரடிக்கும் இந்தியப் படைகளாலும் இந்தியரல்லாத படைகளாலும் பாதுகாக்கப்பட்டு வருகிறது. வருஷத்தில் 12 கோடி ரூபாய் செலவில் பிரிட்டிஷ் படைகள் இங்கு இந்தியாவில் வைக்கப்பட்டிருக்கின்றன. நமது உள் நாட்டுப்பாதுகாப்புக்காக இப்படைகள் வைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. உண்மை யாதெனில், இங்கு வைக்கப்பட்டிருக்கும் பிரிட்டிஷ் படைகள் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு ராணுவத்தின் ஒரு பாகமாகும். நமது அரசியல் அடிமை காரணமாகவும், நமது கதியற்ற நிலைமை காரணமாகவும் இதற்கு நாம் பணஞ் செலவழிக்கும்படிச் செய்யப்படுகிறது. ஒன்று இந்தப் படைகளைத் திரும்ப அழைத்துக்கொண்டுவிட வேண்டும். அல்லது இதற்கான செலவை இங்கிலாந்து ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நாம் ஓயாது கிளர்ச்சி செய்துவருகிறோம். நெருக்கடி காலத்தில் தங்களுக்குப் பாதுகாப்புக்கு வேண்டியிருப்பதாக மாகாணக் கவர்ன்மெண்டுகள் கூறுவதன்பேரிலேயே இந்தப் படைகள் இந்தியாவில் வைக்கப்பட்டிருப்பதாகப் பிரிட்டிஷார் சாக்குச் சொல்லிவந்த காலமுமுண்டு. புதிய மாகாண கவர்ன்மெண்டுகளை இது பற்றி ஆலோசிப்பார்களாவென இந்தியா சட்டசபையில் இந்தியா கவர்ன்மெண்டை நான் கேட்டேன். ஆனால் அவர்கள் இதற்கு மறுத்துவிட்டனர். காரணம் எல்லோரும் அறிந்ததுதான். புதிய மாகாண கவர்ன்மெண்டுகள்—அவை காங்கிரஸ் கவர்ன்மெண்டுகளாயினும் சரி—அல்லாதவையாயினும் சரி—தங்கள் மாகாணங்களில் அமைதியை நிலைநிறுத்தப் பிரிட்டிஷ் படைகள் இருக்க வேண்டுமென்று அவை கோரப்போவதில்லை. அது தெளிவாகி விட்டால் பிறகு பிரிட்டிஷ் நன்மையை நாடியே இந்தப் படைகள் இங்கு வைக்கப்பட்டிருக்கிறதென்பது சந்தேகமற வெளிப்பட்டுவிடும்.

இந்தியப் படைகள் இந்தியாவுக்காகவன்று

இந்தியப்படைகள் அவ்வளவாக இந்தியாவின் பாதுகாப்புக்காக வைக்கப்படவில்லையென்று கூறுவேன். இந்தியாவில் பிரிட்டிஷாருக்குள்ள ஆதிக்கியத்தைப் பாதுகாக்கவே இது வைக்கப்பட்டிருக்கிறது. இந்திய ராணுவ இந்தியப் பிரிவு ஒருக்காலும் தன் தேசத்தைப்பற்றி நினைக்க முடியாதபடி அது நிர்வகிக்கப்பட்டுவருகிறது. ஜான்புல் ஆக்ஞையையே அது எதிர்பார்த்திருக்கவேண்டும். இந்திய ராணுவத்தின் பெரும்பாகத்தினர் கூர்க்கர்கள். அதாவது நேபாளத்திலிருந்து சேர்க்கப்பட்டிருக்கின்றனர். இந்த தேசம் இந்தியாவுக்கு வெளியில் இருப்பதாகும். இதற்காக வருஷா வருஷம் இந்திய கவர்ன்மெண்டார் நேபாள தேசக் கவர்ன்மெண்டுக்கு 10 லக்ஷம் கொடுத்துவருகின்றனர். இந்தியப்படையின் மற்றப் பிரிவுகளை எடுத்துக்கொண்டால் ராணுவஜாதியென்றும் அல்லாதவரென்றும் பாகுபாடு செய்யப்படுகிறது. ஒரு சில சீக்கிய, கார்வாலி, ராஜபுத்திர, முஸ்லிம் படைகளே வைத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. வங்காளமும் தென்னிந்தியாவும் ராணுவத்திலிருந்து அடியுடன் விலக்கப்பட்டிருக்கின்றன.

பீரங்கிப் படைகள் சம்பந்தப்பட்டவரையில் இந்தியருக்கிருந்த தடை நீக்கப்பட்டுவிட்டாலும், இதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மிகவும் சொல்பமானது. இந்தியக் கடற்படையில் சீர்திருத்தம் நத்தை வேகமாகவே காணப்படுகிறது. ஆகாயப்படை விஷயத்தில் இந்தியா இங்கிலாந்து போல் சம அந்தஸ்தில் இருக்கக்கூடும். ஆனால் இதில்கூட முன்னேற்றமென்பது மிகவும் மெதுவாகவே இருக்கிறது. ஆகவே இந்த அளவில் ராணுவத்தை இந்திய மயமாக்கிவிடுவதென யாராகிலும் நினைக்கும் பக்ஷத்தில் அவர் பிறவி முட்டாளாகவே இருக்க வேண்டுமென்று மிஸ்டர் டாட்டன்ஹாம் இந்தியா சட்டசபையில் கூறினார். அவர் சொன்னது கடுமையாயினும், உண்மை அதுதான்.

இந்திய மயமாக்கக் கோரிக்கை

சென்ற பல வருஷங்களாக மிதவாதிகள் முக்கியமாக ஸர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யர் முயற்சியினால் ராணுவத்தை இந்திய மயமாக்கும் பிரச்னை இந்தியர் பொதுஜன அபிப்பிராயத்தில் ஒரு முக்கிய விஷயமாக வைக்கப்பட்டிருக்கிறது. ஸ்கீன் கமிட்டி ஒரு யாதாஸ்து அனுப்பிற்று. ஸாண்டுஹர்ஸ்ட்டு கமிட்டி ஒரு யாதாஸ்து அனுப்பிற்று. இந்திய உத்தியோகஸ்தர்களுக்குத் தேர்ச்சி யளிக்கவென டேராடூனில் ஒரு கலாசாலையேற்படுத்தப் பட்டிருக்கிறது. இதற்கான திட்டமொன்று வகுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதெல்லாம் இருந்தும் இந்தியாவின் பாதுகாப்பை இந்தியர்களிடமே ஒப்படைப்பதென்றால் இங்கிலாந்து பயப்படுகிறது. பழைய இந்திய சிப்பாய் கலகமென்கிறார்களே, அக்காலத்தில் எப்படிப் பயந்தார்களோ அப்படியேதான் இப்பொழுதும் அவர்கள் பயப்படுகின்றனர்.

சமீபகாலம் வரை இந்திய தளகர்த்தராக விருந்த ஸர் பிலிப் செட்வோடு இந்தப் பரீக்ஷை வெற்றிகரமாக இல்லையெனக் கூறினார். அரசியல் நோக்கமெல்லாம் ராணுவ விஷயத்தில் புகுந்து விட்டதாக அவர் புகார் செய்தார். இவையெல்லாம் வெறும் புகார்களே. இவை ஒருக்காலும் ருஜுப்பிக்கப் படமாட்டா. இவை வாபீஸ் பெறப்பட வேண்டுமென்று வற்புறுத்த நமக்குரிமையுண்டு.

இந்தியப் பாதுகாப்பு இந்தியாவையே பொறுத்தது.

ஆனால் இதெல்லாம் பழைய சமாசாரம். இனி என்னவென்பதே இப்பொழுது கேள்வி. இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் சமஷ்டி விஷயத்தில் ஏதாகிலும் ஒருசமரஸ முடிவு செய்துகொள்ளப்படுமாயின் இந்தியாவின் பாதுகாப்பு இந்தியாவையே அதிகம் பொறுத்ததாக விருக்கவேண்டுமென்ற கொள்கையை அதில் ஒப்புக்கொண்டாக வேண்டும். அதற்காக இந்தப் பிரிட்டிஷ் படைகளையெல்லாம் திரும்ப அழைத்துக்கொள்ளுங்கள், அல்லது அவற்றிற்கான முழுச் செலவையும் கொடுங்கள் என நாம் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரைக் கேட்கவேண்டும். இன்று இருப்பதுபோல் இந்தியப்படைகள் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு ஆதிக்கியத்திலேயே இருக்குமாயின் இவற்றிற்கான செலவை யுத்தேசித்து பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இன்னும் அதிக விகிதம் கொடுத்தாகவேண்டும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் எதிர்கால பாதுகாப்புப் பிரச்னை மேனாடு மத்தியதரைக் கடல்பிரதேசப் படைகளைப்போல் கீழ்த் திசையிலுள்ள பிரிட்டிஷ் இந்தியப் படைகளையும் பொறுத்திருக்கிறது. ஆகையால் இந்தியாவில் படைகள் வைத்திருக்கும்

இந்தியாவின் சிறந்த ஆயுள் ஆபீஸ்

ஜெனரல் அஷ்யூரன்ஸ் ஸொஸைடி லிமிடெட்.

தலைமை ஆபீஸ், ஆஜ்மீர். — ஸ்தாபிதம் 1907.

50,000 திருப்தியடைந்துள்ள பாலிஸிதாரர்களே

இதற்கான அத்தாட்சி.

எல்லாத் தேவைகளுக்கும், சௌகர்யத்திற்கும் ஏற்ற பாலிஸிகள்.
ஏஜென்ஸி நிபந்தனைகள் தாராளமானவை, வசீகரமானவை.

பூராவிவரங்களுக்கும் எழுதவும்:

ஜெனரல் மானேஜர், ஆஜ்மீர்.

அல்லது, பிராஞ்சு மானேஜர்கள்: மதராஸ், ஹைஃப்ளி, பெங்களூர். அல்லது பிரதம ஏஜெண்டுகள்: மதுரை, ராஜமஹேந்திரபுரம், சேகந்திராபாத், திருச்சினுப்பள்ளி. அல்லது ஆர்கனைஸர்கள்: ஔரங்காபாத், பெல்லாரி, வேலூர்.

மகாத்மா காந்தி

உலகம் போற்றும இவ்வுத்தமரின் 70-வது ஜயந்தி இன்று பாரத தேசமெங்கும் பக்தி சிரத்தை யுடன் கொண்டாடப்படுகிறது.

செலவில் தனக் குரித்தான பாகத்தை இங்கிலாந்து நமக்கும் கொடுத்தாக வேண்டும்.

. உத்தியோகஸ்தர்கள் பதவி உள்பட எல்லாப் படிகளிலும் இந்திய மயமாக்குவதற்கான முறை என்னவென்பதைத் திட்டமாக முடிவு செய்தாக வேண்டும். காலாட்படை, கப்பற்படை, விமானப்படை ஆகிய எல்லாவற்றிலும் இதைச் செய்தாக வேண்டும். இதற்காக 20 அல்லது 25 வருஷங்கள் என ஒரு கால வரையறையை முடிவு செய்தாக வேண்டும். இந்தக் காலமானவுடன் இந்திய ராணுவமெல்லாம் இந்திய மயமாகிவிடவேண்டும். இதை ஏதோ பரீக்ஷார்த்தமாகச் செய்வதென்பது கூடாது. எப்படியும் இந்தியா தன்னைத் தான் ரக்ஷித்துக்கொள்ளக் கூடிய நிலைமையிலிருக்கவேண்டும். முற்காலத்தில் இந்தியா தன்னைப் பாதுகாத்துக் கொண்டதுண்டு. இங்கிலாந்து விலகியபின் எதிர்காலத்திலும் பாதுகாத்துக்கொள்ளக் கூடும். இப்பொழுது நாம் வேண்டுவது நம்பிக்கைதான். இப்பிரச்னையை இந்தியாவும் இங்கிலாந்தும் நன்குணருமென்று நம்புகிறேன். அமைதியாகக் கண்ணியமான ஒரு முறையில் இது தீர்க்கப்பட்டுவிடுமென நம்புகிறேன்.

எதிர்காலம் ஆகாயப் படையையே பொறுத்திருக்கிறது

இந்தியாவின் எதிர்கால ராணுவப் பிரச்னை ஆகாயப் படையையே பொறுத்திருக்கிறது. கப்பற்படை சம்பந்தப்பட்டவரையில் பிரிட்டன் கடல் ஆதிக்கியம் பெற்றதென்று இனிக் கூறுவதற்கில்லை. அப்படி அதற்கு ஆதிக்கியமிருப்பதானால் கூட அது ஆகாய ஆதிக்கியமேயாகும். இனிக் கடலைப்பற்றிப் பேசிப் பயனில்லை. ஆகவே இந்தியா இரண்டு விஷயங்களில் முக்கியமாகக் கவனம் செலுத்த வேண்டும். உதவிக்காக காலாட் படையையும், வலுவான கடலோரப் பாதுகாப்புப் படையையும் ஒரு நல்ல விமானப்படையையும் இந்தியா உண்டுபண்ணிக் கொள்ள வேண்டும். காலாட்படை சம்பந்தப்பட்டவரையில் ஒருவரையறைக்குட்பட்டுக் கட்டாய ராணுவ சேவைத் திட்டமொன்றைத் தயாரிக்கவேண்டும். குறிப்பிட்ட வயதிற்குட்பட்ட ஆள்களுக்குக் கட்டாயத் தேர்ச்சியளித்து நெருக்கடியான சமயங்களுக்குத்தயாராக விருக்கும்படிச் செய்ய வேண்டும். சர்வ கலாசாலைத் தேர்ச்சிப் படைகளைப் பூராவாக உபயோகிக்க வேண்டும். ராணுவ உத்தியோகஸ்தர்களுக்கான புதிய படையொன்றையேற்படுத்தவேண்டும். மாகாணகவர்ன்மெண்டுகள் ராணுவப் பள்ளிக்கூடங்களையும் கலாசாலைகளையும் ஏற்படுத்தி அவர்களாலியன்றவளவு உதவி புரிய வேண்டும். சர்வகலாசாலைத் தேர்ச்சிப் படைகளை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சர்வ கலாசாலைப்படிப்பில் ராணுவத் தேர்ச்சியை ஒரு முக்கியப் பாடமாகச் செய்ய வேண்டும். பான்ஸ்லே ராணுவப் பள்ளிக் கூடமுறையை மற்ற மாகாணங்களும் பின் பற்றலாம். இத்துடன் பிரிட்டிஷ் கப்பற் படையுடன் ஒத்துழைத்து நமது கடலோரப்பாதுகாப்புக்கும் நாம் வகை செய்தாக வேண்டும்.

ஆனால் நான் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி இந்தியாவின் பாதுகாப்பு ஆகாயப் படையையே பொறுத்திருக்கிறது. நல்ல வேளையாக இந்த அம்சத்தில் இங்கிலாந்து நம்மை அதிகம் மிஞ்சி விடவில்லை. இந்திய உத்தியோகஸ்தர்களுக்கு இப்பொழுது தேர்ச்சியளிக்கலாம். ஆனால் இது ரொம்பப் பணச் செலவாகக்கூடிய இனமாகும். இங்கிலாந்து தனது பங்கையும் ஏற்றுக்கொள்ளும் பக்ஷத்தில் இந்தச் செலவை நாம் அதிகரிக்கலாம். ஆகாயப்படையென்றால் முற்றிலும் இந்திய மயமாக விருக்கவேண்டும். அது மாத்திரமல்ல. பாதுகாப்புக்குத் தேவையான பொருள்களை யெல்லாம் இனி இந்தியாவே தயாரித்துக்கொள்ளக் கூடிய நிலைமையிலிருக்க வேண்டும். யுத்த காலத்தில் போக்குவரத்தெல்லாம் தடைப்பட்டுப் போகும்பொழுது இதற்கெல்லாம் வெளி சப்ளையை நம்பிப் பிரயோசனமில்லை. இதிலும் நாம் பூர்ண கவனஞ் செலுத்த வேண்டும்.

இந்தத் தோரணையில்தான் இந்தியாவின் எதிர்க்காலப் பாதுகாப்புப் பிரச்னையை நான் உணர்ந்திருக்கிறேன். இத்தேசத்தின் சிறந்த நண்பர்கள் இதில் கவனஞ் செலுத்துவார்களென்றும், மாகாண கவர்ன்மெண்டுகள் கவனிப்பார்களென்றும் நான் நம்புகிறேன். இங்கிலாந்தும் இந்தியாவும் எதிரிகள்போல் இப்பிரச்னையை நோக்காது எதிர் காலத்தில் நண்பர்களாக விருக்கக்கூடியவர்கள் என்ற மனோபாவத்துடன் இதைக் கவனிக்க வேண்டுமென நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஜாக்கிரதை ! "பயோரியா" **மிகக் கொடிய பல் வியாதி!**

சுத்தமான பற்களே தேக ஆரோக்கியத்திற்குக் காரணம் !!
சிறந்த குணமுள்ள மருந்துகளினால் தயாரிக்கப்பட்ட

யுனிக் பயோரியா க்யூர் செட்

எல்லாப் பல் வியாதிகளுக்கும் கைகண்ட ஔஷதம்.
அதை உபயோகித்து தேக ஆரோக்கியத்தையும் மன நிம்மதியையும் அடையுங்கள்.

விலை ரூ. 2-8-0. தபால் செலவு வேறு.

தயாரிப்பவர்: **டாக்டர். கே. கிருஷ்ணமூர்த்தி, L. D. Sc.,**
பல் வைத்தியர்,
ரெக்ஸ் எலக்ட்ரோ பல் வைத்தியசாலை, 292, எஸ்பிளனேட், ஜி. டி. மதராஸ்.

ஏஜண்டுகள் தேவை.
முழு விவரங்களுக்கு எழுதவும்.

தக்ஷிண சங்கீதத்தின் தற்கால நிலை

(ஸங்கீத ரத்னாகரம் ஸ்ரீமான் அரியக்குடி ராமானுஜ ஐயங்கார்.)

ஸங்கீதக்கலை தக்ஷிணதேசத்தில்தான் பிறந்ததென்று முன்னோர்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறோம். நமது ஸங்கீதம்தான் உலகத்தின் இதர பிரதேசங்களுக்குச்சென்று ஆங்காங்கு பல மாதிரியாகப் பிரிந்து பிரகாசித்துவருகிறதென்பதும் பெரியோர் அபிப்பிராயம். இப்படி ஸங்கீதம் பல மாதிரியாகப்பிரிந்துவிட்டதென்றாலும் அவற்றிற்கெல்லாம் மூலாதாரமான நாதம் ஒன்றுதான். அதுதான் நாதப்பிரம்மமென்று அழைக்கப்படுகிறது. நாதரூபியான பகவானை ஸங்கீதத்தினால்தான் வசப்படுத்தலாமென்பது பெரியோர் வாக்கியம்.

தமிழ் நாட்டில் பிரகாசித்ததேன்

நிற்க, வட இந்தியாவிலும் பிரபலஸ்தர்களான சங்கீதவித்வான்கள் நாதப்பிரம்மத்தை உபாஸித்து வந்திருக்க ஸங்கீதக்கலை தக்ஷிணதேசத்தில் அதிலும் முக்கியமாக தமிழ் நாட்டில் அதிகம் பிரகாசிப்பானேன்? இந்தப் புண்ணிய பூமியில் அநேக மஹானுபாவர்கள் ஜனித்து ஸங்கீதக்கலையை வளர்த்ததே அதற்குக்காரணம். உயர்ந்ததான நமது ஸங்கீதக் கலை கலியுகத்தில் க்ஷீணித்துவிடுமோவென்று சந்தேகித்த பெரியோர்கள் சிலர் நாதரூபியான சங்கீதக் கலையை சீர்கெடாமல் வைக்கும்படி நாதரூபியான பகவானைப் பிரார்த்தித்தார்களென்றும், பகவத் கடாக்ஷத்தில் ஸ்ரீ தியாகப்பிரம்மம் பஞ்சநத க்ஷேத்திரமென்னும் திருவையாற்றில் அவதரித்தாரென்றும் சொல்லப் படுகிறது. ஸ்ரீ தியாகப் பிரம்மம் ஸங்கீத ஸாகித்யங்களால் நாதரூபியான பகவானை அர்ச்சித்ததும், அதன் பலனாக ஸங்கீதக்கலை இந்நாட்டில் வளர்ச்சியுற்றதும் அனைவருக்கும் தெரியும். ஸ்ரீ தியாகப் பிரம்மத்துக்குப் பிறகு ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர், சாமா சாஸ்திரிகள் முதலிய மஹானுபாவாள் ஸங்கீதக் கலையைக் கீர்த்தனரூபமாகவும் ராக மர்மங்களுடனும் முன்னேற்ற மடையச் செய்தார்கள்.

க்ஷீணதசையடைந்திருக்கும் காரணம்

இப்படிப் பெரிய மகான்களால் வளர்க்கப்பட்ட நமது ஸங்கீதக் கலை தற்காலம் தக்ஷிண தேசத்திலேயே பல்வேறாக மாறி இருக்கிறது. இப்படித் திடீரென இக்கலை க்ஷீணதசை யடைந்திருக்கும் காரணமென்னவென்று கவனிப்போம்.

முதன்முதலாக ஸங்கீதத்திற்குப் பிரதானமான சுருதி தென்னாட்டில் எந்நிலையிலிருக்கிறதென்பதைப் பார்க்கவேண்டும். முக்கியமாக சுருதிக்கு வேண்டியது தம்பூர். தற்போதுள்ள சில வித்வான்கள் ஹார்மோனியத்தைச் சுருதியாக வைத்துக்கொண்டு பாடுகிறார்கள். தென்னாட்டு சங்கீதத்தின் க்ஷீண தசைக்கு இது முதல் காரணம்.

இப்பொழுது மற்றும் சிலர், கொஞ்சம் பாடாந்தரங்கள் ஆகிவிட்டதும் தங்களுக்கு ஸங்கீதம் வந்துவிட்டதென்று நினைத்துக்கொண்டு கச்சேரிக்குக் கிளம்பிவிடுகிறார்கள். அதிலும் நல்ல புத்திமான்களாயிருப்பவர்கள் கேள்வியிலிருந்தே நன்றாகப் பாடுகிறார்கள். இவர்கள் கச்சேரி செய்வதும் நன்றாகத்தானிருக்கும். ஆனால் இப்படிப் பாடுவது அஸ்திவாரமில்லாமல் கட்டிடம் கட்டுவதுபோலாகுமாகையால் இதுவும் ஸங்கீதக் கலை க்ஷீண தசை யடைவதற்கு ஹேதுவாகும்.

அபிவிருத்திக்கு வழி

அப்படியானால் இக்குறைகளை நிவர்த்தித்து ஸங்கீதத்தை எப்படி அபிவிருத்தி செய்யலாம். முதலாவது ஸங்கீத வித்வான்கள் சுத்தமான சுருதிக்கு எடுத்த தம்பூரைத்தான் உபயோகப்படுத்த வேண்டும். ஸங்கீதத்திற்கு தம்பூர் சுருதியே பிரதானமென்று கருதித்தான் ஸ்ரீ தியாகப் பிரம்மமும் "நித்துர கொகரிஞ்சி முத்து காதம்பூர பெட்டி" என்று தோடிக் கீர்த்தனத்தில் சொல்லியிருக்கிறார். ஹார்மோனியம் சுருதிக்கு லாயக்கில்லை. நமது பண்டித ஜவஹர்லால்கூட ஒரு பிரசங்கத்தில் "இந்தியாவுக்கு சுதந்திரம் வந்தவுடன் முதன் முதலாக ஹார்மோனியத்தைஒழிப்பேன்" என்று சொல்லியிருக்கிறார். ஆகவே எந்த வித்வானும் "தம்" "பூரா" யோக்கியதையையும் காண்பிக்கவேண்டுமானால் "தம்பூரா" வைத்துக்கொண்டு பாடினால்தான் முடியும்.

தவிர — அரை குறையாகப் பாடத் தெரிந்துகொண்டு கச்சேரிக்குக் கிளம்பாமல் ஸங்கீதக் கலையை குருவினிடமே பயின்று, குருகுலவாஸத்திலேயே எப்படி நன்றாகப் பாடவேண்டுமென்பதைத் தெரிந்துகொண்டு நல்ல யோக்கியதை வந்தபின் கச்சேரி செய்தால்தான் தென்னிந்திய ஸங்கீதம் இன்னும் அதிக முன்னேற்றமடையுமென்பது எனது நம்பிக்கை.

எனக்குத் தெரிந்த வரை இக்கட்டுரையை எழுதினேன். இதில் ஏதேனும் தவறு இருந்தால் ஸங்கீத வித்வான்களும் பண்டிதர்களும், ஏனையோரும் க்ஷமித்துக்கொள்ள வேண்டுமாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்

— —

* * * *

சமீபத்தில் விவாகம் செய்து கொண்ட தம்பதிகள் புதிதாகக் குடித்தனம் வைத்தனர்.

மனைவி:—இவ்விதம் நான் பிரதி தினம் சமையல் செய்து போட்டால் எனக்கு என்ன கொடுக்கிறீர்கள்?

கணவன் (சாப்பிடாமல் இலையைவிட்டு எழுந்து):— என்னுடைய இன்ஷியூரன்ஸ் பணம் கிடைக்கும்.

* * * *

டவல்ஸ் எலக்டிரிகல் கம்பெனி, 286, லிங்க செட்டித் தெரு, மதராஸ்.

டெலிபோன் நெ. 3243.

டெலிபோன் நெ. 3243.

பிட்டிங்குகள்

பிட்டிங்குகள்

THE BHARATH ELECTRIC BULB WORKS Ltd., Dum Dum Road, Calcutta.

பொறாமைக்கு அயலுமில்லை, உறவுமில்லை

மகாமஹோபாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதய்யர்



சங்கீதத்தின் பேச்சை எடுக்கும்போதே தஞ்சாவூரின் ஞாபகம் எவருக்கும் வராமல் இராது. புகழ் பெற்ற பல அரிய சங்கீத வித்துவான்கள் தஞ்சை ஸம்ஸ்தானத்தின் ஆதரவிலே வளர்ந்து சங்கீத வித்தையை வளர்த்துக் கீர்த்தி பெற்று வந்தார்கள். பல உருப்படிகளை இயற்றியும், மாணாக்கர்களுக்குப் பயிற்சியளித்தும் விளங்கினார்கள். சோழர்கால முதலாகவே தஞ்சையில் கல்வியும் கலையும் சிறப்பாக விளங்கின. பிற்கால அரசர்கள் காலத்தில் கர்நாடக சங்கீதம் அந்நகரத்திலே மலை மேல் விளக்காகப் பிரகாசித்தது.

பல திறப்பட்ட வாத்தியங்களில் வல்ல வித்துவான்களும் வாய்ப்பாட்டில் வல்லவர்களும், பரதத்தில் தேர்ந்தவர்களும், அந்நகரத்தில் வாழ்ந்திருந்தார்கள். மஹாராஷ்டிர அரசர்கள் அரசாண்ட காலத்தில் தஞ்சை ஒரு சங்கீத நிலயமாகவே இருந்தது.

அந்நகரத்தில் இருந்து சங்கீத வித்தையில் மேம்பட்டு விளங்கினவர்களில் வீணைக் காளஹஸ்தி ஐயரென்பவர் ஒருவர். அவர் வீணையில் இணையற்ற தேர்ச்சி வாய்ந்தவர். அக்காலத்தில் இருந்த தஞ்சை அரசருக்குச் சங்கீதத்தில் மிக்க அபிமானமும் பயிற்சியும் இருந்தன. தினந்தோறும் அரண்மனையில் அரசர் பூஜை செய்யுங் காலத்தில் காளஹஸ்தி ஐயர் வீணை வாசித்து வருவார். அரசர் அதில் ஈடுபட்டு மிகவும் இன்புறுவார். இதனால் தஞ்சை ஸம்ஸ்தான வித்துவான்களுக்குள்ளே அவருக்கு ஒரு தனி மதிப்பு இருந்தது. அவரிடத்தில் ஒருவித தெய்விக சக்தி அமைந்துள்ளதென்றும் சிலர் கூறலாயினர்.

அவர் சங்கீதத்தில் தம்மினும் சிறந்தவர் இலரென்ற எண்ணம் உடையவராக இருந்தார். அதனால் மற்ற வித்துவான்கள் அவரோடு நெருங்கிப் பழகுவதில்லை. மாணாக்கர்கள் அவரிடம் இசைப்பயிற்சி பெறுவதற்கு அஞ்சினார்கள். சில வித்துவான்களைப்போல் அவரும் பிறருக்குத் தம் வித்தையைக் கற்பித்தலில் விருப்பமின்றி இருந்தார்.

ஒரு சமயம் மைஸூர் ஸம்ஸ்தானத்திலிருந்து, அவருக்கு அழைப்பு வந்தது. இந்தியாவின் பல இடங்களிலுமுள்ள வித்துவான்கள் அங்கே வருவார்களென்றும் அவர்களுடைய வினிகைகள் நடைபெறுமென்றும் அவர் அறிந்திருந்தார். ஆதலின் தாமும் அங்கே சென்று தம்முடைய ஆற்றலைக் காட்டி வரவேண்டுமென்று எண்ணினார். தக்க சமயம் கிடைக்கவே, அங்கே போய்ச் சில நாட்களேனும் இருந்து வரலாமென்று நிச்சயித்தார். அரசரிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு தினந்தோறும் அரசருடைய பூஜையில் வீணை வாசிக்கும் பணியை வேறு யாரையேனும் கொண்டு செய்விக்கும்படி சொல்லிவிட்டு அவர் மைஸூர் சென்றார்.

* * * *

மறுநாள் பூஜா காலத்தில் அரசர் ஒரு விசேஷத்தை அறிந்தார். என்றும் இல்லாதபடி அன்று வீணையின் இசை மிகவும் சிறப்பாக இருந்தது. அதனால் அவர் நெடுநேரம் பூஜை செய்திருந்து அந்த வீணா கானத்தில் இன்புற்றார். இடையே அருகிலிருந்தவரிடம், "இன்று யார் வீணை வாசிக்கிறார்கள்?" என்று கேட்டார். "காளஹஸ்தி ஐயருடைய குமாரர் வாசிக்கிறார்" என்ற பதில் கிடைத்தது. அரசருக்கு அளவற்ற சந்தோஷம் உண்டாயிற்று.

அன்று முதல் இரண்டு மூன்று நாட்கள் வீணா கானம் ஒரு நாளைவிட ஒரு நாள் உயர்வாகவே இருந்தது.

* * * *

காளஹஸ்தி ஐயருக்கு ஒரே குமாரன் இருந்தான். அவன் பேசப் பழகுவதற்கு முன்பே பாடப் பழகினான். வர வர அவனுடைய ஆற்றலுக்கு மேற்பட்ட சங்கீத ஞானம் அவனுக்கு உண்டாயிற்று. தன்னையொத்த பிள்ளைகள் விளையாடும் போதும் வீட்டில் இருக்கும் போதும் பாடிப்பாடி இன்புறுவான். தன்னுடைய தகப்பனாருக்கு முன்பு அவன் பாடுவதில்லை.

தன் தந்தையார் வீட்டில் இல்லாதபோது அவன் வீணையை எடுத்துப் பழகத் தொடங்கினான். தன் தந்தையார் வாசிக்கும் காலங்களிலெல்லாம் கவனித்து வருவான். அதனால் அவருடைய உதவியில்லாமலே அவன் சங்கீதத்தில் விருத்தியடைந்து வந்தான்.

அவனுடைய வீணைப் பயிற்சியோ, விளையாட்டுப் பிள்ளைகளிடத்திலிருந்து பெரியவர்களுக்குத் தெரிந்தது. சில வித்துவான்கள் தனியே அவனை உத்ஸாகப் படுத்தி வீணை வாசிக்கச் செய்வார்கள். பல காலம் பயின்றவர்களுக்கும் சாத்தியமில்லாத பல வகைகளில் அவன் மிக்க ஆற்றல் பெற்றிருப்பதை அவர்கள் அறிந்து வியந்து பாராட்டுவார்கள்.

நாளடைவில் ஊரார் அவனைப்பற்றிப் பாராட்டுவது அதிகமாயிற்று. "இவன் தகப்பனாருக்கு மேல் வாசிக்கிறான்; அவருடைய கர்வத்தை அவருடைய பிள்ளையே அடக்கிவிடப் போகிறான்" என்று சிலர் கூறினர். "தமக்கு மிஞ்சி வீணைக்கு வித்துவானில்லையென்று இவர் அகங்காரங் கொண்டிருக்கிறார். யாருக்கேனும் சொல்லிக் கொடுத்தால் தம் வித்தைக்குக் குறைவு வந்துவிடுமேயென்று நினைக்கிறவர் இவர். தம் பிள்ளைக்குக் கூடச் சொல்லிக் கொடுப்பதில்லை. அவன் எப்படியோ கிளம்பிவிட்டான்" என்று சிலர் பேசினர். சில வித்துவான்கள் அந்த இளைஞனை அரசருக்கு முன்பு வீணை வாசிக்கச் செய்ய வேண்டுமென்று விரும்பினார்கள்.

தம் தந்தையார் ஊருக்குப் போன சமயத்தில் அவர் குமாரன் தானே வீணையை எடுத்துக்கொண்டு அவர் பூஜையில் வாசிக்கச் சென்றான். இது மற்றவர்களுக்குத் தெரியாது.

* * * *

காளஹஸ்தி ஐயர் மைஸூரிலிருந்து திரும்பிவரப் பத்து நாட்களுக்கு மேல் ஆயின. அதுவரையில் அவருடைய குமாரனே அரசருடைய பூஜையில் வீணை வாசித்து வந்தான். முதல் நாளில் அவன் சிறிது அச்சத்தோடு வாசித்தான். வர வர அவனுடைய பயம் நீங்கவே தன் ஆற்றல் முழுவதையும் காட்டத் தொடங்கினான். ஸங்கீத ரஸிகராகிய அரசர் அந்த வீணா கானத்தில் ஈடுபட்டு அதிக மகிழ்ச்சியை அடைந்து வந்தார்.

காளஹஸ்தி ஐயர் மைசூரிலிருந்து மீண்டுவந்தார். வழக்கம்போல அன்று அவர் அரசருடைய பூஜையில் வீணைவாசிக்கச் சென்றார். அவருடைய குமாரன் செல்லவில்லை. அவர் மைசூர் சென்றிருந்த சமயத்தில்தான் அரண்மனை சென்று வீணை வாசித்ததையும் அவன் சொல்லவில்லை.

அன்று பூஜையில் அரசர் சில நாளாகக் கேட்டுவந்த வீணைக்கும் அன்று கேட்டதற்கும் வேறுபாடு இருந்ததை உணர்ந்தார். காளஹஸ்தி ஐயர் வந்துவிட்டதைத் தெரிந்து கொண்டார்.

அன்று மாலை வீணை வித்துவான் அரண்மனைக்குச் சென்றார். தாம் மைஸூர் சென்றதையும் அங்கே சம்மானங்கள் பெற்றதையும் எடுத்துக் கூறினார். பின்பு, "நான் ஊரிலில்லாத காலத்தில் அரண்மனையில் வீணை யார் வாசித்தார்களோ தெரியவில்லை. எப்போதும் இவ்விடத்து ஞாபகமாகவே இருந்தேன்" என்று கவலையோடு உரைத்தார்.

அப்போது அரசர், "நீங்கள் ஊரிலில்லையே என்ற குறை இல்லாதபடி உங்கள் குமாரன் செய்துவிட்டான். உங்கள் குமாரன் வீணை வாசிப்பானென்பதை இதுவரையில் நீங்கள் சொல்லாமல் மறைத்துவிட்டீர்களே. உங்களுக்கு ஏற்ற புத்திரன் அவன். அவனுடைய வாசிப்புக்கும் உங்கள் வாசிப்புக்கும் சிறிதளவுகூட வித்தியாசம் தெரியவில்லை. சில சமயங்களில் உங்களுடைய வாசிப்பைக் காட்டிலும் சிறிது உயர்வாகக்கூட இருந்தது. இனிமேல் நீங்கள் இடையிடையே சில தினங்களில்

நம்முடைய பூஜைக்கு அவனையே வாசிக்கவரச் சொல்லலாம். அவனுடைய வினிகை ஒன்று நம் சபையில் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும்'' என்று கூறினார்.

காளஹஸ்தி ஐயர் திடுக்கிட்டார். ''இவ்வளவும் உண்மைதானா?'' என்று அவர் எண்ணினார். அவர் மனத்தில் ஒருவிதமான கலக்கம் உண்டாயிற்று. அரசரிடம் விடை பெற்றுக்கொண்டு வீடு சென்றார்.

போகும்போதே அவருடைய மனத்திலே பலவகையான எண்ணங்கள் எழுந்தன. தமக்குத் தெரியாமல் தம் பிள்ளை இவ்வளவு வன்மை பெற்றிருப்பதில் அவருக்குச் சிறிதும் சந்தோஷம் உண்டாகவில்லை. அவனைத் தம் பிள்ளையாக எண்ணிப் பார்க்க அவர் மனம் இடங்கொடுக்கவில்லை. யாரோ ஒரு வித்துவான் தமக்கு மேற்பட்டு வந்திருப்பதாக ஓர் எண்ணந்தான் தோற்றியது. பொறாமையின் முளை தலை காட்டியது.

'மகாராஜா அவனையும் சில நாள் வாசிக்கச் சொல்கிறார். வினிகை வேறு நடத்த வேண்டுமாம். சரி சரி. வர வர அவனே மகாராஜாவுக்குப் பிரியமுள்ளவனாகிவிடுவான். நாம் மூலையிலே கிடக்கவேண்டியதுதான். நம் வித்தை மங்கி ஒழியவேண்டுவதே' என்றெல்லாம் அவர் யோசனை விரிந்தது. அவர் வீடு போய்ச் சேர்ந்தார்.

* * * *

''அடே குழந்தாய்! நான் இல்லாதபோது மகாராஜா பூஜையில் நீ வீணை வாசித்தாயாமே நீ வாசிப்பது எனக்குத் தெரியாதே'' என்று காளஹஸ்தி ஐயர் குமாரனைக் கேட்டார்.

''எல்லாம் தங்கள் ஆசீர்வாதம். விளையாட்டாகக் கற்றுக்கொண்டேன். நீங்கள் வாசிப்பதைப் பார்த்துக் கற்று வந்தேன். உங்களிடம் சொல்வதற்கு எனக்குப் பயமாகவும் வெட்கமாகவும் இருந்தது. நான் தாங்கள் கூறுகிறபடி அவ்வளவு சிறந்த பழக்கத்தை அடையவில்லை. ஆசை மட்டும் அதிகமாக இருக்கிறது.''

''அப்படியா! எங்கே கொஞ்சம் வாசித்துக் காட்டு, பார்ப்போம்'' என்று தகப்பனார் கூறினார்.

குமாரன் வணக்கத்தோடு வீணையை எடுத்தான். மெல்ல வாசிக்கத் தொடங்கினான். வாசிக்க வாசிக்க அதனுடைய இனிமை அதிகமாகிக் கொண்டே வந்தது. அவனே அந்த இனிமையில் ஒன்றிப் போய்த் தன் தந்தையாரையும் மறந்து வாசித்து வந்தான். காளஹஸ்தி ஐயர் காதில் அந்த நாதம் புகப்புக அவனுடைய பெருமையை அவர் உணர்ந்தார். ஆனாலும் அவர் மனம் உருகவில்லை; அவருக்கு மகிழ்ச்சியே உண்டாகவில்லை. அந்த மெல்லிய இசை அவருடைய பொறாமைத் தீயையே மூட்டியது. அந்த இளைஞன் தம்முடைய பிள்ளையாகத் தோற்றவில்லை; பகைஞனாகவே தோற்றினான். பொறாமைப்பேய்க்குப் பிள்ளை தகப்பனென்பதேது?

அவன் வாசித்துக் கொண்டிருந்தபோது காளஹஸ்தி ஐயருடைய மனம் அதை அநுபவிப்பதிலே செல்லவில்லை; பொறாமையினால் வெதும்பிக் குழம்பியது.

ஒருவாறு வாசிப்பதை நிறுத்தினான் குமாரன். ''உன்னுடைய சாமர்த்தியத்தை இதுவரையில் அறிந்து கொள்ளவில்லையே!'' என்று ஆவலோடு கட்டிக் கொள்ளப் போனார் தந்தையார்.

''வீணை வாசித்த அந்தக் கை எங்கே காட்டு, பார்ப்போம்'' என்று சொல்லி அவனது இடக்கையை இழுத்து முத்தம் கொடுப்பவர்போல் வாய்க்கருகில் கொண்டு போனார்; வெடுக்கென்று நடுவிரலைக் கடித்துவிட்டார். வீணை வாசிப்பதற்கு இடக்கை நடுவிரல் இன்றியமையாதது.

குமாரன் வீரிட்டு அலறினான். விரல் துண்டுபட்டது. அதிலிருந்து ரத்தம் பீரிட்டது. சற்று நேரத்துக்கு முன் இனிய கானத்தை எழுப்பிய அந்த விரல் துண்டுபட்டு ரத்த ஊற்றாக நின்றது.

அவன் துடிதுடித்து நின்றான். அப்பொழுதுதான் தகப்பனாருக்கு 'அவன் தம் குழந்தை; தம் பெயரைக் காப்பாற்றப் பிறந்தவன்' என்ற நினைவு வந்தது. பெற்ற பிள்ளை துடித்துக்கொண்டு ரத்தம் பெருகியோடும் விரலுடன் நிற்கும் காட்சி காளஹஸ்திஐயர் மனத்திலிருந்த பொறாமையை ஓட்டியது.

''ஐயோ படுபாவி! என்ன காரியம் செய்தேன்!'' என்று புலம்பத் தொடங்கினார். ''பொறாமையினால், பெற்ற பிள்ளைக்கு அபாயம் உண்டாக்கினேனே! நான் மகா பாபி!'' என்று கதறினார்.

இளைஞன் அறிவு மிக்கவன்; கையில் உண்டான நோவை அவனால் தாங்க முடியவில்லை. ஆனாலும் தந்தையார் கதறுவதைப் பார்க்க அவன் மனம் சகிக்கவில்லை; ''அப்பா! இனிமேல் வருந்திப் பிரயோசனமில்லை. தாங்கள் எனக்கு ஸங்கீதம் சொல்லிக் கொடுக்கவில்லையானாலும் தங்களுடைய கிருபையினாலேயே தங்களைத் தியானம் செய்து கொண்டு கற்று வந்தேன். நான் தங்களிடம் நேரே கற்றுக்கொள்ளவில்லையே என்று எண்ணும்போதெல்லாம் எனக்கு ஏகலைவன் ஞாபகம் வரும். அந்த ஏகலைவனைப் போல மறைவிலே கற்றுக்கொள்வதாக நினைத்

ஒரு 'மீரா புராணம்'

ஆச்சரியம் - ஆனால் வாஸ்தவம்

ஹாஜி அப்துல் வஹாப் ராவுத்தர் மண்டியில் கூட்டாளியான முஹம்மது மீரா ஹுஸேன் எழுதியதாவது:—

ஐயா,

என் குடும்பத்தில் 38 வயதுள்ள ஒரு பெண்மணிக்கு 2 வருஷ காலமாகத்தலையில் நாலைந்து இடங்களில் அரையணா அகலத்தில் சொட்டை வீழ்ந்தும், மற்ற ரோமங்கள் ஒருசாண் நீளம்தான் இருந்தது. எனது சொந்த ஊரான சூலப்புரம் (திண்டுக்கல் தாலூகா) என்ற கிராமத்தில், முயல் ரத்தம் முதலிய அநேக மருந்துகளைத் தேய்த்தோம். யாதொரு குணமில்லாததால் இனி முளைக்காது என்று எல்லாரும் சொல்லிவிட்டார்கள். நாங்கள் **கேசவர்த்தினி**யின் குணங்களைப் பத்திரிகை மூலம் தெரிந்து 2 பாட்டில் வாங்கி உபயோகித்ததில் கொஞ்சம் குணம் தெரிவதாக எழுதியதன்பேரில் 6 பாட்டில்கள் வாங்கி முறைப்படி 4 மாதகாலம் தேய்த்து வந்ததில் என்ன ஆச்சரியம்! சொட்டையுள்ள இடங்களில் இப்போது 3 அங்குலம் மயிர் முளைத்திருக்கிறது. சீவினால் உதிரக்கூடிய ரோமம் எல்லாம் நின்றிருக்கிறது.

இந்தப் பெண்மணி அடைந்த குணத்தைக்கண்டு பொறாமை கொண்ட 11 பெண்களும் தாங்கள் தேய்த்துவந்த உபயோகமற்ற ஆயில்களை நிறுத்திவிட்டுத் தங்கள் 'கேசவர்த்தினி'யை விடாமல் தேய்த்துவருகிறார்கள். இவர்களுக்கும் உதிர்ந்த ரோமம் நின்றிருக்கிறது.

17—10—37.

K. K. A. முகம்மது மீரா உசேன், கொக்கலை, திருச்சூர்.

கேசவர்த்தினி

கூந்தலை வளரச் செய்வது

மாத உபயோகத்துக்குப் போதிய புட்டி விலை அணா 12. மேற் செலவு வேறு.

தயாரிப்பவர் :—தென் இந்திய ரஸாயன சாலை, மயிலாப்பூர், மதராஸ்.

ஸ்ரீ மஹாபாரதத்தின் சிறப்பும் அதன் கால நிர்ணயமும்

மஹா மஹோபாத்யாய பாஷாபாரததுரந்தர எம். வி. ராமானுஜாசாரியார்.

ஸ்ரீ மஹாபாரதத்திற்கு இணையான நூல் உலகில் வேறு எந்தப்பாஷையிலும் இல்லையென்று எல்லாரும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். இந்த நூல், அளவில் மிகப் பெரியது; விஷயப் பெருமையில் மிகச் சிறந்தது. இது, இராமாயணத்திலும் ஐந்து மடங்குக்கு அதிகம் பெரியது.

இந்த மஹாபாரதம் வேதமாகவும் இதிஹாஸமாகவும் புராணமாகவும் காவ்யமாகவும் தர்மசாஸ்திரமாகவும் நீதிசாஸ்திரமாகவும் சரித்திர நூலாகவும் விளங்குவதோடு, இம்மை மறுமைப் பயன்களை அளிக்கக்கூடிய நூலாகவும் கருதப்படுகின்றது. மேலும், இது கற்றோர்களுக்கும் மற்றோர்களுக்கும்—ஆடவர், பெண்டிர், சிறுவர், சிறுமியர் ஆகிய அனைவருக்கும்—நல்லறிவை ஊட்டவல்ல பெருமையுடையது. புராணங்களிற் பெரும்பாலான இந்த மஹாபாரதத்தைச் சிறப்பித்துக் கூறுகின்றன. அவற்றுள், சில பின் வருவன:—

(1) பிரம்ம புராணம்:—"வியாஸமுனிவர் எல்லாச் சாஸ்திரங்களையும் ஆராய்ந்து மஹாபாரதமென்கிற தைலத்தினால் நிரம்பிய ஞானமாகிற விளக்கை ப்ரகாசிக்கச் செய்தார்.

(2) பத்ம புராணம்:—"பாரதம் சூரியன் சந்திரன் ஆகிய இம்மூன்றும் இல்லாவிடில், அஞ்ஞானத்தாலும் இருளாலும் இவ்வுலகம் குருடாயிருக்கும்.

(3) ஸ்ரீ பாகவதம்:—"நற் கருமங்களையும் மோக்ஷோபாயத்தையும் அறியாத இந்த உலகத்துக்கு வியாஸரால் எல்லா அர்த்தங்களும் நிரம்பின மஹாபாரதம் என்ற சரித்திரம் செய்யப்பட்டது.

(4) பவிஷ்ய புராணம்:—"உலகத்தில் நன் மக்களாகிய வண்டுகளால் நாள்தோறும் பருகப்படுவதும் கலி தோஷத்தைப் போக்க வல்லதுமான மஹாபாரதமென்னும் தாமரை மலரானது நமக்கு நன்மையைச் செய்வதாகுக. இம்மலர், கீதார்த்தமாகிற மணம் கமழப் பெறுவதும் அனேக உபாக்யானங்களாகிற கேஸரங்களையுடையதும் ஆகும். இது ஆஸ்திக வழியில் ஏறுவதற்குப் படிஎன்று சொல்லப்படுகிறது. மேலும், இது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகைப் பேறுகளையும் அளிக்க வல்லதுமாம்.

(5) மார்க்கண்டேய புராணம்:—"ஆபரணங்களுள் சூடாமணியும், ஆயுதங்களுள் வஜ்ராயுதமும், இந்திரியங்களுள் மனமும் சிறந்திருப்பது போல, எல்லாச் சாஸ்திரங்களுள்ளும் மஹாபாரதம் சிறந்திருக்கிறது.

இவ்வாறே, விஷ்ணு புராணம், சிவபுராணம், ஸ்காந்தம், நாரதீயம், தேவீ பாகவதம் முதலிய மற்றப் புராணங்களும், இந்த மஹாபாரதத்தின் ஏற்றத்தைப் பல படப் பாராட்டுகின்றன.

மேலும், நமது நாட்டில் வடமொழியிலும், மற்றுமுள்ள தேசிய மொழிகளிலும், தோன்றி விளங்கும் பலவகைப்பட்ட காவ்யங்கள், நாடகங்கள் பிரபந்தங்கள் முதலிய நூல்கள் பலவும் இந்த மஹாபாரதத்தை ஆதாரமாகக் கொண்டு எழுந்தவையே.

மேற்றிசைப் புலவர்களும், ஆராய்ச்சியாளர்களும் இந்த மஹாபாரதத்தின் சிறப்பைப் பெரிதும் பாராட்டிப் பலவாறு கூறியுள்ளார்கள். அவர்கள் எழுதியுள்ள வாக்யங்களை முழுதும் எழுதுவதானால் மிக விரியுமாதலால், அவர்களில் சிலருடைய பெயர்களை மாத்திரம் இங்கே கூறுகிறேன்:—

ஸர் எட்வின் ஆர்னால்டு
ஸி. எஸ். ஐ.
மான்ஷியர் எ. பார்த்,
ஸெயிண்டு ஹிலேர்பார்
தோலேமி,
டாக்டர் அன்னிபெஸண்டு
டாக்டர் ஜியார்ஜ் சேய்னே
மிஸ்டர் டைடஸ் மன்ஸன்
கோன்,
கோல்டு ஸ்டக்கர்,
டாக்டர் எப். எ. ஹாஸ்லர்
ஆசிரியர் ஹிரன்,
மிஸஸ் மான்னிங்,
ஜான்மர்டாக், எல். எல். டி.
மார்கரெட்டு இ. நோபிள்,
ஜே. ஸி. ஓமன்,
ஆசிரியர் எஸ். ஸோரன்ஸன்
பி. எச். டி,
ஆசிரியர் ஸர் எம். மோமர்
வில்லியம்ஸ்,
பாரிஸ் ஆசிரியர் ஸில்வன்லெவி
அமெரிக்க ஆராய்ச்சியாளர்
ஜெரிமியா கர்ட்டின்,
டாக்டர் எ. ஆர். வாலஸ்,
ஆசிரியர் மாக்ஸ் முல்லர்,
எம். விண்டர்நிஸ் பி. எச். டி.

முதலியபல ஐரோப்பியப்புலவர்களும் எழுதியிருக்கிறார்கள். மஹாபாரதத்தைப் பாராட்டிக் கூறும் பத்திரிகைகளுக்கும் ஸஞ்சிகைகளுக்கும் எல்லையில்லை.

மேற் கூறியவையன்றி, உலகிற் பல பாகங்களிலுமுள்ள மற்றும் கற்றுவல்ல பல பெரியார்கள், இந்த மஹாபாரதத்தின் சிறப்புக்களைப் புகழ்ந்து பல நூல்களை வெளியிட்டுள்ளார்கள். அவை விரிக்கிற் பெருகும்.

இமயமலை கங்கா நதி முதலியவை உலகின் மற்றப் பாகங்களிலில்லாத இயற்கைச் சிறப்புக்களை இந்தியாவுக்கு அளித்தல்போல, இந்த மஹாபாரதம் என்னும் நூலும் ஒரு தனிச் சிறப்பை இந்தியாவுக்கு அளிப்பதாகும். இத்தகைய பெருமைகள் பலவற்றிற்கும் உறைவிடமாகத் திகழும் இந்த மஹாபாரதமென்னும் நூலின் கால நிர்ணயத்தைப்பற்றிச் சில அபிப்பிராய பேதங்கள் உலாவி வருகின்றன.

ஆனால், மஹாபாரதத்தையும் மற்றப் புராணங்கள் சாஸ்திரங்கள் முதலிய நூல்களையும் பரம்பரை வழக்கங்களையும் ஆதாரங்களாகக்கொண்டு உற்று நோக்குமிடத்து, அவ்வித அபிப்பிராய பேதங்கொள்வதற்கு ஒரு சிறிதும் இடமில்லையென்பது நன்கு விளங்கும்.

மஹாபாரதத்திலேயே பாரத யுத்தம் முடிந்து 36 வருஷங்களுக்குப் பிறகு, ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளினதாகவும் உடனே கலியின் ஆட்சி தொடங்கினதாகவும் மஹா ப்ரஸ்தானிக பர்வம் முதலாவது அத்யாயம் தெரிவிக்கின்றது. மேலும், ஸ்ரீ கிருஷ்ணன் தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளினவுடன், பாண்டவர்கள், கலியின் ஆட்சி தொடங்கி விட்டமையாலும், ஸ்ரீ கிருஷ்ணனில்லாத இவ்வுலகில் வாழத்தமக்கு விருப்பமில்லாமையாலும் அரசாட்சியைப் பரீக்ஷித்து மஹாராஜனிடம் ஒப்புவித்துவிட்டு மஹா ப்ரஸ்தானத்திற்குப் புறப்பட்டதாக மஹாபாரதமே கூறுகின்றது. பாண்டவர்கள் மஹா ப்ரஸ்தானம் செய்த அந்தக் காலத்தை ஆரம்பமாகக் கொண்டு (அதாவது கலியுகம் பிறந்ததாகக் கொண்டு) கணக்கிட்டு வருவதில் இப்பொழுது (கி. பி. 1938-ம் ஹு-க்கு) 5039 ஆண்டுகள் ஆகின்றன என்பது நம்மவர்களுடைய பரம்பரையாக வரும் கொள்கை. அதாவது, கலியுகம் (5039–1938) கி. மு. 3101-ல் தொடங்கியதென்பதாகும்.

இக்கொள்கை இமய முதல் கன்யாகுமரி வரையில், பாரத தேச முழுதும், ஒப்புக்கொள்ளப்பட்டு, தொன்றுதொட்டு வழக்கத்திலும் இருந்துவருகிறது. இக்கொள்கை வழங்கி வருவதை நமது தேசத்தில் ஆங்காங்குப் பலவகைப்பட்ட மொழிகளிற் பிரசுரமாகும் பல பஞ்சாங்கங்களிலும் காணலாம். இதனால், இப்பொழுது கலியுகம் பிறந்து 5039 வருஷங்களாயின வென்றும் அதற்கு 36 வருஷங்களுக்கு முன் அதாவது, 5075 வருஷங்களுக்கு முன் (கி. மு. 3137-ல்) மஹாபாரத யுத்தம் முடிவுற்றதென்றும் தெரிகிறது. இந்தக் கலியுகம் பிறந்த கணக்கு நமது பாதகண்டம் முழுவதிலும் பரம்பரையாக வழங்கப் பெற்று வருகிறது. இதில் ஸந்தேகம் கொள்வதற்குச் சிறிதும் இடமில்லை. இதனையே ஸ்ரீ பாகவதம், விஷ்ணு புராணம், மத்ஸ்ய புராணம், பிரம்மாண்ட புராணம், வாயு புராணம், பவிஷ்ய புராணம் பவிஷ்யோத்தர புராணம் முதலிய புராணங்கள் ஆதரிக்கின்றன. மேலும், இந்தப் புராணங்கள் பாண்டவர்களுக்குப் பின்னிட்ட அரச பரம்பரைகளையும் கி. பி. சில நூற்றாண்டுகள்

துக் கொள்வேன். இப்போது என் விரல் போயிற்று. ஏகலைவனுக்கு ஸமானமாக என்னை நினைத்துக் கொள்வதற்கு மற்றொரு காரணமும் ஏற்பட்டது. அவன் அம்புவிடும் விரலை இழந்தான். நான் வீணை வாசிக்கும் விரலை இழந்தேன்" என்று சமாதானம் சொன்னான். கேட்கும்போது தகப்பனார் பின்னும் விம்மி விம்மிப் புலம்பினார்.

* * * *

காளஹஸ்தி ஐயர் எவ்வளவோ வருந்தித் துடித்தார். இழந்த விரலை மீண்டும் பெற முடியுமா? ஆனாலும் அவருடைய அன்பன் ஒருவன் தந்தத்தினால் ஒரு விரல் செய்து கொடுத்தான். அவன் தந்த அந்தத் தந்த விரலைக் குமாரன் பொருத்திக்கொண்டு வீணை வாசிக்கத் தொடங்கினான். அதுவரையில் காளஹஸ்தி ஐயர் துயிலை இழந்திருந்தார். வீணை வாசிப்பதை மறந்திருந்தார். தம் அருமைக் குமாரன் மீண்டும் வீணை வாசிக்கத் தொடங்கிய பிறகு அவர் சிறிது ஆறுதலுற்றார். அவனுடைய சங்கீதத்தை அநுபவிப்பதிலேயே பொழுது போக்கிக்கொண்டு வாழ்ந்து வந்தார்.

[இவ்வரலாற்றை யச்சை மிரியன் ஆதிப்பையர் பரம்பரையினரும் என் தந்தையாருக்கு நண்பருமாகிய வீணை ஸுப்பையரென்பவரிடமும் என் தந்தையாரிடமும் கேட்டிருக்கிறேன்.]



நமது காரியாலயத்தின் புதிய சொந்தக் கட்டிடம்
10, மௌண்ட் ரோட், மதராஸ்.

இந்தியன் மியூச்சுவல் லைப் அஸோஸியேஷன் லிமிடெட்,

நமது கம்பெனியின் மூன்ருவது மதிப்பீட்டில் ரூ. 1,29,875

உபரித் தொகை ஏற்பட்டு ஒரு வருஷத்திற்கு ரூ. 1000-த்திற்கு

போனஸ் { பூரா ஆயுளுக்கு ... ... ரூ. 18.
எண்டௌமெண்டுக்கு ... ரூ. 15-ம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இது சம்பந்தமாக நமது ஆக்சுவரி எழுதுவது மெச்சத்தக்கது.

"மதிப்பீடு முடிவுபடி எல்லா வகையிலும் அபிவிருத்தி ஏற்பட்டிருப்பதற்கு இந்த ஸொஸைட்டியை நாம் பாராட்டவேண்டும். நிர்வாஹஸ்தர்களின் திறமை, சிக்கனம் இவற்ருலேயே இது சாத்தியமாயிற்று. இதே அபிவிருத்தி இருந்துவந்தால் வட்டி விகிதங்கள் குறைவாகவிருந்தாலும், அடுத்த மதிப்பீட்டின்பொழுது இன்னும் அதிக போனஸ் கொடுக்கமுடியுமென நம்புகிறேன். கம்பெனிக்குக் கிடைத்திருக்கும் உபரித தொகையைக்கொண்டு அதிக போனஸ் அளிக்கலாமெனினும் வட்டி விகிதம் குறைந்து வருகின்றதென்ற காரணத்தாலேயே அதிக போனஸ் அளிக்க சிபார்சு செய்யவில்லை. எதிர்காலத்தில் காலமாறுபாட்டால் போனஸ் பாதிக்கப்படாமலிருக்கவேண்டுமென்பதற்காகவே, ஜாக்கிரதையாகவிருந்திருக்கிறேன். பாலிஸிதாரர்கள் இவ்வுண்மையை ஞாபகத்தில் வைத்திருப்பார்கள் என நம்புகிறேன்."

10, மவுண்ட் ரோட்,
மதராஸ்.

C. M. சீனுவாஸன்,
ஜெனரல் செக்ரடரி.

வரையில் தொடர்ந்து விவரித்துக் கூறுகின்றன.

அவற்றுள், மகத தேசத்தை ஆண்ட பிருஹத்ரத வம்சத்தில் மார்ஜாரி அல்லது ஸோமாபி என்பவன் முதல் ரிபுஞ்சயன் வரையில் 22 அரசர்கள் 1006 வருஷங்களும், பிறகு, ப்ரத்யோத வம்சத்தில் பிரத்யோதன் முதல் நந்திவர்த்தனன் வரையில் 5 அரசர்கள் 138 வருஷங்களும், பிறகு சைசு நாக வம்சத்தில் சிசுநாகன் முதல் மஹா நந்தி வரையில் 10 அரசர்கள் 360 வருஷங்களும், பிறகு, நந்த வம்சத்தில் மஹாபத்ம நந்தனும் அவனது ஸஹோதரர்கள் எண்மருமாக 9 அரசர்கள் 100 வருஷங்களும், பிறகு, மௌரிய வம்சத்தில் சந்திரகுப்தன் முதல் பிரகத்ரதன் வரையில் 12 அரசர்கள் 316 வருஷங்களும், பிறகு, ஸுங்க வம்சத்தில் புஷ்ய மித்ரன் முதல் தேவ பூதிவரையில் 10 அரசர்கள் 300 வருஷங்களும், பிறகு கண்வவம்சத்தில் வாஸுதேவன் முதல் ஸுசர்மாவரையில் 4 அரசர்கள் 85 வருஷங்களும், பிறகு, ஆந்திர வம்சத்தில் ஸுமுகன்முதல் புலோமன் வரையில் 32 அரசர்கள் 506 வருஷங்களும், பிறகு, குப்த வம்சத்தில் சந்திரகுப்தன் முதல் இரண்டாம் குமார குப்தன் வரையில் 8 அரசர்கள் 245 வருஷங்களும் ஆட்சி புரிந்தனரெனக் கூறுகின்றன. மேற்கூறிய புராணங்களில் அரசர்களின் பெயர்களிலும் கால அளவிலும் சில சில வேறுபாடுகள் காணப்படினும், இவை ஏற்றுக்கொள்ளப்படாமல் தள்ளிவிடத் தக்கனவல்ல. இந்த வேறுபாடுகள் ஒருவருக்கே பல பெயர்கள் வழங்கி வந்தமையாலும் எழுதினோர்களால் நேர்ந்த எழுத்துப் பிழைகள் முதலியவற்றாலும் நேர்ந்திருக்கவும் கூடும். இப்பிழைகள், பல தேசங்களிலிருந்தும் கையெழுத்துப் பிரதிகளை வருவித்துப் பல வித்வான்களைக்கொண்டு ஒப்பிட்டு ஆராய்ந்து நிச்சயித்துத் திருத்திப் பதிப்பித்தால் திருத்தம் அடையலாம். இது கடவுள் அருளால் நிறைவேற வேண்டும்.

இந்த வம்ச அரசர்களுள் முதலிலுள்ள ஸோமாபி அல்லது மார்ஜாரி என்பவன் மகத தேசத்தை ஆண்ட ஜராஸந்தனுடைய மைந்தனை ஸஹதேவனென்பவனது புத்ரனென்றும் பரீக்ஷித்து வேந்தனுக்கு ஸமகாலத்தவனென்றும் மேற் கூறிய புராணங்கள் கூறுகின்றன. இந்த அரச பரம்பரைகள் பாரத யுத்த காலத்திற்குப் பிறகு ஆரம்பமாகிப் பரம்பரையாக வந்துள்ளனவெனத் தெளிவாகும். அதாவது, இந்த ஒன்பது அரச வம்சங்களும் மஹா பாரத 'யுத்தம் முடிந்தது முதல் 3056 வருஷங்கள் ஆட்சி செய்துவந்தன. ஆகவே, இந்த மகத ராஜ்யத்து ஒன்பது அரச பரம்பரைகளும் பாரத யுத்தம் முடிந்ததாகிய கி. மு. 3139 முதல் கி. மு. 83 வரையில் ஆட்சி புரிந்துவந்தன என்பது விளங்குகிறது.

கலியுகம் பிறந்து 5039 வருஷங்களாகின்றன என்பதை நிலைநாட்டுவதற்கு வேறு சில ஆதாரங்களும் உள்ளன.

சோதிட நூல் வல்லவரான ஸ்ரீ பாஸ்கராசாரியர் செய்த ஸித்தாந்த சிரோமணி என்னும் பிரஸித்தமான சோதிட நூலில், கலி பிறந்து 3179-ம் ஆண்டில் சாலிவாகன சகம் தொடங்கினதாகக் கூறப்பெற்றுள்ளதால், கலிபிறந்து இன்றைக்கு 3179+1860=5039 ஹு ஆகின்றன. அதாவது (5039—1938=) கி. மு. 3101 என்பது.

சாளுக்ய வம்சத்தரசனை இரண்டாம் புலகேசி என்பான் காலத்தில் அஹோலே என்னும் மலைக்கருகிலுள்ள ஒரு ஜினாலயத்தில் பொறிக்கப்பெற்றுள்ள ஒரு சாஸனம் மஹா பாரத யுத்தம் முடிந்த 3735-ம் வருஷத்தில் ஏற்பட்டதெனவும் அப்பொழுதுசகஹு 556 எனவும் கூறுகின்றது. இதனாலும் கலியுகம் பிறந்து (3735—556=) 3179 வருஷத்தில் (அதாவது கி. பி. 78-ல்) சக வருஷம் ஆரம்பமாயிற்றென்பதும் கலியுகம் பிறந்து இன்றைக்கு 5039 வருஷங்களாகின்றன என்பதும் வலியுறுத்தப்படும்.

ஆல்பெருனி என்னும் புகழ் பெற்ற முகம்மதிய சரித்திராசிரியர், கி. பி. 1031-ம் வருஷத்தில் கலியுக ஹு 4132 என்று குறிப்பிட்டுள்ளார். இதனாலும், கலியுக ஆரம்பம் இன்றைக்கு (1938—1031=907=4132)=5039 வருஷங்களுக்கு முன்னர் (அதாவது, 4132—1031=) கி. மு. 3101 என்பது பெறப்படுகின்றது.

அபுல்பாஸல் எழுதியுள்ள ஆயினி ஆக்பரி என்னும் நூல், விக்ரமாதித்யசகமானது, யுதிஷ்டிரசகம் 3044-ம் வருஷத்தில் தொடங்கியதென்று கூறுகிறது. விக்ரமாதித்யசகம் தொடங்கி இப்பொழுது 1995 வருஷங்களாகின்றன. இதனாலும் யுதிஷ்டிரசகம்3044+விக்ரமாதித்யசகம் 1995, இரண்டையும் கூட்டக் கலியுகம் தொடங்கி இன்றைக்கு 5039 வருஷங்களாகின்றன என்பது விளங்கும்.

சதபதப்ராம்மணத்தில் பாரத ஸம்பந்தமான அம்பிகை, அம்பாலிகை, ஸுபத்ரை, அர்ஜுனன், பல்குனன், பரீக்ஷித், ஜனமேஜயன் முதலிய பல பெயர்கள் கூறப்பெற்றுள்ளன. இந்தச் சதபதப்ராம்மணத்தின் காலம் கி. மு. 3000 ஆண்டுகளுக்கு முன்னர் என்றும், சதபதப்ராம்மணத்தின் ஆரம்பக்காலத்துக்கும் அதன் இறுதிக்காலத்துக்கும் இடைப்பட்ட காலமே மஹா பாரத காலமென்றும் ஆராய்ச்சியில் வல்ல சரித்திராசிரியர்கள் தீர்மானிக்கிறார்கள்.

சதபதப்ராம்மணத்தில் கிருத்திகை என்னும் நக்ஷத்திரம் மட்டும் நேர்கிழக்கில் (உதயத்தில்) இருந்ததாகக் கூறப்பெற்றிருக்கிறது. ஆனால் இக்காலம் அந்தக் கிருத்திகை நக்ஷத்திரம் நேர்கிழக்கிலிராமல் சற்று வடக்குப்புறமாய் ஒதுங்கியிருக்கிறதெனவும் அவ்வாறு அது ஒதுங்கிவத் திருப்பதற்கு இடையில் குறைந்தது ஐயாயிரம் ஆண்டுகளாவது சென்றிருக்கவேண்டுமென்னும் அறிஞர் கூறுகின்றனர்.

மேற்கூறிய இரண்டு ஆதாரங்களாலும் கலியுக ஆரம்பம் ஐயாயிர வருஷங்களுக்கு முன் (அதாவது கி. மு. 3000 வருஷங்களுக்கு முன்) என்பது உறுதியாகிறது.

இவ்வளவும் கூறியவாற்றால் கலியுகம் பிறந்து ஐயாயிரம் வருஷங்களுக்குமேல் ஆகிறதென்பது, புராணங்கள் சில சாஸனங்கள், சரித்திரங்கள், வான சாஸ்திர நூல்கள் முதலிய பிரபல ஆதாரங்களைக் கொண்டு, நிராக்ஷேபமாகவும் சந்தேகத்துக்கு இடமில்லாமலும் நன்கு விளக்கப்பட்டது.

ஸ்ரீ ஸி. வி. வைத்யா எம். ஏ. எல். எல். பியும் ஸ்ரீ ஹரவிலாஸ் ஸாரதா எப். ஆர். எஸ். ஐ. யும், ஸ்ரீ எம். ஜகந்நாத ராவ் காவிய விநோத சாஹித்யரத்னகர ஸ்ரீ எம். கிருஷ்ணமாசாரியார் எம். ஏ. எம். எல். பி.எச்.டி. யும் கலியுக ஆரம்பம் கி. மு. 3101 (அதாவது இன்றைக்கு 5039 வருஷங்களுக்கு முன்னர்) என்றும் மஹாபாரத யுத்தம் அதற்கு 36 வருஷங்களுக்கு முற்பட்டதென்றும் பிரபல ஆதாரங்கள் காட்டி விளக்கியிருக்கிறார்கள். அவர்களால் முறையே இயற்றப்பெற்ற The Mahabharata-a Criticism, The Hindu superiority, The age of the Mahabharata war, A History of Classical Sanskrit Literature என்னும் நூல்கள் யான் இக்கட்டுரையை எழுதப் பெரிதும் பயன்பட்டன. அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேன்.

சிலர், மேலே காட்டிய கொள்கைக்கு விரோதமாகக் கலியுக ஆரம்ப காலமும் மஹா பாரத யுத்த காலமும் பிற்பட்டனவென்று கருதி, தங்கள் கொள்கைக்குப் பல ஆதாரங்கள் எடுத்துக் காட்டுகிறார்கள். அவற்றுக்குச் சில உதாரணங்கள் பின்வருமாறு:—

வராஹ மிஹிரர் என்னும் வான சாஸ்திர நிபுணர், கர்க்கர் கூறியதாக, "ஆஸந் மகாஸு முநய: சாஸதி ப்ருத்வீம் யுதிஷ்டிரே ந்ருபதௌ — ஷட்த்விக பஞ்சத்வியுத: சக

(4)

துர்க்கேசநந்தினி

பங்கிம்சந்த்ர சட்டோபாத்யாயர்

மொழிபெயர்ப்பு

காகிதம் • அச்சு

சித்திரங்கள்—

இவை முதல் தரம்

ரூ. 1-4-0

தபால், வி. பி. செலவு தனி

ஏற்கெனவே வெளிவந்தவை

(1)	விஷ விருக்ஷம்	ரூ.	1—8—0
(2)	ஆனந்த மடம்	ரூ.	1—4—0
(3)	இந்திரா	ரூ.	0--12--0

(தபால், வி. பி. செலவு தனி)

அடுத்து வரும் நூல்கள்

(5) மாதங்கினி (6) ரஜனி

(7) கிருஷ்ணகாந்தன் உயில்

☞ எங்களிடம் தேசத் தலைவர்கள் சரிதைகள் யாவும் குறைந்த விலைக்குக் கிடைக்கும்.

அல்லயன்ஸ் கம்பெனி,

மயிலாப்பூர் — சென்னை.

காலஸ் தஸ்ய ராஜ்ஞஸ்ச'' என்னும் சுலோகத்தை எடுத்துக் காட்டியுள்ளார். அதற்கு யுதிஷ்டிரர் ஆட்சி 2526-ல் சக காலம் என்று பொருள் கூறுகிறார்கள். அதாவது, 2526 உடன் சககாலத்தைக் கூட்டினல் யுதிஷ்டிரர் ஆட்சிக் காலம் என்பது கருத்து. ஆனல், இன்ன சகமென்று விளக்கமாயில்லை. சக காலம் என்று மாத்திரம் சொல்லியிருக்கிறார். இராஜதரங்கிணி என்னும் சரித்திர நூலாசிரியராகிய கல்கணர், சககாலமென்பதைச் சாலீவாகன சகம் எனக் கொண்டார். சாலீவாகன சகம் கல்யப்தம் 3179-ல் தொடங்கியது. கலியுகத் தொடக்கமும் யுதிஷ்டிர சகத் தொடக்கமும் ஒன்றே. கல்கணர், கலியுகம் கி. மு. 3101-க்கு முன் தொடங்கியது என்னும் கொள்கையுடையவரே. ஆயினும், 3179-ல் தொடங்கிய சாலீவாகனசகத்தை 2526-ல் தொடங்கியதாகக் கொண்டதில் (3179-2526)653=வருஷங்கள் குறைவுபட்டன. இந்தக் குறையைப் பூர்த்தி செய்வதற்குப் பாண்டவ கௌரவர்கள் கலியுகம் தொடங்கி 653 வருஷம்வரையில் இருந்தார்களென்றும் பாரத யுத்தம் கலியுகம் 653 வருஷங்களுக்குப் பிறகு நடந்ததென்றும் நிச்சயித்தார். அப்படிக் கொள்வது கிருஷ்ணன் மஹாபாரத யுத்தம் முடிந்தபின் 36 வருஷங்கள் பூலோகத்திலிருந்து பிறகு தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளினரென்றும், அதன் பிறகே கலியின் ஆட்சி ஓங்கத் தொடங்கியதென்றும் அதனை அடுத்துப் பாண்டவர்கள் மஹா ப்ரஸ்தானம் செய்தார்களென்றும், மஹாபாரதமும் மற்றப் புராணங்களும் கூறும் கொள்கைக்கு முற்றும் முரணும். மேலும், கர்க்கர், கி. மு. சில நூற்றாண்டுகளுக்கு முன் இருந்தவர். சாலிவாகன சகமோ, கி.பி. 78-ல் தொடங்கியது. ஆதலால், கர்க்கர் தமக்குச் சில நூற்றாண்டுகளுக்குப் பின் தொடங்கும் சாலிவாகன சகத்தைப்பற்றிக் கூறியிருக்கமாட்டாரென்பது நிச்சயம். அவர் கூறிய சகம் விக்ரமாதித்ய சகமும் சாலிவாகன சகமுமல்லாத வேறு ஒரு சகமாயிருக்கவேண்டும். அது கி. மு. 543-ம் வருஷத்தில் தொடங்கிய புத்த நிர்வாண சகமே ஆகுமென்று சில ஆராய்ச்சிக்காரர்கள் நிச்சயிக்கிறார்கள்.

மேலே எடுத்துக் காட்டிய 'ஆஸந் மகாஸுமுநய:' என்று தொடங்கும் சுலோகத்தில், 'ஷட்த்விக' என்னும் தொடருக்கு 26 என்று பொருள் கொள்ளாமல் (இரண்டு ஆறு:) 66 எனக் கொண்டால், அப்போது 2566 ஆகும். அதனோடு புத்த நிர்வாணசகம் ஹு 543 ஐக் கூட்ட கி. மு. 3109 வருஷங்களாகும். ஆதலால் இதுவே கர்க்கர் குறித்த சக காலமாக இருக்கவேண்டும். ஆனல், கலியுக ஆரம்பம் கி. மு. 3101 ஆவதால், இதில் எட்டு வருஷம் அதிகமாகிறது. இந்தச் சொற்பவித்யாஸம் கவனிக்கத்தக்கதன்று. இதுவே கலியுகத் தொடக்கம் கி. மு. 3101 என்பதற்குப் பெரும்பாலும் ஒத்துவருகிறது.

கல்கணர், கலியுகம் தொடங்கியது கி. மு. 3101-ல் என்பதை ஒப்புக்கொண்டும், பாண்டவர்களுடைய காலத்தை மாத்திரம் கலி பிறந்து 653 ஆண்டுகளுக்குப் பின்பு (அதாவது கி. மு. 2448) என்று காட்டியிருப்பது ஆராயத் தக்கது.

மஹா அலெக்ஸாண்டருடன் கி. மு. 3-ம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த கிரேக்க ஆசிரியர்கள் ஸண்ட்ரகோடஸ் என்றும், ஸண்ட்ரகிப்டஸ் என்றும் குறிப்பிட்டுள்ள ஒருவனை, 18-ம் நூற்றாண்டின் இறுதியில், வங்காளத்திலுள்ள ஓர் ஆராய்ச்சிக் கழகத்தில் தாம் செய்த ஓர் உபன்யாசத்தில் ஸர் வில்லியம் ஜோன்ஸ் என்பவர் கி. மு. 1535 முதல் கி. மு. 1501 வரையில் ஆண்டு வந்த மௌரிய வம்சத்து சந்திரகுப்தனாக நிச்சயித்து வெளியிட்டார். அதனையே ஐரோப்பிய சரித்திராசிரியர்கள் மேற்கொள்ளலாயினர். நம்மவர்களில் சிலரும் அதனைப் பின்பற்றலாயினர். அது மேற்கூறியுள்ள நமது புராணங்களில் காணப்பெறும் அரச பரம்பரை வரலாறுகளுக்கும் மற்றுமுள்ள கால வரையறைகளுக்கும் ஒவ்வாமல் முன்னும் பின்னும் முரணாகி இருந்து ஒரு குழப்பத்தை உண்டாக்குகிறது. ஆனல் கிரேக்க ஆசிரியர்கள் கூறும் அந்தச் சந்திரகோடஸ் என்பான் கி. மு. 328 முதல் கி. மு. 321 வரையில் ஆட்சி புரிந்த குப்த வம்சத்து முதல் அரசனன சந்திரகுப்தனே என்று தெரிகிறது. அப்படிக் கொண்டால் இவ்வித முரண்பாட்டுக்கு இடம் ஏற்படாது.

அசோகனென்பவன் பெயரால் சில சாஸனங்கள் காணப்படுகின்றன.

மௌரிய வம்சத்துச் சந்திரகுப்தனுக்குப் பேரன் ஒருவன் அசோகனென்னும் பெயருடையவனாகக் காணப்படுகிறான். அவனே மேற்கூறிய சாஸனங்களுக்கு உரியவனெத் தீர்மானித்து அந்த மௌரிய வம்சத்துச் சந்திரகுப்தனைக்-கிரேக்க ஆசிரியர்

உபயோகமுள்ளதாகவுப், அழகுள்ளதாகவு மிருக்க வேண்டிய வெகுமதிகள்!

பிரபலமாயுள்ளதும், எல்லோரும் போற்றுவதுமான இவற்றிலிருந்து நீங்கள் கொடுக்கும் வெகுமதியைத் தேர்ந்தெடுங்கள்!!



மினியேச்சர் 'டி'
18 காரட் கெட்டித்தங்கம் ரூ. 80.

மினியேச்சர் 'எல்'
18 காரட் கெட்டித்தங்கம் ரூ. 77.

மினியேச்சர் ரேக்டாங்குலர் ஸெகண்ட்ஸ்
ரோல்ட் கோல்ட் ... ரூ. 28.
9 காரட் கெட்டித்தங்கம் ரூ. 37.
18 காரட் கெட்டித்தங்கம் ரூ. 52.

மினியேச்சர் 'எக்ஸ்' M2
18காரட் மஞ்சள் தங்கம் ரூ. 105.
18காரட் வெள்ளைத்தங்கம்ரூ.110.

மினியேச்சர் ட்வின் டயல்
ரோல்ட் கோல்ட் ... ரூ. 45.
18 காரட் கெட்டித்தங்கம் ரூ. 85.

மிட்செட் 'ஏ'
18காரட் கெட்டித்தங்கம் ரூ. 120.

மினியேச்சர் 'Y-2'
18 காரட் கெட்டித்தங்கம் ரூ. 75.

ப்ளேண்டர் நெ. 9.
18 காரட் மஞ்சளும் வெள்ளையும் கலந்த தங்கம் ரூ. 105.

மினியேச்சர் 'டீ'
18 காரட் கெட்டித்தங்கம் ரூ. 72.

எமது பெரிய இல்வச காட்லாக்கில் இன்னும் அனேக உயர்தர ரகங்களைக் காணலாம்.

வெஸ்ட் எண்ட் வாட்சு கும்பெனி, பம்பாய் & கல்கத்தா.

WEST END WATCH Co.
BOMBAY CALCUTTA
MERIT

மகாமகோபாத்யாய எம். வி. ராமானுஜாச்சாரியார்.

கூறும் சந்திர குப்தனென நிச்சயித்தற்கு அச் சாஸனங்களையே ஆதாரமாகக் காட்டுவாராயினர். ஆனால், குப்த வம்சத்துச் சந்திரகுப்தனது மைந்தனான ஸமுத்ரகுப்தனுக்கு அசோகனென்னும் பெயரும் உண்டு. அவனே சாஸனங்களில், 'ப்ரியதர்சி' என்றும், 'தேவானும் ப்ரியன்' என்றும் கூறப்படுவனென்று கொள்ளவேண்டும். அவ்வாறின்றி, அவனுக்கு ஏறக்குறைய பன்னிரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்த மௌரிய வம்சத்துச் சந்திரகுப்தனுடைய பேரனான அசோகனெனக் கொள்வது தவறாகும். அசோக சாஸனங்களில் சந்திரகுப்தன் அசோகன் என்னும் பெயர்களின் ஒற்றுமையை மட்டும் கொண்டு அவ்வாறு முடிவு செய்ய இடம் ஏற்பட்டது. அன்னோர் குப்த அரசர்களுடைய பரம்பரை ஒன்று இருந்ததை அறியார்போலும்.

ஸர் வில்லியம் ஜோன்ஸ் கூறிய கொள்கையை அக்காலத்திலேயே (Troyer) முதலிய சில ஐரோப்பியர்களும் சில இந்தியர்களுமாகிய ஆராய்ச்சியில் வல்ல அறிஞர்கள் ஏற்றுக்கொள்ளாது மறுத்துள்ளார்களென்பதைக் குறிப்பிடவேண்டும்.

கிரேக்க ஆசிரியர்கள், ஹிராக்ளிஸ் என்பவன் சந்திரகுப்தனுக்கு 138 தலைமுறைகள் முற்பட்டவன் என்று கூறியிருக்கிறார்கள். இந்த ஹிராக்ளிஸை ஸ்ரீ கிருஷ்ணனென்று சரித்திர ஆசிரியர்கள் நிச்சயித்திருக்கிறார்கள். ஆகையால், ஹிராக்ளிஸ் சந்திரகுப்தன் ஆகிய இருவருக்கும் இடையில் 138 தலைமுறைகள் ஆயினவென்று தெரிதலால், சரித்திரக்காரர்கள் ஒருவாறு கொள்ளும் வழக்கப்படி தலைமுறை ஒன்றுக்குச் சராசரி 20 வருஷங்கள் வீதம் வைத்துக் கணக்கிட்டாலும், கிருஷ்ணனுக்கும் சந்திர குப்தனுக்கும் இடையே 2760 வருஷங்கள் சென்றிருக்கவேண்டும். கிருஷ்ணனுடைய காலம் கி.மு.3102-க்கு முந்தினது; மௌரிய சந்திரகுப்தனது ஆட்சித் தொடக்கம் கி. மு. 1535; ஆகையால் இருவருக்கும் இடையில் சுமார் 1600 வருஷங்களுக்கு ட்பட்ட காலம்தான் சென்றிருக்கிறதாகத் தெரிகிறது. ஆதலால், 2760 வருஷங்களுக்குப் பின் வந்தவன், குப்த வம்சத்துச் சந்திரகுப்தனாகவே இருக்கவேண்டும்: அவனுடைய காலம் கி. மு. 328 முதலாதலால், (2760+328) கி. மு. 3088 வருஷம் ஆகின்றன. இது கிருஷ்ணனுடைய காலத்துக்கு ஏறக்குறைய ஒத்து வருகிறது. இதனால், கிரேக்க ஆசிரியர்களால் சந்திரகோடஸ் என்று குறிப்பிக்கப்படும் சந்திரகுப்தன், குப்த வம்சத்துச் சந்திரகுப்தனே என்பதும் மௌரிய வம்சத்துச் சந்திரகுப்தனல்லனென்பதும் பெறப்படும்.

கிருஷ்ணனுடைய காலமும் மஹாபாரத யுத்த காலமும் கலியுகம் பிறப்பதற்கு முன்னரே என்பது மஹாபாரத முதலிய நூல்களால் கூறப்படுவதும் நம் ஆன்றோர் கொண்ட கொள்கையுமாதலால், மஹாபாரத யுத்தம் கி. மு. 3137-ல் முடிந்திருக்க வேண்டுமென்பதும் கலியுகம் பிறந்து இன்றைக்கு ஐயாயிரம் வருஷங்களுக்குமேல் ஆகியிருக்க வேண்டுமென்பதும் வலியுறுத்தப் பெறும்.

சிற்சிலர், மஹாபாரத யுத்தம், கி. மு. 1922 என்றும், கி. மு. 1810 என்றும், கி. மு. 1733 என்றும் பலபடியாகக் கூறித் தத்தம் கொள்கைகளை நிலை நிறுத்த முயல்வாராயினர். அவற்றையெல்லாம் இங்கே விரித்துக் கூறப்புகின் மிக விரியுமாதலால், அவை விவரிக்கப்படவில்லை.

மஹாபாரத நூல் எழுதப்பட்ட காலம்

வியாஸ முனிவர் மஹாபாரத சரித்திர நிகழ்ச்சியில் ஆதி முதல் அந்தம்வரையில் இடையிடையே ஸம்பந்தப்பட்டவர் என்பதும் அவரால் மஹாபாரதம் சொல்லப்பட்டதென்பதும் வெளிப்படை. ஆதலால் பாரதயுத்தம் முடிவுபெற்றவுடன், அதிகம் பிற்படாத ஒரு சமீப காலத்திலேயே அது அம்முனிவரால் இயற்றப்பெற்றிருக்கவேண்டும். ஏனெனில் இந்த மஹாபாரதம் பரீக்ஷித்தின் மைந்தனான ஜனமேஜயனுக்கு வைசம்பாயனரால் சொல்லப்பட்டது. அர்ஜுனன் குமாரன் அபிமன்யு; அபிமன்யுவின் மகன் பரீக்ஷித்து; பரீக்ஷித்தின் மைந்தன் ஜனமேஜயன். பரீக்ஷித்து பட்டத்துக்கு வந்தவுடன், கலியுகம் தொடங்கியது. அவனுடைய மகனான ஜனமேஜயனுக்கு மஹா பாரதம் சொல்லப்பட்டதென்றால், கலிபிறந்த முதல் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே மஹாபாரதமென்னும் இதிஹாஸம் செய்யப்பட்டிருக்கவேண்டும். மேற்கூறிய காரணங்களால், ஸ்ரீ மஹாபாரதம் இக்காலத்திய சரித்திர ஆசிரியர்கள் தீர்மானித்திருக்கிறபடி கி. மு. 200 அல்லது 300 ஆண்டுகளுக்கு முன்னம் எழுதப்பட்டதென்பதை நம்புவதற்குப் போதிய ஆதாரங்களே இல்லையென்பதும் இது கி. மு. 3000 ஆண்டுகளுக்கு முன்னமே தோன்றிய நூல் என்பதும் வெள்ளிடைமலைபோலத் தெள்ளிதின் விளங்குவது காண்க.

மஹாபாரத யுத்தம் 5000 வருஷங்களுக்கு முற்பட்டதென்பதற்கு எடுத்துக் காட்டிய ஆதாரங்கள் யாராலும் மறுக்கமுடியாதெனவும் நிராக்ஷேபமாகி ஒப்புக்கொள்ளக் கூடியனவுமான சிறந்த பிரமாணங்களென்பதையும், இதற்கு மாறாகக் கூறும் கொள்கைக்கு ஆதாரமாகக் காட்டிய பிரமாணங்கள் பலரால் ஆக்ஷேபிக்கப்பட்டவையும் பொருத்தமற்றவையென்பதையும் அறிவுடையோர் நுணுகி ஆராய்ந்து உண்மையை அறிந்துகொள்க.

நமது தேசச் சரித்திரத்தை நவீன முறையில் புதுப்பித்துத் திருத்தியமைப்பதற்கு முயற்சி செய்யும் ஆராய்ச்சியில் வல்ல அறிஞர்கள் நமது புராணங்களிலும் மற்றுமுள்ள பழைய நூல்களிலும் காணப்பெறும் ஆதாரங்களையெல்லாம் ஆராய்ந்தும், பிற நாட்டு நூல்களில் காணப் பெறும் விஷயங்களை ஒப்பு நோக்கியும் நடுநிலைமையில் நின்று ஓர் உண்மைச் சரித்திரம் எழுதுவார்களானால், இப்பொழுது உள்ளவாறு பல விபரீத முடிவுகளுக்கு இடம் ஏற்படாது. மேலும், அதனால், இந்த மஹாபாரதச் சரித்திர மட்டுமே யல்லாமல், சூரியன் மேகத்தால் மூடுண்டு ஒளி மழுங்கியிருப்பதுபோல ஒளி மழுங்கியிருக்கும் நமது தேசச் சரித்திரமாகிய சூரியனும் மாசு நீங்கி, சுய ஒளி பெற்று விளக்கமடையும் என்பது திண்ணம்.

எமது காரியாலயத்தில்
வெகு நேர்த்தியான

★ 1. போட்டோக்கள்
★ 2. லைன் & ஹாப் டோன் பிளாக்குகள்
★ 3. ஸ்டீரியோ

முதலியன வெகு சீக்கிரமாகவும் குறித்த தினத்திலும் செய்து கொடுக்கப்படும்.

விவரங்களுக்கு கீழ்க் கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—

மானேஜர்,
"சுதேசமித்திரன்"
மவுண்ட் ரோட், மதராஸ்.

நீங்கள் விரும்பும் அம்சமெல்லாம் பொருந்திய ரேடியோ

மலிந்த விலை! வியாபாரிகளுக்குத் தாராளமான டிஸ்கவுண்டு!!

1938 பில்கோ

ரேடியோமூலம் கேட்பதில் என்னென்ன அவசியமான அபிவிருத்திகள் உண்டோ அத்தனையும் 1929 வருஷம் தொடங்கி, பில்கோவின் மூலமாகத்தான் முதன் முதல் வெளிவந்திருக்கின்றன. பில்கோ எஞ்சினீர்கள் கண்டுபிடித்த சிறப்பான அம்சங்கள் அத்தனையும் ஒவ்வொரு பில்கோ ஸெட்டிலும் அமைந்திருக்கின்றன. பில்கோ கம்பெனியாருக்குள்ள ஆராய்ச்சி வசதிகள் இணையற்றவையாகும்; ஆகையால், பிறர் போட்டியே இடமுடியாதபடி, பில்கோ மாடல் ஒவ்வொன்றும் முன்னேறியிருக்கிறது.



மாடல் **38—2670 B.**

A. C. ஆபரேஷனுக்கு
11 டியூப்புகள்

110 அல்லது 220 வோல்டுகள்
ரூ. 600.

A. C./D. C. ஆபரேஷனுக்கு
ரூ. 700.

வேண்டுவோருக்குச் சித்திரங்களோடுகூடிய காட்லாக் இனமாக அனுப்பப்படும்.

சென்னை ராஜதானிக்கும் சமஸ்தானங்களுக்கும்
ஸோல் டிஸ்டிரிபியூட்டர்கள் :—

முகம்மது இப்ராஹீம் & கோ.,

(மே. த. கவர்னரின் நியமனம் பெற்றவர்கள்.)

26—27, ரட்டான் பஜார், சென்னை.

இந்தியாவின் புராதன அரசியல்

—[*]—

(ராவ்பகதூர் கே. வி. ரங்கஸ்வாமி அய்யங்கார்)



சுமார் அரை நூற்றாண்டுக்கு முன்பு நம் நாட்டில் ஹிந்துக்களின் பழைய அரசியலைப் பற்றி சரித்திர பண்டிதர்களுக்குக்கூட உணர்ச்சி மிகக் குறைவாக இருந்தது. அதற்குக் காரணம் ஹிந்துதேசத்தின் பழைய நாகரீகத்தில் சிரத்தையோ, அபிமானமோ இல்லையென்பதல்ல. ராஜ தந்திர விஷயங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்யப்போதிய ஆதாரங்கள் கிடைக்காமலிருந்ததேயாகும். தவிர மேல்நாட்டு சாஸ்திரங்களில் பயிர்ச்சியுண்டான தன் பயனாகச் சில அபிப்பிராயங்களும் சில கொள்கைகளும் நம்தேசத்துச் சரித்திர பண்டிதர்களால் கௌரவத்தோடு ஸ்வீகரிக்கப்பட்டிருந்தன.

மேனாட்டு சரித்திர நிபுணராகிய ஸர் ஹென்றி மெயின் முதலியவர்களுடைய அபிப்பிராயங்களைப் பின் தொடர்ந்து இந்தியாவில் அப்பொழுது நிரங்குசாதிபத்தியமே சாமானியமாக வளர்ந்ததாகவும், பழைய ஹிந்துதேசத்தில் சர்வ வித காரியங்களிலும் சுபாவமாகவே வளரும் ஒரு சக்தியில்லை என்றும், அரசியல் நூல்களில் மேல்நாட்டு கிரந்தங்களைத் தவிர, வேறு கொண்டாடத்தக்க யோக்கியதையுள்ளவை இல்லை என்றும், ஹிந்துதேசபுராதன ராஜ்ய தந்திரங்களை ஆராய்ச்சி செய்வதில் பிரயோஜனமில்லை என்றும், சர்வ சம்மதமாகக்கருதப்பட்டது. ஆனால் நாளடைவில் காங்கிரஸ் மகாசபையினால் புதியதேசாபிமானம் வளரவே, இந்தக் கொள்கையில் நம்பிக்கை குறைய நேர்ந்தது.

பல் ஆயிர வருஷங்களாக நம்முடைய பாரத பூமியில் அநேக ராஜ்யங்கள் தோன்றி, ஜனங்களுக்கு மிகுந்த சுகம் உண்டு பண்ணி வளர்ந்து வந்திருக்கின்றன. சரித்திர விஷயமாகப் பல தகவல்கள் கிடைக்கும் இப்பொழுது அந்த ராஜ்யங்களில் அரசியல் நிபுணர்கள் இல்லை என்று சொன்னால் அதை நம்புவது அசாத்தியமாகிவிட்டது. அந்த சமயத்திலிருந்த இந்தியாவினுடைய மதங்களிலும் தத்துவ சாஸ்திரங்களிலும் மேல் நாட்டாருக்கு உண்டான கௌரவம் கண்டு, நம்முடைய தேசத்திலும் சம்ஸ்கிருத பாஷைக்கு மறுபடியும் ஒரு மேன்மை ஏற்பட்டது. இதனால் ராமாயணத்திலும், மகாபாரதத்திலும் மற்றும் இதர புராணங்களிலும் ராஜதந்திரம் பற்றிப் பதிந்து கிடக்கும் தத்வங்களை எடுத்துச் சில பண்டிதர்கள் ஆராய்ச்சி செய்யத்தொடங்கினர். ஸ்ரீராமனுக்கும் தர்ம புத்திரருக்கும் தர்மத்தோடு அரசுபுரியும் வழி எவ்விதம் இருக்க வேண்டுமென்று உபதேசிக்கப்பட்டிருக்கிறது. இந்த உபதேச வாக்கியங்களைக் கொண்டு பிறகு வந்த அரசர்களுக்கு ஒரு வழியைக் காட்டியிருப்பதாக இதன்பேரில் வியாசங்கள் எழுதப்பட்டன. ஆகிலும் ராமராஜ்யம், பாண்டவ ராஜ்யம் முதலிய தர்ம அரசுகள் ஏதோ தர்மாத்மாவான அரசர்களின் குணத்தினால் ஏற்பட்டவை தவிர, சுபாவமான நம்முடைய் புராதன அரசாங்க முறையைக் காட்டவில்லை'' என்று சங்கிப்பவர்களும் சிலர் உண்டு. அந்த சமயம் பௌத்தருடைய புராதன ஆதாரக்கிரந்தங்கள் இலங்கையிலும், ஐரோப்பாவிலும், ஸ்வல்பமாக நம்முடைய நாட்டிலும் ஆராய்ச்சி செய்யப்பட்டு வந்த ஸமயம். பௌத்தருடைய காலத்திலும் பின்பு மௌரிய சக்ரவர்த்திகளின் காலத்திலும் குடியரசுகள் இருந்ததாகவும், குலமக்கள் ஆட்சி இருந்ததாகவும் சிற்றரசுகள் உடன்படிக்கையினால் ஒன்றாகக் கூடி, அரசாங்க ஸமஷ்டி யேற்படுத்தி பரஸ்பர சகாயத்திற்காக ஓரே அரசாக இருந்ததாகவும் ஆதாரங்கள் தெரிந்தெடுக்கப்பட்டன.

குலோத்துங்க சக்ரவர்த்தி வங்க தேசத்தை ஆக்கிரமித்து கங்கைக்கரையில் தன்னுடைய கொடியை நாட்டினான். இதைப்பற்றிக் காவிய மெழுதின ஜயங்கொண்டனாரின் கலிங்கத்துப் பரணியில், நாம் இன்றும் படிக்கக்கூடிய அம்சங்களுண்டு; ஜனக்கூட்டங்களுடைய நியமங்களுக்குப் போட்டியாக பௌத்த சமயத்தின் இளர்வளர்ச்சி காலத்தில்கூட அரசுகளின் நியமங்கள் காணப்பட்டன. அவர்களில் சாக்கியர், மோரியர், மாலர், கோலியர், பார்க்கரர், விதேகர், மாதுரர், கூகரர், கௌரவர், பாஞ்சாலர், முதலியவர்களைப் பிரதானமாகச் சொல்லலாம்.

வேதநூல்களினின்றும், வேறு நூல்களினின்றும் வெகு புராதனமான காலங்களில் ஒவ்வொரு ராஜாங்கத்திலும் அரசாக்ஷி புரிய ஜனங்களுடைய சகாயமும், சம்மதமும் கிடைக்கும் வண்ணம் சமிதி என்றும், சபை என்றும், மகாஜனங்களுடைய சமூகங்கள் கூட்டப்பட்டன என்றும், அந்த சமூக சபைகளில் தங்கு தடையின்றி ஜனங்கள் தங்களுடைய அபிப்பிராயங்களை அரசாங்கத்திற்குத் தெரிவிக்க சுதந்திரம் இருந்ததாகவும் சபையில் முக்கியமான ராஜீய விஷயங்களைப்பற்றி வாதப் பிரதிவாதம் நடத்தி, தீர்மானம் செய்துவந்ததாகவும், அரசனுடைய பட்டாபிஷேக காலத்தில் தர்மம் தவறாமல் பரிபாலனம் செய்வதாக அரசன் பிரதிக்ஞை செய்வது வழக்கமென்றும், அரசனுக்கும் பிரஜைகளுக்கும் இருக்கும் சம்பந்தம் உடலுக்கும் உயிருக்கும் இருக்கும் சம்பந்தம்போல் என்று பொதுவாகக் கருதப்பட்டதாகவும் அதற்கு அடையாளமாகப் பட்டாபிஷேக சமயங்களில் பலவித ஜன சமூகங்களுக்கும் தொழிலாளிகளுக்கும் பாகம் இருந்ததாகவும் தெளிவாக ஏற்படுகிறது.

மௌரி குல திலகராகிய சக்ரவர்த்தி சந்திரகுப்தரின் காலத்தில் வந்த கிரேக்க தூதன் மெகாஸ்தனீஸ் என்பவரின் கிரந்தத்தினால் ஜனங்களுக்கு அந்தக் காலத்தில் இருந்த நல் வழக்கத்தையும் அதற்குக் காரணமான அரசாட்சியையும் ஆராய்ச்சிமூலம் நாம் அறியக்கிடக்கிறது. பிறகு அவருடைய பௌத்திரனாகிய அசோக சக்ரவர்த்தியின் சிலா சாசனங்களினால் அவருடைய சாம்ராஜ்யத்தில் சர்வ விதமான அனுகூலங்களும் பிரஜைகளுக்கு சம்பவித்தன என்பதும் சரித்திர ஆராய்ச்சியினால் விசதமாக்கப்பட்டிருக்கிறது. ஆகிலும் இந்திய அரசியல் பற்றிய ஆராய்ச்சிக்கு மகத்தான சகாயம் ஏற்பட்டது சாணக்கியன் என்றுவழங்கப்படும் கௌடில்யருடைய ராஜ தந்திர கிரந்தங்களினாலேதான்.

சாணக்கியர் பெருமை

1500 வருஷங்களுக்கு முன் சாணக்கியருடைய அதிசயமான காரியங்களைத் தழுவி விசாக தத்தர் என்று பெயருடைய ஒரு மகாகவி "முத்ரா ராக்ஷஸம்," என்று ஒரு நாடகம் எழுதினார். அந்த நாடகத்தில் சாணக்கியரைப்பற்றிச் சொல்லப்பட்ட விஷயங்கள் எல்லாம்உண்மை என்று நவீன ஆராய்ச்சியினால் ஸ்திரப்பட்டிருக்கிறது. தன்னுடைய புத்தி சாதுர்யத்தினாலும், மனோ தைரியத்தினாலும், தேசாபிமானத்தினாலும், பிரஜைகளின் நன்மையில் ஆழ்ந்த விஸ்வாசத்தினாலும், சாணக்கியர் மிலேச்சர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட பரத கண்டத்தைப் பாதுகாத்தார். சத்ருக்களை ஒழித்து, கொடுங்கோல் அரசைத் தவிர்த்தார். தேசத்தில் ஐக்கிய முண்டுபண்ணினார். சாஸ்வதமாக ராஜ்யம் நல்ல வழியில் நடைபெறும்படி ஏற்பாடுகள் செய்தார். தன்னுடைய ஆச்ரிதனும், சிஷ்யனுமாகிய சந்திர குப்தனுக்கு மகுடாபிஷேகம் செய்துவைத்தார். பிறகு தவம் செய்ய ஹிமாலய ஆச்ரமத்திற்குத் திரும்பிப் போனார் என்பது அவரது கதை.

சாணக்கியர் தன்னுடைய சிஷ்யனுடைய காலத்திற்குப் பிறகு, அவனுடைய மகன் பிந்துசார சக்ரவர்த்தி காலத்திலும், பிரதான மந்திரி பதவி வகித்தார் என்று திபேத் தேசத்தில் வழங்கி வந்த ஒரு கொள்கையினால் தெரிய வருகிறது.

சாம்ராஜ்ய பதவியை அநேக அரசர்கள் அடைந்திருந்தும் அந்தப் பதவி எக்காலமும் நீடித்திருக்கும்படி முறைகள் ஏற்படுத்தும் சக்தி அநேக சக்ரவர்த்திகளுக்கு இல்லை என்பது சரித்திரங்களினால் விசதமாகத் தெரிய வருகிறது. ஒரு மரத்தை நாட்டுவது பெரிதல்ல. அது ஆயிரம் ஆண்டுகளுக்கு இருக்கும்படி ஏற்பாடு செய்வதுதான் பெரிது. அசாதாரணமான அரசு புரியும் சக்தியுள்ள சாணக்கியர் என்கிற கௌடில்யர் தன்னுடைய சிஷ்யனை சக்கரவர்த்தியாக்கியது தவிர, அவனுக்குப் பின் வரும் புத்திர, பௌத்திர பாரம்பரியமான சக்ரவர்த்திகளுக்கும் ராஜ்ய தந்திரம் தெளிவாகத் தெரியும்படி ஒரு அரசியல் நூல் எழுதினார். அந்நூல் கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் என்று விளங்கி வருகிறது.

அர்த்த சாஸ்திரம்

அர்த்தசாஸ்திரம் என்பது தர்ம சாஸ்திரத்திற்கு சமானமாகக் கொள்ளப்பட்ட சாஸ்திரம். தர்ம, அர்த்த? காம, மோக்ஷம், என்ற நான்கு புருஷார்த்தங்களில் இரண்டாவதான அர்த்தம் லௌகிக நடவடிக்கைகளுக்கு ஆதாரமானது. அதைப்பற்றிய சாஸ்

திரமே அர்த்த சாஸ்திரமாகும். அர்த்த சாஸ்திரத்தின் மகிமையை எடுத்துக் காட்டும் பொருட்டு அதர்வ வேதத்தை அர்த்த சாஸ்திரம் சேர்ந்தது என்றும், ஐந்தாவது வேதமாகிய இதிகாசத்தையும் அது சார்ந்தது என்றும் சாஸ்திரங்கள் ஓதி வந்தன. அந்தணர் தவிர மற்றவர்கள் பயிற்சி செய்யத் தகாதது என்று இருக்கும் மறை நூல்களில் ராஜ்ய தந்திரம் உட்பட்டிருந்தால் அந்த சாஸ்திரத்தில் இதர ஜாதி சமயத்தார்களுக்கும், ஸ்திரீகளுக்கும் பிரவேசம் கிடைக்காது போகும். ஆனால் இதிகாசம், புராணங்களுக்கு இவ்விதமான தடை இல்லாதது கண்டு அதைச் சேர்ந்த அர்த்த சாஸ்திர விஷயத்தில் எல்லா ஜனங்களுக்கும் பிரவேசம் உண்டு என்பது தெளிவாக ஏற்படுகிறது.

இந்திய அரசியல் பற்றிக் கணக்கில்லாத கிரந்தங்கள் நம் நாட்டில் இருந்தன என்று கௌடில்யருடைய அர்த்த சாஸ்திரத்தினால் தெரிய வருகிறது. அவர் தன் கொள்கைகளை விவரிக்கும்போது தனக்கு முன்பு சொல்லப்பட்ட சாஸ்திர அபிப்பிராயங்களைத் தாங்கியோ கண்டித்தோ அவர் எழுதுகிறார். 18 அர்த்த சாஸ்திர ஆசிரியர்களைப்பற்றி கௌடில்யரின் நூலில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால் அவருடைய கிரந்தத்தின் மகிமையினால், அவருக்குப் பிறகு எழுதப்பட்ட தண்டநீதி, ராஜநீதி, அர்த்த சாஸ்திரம் என்ற பெயர் கொண்ட கிரந்தங்களெல்லாம் கௌடில்யர் கிரந்தத்தையே ஆதாரமாகக் கொண்டவை எனக் கூறவேண்டும்.

தமிழ் நாட்டிலும் புராதன அரசியல் தத்துவ நூல்கள் இருந்தன என்பதைத் திருக்குறள் முதலிய பண்டைக்கால கிரந்தங்களினால் நிரூபிக்க முடியும். அவர்களுடைய அபிப்பிராயங்களுக்கும் கௌடில்யரின் அபிப்பிராயங்களுக்கும் அசாதாரணமான கோர்வை ஏற்பட்டிருப்பதை ஸ்ரீராமசந்திர தீக்ஷிதர் முதலிய பண்டிதர்கள் தெளிவுறுத்தியிருக்கிறார்கள்.

சட்டசபை ஆட்சி முறை

கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்தினால் நமக்குக் கிடைத்த அறிவில் முக்கியமான சில விஷயங்களை எடுத்துக் கூறலாம். பெரிய ராஜ்யங்களை மந்திரிக் கூட்டங்களாலும் சட்டசபைகளினாலும் நியமங்களாலும் நடைபெறச் செய்வது ஐரோப்பிய அரசுக்கு உண்டான பிரத்யேக குணம் என்று வாதிப்பது தற்கால வழக்கம். ஏறக்குறைய காஷ்மீரம் முதல் கன்யாகுமாரி வரையிலும் உலகம் முழுவதையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவந்த மௌரிய சக்ரவர்த்திகளின் அரசாங்கத்தில் தற்கால ஆங்கில சாம்ராஜ்யத்தில் காணப்படும் ராஜிய முறை இருந்ததாகக் கௌடில்யரின் கிரந்தம் காட்டுகிறது. வேலைக்குத்தக்க கூலியே தர்மம் என்ற கொள்கை மௌரிய ராஜாங்கத்தில் பின்பற்றப்பட்டிருக்கிறது. இது அந்த ராஜாங்கத்தில் மந்திரி முதலிய உத்யோகஸ்தர்களுக்குக் கொடுத்த சம்பளப்பட்டிகளைப் பார்த்தால் தெரியவரும். மாதத்திற்கு 48000 பொன் முதல் 60 பொன் வரையிலும் சம்பளம் வாங்கிக் கொண்ட உத்யோகஸ்தர்கள் ஆயிரக்கணக்காக ராஜ்யத்தில் இருந்தனர் என்பது இந்நூலினால் தெரியவருகிறது. தற்காலத்தில் ராஜ்ய தந்திரத்தில் இருக்கும் சில்லரை அம்சங்கள் கூட முன் மௌரிய கால அரசியல் நடப்பில் காணப்பட்டன. அது கொண்டுதான் தற்கால மந்திரிகள் கூடத் தங்கள் முறைக்கு ஆதாரமாக சட்டசபையில் ரகஸ்யப் போலீஸ் அல்லது புதிய வரி விகிதம் முதலியன ஆலோசனைக்கு வரும்பொழுது கௌடில்யரை தங்களுக்கு ஆதாரமாகக் கூறுகின்றனர்.

கௌடில்யரின் கிரந்தம் ஸூத்ரம்போல் இருந்தது கொண்டும், நுணுக்கமான விஷயங்களில்கூட ஒவ்வொரு இலாகாவுக்கும் அவர் வழிகாட்டியிருப்பதைக் கொண்டும், அரசைத் தாங்கவேண்டிய நிமித்தம் கழகங்களை ஏற்படுத்தியதைக் கொண்டும், ராஜீய விரோதிகளைப் போக்கும் பொருட்டு எவ்வித மார்க்கம் தகும் என்று விதிப்பதனாலும் கௌடில்யருக்கு பிற்காலத்தில் புரஸ்காரமாகவும் நிந்தையாகவும் ஒரு அபயசஸ் உண்டாகியிருந்தது. அதெல்லாம் பின்னர் அவருடைய கிரந்தத்தில் நடத்திய ஆராய்ச்சியினால் சூரியன்முன் பனிபோல் மறைந்துவிட்டது.

ராஜ்ய தந்திரங்களில் கௌடில்யருக்கு நிகராக எந்தத் தேசத்திலும் பண்டிதன் இல்லை என்று வாதிக்கமுடியும். அவருடைய தேசாபிமானத்திற்கும், பிரஜாபிமானத்திற்கும், தர்மாபிமானத்திற்கும் எல்லையில்லை என்பது நவீன ஆராய்ச்சியினால் தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

கௌடில்யர் காலத்திற்குப் பிறகு பல அரசர்கள் பரதகண்டத்தில் அரசுபுரிந்தனர். அவர்களும் ஏறக்குறைய பழைய வழியிலேயேதான் கூடியவரையில் நடந்தார்கள் என்பது திண்ணம். நம்முடைய நாட்டில் கொடுங்கோல் மன்னன் ஒரு நாளும் இல்லை என்று வாதிக்க முடியாது. ஆகிலும் கொடுங்கோலுக்கு அதிக நாள் ஜீவன் உண்டாகாமல் இருக்கும்படி

கர்சன் கம்பெனியிடம்
மட்டிலும் கிடைக்கக்கூடிய



Single Cot fitted with all steel

Coil Spring-Complete with unbreakable Brackets!

6' 8" x 3' wide 24 Spiral Springs. Rs. 29-8

6' 8" x 3' 6" wide 30 Spiral Springs. Rs. 32-8

obtainable only from

CURZON & Co.

THE LARGEST FURNISHING HOUSE IN SOUTHERN INDIA

MOUNT ROAD, MADRAS.

WEST MASI STREET, MADURA.

யாக இந்தியச் சமயங்கள் ஏற்பட்டிருந்தன.

அரசன் இஷ்டப்படி நடக்க முடியாது.

முதன்முதல் அரசருக்கு தங்குதடையின்றி இஷ்டப்படி நடக்கும் உரிமை இந்திய அரசியல் கொள்கையில் கிடையாது. அரசர் லோகபாலர்களின் அம்சம் என்றும் மகாவிஷ்ணுவின் அம்சமென்றும் சொல்லுவதுண்டு. ஆனால் அரசர்களுக்கு ஆதிதேவனுடைய நிரங்குசாதிகாரம் கற்பிக்கலாம் என்பதில்லை. அரசனுடைய பதவி ஒரு உத்தியோகம்தான். மற்ற உத்தியோகஸ்தர்கள்போலவே அவனுக்கும் கடமைகள் உண்டு என்பதே இந்தியக் கொள்கை. தன் இஷ்டப்படி வரி வசூல் செய்யலாம். பிரஜைகளின் சுதந்திரத்தையும், தேகங்களையும் ஆக்கிரமிக்கலாம். அவர்களை மனம் போனபடி சிக்ஷிக்கலாம். ராஜ்யத்திலுள்ள எல்லா வஸ்துக்களையும் தனதாகவே எண்ணலாம் என்று ஒரு இந்திய அரசனும் சொல்ல முடியாது. ஏனென்றால் நம்முடைய பழைய சாஸ்திரங்களில் அரசன் விஷ்ணு அம்சம் என்றுள்ள வசனத்திற்கு நிகராகப் பிரஜையும் விஷ்ணு அம்சம் என்ற பழமொழியுமுண்டு. அரசன் காலத்திற்குக் காரணம் என்பதற்கு அர்த்தம் அவன் இஷ்டப்படி நடக்கலாம் என்பதில்லை. இந்திய மதத்தில் கர்மங்களுக்கு அனுசரணையாய், புண்ணியமோ, பாபமோ உண்டாகும் என்பது ஒரு பிரதானக் கொள்கை. தரும வழியில் நடந்தால் ஏற்படும் பலன் புண்ணியம். அதர்ம வழியில் நடந்தால் ஏற்படும் பயன் பாபம். புண்ணியம் பிரபலமாக இருக்கும் காலத்தைக் கிருத யுகம் என்பர். அதர்மம் ஓங்கும் காலத்தை கலியுகமென்று சொல்வர். அரசன் தர்மங்கள் தவறாமல் அரசு புரிந்தால் போன கிருத யுகத்தைக்கூட கலியுகத்தில் வருவிக்கக்கூடும். அதர்மமாக நடந்தால் கிருத யுகத்தில் கூட கலியுகம் அவதரிக்கும் என்பதையே ஒரு சொல்லலங்காரமாக இந்த வசனம் காட்டுகிறது.

ஆங்கில ராஜ்யத்தில் ஸ்டூவர்ட்ஸ் என்னும் சந்ததியில் உண்டான அரசர்களுக்கு சுயேச்சையாய் நடக்கும்படி கடவுள் அரசர்களுக்கு உரிமையளித்திருக்கிறார் என்பது கொள்கை. அவ்விதக் கொள்கை இந்திய அரசர்கள் கொண்டனர் என்று சொல்லுவதற்குச் சரித்திரமோ சாஸ்திரமோ, ஆதாரமளிக்காது.

தற்காலத்தில் ஆங்கில சாம்ராஜ்யத்தின் அனுக்கிரகத்தால் நம்முடைய சமஸ்தானாதிபதிகளுக்கு தம் தம் நாட்டில் நிரங்குசமான பிரபுத்துவம் உண்டு என்பது கற்பிக்கலாயிற்று. இந்த விஷயம் தற்கால நியமத்திற்கு சரியாக இருந்தாலும் அந்தக் கொள்கை புராதன காலங்களில் செங்கோல் செலுத்தி வந்த அரசர்களுக்கு உரியது என்று வாதிப்பது அசாத்தியம்.

மகாஜன சபைகள்

தற்காலத்தில் மகாஜன சங்கங்களுக்கும், மகா சபைகளுக்கும் பிரதானமான சட்ட திட்டங்கள் செய்ய அதிகாரமேற்பட்டிருக்கிறது. பரத கண்டத்தில், பண்டை நாட்டில், அரசர்களுக்கோ, சபைகளுக்கோ, சங்கங்களுக்கோ, இப்படி ஒரு சட்ட திட்டங்கள் ஏற்படுத்தும் கடமையோ, திறமையோ கிடையாது என்பது திண்ணம்.

அவரவருடைய சமூகங்களினுடையவோ, தொழிலினுடையவோ, ஜாதியினுடையவோ கூட்டத்தினுடையவோ வழக்கங்கள் சட்ட திட்டத்திற்குச் சமமான சக்தி உள்ளவை என்று பண்டைகால சாஸ்திரங்களில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு இனத்தாரும் அவரவருடைய சமூக நியமத்தையே பின்பற்றவேண்டும். மற்றவர் நியமத்தைப் பின்பற்றக் கூடாது. இவ்விதம் ராஜ்யம் நடக்குமாறு பரிபாலிப்பதுதான் அரசனுடைய கடமை.

ராஜ்யத்தின் பொது நலத்திற்காகஎல்லாப்பிரஜைகளுக்குமான சில சட்ட திட்டங்கள் உண்டு. அந்த நியமங்களுக்கு எல்லோரும் கட்டுப்படுவார்கள். ஜனங்களுடைய சச்சரவுகளைத் தீர்மானிக்க ஏற்பட்ட சபைகளோ, பஞ்சாயத்து வகைகளோ, சட்டதிட்டங்களையும் ஜனங்களுடைய பழமையான பழக்க வழக்கங்களையும் வற்புறுத்துபவை. சமூகங்களுடைய வழக்கத்திற்கு விரோதமாகவோ, சாஸ்திரம் அல்லது தர்மத்திற்கு விரோதமாகவோ நியமங்கள் ஏற்படுத்தக்கூடியவர் பழைய அரசாங்கங்களில் ஒருவரும் கிடையாது. அரசர்களுடைய ஆக்ஞைகளோ, சாஸனங்களோ நியம வழக்க ஒழுக்கங்களைத் தொடர்ந்தே போக வேண்டும். நவீன காலங்களில் பயன்படுகிற கொள்கைக்கு அனுசாரமாய், பழைய இந்திய அரசர்களுக்கும் சபைகளுக்கும் சட்டதிட்டங்கள் உண்டாக்கும் திறமை உண்டென்று வாதிப்பதற்குச் சரித்திரமும், சாஸ்திரமும் இடம் கொடுக்கவில்லை.

எத்தனையோ நூற்றாண்டுகளில் எத்தனையோ இந்திய அரசர்கள் அரசாட்சி செய்து வந்தும் சரித்திரங்களில் அவரில் எவராவது தர்மத்திற்கோ வழக்க ஒழுக்கத்திற்கோ ஒக்காத புதிய நியமங்களைத் தங்களுடைய சாசனங்களினால் ஏற்படுத்தினர் என்று நிரூபிக்க முடியாது. மகா சக்தியுள்ள மௌரிய சக்ர

யுனைடெட் சிட்·பண்ட்ஸ் லிமிடெட்.

15, அண்ணாபிள்ளை தெரு, ஜி. டி., மதராஸ்.

★

ஏ, பி, ஸி அண்டு டி வகுப்பு சீட்டுகளின் இரண்டாவது ஸீரிஸின் குலுக்குதல் 1938-ம் வருஷம் நவம்பர்மாதம் 5-ந் தேதி நடத்தப்படும்.

★

ஏ வகுப்பு —	ரூ. 1,200	மாதசந்தா	ரூ. 60
பி வகுப்பு —	„ 800	„	ரூ. 40
ஸி வகுப்பு —	„ 400	„	ரூ. 20
டி வகுப்பு —	„ 200	„	ரூ. 10

★

விதி விவரங்கள் விண்ணப்ப பாரங்களுக்கு மானேஜருக்கு எழுதவும்.

போர்டார் உத்திரவுப்படி.

C. S. பத்மநாபன், B. A.

மானேஜர்.

மதராஸ் பீபில்ஸ் பாங்க் லிமிடெட்

தலைமை ஆபீஸ் : **118, அரமனைக்காரத் தெரு, சென்னை.**

கிளை ஆபீஸ்கள் : விசாகபட்டணம், அனகபள்ளி, காகிநாடா, அமலாபுரம், ராஜமஹேந்திரபுரம், எல்லூர், திருவல்லிக்கேணி, மதுரை, சேலம், கள்ளிக்கோட்டை.

லாபத்தில் வேலை செய்யும் பாங்க்.

1933-ம்	வருஷத்தில்	9%	டிவிடெண்ட் கொடுத்தது.
1934-ம்	„	9%	„
1935-ம்	„	9%	„
1936-ம்	„	9%	„
1937-ம்	„	9%	„

இந்த பாங்க் ரிஸர்வ் பண்டு சேர்த்துவருகிறது.

இந்த பாங்க் வருஷக்கணக்காய் நிரந்தர அபிவிருத்தியும் விசேஷ யோக்யதையும் பெற்று விளங்குகிறது.

பிக்ஸெட் டிபாஸிட்டுகள் :

6 மாதத்திற்கு வருஷத்துக்கு 4%
12 „ „ 5½%

மற்ற டிபாஸிட்டுகள் :

கரண்ட் வருஷத்துக்கு 1½%   சேவிங்ஸ் 3½%

ரெக்கரிங் டிபாஸிட்டுகளும், கியாஷ் சர்டிபிகேட்டுகளும் முதல் தரமானவை.

மாதம் ஒன்றுக்கு ரூ. 1—0—0 ஆகவோ அல்லது ரூ. 200 மொத்தமாகவோ கட்டினால், ரூ. 1,019-11-11-ம் ரூ. 1219-11-11-ம் கிடைக்கும் வழி எப்படிஎன்பதை ஆபீஸில் விசாரித்து அறிந்துகொள்ளுங்கள்.

கியாஷ் சர்ட்டிபிகேட்டுகளெல்லாம் பழைய போஸ்டல் ரேட்டுகள் மாதிரி கிடைக்கும். அதாவது ரூ. 75 டிபாஸிட் செய்தால் ரூ. 100 கொடுக்கப்படும்.

Rao Sahib C. Gnanapragasam,
ராவ்சாஹிப் ஸி. ஞானப்பிரகாசம்,
(Retd. Manager, Presy. Port Office)
Secretary.

வர்த்திகள்கூட சுயேச்சா விஹாரமாக நடைபெறும் நியமங்களை மாற்றப்பிரயத்னம் செய்யாதது ஒரு உதாரணமாகும். அசோக சக்ரவர்த்தி பிராமண மதத்தை விட்டு, வேதங்களுக்குப் புறம்பான பௌத்த சமயத்தைக் கைக்கொண்டார். ஆனால் அவருடைய சிலா லிகிதங்களை சூக்ஷ்மமாக ஆராய்ச்சி செய்தால் தன்னுடைய அரண்மனைக்கு வெளியில் பழைய ஒழுக்க வழக்கங்களுக்கு மாறாக ஒரு புதிய சட்டமாவது செய்தாரென்று சொல்லுவதற்கில்லை. நியமங்கள் காலானுசாரமாய் மாறுபடுவது ஜனங்களுடைய வழக்க ஒழுக்க மாறுதலாலேயே தவிர அரசர்களுடைய சாசனங்களினால் அல்ல.

அரசருக்குப் பிரஜா பக்தி

பிரஜைகளுக்கு எவ்விதமாக ராஜ பக்தி வேண்டியதோ அதேமாதிரி அரசர்களுக்கும் பிரஜா பக்தி ஒரு கடமையாகும். தற்காலம் அரசியலில் பக்தி என்பது தேசத்தினிடமோ அரசனிடமோ காண்பிக்க வேண்டியது பிரஜையினுடைய கடமை என்பது கொள்கை. அதுதான் ''லாயல்டி'' என்னும் ஆங்கிலப் பதத்திற்கு அர்த்தம் என்று கூறுவர். நம்முடைய நாட்டில் சம்ஸ்கிருதம் தொடங்கி ஒரு பாஷையிலாவது அரசியலில் பக்தி என்பதற்கு இந்த அர்த்தம் கிடையாது.

தற்கால அரசியல் முறைக்கும் இந்தியப் புராதன ராஜதந்திரத்திற்கும் மற்றொரு விசேஷமான பேதமுண்டு. தனிப்பட்ட பிரஜை ஒவ்வொருவருக்கும் சுதாவாகவே பிரஜையென்ற காரணத்தினால் ஒரு சக்தி அல்லது உரிமையுண்டென இப்பொழுது கூறப்படுகிறது. இது ரோமர்களின் அரசியல் கொள்கையாகவிருந்திருக்கிறது. ஆனால் பண்டைக்கால இந்தியக் கொள்கையில் எல்லோருக்கும் கடமைகள் உண்டே தவிர சுய சக்தியானுசாரமானஒரு பிரஜா உரிமை என்பதில்லை. அரசனுக்கும் பிரஜைக்கும், ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும், சன்யாசிகளுக்கும் கிருஹஸ்தர்களுக்கும், ஏழைகளுக்கும் தன்யர்களுக்கும் தங்கள் தங்களுடைய கடமையைச் செய்ய வேண்டியதுதான் தர்மம் என்பது பொதுக் கொள்கை. அதுவே அவர்களுக்கும் ராஜ்யத்திற்கும் நியமம். இம்மாதிரி கடமையையே ஊன்றிக் கவனித்ததனால்தான் பண்டைகாலங்களில் ஜனங்கள் தம்மிடையே பரஸ்பர விரோதமும், அரசர்களுக்கும் பிரஜைகளுக்கும் பிணக்கும் பெரும்பாலும் உண்டாகவில்லை. படகில் அவரவர் இருக்க வேண்டிய இடத்தைவிட்டு இஷ்டப்படி மாறினால் படகுக்குச் சேதம் எப்படி வருமோ அப்படியே சமூகத்திலும் அரசாங்கங்களிலும் அரசனும் ஜனங்களும் அவரவர் கடமையைச் செலுத்தத் தவறினால் அல்லது மாறிச் செய்தால் சமுத்திரத்தில் முழுகிப் போகும் கப்பலைப்போல் அரசாங்கமும் முழுகிப்போகும் என்பது கருத்து.

அரசாட்சிக்கு ஜன சம்மதம் அவசியம். மகாஜனங்களுக்கு நீதி, நியமம் வழங்க ஒரு அரசாட்சி அவசியம். அரசைத் தவிர்க்கும்படி செய்யும் பிரயத்னங்கள் எல்லாம் அதர்மம். குற்றம் புரிந்தவர் சிக்ஷைக்குட்படவேண்டியது. இதெல்லாம் அப்பொழுது தெளிவாகத் தெரிந்தன. இந்தக் கொள்கையைக் கொண்டுதான் நம்முடைய நாட்டில், விதேச ஆக்ரமணத்தினாலும் மற்றக் காரணங்களினாலும், உண்டான அநேக கஷ்டங்களில் கூடக்கிராமங்களில் வசிக்கும் சாமான்ய ஜனங்களுக்கு ஒரு அதிருப்தியோ, கலகத்தில் விருப்பமோ, ராஜ்யத்திற்கு ஆபத்தென்ற எண்ணமோ பரஸ்பர ஸ்பாத்தையோ உண்டாகாமல் இருந்தது.

புராதன இந்திய அரசியல் நூல்களை ஆராய்ச்சிசெய்ததன் பலன், மேல் நாட்டு அரசியல் நூல்களுக்கு நிகரான நூல்கள் பரத கண்டத்திலும் இருந்தன என்று நிரூபிப்பது மாத்திரமல்ல. மேல் நாட்டில் கடமையை வற்புறுத்தாமல் சுய சக்தி சுதந்திரத்தை வற்புறுத்தியதனால் விளைந்த அநேக குழப்பங்களும் யுத்தங்களும் இந்தியாவில் இல்லை. அர்த்த சாஸ்திரங்களில் கௌடில்யர் தொடங்கி அவருடைய வித்யா பரம்பரையில் உதித்த மந்திரி நிபுணர்கள் எல்லோரும் அனுஷ்டித்த ராஜ்ய தந்திர தத்துவங்களால் நம்முடைய நாடு தப்பியது என்பதை உணர்வதே ஒரு சிறந்த பலன். ஆகையால் நம்முடைய பண்டை அரசியல் ஆராய்ச்சியில் சில்லரை விஷயங்களை ஒதுக்கி அரசியலுக்கு உயிரான இவ்விதமான முக்கியதத்தத்துவங்களை அறிந்து வற்புறுத்துவதே தற்கால நிலைமைக்கு ஏற்ற உயர்ந்த பிரயோஜனமாகும். அர்த்த சாஸ்திர, தர்ம சாஸ்திர, ஆராய்ச்சிகள் ஏதோ பண்டிதர்களுக்காக ஏற்பட்டதெனக் கருத வேண்டாம். தற்கால நிலைமைக்கு ஏற்ப ராஜாங்கத்திற்கும் அது வெகுதூரம் உதவும் என்பதை இதிலிருந்து நாம் ஒருவாறு உணரலாம்.

ஸெலுலாய்டு பொம்மைகள்

இங்கிலாந்தில் 1936-ம் வருஷத்தில் 21500000 ஸெலுலாய்டு பொம்மைகள் விற்கப்பட்டன. இவற்றில் 13750000 குழந்தை பொம்மைகள்.

* * * *

இரவு பகலாய்
பாதுகாப்பது

எல்லா வலி, உபத்திரவங்களையும் போக்கும்.
40 வருஷங்களுக்கதிகமானது.
ஸ்வதேசமித்ரன்
அம்ருதாஞ்சனம்

நேஷனல் மியூச்சுவல்
அஷ்யூரன்ஸ் ஆப் இந்தியா, லிமிடெட்.
தலைமை ஆபீஸ்:
6, பிலிப்ஸ் தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்.

டைரக்டர் போர்ட்:
ஆர். வி. லட்சுமிரதன் ஜூனியர்,
டைரெக்டர், லட்சுமிரதன்ஸ் லிமிடெட், சென்னை.
(அக்கிராசனாதிபதி)
ஏ. ஸி. ஸம்பத் அய்யங்கார், பி. ஏ., பி. எல்.
அட்வகேட், ''கேசவபிரசாத்'', மைலாப்பூர், சென்னை.
எஸ். வி. ஸ்வாமி, பி. ஏ.,
மானேஜர், ''இந்தியன் எக்ஸ்பிரஸ் & தினமணி'', சென்னை.
எம். டி. கோழந்தைவேலு செட்டியார்,
நிலச்சுவான்தார் & பாங்கர், சீர்காழி.
ஆர். விஸ்வநாதன், பி. ஏ., பி. எல்.
டைரெக்டர், இண்டோ கமர்ஷியல் பாங்கி, லிமிடெட்.
(எக்ஸ் அபிஷியோ)
பி. நாகராஜன், எம். ஏ.
(எக்ஸ் அபிஷியோ)
பிரதம வைத்திய பரிசோதகர்:
டாக்டர் ஸி. ஆர். கிருஷ்ணஸ்வாமி, எம். பி. எல். எஸ்.
காரியதரிசிகள்:
ராஜம் & விஸ்வம், லிமிடெட்.

பாலிஸிதாரர்கள்தான் இதை நிர்வகிக்கிறார்கள்;
லாபம் பூராவும் அவர்களுக்கே.

சம்பள முறையில் கண்ணியமும், நாணயமும் உள்ள சில ஆர்கனைசர்கள் தேவை.

இதர விவரங்களுக்கு ''காரியதரிசிகளுக்கு'' எழுதவும்.
தபால் பெட்டி நெ. 114.
டெலிபோன் நெ. 3600.

ஸமஷ்டி செல்வ நிலை

—:(o):—

டாக்டர் பி. எஸ். லோகநாதன்

(சென்னை சர்வகலாசாலை அர்த்த சாஸ்திர ஆசிரியர்)

நம் தேசத்தில் புதிய அரசியலின்படி மாகாண சுயஆட்சி யேற்படுத்தப்பட்டு காங்கிரஸும் மந்திரி பதவி யேற்றுக்கொண்டபின் கவர்ன்மெண்டு மூலம் மிகுந்த நன்மையைப் பொது ஜனங்கள் எதிர் பார்க்கின்றனர். விவசாயி தனது நில வரி பளு குறைய வேண்டுமென்று விரும்புகிறான். தனது கடன் பளு குறைக்கப்பட்டு அதைத் தீர்க்கவும், விவசாயக் காரியங்களை நடத்தவும் ஸர்க்கார் தாராளமாகக் கடன் கொடுத்து உதவ வேண்டுமென்று விரும்புகிறான். கிராமவாசி தனக்குச் சுகாதாரமான குடி தண்ணீர் வேண்டுகிறான். நகரில் வேலை செய்யும் தொழிலாளியோ நோய் காலத்திலும் வேலையில்லாக் காலத்திலும் கவர்ன்மெண்டு தனக்குப்பணம் கொடுத்துதவ வேண்டுமென்கிறான். பொது ஜனங்கள் கல்வி, சுகாதாரம், ஆஸ்பத்திரிகள், கிராம வைத்தியசாலைகள் ஆகியவற்றிற்கு இன்னும் அதிகப் பணம் கொடுக்க வேண்டுமென்று கோருகின்றனர். சில்லரை வியாபாரி தனது மூலதனத்திற்காகக் குறைந்த வட்டியில் கவர்ன்மெண்டார் கடன் கொடுத்து உதவவேண்டுமென்று எதிர்பார்க்கிறான். கைவேலை செய்து பிழைப்பவரும், நெசவாளரும் தங்கள் வேலைக்குக் குறைந்தபக்ஷ கூலியை வேண்டுகின்றனர். ஆலைத் தொழில் தங்களைச் சுறண்டுவதினின்றும் காப்பாற்ற வேண்டுமென்று அவர்கள் கேட்கிறார்கள். இந்தக் கோரிக்கைகள் எல்லாம் எவ்வளவு நியாயமாக விருந்தாலும், எவ்வளவு விரும்பத்தக்கதாயினும் சரி, கவர்ன்மெண்டிற்கு அளவிலா செல்வாதாரமிருந்து, அதை எவ்வளவு வேண்டுமானாலும் அதிகரித்துக்கொள்ளலாமென்றிருந்தாலல்லது இந்தத் தேவைகளையெல்லாம் பூர்த்திசெய்வதென்பது சாத்தியமில்லை. கவர்ன்மெண்டார் வரியையும் விட்டுக் கொடுத்து செலவையும் அதிகரித்துக் கொள்ளுவதற்கில்லை. ஆகவே கவான்மெண்டார் செய்யவிருக்கும் பல வேறு கடமைகளையும் நடத்திவைப்பதில் இப்பொழுதுள்ள செல்வாதாரம் எவ்வளவு தூரம் போதுமானது, எந்த வகைகளில் இன்னும் அதிக வருமானத்திற்கு வழி தேடக்கூடும் என்பதை நாம் விசாரம் செய்ய வேண்டும். ஏனெனில் பணமின்றிக்கவர்ன்மெண்டார் ஜனங்களுக்குச் செய்யக்கூடியது ஒன்றுமில்லை.

1920-லேயே சமஷ்டி முறை ஆரம்பம்

1920-ம் வருஷ முதற்கொண்டே நமது தேசம் ஸமஷ்டி முறையில் முன்னேறி வந்திருக்கிறது. அதாவது கவர்ன்மெண்டின் பல வேறு கடமைகளை நிறைவேற்றும் பொறுப்பு டில்லியிலுள்ள மத்திய கவர்ன்மெண்டு, மாகாண கவர்ன்மெண்டுகளிடையே பங்கிடப்பட்டிருக்கிறது. சுதேச சமஸ்தானங்கள் இனிச் சமஷ்டியில் சேரும்பொழுது அவையும் மாகாண கவர்ன்மெண்டுகளுடைய கடமையைச் செய்துவரும்.

டில்லியிலுள்ள இந்தியா கவர்ன்மெண்டார் தேசப் பாதுகாப்புக்கு அதாவது ராணுவம், கப்பற்படை, ஆகாயப்படை ஆகியவற்றிற்கும், வெளிநாட்டு விஷயங்கள், வியாபாரம், பாங்கிகள், நோட்டுச் செலாவணி, பொது ஸர்க்கார் கடன், முதலியவற்றிற்கும் பொறுப்பாளி. அத்துடன் தந்தி, தபால் ரெயில்வேக்கும் அவர்கள் ஜவாப்தாரி. கடைசியில் கூறிய இந்த இலாகாக்களினால் கவர்ன்மெண்டிற்குச் செலவொன்றுமில்லை. அவை தன் செலவைத் தானே சரிக்கட்டிக்கொள்ளக் கூடியவை. மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு சட்டம் அமைதி, அதாவது போலீஸ், நீதி பரிபாலனம், கல்வி, வைத்தியம், சுகாதாரம், விவசாயம், கைத்தொழில் முதலியன சார்ந்தவை. இப்படியான கடமைகளைச் செய்வதில் மத்திய கவர்ன்மெண்டிற்கும் மாகாண கவர்ன்மெண்டுகளுக்கும் சில குறிப்பிட்ட வருமான வகைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்த வருமான வகைப் பிரிவினையில் ஒரு விசேஷமுண்டு. நாளாவட்டத்தில் பெருக்கக்கூடிய வருமான வகைகளெல்லாம் மத்திய கவர்ன்மெண்டைச் சார்ந்தவை. மாகாணங்களுக்கோ லாபமில்லாமல் போதிய அளவின்றி வருமான வகைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் மாகாண கவர்ன்மெண்டு செலவினங்களோ விரிவாகக்கூடியவை. வருவாய்க்கும் செலவிற்கும் ஏற்றாப்போல் கவர்ன்மெண்டு கடமைகள் சரிப்படுத்தி அமைக்கப்படவில்லை; மத்திய கவர்ன்மெண்டிற்கு முக்கியமானதும் மிகவும் வரையறுக்கப்பட்ட சில கடமைகளே உண்டு. இருப்பினும், ஏற்றுமதி இறக்குமதி வரி, உப்பு, சர்க்கரை, தீக்குச்சி, எதிர்வரி, வருமானவரி ரெயில்வேக்களிலிருந்து கிடைக்கும் அதிகப்படி வருமானம் ஆகியவை மத்திய கவர்ன்மெண்டிற்குச் சேர்ந்தவை. மாகாணங்களிலோ நிலவரி, கலால் வருமானம், ஸ்டாம்பு வரி, ரெஜிஸ்டிரேஷன், இவைகளுடன் நிற்கவேண்டியிருக்கிறது. இந்த ஏற்பாடு மாகாண கவர்ன்மெண்டுகள் சம்பந்தப்பட்ட வரையில் மிகவும் அதிருப்திகரமாயிருக்கிறது. இதனால் அவை தங்கள் வேலையில் மிக்க சங்கடப்படுகின்றன.

1920-ம் வருஷத்தில் செய்த செல்வ விஷய ஏற்பாட்டில் ஒரு தவறு யாதெனில், அந்தந்தக் கவர்ன்மெண்டுகள் செல்வ விஷயத்தில் சுயேச்சையாக விருப்பதற்கெனச் செய்த பிரிவினையாகும். எவ்வளவு புத்திசாலித்தனமாக இந்தப் பிரிவினை செய்திருந்தாலும் இதனால் மத்திய கவர்ன்மெண்டோ மாகாண கவர்ன்மெண்டுகளோ போதியவளவு வருமானமில்லாமல் போய்விடுகின்றன. சாதாரணமாக மாகாண கவர்ன்மெண்டுகளே அதிகம் கஷ்டப்பட நேருகிறது. சில வரிகள் இடத்திற்கு இடம் மாறுபடக்கூடும். வேறு சில வரிகள் எங்கும் ஒரே சீராக விருக்கும் நிர்வாக சவுகரியத்தை யுத்தேசித்து சில வரிகள் ஒரே விதமான நிர்வாக அதிகாரிகளால் விதிக்கப்பட வேண்டுவது அவசியமாகிறது. ஆகவே கவர்ன்மெண்டின் கடமைகளில் பெரும்பாகம் மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு ஏற்பட்டு வரி வருமானத்தில் பெரும்பாகம் மாத்திரம் மத்திய கவர்ன்மெண்டிற்குச் சார்ந்திருக்கிறது. ஆகவே இந்த ஏற்றத்தாழ்வைச் சரிப்படுத்த சமஷ்டி கவர்ன்மெண்டுகள் ஒரு தகுந்த ஏற்பாட்டைப் பின்பற்ற வேண்டியிருக்கிறது. மத்திய கவர்ன்மெண்டு வருமானத்தில் ஒரு பாகத்தை மாகாண கவர்ண்மெண்டுகளுக்குக் கொடுத்து அதைச்சரிப்படுத்த வேண்டியிருக்கிறது.

1935-ம் வருஷ ஏற்பாடு

1935-ம் வருஷத்திய இந்தியா கவர்ன்மெண்டு சட்டப்படி மாகாண கவர்ன்மெண்டுகளுக்குப்போதிய வருமானமுண்டுபண்ண வேண்டி சில புதிய கொள்கைகள் பின்பற்றப்பட்டிருக்கின்றன. ஆனால் சமஷ்டி ஸ்தாபிக்கப்பட்டபின்னர்தான் இந்தச் செல்வ ஏற்பாடு பூராவாக அனுஷ்டானத்திற்கு வரும். ஸமஷ்டி கவர்ன்மெண்டு ஏற்பட்ட பின் உப்பு வரி, எதிர் வரி, ஏற்றுமதி வரி ஆகியவை முழுவதிலுமோ அல்லது ஒரு பாகமோ சமஷ்டி சட்டசபையின் இஷ்டத்தையனுசரித்து மாகாணங்களுக்கு அளிக்கப்படும். அப்பொழுது மாகாண கவர்ன்மெண்டுகளிடம் இருக்கும் வார்சுரிமைவரி, ஸ்டாம்பு வரி எல்லை வரி முதலியன மத்திய கவர்ன்மெண்டால் வசூலிக்கப்பட்டு மாகாணங்களுக்குக் கொடுக்கப்படும். ஆனால் இதில் மிகவும் முக்கியமானது வருமான வரியிலும் மாகாணங்கள் ஒரு பகுதி பெறுவதாகும். 10 வருடங்கள் கழித்து வருமானவரியில் சரிபாதி மாகாணங்களுக்குக் கொடுக்கப்பட்டுவிடும். அப்பொழுது மத்திய கவர்ன்மெண்டிற்கு சுங்க வரியும், வார்சுரிமை வரி, எல்லை வரி, ஸ்டாம்பு வரி முதலியவற்றில் விதிக்கக்கூடிய உபரி வரிகள் தான் கிடைக்கக்கூடும். இந்தப் பிதிய ஏற்பாடு 1920-ம் வருஷத்தில் செய்ததைவிட மேம்பட்டதாகும்.

இந்த ஏற்பாட்டில் கூட ஸமஷ்டி கவர்ன்மெண்டிற்கே அதிகச் சவுகரியம் செய்யப்பட்டிருப்பதாகவும் மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு வருவாய் குறைவென்றும் கூறை கூறுபவர்களுமுண்டு. ஆனால் இது சரியெனக் கூறுவதற்கில்லை. மாகாணக் கவர்ன்மெண்டு தேவைகளை நாம் வற்புறுத்துவதில் மத்திய கவர்ன்மெண்டின் முக்கியக் கடமைகளை நாம் புறக்கணித்து விடக்கூடாது. ஒவ்வொரு கவர்ன்மெண்டினுடையவும்மிக

முக்கியக் கடமை தேசப் பாதுகாப்பாகும். இது மத்திய கவர்ன்மெண்டையே சேர்ந்தது. தேசப் பாதுகாப்புக்காக வருஷத்தில் 45 கோடி முதல் 50 கோடிவரையில் நாம் செலவழித்து வருகிறோம். நமது பொருளாதார நிலைமையை யோசிக்குங்கால் இது மிகவும் அதிகமென்பதில் சந்தேகமில்லை. இதில் சிறிது குறைவு செய்வது விரும்பத்தக்கதாயினும், இப்பொழுது சர்வதேச நிலைமை இருக்கும் தோரணையில் அதற்கு இது சமயமல்ல. இதற்கு அடுத்தபடியாக ஸிவில் நிர்வாகச்செலவு இருக்கிறது. வெளி நாட்டிலாகா முதலிய பல இலாகாக்கள் நிர்வகிக்கப்பட வேண்டியிருக்கிறது. இதில்கூட உத்தியோகஸ்தர்கள் சம்பளத்தில் சிறிது சிக்கனம் செய்யலாமே தவிர வேறு வழியில்லை. மற்றத்தேசக்கவர்ன்மெண்டுகளைப் பார்த்தோமானால் மத்திய கவர்ன்மெண்டின் கடமைகள் இன்னும் அதிகரிப்பதாகவே இருக்கிறது. விவசாய கைத்தொழில் ஆராய்ச்சிகளை இன்னும் அதிகமாக நடத்த வேண்டும். மாகாணங்களின் நடவடிக்கைகளை ஒருங்குபடுத்த வேண்டும். புள்ளி விவரங்களைச் சேகரிக்க வேண்டும். முற்றிலும்மாகாண கவர்ன்மெண்டுகளையே சார்ந்த கல்வி, சுகாதாரம், விவசாயம், கைத்தொழில் ஆகியவற்றில் கூட இவை குறைந்தபக்ஷ அளவாக நன்கு நிர்வகிக்கப்படவேண்டி மத்திய கவர்ன்மெண்டு சிறிது பொறுப்பு வகித்தாக வேண்டும். ஆகவே இத்துறைகளில் மத்திய கவர்ன்மெண்டு செய்து வரும் 11 கோடிச் செலவை இனிக் குறைப்பதற்கில்லை. பார்க்கப்போனால் இத்துறையில் இந்தியா கவர்ன்மெண்டு தனது நடவடிக்கைகளை இன்னும் அதிகரிக்க வேண்டுமென்றுதான் நாம் கூறக்கூடும். கடன் வட்டிவகையில் 9கோடி செலவழிக்கப்படுகிறது. கடன் குறைந்தாலல்லது இந்த வட்டிச் செலவு குறையப் போவதில்லை. நமது கடன் பளு அதிகமில்லாததால் வட்டிச் செலவும் நல்ல வேளையாகக் குறைவாக விருக்கிறது. மற்ற அலுவல்கள் சாமான்யமானவை. அவை மூலம் வருவாய் ஏற்படுவதால் நஷ்டமொன்றுமில்லை.

இப்படி மத்திய கவர்ன்மெண்டு கடமைகள் பலவாக இருக்கும்பொழுது அதன் வருவாய் இனங்கள் அதிகமெனக் கூறலாமா? சுங்க வரி, வருமான வரி, எதிர்வரி முதலியன விரியக் கூடியவையென்பது உண்மைதான். இது லாபகரமான வரி விகிதங்கள். ஆனால் வருமான வரியில் சரிபாதி இனி மாகாணங்களுக்கு அளிக்கப்பட வேண்டியிருக்கின்றது. ஸமஷ்டி யேற்பட்டதும் உப்பு வரி முதலியனவும் ஓரளவு மாகாணங்களுக்கு அளிக்கப்படும். சுங்க வரியும் கார்ப்பொரேஷன் வரியும் பாக்கி இருக்கின்றன. இவை ஸமஷ்டி கவர்ன்மெண்டிற்கு முக்கிய ஆதாரம். மத்திய கவர்ன்மெண்டார் ஏற்கனவேயே சணல் ஏற்றுமதி வரியில் 100-க்கு $62\frac{1}{2}$ விகிதம் வங்காளம், அஸ்ஸாம், பிஹார் கவர்ன்மெண்டுகளுக்கு அளித்துவிட்டனர். ஸமஷ்டி யேற்பட்டு 10 வருஷம் வரையில் சமஸ்தானங்களிலோ கார்ப்பொரேஷன் வரி விதிப்பதற்கில்லை. மாகாணங்களில் கூட இது சாத்தியப்படவில்லையெனலாம். ஆகவே இறக்குமதி வரிதான் முக்கிய ஆதாரமாகும். இதில்கூட ஒன்று கவனிக்க வேண்டும். பருத்தி, சர்க்கரை, தீக்குச்சி ஆகியவைகளில் நம் உள்நாட்டுத் தொழில் வெகுதூரம் முன்னேற்றமடைந்திருக்கிறது. இதனால் சமீப வருஷங்களில் வருமானமும் குறைந்து வருகிறது. உதாரணமாக 1930—31-ல் சர்க்கரை இறக்குமதி வரி $10\frac{3}{4}$ கோடி கிடைத்தது. இப்பொழுது அநேகமாக இந்த வருமானமே மறைந்து போய்விட்டது. அதற்குப் பதில் உள்நாட்டு சர்க்கரைத் தொழில் எதிர் வரி மூலம் $2\frac{1}{4}$ கோடி கிடைக்கிறது. மற்றப் பொருள்களில் மிகவும் அதிக வரி விதித்திருப்பதனால் அந்தப் பொருள்களின் இறக்குமதியளவும் குறைந்து வந்திருக்கிறது. பர்மாப் பிரிவினையினால் $2\frac{1}{4}$ கோடி வருமானக் குறைவேற்பட்டுவிட்டது. பர்மாவில் இறக்குமதியாகும் பொருள் வரி பர்மா கவர்ன்மெண்டையே சாரும். அத்துடன் வருஷத்தில் 5 முதல் 8 கோடி வரையில் வருமானமளித்து வந்த ரெயில்வேக்கள் சென்ற சில வருஷங்களில் கவர்ன்மெண்டிற்கு நஷ்டமாகவிருந்தன. சென்ற வருஷம் தான் இதில் நிலைமை சற்று சீர்ப்பட்டது. ஆகவே மத்திய கவர்ன்மெண்டு வருமானங்கள் முற்றிலும் நிலைத்தவையென்று கூறுவதற்கில்லை. மத்திய கவர்ன்மெண்டு கடமையை யுத்தேசித்து அதன் வருமானம் அதிகமெனக் கூறுவதற்கில்லை.

மாகாணங்களின் செல்வ நிலை

ஆனால் இதிலிருந்து மாகாணங்களின் செல்வ நிலை நன்கு அமைக்கப்பட்டிருப்பதாகக் கருதுவதற்கில்லை. இவற்றின் தேவை மிக அதிகமாகவிருப்பதுடன் தீராததாக அவசியம் செய்தாக வேண்டியவையாகவுமிருக்கின்றன. சில மாகாணங்கள் மிகவும் கேவலமானசெல்வ நிலைமையிலிருந்திருக்கின்றன. பல வருஷங்களாக அவை வரவு செலவு சரிக்கட்டாமல் துண்டுத் தொகையுடன் இருந்திருக்கின்றன. இவை

KARL KRAUSE HIGH SPEED CUTTING MACHINE

Model A 78 C S Y Size $30\frac{3}{4}$"



WITH FULL AUTOMATIC CLAMP FOR ANY PILE HEIGHT, CLAMP PRESSURE ADJUSTABLE AND ALWAYS UNIFORM, REQUIRING NO ATTENTION WHATSOEVER.

SPECIAL FEATURES ARE RIGID DESIGN, SAFE KNIFE GUIDANCE INSURING ALWAYS ACCURATE CUTTING.

SEVERAL DIFFERENT KARL KRAUSE MODELS ALWAYS IN STOCK, AND MACHINES CAN BE ARRANGED FOR SHAFT OR DIRECT MOTOR DRIVES.

For Particulars Apply to :—

JOHN DICKINSON & Co., Ltd.,

(Incorporated in England.)

"HAKIM MANSIONS"

LOANE SQUARE, G. T., MADRAS

சீர்படுத்தப்படாவிடில்மாகாண சுய ஆட்சியென்பது வெற்றி பெறுவதற்கில்லை.

மாகாணங்களுக்குச் செல்வ உதவி

பழைய மாகாணங்களிலிருந்து ஸிந்து ஒரிஸா மாகாணங்கள் புதிதாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றிற்கு உதவி புரிந்தாகவேண்டியிருக்கிறது. வங்காளம், பம்பாய் போன்ற பெரிய மாகாணங்கள் மிகுந்த அதிருப்தி கொண்டிருக்கின்றன. பழைய ஏற்பாட்டின்படி தங்களுக்குப் பெரிய அநீதி செய்யப்பட்டுவிட்டதாக அவை நினைக்கின்றன. அவற்றிற்கு ஏதாகிலும் செய்தாக வேண்டும். ஆகவேதான் ஸர் ஆட்டோ நீமேயர் சிபார்சுப்படி ஸமஷ்டி கவர்ன்மெண்டு செய்யக்கூடிய பணஉதவி சம்பந்தமாக ஒரு திட்டத்தை இந்தியா கவர்ன்மெண்டார் தயாரித்தார்கள். இதன்படி நிபந்தனையின்றி மாகாணகவர்ன்மெண்டுகள் வருஷா வருஷம் ஒரு குறிப்பிட்ட அளவு உதவி மத்திய கவர்ன்மெண்டிலிருந்து பெறும். மாகாணங்களுக்கு இவ்விதம் கொடுக்கும் தொகை என்னவென்பதை நிர்ணயிக்கத் திட்டமான கொள்கை எதுவும் வரையறுக்கப்படவில்லை. சந்தர்ப்பமும் தேவையுமே இதில் முக்கியமாகக் கவனிக்கப்படும். ஆக வங்காளம் வருஷத்தில் 75 லக்ஷம் உதவி தனம் பெறுகிறது. ஆனால் இது சணல் ஏற்றுமதி வரியில் 100-க்கு $62\frac{1}{2}$ பாகத்திற்குச் சமமாகவிருக்கிறது. மத்திய கவர்ன்மெண்டிற்கு வங்காள கவர்ன்மெண்டு கொடுக்கவேண்டிய கடனில் ஒரு பாகமும் வஜா செய்யப்பட்டிருக்கிறது. வடமேற்கு எல்லைப்புற மாகாணம் மத்திய கவர்ன்மெண்டுகொடுக்கும் உதவி தனமாகிய 110 லக்ஷத்தையே முழுவதிலும் நம்பி இருக்கவேண்டியிருக்கிறது. பீஹாருக்கு 25 லக்ஷமும், மத்திய மாகாணத்திற்கு 75 லக்ஷமும் அஸ்ஸாமுக்கு 45 லக்ஷமும் ஒரிஸ்ஸாவுக்கு 50 லக்ஷமும் ஸிந்துவுக்கு 105 லக்ஷமும் அளிக்கப்படுகிறது. இந்தப் புதிய மாகாணங்களுக்கு நாம் மிகுந்த செலவு செய்யவேண்டியிருக்கிறது. நம் சென்னை மாகாணமும் துண்டு துண்டாகப் பிரிக்கப்படுமாயின் இன்னும் அனாவசியமாக நிர்வாகச் செலவு அதிகரிக்கக்கூடும். சென்னை, பம்பாய், பஞ்சாப் ஆகிய மாகாணங்கள் எவ்விதச் செல்வ உதவியும் பெறவில்லை. ஒரிஸாவும் ஸிந்துவும் பிரிக்கப்பட்டது காரணமாகசென்னைக்கும் பம்பாய்க்கும் 20 லக்ஷமும் 90 லக்ஷமும் முறையே கொடுக்கப்படுகிறது. ஐக்கிய மாகாணத்திற்கு 25 லக்ஷம் கொடுக்கப்படுகிறது. ஆனால் இது ஐந்து வருஷங்களுக்குப்பின் நிறுத்தப்படும்.

மாகாணங்களின் அதிருப்தி

இவ்விதம் ஏற்றத் தாழ்வுடன் அளிக்கப்படும் உதவி எங்கும் ஆக்ஷேபிக்கப்படுகிறது. நீமேயர் தீர்ப்பில் ஒரு மாகாணமாவது திருப்திப்படவில்லை. ஆனால் மாகாணங்களின் நிலைமை வெவ்வேறாகவிருப்பதால் அவற்றை நடத்தும் முறையிலும் ஏற்றத்தாழ்வுகள் இருக்கத்தான் நேரிடுகிறது. ஒரு சில இடம் முன்னேற்ற முள்ளதாயும் வேறு சில இடம் பிற்போக்குள்ளதாயும் வைப்பது புத்திசாலித்தனமாகாது. துண்டு விழும் வரவு செலவுத் திட்டங்களுடன் மாகாணங்கள் சுய ஆட்சி ஆரம்பிப்பதென்பது கூடாது. ஆனால் இப்படி உதவிப்பணம் கொடுத்துக்கூட மாகாணத்திற்கு மாகாணம் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டிருக்கிறது. இதற்கு இயற்கை அமைப்பு, சரித்திர ரீதி, செலவு வகை வேறுபாடு ஆகியவை காரணமாகும்.

மாகாணங்களின் தேவை

மாகாணங்கள் தங்கள் தேவைகளை யுத்தேசித்து அதிகப் பணம் வேண்டுகின்றனவென்பதை யாரும் மறுப்பதற்கில்லை. நம் நாட்டில் படிப்பின்மை மகா மோசமாகவிருக்கிறது. 1931-ல் 100-க்கு 8 விகிதம் தான் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் இந்த நாட்டிலிருந்தனர். 5-வயதுக்குமேற்பட்டவர்களில் 26 கோடிப் பேர் இந்நாட்டில் எழுத்து வாசனையே இல்லாமலிருக்கின்றனர். விவசாயத்திலும் கைத்தொழிலிலும் பிற்போக்கடைந்திருப்பதற்கு நமது படிப்பின்மையே முக்கியக் காரணமாகும். பொதுமக்களுக்கானபடிப்புத்திட்டமொன்றை நாம் விரிவாகத் தயாரிப்பதென்றால் நம் மாகாணத்திற்கு மாத்திரம் 5 கோடி ரூபாய் அதிகப்படியாக செலவழியும். இது தவிர நம் ஜனத்தொகையில் லக்ஷக்கணக்கான பேர்களுடைய உயிரைக் கொண்டு போகும் கொடும் நோய்களைத் தீர்க்கவேண்டியிருக்கிறது. தேசியத் திறமை அதிகரிக்க வேண்டுமானால் தேசிய சுகாதாரத்தில் இன்னும் அதிகம் செலவழித்தாக வேண்டும். இன்னும் ஆஸ்பத்திரிகள், கிராம வைத்திய வசதி, விவசாயம், கூட்டுறவு, கைத்தொழில் ஆராய்ச்சி கிராமாந்தர ஜல சப்ளை முதலிய பல இனங்களில் நாம் பணஞ் செலவழிக்க வேண்டியிருக்கிறது. இதற்கெல்லாமாக அடுத்த பத்து வருஷங்களில் மாகாணங்களில் 40 அல்லது 50 கோடி அதிகச் செலவு ஏற்படக்கூடும்.

நிலவரிப் பிரச்னை

இதற்கான செல்வாதாரம் நமக்கிருக்கிறதா? நம் மாகாணத்தை எடுத்துக் கொள்ளுவோம். நிலவரிதான் நமக்கு முக்கிய இனம். வருஷத்தில் நமக்குள்ள மொத்த வருமானம் 14 கோடியில் ரூ. 5 கோடி நிலவரியில் கிடைக்கிறது. நில வரியில் இனி வருமானத்தை அதிகரித்துக் கொள்ள ஒன்றும் இடம் கிடையாது. பார்க்கப் போனால் குறையவே இடமிருக்கிறது. நில வரியைக் குறைக்கவேண்டுமென்று ரயத்துக்கள் கூறுகின்றனர். விலைவாசிகள் மிகக் குறைந்திருப்பதனால் ரயத்துக்களுக்கு வரிப் பளு மிக அதிகமாகவிருக்கிறது. நம் மாகாணமும் இதர சில மாகாணங்களும் வரி வஜா செய்திருக்கின்றன. இந்த வஜா அநேகமாக ஸ்திரமாகவே போய்விடும். புதிய நிலத்தைச் சாகுபடி செய்தாலல்லது இருக்கும் நிலத்தில் விளைச்சலை அதிகரிப்பதென்பது சாத்தியமில்லை. நில வரி இன்னும் குறைக்க வேண்டுமென்றகோரிக்கைக்குக்கவர்ன்மெண்டார் உட்படும்படி நேரிடாமலிருந்தால் அதையே ஒரு பெரிய அதிருஷ்டமாகக் கருத வேண்டும். ஸ்டாம்பு, ரெஜிஸ்டிரேஷன் வருமான மெல்லாம் சுபிக்ஷ காலத்தில் அதிகரிக்கும். இவற்றில் வரியை உயர்த்திச் சில மாகாணங்கள் அதிக வருமானம் பெற்றன. சென்னையில் ஸ்டாம்பு வருமானம் 2 கோடியும், ரிஜிஸ்டிரேஷன் வருமானம் 30 லக்ஷமுமாகும். நில வரிக்கு அடுத்தாப்போல் நம் மாகாணத்தில் கிடைக்கும் முக்கிய வருமானம் கலால் வரி. காங்கிரஸ் கவர்ன்மெண்டுகள் அதிகாரத்திற்கு வந்ததினால் சென்னையிலும் மற்ற மாகாணங்களிலும் கலால் வரியில் விசேஷக் குறைவேற்படுத்தக்கூடும். இதனால் முடிவில் மொத்தம் 13 கோடி நஷ்டமேற்படும். மொத்த மாகாண வருமானம்56 கோடியில் 13 கோடியை இழப்பதென்றால் இது நமக்குப் பெரிய நஷ்டமாகும். மற்ற மாகாணங்களைவிடச் சென்னை மாகாணத்தில் இதனால் அதிக நஷ்டமேற்படக்கூடும். ஏனெனில் இங்கு கிடைக்கும் 14 கோடி வருஷ வருமானத்தில் $4\frac{1}{2}$ கோடி கலால் வரி வருமானமாகும். இந்த நஷ்டத்தை நாம் எப்படி ஈடு செய்வது? புதிய செலவினங்களுக்கு எப்படிப் பணம் வகை செய்வது? இதுதான் நமக்குப் பெரிய பிரச்னையாகவிருக்கிறது.

வருமான வரியில் பங்கு

பத்து வருஷங்கள் கழித்து மத்திய கவர்ன்மெண்டினிடமிருந்து வருமான வரியில் பாதியை நாம் பெறுவோமென்பது உண்மையே. ரெயில்வேக்களின் செல்வ நிலைமை சீர்

நம்பிக்கை

பரீக்ஷிக்கப்பட்ட உயர் ரக பிரேம்கள்!

மாணவர்களுக்குக் குறைந்த கட்டணங்கள்!!

26 வருஷங்களாக உயர் ரகத்தையே விற்பனை செய்கிறோம்.

மஹாராஜாக்கள், ஹைகோர்ட் ஜட்ஜுகள், டாக்டர்கள், மந்திரிகள் முதலியவர்கள் அபிமானம் பெற்ற ஸ்தாபனம்.

RADHA BROS.,
Ophthalmic Opticians,
174, Broadway, MADRAS.

பட்டு டில்லிகவர்ன்மெண்டிற்கு அதனால் வருமானமும் அதிகரித்திருக்கிறது. மாகாணங்களுக்குச் சென்ற வருஷம் 138 லக்ஷமும் இந்த வருஷம் 128 லக்ஷமும் கிடைத்திருக்கிறது. முடிவில் இவ்வகையில் மொத்தம் 6 முதல் 7 கோடி வரையில் வருமானம் கிடைக்கலாம். இதில் சென்னையின் விகிதம் 100-க்கு 15 விகிதமாகும். ஆக பத்து வருஷக் கடைசியில் நமக்கு அதிகப்படியாக ஒரு கோடி கிடைக்கும். ஆனால் கலால் வருமானம் 4½ கோடி இழப்பதற்கு இது ஒரு ஈடாக மாட்டாது. நமக்குப் புதுச் செலவினங்கள் வேறு இருக்கின்றன.

புதியவரி இனங்கள்

கலால்வரி நஷ்டத்தை வேறு வகைகளில் வரிவிதித்து ஈடு செய்யலாமெனக் கூறப்படுகிறது. ஏற்கனவே குடியில் பணத்தைச் செலவழித்து வந்தவர்கள் இப்பொழுது பணம் மிகுத்தியிருப்பதால் அவர்களுக்கு வரி விதிக்கலாமெனக் கூறப்படுகிறது. இது சரியல்ல. வருமான நஷ்டம் திடீரென இப்பொழுது ஏற்பட்டுவிட்டது: நாம் புதிய வரி இனங்களைச் சிந்தனைசெய்து வருவாய் பெறுகுவதுபின்னரே சாத்தியமாகும். இந்த ஜனங்கள் தங்கள் பணத்தை எந்தச் சாமான்கள் மீது செலவழிக்கின்றனரோ அந்த சாமான்கள்மீது எதிர் வரி விதிப்பது சாத்தியமில்லாமல்போகலாம். சாத்தியமாகவிருந்தாலும் இது மத்திய கவர்ன்மெண்டிற்கே சேரும். அதுவுமன்னியில் இந்த வரிகள் ஏழைகளையே பாதிக்கும். அது விரும்பத்தக்கதல்ல. ஆனாலும் புதிய சாமான் உபயோகத்தினால் கிடைக்கக்கூடிய அதிகப்படி எதிர் வரி வருமானத்தை மாகாணங்களுக்குக் கொடுக்கும்படி மத்திய கவர்ன்மெண்டினிடம் வற்புறுத்தலாம்.

சிக்கன முறை

செல்வ நிலையைச் சரிக்கட்ட இரண்டு வழிகள்தானுண்டு. ஒன்று சிக்கனம். சிக்கனஞ் செய்ய அதிக இடமில்லை யென்பதைத் தேசமெங்கும் காங்கிரஸ் கவர்ன்மெண்டுகள் கண்டுவிட்டன. சிக்கனஞ் செய்துவிடக் கூடுமென இதற்குமுன் மிகைப்பட்ட அபிப்பிராயம் இருந்து வந்திருக்கிறது. அத்துடன் சிக்கனத்தினால் உண்டு பண்ணப்படும் அதிருப்திக்கு ஏற்ப அதில் மிச்சமொன்று மேற்படுவதில்லை யென்ற எண்ணமும் இப்பொழுது அதிகரித்து வருகிறது.

இரண்டாவதாகப் புதிய வரி இனங்கள் இருக்கின்றன. புதிய வரிகள் என்றால் எந்த தேசத்திலும் ஜனங்கள் விரும்புவதில்லை. அதிலும் இந்தியாவில் முக்கியமாகப் புதிய வரியென்றால் அதிக ஆக்ஷேபமிருக்கும். ஏழைகளின் பளு குறைக்கப்படுமேயல்லாது அதிகரிக்கப் படமாட்டாதென காங்கிரஸ் உறுதி கூறியிருக்கிறது. பல மாகாணங்களில் பல்வேறு புதுமையான வரிகளைப் பற்றி யோசனை கூறப்படுகிறது. விவாக வரி, தமாஷ் வரி, விளம்பர வரி, ஸ்தல விற்பனை வரி என்பதாகப் பலவித யோசனைகள் கூறப்படுகின்றன. ஆனால் இதெல்லாம் இந்த யோசனை கூறுவோர் புத்தி சாதுர்யத்தைக் காட்டுகின்றனவே தவிர அவர்கள் உண்மை நிலையை உணர்ந்தனரென்பதைக் காட்டவில்லை. ஏனெனில் இந்த வரிகள்மூலம் அதிகப்பணம் கிடைக்கப் போவதில்லை. முனிஸிபல் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு வேண்டுமானால் இவை ஒருக்கால் உபயோகமாகவிருக்கலாம். லாபகரமான புதிய வரி இனங்களில் முக்கியமாக இரண்டு அல்லது மூன்றைக் குறிப்பிடலாம். பெருவாரியாகவிருக்கும் விவசாய வருமானத்தின் மீது வரிவிதிப்பது நியாயமாகும். இது வெகுகாலத்திற்கு முன்னரே விதித்திருக்க வேண்டியது. அதின்றி ஏழை ரயத்துக்களுக்கு எவ்வித வசதியு முண்டுபண்ணமுடியாது. இரண்டாவதாக வாரசுரிமை வரிபோடலாம். இதில் சில நிர்வாகச்சங்கடங்கள் இருக்கும். ஆனால் அவற்றை நிவர்த்திப்பது ஒரு அசாத்தியமான காரியமல்ல. மூன்றாவதாகப் புகையிலைத்தொழில்சாலைகளுக்கும் ஸிகரெட்டுகளுக்கும் வரி விதிக்கலாம். இவற்றின் மூலம் சுமாராக வருமானம் கிடைத்துச் செல்வ நிலையைச்சரிக்கட்ட முயலலாம்.

ஆனால் புதிய வரிகள் மூலமோ அல்லது சமஷ்டி கவர்ன்மெண்டினிடமிருந்து உதவி பெற்றோ மாகாண கவர்ன்மெண்டு செல்வப் பிரச்னையைத் தீர்த்துவிடலாமென்று நினைப்பது ஒரு பெரிய தவறாகும். ஜனங்கள் அதிக வரிப் பளுவை ஏற்கக்கூடிய நிலைமைக்கு வர வேண்டும். ஜனங்கள் மேன்மையடைந்து அவர்கள் அதிக வருமானம் பெறக்கூடிய வழியில் ஸர்க்கார் தங்கள் பணத்தைச் செலவழித்தால்தான் இது சாத்தியமாகும்.

விவசாயம் கைத்தொழில்களில் ஏற்பாடாகப் புத்திசாலித்தனமாக மூலதனத்தைச் செலவிடத் திட்டம் தயாரிப்பதனால் ஜனங்களின் வருமானம் பெருகக் கூடும். இதற்காக மாகாண கவர்ன்மெண்டுகள் நன்கு அமைக்கப்பட்ட மூலதனச் செலவு திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டும். நல்லவேளையாகப் புதிய சட்டத்தின்படி மாகாண கவர்ன்மெண்டுகள் மார்க்கெட்டில் தாங்களே நேரிடக் கடன் வாங்க அதிகாரமுண்டு. நம் மாகாண கவர்ன்மெண்டு இவ்வதிகாரத்தை உபயோகித்திருக்கிறது. சென்ற வருஷம் ஒன்றரைக் கோடி கடன் வாங்கப்பட்டு நீர்ப்பாசனம், மின்சாரத் திட்டம் ஆகியவற்றிற்காகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. வேறு நான்கு மாகாணங்களும் இவ்விதம் கடன் வாங்கியிருக்கின்றன. இவ்விதம் லாபகரமான துறைகளில் பணஞ் செலவழிப்பதனால் மாகாண வருஷாசன வருமானமும் அதிகரிக்க இடமேற்படுகிறது. அத்துடன் தேச உற்பத்தியும் அதிகரிக்கிறது. பலருக்கு அதிகப்படியாகத் தொழில் ஏற்படுகிறது. பொதுவாகவே ஜனங்களின் செல்வாதாரம் அதிகரிக்கிறது. நீர்ப்பாசனம், மின்சாரத் திட்டம் முதலிய பொதுஜன உபயோகத் திட்டங்களினால் புதிய வரி இனங்கள் மூலம் கிடைப்பதைவிட அதிக வருமானம் கிடைக்கக் கூடும். புதிய வரிகள் ஏழைகளைத் தான் கஷ்டப்படுத்தும். அவற்றின் பயனும் சந்தேகத்திற்குரியது.

ஆனால் இத்திட்டங்களை நிறைவேற்றுவதில் காலதாமத மேற்படும். கவர்ன்மெண்டார் இதில் அவசரப்படாமல் நிதானமாக நடவடிக்கையெடுத்துக்கொள்ளும் பக்ஷத்தில் நம் மாகாண செல்வ நிலை எவ்வித ஆபத்திற்கு முட்படாது. ரொம்ப ஜாக்கிரதையுடன் முன்னேற வேண்டுமென்பதுதான் நம் கவர்ன்மெண்டின் கொள்கையென்பது ஏற்கனவேவெளியாகியிருக்கிறது. மதுவிலக்கு திடீரென எல்லா ஜில்லாக்களிலும் ஏககாலத்தில் அமுலுக்குக் கொண்டு வரப்படவில்லை. கலால் வருமானக் குறைவு தொடர்ச்சியாகப் பல வருஷங்களிலேயே ஏற்படும். இந்தக்காலத்திற்குள் இதற்கான ஈடுபாடைச் செய்துகொள்ளலாம். வரிவஜா விஷயத்திலும் கவர்ன்மெண்டார் மிகுந்த தாராளத்தன்மை காட்டுவதற்கில்லை. வரியை அதிக வஜாச் செய்வது புத்திசாலித்தனமாகாது. வரி மிகவும் குறைவாகவிருப்பதன் மூலம் ஜனங்கள் பளுவைக் குறைப்பதென்பது தவறான கொள்கையாகும். அது கெடுதலாகக் கூடமுடியும். ஏனெனில் இந்தியாவின் ஏழ்மை மிகுந்த வரிப்பளுவினால் ஏற்பட்டதல்ல. செலவைக் கவனமுடன் முன்றியில் செய்யாததனால்தான் வந்தது. ஆகவே ஜனங்கள் க்ஷேமத்தைப் பெருக்கப்பணக்காரர்களுக்கு அதிக வரிவிதித்து, தேச அபிவிருத்தி வேலைகளுக்கு அதிகப் பணம் செலவழிப்பதே சரியான முறையாகும்.

ஸௌத் இந்தியா
கோவாபரேடிவ் இன்ஷியூரன்ஸ் ஸொஸைடி லிமிடெட்.

தபால் பெட்டி நெ. 182, மதராஸ்.

முன் யோசனை.

கவர்ன்மெண்டு மேற்பார்வை, ஆடிட் இவை நீங்கள் கூட்டுறவு இன்ஷியூரன்ஸ் பாலிஸிகளில் போடும் பணத்திற்கான பாதுகாப்பாகும். குறைந்த ப்ரீமிய விகிதங்களும், உயர்ந்த போனஸ்களும் கிடைப்பதுடன் இவை சிறந்த முதலீடுமாகும்.

எல்லா நவீன தேவைகளுக்கும், எல்லோர் சௌகர்யங்களுக்குமேற்ற பாலிஸிகள்.

வெகு வசீகரமான ஏஜன்ஸி நிபந்தனைகள்.

விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

V. வெங்கடாசலம்,
எம். ஏ., பி. எல்.,
காரியதரிசி

ஸ்ரீ வேதாந்த தேசிகன் கவித்திறம்

—— :[:o:]: ——

ஸ்ரீமான் எ. ஸ்ரீநிவாஸராகவன், எம். எ.

(புதுக்கோட்டை மகாராஜா கலாசாலை ஆசிரியர்)



ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்தமென்னும் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை ஓங்கி வளரச் செய்யவென அவதரித்த மஹா புருஷன் ஸ்ரீ வேதாந்த தேசிகன். இவர் பதின்மூன்றாம் நூற்றாண்டில் (கி. பி. 1268 புரட்டாசி) காஞ்சீபுரத்திற் கருகிலுள்ள தூப்புல் என்னும் க்ஷேத்ரத்தில் அநந்த ஸூரி என்னும் வைஷ்ணவச் சிரேஷ்டருக்குப் புதல்வனாய் திருப்பதி ஸ்ரீ வேங்கடேசனருளினால் அவதரித்தார் (இவ்வருஷம் அவர் அவதாரதினம் அக்டோபர் 4-ந்தேதி நேர்ந்திருக்கிறது.) அதனால் அவர் 'வேங்கட நாதன்' என்று அழைக்கப்பட்டார். தன் தாயின் ஸஹோதரரான அப்புள்ளார் என்னும் ஆசார்யரிடத்தில் இருபது வயதிற்குள்ளேயே ஸகல சாஸ்திரங்களையும் ஓதி யுணர்ந்து, பிறகு திருவஹீந்திரபுரம் சென்று மந்திரோபாஸனத்தால் ஹயக்ரீவப் பெருமானின் அருளையும் பெற்றார். அவ்வமயம் ஸ்ரீரங்கத்தில் சில பிரதிவாதிகள் தோன்றி ராமானுஜ மதத்தை ஆக்ஷேபிக்க, அங்கிருந்த ஆசார்யர்களால் அழைக்கப்பட்டு ஸ்ரீ தேசிகன் ஸ்ரீரங்கம் சென்று எதிரிகளை வாதில் வென்று தம் தர்சனத்தை நிலைநிறுத்தினார். பிறகு மாலிக்காபூரின் படையெடுப்பினால் ஸ்ரீரங்கம் சீர்குலைந்திருந்தபோது திருநாராயணபுரத்திற்கருகில் அவர் சில வருஷங்கள் வஸிக்கும்படி நேர்ந்தது. கொஞ்ச காலத்திற்கெல்லாம் செஞ்சிக்கோட்டையின் தலைவனான கோப்பணார்யனைக் கொண்டு மகம்மதிய ஆதிக்கத்தை ஒழித்து ஸ்ரீரங்கத்தை ஒழுங்குபடுத்தி, கலாப ஸமயத்தில் வெளியே கொண்டு போகப்பட்டிருந்த ஸ்ரீரங்கநாதனைப் பிரதிஷ்டை செய்தார். அர்த்த காமங்களில் ஆசையற்று உஞ்ச விருத்தியாலே காலத்தைக் கழிப்பவராய், லோகோபகாரமான பல கிரந்தங்களைச் செய்துகொண்டும் பிறருக்கு உபதேசித்துக் கொண்டும் ஸ்ரீரங்கத்திலேயே எழுந்தருளியிருந்து கி. பி. 1369-ம் வருஷத்தில் தன் அவதாரத்தை முடித்துக்கொண்டார். ஞானானுஷ்டானங்களால் எல்லோருக்கும் மேற்பட்டவராயிருந்ததுபோலவே தயை, சாந்தி, வைராக்யம் முதலான ஆத்ம குணங்களாலும், ஸர்வேச்வரனிடத்திலும் அவனடியார்களிடத்திலும் அதிக: பக்தியாலும் அன்பாலும் மேம்பட்டவராய் விளங்குகிறார்.

பின்புள்ளோரும் பயன் பெறவேண்டும் என்ற பரந்த நோக்கத்தோடு விசிஷ்டாத்வைதத்தைப்பற்றிய பல கிரந்தங்களை இவர் அருளிச் செய்தார். அவற்றுள் சில ஸாமான்ய ஜனங்களும் ஓதி யுணரத்தக்கவை; சில பரமதங்களைக் கண்டித்துத் தம் ஸித்தாந்த ஸ்தாபனம் செய்யும் நோக்கத்துடன் பிறந்தவை யாதலால் பெரிய அறிவாளிகள் ஊன்றிப் படித்து உணரத்தக்கவை; வேறு சில பூர்வர்களின் கிரந்தங்களுக்கு வ்யாக்யான ரூபமானவை. பல ஸம்ஸ்கிருதத்திலும், சில தனித் தமிழிலும், சில மணிப்ரவாளத்திலும் உள்ளன. வேதாந்தபரமானவை பல; காவ்ய முறையை அநுஸரித்தவை சில. இம்மாதிரியான கிரந்தங்கள் சற்றேறக்குறைய நூற்றிருபது ஆகும். ஒவ்வொரு கிரந்தத்திலும் ஸ்ரீதேசிகனின் ஆழ்ந்த பாரமார்த்திக ஞானத்தையும் வைராக்யத்தையும் சாந்தியையும் காணலாம். அர்த்தகாமங்களிலாவது கௌரவத்திலாவது ஆசையிருப்பதாகக் காட்டும் ஒருவரிகூட அவற்றில்எடுத்துக்காட்ட முடியாது. தர்க்கம், வியாகரணம், மீமாம்ஸை முதலான சாஸ்திரங்களிலும் பௌத்தம், ஸாங்க்யம்,அத்வைதம், பேதாபேதம் முதலான மதங்களிலும் தேசிகன் ஸர்வஜ்ஞராயிருந்தார். ஸம்ஸ்கிருதம் அறியாதாரின் நன்மைக்காக வேதாந்தார்த்தங்களையெல்லாம் ரஹஸ்யங்கள், தேசிகப் பிரபந்தம் முதலியவற்றால் தமிழில் வெளியிட்டதுபோல வித்யார்த்திகள் ஆரம்பத்திலிருந்தே கிலேசமில்லாமல் அப்யஸிக்கும் வண்ணம் காவ்யங்களிலும் ஸ்தோத்ரங்களிலும் அவற்றை இசைத்திருப்பது அவருடைய வன்மையையும் திறமையையும் காட்டுகிறது.

ஹம்ஸ ஸந்தேசம்

இப்படி தேசிகன் இயற்றிய பிரதானமான காவ்யங்கள் "ஹம்ஸ ஸந்தேசம், ஸுபாஷித நீவி, பாதுகாஸஹஸ்ரம், யாதவாப்யுதயம்" நாடகரூபமான "ஸங்கல்ப ஸூர்யோதயம்" என்பவை. இவற்றுள் இரண்டு உச்ச்வாஸங்கள் (ஸர்க்கங்கள்) கொண்ட ஹம்ஸ ஸந்தேசம் என்பது ஹனுமான் ஸீதையைக் கண்டு திரும்பிய பிறகு வானர ஸைன்யங்களோடு ஸ்ரீராமன் லங்கைக்குப் புறப்படுமுன் ஸீதைக்குத் தன் வருகையைத் தெரிவித்து ஆச்வாஸப் படுத்துமாறு எதிரில் தோன்றிய ஒரு ஹம்ஸத்தைத் தூது விடுவதை விஷயமாகக் கொண்டது. இது காளிதாஸனுடைய மேக ஸந்தேசத்தைப் போன்றது. மகாகவியை யனுசரித்து இது எழுதப்பட்டது. அதற்கு நிகராக விருப்பது. சில விடங்களில் அதனிலும் சிறந்து நிற்கிறது. மேகஸந்தேசத்தில் நாயகன் யக்ஷன். ஹம்ஸ ஸந்தேசத்தில் அப்படியல்ல. இதில் நாயகன் ராமன். நாயகனுக்கேற்ப ஸகல குணங்களும் பொருந்திய சக்ரவர்த்தித் திருமகன். அங்கு தூது சென்றது காற்றில் சிதறக்கூடிய ஒரு அசேதனமான மேகம். இங்கு தூதாகச் செல்லுவது ஹம்ஸம். இது கவிகள் போற்றும் சேதனமாகையால் இயற்கையிலேயே பெருமையோடு கூடியிருப்பது. ஸ்ரீ தேசிகன் கையில் இதற்கு இன்னும் அதிகப்பெருமை ஏற்பட்டது.

இதன் முதல் ஆச்வாஸத்தில் ராமன் ஹம்ஸத்தை வரவேற்று உபசரித்ததும் பம்பா ஸரஸ்ஸினின்று லங்கைக்குச் செல்ல வேண்டிய மார்க்கமும் வர்ணிக்கப்படுகின்றது. ஸ்ரீ தேசிகன் பரம பக்தராகையாலும் சேதனமான ஹம்ஸம் ரஸிக ஜந்துவாகையாலும் மார்க்கத்தில் திருப்பதி, காஞ்சி, ஸ்ரீரங்கம், மாலிருஞ்சோலை முதலான க்ஷேத்ரங்கள் வர்ணிக்கப்படுகின்றன. காஞ்சியில், ஹம்ஸம் செல்லும்போது அருளாளன் கள்ளவீழ்கமலம் போன்ற பிராட்டியின் வியர்த்தகையைப்பற்றி மறு கையில் கமலம் வைத்து, சோலையில் உலவவந்தால், உன் தூயவெண்சிறகென்னும் விசிறிகொண்டு வீசிநின்றவேல் செய்வாய்' என்பது கவியின் பக்தியைக் காட்டுகிறது.

மத்வாஸக்தம் ஸரஸிஜமிவ
ஸ்வின்ன மாலம்பமானே
தேவ்யா ஹஸ்தம் ததிதர
கரந்யஸ்த லீலாரவிந்த:
தேவ: ஸ்ரீமான் ஸயதி
விஹரேத் ஸ்வைரமாராம
பூமௌ
வ்யக்தோ வாலவ்யஜன
வபுஷா வீஜயேஸ்தம்
த்வமேவ.

(ஹ. ஸ. 1. 35)

இரண்டாவது ஆச்வாஸம் லங்கையையும், அசோகவனிகையில் ஸீதையின் நிலைமையையும், ஹம்ஸத்திற்கு ஸந்தேசம் சொல்லும் வியாஜத்தால் ராமனுடைய விரஹாவஸ்தையையும் வர்ணிக்கிறது. இங்கு காளிதாஸன் மட்டிலுமில்லாமல் ஸுந்தர காண்டத்தில் வால்மீகிக்கும்கூட தேசிகன் மேம்பட்டிருக்கிறாரெனக் கூறலாம். அசோக மரத்தினடியில் பனியினால் கருகி நிற்கும் தாமரையோடைபோலும், எண்ணத்திற்கெதிரைக்காட்டும் மந்தரின் மொழிபோலும், சேற்றினுள் சிதைந்து மங்கும் தாமரைக்கொடி போலும், காட்டினில் களிறைவிட்டுப் பிரிந்ததோர் பிடிபோலும், காரிருள் மேகம் சூழ்ந்த காந்தமில் மதியம்போலும், முடிவிலா இடையூறுற்ற மாந்தரின் ஆசைபோலும், கொடும்புலிக் கூட்டம் சூழ கலங்கு மான்பேடுபோலும், போர்க்களமதனில் வீரன் தெரித்தெறி நாணே போலும், மிதிலையோன்செல்வி ஸீதை இருக்க நீ காண்பாய் என்று வர்ணிப்பது ஸீதையின் முழு நிலை நம் கண்முன் தோற்றும்படி சிறந்த உபமானங்களால் கூறப்படுகிறது.

வர்ஷா கீர்ணாமிவ கமலினீம்
வ்யாஹதார்த்தா
மிவோக்திம்
பங்காச்லிஷ்டாமிவ
பிஸலதாம் பத்ய பேதா
மிவேபீம்
மேகச்சன்னாமிவ சசிகலாம்
விக்னருத்தா மிவாசாம்
வியாக்ரோ பேதாமிவ
மிருகவதூம் பூதலே ஜ்யா
மிவாஸ்தாம்.

(ஹ. ஸ. 2. 14.)

கடைசி சுலோகத்தில் கவியே இந்தப் பிரபந்தத்தைப்பற்றி (சிந்தாஸுணோல் விகிதம்) புத்தி என்னும் சாணையில் தீட்டிய ஓர் பிரபந்த ரத்னம் என்று கூறியிருப்பது மிகையாகாது.

ஸுபாஷித நீவி என்னும் கிரந்தம் ஸர்வஜ்ஞ சிங்கப்ப நாயக்கன் என்னும் ஓர் அரசனுக்கு நீதியைப் போதிப்பதற்காக எழுதி அனுப்பப்பட்டது. ஒவ்வொரு சுலோகமும்

இருபொருள் படும்படியாக (ச்லேஷையாக) மிக எளிய நடையில் இருக்கிறது. இது நீதி சதகம் முதலான கிரந்தங்களின் ரீதியில் அமைந்துளது.

பாதுகா ஸஹஸ்ரம்

ஸ்ரீ தேசிகனின் மூன்ருவது காவ்யமான பாதுகா ஸஹஸ்ரம் ஸ்ரீராமனுடைய பாதுகைகளைத் துதிக்கும் ஆயிரத்தெட்டுச் சுலோகங்கள் கொண்டது. இதை ஒரே இரவில் செய்து முடித்தாரென்பது அவர் தம் மறபினர் கொள்கை. முப்பத்திரண்டு பத்ததிகளாகப் பிரிக்கப்பட்ட இக்காவ்யம் பாதுகையின் பெயர், ப்ரபாவம், அதன் ஸ்வர்ணம், அதில் இழைக்கப்பட்டிருக்கும் பச்சை, சிகப்பு, நீலம் முதலான கற்கள், பாதுகையின் சலங்கை மணிகளின் ஓசை என்று பாதுகையைப்பற்றிய ஸகல விஷயங்களையும் வர்ணிக்கிறது. இதற்கு உரை எழுதிய பிரபல அத்வைத மதாசாரியரான ஸ்ரீ அப்பைய தீக்ஷிதர் ''சாண் கட்டையில் ஆயிரம் தொளையிட வல்லார்' என்று இக்கவியைப் புகழ்ந்தார். இக் கிரந்தம் ஸ்ரீ தேசிகனுடைய அளவற்ற கல்பனுசக்தியையும், ஸம்ஸ்கிருதத்தில் நினைத்தபடி நினைத்த விருத்தத்தில் கவனம் செய்யும் சக்தியையும், சொல்லலங்காரம் பொருளலங்காரம் இரண்டிலும் அவருக்கு இருந்த தேர்ச்சியையும் ஒருங்கே காட்டுகிறது.

பாதுகா பட்டாபிஷேக காலத்தில் நாலு பக்கங்களிலும் ராஜோபசாரமாக சாமரங்கள் அசைய பாதுகைகள் ஸ்வர்ணமயமான ஸிம்ஹாஸநத்தில்வீற்றிருப்பதை ஒரு அழகான பாசுரமாகச் சித்தரித்துக் காட்டுகிருர். ஸ்வர்ணபர்வதத்தின் தாழ்வரையில் ஒரு தாமரைப் பொய்கையில் பிணங்கிப் போராடும் ஹம்ஸங்கள் போல் இருப்பதாகக் கூறுகிருர். சில இடங்களில் பாதுகையே ஸ்திரியாகவும் ஹம்ஸமாகவும் உத்பிரேக்ஷை செய்யப்படுகிறது. இப்படிப்பட்ட உத்பிரேக்ஷைகள் தவிர பிரபந்தம் முழுவதுமே நம்மாழ்வாரின் பிரபாவத்தை ஸூசிப்பிக்கிறது. பரம் பொருள், பரமப்ரயோஜனம், அதற்கு உபாயம் இவற்றைப் பற்றிய ஸாரமான ஸித்தாந்தார்த்தங்களும் இதில் நிரூபிக்கப்படுகின்றன.

யாதவாப்யுதயம்

''யாதவாப்யுதயம்'' என்பது ரகுவம்சம் முதலான காவ்யங்கள் போன்றது. இது இருபத்திநாலு ஸர்க்கங்களில் கிருஷ்ணனுடைய சரித்திரத்தை ஹரிவம்சத்தில் கூறியதை யொட்டி வர்ணிக்கிறது. பாதுகா ஸஹஸ்ரத்தில் கல்பனு சக்தியைக் காட்டுவது போல இதில் கவித்வ ஸாமர்த்தியத்தைக் காட்டுகிருர். மற்ற காவ்யங்களில் போல இதிலும் சந்திரோதயம், இரவு, நகரம், யுத்தம், விவாகம் முதலான வர்ணனைகள் உள்ளன. சிறுவர்களும் ஆரம்பத்தில் கற்றுக்கொள்ள உபயோகப்படும்படி அவ்வளவு ஸுளிதமான சப்தங்களைக் கொண்டு எளிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது. ஸ்ரீ தேசிகனுடைய மற்றக் காவ்யங்களில் போலவே இதிலும் உபநிஷத்திலுள்ள பதங்களின் பிரயோகங்களும் உபநிஷதார்த்தங்களும் நிரம்பி இருக்கின்றன. அதனுல் இது சிறுவர்களுக்குக் காவ்யபாடம் மட்டுமல்லாமல் வேதாந்த பாடமும் ஆகிறது. இது முழுவதற்கும் வ்யாக்யானம் செய்திருக்கும் ஸ்ரீ அப்பைய தீக்ஷிதர் முதல் ஸர்க்கத்தில் ஏழெட்டு சுலோகங்களுக்கு சப்தார்த்தம் தாத்பர்யார்த்தம் முதலியவற்றை விரிவாக எழுதிவிட்டு, இம்மாதிரியே ஸ்ரீ தேசிகனுடைய ஸுளிதமான காவ்யங்களிலும் ஒவ்வொரு பதத்திலும் ஊன்றியறிய வேண்டிய பல ஸூக்ஷ்மமான விஷயங்கள் உள்ளன. இனி யான் உரை மட்டுமே எழுதுவேன் என்று கூறியிருக்கிருர்.

உபமா, ரூபகம், உத்பிரேக்ஷை முதலான ஸகல அலங்காரங்களும் இருப்பதோடு உத்தம காவ்யத்திற்கு வேண்டிய எல்லா லக்ஷணங்களும் பொருந்தியிருக்கின்றன. கிருஷ்ணன் அவதரிக்கும் ஸமயமான நடு இரவில் சந்திரன் உதயமாகி, தன் அழகிய கிரணங்களால் உலகையே சூழ்ந்திருந்த இருளைத் திருடர்களை விரட்டுவது போல விரட்டி, அடர்ந்த மரத்தின் நிழலில் போய் ஒதுங்கும்படி செய்கிருன். காற்றில் கிளைகள் அசையும்போது இலைகளினிடையே தன் கிரணங்களை அனுப்பி, இருள் என்னும் திருடன் அங்கு இருக்கிருனே என்று தேடுவது போலிருக்கிறது. அதே ஸமயம் கடல் சந்திரனைக் கண்ட மகிழ்ச்சியால் பொங்கி எழுகிறது. காதலியின் அ[illegible]கிய அதரங்களினின்றும் மதுவை உண்டு உவகையும் மதமும் கொண்ட ஒருவன், சுற்றிலும் நர்த்தனம் செய்யும் மடவார் நின்று ஆடத் தானும் ஆடுவது போல் சந்திர கிரணங்களால் தூண்டப்பட்டு அலைகளால் ஸமுத்ரராஜன் தாண்டவமாடுகின்ருன் என்று உத்பிரேக்ஷிக்கிருர்.

பிரியாமுகை ஸ்தோயமது
ப்ரதிஷ்டம் பீத்வா நவம்
ப்ரீத இவாம்புராசி:!
ஸமேத்ய சந்த்ர த்யுதிரார்த்த
கிபி: தரங்கிதம் தாண்டவ
மாததான ||

கோகுலத்தில் தன்னில்லத்தில் வளரும் குழந்தையான கிருஷ்ணனுடைய மழலைச் சொற்களையும் புன்முறுவல்

அம்பிகாபதி
*
ஒப்பு உவமையற்ற
தமிழ் பேசும் படம்
என்று யாவராலும் கருதப்பட்டு
லட்சக் கணக்கான மக்களின்
உள்ளத்தை கொள்ளை கொண்டது.

மார்க்கண்டேயர்
*
நடிகாமணிகள் திறம்பட நடித்துள்ள
ஈடிலா தெலுங்கு படம்

விவரங்களுக்கு
எம். எஸ். தொட்டண்ண செட்டியார் & ஸன்ஸ்
ஸோல் புரொப்ரைட்டர்கள்
சேலம் சங்கர் பிலிம்ஸ் லிமிடெட், சேலம்

ரூத்த அதரங்களையும், காது களில் வில் வீசி அசையும் குண்டலங்களையும் கண்ட நந்தன், தொல்லையின் பத்திறு தியே கண்டான்.

நிர்வ்யாஜ மந்தஸ்மிததர்ச
னீயம் நீராஜிதம் குண்டல
ரத்ன பாஸா!
நந்தஸ் ததானீம் நஜகாம
திருப்திம் முக்தா க்ஷரம்
ப்ரேக்ஷ்ய முகம் ததீயம்||

விஷயத்திற்குத் தக்கவாறு மதுரமாயும் பருஷமாயும் கம்பீரமாயும் சப்தங்களையும் விருத்தங்களையும் அமைப்பதை ஸ்ரீதேசிகனிடம் காணலாம். மடுவில் சுகித்துப் படம் விரித்தாடுகின்ற காளியனின் தலைமேல் கிருஷ்ணன் மாறி மாறி நர்த்தனம் செய்வதை வர்ணிக்கும் கீழ்வரும் சுலோகம் சப்த சக்தியாலேயே நர்த்தனத்தைக் காட்டுகிறது.

லோலா பதச்சரண லீலா
ஹதி க்ஷரித ஹாலாஹலே
நிஜபணே
ந்ருத்யந்தம ப்ரதித கருத்யம்
தமப்ரதிமம் அத்யந்த
சாருவபுக்ஷம்!
தேவாதிபிஸ்ஸமய ஸேவாதர
த்வரித ஹேவாக
கோஷமுகரை:
த்ருஷ்டாவதான மததுஷ்டாவ
சௌரிமஹி ரிஷ்டாவ
ரோதஸஹித:

ஸங்கல்ப ஸூர்யோதயம்

இது விசிஷ்டாத்வைத ஸித்தாந்தார்த்தங்களை உபதேசிக்கும் நோக்கத்தோடு எழுதப்பட்ட பத்து அங்கங்கள் கொண்ட ஒரு நாடகம். பிரபோத சந்திரோதயத்திற்கு மாருக எழுதப்பட்டது என்றும் கூறுவர். நாடகத்தில் காட்டமுடியாத சாஸ்திரம், கலை, வித்யை முதலியன இவ்வுலகிலேயே இல்லை என்பதற்கேற்ப ஸ்ரீதேசிகனின் ஸர்வஜ்ஞத்வத்தை இதில் காணலாம்.

ஒரு புருஷனுடைய விவேகம் சாந்தி ஸுமதி முதலான நல்ல குணங்களை ஒரு வகுப்பாகவும், காமம் க்ரோதம் மோஹம் டம்பம் முதலான துர்க்குணங்களை மற்றொரு வகுப்பாகவும் பிரித்து, புருஷன் மோக்ஷத்தைப் பெறும் பொருட்டு விவேகன் முதலானோர் பிரயத்னம் செய்வதும், மஹா மோஹன் முதலியவர்கள் அதைத் தடுப்பதும், தத்வஜ்ஞானத்தினல் விவேகம் எதிரிகளை ஜயித்து முடிவில் புருஷனுக்கு மோக்ஷத்தைச்சம்பாதித்துக் கொடுப்பதும் அழகான ஒரு நாடக ரூபமாகச் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன.

பாத்திரங்களெல்லாம் அவரவர்களுக்குத் தக்கபடி வேதாந்தம், சிருங்காரம், கர்வம் முதலானவற்றின் ஸூக்ஷ்மமான விஷயங்களைப் பேசுகிருர்கள். நடை சற்றுக் கடினமானதாயினும் காம்பீர்யமும் மாதுர்யமும் நிறைந்துள்ளது. இருதிறத்தாரும் நடத்தும்போரை தத்ரூபமாக ஆயுதங்கள் ஒன்ருேடொன்று மோதி சப்திப்பதுபோல சப்த சக்தியினலேயே காட்டுகிருர். மனித ஸ்வபாத்திலுள்ள தோஷங்களைக் காட்ட துர்க்குணங்களான பாத்திரங்கள் பேச்செல்லாம் இரு பொருள் படும்படியாகவே இருக்கின்றன. 'சுவர்க்கத்தையும் மோக்ஷத்தையும் எனக்குக் கொடுக்க வந்தபோது, உலகத்தையே அற்பமாக எண்ணும் நான் அவற்றைத் தள்ளிவிட்டேன்' என்று கர்வியான டம்பன் கூறுகிருன். தவத்தாலும் சாந்தியாலும் பெற வேண்டியவற்றை டம்பத்தால் அடைய முடியாதென்பது உட்கருத்து. வஸந்தன் காமன் ரதி மூவரும் பேசும்போது வைராக்ய நிதியான நம் கவிக்கு சிருங்கார ரஸத்தில் உள்ள தேர்ச்சி ஆச்சர்யப்படும்படியிருக்கிறது. அங்கு பாஷையே மிருதுவாயும் மதுரமாயும் மாறுகிறது.

காமனின் பெருமையை வஸந்தன் என்னும் தோழன் புகழ்கிருன். ''விரும்பியோர் பலனைத் தங்கள் கருவியினைந்தும் கொண்டு தக்கதும் தகாததுமான செய்கையைச் செய்துவைத்து, 'காமனே செய்து வைத்தான் மன்யுவும் கூடச் செய்தான்' என்று உன்தனைச் சொல்லிவைப்பார் விழித்தெழு மாந்தர்தாமே.''

காமம் காமம் காமபி
ஸித்தம் கரணை: ஸிவை:
காரம் காரம் கர்ம
நிமித்தம் விஹிதம்வா. |
நியஸ்யந்தி த்வயத்புத
ஸீம்னி ப்ரதி புத்தா:
நகாமோகார்ஷீத் மன்யுரகார
ஷீதிதி நாம || (IV 3.)

இதில் சப்தங்களின் இனிமையான ஓசையும் சுலோகத்தின் போக்கும் மிகவும் அழகாயிருப்பதைக் காணலாம். ஓரிடத்தில் இருட்டை வர்ணிக்கும் சுலோகம் பின் வருமாறு:-

''பொழில்களில்
கதம்பமாகும்;
வானில் கார்மேகமேயாம்;
கிரிகள் பால் கஜங்களாகும்,
சுரும்பினம்
மல்லிகைக் கண்;
நின் கருங்குழல்கள் தம்மேல்
குவலய மாலையாகும்;
மாலையின் அசையும் கூந்தல்
என்னலாம் இருளின்
கூற்றை''

என்று மஹாமோஹன் தன் மஹிஷியிடம் இருட்டை வர்



ஜெர்மன் இத்தாலி முஸ்தீபைக் கண்டு ஜன நாயக தேசங்கள் கிலி

ணிக்கிறான். 'ஸ்திரீகளைப் பார்த்தாலும் அவர்கள் குணங்களை எண்ணினாலும் வைராக்யம் ஓடிவிடும்' என்று ஒரு கவி எழுதினார். தேசிகனோ 'அவர்கள் தோஷங்களை ஆராயும் பொருட்டு ஸ்திரீகளை நினைப்பதுகூட வைராக்யத்தை விரட்டப் போதும்' என்று இதற்குமேல் ஒரு படி செல்லுகிறார்.

தமிழ் பிரபந்தம்

இவ்வாறு காளிதாஸனைத் தனக்கு நிதர்சனமாகக் கொண்டு ஸம்ஸ்கிருதத்தில் சிறந்த காவ்யங்களைச் செய்திருப்பதுபோலவே ஆழ்வார்களின் அருளிச் செயல்களை யனுஸரித்துத் தமிழிலும் மும்மணிக்கோவை, நவரத்தின மாலை, கீதார்த்த ஸங்கிரஹம், முதலான பிரபந்தங்களை அருளிச்செய்துள்ளார். ஞானத்தைப் பெற விரும்புவோரின் அதிகாரத்திற்கும் ருசிக்கும் ஏற்ப காவ்யபாக பேதங்களால் தினசரி ஆஹார நியமம் முதலானவை லளிதமாயும் நவரத்ன மாலை முதலியவை ப்ரௌடமாயுமிருக்கின்றன. இவற்றில் பலவிதமான சந்தங்களில் பாசுரங்கள் அமைந்திருப்பது ஸ்ரீ தேசிகனுக்குத் தமிழ் சந்தசாஸ்த்ரத்திலுள்ள தேர்ச்சியைக் காட்டும். ஸ்ரீ வைஷ்ணவ தினசரியிலுள்ள பாசுரங்களெல்லாம் சப்த சித்ரமுடையனவாயும் முதல் திருவாய் மொழியின் சந்தத்தோடொத்து ஸர்வ லகுவாயிருக்கும்படி. செய்யப் பட்டுள்ளன.

"முத்திக் கருள் சூட
மூன்றைத் தெளிமுன்னம்
இத்திக்கா லேற்கு மிதம்"

என்பது போன்ற பாசுரங்கள் சப்தார்த்தம் தெரிந்தாலும் தாத்பர்யார்த்தம் ஸாமான்யர்களுக்குத் தெரியாதிருக்கும்படி மறைத்துக் கூறுகின்றன.

ஹஸ்திகிரி மஹாத்ம்யத்தில் திருமகளும் நிலமகளும் இருபால் திகழ கரிகிரிமேல் நின்ற அருளாளர் தோன்றுவதை வர்ணிக்கும் பாசுரம் வருமாறு:

"பெடை யிரண்டை யொரன
மடைந்து பிரிந்திடா வகை
பேசலாம்
பெருகு மருவிகள் அருகு
மருவிய பெரியமணி வரை
பயிலலாம்
பிடியிரண்டொடு களப
மொன்று பிணைந்த பேரழ
கோதலாம்
பிரிவுலொளி யொடு
நிழலுமருகுறுமிரவியி
லகுதல் பரவலாம்
கொடியிரண்டொடு விடவி
யொன்று குளிர்ந்தவாறு
குலாவலாம்
குறைவில் சுருதியுநினைவு
மிலகிய தருமவருநிலை
யெண்ணலாம்
அடியிரண்டையுமடையுமன்
பரறிந்த பேரருளாளனார்
அணுகு மலர்மகள் அவனி
மகளொடு காடிகிரி
நிலை கவர்தலே"

சதுர்முகனைச் சிறி அவன் வேள்வியை யழிக்கும் பொருட்டு கல்லும் மலையும் புரள விரைந்து பெருகும் வேகவதியின் வர்ணனை ஓடுகிற ஆற்றையே எடுத்துக்காட்டுகிறது.

"அன்னவடிவாள் சையுமன்ன
நடையாளு யருமன்ன வர
சேறி வருவாள்
அத்தனயனத்தனயனுத்தி
தனை யத்திதென வுத்தி
புரியாள்
நன்னடவிடா நடமிதென்ன
நடவாநடுவுள் நண்ணுகுட
கேறியிழிவாள்
நற்பதிகளற்பதிகள் கற்புரள
வற்புத மருக்கதியினல்
கன்னடை விடாவிடமிலுன்
னதி சிறுவிகட மன்னுகிரி கூட
மிடியக் கட்டவிடை யிற்று
விழ முற்றும் விழி யுற்றடைய
விட்டருகுற அன்னநய சிரயனி
தென்னென விழாவமரார் மன்
னுபதியேறி மகிழ அச்சுதன
னைத் தனுவிலத் திசை வரத்
தகைய வற்றனுகினள்."

அதிகார ஸங்கிரஹத்தில் பரமபுருடனுடைய திருவடிகளின் பிரபாவங்களைக் கூறும் பாசுரம் கம்பீரமான வண்ணச் சந்தில் இருப்பதைப் பார்த்தாலும் மும்மணிக் கோவை என்னும் பிரபந்தத்தில் ஸர்வேச்வரன் ஸகலவித பந்துவுமாயிருப்பதை வர்ணிக்கும் பாசுரத்தைப் பார்த்தாலும் ஸ்ரீ தேசிகனுக்குத் தமிழிலும் கவிதா சக்தி ஸம்பூர்ணமாயுண்டென்று அறியலாம்.

"உறு சகட முடையவொரு
காலுற்றுணர்ந்தன
உடன் மருத முடைய வொரு
போதிற் றவழ்ந்தன
உறிதடவுமளவில்
உரலூருற்று நின்றன
உறு நெறியோர் தருமன் விடு
தூதுக்குகந்தன
மறநெறியர் முறியபிரு
தானத்துவந்தன
மலர்மகள் கை வருடமலர்
போதிற்சிவந்தன.
மறுபிறவி யறுமுனிவர்
மாலுக்கிசைந்தன
மனுமுறையில் வருவதோர்
விமானத்துறைந்தன
அறமுடைய விசயனமர்
தேரிற்றிகழ்ந்தன
அடலுரக படமடிய
வாடிக்கடிந்தன
அறுசமய மறிவரிய
தானத்தமர்ந்தன
அணிகுருகை நகர் முனிவர்
நாவுக் கமைந்தன
வெறியுடைய துளவமலர்
வீறுக்கணிந்தன
விழுகரியோர் குமரனென
மேவிச்சிறந்தன
விறலசுரர் படையடைய
வீயத்துரந்தன

பவர்

இந்தியாவின் புகழ் பெற்ற டைரெக்டரும், பிரபாத் பிலிம் கம்பெனியின் பாகஸ்தருமான

Mr. V. சாந்தாராம்

பவர் டாக்கி

மேஷின்களை புகழ்கிறார்.

—'நியாயமான விலையில் நீண்டநாள் உழைக்கக் கூடிய இயந்திரம்'

—'ஆனபடியினால் இரண்டு வருஷத்திற்குள் 300 பவர் மேஷின்கள் எளிதில் விற்பனையாகியுள்ளன.

—'இதை வாங்குவதால் வியாபாரம் வளர்வதுடன் தேச புக்தியும் வளருகிறது.

—: ஏஜண்டுகள் :—

ஸ்வஸ்திக் ஸ்டோர்ஸ்,

மவுண்ட் ரோட் — சென்னை.

Marshall Sons & Co. (India) Ltd.

MECHANICAL & ELECTRICAL ENGINEERS.

9, Second Line Beach, MADRAS.

CAN SUPPLY:

MARSHALL HORIZONTAL HEAVY FUEL OIL ENGINES.

MARSHALL PORTABLE STEAM ENGINES & BOILERS

MARSHALL DIESEL TRACTORS.

GWYNNES PUMPS & PORTABLE PUMPING SETS.

BROOK ELECTRIC MOTORS,

THOM. ROBINSON WOODWORKING MACHINERY.

LINER CONCRETE MIXERS.

BLACKMANS FANS & BLOWERS.

ROSEDOWNS OIL EXPELLERS.

BRADFORD LAUNDRY MACHINERY.

J & E HALL COLD STORAGE PLANT

ETC. ETC.

Any other Plant you Require Please Write to us.

விடலரிய பெரிய பெருமாள்
மெய்ப்பதங்களே.''

மேலும்,

''பயின்மதி நீயே
பயின்மதிதருதலின்
வெளியும் நீயே
வெளியுறநிற்றலின்
தாயும் நீயே
சாயை தந்துகத்தலின்
தந்தையு நீயே
முந்தி நின்றளித்தலின்
உறவு நீயே
துறவா தொழிதலின்
உற்றது நீயே
சிற்றின்பமின்மையின்
ஆறு நீயே
யாற்றுக் சருடலின்
அறமு நீயே
மற நிலை மாய்தலின்
துணைவனு நீயே
யிணை யில்லையாதலின்
துய்யனு நீயே
செய்யாளுறைதலின்
காரண நீயே
நாரணனுதலின்
கற்பக நீயே
நற்ப தந்தருதலின்
இறைவனு நீயே
குறையொன்றிலாமையின்
இன்பமு நீயே
துன்பந்துடைத்தலின்
யானு நீயே
என்னுளுறைதலின்
எனது நீயே
யுனதன்றியின்மையின்
நல்லாய் நீயே
பொல்லாங்கிலாமையின்
வல்லாய் நீயே
வைய முண்டுமிழ்தலின்
எங்கணுமாகு
மெய்யகின் வியப்பே
அங்ஙனே யொக்க
வறிவதாரணமே.

இப்பாசுரங்கள் தமிழில் ஞானமுடையவர்களும் எளிதில் அர்த்தம் அறியும்படியாய் ப்ரஸாதமென்னும் குணம் பொருந்தியவையாய் இருக்கின்றன.

பாதுகாஸஹஸ்ரம சித்ர பத்ததியிலும் யாதவாப்யுதயம் ஆருவது ஸர்க்கத்திலும் யமகம் அநுப்ராஸம் பத்ம பந்தம் சக்ரபந்தம் முதலான சப்தாலங்காரங்களில் தேசிகனுக்கு இருக்கும் வல்லமையைக் காணலாம். இப்படி சப்தாலங்காரம் அர்த்தாலங்காரம் விஷயத்திற் கேற்றபடி ஓசையுடைய சப்தங்களைச் சேர்ப்பது, அப்படியே சுலோகங்களிலும் பாசுரங்களிலும் அமைப்பது, இயற்கை வருணனை, மனோபாவங்களின் வர்ணனை, வேதாந்தார்த்த நிருபணம், ஆசுகவித்வம், இவ்வளவும் வடமொழி தென்மொழி இரண்டிலும் செய்யும் வல்லமை, எல்லாம் நம் தேசிகனிடத்தில் ஒருங்கே பொருந்தியிருப்பதால் அவர் 'ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர்' 'கவிஸிம்ஹம்' என்பது உண்மையே என்றுணரலாம்.

ஹாஸ்யத் துணுக்குகள்

''கோவலன்'' நாடகம் நடந்துகொண்டிருந்தது. மாதவி கோவலனிடம் தனக்கு ஒரு வீடு கட்டிக்கொடுக்கவேண்டுமென்று கேட்டாள். கோவலனும் சம்மதித்தான். அப்பொழுது வெளியில் நின்றுகொண்டிருந்த சிலர் தங்களை அதிகாரிகள் டிக்கட்டின்றி உள்ளே விடாததால் கற்களை வீச ஆரம்பித்தனர். கற்கள் அரங்கத்தில் விழ ஆரம்பித்தன.

விதூஷகன்:—மாதவி! ஐயா வீடு கட்டிக்கொடுக்கிறேன் என்று சொன்னவுடன் மளமளவென்று கற்கள் வந்திறங்குகின்றன பார்த்தாயா?

* * * *

தாய்:—சமயலறையில் இரண்டு பிஸ்கோத்துகள் வைத்திருந்தேன். ஒன்றுதான் இருக்கிறது. மற்றொன்று எங்கே?

சிறுவன்:—எனக்குத் தெரியாது. இருட்டாக இருந்ததால் மற்றொன்று இருந்ததைக் கவனிக்கவில்லை.

* * * *

ஹாஸ்டலில் வசித்துக்கொண்டிருந்த தன் பிள்ளையைப் பார்க்கத் தகப்பனார் சென்றார்.

தகப்பனார்:—நான் ரயிலை விட்டிறங்கி இன்னும் ஒரு மணி நேரங்கூட ஆகவில்லை. அதற்குள் நீ பணம் கேட்கிறாயே.

பையன்:—ரயில் இன்று ஒரு மணி தாமதித்து வந்தது.

* * * *

மனைவி:—நாம் வாங்கிய பீரோவிற்குப் பணம் கேட்பதற்காக வந்திருக்கின்றனர்.

கணவன்:—நான்தான் முன்னமேயே பணம் கொடுத்து வைத்திருந்தேனே! அவர்கள் பீரோவைத் தூக்கிச் சென்றால் நமக்கு அவமானமல்லவா?

''எனக்குத் தெரியும். பீரோவைக் கீழே கூடத்தில் வைக்க வேண்டும். மாடியிலிருந்து இறக்கிச் சென்றவுடன் பணத்தைக் கொடுத்துவிடுகிறேன்''

* * * *

ஒரு போக்கிரியைக் கோர்ட்டில் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

மாஜிஸ்திரேட்:—நீ குற்றவாளியா? இல்லையா?

கைதி:—நீங்களே முடிவு செய்யுங்கள். அதற்காகத்தானே சம்பளம் வாங்குகிறீர்கள்.

* * * *

H. CHANDANMAL & Co.

Wholesale & Retail

Chemists, Druggists & Acid Merchants.

The Premier House for Photo & Process Chemicals.

Enquiries solicited

97, Nainiappa Naick St.,
P. T., MADRAS. Phone 4229.

சிமன்லால்
பிரதாப்சந்த்

புளூ ஜாகர்
வைரங்கள்
(ஸ்டாக் செய்திருப்பவர்கள்)

175, சைனுபஜார்,
ஜி.டி. மதராஸ்.

By Courtesy *"Grihalakshmi"*

ராதா — கிருஷ்ணன்

தமிழைப் பேணின சில அரசர்கள்

—:[:o:]:—

ஸ்ரீமான் கே. எ. நீலகண்ட சாஸ்திரியார்
(சென்னை சர்வகலாசாலை சரித்திர ஆசிரியர்)



ஒரு பாஷையின் முன்னேற்றத்திற்கும் அதன் இலக்கிய இலக்கணங்கள் விரிவடைவதற்கும் அப்பாஷைக்கு அரசன் அளிக்கும் ஆதரவு ஒரு முக்கியக் காரணமாகும். முன்னாட்களில் தமிழ் மொழியைப் பலவாருகப் பேணிப் புகழ் பூண்ட மன்னர்கள் நூற்றுக் கணக்கானவர்கள். அவர்களில் முக்கியமானவர்கள் சிலர் புரிந்த தமிழ்த் தொண்டும் அதன் பெருமையுமே இக்கட்டுரையின் விஷயமாகும்.

பாண்டியர் பாஷாபிமானம்

ஆதிகாலந்தொட்டு; பாண்டிய நாட்டு அரசர்களுக்கும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. தமிழ்த் தாயின் பிறப்பையும் சரிதத்தையும் சுருங்கக் கூறப் புகுந்த வரந்தருவாருடைய ஒரு பாடலால் இதை நன்ருக அறியலாம்:

பொருப்பிலே பிறந்து தென்
னன்புகழிலேகிடந்துசங்கத்
திருப்பிலே யிருந்து வைகை
யேட்டிலே தவழ்ந்தபேதை
நெருப்பிலே நின்று கற்ரோர்
நினைவிலே நடந்தோரேன
மருப்பிலே பயின்ற பாவை
மருங்கிலே வளருகின்ருள்.

அதாவது, பிறந்து, கிடந்து, இருந்து, தவழ்ந்து, நின்று எனக் குறிக்கப்பட்ட தமிழின் குழந்தைப் பருவச் செயல்கள் அனைத்தும் பாண்டி நாட்டு நிகழ்ச்சிகளே என்பது இவர் கருத்து. வரந்தருவார் காலத்துக்குப் பல நூற்ருண்டுகளுக்குமுன் ஏற்பட்ட சின்னமனூர் சாஸனமும் இக்கருத்தையே வலியுறுத்துகிறது. இச்சாஸனத்தில் பாண்டியர் பாஷாபிமானத்தைக் குறித்த சொற்றொடர்கள் பல இருக்கின்றன. முதலாவது 'பொருவரும் சிரகத்தியனைப் புரோகிதனுகப் பெற்றது' பாண்டிய வமிசமென்பது. பின், 'தென்றமிழின் சுவைகண்டும், 'உளமிக்க மதியதனுல் ஒண்டமிழும் வடமொழியும் பழுதறத் தாஞராய்ந்து பண்டிதரின் மேந்தோன்றியும்' 'மகாபாரதந் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என மூன்று தொடர்களால் முன்னுள் 'மகிமண்டலங்காத்த' பாண்டிய 'மகாராஜரும் சார்வபௌமரும்' வடமொழியைப் புறக்கணிக்காது தென்மொழியை ஆராய்ந்து உயர்த்திய செய்தி நன்ருக விளக்கப் படுகிறது.

சங்க காலத்து நிகழ்ச்சிகளை ஒழுங்காகவும் தீர்மானமாகவும் விளக்குவதற்குத் தக்க சான்றுகள் கிடைக்கவில்லை. அக்காலத்தைக் குறித்து நாம் சங்க நூல்களிலிருந்து எவ்வளவு தெரிந்துகொள்ளக் கூடுமோ அவ்வளவுடனே திருப்தியடைய வேண்டியதாயிருக்கிறது. இந்நூல்கள் பெரும்பாலும் சிறந்த பதிப்புக்களில் இப்போது நமக்குக் கிடைத்திருப்பது முக்கியமாய் மகாமஹோபாத்தியாயர் டாக்டர் உ. வே. சுவாமிநாத அய்யர் அவர்களுடைய விடா முயற்சியாலென்பது யாவரும் அறிந்த விஷயம். அவர்களுடைய புத்தகங்களில் சேர்த்திருக்கும் 'பாடினேர்வரலாறு' 'பாடப்பட்டோர் வரலாறு' என்ற பகுதிகள் அக்காலத்துச் சரித்திரத்தை ஆராய்வோர்க்கு இன்றியமையாத உதவி புரியும் கலங்கரை விளக்குகளாகும்.

மதுராபுரியில் சங்கம் வைத்தது ஆதிகாலப்பாண்டியர்களின் போற்றத்தக்க செயல்களில் ஒன்றென்பது சின்னமனூர் சாஸனம். இது கி. பி. ஒன்பதாம் நூற்ருண்டின் முடி

மைசூர் சந்தன ஸோப்

மைசூர் சந்தன ஸோப்

கவர்ன்மெண்ட் ஸோப் பாக்டரி,
பெங்களூர்.

வியோ, அல்லது பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ வரையப்பட்டது. இதில் முச்சங்கங்களைப் பற்றிய பேச்சே இல்லை. சிவபெருமான் பெயரால் வழங்கி வரும் களவியற் சூத்திரங்களுக்கு நக்கிரர் செய்ததாகச் சொல்லப்படும் உரையின் முதலில் முச்சங்கங்களைப் பற்றியுள்ள செய்திகளைச் சரித்திர நிகழ்ச்சிகளாக ஒப்புக்கொள்வது அரிது. இது எவ்வாறாயினும் சங்ககாலத்துப் பாண்டியரில் இருவரை நாம் இங்கே முக்கியமாகக் கவனிக்க வேண்டும். முதலாவது கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி. மேற்கூறிய இறையனார் களவியலுரையில் இவன் கடைச்சங்கத்தை நடத்திய நாற்பத்தொன்பது பாண்டியரில் கடைசியானவனாகக் குறிப்பிடப்படுகிறான். இவன் ஒரு பெருவீரன் என்பது இவன் பெயராலேயே விளங்கும். இவன் முன்னிலையில் திருக்குறள் அரங்கேற்றப்பட்டதென்பர்; இது உண்மையாயின் இதை மறுப்பதற்கு யாதொரு காரணமுமில்லை. இவன் பெருமையை யார் அளந்தறியவல்லவர்? தவிரவும் இவன் உருத்திரசன்மனைக் கொண்டு அகநானூறு தொகுப்பித்தான். இத்தொகை நூலில் இவன் பாடிய பாட்டும் ஒன்று உண்டாகையால் இவனைக் கவிகளை ஆதரித்தவனாக மட்டும் கொள்ளாமல் தானே கவித்திறமை வாய்ந்தவனாகவும் கருத வேண்டும். நாம் சற்று முன் குறிப்பிட்ட இரண்டு பாண்டியரில் மற்றவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன். இவன் சிறு பிராயத்திலேயே இப்பெரும் போரில் வெற்றியடைந்தான். சின்னமனூர் சாஸனம் இவன் வீரச்செயலை முற்காலத்துப் பாண்டியர் புரிந்த அதிசயங்களோடு சேர்த்துக் கூறுவது பின்வருமாறு:—

தலையாலங்கானத்தில்
 தன்னொக்கு மிருவேந்தரைக்
கொலைவாளில் தலைதுமித்துக்
 குறைத்தலையின் கூத்
  தொழித்தும்.

இவன் போருக்கு முன் கூறிய வஞ்சினப்பாட்டொன்று புறநானூறில் இருக்கிறது. இப்பாட்டு இவனது கவித்திறம் இவன் தோள் வலிக்குச் சமமானதென்று குறிப்பதோடு, இவன் பல புலவர்களை ஆதரித்தானென்பதையும் அவர்பால் இவனுக்குள்ள அன்பையும் அவர்கள் இவனைப்போற்றும் பெருமையைத்தான் எவ்வளவு பாராட்டினானென்பதையும் ஐயமற விளக்குகின்றது.

சிறுசொற் சொல்லிய
 சினங்கெழு வேந்தரை
யருஞ்சமஞ் சிதையத் தாக்கி
 முரசமொ
டொருங்ககப் படேஎ
 னாயின்......
....
ஓங்கிய சிறப்பி
 னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன்
 தலைவனாக
வுலகமொடு நிலை இய
 பலர் புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைக
 வென் னிலவரை—

அதாவது தன் பகையரசரைப் போரில் வென்று அவரவர் முரசத்தோடு அவரைத் தான் கைதிசெய்யாவிடில் கல்வியிற் பெரியரான மாங்குடி முதலான பெரும் புலவர்கள் தன்னைப் பாடாது தன்னாட்டெல்லையை விட்டு நீங்குக என்கிறான் இவ்வரசன். இவன் போரில் ஜயமடைந்தான்; மாங்குடி மருதனும் இவன்கூடவேயிருந்து இவன் புகழை நிலைநிறுத்துதற்கும் இவனுக்கு உயர்ந்த நல்லறிவு ஊட்டுதற்குமாகவே மதுரைக் காஞ்சியென்ற அரிய பெரிய பாட்டையும் பாடினான்.

சங்க காலத்து சேரவேந்தர்

இனிச்சங்க காலத்துச் சேர வேந்தர்கள் ஒவ்வொருவரும் பத்துப் பாடல்களில் தக்க புலவர்களால் போற்றப்பட்டார்கள்; பாடிய புலவர்கள் ஒவ்வொருவரும் விலை மிகுந்த பரிசுகளைப் பெற்றார்கள்; இவையெல்லாம் பதிற்றுப் பத்து என்னும் நூலின் பழைய உரையால் விளங்கும். எட்டுத் தொகையுள் மற்றொன்றாகிய ஐங்குறு நூற்றைத் தொகுப்பித்தோனும் ஒரு சேரனே. அவன் பெயர் யானைகட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை.

சோழ அரசர்கள்

அக்காலத்துச் சோழ அரசர்களுக்குள் கரிகாலனையும் செங்கணானையும் பற்றி அறியாதார் யாருமில்லை. கரிகாலனைப்பற்றிய கதைகள் பல. அவை இவன் வீரத்தையும் உதார குணத்தையும் பாராட்டுபவை. பத்துப் பாட்டிலுள்ள பொருநராற்றுப் படைக்கும் பட்டினப் பாலைக்கும் தலைவன் இவனே. பட்டினப் பாலை யாசிரியர் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பெற்ற பரிசு பதினாறு லட்சம் பொன்னென்பர். இதனை

'தழுவு செந்தமிழ்ப் பரிசில்
 வாணர் பொன்
பத்தொடாறு நூறாயிரம்
 பெறப்
பண்டு பட்டினப் பாலை
 கொண்டதும்'

என வரும் கலிங்கத்துப் பரணித் தொடரால் அறிக. சோழன் செங்கணான் ஒரு மகா சிவபக்தன். நாயனார்கள் அறுபத்து மூவருள் ஒருவன். இவனைத் திருமங்கை மன்னனும் 'இருக்கிலங்கு திருமொழி வாயெண்டோளீசற்கு, எழில் மாடம் எழுபது செய்து உலகமாண்ட' வளச்சோழன் என்று புகழ்ந்திருக்கிறார். இவ



நிகரற்ற தொனியுள்ளது!

நீடித்து உழைப்பது!!

ஸிம்ப்ளெக்ஸ்

டாக்கி மெஷீன்கள்

நீண்டகாலமாக உத்திரவாதத்துடன் உழைத்து
பல தியேட்டர் முதலாளிகளுக்கும்
பொது ஜனங்களுக்கும்
திருப்தியை அளித்
துள்ளன.

விவரங்களுக்கு :

The Central Talkie Equipment Co.,
Bharat Buildings, Mount Road, Madras.
Grams: "CENTAUTO" Phone: 86168.
Head Office: 48, CENTRAL AVENUE, SOUTH, CALCUTTA.
Branch: CHANDNI CHOWK, DELHI

னுக்குப் புலவர்கள்பால் உள்ள அன்பு இவன் காலத்து நிகழ்ச்சி ஒன்ருல் வெளியாகிறது. சேரமான் கணைக்கால் இரும்பொறை என்பானை இவன் வென்று சிறையிலிட்டான்; அப்போது அச்சேரனின் நண்பரான பொய்கையார் சோழன் மீது களவழி நாற்பது என்னும் நூலைப் பாடினர். அவன் அதற்கிரங்கி சேரனை விடுவித்தான். இச்செய்தி கலிங்கத்துப் பரணியிலும் மூவருலாவிலும் கூறப்பட்டிருக்கிறது.

சங்ககாலக் கடைசியில் சிற்றரசர் எழுவர் மிக்க கொடையாளிகளென்று பிரசித்தி பெற்றுர்கள். இவர்கள் பாரி, ஓரி, நள்ளி, எழினி, ஆய், பேகன், மலையன் என்பர். பாரியின் நண்பர் கபிலர். சுந்தரமூர்த்தி நாயனர் 'கொடுக்கிலாதானைப் பாரியேயென்று கூறினுங் கொடுப்பாரிலை' என்று பாடுதலால், பாரியின் கொடைத்திறம் எவ்வளவு சிறந்ததென்று ஊகிக்கலாம். பாரிக்குக் கபிலர் எப்படியோ, அதே மாதிரி எழினிக்குப் பரணர் என்னும் பெரும் புலவர் வாய்ந்திருந்தார். இந்த எழு வள்ளல்களுக்கும் காலத்தாற் சிறிது பிற்பட்டவனும் அவருக்குச் சமமான கொடையாளி என்று புலவரால் கருதப்பட்டவனுமாவான் முதிரமென்னும் மலைக்குத்தலைவனை குமணன். முதிரமலை இன்னதென்று விளங்கவில்லை.

சங்க காலத்திற்குப் பிறகு தமிழ் வளர்ச்சி

சங்க காலத்திற்குப் பிறகு சில நூற்றுண்டுகளுக்குத்தமிழிலக்கிய வளர்ச்சி அரசர்களையும் வேறு வள்ளல்களையும் எதிர்பார்க்கவில்லை. அக்காலத்தில் நாடு முழுதும் பவுத்த மதமும் சமண மதமும் பரவியிருந்தன. சைவ தவழக்கினுக்குவிரோதமான இம்மதங்களை அறவே ஒழிப்பதைப் பெருங் கருத்தாகக்கொண்ட ஒரு மதக் கிளர்ச்சி ஏற்பட்டது. பல அடியார்களும் ஆழ்வார்களும் ஊர் ஊராகச் சென்று புறச்சமயங்களைக் கண்டித்தும் சைவ வைணவ மதங்களின் உண்மைகளைத் தெளிவித்தும் ஆலயங்களைப் பதிகங்களும் பாசுரங்களும் பாடிப் புகழ்வித்தும் போந்தனர். இவைகளினின்று பிற்காலத்தில் தேர்ந்து தொகுக்கப்பட்டவைதாம் திருமுறைகளும் திவ்ய ப்ரபந்தமும். முதன் முதல் தேவாரங்களைத் தொகுத்துத்திரு முறைகளாக வகுத்த நம்பி ஆண்டார் நம்பியின் காலம் சோழவரசன் இராஜராஜன், அவன் மகன் இராஜேந்திரன் ஆகிய இருவருடைய ஆட்சிக் காலம் என்பது தெளிவு. இதற்குச் சற்று முன் நாத முனிகள் நாலாயிர திவ்ய ப்ரபந்தத்தைத்தொகுத்திருக்கலாமென்று தோன்றுகிறது.

தோலாமொழித்தேவர் என்னும் சமண கவி யியற்றிய ஒரு சிறந்த காவியம் சூளாமணி என்பது. இதன் பாசுரத்தால் இக்காவியம் துயமான் தமிழின் கிழவனுன நெடுஞ்சேந்தன் என்னும் அரசனது அவையில் அரங்கேற்றப்பட்டது என்று அறிகிருேம். இச்சேந்தனும் சுமார் கி. பி. 645 முதல் 670 வரை ஆண்ட பாண்டிய அரசன் சேந்தனும் ஒருவனே. இவன் பாண்டிய அரசன் மாறவர்மன் அவனி சூளாமணியின் மகன்.

அம்பர் கிழானுகிய சேந்தனென்னும் சிற்றரசன் திவாகர முனிவரைக்கொண்டு சேந்தன் திவாகரம் என்று வழங்கப்படும் ஒரு நிகண்டு நூலை எட்டாம் நூற்றுண்டில் இயற்றுவித்தான். சேந்தனும் ஒரு சிறந்த கவி. இவனுல் இயற்றப்பட்ட நூல்கள் அநேக மிருந்திருக்கவேண்டுமென்று திவாகரத்தின் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் உள்ள பாடல்களால் அறியலாம்.

பல்லவ அரசரின் தமிழ்த்தொண்டு

பல்லவ அரசரின் தமிழ்த் தொண்டுகள் பல. இவர்களில் விசேஷமாகத் தமிழை ஆதரித்தவன் தெள்ளாற்றெறிந்த நந்தி போத்தரையன் என்ற மூன்றும் நந்திவர்மன். இவன் காலம் ஒன்பதாம் நூற்றுண்டின் முற்பகுதி. இவனது வீரச்செயல்களும் உதாரகுணமும் தமிழார்வமும் வன்மையும் நந்திக் கலம்பகம் என்னும் நூலில் விரிவாகக் காணக்கிடக்கின்றன. பாரத வெண்பா பாடிய பெருந்தேவனர் இவன் காலத்தவர். இவர் சங்க நூல்களுக்குக் காப்புச்செய்த பாரதம் பாடிய பெருந்தேவனராகார். இவர் தம்மைப் பரிபாலித்த நந்திவர்மனை வாயாரப் புகழ்ந்திருக்கிருர்.

"வண்மையாற் கல்வியான்
மாபலத்தால் வினையா
லுண்மையாற் பாராளுரி
மையாற்-றிண்மையாற்
றேர்வேந்தர் வானேறத்
தெள்ளாற்றில் வென்ருனோ
டியார் வேந்த ரேற்பா
ரெதிர்"

தமிழ்நாட்டின் அரசமுறைகளும் நாகரிகமும் மிக்கஉன்னத நிலையை யடைந்தது விஜயாலயன் சந்ததியாரான சோழ சக்கிரவர்த்திகள் ஆண்ட காலம். அவர்கள் தமிழ்நாடு முழுமையையும் ஒரு குடைக்கீழ் நிறுவியது மட்டுமின்றி, தமிழரின் பெருமையையும் புகழையும் சீனு தேசம் முதல் அராபியாவரை பரவச் செய்த பேரரசர்கள். அவர்கள் காலத்தில் நூற்றுக்கணக்கான கோயில்கள் கல்லால் கட்டப்பட்டன. அவர்களது சாஸனங்களெல்லாம் உயர்ந்த தமிழ் நடையிலோ வடமொழியிலோ வரையப் பட்டிருக்கின்றன. அநேகமாக இனிய அகவற்பாக்களடங்கியவை. அவர்கள்

உங்கள் சௌந்தரியத்தைப் பிரதிபலிப்பவை

மைசூர் ஸில்க் புடவைகள்

அழகிய ஸ்திரீகள் அனைவரும் அணிய விரும்புவது மைசூர் ஸில்க்புடவைதான் —ஏனென்ருல் இப்புடவைகளை அணிந்தால்தான் அவர்களுக்கு நேர்த்தியாக ஆடை யணிந்த திருப்தி ஏற்படுகிறது.

மைசூர் ஸில்க் புடவைகள்

சுத்தமான பட்டு நூலைக்கொண்டே நெசவானவை. ஆர்ட்டிபிஷல் அல்லது அந்நிய சரக்குக் கலப்பில்லை என்பதற்கு - உத்தரவாதம்.

கவர்ன்மெண்ட் ஸில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.

ஸ்டாக்கிஸ்டுகள் :

1. மைசூர் கவர்ன்மெண்ட் ப்ராடக்ட்ஸ், 1-11, மவுண்ட்ரோட், மதராஸ்.
2. மைசூர் இண்டஸ்டிரீஸ், சாபல் ரோட், ஹைதராபாத், தக்காணம்.
3. மெஸர்ஸ் ஜேயத்முல் மிச்ரிலால் அண்டு கம்பெனி, கம்மர்ஷியல் ரோட், உதகமண்டலம்.
4. மைசூர் ஆர்ட்ஸ் அண்டு கிராப்ட்ஸ் டிபோ, 23, ஸவுத் பரேட், பங்களூர்.

பல பாவலர்களை ஆஸ்தான பண்டிதர்களாகவும் மற்றும் பல விதங்களிலும் ஆதரித்திருக்க வேண்டும் என்பது நிச்சயம். சாஸனங்களில் இப்போது வழக்கற்றுப்போன அநேக நூல்கள் குறிக்கப்படுகின்றன. இவைகள் ஒவ்வொன்றையும் இங்கே எடுத்துக் கூற இயலாது. இப்போது நமக்குக் கிடைத்திருக்கும் நூல்களில் அமிதசாகரர் என்ற சமண முனிவர் எழுதிய யாப்பருங்கலமும், அதன் சுருக்கமான யாப்பருங்கலக்காரிகையும், பவுத்தராகிய புத்தமித்திரர் எழுதிய வீரசோழியமும் இந்தக் காலத்தில் எழுதப்பெற்ற நூல்களே. 'மேவிய வெண் குடைச் செம்பியன் வீரராஜேந்திரன்றன் நாவியல் செந்தமிழ்ச் சொல்லின் மொழி' என்பது புத்தமித்திரர் வாக்கு. இதனால் நம்பி ஆண்டார் நம்பியை ஆதரித்துச் சைவம் தழைத்தோங்கச் செய்த இராஜ ராஜனது பேரனாகிய வீர ராஜேந்திரனுடைய கல்வி கேள்விகளும் கவிகள்பால் இவனுக்கிருந்த அன்பும் தெளிவாகும். சோழ சக்கரவர்த்திகள் காலத்தில் பவுத்தரும் சமணரும் அரிய நூல்களியற்றித் தமிழை வளர்க்க ஊக்கங் கொண்டது ஒரு வியப்பன்று; அரசர்கள் சைவர்களாயினும், பிற சமயங்களைத் துன்புறுத்தித் துரத்தவில்லை. பரம சைவனான இராஜராஜன் தான் கட்டிய தஞ்சைப் பெருங்கோயிலில் சில புத்த சிற்பங்களையும் அமைத்திருப்பதே இதற்குச் சான்றாகும்.

முதல் குலோத்துங்கன்

பதினோராம் நூற்றாண்டின் பிற்பாகத்தில் சோழ சக்கிரவர்த்திகளின் ஆண் வழி குன்றிப் போயிற்று. தெலுங்கு தேசமான வேங்கியில் வாழ்க்கைப்பட்ட பெண்களின் வழி வந்த முதற் குலோத்துங்கன் பட்டமடைந்தது கி. பி. 1070-ம் வருஷம். இவன்தான் முதல் முதல் தன் காலத்துக் கவிகளில் முதன்மை பெற்றோனைத் தேர்ந்தெடுத்து கவிச் சக்கரவர்த்தி என்ற பட்டங் கட்டும் வழக்கத்தை ஆரம்பித்தவன். கலிங்கத்துப் பரணி யாசிரியர் ஜயங்கொண்டாரே இவனால் இவ்வாறு போற்றப்பட்ட முதற் கவிச்சக்கரவர்த்தி. இவன் இவ்வாறு ஜயங்கொண்டார்க்குச் செய்தது பேருபகாரமாயிருந்திருப்பினும், அவர் இவனுக்குச் செய்த கைம்மாறு அதனினும் பதின்மடங்கு அதிகமென்றே கொள்ளவேண்டும். கலிங்கத்துப் பரணியால் குலோத்துங்கன் பெற்ற புகழ் வேறு ஒரு சோழசக்கரவர்த்தியும் பெறவில்லையென்றே கூறலாம். இப்பரணியின் பெருமையையும் அதன் தலைவன் பாக்கியத்தையும் அக்காலத்தவரும் நன்கறிந்தவர்களே. மற்றொரு கவிச் சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தன் 'பாடற் பெரும் பரணி தேடற் கருங்கவிகவிச் சக்கரவர்த்திபரவச்செஞ்சேவகஞ் செய்த சோழன்' என்று குலோத்துங்கனைப் பாராட்டியிருக்கிறார்.

குலோத்துங்கனுக்குப் பிறகு முறையே அவன் மகன் விக்ரம சோழனும், அவன் மகன் இரண்டாம் குலோத்துங்கனும், அவன் மகன் இரண்டாம் இராஜராஜனும் பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஆண்ட அரசர்கள். இம் மூவர் காலத்திலும் கவிச் சக்கரவர்த்தியாக விளங்கிய புலவர் பெருமான் ஒட்டக்கூத்தன். இவன் இம் மூன்று அரசர்கள் ஒவ்வொருவர் பேரிலும் ஒரு உலாப் பாடினான். குலோத்துங்கன் II மீது ஒரு பிள்ளைத் தமிழும் பாடினான். இப் பிள்ளைத் தமிழே இவன் நூல்களில் சொல் நயத்திலும் பொருள் நயத்திலும் மிகச் சிறந்தது. இவன் விக்கிரம சோழன்மீது ஒரு கலிங்கத்துப் பரணி பாடியிருந்ததாக இவனே இயற்றிய தக்கயாகப் பரணியின் தாழிசை ஒன்றிலும் அதன் உரையாலும் தெரிய வருகிறது; ஆனால் அந்தப் பரணி இப்போது கிடைக்கவில்லை.

இரண்டாம் குலோத்துங்கன்

இனி இரண்டாங் குலோத்துங்கன் காலத்தில் நடந்த நிகழ்ச்சிகள் சில இங்கு எடுத்துக் கூறவேண்டியது அவசியம். இவ்வரசன் சைவத்திற் பற்றுக் கொண்டதோடமையாது, வைஷ்ணவத்தில் வெறுப்புக் கொண்டவன். தில்லை நடராஜர் கோயிலைப் பொன் வேய்ந்தான்; ஆனால், அதே சமயத்தில் இவன் கோவிந்தராஜர் சந்நிதியை அழித்தான். இதைக் கூத்தர் இராசராச சோழன் உலாவில் வெகு சாதுர்யமாகப் பாடி அமைத்திருக்கிறார். அதாவது:

ஆளுடையான்
கோயிற்றிருக்காமக்
கோட்டமும் அக்கோயில்
வாயிற்றிருச்சுற்று
மாளிகையும்—தூயசெம்
பொன்னிற் குயிற்றிப்
புறம்பிற் குறும்பனைத்து
முன்னிற் கடலகழின்
மூழ்குவித்த—சென்னி.

இந்நெறி தவறின செய்கையை வேறிடங்களிலும் கூத்தர் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் இவன் செய்த இந்த அபசாரத்திற்குப் பிராயச்சித்தம் போலக் கொள்ளலாம் இவன் சேக்கிழாருக்குச் செய்த பெருமரியாதைகளை. உள்ளபடி நாம் உமாபதி சிவாசாரியா ரருளிச் செய்த சேக்கிழார் புராணக் கதையை உற்று நோக்கினால் இக் குலோத்துங்கன் வெகு காலம் மதப்பற்றொன்றுமின்றிச் சிற்றின்ப சுகங்களை

மனிதன் முதுமையில் சம்பாதிக்க இயலாது

இதை முன்னிட்டே அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு பென்ஷன் கொடுத்து உதவப்படுகிறது.

ஆனால் மற்றையோர்கள் என்ன செய்வது ?
எல்லோருமே சர்க்கார் வேலையிலிருக்க முடியுமா ?

இதற்கு சுலபமாக யாவரும் பென்ஷன் பெற ஒரு பிரத்தியேக மார்க்கம்

"இந்தியா லைப்" சொஸைடியில்

கண்டுபிடித்திருக்கிறார்கள்.

பென்ஷன் இன்வெஸ்ட்மெண்டு பத்திரம் ஒன்றுக்கு மனுப்போட்டு வாங்கி வைத்துக்கொள்ளுங்கள். வயோதிக காலத்தில்—சம்பாதிக்க சக்தி இல்லாத காலையில்—உறுதுணை. மாதா மாதம் பென்ஷன் பெறலாம்.

மற்றும் பல்வேறு 15 திட்டங்களின்கீழ் பாலிஸி அடையலாம்.

இதன் இரண்டாம் வருஷத்தில் மட்டும் ரூ. 11½ லக்ஷத்திற்கு பாலிஸி கொடுக்கப்பட்டுள்ளது.

முழு விவரங்களுக்கு :

இந்தியா லைப் பெனிபிட் அஷ்யூரென்ஸ் சொஸைடி லிமிடெட்,

தலைமை ஆபீஸ், கோயமுத்தூர்.

102/1, கிளைவ் தெரு, கல்கத்தா. அல்லது கிளைகள் : 26, பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை.

நாடிச், சிந்தாமணி போன்ற சிருங்காரச் சுவைமிகுந்த காவியங்களையே பயின்றுவந்தாக ஊகிக்கலாம்.

சேக்கிழாருடன் சேர்க்கை யேற்பட்ட பிறகே இவனுக்கு மத உணர்ச்சி புதிதாகத் தோன்றியிருக்கலாம். அப் புத்துணர்ச்சியின் வேகத்தால் சைவ மொன்றே உண்மை; மற்றதெல்லாம் பொய் என்ற தீர்மானத்தைப்பிடிவாதமாகக் கொண்டதே இவன் தில்லையில் வைணவத்திற்குச் செய்த தீங்கிற்குக் காரணமாயிருக்கலாம். இது எவ்வாறாயினும், இவன் சேக்கிழார் செய்த உபதேசத்திற்கிணங்கி, அவரைச் சிவனடியார்கள் கதைகளைத் 'தப்பில் பெருங்காவியமாய் விரித்துச் செய்து தருவீர்' என்று வேண்டி, அவர் தில்லையில் வசித்து அக்காவியம் இயற்றும் பொருட்டு 'செப்பரிய திரவியமும்' அவருக்கீந்தது தமிழ் நாட்டாரெல்லோரும் என்நாளும் புகழக் கூடிய செய்திகளே. சேக்கிழார் புராணஞ் செய்ய அமர்ந்தது முதல் அது முடியும் வரை சோழன் தூதரை அனுப்பி அவர் திரும்பி வந்து சொல்லும் செய்திகளை ஆவலுடன் கேட்டதும், புராணம் முடிந்த பின்பு அவன் தானே தில்லைக்குச் சென்று இப் பெரிய புராணம் வெகு விமரிசையாயரங்கேற்றப் படுவதற்காக அவன் செய்த ஏற்பாடுகளும், பிறவும் முற் கூறிய சேக்கிழார் புராணத்தைப் படித்தால் எளிதில் விளங்கும்.

புதுவா புரிச்சடையன்

ஒட்டக்கூத்தனுக்குப் பிற்கு கவிச் சக்கரவர்த்திப் பட்டம் பெற்றவன் கம்பன் என்பர். இவனை முதலில் ஆதரித்தவன் புதுவாபுரிச் சடையன். இவனுக்குத் திரிகர்த்தராயன் என்ற பட்டம் உண்டு. இவன் சாஸனங்களிலும் இலக்கிய நூல்களிலும் பெருங் கொடையாளியாகப் போற்றப்படுகிறான். இவன் நகரிலேயே கம்பர் தம் இராமாவதாரத்தைப் பாடி முடித்தாரென்பது அவர் வாக்கினாலேயே அறிகிறோம்.

இராமாவதாரப் பேர்த்
தொடை நிரம்பிய
தோமறுமாக்கதை
சடையன் வெண்ணெய்
நல்லூர் வயிற்றந்ததே.

சடையன்பால் கம்பருக்கிருந்த அன்புக்கு எல்லை கிடையாது; இராமன் மகுடாபிஷேக சமயத்தில் வசிட்டன் கையில் திருமுடி கொடுத்தவர் சடையன் முன்னோரெனவே கூறிவிட்டார்.

வெண்ணெய்நல்லூர்ச்
சடையன்றன்
மரபுளோர் கொடுக்க வாங்கி
வசிட்டனே புனைந்தான்
மௌலி.

இவ்வாறு சடையனைப் பலவாறாகப் போற்றிய கம்பர் தம் காலத்துச் சோழ அரசரைக் குறித்து இராமாயணத்தில் ஒன்றிரண்டிடங்களிலே பொதுவாகக் கூறிவிடுத்திருக்கிறார்.

'புவி புகழ் சென்னிபே
ரமலன்றோள் புகழ்
கவிகட மனையெலாக் கனக
ராசியும்'

எனப் பிலநீங்கு படலத்திலும்,

'சென்னிநாட்டெரியல் வீரன் தியாகமா விநோதன் தெய்வப் பொன்னி நாட்டுவமைவைப்பை' என்று மருத்துமலைப்படலத்திலும் உள்ள தொடர்கள் இங்கு ஆராயத்தக்கன.

விக்கிரம சோழனுக்குத் தியாக சமுத்திரம் என்றும் அகளங்கன் என்றும் பட்டங்கள் உண்டென்பது அவன் சாஸனங்களால் விளங்குகிறது. அவன் கீழ், திகத்தனென்ற சிற்றரசன் இருந்தான் என்று விக்கிரம சோழனுலாவால் அறிகிறோம். கம்பரால் குறிக்கப்பட்ட சென்னி பேரமலனும், தியாகமா விநோதனும் விக்கிரம சோழனாகவே இருக்கலாம்; அப்படியானால் அவனுக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசனான திகத்தனே சடையப்ப வள்ளலாகவுமிருக்கலாம். சோழ சக்ரவர்த்திகளைப்பற்றி, கம்பர் தம் காவியத்தில் விரிவாகப் புகழாத காரணப்பற்றியே பிற்காலத்தவர்கள் கம்பருக்கும் சோழவரசனுக்கும் விரோதமிருந்திருக்க வேண்டும் என்று கருதி அதற்கிசையப் பல கதைகளையுங் கட்டினரென்ன இடமுண்டு.

குமார குலோத்துங்கனைத் தலைவனாகக் கொண்டு குலோத்துங்கக் கோவை என்ற நூல் ஒன்றிருக்கிறது. இந்நூலுக்கு ஆசிரியர் யாரென்று விளங்கவில்லை. இக்கோவை கொண்ட குமார குலோத்துங்கன் சோழ சக்கரவர்த்தியான மூன்றுங்குலோத்துங்கனாக இருக்கலாமென்று ஊகிக்கச் சில காரணங்கள் உண்டு. இது எப்படியாயினும், மூன்றுங்குலோத்துங்கனும் ஒரு பெருந்தமிழபிமானி யென்பதற்கு அவனுடைய விரிவான சாஸனமெய்க்கீர்த்திகளே ஆதாரமாகும். இதே மாதிரி இவனுக்குப் பின் அரசுபுரிந்த மூன்றும் இராஜராஜனும், சில காலம் அவன் கீழ்ச்சிற்றரசனாயிருந்து, பின் அவனைச் சிறையிலிட்டுத் தானே சகல புவன சக்கரவர்த்தி என்று கோஷம் செய்த கோப்பெருஞ்சிங்கனும் தமிழ்க் கவிகளை மிகவும் ஆதரித்துவந்தார்கள். இதே காலத்தில் தான் வில்லிபுத்தூராரைப் பாரதம் பாடச்செய்த வரபதி ஆட்கொண்டான் திருமுனைப்பாடி நாட்டுச் சிற்றரசனாக விளங்கினன்.

சோழர் ஆதிக்கம் குன்றவே பாண்டியர் மறுபடி வலியுற்றுப் பதின்மூன்றாம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் ஏகாதிபத்தி

TEL: "KANAKAFILM."

இவ்வருஷத்திய பிலிம் தேர்தலில் முதல் பரிசு பெற்றதும், மிஸ் பசுபலேடி

கனகதாரா

கண்ணாம்பா, தோம்மட்டி சூரியநாராயணா, சிறுமி கமலகுமாரி, துர்காபிரஸாத் நடித்ததுமான

* கனகதாரா கனகதாரா * கனகதாரா *

கனகதாரா * கனகதாரா

கைவசம் இருக்கும் படங்கள். } விப்ரநாராயணா

கோத்தமங்கலம் சீனு
T. V. ராஜசுந்தரி
T. S. கிருஷ்ணவேணி
முதலியோர் நடித்தது.

Miss. Manorama, Divine Sacrifice, Thief of Iraque, Lure of the City, Rex & Rinty (Serial), Bring'em Back alive.

KANAKA FILMS LIMITED,
SALEM JUNCTION.

யார் ஆளாக்கினர்கள். இக்காலத்துப் பாண்டிய சாஸனங்கள் பெரும்பாலும் நல்ல சிறு காப்பியங்களாகக் கருதப்படும் தகுதியுள்ளன. நம்பியகப் பொருளும், அதிற் கூறப்பட்ட துறைகளுக்கு முறையே உதாரணங்களமைத்துச் செல்லும் தஞ்சை வாணன் கோவையும் பாண்டியன் மாறவர்மன் குலசேகரன் (கி. பி. 1260—1308) காலத்து நூல்களாகும்.

கிருஷ்ணதேவ மகாராயர்

பதினைந்தாம் நூற்றாண்டு முதல் சுமார் பதினேழாம் நூற்றாண்டு வரை விஜய நகரத்தைத் தலைநகராகக் கொண்ட தெலுங்க சாம்ராஜ்யம் பிறந்து, வளர்ந்து, சில காலம் செழித்தோங்கிப் பின் தலை சாய்ந்த காலம். விஜயநகர சக்கரவர்த்திகளுக்குள் மிகவும் பிரசித்தி பெற்றவர் கிருஷ்ணதேவ மஹாராயர் (1509—29). இவரது போர் வீரமும் அரசாட்சி வன்மையும் உலகெல்லாம் போற்றத்தக்கதாகப் பிரகாசித்தன. இவர் வடமொழியையும் தெலுங்கையும் கசடறக் கற்ற மகா வித்துவான். இவர் உயர்ந்த தெலுங்கு நடையில் ஆண்டாள் சரித்திரத்தை 'ஆமுக்த மால்யத' (அதாவது சூடிக்கொடுத்த நாச்சியார்) என்ற நூலில் தெலுங்கு தேசத்தாரறியும் வண்ணம் விவரித்திருக்கிறார். இவரது ஆஸ்தானத்தில் அநேக சம்ஸ்கிருத கவிகளும் தெலுங்கு கவிகளும் ஆதரிக்கப்பட்டுவந்தார்கள். இவர்களில் மிகப் பிரசித்தி பெற்றவர் அல்லசானி பெத்தன. கிருஷ்ணராயர் தாம் தமிழ் நாடு முழுதும் ஆளும் உரிமைபற்றித் தமிழையும் நன்றாகப் போற்றிவந்தாரென்பதற்கு அக்காலத்துத் தமிழ்க்கவிகளின் கூற்றுக்களே சாட்சியாகும். ராயர் ஒட்ர தேசத்தை வென்று அந்நாட்டரசன் மகளை மணந்தபோது அவனுடனிருந்த குமார சரசுவதி என்னும் தமிழ்ப் புலவர் பாடின இனிய சிலேடை வெண்பாவொன்று தமிழ் நாவலர் சரிதையில் தொகுக்கப்பட்டிருக்கிறது. அதாவது.

கலிங்க மிழந்து நுதிக்
கைச்சங்கந் தோற்று
மெலிந்து கடகந் நழுவ
விட்டாள்—மலிந்த மலர்ப்
பொன்னிட்ட மானக்ருஷ்ண
பூபாலா வுன்றனக்குப்
பின்னிட்ட வொட்டியன்
போற் பெண்.

இன்னும் நிகண்டு சூடாமணியை இயற்றிய மண்டல புருஷரும் கொடை மடம் என்ற சொல்லுக்குப் பொருள் கூறுமிடத்து இவன் பெருவீரத்தையும் வண்மையையும் புகழ்கிறார்.

படை மடக்குற்ற போதும்
படைமட மொன்றிலாதான்
மடைசெறி கடகத்தோளான்
மதிக்குடை மன்னர்
மன்னன்
கொடிமன்னர் வணங்குந்
தாளான் கிருட்டிண
ராயன் கைபோற்
கொடை மட மென்பதம்ம
வரையாது கொடுத்தலாமே.

இனி, கச்சியில் அக்காலத்தில் வதிந்த ஞானப்ரகாசர் என்னுங் குருக்கள் கச்சிக் கலம்பகமொன்றும், 'ஞானப்ரகாசப் புகழ்க்கிருஷ்ண ராயர்க்கு மஞ்சரிப்பா' ஒன்றும் செய்தாரென்பது தொண்டை மண்டல சதகச் செய்யுளினால் அறிகிறோம். இன்னும் கிருஷ்ணதேவராயர் இரு சமய விளக்கம் என்னும் அரிய சமய நூலை இயற்றிய அரிதாசரை ஆதரித்தாரென்பதும், அவர் நூலின் பாயிரத்தால் தெளிவாகின்றது.

கிரி போல்விளங்கிக் கிளரும்
புயக்கிட்டணராயர்
தரைமீது சிங்காதத்திரிபிற்
சயத்தம்ப நாட்டு
வரமாத ரவாலளித்தே
வட கூவ மேவும்
கருமா மணிவண்ணனை
நீடு கருத்துள் வைப்பாம்.

தீபாவளியை உத்தேசித்து

முற்றிலும் புதிய ரகங்கள்! **விலை நயம்!!**

தற்காலத்திய நவநாகரீகத்துடன் உயர்ந்த பிளேச்சர் பட்டுக்களிலும், ஜரிகையிலும் ஸ்பெஷலாய் எங்களுக்கென்றே தயார்செய்து வருகிற காச்சி பூக் கொடி வேலைசெய்த சுதேசிப் பட்டாடைகளும், பல கலர் பட்டுச் சேலைகளும், வெண் பட்டு, வேஷ்டி உத்தரீயங்களும், நூல் சேலைகளும் எங்களிடத்தில் மலிவாகக் கிடைக்கும். (N. B.) வெளியூர் ஆர்டர்களை உடனுக்குடன் நேரில் கவனித்து நல்ல உருப்படிகளாக V. P. மூலமாய் அனுப்பப்படும்.

V. N. சுப்பிரமணியய்யர்,
ஜவுளி வியாபாரம்,
41, **"Mani Bavanam"**
பெரிய தெரு, கும்பகோணம்.

கும்பகோணம் பாங்கி, லிமிடெட், கும்பகோணம்.

(1904-ம் ஞு ஸ்தாபிக்கப்பட்டது)

தலைமை ஆபீஸ்: பெரிய தெரு. **கிளை ஆபீஸ்கள்:** மன்னார்குடி & நாகப்பட்டணம்.
லோகல் ஸப் ஆபீஸ்: யானையடி ரோடு. **ஸப் ஆபீஸ்கள்:** நன்னிலம் & அய்யம்பேட்டை.

எல்லாவிதமான பாங்கி அலுவல்களும் நடத்தப்படும்.

30-6-38 எடுத்த கோஷ்பாரா.

சொத்துக்கள், இருப்புகள்		மூலதனம், செல்லுகள்	
செலுத்தப்பட்ட பங்குத் தொகைகள்	2,82,575—0—0	தங்க இட்டுக் கடன்கள் ...	4,46,072—2—11
காப்புநிதி (ரிசர்வு பண்டு) ...	1,54,718—8—10	மற்ற பொறுமான ஜாமீன் உள்ள கடன்கள் ...	5,83,275—5—11
கண்டின்ஜண்டு பண்டு ...	63,838—0—0	இதர கடன்களும், உண்டியல்களும்	7,03,222—11—11
தவணை, நடப்பு, ஸேவிங்ஸ், முதலிய டிபாஸிட்டுகள்	15,94,901—7—6	சர்க்கார் கடன் பத்திரங்கள் ...	2,67,646—1—6
இதர செல்லுகள்	1,20,919—4—7	சொத்துக்கள் சாமான்கள் வகையரா	77,654—14—9
மற்ற இனங்கள்	31,559—2—5	இதர இனங்கள்	24,187—11—0
அரை வருஷ நிகர லாபம்	24,213—4—1	கையிருப்பு இதர பாங்கிகளில் இருப்பு	1,70,665—11—5
மொத்தம் ...	22,72,724—11—5	மொத்தம் ...	22,72,724—11—5

V. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், B. A., B. L., பிரஸிடெண்ட்.
M. K. வைத்தியநாதய்யர், B. A., B. L., வைஸ் பிரஸிடெண்டு.
S. மஹாலிங்கய்யர், B. A., B. L., மானேஜிங் டைரக்டர்.

பிராயோபவேசமும் தீப்பாய்தலும்

—[*]—

(யூனிவர்ஸிடி தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவய்யங்கார்)

தாம் நினைத்த காரியம் நிறைவேறச் செய்யும் பிரதிக்ஞையிலும், குறித்த கருமந் தவறிய விடத்தும், அதிக்கிரமங்கள் நடந்தபோதும், மான பங்கமுற்ற காலத்தும் துக்க மிகுதியிலும் உலகை வெறுத்துத் தம் உடலை பொறுத்து உயிர்விடுதலாகிய மகா விரதங்கள் முன்னோரும் பின்னோருமாகிய நன் மக்கள் பலராலும் நடத்தப்பெற்று வந்தன. இவற்றைப் "பிராயோபவேசம், அக்கினிப் பிரவேசம் என்பர் வடநூலார், இக்காலத்து மேன்மக்களால் நடத்தப்பெற்ற ஸத்தியாக்ரகம் இப்பிராயோபவேச முறைகளுள் ஒன்றேயாகும். இவ்விரதங்களைக் கடைப்பிடித்துத் தாம் குறித்த கருமத்தைச் சாதிக்க முயன்ற உத்தமர்கள் பலருடைய சரித்திரங்கள் வடநூல்களிலும் தமிழ் நூல்களிலும் பலவாகக் கேட்கப்படுகின்றன. ஸ்ரீ ராமபிரான் தம் தேவியை மீட்பதற்குத் தடையாக இடை நின்ற சமுத்திரத்தைத் சேனைகளுடன் கடக்க விரும்பி, வருணபகவானை வழி வேண்டி, தரையிலே தருப்பைப் புற்களைப் பரப்பிப் படுத்தவண்ணம் தாம் குறித்த காரியம் நிறைவேறப் பிராயோபவேசத்தை மேற்கொண்டார் என்ற சரித்திரம் மிகப் பிரசித்தமானது.

"தருண மங்கையை மீட்ப
 தோர் நெறிதரு கென்னும்
பொருண யந்துநன் னூனெறி
 யடுக்கிய புல்லில்
கருணை யங்கடல் கிடந்தனன்
 கருங்கட னோக்கி
வருண மந்திர மெண்ணினன்
 விதிமுறை வணங்கி"

என்றார் கம்பரும்.

ஸ்ரீராமபிரானது தரிசனத்தை எதிர்பார்த்திருந்த வேட்டுவப் பெண்ணான சபரியும், முனிவராகிய சரபங்கரும், அப்பிரானை நேரில் தரிசிக்கப்பெற்றபின், நினைத்த நோக்கம் நிறைவேறப்பெற்றவர்களாய், அப்பெருமான் திரு முன்பே அக்கினியிற் பிரவேசித்து நற்கதியடைந்த வரலாறுகளும் இங்கே குறிப்பிடத் தக்கன.

இவ்வாறே குறித்த நோக்கம் கைகூடாவிடத்தும் இம்முறைகள் மேற்கொள்ளப்பட்டன. சுக்கிரீவன் ஆணைப்படி, சீதாபிராட்டியைத் தேடிவருதற்குப் பரிவாரங்களுடன் சென்ற அங்கதன், எங்கும் தேடியும் அப்பிராட்டியுள்ளவிடம் தெரியாமையால் திரும்பிச் சுக்ரீவனிடஞ் செல்ல மனமிசையாமல், தன் இனத்தாரோடும் "தண்ணீர் குடித்துவிட்டுப் பூமியில் தென்முகமாகப் பரப்பிய தருப்பைப் புற்களில் கிழக்கு நோக்கி இருந்துகொண்டு" உயிர்போம் வரை உண்ணாவிரதம் பூணத் துணிந்தான் என்று வால்மீகி பகவான் கூறுகின்றார். இத்தகைய மகாவிரதம் தமிழ் நாட்டாராலும் முற்காலத்தில் அனுஷ்டிக்கப்பட்டதேயாகும். இதனை 'வடக்கிருத்தல்' என்பர் தமிழ்முன்னோர். தாமுள்ள ஊருக்கு வடதிசையிற் சென்று அமர்ந்து இந்நோன்பை மேற்கொள்ளுதல் மரபென்பது, இச்சொல் வழக்கிலிருந்து தோற்றுகின்றது. இராமபிரானது பிரிவுக்கு ஆற்றாத அயோத்யா நகரத்து ஜனங்கள்—'நாம் இவ்விடத்தே உபவாசத்தால் உயிரைவிடுவோம்; இல்லையேல், கீழே விழுந்து இறக்கும் வரை வடதிசை நோக்கிச் சென்றுகொண்டிருத்தலாகிய மகாப் பிரஸ்தான விரதத்தை மேற்கொள்வோம்' என்று சொல்லியதாக வால்மீகி முனிவர் கூறுவர். இதனால், ஓரிடத்துத் தங்கி உண்ணாமலே நோற்பதும், நடந்து சென்றுகொண்டே அவ்வாறு நோற்பதுமாகிய இருவகையாலும், உயிர்போம் வரை நிகழ்த்தப்பட்டு வந்தது இம் மகா விரதம் என்பது தெரியலாம். இவற்றுள் பிற்

SATISFACTION GUARANTEED.

சந்திரா பௌண்டன் பேனுக்கள்

(Best British Make) (Regd No. 3242)

உறுதியான 14 ct தங்க நிப்புகளுடன் கூடியது. 25 வருஷம் கியாரண்டியுள்ள இருடியம் துவைத்தது. பலவித மாடல்களில் அழகான கலர்களில் கிடைக்கும்.

விலைகள்:

ரூ. 2-0-0 2-4-0 2-14-0 3-2-0
5-0-0 & 5-8-0

Sole Importer:

K. RAGAVENDRA RAO,
Chandra Vilas, KUMBAKONAM.

கேட்லாக் வேண்டுபவர்களுக்கு தபால் மூலமாய் அனுப்பப்படும்.

WE CAN ARRANGE FOR DEMONSTRATION ON APPLICATION

"His Master's Voice"

"ஹிஸ்மாஸ்டர்ஸ்வாய்ஸ்"
புதிய ரேடியோ மாடல்கள்

உலகில் நடக்கும் அதிசயங்களை, சங்கீதக் கச்சேரிகளைக் கேட்கக்கூடிய அமைப்புகளுடைய ரேடியோக்கள் சரசமான விலைக்குக்கிடைக்கும்.

பப்ளிக் அட்ரஸ் எக்குப்மெண்ட்டு
Public Address Equipment

மேற்படி ஒலிபரப்பும் கருவி, கல்யாண காலங்களில் சங்கீதக் கச்சேரிகளுக்கும், பொதுக் கூட்டங்களுக்கும் குறைந்த வாடகைக்கு எப்பொழுதும் கிடைக்கும்.

எங்களிடம் கிராமபோன்கள், ரிகார்டுகள், வெஸ்ட்டு எண்டு, பேவர் லூபா கம்பெனி கடிகாரங்கள், மூக்குக் கண்ணாடிகள், தையல் மிஷின்கள், ஹார்மோனியம், பிடில், ஸ்ருதிப்பெட்டிகள் இன்னும் அநேக சாமான்கள் எப்பொழுதும் விலை நயமாய் கிடைக்கும்.

ரேடியோ ரிசீவர்கள், ஆம்பிளிபையர், லௌடுஸ்பீகர் வகையராக்கள் தகுந்த இஞ்சினியரைக்கொண்டு குறைந்த சார்ஜில் ரிபேர் செய்து தரப்படும்.

A. V. லக்ஷ்மிநாராயண செட்டி,
"மியூஸிகல் ஹால்" 34, பெரியதெரு,
கும்பகோணம்.

ரேடியோவை பரிக்ஷார்த்தமாய் கேட்க வேண்டிக்கொள்ளின் பேரில் செய்யப்படும்.

கூறிய முறையைப் 'பிராயோபகமனம்' என்பர் வடநூலார். இதனை அனுஷ்டித்துத் தம் உயிர் துறந்தோர் பஞ்ச பாண்டவர்கள் என்பது யாவரும் அறிவர். உத்தம கருமங்கள் செய்வதற்குரிய புண்ணியத் திசை வடக்காதலால் இவ்விரதங்களுக்கும் அதுவே உரியதாயிற்று எனலாம். இவ்வாறு வட திசையில் ஓரிடத்திருந்து தம் உயிர் போம்வரை நோற்ற தமிழ்ப் பெருமக்கள்—பெருஞ் சேரலாதன், கோப்பெருஞ் சோழன் என்ற வேந்தர்களும், பிசிராந்தையார், பொத்தியார், கபிலர் என்ற புலவர்களும் ஆவர். இவரெல்லாம் சங்க காலத்துப் பெருமக்களே. இவர்களிலே, பெருஞ் சேரலாதன், சோழன் கரிகாலனோடு புரிந்த பெரும் போரில், பகைவெறிந்த ஆயுதம் தன் முதுகிற் பட்டுப் புண் உண்டாக்க, அதற்குப் பெரிதும் நாணி இவ்விரதம் பூண்டவன். கோப்பெருஞ் சோழன், தன்னொடு பகைத்த தன் மக்களிருவருடனும் போர்க்கெழுந்தபோது, புலவர் பெருந்தகையொருவரால் சமாதானஞ் செய்யப்பட்டு உலகியலையே வெறுத்துத் தன்னரசைத் துறந்து வடக்கிருப்பானாயினன். அச்சோழனுக்குப்பெருநட்பினராயிருந்த பிசிராந்தையும் பொத்தியாரும், அவன் பிரிவுக்கு ஆற்றாமல் இவ்விரதம் பூண்டனர். கபிலர் என்ற புலவர் பெருமான் தம் உயிர் நண்பனான வேள்பாரி என்ற வள்ளலிறந்ததும் அவனில்லாத உலகத்தை வெறுத்து வடக்கிருந்தார்.

வடக்கிருத்தலாகிய இம் மகா விரதத்தை மேற்கொள்வோர், பெரிய நதிகளின் இடையேயுள்ள சிறு திட்டுக்களில் மரத்தின்கீழ்த் தங்கிப் பட்டினி நோன்பால் உடலை ஒறுத்து வந்தவர் என்பது—'உள்ளாற்றுக் கவலைப் புள்ளி நீழல், முழூஉ வள்ளூரம் உணக்கும் மள்ள' என்ற புறநானூற்றடிகளால் புலப்படுகின்றது. ஜைன முனிவர்கள் நற்கதியடைதல் வேண்டித் தம் இறுதிக்காலத்திலே பிறர் செல்லற்கரிய மலைப் பாழி (குகை)களில் தங்கி, இத்தகைய கொடிய விரதத்தைமேற்கொண்டு உயிர் நீத்துவந்தனர். இது 'ஸல்லேகனை' 'அநசன விரதம்' எனப்படும். இன்னோர் தங்கிநோற்ற அப்பாழிகளிலே 'ஐம்பத்தேழு நாள் அநசனம் நோற்ற சந்திரநந்தி ஆசிரிகர் நிசிதிகை' என்பதுபோல வரையப்பட்ட கல்லெழுத்துக்கள் பலவற்றைக் காணலாகும். தென்னார்க்காட்டு ஸ்ரீமுஷ்ணம் என்ற ஸ்தலத்துக்கு அடுத்துள்ள காட்டில், விரிசடைராமன் என்பவர், முதலாம் வேங்கடபதிராயர் என்ற விஜயநகர வேந்தர் காலத்தில் 18-மாத காலம் ஊணுறக்கமின்றி நோற்றுத் தாம் குறித்த காரியம் சித்திக்கப் பெற்றார்—என்ற வரலாறு சிலையெழுத்தில் தீட்டப்பட்டுள்ளது. (MER 251 of 1916). இவரெல்லாம் தாம் நினைத்த கருமங்கை கூடும் கருத்துப்பற்றியோ அது நிறைவேறாமைபற்றியோ இம்மகா விரதம் பூண்டோராவர்.

இனி, அதிக்கிரமங்கள் நடந்தவிடத்து, அதனைச் சகியாமல் கொடிய வழியால் உயிர் நீத்தவரும் உண்டு. திரிசூல வேளைக்காரர் என்ற ஒரு சாரார் சிவாலய நிலங்களைக் கைப்பற்றிய சிலர்மேல் வழக்கிட்டு, அவர் செய்த அநீதியை மெய்ப்பிக்க வேண்டித் தீப்பாய்ந்து தம் உயிர் நீத்த செய்தி சாஸன மூலம் தெரியவருகின்றது. (M E R. 1925, P. 25). இவ்வாறே, கோபுர முதலியவற்றினின்று குதித்துப் பிறர் புரிந்த அநீதிகளை உலகிற் பிரசித்தஞ் செய்தவர்களும் உண்டு. இவரெல்லாம் பொது நன்மையின் பொருட்டு உயிர் துறந்தவராதலால், இன்னோர்பொருட்டு அறங்கள் செய்தும் 'ரத்தக் காணிக்கை' என்று அவர் வழியினர்க்கு மானியமளித்தும் பின்னோர்கள் பெரிதும் கௌரவித்துவந்த செய்தியையும் அச்சாஸனங்களே கூறும். தாம் குறித்த காதலியை அடையவேண்டிச் செய்வதாகக் கூறப்படும் மடலேறுதல் வரைபாய்தல் போன்றவைகளும் கடுமையான முறையேயாயினும், உத்தேசியத்தின் சிறுமையால் அவை கௌரவிக்கப்படவில்லை.

கபிலர் அக்னிப் பிரவேசம்

இனி, துக்க மிகுதியிலும் உடல் துறக்கும் இம்முறைகள் அனுஷ்டிக்கப்பட்டன. தம் ஆருயிரனைய அன்பர்களையோ, கணவர்களையோ இழக்கநேர்ந்த துன்பத்துக்கு ஆற்றாமல் கொடியவிரதம்பூண்டு உயிர் நீத்த ஆண்மக்களும் பெண்மக்களும் பலர் உளர். அத்தகைய ஆண்பாலாருள், முன்னோரான கபிலரையும் பின்னோரான பொய்யாமொழிப்புலவரையும் இங்கே சிறப்பாகக் குறிப்பிடல் தகும். தம்மோடு வேற்றுமையற்றுப் பழகிய தம் இன்னுயிர் நண்பனும் வள்ளலுமாகிய வேள்பாரி இறந்ததும், தாம் தனித்து வாழவிரும்பாத கபிலர், அவன் மகளிரை நல்வாழ்க்கைப்படுத்துவதற்கு வேண்டியவற்றையெல்லாஞ் செய்துவிட்டு—''இடையில் காட்சி நின்னோடு, உடனுறை வாக்குக உயர்ந்த பாலே' என்று அவனுறவை ஊழானதுமறுபடியும் கூட்டுவதாக என்று கூறி, வடக்கிருந்தனர். இவர் வடக்கிருந்தமுறை, தீப்பாய்ந்து உயிர்துறந்த செயலாகும். இச்செயல், திருக்கோவலூர்ப் பெண்ணையாற்றங்கரைப் பாறையொன்றில் நடந்ததென்றும், அதனால், அப்பாறை 'கபிலக்கல்' என வழங்-

காந்தி ஜோஸியர்

உண்மையான பலன்

இனி நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. உடன் நமக்கு எழுதினால் எதிர்காலப்பலன்களை மாதவாரியாகவோ, வாராந்திரமாகவோ எழுதி அனுப்பிவைக்கிறோம். எதிர்கால சம்பந்தமான ஆருடக் கேள்விகளுக்கும் உண்மையான பதில் அனுப்புகிறோம். ஆரோக்கியம், தொழிலில் ஏற்படும் பலன், குடும்பம், பணம், வழி பிரயாணம், பந்து, மித்திரர், காதல், அதிகாரி, விவகாரம் இவைகளில் ஏற்படும் நன்மை அல்லது தீமை, லாட்டரி, ரேஸ் வருமானம் அல்லது நஷ்டம், அதிருஷ்ட கிழமைகள், நிறம், எண், துரதிருஷ்ட கிழமைகள் மற்றும் பல முக்கிய விஷயங்களையும், அதற்கான பரிகாரங்களையும் எழுதி அனுப்பிவைக்கிறோம்.

N. B:—ஜாதக நகல் அல்லது ஜனனகால விவரம் இது இல்லாதவர்கள் முழுப்பெயர், சுமார் வயது, தொழில், கடிதம் எழுதும் போதுள்ள நேரம் இவைகளைக் குறிப்பிடவேண்டும்.

சார்ஜ் விவரம்.

ஒரு வருஷப் பலன் மாதவாரி எழுத	ரூ.	3	0	0
ஐந்து வருஷங்களுக்கு மாதவாரி எழுத	ரூ.	12	8	0
ஒரு வருஷம் வாராந்திர பலன் எழுத	ரூ.	10	0	0
ஆருடம் 5 கேள்விகளுக்கு பதில் எழுத	ரூ.	1	0	0
மேல் ஒவ்வொரு கேள்விக்கும்	ரூ.	0	4	0
வி. பி. செலவு	ரூ	0	5	0

பத்திரிகை அபிப்பிராயம்.

சென்னை பிரபல தேசியத் தமிழ் தினசரி ''சுதேசமித்திரன்'' 30—1—1937-ல் எழுதுவதாவது:—

''காந்தி ஜோஸ்யர்''

''காந்தி ஜோஸ்யர்'' என அழைக்கப்பட்டுவரும் திருத்தணிகை ஹனுமத் உபாஸி ஸ்ரீமான் வி. கே. சடகோபாச்சாரியாரை மித்திரன் நேயர்களுக்கு அறிமுகப்படுத்தவேண்டியதில்லை. சென்ற 15 வருஷங்களாக அவரது ஜோதிஷப் புலமையைப்பற்றி அவர்கள் அறிந்திருக்கிறார்கள். சில வருஷங்களுக்கு முன்பு மகாத்மா காந்தியின் விடுதலை தினத்தைப்பற்றிச் சரியாக ஜோஸ்யம் கூறியதிலிருந்து மேற்படியாரின் புகழ் எங்கும் பரவ வாரம்பித்தது. இப்பொழுது டி புகழ் உலகெங்கும் வியாபிக்கக்கூடிய நிகழ்ச்சி நேரிட்டுள்ளது. சமீபத்தில் அமெரிக்காவில் பிரஸிடெண்ட் தேர்தல் நடந்ததல்லவா? அதில் ரூஸ்வெல்ட் ஜெயமடைவார் என்று ஸ்ரீமான் ஆச்சாரியார் ஜோஸ்யம் கூறியது பலித்துவிட்டது. இந்த நிகழ்ச்சி ஸ்ரீமான் சடகோபாச்சாரின் அபார ஜோதிஷத் திறமையை நன்கு நிதர்சனமாக்குகிறது. தனி நபர்களுக்குப் பலன்கள் கூறுவதில் ஏற்கனவே புகழுடன் விளங்கும் ஸ்ரீமான் ஆச்சாரியார் இப்போது உலகப்பிரச்னைகளிலும் தமது ஞானத்தை ஈடுபடுத்தி வெற்றியைக் கண்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

'' ஜனவாணி ''

'' ஜனவாணி '' சென்னை தெலுங்கு பிரபல தினசரி 23—2—1937-ல் எழுதுவதாவது:—

'' காந்தி ஜோஸியரின் சோதிடப் பிரபாவம் ''

ஏற்கெனவே மகாத்மா காந்தியின் விடுதலையைக் குறித்து முன்னதாகத் தெரிவித்து ''காந்தி ஜோஸிய''ரென்று புகழ்பெற்ற திருத்தணி ஹனுமத் உபாஸி வி. கே. சடகோபாச்சாரியாரவர்களின் ஜோதிடத் திறமை, அனைவருக்கும் தெரிந்தவிஷயமே. இவர் சமீபத்தில் அமெரிக்கத் தலைவர் தேர்தலில் ரூஸ்வெல்ட் அவர்கள் ஜெயிப்பாரென்று தேர்தலுக்கு ஐந்து மாதங்கள் முன்னதாக பத்திரிகைகள் மூலம் வெளியிட்டார். இன்னார் கூறியபடியே ரூஸ்வெல்ட் அவர்கள் ஜயமடைந்துவிட்டார். ஆகையால் சடகோபாச்சாரியாரவர்களுக்கு இந்தியாவிலே அல்லாமல், தேசாந்திரங்களிலும் புகழ் ஏற்பட்டது. இவர் இவ்விதமாகவே தனிப்பட்டவர்களுக்குக் கூறும் சோதிடம் தவறாமல் பலிக்கிறது. இன்னாரின் சாமர்த்தியத்தைப்பற்றி எவ்வளவு புகழினும் ஆச்சர்யமில்லை. இவரது உண்மைக்கு உலகம் புகழ்வதே பிரபல அத்தாக்ஷியாகும். எதிர்காலத்தைப்பற்றிக் கவலைபற்றிருப்போர், ஆச்சாரியாரவர்களைக் கலந்தாலோசித்தால், எல்லா விஷயங்களிலும் உண்மையைத் தெரிந்துகொண்டு பயனடையும்படி, எமது வாசகர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

வி. பி. அனுப்புவது அல்லது மணியார்டர் செய்திருந்தால் குறிப்பிட்டு உங்கள் விலாசத்தைத் தெளிவாக எழுதவும்.

ஹநுமத் உபாஸி,

வி. கே. சடகோபாச்சாரியார்,

ஹனுமான் ஜோதிஷ ஆச்ரமம், திருத்தணி, S. இந்தியா.

புத்தமத குரு மத போதனை செய்வதான ஒரு சிலை. கும்பகோணம் நாகேஸ்வர ஸ்வாமி கோவிலில் இது காணப்படுகிறது. பல்லவர்காலத்தில் இக்கோவில் விஸ்தரிக்கப்பட்டது. இந்தச் சிலை யேற்பட்டு 1100 வருஷங்களாவதாகக் கருதப்படுகிறது. எ. ஜே. பி.

கப்பட்டதென்றும் சாஸன மொன்றால் அறியப்படுகின்றது. 'பசைந்தாரிற் றீர்தலில் தீப்புகுதல் நன்று' என்றபடி, அக்கினிப் பிரவேசஞ் செய்த கபிலர் போலவே, பிற்காலத்தில் நடத்திக் காட்டிய புலவர் பெருந்தகை, பொய்யாமொழியார் என்பார். தம் உயிர்நண்பனாக வாழ்ந்த சீநக்கன் என்ற வள்ளல் இறக்கவும் அவன் பிரிவைத் தாங்காமல், அவனுடலைக் கிடத்திய ஈமத்தீயின் முன் நின்று—

''அன்றுநீ செல்லக் கட
வென்றாய் யாருயிர் விட்,
டின்றுநீ வானுலக மெய்தி
னாய்—நன்றுநன்று, மாநக்க
பூணாத மாரனே தென்னர
சூர்ச்சீ, நக்கா செல்லக் கட
என்று, தனக்கும் அவன்

சிறிது இடங்கொடுக்கும்படி கூறித்தீப்பாய்ந்து உயிர்துறந்தனர். இப்பாடல் சம்பந்தமான அழகிய சரித்திரமொன்று உண்டு.

பொய்யா மொழியார் தீப்பாய்ந்தது

பொய்யாமொழியார் ஒருநாளிரவு சீநக்கனுடன் அவன் படுக்கைக் கட்டிலில் இருந்துகொண்டே நெடு நேரம் பேசிக்கொண்டிருந்த போது, அவசரகாரிய மொன்றன் பொருட்டுச் சீநக்கன் சிறிது வெளியே சென்று வர நேர்ந்தது. அப்போது, அவன் விரைவில் காரியத்தை முடித்துக்கொண்டு வந்துவிடுவதாகப் புலவர்க்குச் சொல்லி அவரை அங்கே இருக்கச் செய்துவிட்டுக் குறித்த காரியத்தின்மேல் சென்றான். சென்ற காரியம் அவனை நெடு நேரம் அங்கே தாழ்க்கும்படி செய்துவிட்டது. அயர்ச்சிமிகுதியால், புலவரும் அக்கட்டிலிலே படுத்து உறங்கிவிட்டனர். சீநக்கன்தேவி நேரமானமையால் வழக்கம்போல அப்படுக்கைக் கட்டிற்கு வந்து, தூங்குபவர் புலவரென்பது தெரியாதே அருகிற் படுத்து உறங்குவாளாயினள். வெளிச் சென்ற சீநக்கன் காரியத்தை முடித்துக்கொண்டு தன் படுக்கையருகு வந்து நோக்கவும், அறியாது தன் தேவி புலவரண்டை படுத்துறங்குவது கண்டு முறுவலித்துச் சந்தடி செய்யாமல் புலவரைத் தொட்டுச் 'சிறிது விலகுதிர், நானும் பக்கத்திற் படுக்க' என்று மெல்லக் கூறினன். புலவர் சீநக்கனது குரல்கேட்டதும் திடுக்கென்று எழுந்திருந்து அருகே நோக்கவும், தேவி தன் பக்கத்து உறங்குதலைக் கண்டு மனங்கலங்கித் திகைக்கலானார். தவறாக நடந்த நிகழ்ச்சியைச் சீநக்கன் தெளிந்தவனாதலால், அதனைப் பொருட்படுத்தாமல் அவரையும் துயிலுணர்ந்த தன் மனைவியையும் தேற்றி, அவர்களிடம் முன்னிலும் அதிகமான அன்பு பாராட்டி ஒழுகி வந்தனன்—என்பதே அவ்வரலாறு. இம்முன்னிகழ்ச்சியைக் கருத்துட்கொண்டே 'அன்று நீ செல்லக்கடவென்றாய்...இன்று நீ செல்லக் கட' என்று, ஈமக்கிடக்கையில் அவன்பால் இடம்வேண்டிப் பாடினர் இப்புலவர் பெருமான் என்பர்.

உத்தம பத்தினிகள் வரலாறு

இவ்வாறு, ஆண்மக்களே, தம் இன்னுயிர் நண்பரைப் பிரிந்தவிடத்து ஆற்றாமல் உயிர் துறந்தவராயின், அத்தகைய அரும்பெறற் கணவரைப் பிரிந்த உத்தம பத்தினிகள் இதுபோலுஞ் செய்கைகளைப் புரிதல் அருமையோ? தம் நாயகர்க்குப் பின் கைம்மை விரதங்கொண்டு உயிர்வாழ ஒருப்படாது, தம் கணவருடன் சககமனஞ்செய்த பதிவிரதா சிரோமணிகள் நம் நாட்டில் எத்தனையோ பேர் உளர். சங்க நூல்களிலும் சாஸன முதலியவற்றிலும், இத்தகைப் பெண்மணிகளின் செய்திகள்சில அருமையாகக் காணப்படுகின்றன. சங்க காலத்தே, பூதப்பாண்டியன் என்ற பிரபல வேந்தனுடைய பட்டமகிஷி அரிய கற்பும் பெரிய புலமையும் வாய்ந்தவள். அவள் தன் கணவனிறந்ததும் உயிர் வாழ விரும்பாமல் அவனுடன் தீப்பாயத் துணிந்தாள் என்றும், அப்போது சான்றோர் பலர் அவள் செய்கையைத் தடுத்து, வேண்டிய தருமங்களைக் கூறியும் கேட்காமல் அவர்களையெல்லாம் வெறுத்து

''பல்சான்றீரே பல்சான்றீரே
செல்கெனச் சொல்லாது

இந்தியத் தொழிற்சாலையை
ஆதரியுங்கள்

இந்தியகைத்தொழில்

இந்தியமூலதனம்

கைதேர்ந்த இந்தியத்தொழிலாளர்களால் நேர்த்தியான, மனோரம்மியமான இனிப்புள்ள பலவித பெப்ரமெண்டுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. பல கண்காக்ஷி சாலைகளில் தங்க மெடல்களும் தேசியத் தலைவர்களாலும் அநேக கனதனவான்களாலும் நற்சாக்ஷி அபிப்ராயம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு முறை வாங்கி உண்மை அறியுங்கள்.

Apply to:

The Southern India Confectionery Factory, Kumbakonam.

Managing Proprietors:

V. S. & SONS.

ஸ்தாபிதம் உ 1902

சாரதா விலாஸ பிரஸ் &

வைதிகவர்த்தினீ புஸ்தகசாலை,

91, ஸ்ரீ சக்ரபாணி ஸ்வாமி தெற்கு வீதி,

கும்பகோணம். (தென் இந்தியா).

நம்முடைய சாரதா விலாஸ அச்சுக்கூடத்தில் தேவநாகரம், கிரந்தம், தமிழ், இங்கிலீஷ் எழுத்துக்களில் எவ்வித வேலைகளும், ரூலிங், பைண்டிங் முதலிய வேலைகளும் நன்றாயும் காலதாமதமன்றியும் குறைந்த சார்ஜுக்கு செய்து கொடுக்கப்படும்.

கார்டு போர்டு பெட்டிகள் வெகு அழகாகவும் சுத்தமாகவும் தயார் செய்து கொடுக்கப்படும்.

எங்களுடைய வைதிகவர்த்தனீ புஸ்தகசாலையில் கிரந்தாக்ஷரத்தில் அச்சடப்பட்ட தைத்திரீய ஸம்ஹிதை முதலிய யஜுர்வேத கிரந்தங்களும், யஜுர்வேத லக்ஷணங்களும், தர்ம சாஸ்த்ர கிரந்தங்களும், பூர்வாபர ப்ரயோகங்களும், பாராயண புஸ்தகங்களும், ஸ்தோத்ரங்களும், ஸஹஸ்ர நாமங்களும், காவ்யஙகளும், ஜ்யோதிஷ, நாடக, அலங்கார, சம்பூ கிரந்தங்களும், பாலர்களுக்கு வேண்டிய புஸ்தகங்களும் கிடைக்கும்.

தவிர, நாகராக்ஷரத்தில் தைத்திரீய ஸம்ஹிதாபத பாடமும், ருத்ர சமகாதிகளும், ஸஹஸ்ர நாமங்களும், கல்பாத்தி, ஸ்ரீரங்கம், மதராஸ், புனா, பம்பாய், காசி முதலான இடங்களில் அச்சிடப்பட்ட எல்லாப் புஸதகங்களும் கிரமமான விலைக்குக் கிடைக்கும். எங்கள் புஸ்தக கேட்லாக்குக்கு எழுதவும்.

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்.

(டிம்மி 8-பேஜ் சைஸில் நல்ல கிளேஸ் பேபரில் 1260-பக்கங்கள் கொண்டது.)

ஸப்த காண்டங்களும் மூலம் மட்டில் கிரந்தாக்ஷரத்தில் (2-வால்யும்); எங்கள் சொந்தப் பதிப்பு விலை ரூ 7—0—0. ஸ்வல்ப காபிகளே கைவச மிருப்பதால் தேவைக்கு உடனே ஆர்டர் அனுப்பக் கோருகிறோம். போஸ்டேஜ் வகையறா அனுப்பும் செலவு தனி.

புரொப்ரைட்டர்ஸ்:

M. A. V. அனந்தராம சாஸ்த்ரி & பிரதர்.

ஒழிகென விலக்குய்
பொல்லாச் சூழ்ச்சிப்
பல் சான்றீரே

* * * *

பெருங்காட்டுப் பண்ணிய
கடுங்கோட் டீமம்
நுமக்கரி தாகுக தில்ல
எமக்கெம்
பெருந்தோட் கணவன்
மாய்ந்தென அரும்பற
வள்ளித ழவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையும்
தீயும் ஓரற்றே''

என்று கூறி அக்கினிப் பிரவேசஞ் செய்தாள் என்றும் புறநானூறு கூறுகின்றது. உலகிற்கு உபகாரிகளாகவும் பேரறிஞராகவும் உள்ள உத்தம பத்தினியர் இவ்வாறு உயிர்விடத் துணியுமிடத்துப் பெரியோர் பலர் முன்வந்து அது செய்ய வொட்டாமல் தகையக் கூடியதேயாம். வீர ராஜேந்திர சோழன் காலத்துச் சாஸனமொன்றில், பத்தினியொருத்தி உடன்கட்டை ஏறப் போவதைத் தடுத்து நின்ற சிலர் பொருட்டு அவள் கூறிய கடிய சூளுறவுகள் வரையப்பட்டுள்ளமை (MER. 1907 P. 63) காணலாம். பூதப்பாண்டியன் தேவிபோலவே, சககமனஞ் செய்த இராஜபத்தினிகள் பிற்காலத்தில் எத்தனையோ பேர்கள் நம் நாட்டில் உண்டு. சாஸனங்களிலும் அப்பத்தினிகள் சிலர் குறிப்பிடப் பட்டுள்ளார். இரண்டாம் பராந்தக சோழன் தேவியும் இராஜராஜ சோழன் தாயுமாகிய வானவன் மாதேவி என்பாள், அவ்விராஜராஜன் இளஞ் சிசுவாயிருந்தபோது, தன் கணவன் இறக்கவும் அதற்காற்றுமல், பால்குடி மறவாத தன் ஏக புத்திரனையும் நோக்காதே கணவனுடன் தீப்பாய்ந்து உயர் துறந்தனள். இவ்வரிய பெரிய செயலை—

''செந்திரு மடந்தை மன்
சீராச ராசன் (எனும்)
புலியைப் பயந்த
பொன்மான் கலியைக்
கரந்து கரவாக்
காரிகை சுரந்த
முலைமகப் பிரிந்தும்
முழங்கெரி நடுவணுந்
தலைமகற் பிரியாத்
தையல்''

என்று திருக்கோவலூர்ச் சாஸனம் புகழ்கின்றது. இவ்வாறே, முதற் பராந்தக சோழன் காலத்து விளங்கிய சாமந்தனும் கொடும்பாளூர்த் தலைவனுமாகிய இளங்கோவேளாரின் மனைவி கங்கமாதேவி என்பாள், தன் கணவனுடன் தீப்புகுந்தவள் என்பது அல்லூர்ச் சாஸனத்தால் அறியப் படும் (M E R. 376 of 1904). அதனில் 'கங்கமா தேவியார் தீப்பாய்கின்றார்'' 20 பொன் கழஞ்சு திருநந்த(விளக்கின் பொருட்டு ஷெ ஊர்ச் சிவபிரானுக்குத் தானஞ் செய்தாளென்று கூறப்பட்டுளது. இதனால், சககமனஞ் செய்யுமுன் கோயில் முதலியவற்றுக்குத் தானம் வழங்கி உயிர் நீத்தல் மரபு என்பது தெரியலாம். இது, கணவனுடன் செல்வதற்காக மகிழ்ந்து செய்யும் யாத்ராதானம் போன்றது என்பது அவர்கள் கருத்துப் போலும். ''வெற்றிலை தின்று பூட்டிப் பூச்சூடித் தீப்பாய்வாரைப்போலே சிரிக்கிறார்'' (திருமாலை வ்யாக். பக். 114) என்று ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை எழுதிய வாக்கிய பந்தியால், அக்கினிப் பிரவேச காலத்தில் தங்கணவருடன் செல்வதாகவே கருதிக் குதுகலத்தோடு அதனிற் குதித்து உயிர் விட்டவர்கள் இப்பத்தினிப் பெண்டிர் என்பது தெரியலாம். இவ்வாறு ஆண்பாலாரும் பெண்பாலாரும் தம் ஆருயிர் நண்பரையோ, அரும் பெறற் கணவரையோ மறுமையினும் அடைந்து வாழ்தலை வேண்டி இத்தகைய கடிய முறைகளை அனுஷ்டித்தவராதலால், பிராயோபவேசம்போல இதனையும் விரதமாகவே கொள்ளத்தகும். இங்ஙனந் தீப்பாய்ந்த பெண்மணிகளின் திருவுருவங்களைச் சிலையில் வகுத்துக் கோயிலிற் பிரதிஷ்டித்துப் பின்னோர் வணங்கி வந்தனர். பத்தினி தேவியாகிய கண்ணகி, இவ்வாறே சேரன் செங்குட்டுவன் முதலிய பெருமக்களால் வழிபடப் பட்ட செய்தி நம்மவரெல்லாம் நன்கறிவர். இப்பத்தினிதேவி தன் கணவனிறந்தபின் தீப்பாய்ந்து உயிர் துறந்தவளில்லையேனும், மகாப் பிரஸ்தானம் போன்ற முறையால் உடலை நீத்து, விண்ணுலகம் சென்றவள் என்பது அவள் சரிதத்தால் தெரியலாம். இத்தகைய உத்தமபத்தினியர்க்கு வகுக்கப் பட்ட உருவங்கள் மாஸ்திகல் (மஹாஸதிக்கல்) எனக் கன்னட நாட்டிலும், நடுகல், பத்தினிக்கல் எனத் தமிழ் நாட்டிலும் வழங்கப்படுகின்றன.

இதுவரை கூறி வந்தவற்றால், உத்தம தர்மங்களையும் நோக்கங்களையும் கொண்டு முன்னோர் கடைப்பிடித்தொழுகிய பிராயோபவேச அக்கினிப் பிரவேச முறைகள் இன்னவை என்பது ஒருபடியாகத் தெரிந்து கொள்ளலாம். நம்காலத்தில் சத்தியாக்கிரகம் என்ற கடிய விரதத்தால் தாம் குறித்த காரியத்தைச் சாதிக்க முயன்று உயிர் நீத்தவர்களும் நீக்க முயன்றவர்களும் பலர் என்பதை அறிவோம். புனிதத் தன்மைபற்றி இம்முறையைப் போற்றிப் புகழும் இக்காலத்தார்க்கு, மேற்கூறிய மகாவிரதங்கள் அரசாங்கத்தாரால் கடியப் பட்டனவாயினும், பரிசுத்தம் வாய்ந்தவை என்றே தோன்றும் என்பது திண்ணம்.

—

AMBI'S CAFE

No. 6, BROADWAY.

Hotel & Restaurant.

Branch : Boarding & Lodging House, No. 9/8, Broadway, Madras.

உயர்ந்த போஜனமும்!
அன்பான உபசரிப்பு!
சிறந்த ஆரோக்கியம்!

சென்னையில் சௌகரியமாய் தங்குமிடம்.



மனோகரமானது!
வசீகரமானது!
மனதுக்குகந்தது!

விசாலமான — இடவசதி — காற்றோட்டம்
ஸ்திரிகளுக்கும், குடும்பத்துக்கும் பிரத்தியேகமான வசதிகள் உண்டு.

வந்து பாருங்கள்! திருப்தி நிச்சயம்!

அம்பி'ஸ் காபே

தலைமை ஆபீஸ் : **No. 10, Barracks, Midan Road, Vellore.**

இந்தியன் பாங்கி லிமிடெட்

(ஸ்தாபிதம் 1907)

தலைமை ஆபீஸ் : மதராஸ் வடக்கு பீச் ரோட்.

உள்ளூர் ஆபீஸ்கள்

எஸ்பிளனேட்,	பிராட்வே.
திருவல்லிக்கேணி,	பெரியதெரு.
மைலாப்பூர்,	வடக்குமாடத் தெரு.
தியாகராய நகர்,	பிரகாசம் ரோட்.
புரசைவாக்கம்,	புரசைவாக்கம் ஹைரோட்.

பிராஞ்சுகள்

அடோனி, ஆலப்புழை, பெங்களூர், பேங்களூர் கண்டோன்மெண்ட், பெஜவாடா, பம்பாய, கொச்சி, கோயமுத்தூர், கொழும்பு, ஈரோட், குண்டூர், ஜாப்னு, காரைக்குடி, மதுரை, நந்தியால், புதுக்கோட்டை, கொல்லம், சேலம், திருப்பூர் திருவாரூர், திருச்சூர், திருச்சிறுப்பள்ளி. தூத்துக்குடி.

ஸப் ஆபீஸ்கள்

குடிவாடா, தெனலி, பீமாவரம், ரேப்பள்ளி, தனுகு, துக்கிரலா, நரசராவ்பேட்டை, உடுமலைப்பேட்டை

இந்தியாவிலும பர்மாவிலும் மற்றும் இதர முக்கிய நகரங்களிலும் ஏஜண்டுகளிருக்கின்றனர்.

லண்டன் & நியூயார்க் ஏஜண்டுகள்:

நாஷனல் ஸிடி பாங்கி ஆப் நியூயார்க்.

வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ.	47,92,800.
கேட்டு, செலுத்தப்பட்ட மூலதனம்	,,	12,79,280.
ரிஸர்வ் & இதர நிதிகள்	,,	17,76,148.
பாங்கிதாரர்கள் செலுத்தவேண்டிய தொகை	,,	35,13,520.
30—6—38உயுள்ள வேலை செய்வதற்குள்ள நிதி		4,44,03,799.

வெளிநாட்டு எக்சேஞ்ச் உள்பட சகலவித பாங்கி அலுவல்களும் கவனிக்கப்படும்.

வியாபார நிபந்தனைகள் மற்றுமுள்ள விவரங்களுக்கு எந்த ஆபீஸிற்காவது விண்ணப்பித்துக்கொள்ளவும்.

N. கோபால அய்யர்,
காரியதரிசி.

மொழி ஆராய்ச்சி

எஸ். வையாபுரி பிள்ளை, பி.எ., பி.எல்.

(தமிழாராய்ச்சித் துறைத் தலைவர், சென்னை சர்வகலாசாலை)

மொழி யாராய்ச்சி எல்லாத் தேசங்களிலும், எல்லா மொழிகளிலும் உள்ளதொன்றே. பல நூற்றாண்டுகட்கு முன்னர் வாழ்ந்த ஓர் எகிப்து அரசன் 'மக்கள் முதன் முதற் பேசிய மொழி யாது' என்றதைக் குறித்து ஒரு விநோதமான ஆராய்ச்சி செய்தானாம். குழந்தையொன்றை அது பிறந்தவுடன் காட்டிற்கு அனுப்பி, அதை ஊமையும் செவிடுமாயுள்ளவர்களைக்கொண்டு உணவூட்டி வளர்த்தான். வாலிபனாக அக்குழந்தை வளரும் வரை மக்கள் பேச்சொலி யொன்றும் அது கேட்காத வண்ணம் பாதுகாத்து வந்தான். குழந்தையோடு விளையாடுவதற்குக்கூட வெகு காலமாக எதையும் அனுமதிக்கவில்லை. கடைசியாகச் சிறிது கருணை பிறந்து அதனோடு விளையாட ஓர் ஆட்டுக் குட்டியை அனுப்பினான். இந்த ஆராய்ச்சியின் முடிவைத் தெரிதற்கு ஒரு தினம் குறிக்கப்பட்டது. அன்று அரசன் கொலு மண்டபத்திலே வீற்றிருந்தான். அவனைச் சூழ அவனுடைய மந்திரி முதலானவர்கள் எழுதுகருவிகளோடு எதிர்பார்த்தவண்ணமாயிருந்தார்கள். மக்கள் முதன் முதற் பேசிய மொழி இக்குழந்தை-மனிதன் வாயிலிருந்து வெளி வந்தவுடன் குறித்துக்கொள்ள வேண்டாமா! ஆனால் அந்தக் குழந்தை-மனிதன் 'பாஅஅ' என்று சத்தமிட்டதுடன் நின்றுவிட்டான்! இந்தச் சொல் எந்தப் பாஷையைச் சார்ந்ததென்பதைப்பற்றி மொழியாராய்ச்சியாளர்களுக்கிடையில் நீண்ட காலமாகப் பெரும் போர் நடந்து வந்தது!

இதைப்போல எத்தனையோ ஆராய்ச்சிகள் மேல் நாடுகளில் பதினெட்டாம் நூற்றாண்டு முடிய நிகழ்ந்துகொண்டிருந்தன. அக்காலத்திற்குப் பின்பு மேலதுபோன்ற வழியைவிட்டு சரியான வழிகளில் இவ்வாராய்ச்சி பிரவேசிக்கத் தொடங்கிவிட்டது. அதற்கப்புறந்தான் மொழியாராய்ச்சியும் ஒரு கௌரவ ஸ்தானத்தைப் பெற்றது.

மற்றை நாடுகளில் இவ்வகை ஆராய்ச்சிக்கு ஒரு கௌரவம் எற்படவே, நமது நாட்டிலும் இவ்வாராய்ச்சி செய்யத்தொடங்கினார்கள். மொழிகளின் தத்வம்பற்றிப் பலவகையான ஆராய்ச்சிகள் செய்ய இடமுண்டு. அவற்றுளெல்லாம் சொற்பிறப்பு அல்லது வியுத்பத்திபற்றிய ஆராய்ச்சியே ஆநந்தத்தை விளைவிக்கக்கூடியதாகவுள்ளது. இச்சொல்லாராய்ச்சியை நமது நாட்டு அறிஞர்கள் எவ்வாறு நிகழ்த்தி வந்திருக்கிறார்கள் என்பதைப் பார்ப்போம்.

முதலில் தமிழ்ச்சொற்களெல்லாம் எங்கிருந்து தோன்றினவென்னும் கேள்வி மொழியாராய்ச்சிக்காரர்களுடைய மனத்தில் உறுத்திக்கொண்டேயிருந்தது. இக் கேள்விக்குரிய விடையைப் பலரும் பலவாறாகக் கூறினர்.

'உலகத்துக்குச் சூரியனே கண்; எல்லாச் சொற்களுக்கும் சுல் என்பதே கண்; எல்லாப் பொருளும் சூரியனாலேயுண்டாகின்றன; எல்லாச் சொற்களும் சுல் என்பதனாலே உண்டாகின்றன' என்பது ஒரு கொள்கை. இக்கொள்கையைத் தமிழ்ப்பண்டிதர் மாகறல்-கார்த்திகேய முதலியாரவர்கள் தமது 'மொழி நூல்' என்ற புஸ்தகத்தில் (இலக். பக்63) 1913-ம் ஆண்டில் வெளியிட்டார்கள். 'சுல்' எவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டதெனின், சூரியனது வெப்பமான கிரணமானது ஒருவன் மேனியிலே படும்போது வெப்பத்தைத் தாங்கமாட்டாது சுரீரெனச் சொல்லுகிறான். 'சுல்' என்பது சுரீரெனத் திரிந்தது என்பர் (பக். 61).

இந்த முடிபு வேதாந்த சாஸ்திர முடிபோடு மிகவும் பொருத்தமாயுள்ளதை எளிதிலே உணரலாம். உலகத்துள்ள எல்லாப்பொருள்களும் ஒரே பொருளின் தோற்றங்கள். இதைப்போலவே தமிழ் மொழிச் சொற்களெல்லாம் சுல் என்ற ஒரே தாதுவினின்றும் பிறந்தனவென்று கொள்ளுதல் எத்தனை திருப்திகரமாயிருக்கிறது!

ஆனால் சைவ சித்தாந்திகளும் பிறரும்வேதாந்த முடிபை ஒப்புக்கொள்வது முடியாதல்லவா? அதுபோல இந்த 'சுல்' முடிபும் அதன் ஆசிரியரைத் தவிர வேறொருவரும் ஒப்புக்கொண்டதாகத் தெரியவில்லை. மற்றை மொழியாராய்ச்சியாளர்களுள் ஒருவர் தமிழ்ச்



பம்பாயிலுள்ள மகா லக்ஷ்மி கோவில்.

பற்களைப் பிடுங்காமல் சொஸ்தம் செய்ய முடியும்.! [உடைந்துபோன பல் செட்டுகள் ரிபேர் செய்ய முடியும்.
மிகவும் குறைந்த சார்ஜுகள்.
T. B. சீதாராம்,
பெரிய தெரு, கும்பகோணம்.
சாம்பல், சாக், கலந்த பற்பொடிகளினால் பல் துலக்கிப் பிறகு அவஸ்தைப்படாதீர்கள்.

சொற்கள் அனைத்தும் அண்மை, சேய்மை, கீழுறல், மேலுறல், எனும் இடச் சம்பந்தம்பற்றியே பிறந்தன; இவ்விடச்சார்புகளை முறையே அ, இ, உ, எ, என்ற உயிரெழுத்துக்கள் உணர்த்தும்; இவ்வுயிரெழுத்துக்களே தமிழ்ச் சொற்களுக்கு மூலம் என்பர்.

இக்கொள்கையை விளக்கி 'தமிழ்ச் சொற் பிறப்பாராய்ச்சி' என்ற ஓரரிய நூலை 1932-ல் வெளியிட்டுள்ளார். குரங்கு என்ற சொல்லை யெடுத்துக்கொண்டு அது இடச்சார்பு பற்றித் தோன்றியவரலாற்றையும் விவரித்திருக்கிறார். (பக். 9) "குர-ங்கு எனுஞ் சொல் கொடு-கு எனுஞ்சொல்லின் மரூஉ; கொடு-குதலே குடங்-குதல் குரங்-குதல் என வருவன; கொடு-கு என்பது குட-கு என்பதன் மரூஉ; குடகுச் சொற்கு உற்பத்தி குழையென்பது; குழைதல் உலைதலினின்றும் தோற்றுவது; உலைதல் உள் விழுந்து விழுந்து வருதலாம். வளைதலும் அது; இவ்வாறாக உள் எனுஞ் சொல்லே 'குழைதல்' 'குடங்குதல்' 'குரங்குதல்' என நின்று வளைந்து குடங்கிய மேனியையுடைய மிருகத்தைக் குறிக்கும்" என்பர்.

மக்களுக்கு மூலமான குரங்கின் தோற்றத்திற்குச் சமமாகத்தானே தமிழ் மக்கள் பேசுஞ் சொற்களும் இருத்தல் வேண்டும்! இந்த ஆசிரியர் லத்தீன் கிரீக் முதலிய மொழிகளையும் கற்றவர்கள். சமீபத்தில் தமது அரிய ஆராய்ச்சி முடிவுகளை உட்புகுத்தி ஓர் அருமையான 'சொற்பிறப்பு-ஒப்பியல் தமிழ் அகராதி' என்ற அகராதி எழுதியிருக்கிறார்கள். அதன் பகுதி யொன்று இவ்வருஷத்தில் வெளியிடப்பெற்றிருக்கிறது.

இன்னொரு ஆராய்ச்சியாளர் சொல்வதைப் பாருங்கள். 'மனிதனுக்குப் பூமியே முக்கியமானது; ஆதலால் பூமியும் அதன் பல பகுதிகளும் அதினின்றும் தோன்றுவனவுமே அவனால் முதன் முதற் பெயரிடப்பட்டன; இப்பெயர்கள் ஓரசைச் சொற்களாகவே இருத்தல் வேண்டும்; இவ்வோரசைச் சொற்களும் மிகச் சிலவாகவே ஆதியில் இருத்தல் கூடும்; இவையே தமிழ் நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்கள்; இவ்வெழுத்துக்களோடு முன்னும் பின்னும் ஆய்தத்தைச் சேர்த்தும், இவற்றை இவ்விரண்டாகவும் மும்மூன்றாகவும் புணர்க்கும் முறைகளிலெல்லாம் புணர்த்தும், சொற்களைப் பெருக்கினர்' என்றும் இவர் கூறுவர். அன்றியும் ஆங்கிலோ-ஸாக்ஸன் மொழிக்கும் தமிழ் மொழிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டென்பதும் இவர் கொள்கை. இக்கொள்கைகளைவிவரித்துஆங்கிலத்தில், (Dravidian Researches-Stra; Hints on a Comparative Study of the Ancient Dravidian Language and People and Their Relation to Others') என்ற பெயரிட்டு ஒரு நூல் 1935-ல் வெளியிட்டுள்ளார். அதிலே 30-ம் பக்கத்திலே கொடுக்கப்பட்டுள்ள சொல் வியுத்பத்தியொன்று இங்கே எடுத்துக் காட்டத் தக்கது. 'த அல்லது தஃ என்பது பூமி அல்லது அதன் பகுதியை புணர்த்தும்; தஃக அல்லது தக்கன் என்பது மக்களைத் தோற்றுவித்த ஆதி புருஷர்களிலொருவரை புணர்த்தும்; இந்தத் 'தக்க' என்பது ஆங்க்லோ ஸாக்ஸன் 'த்யூக்' ப்ரெஞ்சு 'துக்' லத்தீன் 'துக்ஸ்' இத்தாலியன் தோகெ (Doge) என்பனவும் தொடர்புடையன வென்று எண்ண இடமுண்டு. தக்காணம் என்பது தக்கனது நாடு என்பதாகலாம். தரை (இறுகிய பூமி) என்பதும் ஆங்கிலம் எர்த்' (Earth), லத்தீன்தெர்ரா (Terra) என்பவையும் ஒன்று; தரணி = பூமி = நாடு = யமபூமி; இதனோடு துரேனியன் என்பதை ஒப்பிடுக; தரையிடம் = ஒருநாடு = தரவிடம்—திராவிடம் திராவிடர்களுக்குரிய நாடு; தரி அல்லது தரிசு = விளை நிலமல்லாத பூமி; தரிதாம் = சாகுபடி செய்யாத பூமி; தரிதரம் அல்லது தரித்திரம் = பூமி விளைவற்றுப் போவதால் ஏற்படும் வறுமை; தஃ அல்லது தா = கொடு; இது முதலில் பூமி தானத்தைக் குறித்தது; லத்தீன் டேட்டம் (Datom) என்பதை ஒப்பிடுக. தம் என்ற சொல்லிறுதி = உரிமைப் பூமி என்பதை புணர்த்தும். ஆங்கிலத்தில் ட்யூக்டம் (Dukedam) என்பதிலுள்ள 'டம்' என்பதனோடு ஒப்பிடுக'

இந்த மொழியாராய்ச்சியில் ஆய்தம் பலவாறு பயன்படுவதைக் காணலாம். ஆய்தத்தின் உபயோகத்தை நன்றாக வுணர்ந்த பிற்பாடுதான் அது எத்தனை சிறந்த ஆயுதமென்பது நமக்கு விளங்கும்.

மேற் குறித்த ஆராய்ச்சிகளில் தமிழ்ச் சொற்களின் பிறப்பிடம் சூரியன் என ஒருவரும், இடச்சார்பு அல்லது திசை யென ஒருவரும், பூமியென ஒருவரும் கூறுதல் காணலாம். இக்கூற்றுக்களுள் எது உண்மையென்பதை ஆராய்தல் இவர்களின் சகோதரர்களான ஏனைய மொழியாராய்ச்சிப் புலவர்களுக்குரிய கடமையாகும். இப்புலவர்கள் ஆராய்ந்து முடிவுகட்டிக் கொள்ளும்படி இவ்விஷயத்தை விட்டுவிட்டு, வேறொருவகையான மொழியாராய்ச்சியைக் கவனிப்போம். தமிழ்ச் சொற்களுக்குத் தாது அல்லது பிறப்பிடம் ஒன்றாகத்தான் இருக்க வேண்டுமென்ற கொள்கையை இவ்விரண்டாவது வகை ஆராய்ச்சியாளர் கொள்ள

வார்டன்

அதிசயிக்கத்தக்க வகையில் முன்னேற்ற மடைந்திருக்கின்றது!



ஓர் அற்புத சம்பவம்

இதற்கு முந்திய வருஷங்களில் ஏற்பட்ட அபிவிருத்திகளைக் காட்டிலும் பிரஸ்தாப வருஷத்தில் வார்டனுக்குக் கிடைத்துள்ள வியாபாரம் அதிசயிக்கத்தக்கதாகும். இவை சமீப புள்ளிவிவரங்களிலிருந்து தெரியவரும்—ஏராளமான வசதிகள். தாராளமான பாலிஸி நிபந்தனைகள், மிகுந்த ஐவேஜுகள், இவற்றாலேயே இவை சாத்தியமாயிற்று.

திறமையான நிர்வாஹம், நேர்மையும், தாராளமான நடவடிக்கை, சுறுசுறுப்பும், விசுவாசமுமுள்ள ஏஜெண்டுகளது இடைவிடாத ஊழியம், இத்துடன் பொதுமக்களது அபிமானம், இவைகளே வார்டன் அடைந்துள்ள அபிவிருத்திக்கு முக்கிய காரணங்களாகும். இந்த அபிவிருத்திக்குக் காரணமாயுள்ளவர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் ஒரே இடத்தில் சேர்த்துவைப்பதாயிருப்பின் ஓர் சிறந்த நகரத்திற்குச் சரியான ஜனத்தொகையிருக்கும்.

புள்ளி விவரம் பேசுகின்றது.
1937—1938

கிடைத்த வியாபாரம்	...	ரூ. 53,00,000.
பூர்த்தியான வியாபாரம்	...	ரூ. 38,00,000.

முன்னேற்ற முள்ள யோசனைகளும், புதிய லக்ஷியங்களும்

பொது மக்களுக்கு ஊழியம் செய்யும் நோக்கத்துடன் **வார்டன்** நிர்வாகஸ்தர்கள், மேன்மேலும் தங்களது வாடிக்கைக்காரர்களுக்கு ஊழியம்செய்யப் புதியமார்க்கங்களைத் தேடிவருகின்றனர். இதன்காரணமாக **வார்டன் பாலிஸிகள்** இன்று மிக தாராளமான பாலிஸிகளாக இருக்கின்றன. இந்நாட்டில் இதற்குமுன் அளிக்கப்படாத பிரத்யேக சௌகரியங்களுடன் கூடினவைகளாகும்.

வார்டன்

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,

தலைமை ஆபீஸ்: விக்டோரியா கார்டன் ரோட், அமதாபாத்.

பம்பாய் கிளை:— பிரோஸ்ஷா மேத்தாரோட், பம்பாய்.
கல்கத்தா கிளை:— 21, ஓல்ட்கோர்ட்ஹவுஸ்தெரு, கல்கத்தா.
மதராஸ் கிளை:— 5, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.

(சப்-பிராஞ்சுகள் & ஏஜென்ஸிகள்;—இந்தியா, பிரிட்டிஷ், கிழக்கு ஆப்ரிக்கா பூராவும்.)

முன்னைவிட
உயர்ந்தது
செல்வாக்குள்ளது
அபிவிருத்தி வாய்ந்தது.

வில்லை. ஒவ்வொரு சொல்லுக்கும் தனித்தனியே பிறப்பிடம் இருக்கவேண்டும் என்ற கொள்கையே இவர்களுக்கு உடன்பாடாவது. ஆனால் ஒரு விஷயத்தில் இருவகையான ஆராய்ச்சியாளர்களும் ஒத்துச் செல்லுகிறார்கள். சொல்லுக்கும் சொல்லால் உணர்த்தப்படும் பொருளின் தன்மைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பது இருவருக்கும் பொதுவான கொள்கை. அதாவது சொல் அதற்குரிய பொருளின் தன்மையை நன்றாக உணர்த்துமாறு அமைந்துள்ளது என்பதேயாகும்.

இவ்விரண்டாவதுவகைஆராய்ச்சியிலும் பலர் உழைத்துவந்திருக்கின்றனர். சில ஆண்டுகட்குமுன் திருநெல்வேலியில் தமிழறிஞராக விளங்கிய பால்வண்ண முதலியாரவர்களைப் பற்றிப் பலரும் கேள்விப்பட்டிருக்கலாம். இம் முதலியாரவர்கள் நீண்டகாலமாக ஆராய்ச்சி செய்து நூற்றுக்கணக்கான சொற்களுக்கு வியுத்பத்தி கண்டு வைத்திருந்தார்கள். அவைகளை யெல்லாம் தமிழுலகு பெற்று ஆனந்திக்கும்படியான பாக்கியம் இல்லாமற் போயிற்று. இவர்களுடைய நண்பர்கள் வாயிலாக, ஒரு சில சொற்களுக்குரிய வியுத்பத்தியே இப்போது நமக்குத் தெரிகிறது. அவற்றுள் இரண்டு சொற்களை இங்கே தருகின்றேன்.

வயிறு என்ற சொல் எவ்வாறு பிறந்தது? இதனை வாய்+ஈறு எனப் பிரித்தல் வேண்டும். வாயினுடைய ஈறாக இருத்தலினாலே 'வாயிறு' எனப் பெயர்பெற்றது; வாயிறு என்பது முதல் குறுகி 'வயிறு' என்றாயிற்று. அரும்பு என்ற சொல் எவ்வாறு பிறந்தது? இதனை ஆர் + உப்பு எனப் பிரித்தல் வேண்டும். உப்பு தலைப் பொருந்தினமையினாலே 'ஆருப்பு' எனப் பெயராயிற்று; இது முதல் குறுகி மெலித்தல் விகாரம் பெற்று அரும்பு என ஆயிற்று.

இவ்வாறு தமிழ்ச் சொற்பிறப்பை புணர்த்தினார்கள் முதலியாரவர்கள். ஒருசிலர் ஆங்கிலச் சொற்களுக்கும் இவ்வகை வியுத்பத்தி காட்டித் தமது மொழி நூலாராய்ச்சிவன்மையைப் புலப்படுத்தியிருக்கிறார்கள். பார்பேரியன் (Barbarian) என்ற ஆங்கில வார்த்தையைப் பலரும் அறிவார்கள். இவ் வார்த்தை பார்ப் + ஐயன் என்ற இரண்டு தமிழ்ச் சொற்களின் புணர்ப்பினால் பிறந்ததென்று கொண்டு ஒருவர் வியுத்பத்தி காட்டியிருக்கிறார். இவர் எழுதிய Missing link என்ற ஆங்கில புஸ்தகத்தில் இதுபோன்ற மொழி யாராய்ச்சிகள் எத்தனையோ காணப்படுகின்றன.

மேற்குறித்த ஆராய்ச்சியில் ஒரு சொல்லை இரண்டு சொற்களாகப் பகுத்து அவை சொற்பொருளை புணர்த்துமாறு காட்டப்படுகிறது. இதற்கப்பாலும் சென்று அடிப்படையைக் காணவேண்டுமென்பது ஒருவரது கொள்கை. இவர் கைக்கொண்ட முறை அறிந்தின்புறத் தக்கது. சொல்லை எழுத்தெழுத்தாகப் பிரித்து, ஒவ்வோர் எழுத்துக்கும் பல பொருள்களைக் கற்பித்து, சொற்குரிய எழுத்துக்களின் பொருள்களில் தக்கவற்றை ஒருங்குசேர்த்து இங்ஙனம் திரண்ட பொருள் சொல்லுக்குரிய பொருளின் தன்மையைச் சுட்டுவதாகக் காட்டுவதே இம்முறை. இவர்கள் கொடுத்துள்ள உதாரணங்களுள் இரண்டினை யெடுத்துக் காட்டி விளக்குகிறேன்.

மா இலக்குமி. [ம்+ஆ மா] மகரம் மனவொப்பு, மன நிறைவு, மனமகிழ்வு, மனத்தினிமை என விருப்பம் எழுப்பத்தகு பொருளைக் குறிக்கும். ஆ என்பது ஆதல். எனவே துய்ப்போர்க்கு மனம் ஒப்பு நிலை, மன நிறைவு, உண்டாகும்படி 'இன்பம் பயக்கி இம்மைக்குப் புகழ் பெருக்க இன்றியமையாத செல்வப் பொருளை அருள்பவள் மா' என்று பொருள் விரிக்கப்பட்டிருக்கிறது. 'பயக்கி' என்பது இதுவரைத் தமிழ் மக்கள் ஒருவர்க்கும் தெரியாத புதுச் சொல். அதனால் என்ன?

இங்ஙனமே கா என்பது காவல் செய் என்னும் பொருளுடையது. இதனை க்+ஆ எனப் பிரித்தல் வேண்டும். 'ககரம் தொடவும் படவும் தக்க நிலைமையிலுள்ள வடிவுடைய பொருள். ஆ வென்பது ஆகுதலைக் கொள் எனவே தொடவும் படவும் தக்க நிலைமையிலுள்ள ஓர் வடிவுடைய பொருளில், தன் உள் எண்ணமும் நிறைவேற்றும் தொழிற்பாடும் ஆகுதலைக்கொள் (அதாவது காத்திரு) என அமையும்.

இச்சொற்பொருள்களை யாவரேனும் மறுக்கமுடியுமா? இங்கே காட்டியவை போன்ற இந்த ஆராய்ச்சிகளை யெல்லாம் செய்தவர் காலஞ்சென்ற திருவனந்தபுரம் டி. எஸ். கணேசபிள்ளையவர்கள். இவர்கள் தமிழ்த் தோற்றத் தேற்றம் என்ற நூலொன்று எழுதியுள்ளார்கள். இந்த நூலை தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் 1937-ல் வெளியிட்டுத் தமிழுலகுக்கு உதவியிருக்கிறார்கள்.

இத்தகைய சொல்லாராய்ச்சிகள் ரஸிகர்களை எப்பொழுதும் ஆனந்தக் கடலில் மூழ்கும்படியாகச் செய்யகூடியன. மொழியாராய்ச்சி தழைத்தோங்குக!

Telegrams :—" Minerva ".

N. A. P. Sarangapani Alwar,
S. K. Raghava Alwar,

Metal & Vessels Merchants,

PETTAI STREET, KUMBAKONAM.



நூதனமான விக்கிரகங்கள், பெரிய மணிகள், கலசங்கள், அநேக அழகிய கல்யாண பாத்திரங்களும் சில்லரையாகவும், மொத்தமாகவும், விலை சரசமாகவும் ஆர்டர்களுக்கும் தயாரித்து நாணயமுள்ளதாகவும் ஆர்டர்கள்பேரிலும் சப்ளை செய்யப்படும்.

Read what the Sheriff of Madras says.

G. A. NATESAN,
Sheriff of Madras. 14—4—38.

Prof. R. Swaminatha Iyer, the well-known Astrologer, quite unasked for made two forecasts about me. Both of which have surprisingly come true.

(Sd.) G. A NATESAN.

ஆரூட கேள்விகளுக்குப் பதில்

ஸ்ரீ காயத்ரீ உபாசத்தால்

இனிமாய்ச் சொல்லுகிறேன்

—:—

முக்கியமான 5 கேள்விகள் எதிர்காலத்தைப்பற்றி எழுதவும். கடிதம் எழுதும நேரமும், ஒரு புஷ்பத்தின் பெயரும் எழுதவும். அணா 9 மட்டும், பூஜை, தபால், அட்வர்டைஸ்மெண்ட் செலவிற்காகத்தபால் ஸ்டாம்புகள் அனுப்பவும். மறு தபாலில் உண்மையான பதில் பரிகாரத்துடன் எழுதி அனுப்பப்படும்.

N. B.—சிலோன், ரங்கோன், சிங்கப்பூர் தபால் செலவு அதிகமானதால் அணா 12 மணியார்டர் மூலம் அனுப்பவும். (வி. பி. யில் அனுப்புவதில்லை.)

அதிசயமான ஜோதிட பலாபலன்

அதிர்ஷ்டத்தின் சக்கரம் அல்லது
1939-ம்வருஷத்திய மாதவாரியான பலனும்
ஆயுள்பூரா குணாதிசய பலனும் (அச்சிடப்பட்டது)

1939-ம் வருடத்தில் உங்களுக்கு மாதவாரியாக நடக்கும் பலாபலன்கள் விபரமாய் எழுதப்பட்டது.

பலாபலன் வேண்டியவர், தங்கள் பிறந்த வருடம், மாதம், தேதி, நக்ஷத்திரம் அல்லது முழுப்பெயர் எழுதி அணா 8 மணியார்டர் மூலமாவது தபால் ஸ்டாம்பு மூலமாவது அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

Prof. R. சுவாமிநாத அய்யர்,

ஜோதிஷர், நெ. 7, பிலிப்ஸ் தெரு, ஜி. டி., மதராஸ்.

பொன் முடி

(பெ. நா. அப்புஸ்வாமி)

முன்னொரு காலத்திலே ஸாலமோன் என்ற அரசன் ஒருவன் இருந்தான். அவன் மந்திரசக்தி பெற்றவன். அதனால் எத்தனையோ தேவதைகள் அவனுக்குக் கீழ்ப்பட்டு, அடிமைகள்போல்நடந்து வந்தனர். மிருகபாஷையும் பக்ஷிபாஷையும் அவனுக்கு நன்றாகத் தெரியும். அவன் காலத்தில் அவன் ஈடு இணையற்ற பேரரசனாக விளங்கினான்.

அவனிடத்திலே மிகவும் அதிசயமான சக்திவாய்ந்த இரத்தினக் கம்பளம் ஒன்று இருந்தது. அது வேண்டிய அளவிற்குப் பெரிதாகவோ சிறிதாகவோ ஆகக்கூடியது. ஒரு சமயம் தான் மட்டும் சிங்காதனத்தின்மேல் ஏறி உட்கார்ந்து கொள்ளுவான். அப்பொழுது இரத்தினக் கம்பளம் அதற்கு மட்டிலும் இடம் கொடுக்கும். இன்னொரு சமயம் அரசனும் மந்திரிமாருமாக அதன்மேல் ஏறி உட்கார்ந்து கொள்ளுவார்கள். அதற்கும் இரத்தினக் கம்பளம் சரியாக இருக்கும். இன்னொரு சமயம் அரசனும் சேனாதிபதிகளும் சைன்னியம் முழுவதும் யுத்த தளவாடங்கள் அனைத்துடனும் அதன் மீது ஏறினால் அவ்வளவுக்கும் அந்தக் கம்பளம் இடம் கொடுக்கும். அப்பேர்ப்பட்ட விசித்திரமான கம்பளத்தில் ஏறிய அரசனை அவனுக்குட்பட்ட தேவதைகள் கம்பளத்தோடு தூக்கி நினைத்த இடத்திற்குக் கொண்டு செல்லுவார்கள்.

ஒரு நாள் காலையில் அரசன் மட்டிலும் தனியாகத் தன்னுடைய தந்த சிங்காதனத்தின்மேல் ஏறி உட்கார்ந்துகொண்டு ஆகாயமார்க்கமாகப் போய்க் கொண்டிருந்தான். எத்தனையோ தேசங்களைக் கடந்து வெகுதூரம் போய் விட்டான். வர வர வெய்யில் உக்கிரமாய் அடிக்கத் தொடங்கிற்று. வெய்யில் தாங்க முடியவில்லை. தலைவெடித்து விடும் போல் இருந்தது.

அந்த வேளையில் கழுகுக் கூட்டம் ஒன்று, எங்கேயோ உணவை மோப்பம் பிடித்துக் கொண்டு, வடக்கு முகமாகப் பறந்து வந்து கொண்டிருந்தது. அதைப்பார்த்த அரசன் "கழுகுகளே! வெய்யில் மிகவும் உஷ்ணமாய் அடிக்கிறது. எனக்கு மேலாகப் பறந்து உங்களுடைய சிறகுகளின் நிழல் என்மேல் படும்படியாகப் பறப்பீர்களானால் எனக்கு மிகவும் உபகாரமாயிருக்கும்" என்றான். ஆகாரத்தில் ஆசை கொண்ட கழுகுகள் "அரசே! நீ தெற்குப் பக்கம் பார்த்துப் போகிறாய். எங்கள் வேலை வடக்குப் பக்கத்திலே இருக்கிறது. உனக்காக நாங்கள் திரும்புவது என்பது ஆகாத காரியம். உன் தலை வெடித்தால் வெடிக்கட்டுமே எங்களுக்கென்ன?" என்று சொல்லிக்கொண்டே பறந்துபோய்விட்டன.

ஸாலமோனுக்கு வந்த கோபத்துக்கு அளவில்லை. "உலகத்துக்கெல்லாம் அதிபதியாகிய நான் இடுகிற கட்டளையை தேவதைகளும் மறுக்க மாட்டார்கள். புத்திகெட்ட நீங்கள் என்னை அவமதித்தீர்கள். எனக்குத் தலை வெடித்தால் உங்களுக்கு என்ன என்றா கேட்டீர்கள்? சொல்லுகிறேன். உங்களுடைய கழுத்தைச் சுற்றிய மயிர் உதிர்ந்துபோகக் கடவதாக! வெய்யிலும் மழையும் காற்றும் குளிரும் உங்களைத் தாக்கும்போது நீங்கள் திண்டாடுவீர்கள். உணவின் மேலுள்ள ஆசைதானே என்னை இகழச் செய்தது? இனிமேல் நல்ல உணவை நீங்கள் வெறுக்கக்கடவீர்கள். பிணத்தையும் அழுகிய உணவையுமே நீங்கள் விரும்பி உண்பீர்களாக. என்றென்றைக்கும் உங்கள் வமிசமானது தீண்டத்தகாததாகக் கருதப்படக் கடவது" என்று உரத்த குரலில் அப்பக்ஷிகளைச் சபித்தான்.

பக்ஷிகள் பறந்து போயின. ஆனால் வெய்யிலின் கடுமை குறையவில்லை. அந்தச் சமயத்தில் கொண்டலாத்திப் பக்ஷிகளின் கூட்டம் ஒன்று அந்தப் பக்கத்திலே பறந்துவரக் கண்டான் அவைகளைக் கூப்பிட்டு "பக்ஷிகளே! என்னால் வெய்யில் தாங்கமுடியவில்லை. நீங்கள் எனக்கு உயரப்பறந்து, உங்கள் சிறகுகளை விரித்துச் சூரிய கிரணம் என்மேல் படாதபடி நிழலிடவேண்டும்" என்றான். உடனே பக்ஷிராஜன் சொல்லிற்று "அரசே! நாங்கள் சிறு பக்ஷிகள். எங்களால் அதிக நிழலிட முடியாது. ஆயினும் நாங்கள் எங்கள் இனத்தையெல்லாம் அழைத்துக்கொண்டு வந்து கூடிய வரையில் நிழல் விழும்படிச் செய்கிறோம்" என்று சொல்லிற்று. அந்தப்படியே திரளான பக்ஷிகளைக் கூட்டி அரசனுக்கு நிழலிட்டு அவனுடைய களைப்பை ஆற்றிற்று. அரசன் தன் இஷ்டம்போல் தேச சஞ்சாரம் செய்து ஊர் வந்து சேர்ந்தான்.

தன் நகரத்தை அடைந்த அரசன், பக்ஷி ராஜனை மறக்கவில்லை. ஒரு நாள் அவன் தன்னுடைய இரத்தினங்கள் பதித்த பொன் மாளிகையில் தந்தத்தினால் செய்த சிங்காதனத்தின்மேல் கொலு வீற்றிருந்தான். எங்கே பார்த்தாலும் அழகும் ஐசுவரியமும் பொலிந்து தோன்றின. அப்பொழுது பக்ஷி ராஜனை அழைத்துவரும்படி ஆள் அனுப்பினான். பக்ஷி ராஜன் வந்து நின்றது.

அரசன் அவனைப் பார்த்து "நீயும் உன் இனமும் எனக்குச் செய்த உதவியை நான் மறக்க முடியாது. நீ அரசன் சொற்படி நடந்தவன். உண்மையான வேலையாள். உன்னுடைய உதவியை நான் கொண்டாடுகிறேன். என்னுடைய மந்திரிகளும் கொண்டாடுகிறார்கள். அதற்குப் பிரத்தியுபகாரமாக—ஞாபகார்த்தமாக—ஏதாவது உங்களுக்குச் செய்யலாமென்று எண்ணுகிறேன். என்ன வேண்டும்? தைரியமாகச்சொல்" என்றான்.

அரச சபையிலே வந்தறியாத பக்ஷி ராஜன் திகைத்து நின்றது. பிறகு மெல்ல எளிய குரலில் மிகவும் தாழ்மையாகப் பதில் சொல்லிற்று. "அரசே! எனக்கு இன்று கிடைத்த கௌரவத்தால் என் மனம் ஒன்றும் தெரியாமல் குழம்பிவிட்டது. யோசித்துச் சொல்லுவதற்கு எனக்கு ஒரு நாள் வேண்டும் நான் என் மனைவி மக்களோடும் இனத்தாரோடும் கலந்து யோசித்து நாளை வந்து பதில் சொல்லுகிறேன்" என்றது. அரசன் "சரி" என்றான்.

பக்ஷிராஜன் பறந்துபோய் வீடு சேர்ந்து, எல்லாரையும் கூட்டி, நடந்த விருத்தாந்தத்தைச் சொல்லிற்று. எல்லாமாக ஒரு மைதானத்தில் கூடி யோசனை செய்தன. ஒவ்வொன்று ஒவ்வொரு யோசனை சொல்லிற்று. "நாம் கழுகை விடப் பெரிதாயிருக்கவேண்டுமென்று கேள்" என்றது ஒன்று, "கிளியைவிடப் பச்சையாயிருக்க வேண்டுமென்று கேள்" என்றது இன்னொன்று. "மயிலைவிட அழகாயிருக்க வேண்டுமென்று கேள்" என்றது மற்றொன்று. "உயர்ந்த கால் வேண்டும்," "நீண்ட வால் வேண்டும்", "விரிந்த சிறகு வேண்டும்", "இனிய குரல் வேண்டும்", "அழகிய நடை வேண்டும்" என்று ஒவ்வொரு புறமிருந்து ஒவ்வொன்று சொல்லிற்று. சாயங்கால வேளை வந்தும் ஒரு முடிவும் ஏற்படவில்லை.

கடைசியில் அரசனுடைய பட்ட மகிஷியான பெண் கொண்டலாத்தி சொல்லிற்று. நான் ஏதாவது சொன்னால் பெண் புத்தி என்று பரிகாசம் செய்வீர்கள். அதனால்தான் இதுவரை ஒன்றும் சொல்லவில்லை. ஆண்கள் இத்தனைபேர் கூடியும் ஒரு முடிவையும் காணோம். கேட்பீர்களானால் சொல்லுகிறேன் என்றது. "சொல்ல வேண்டும். கேட்கிறோம்" என்றன சில பக்ஷிகள். வேறு சில பக்ஷிகள் வாயைத் திறவாமல் இருந்தன. பெண் பக்ஷி சொல்லிற்று "நம்முடைய காரியத்தால்தான் அன்று ஸாலமோன் பிழைத்தான். நாம் துணை செய்யாவிட்டால் அன்றே அவனுடைய பொன் முடி தரையில் சாய்ந்திருக்கும். ஆதலால் அவனுடைய பொன் முடியை நாம் காப்பாற்றினோம் என்பதற்கு அறிகுறியாக, நம்முடைய தலையில் அழகான பொன் முடி வேண்டும் என்று கேட்போம்" என்றது. சிறு பக்ஷிகளெல்லாம் "அரசி சொல்லுவதுதான் சரி" என்று கூச்சலிடவே, அப்படியே கேட்பது என்று தீர்மானமாகிக் கூட்டம் கலைந்தது.

மறுநாள் காலையில் பக்ஷி ராஜன் தங்களுடைய வேண்டுகோளை அரசனுக்குத் தெரிவித்தான். அரசன் "ஆகா! நீங்கள் கேட்ட வரத்தைக் கொடுத்தேன். இன்று முதல் உங்களுடைய வமிசத்தில் ஒவ்வொரு பக்ஷிக்கும் தலையில் பொன் முடி இருக்கும். ஆனால் நீங்கள் முன் புத்தியில்லாமல் கேட்டுவிட்டீர்கள் என்பது என் அபிப்பிராயம். உங்களுக்கு ஏதாவது கஷ்டம் ஏற்படுமானால் மறுபடியும் என்னிடம் வாருங்கள், நான் உதவி செய்கிறேன்" என்று வாக்களித்துப் பக்ஷிராஜனுக்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டான். அப்பொழுதே பக்ஷிராஜனுடைய தலையிலுள்ள பொற்கிரீடமானது ஜ்வலித்துக்கொண்டிருப்பது அரசனு

உங்கள் ஜீவியத்தில்
சௌகரியம் ஏற்பட
இதோ நேர் வழி

இன்ஷ்யூரன்ஸ் என்னும்
ஜீவிய பாதுகாப்பின் துணை
யினால் வரக்கூடிய சகாயங்
கள் சகலமும்

குறைந்த செலவில்
உங்கள் தேவைக்குத் தக்கபடி
தரக்கூடிய ஸ்தாபனம் :

இண்டோ யூனியன்

அஷ்யூரன்ஸ்
கம்பெனி லிட்.

விபரத்துக்கு எழுதுங்கள் :
காரியதரிசி
தபால் பெட்டி நெ. 350, மவுண்ட் ரோட்,
மதராஸ்.

இண்டோ யூனியன்
கம்பெனியில்
அஷ்யூரன்ஸ்
எடுங்கள்.

ஏஜெண்டு
களும் நல்ல
தொழில்
செய்யலாம்.
நிறைந்த வரும்படி.

நெருப்பு, அசம்பாவிதம் மோட்டார், தொழிலாளிகள்

நஷ்ட ஈடு முதலிய சங்கடங்கள் தீரும்.

ஏஜெண்டுகள்
தேவை.
நல்ல லாபம்

விவரங்களுக்கு :
முருகப்பா & ஸன்ஸ்,
தபால்பெட்டி 376,
மவுண்ட்ரோட், மதராஸ்.

லா யூனியன், பயர், ஆக்ஸிடெண்ட் & ஜெனரல்

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட், (ஆப் பாரிஸ்)

(1828-ல் ஸ்தாபிக்கப்பட்டது)

டைய நிலைக்கண்ணாடிகளில் ம தெரிந்தது. அளவில்லாத ஆநந்தத்தோடு பக்ஷிராஜன்



தன்னுடைய வீடு போய்ச் சேர்ந்தது. அங்கேயும் எல்லாப்பக்ஷிகளுடைய தலையிலும் பொற்கிரீடங்கள் ஜ்வலித்துக் கொண்டிருந்தன. எங்கும் ஒரே ஆநந்தம், ஒரே குதூகலம், பக்ஷிகளெல்லாம் ஏரிகளின் கரைகளிலும் குளங்களின் ஓரங்களிலும் கிணற்றின் விளிம்புகளிலும் உட்கார்ந்துகொண்டு தங்களுடைய அழகைக் கண்கொட்டாது பார்த்துப்பார்த்துச் சந்தோஷம் அடைந்தன. மற்றப் பக்ஷிகளையெல்லாம் அவமதிக்கத் தொடங்கின.

இப்படியிருக்கையில்வேடன் ஒருவன் காட்டில் வலைவிரித்து அதிலே மிகவும் ருசியான பண்டங்களைப் பரப்பியிருந்தான். அவற்றுக்கு ஆசைப்பட்ட பக்ஷிகள் அந்த வலையில் சிக்கிக்கொண்டன. சாயங்கால வேளையில் வேடன் வலையைப் பார்த்தபோது அதிலே பளபளப்பான முடி சூடிய பக்ஷி ஒன்று இருக்கக்கண்டு வியப்படைந்தான். அதன் தலையைத் திருகி அதைத் தட்டானிடம் எடுத்துச் சென்று "இது என்ன பார்" என்றான். அவனும் சோதித்துப்பார்த்துவிட்டு "இது பித்தளை, இந்தா இதற்கு ஒரு காசு வைத்துக்கொள், இனிமேல் இந்தமாதிரி அகப்பட்டால் கொண்டுவா, தலை ஒன்றுக்கு ஒரு காசு வீதம் கொடுக்கிறேன். வேறு யாரிடமும் சொல்லாதே" என்றான்.

அன்றுமுதல் அந்த வேடன் கொண்டலாத்திப் பறவைகளைப்பிடிக்கத்தொடங்கினான். ஒரு நாள் அவன் பக்ஷிகளைப் பிடித்துக்கொண்டுவரும்போது இன்னொரு தட்டான் அவைகளைக் கண்டு இந்தப் பொன் பக்ஷிகள் எங்கே அகப்பட்டன என்று கேட்டான். கேட்கவே வேடனுக்கு அவை பொன் என்று தெரிந்தது.

இந்தச் செய்தி நாடெங்கும் பரவிற்று. உடனே எங்கும் பக்ஷி வேட்டை தொடங்கிற்று. வில்லால் அடிப்போரும் கல்லால் அடிப்போரும், கழியால் அடிப்போரும், கண்ணியில் பிடிப்போருமாகக் கூடி வேட்டையாடத் தொடங்கினார்கள். பக்ஷி வெளியே தலையை நீட்ட முடியவில்லை. நீட்டினால் சாவது உறுதி. ஆகா! அழகிய பொன் முடியால் வந்த வினை என்ன! இப்படித் தன் இனம் நாசமடைவதைக் கண்ட பக்ஷிராஜன் மனமுடைந்து, சிந்தனையில் ஆழ்ந்தது. பிறகு சாலமோன் வாக்களித்தது நினைவிற்கு வந்தது. "கஷ்டம் உனக்கு ஏற்பட்டால் அப்பொழுது என்னிடம் வா" என்ற அரசனைத் தவிர வேறு கதியில்லை என்று கண்டு கொண்டு, அது ஒரு நாள் இரவிலே பதுங்கிப் பதுங்கிப் பயந்து நடுங்கி, யாவரும் போகாத தனி வழிகளிலே சென்று ஸாலமோன் அரசனுடைய கொலு மண்டபத்தை அடைந்து அரசனடியில் விழுந்து தன் இனத்துக்கு உண்டான பேராபத்தைத் தெரிவித்து, அவனை அபயம் அளிக்க வேண்டிற்று.

அதன் வருத்தத்தைக்கண்டு இரங்கிய அரசன், "உன்னுடைய கர்வத்தாலும் ஜம்பத்தாலும் வந்தது இந்த வினை. போனது போகட்டும். உன்னுடைய பொன் முடியை இறகினால் ஆகிய அழகிய கொண்டையாக மாற்றி விடுகிறேன். வேண்டியபோது நீ அதை விரித்து ஆநந்தம் அடையலாம். உன் இனத்தின் உயிருக்கும் ஆபத்து வராது. உன் இனம் அழிந்து போகாது. எனக்கு ஒரு சமயம் நீங்கள் உதவினீர்கள் என்பதையும் அது ஞாபகமூட்டக் கூடியதாயிருக்கும்" என்றான்.

சொன்னதும் பக்ஷிராஜன் தலையிலுள்ள பொன்முடி மயிர்க்கொண்டையாக மாறிற்று. நிறமும் தன்மையும் மாறினவே யன்றி அழகு கெடவில்லை. ஸாலமோனை வணங்கி வாழ்த்திப் பறந்து வீடுவந்து சேர்ந்தது கொண்டலாத்தி.

கண்ணன் தேவன் தேயிலை

Quality

Production.

கண்ணன் தேவன் தேயிலை 5,000 அடி முதல் 7,000 அடி உயரமுள்ள திருவாங்கூர் மலைத் தொடர்களில் பயிரிடப்படுகிறது. வெகு சுத்தமானதும், நல்ல வாடையும், நிறமான கஷாயமுள்ளதும், பானங்களில் சிறந்ததும், செலவில் குறைந்ததும் இத்தேயிலையே.

விவரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:

கண்ணன் தேவன் ஹில்ஸ் பிராட்யூஸ் கம்பெனி லிமிடெட்,
திருச்சினாப்பள்ளி.

தரங்கம்பாடி—பூர்வீக இந்தியாவில் ஒரு முக்கிய துறைமுகம்







முதல் படம் கடலோரமுள்ள மிகப் புராதன்மான கோவில். இப்பொழுது ஜீர்ணமாகி வருகிறது. 2-வது படம். பழைய கோட்டை. இப்பொழுது பங்களாவாகச் செய்யப்பட்டிருக்கிறது. 3-வது படம். டேனிஷ் சர்ச். கடைசிப் படம். ஒரு காலத்தில் மிகச் சிறப்புற்றிருந்த துறைமுகக் கட்டிடம் இப்பொழுது இடிந்து க்ஷீணித்திருப்பதைக் காட்டுகிறது.

—எ. எ.



என்ன மோட்டார்களும் லாரிகளும் வந்தாலும்,
எங்களை அலக்ஷியம் செய்ய முடியாது.

டலே! என்ன பொங்குகிறய்? இவன் மீன்களை ஏராளமாக இக்கட்டை
மரத்தில் அபகரித்துவிட்டானென்று கோபமோ? —எஸ். எஸ்.



அழகிய தோற்றம்! ஆனால்; இது சென்னை கூவம்
ஆற்றங்கரை யென்றால்; நம்புவீர்களா?

யூனிவர்ஸல் பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

(1919-ம் வருஷம் பம்பாயில் இணைக்கப்பட்டது.)

அதிகாரம்பெற்ற மூலதனம் ரூ. 50,00,000

செலுத்தப்பட்ட ,, ரூ. 27,39,400

நெருப்பு, கப்பல், மோட்டார், தொழிலாளிகள் நஷ்ட ஈடு முதலிய சகல இன்ஷ்யூரன்ஸ்களும் "டாரிப்" விதிகளின்படி எடுத்துக்கொள்ளப்படும்.

தாராளமான நிபந்தனைகள் | முக்கிய கவனம் | உயரிய திட்டங்கள்

'யூனிவர்ஸலில்' ஒரு ஏஜென்ஸி எடுத்துக்கொண்டால் கெளரவமும் நிரந்தரமுமான சம்பாத்தியத்தை அளிக்கும். செல்வாக்கும் கெளரவமுமுள்ளவர்கள் ஏஜென்ஸிக்காக விண்ணப்பம் செய்துகொள்ளலாம். மிகவும் வசீகரமும் தாராளமுமான நிபந்தனைகள் அளிக்கப்படும்.

விவரங்களுக்கு எழுதவும் :—

கோதாரி & ஸன்ஸ்:

(பிரதம ஏஜண்டுகள்)

"ஓரியண்டல்" பில்டிங், அரமனைக்காரத் தெரு, மதராஸ்.

போன் 4431. (3 லைன்கள்) தந்தி "KOTHARI" மதராஸ்.



The Madras Safe Deposit Co., Ltd.

இனிக் -- கவலை -- வேண்டாம்!

தீ - திருடன் - பூகம்பம் - கலகம், வெள்ளம் -

இவைகளைப்பற்றிய கவலை இனி வேண்டாம்............................

உங்களுடைய நகைகள், ரிக்கார்டுகள், பத்திரங்கள் முதலிய விலை உயர்ந்தப் பொருள்களை உங்கள் வீட்டிலேயே வைத்திருக்கையில் உங்களுக்கு அவைகளைப்பற்றிய கவலை ஏற்படுவது நியாயமே.

ஆனால், சென்னை சேப் டிபாசிட் கம்பெனியார்
இதற்கென்று ஏராளமான பணச்செலவில்
ஒழுக்கரைப் பெட்டிகளைக் கட்டியிருக்கிறார்கள்.

இதனருகில் எவ்வித ஆபத்தும் அணுகாது. பூமியின்கீழ், நல்ல சுத்தமான காங்க்ரீட்டமுள்ள சுரங்கங்கள் கட்டப்பட்டு அதனுள் ஒழுக்கரைப் பெட்டிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10-லிருந்து 12-மணி வரையிலும், சனிக்கிழமைகளில் 10-லிருந்து 4-மணி வரையிலும், மற்றெல்லா நாட்களிலும் காலை 10-மணியிலிருந்து மாலை 6-மணி வரையிலும் ஒவ்வொரு நாளும் உங்கள் செளகரியம்போல் உங்கள் சாமான்களை வைக்கவும் எடுத்துக்கொண்டு போகவும் முடியும்.

வருஷத்திற்கு ரூ. 12 தான் சார்ஜ்.

ஒரு முறை நேரில் வந்து பார்த்தபின் உண்மை விளங்கும்.

கோத்தாரி அண்டு சன்ஸ், மானேஜிங் ஏஜெண்ட்ஸ்,

தி மெட்ராஸ் ஸேப் டெபாஸிட் கம்பெனி லிமிடெட், அரண்மனைக்காரத் தெரு, மதராஸ்.

உத்தரவாதம் - பாதுகாப்பு - யாரும் அறிய முடியாது ஆகையால்......

க்ஷேத்திராடனம்

இகபர சித்தி நிரம்பக் கிடைக்கும் என்று உணர்ந்து உடலைப் பேணுவதும் ஆன்மீகச் சிந்தனையும் மிகவும் முக்கியம் என்று எண்ணிய பெரியோர்கள் பல க்ஷேத்திரங்களைக் கண்டு தரிசித்தனர். இகபரமிரண்டிற்கும் விசேஷ சாதனமாகக் கருதப்படுவது தேச யாத்திரை. யாத்திரை செய்தல் மத தர்மமென்பது நமது ஆன்றோர் கொள்கை.

நாள்தோறும் கண்டு சலிப்படைந்த நமது இருப்பிடங்களைவிட்டுப் புறப்பட்டு விசாலமான நமது தேசத்தில் ஆங்காங்குள்ள பற்பல அழகிய நகரங்களையும் மற்றும் நாம் காணாத காட்சிகளையும் சுற்றிப் பார்ப்பதனால் உடலுக்கு ஆறுதலும் சலிப்படைந்த மனதிற்கு சந்துஷ்டியும் ஏற்படுகிறது. படித்துத் தெரிந்து கொள்வதைவிட பார்த்துத் தெரிந்துகொள்ளும் விஷயங்கள் மனதில் நன்கு பதிகின்றன. பொதுவாக எல்லாருக்கும், சிறப்பாக மாணவர்களுக்கும், தேச யாத்திரை மிக அவசியம். யாத்திரை செய்து பலவிடங்களையும் சுற்றிப் பார்ப்பதனால் மனிதர் தாம் ஏற்கெனவே தெரிந்துகொண்டிருப்பதைவிட அதிகமாகத் தெரிந்துகொள்ளுகின்றனர். அதனால் அறிவு விசாலமடைகிறது. வாழ்க்கையில் ஆறுதலும் உத்ஸாகமும் ஏற்படுகிறது.

முன்னேற்ற மடைந்துள்ள மேல் நாடுகளில் ஒவ்வொரு வருஷமும் விடுமுறை காலங்களில் உல்லாசப் பிரயாணம் செய்வதை ஆரோக்ய வாழ்க்கைக்கு இன்றியமையாத வழக்கமாக ஜனங்கள் கொண்டிருக்கின்றனர். நமது நாட்டிலும் இந்த நற் பழக்கம் வர வர அதிகரித்து வருகிறது. க்ஷேத்திர யாத்திரை நமது ஆத்ம உணர்ச்சியை அபிவிருத்தி செய்து ஆஸ்திக சிந்தையையும் தெய்வ பக்தியையும் பெருக்குவதற்குப் பெரிய சாதனமாகும். புண்ய பூமியாகிய நமது தேசத்தில் எவ்வளவோ திவ்ய க்ஷேத்திரங்களும், அற்புதமான கோயில்களும், புனிதமான தெய்வ நதிகளும் இருக்கின்றன. இவைகளைத் தரிசித்து ஆனந்தமடைய வேண்டுமென்ற ஆவல் அனைவருக்கும் இயற்கையாக அமைந்திருக்கின்றது.

யாத்திரையை சுலபமாகவும் சுகமாகவும் ஜனங்கள் செய்து முடிப்பதற்கு வேண்டிய வசதிகள் தற்காலத்தில் ஏராளமாக இருக்கின்றன. யாத்ரிகர்களுக்கென்றே சில குறிப்பிட்ட மார்க்கங்களில் குறைந்த கட்டணத்துக்கு சுற்றுப் பிரயாண டிக்கெட்டுகளை ரயில்வேயார் ஏற்படுத்தியிருக்கின்றனர். அவரவர்களுடைய இஷ்டத்திற்கும் சௌகரியத்திற்கும் பொருந்தும்படி இந்த சுற்றுப் பிரயாணத்திட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. யாத்திரைக்குரிய முக்கியமான க்ஷேத்திரங்களும் பார்க்கத்தகுந்த பிரபல நகரங்களும் இந்தத் திட்டங்களில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

வடநாட்டிலுள்ள க்ஷேத்திரங்களுக்கென்றும், தென் இந்தியாவிலுள்ள க்ஷேத்திரங்களுக்கென்றும் தனித் தனியாக மும்மூன்று சுற்றுப் பிரயாண திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் வடநாட்டுச் சுற்றுப் பிரயாண திட்டங்கள் மூன்றில் முதலாவதில் பண்டரீபுரம், பஞ்சவடி, மதுரா, குருக்ஷேத்திரம் ஹரித்துவாரம், நைமிசாரணியம், லக்ஷ்மணபுரி, அயோத்தி, பிரயாகை, காசி, கயை, பூரி முதலிய. புண்ய க்ஷேத்திரங்களும், பம்பாய், ஆக்ரா, டெல்லி ஹௌரா, (கல்கத்தா) முதலிய நகரங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவது திட்டத்தில் துங்கபத்திரா, பண்டரீபுரம், பஞ்சவடி, துவாரகை, மதுரா, குரு க்ஷேத்திரம், ஹரித்துவாரம், நைமிசாரணியம், லக்ஷ்மணபுரி, அயோத்தி, பிரயாகை, காசி, கயை, பூரி, முதலிய க்ஷேத்திரங்களும் பம்பாய், சூரத், பிரோச், பரோடா, ஆமதாபாத், ஜாம்நகர், ஆஜ்மீர், ஜெய்ப்பூர், ஆக்ரா, டெல்லி, கல்கத்தா, (ஹௌரா) முதலிய பட்டணங்களும் அடங்கியிருக்கின்றன.

மூன்றாவது திட்டம், முதல் இரண்டு திட்டங்களைவிட சுருக்கமானது. இதில் பெஜவாடா, பல்ஹார்ஷா, இடார்சி, ஆக்ரா, மதுரா, டெல்லி, குருக்ஷேத்திரம், ஹரித்துவாரம், நைமிசாரணியம், லக்ஷ்மணபுரி அயோத்தி, பிரயாகை, காசி



ராமேச்வரம் கோவில் உள் மண்டபத்தின் கம்பீரத் தோற்றம் இது சுமார் 400 அடி நீள மிருக்கிறது தூண்களின் அழகிய சித்திர வேலைகளைக் கவனிக்கவும். —எம். வி,

ராமேச்வரத்தில் புண்ய ஸ்நானம் நடக்கிறது. —எம். வி.

இந்தியாவின் புண்ணிய க்ஷேத்திரங்களையும் புராதன நகரங்களையும் கண்டு களித்துவர மலிவான சுற்றுப்பிரயாண டிக்கெட்டுகள்.

வட இந்தியா சுற்றுப் பிரயாணம்

மெயில், எக்ஸ்பிரஸ், பாசஞ்சர் என்ற வித்தியாசமில்லாமல் எல்லா வண்டிகளிலும் பிரயாணம் செய்ய கீழ்க்கண்ட 3-விதமான மார்க்கங்களுக்கு டிக்கெட்டுகள் கொடுக்கப்படுகின்றன. வழியில் தேவையான இடங்களில் தங்கலாம். சுற்றுப் பிரயாணத்தை முடிக்க இந்த டிக்கெட்டுகள் மூன்று மாதங்களுக்குச் செல்லுபடியுள்ளவை.

எஸ். ஐ. ரெயில்வேயில் ஏதாவது ஒரு ஸ்டேஷனிலிருந்து:—

மார்க்கம் 1.

மதராஸ் அல்லது அரக்கோணம்
துங்கபத்ரா
பண்டரிபுரம்
பம்பாய்
நாஸிக்
ஆக்ரா
டில்லி
குருக்ஷேத்திரம்
ஹரித்துவாரம்
நைமிசாரணியம்
லக்நௌ
அயோத்தி
பிரயாகை
காசி
கயை
கல்கத்தா (ஹௌரா)
பூரி
மதராஸ் அல்லது அரக்கோணம்
புறப்பட்ட இடம்

மார்க்கம் 2.

மதராஸ் அல்லது அரக்கோணம்
துங்கபத்ரா
பண்டரிபுரம்
பம்பாய்
பரோடா
நாஸிக்
ஆமதாபாத்
ஜாம்நகர்
துவாரகை
ஆஜ்மீர்
ஜெய்ப்பூர்
ஆக்ரா
டில்லி
குருக்ஷேத்திரம்
ஹரித்துவாரம்
நைமிசாரணியம்
லக்நௌ
அயோத்தி
பிரயாகை
காசி
கயை
ஹௌரா
பூரி
மதராஸ் அல்லது அரக்கோணம்
புறப்பட்ட இடம்

மார்க்கம் 3.

மதராஸ்
பெஜவாடா
பல்ஹார்ஷா
இட்டார்சி
ஹோஷங்காபாத்
ஆக்ரா
டில்லி
குருக்ஷேத்திரம்
ஹரித்துவாரம்
நைமிசாரணியம்
லக்நௌ
அயோத்தி
பிரயாகை
காசி
ஹௌரா
பூரி
மதராஸ்
புறப்பட்ட இடம்

சுற்றுப் பிரயாண கட்டணம்		1-வது வகுப்பு	2-வது வகுப்பு	3-வது வகுப்பு
மார்க்கம் 1	ரூ.	320 1 6	162 0 6	51 15 0
,, 2	,,	396 4 6	202 12 6	67 2 9
,, 3	,,	290 12 6	145 9 6	46 4 6

இந்தக் கட்டணங்களுடன் புறப்படும் ஸ்டேஷனிலிருந்து மதராஸ் அல்லது அரக்கோணத்துக்கு 1½ சார்ஜ் சேர்க்கப்படும். குழந்தைகளுக்குப் பாதி சார்ஜ் வசூலிக்கப்படும்.

தென் இந்தியா சுற்றுப்பிரயாணம்

டிக்கெட்டுகள் சுற்றுப்பிரயாணத்தை முடிக்க ஒரு மாதத்திற்குச் செல்லுபடியுள்ளவை.

மார்க்கம் 1. / மார்க்கம் 2.
மதராஸ் பீச் அல்லது எழும்பூரிலிருந்து புறப்பட்டு:—

மார்க்கம் 1.

செங்கல்பட்டு
காஞ்சீவரம்
மாயவரம்
கும்பகோணம்
தஞ்சாவூர்
திருச்சினுப்பள்ளி
மதுரை
ராமேஸ்வரம்
தனுஷ்கோடி
புதுக்கோட்டை
ஸ்ரீரங்கம்
விருத்தாசலம்
மதராஸ்

மார்க்கம் 2.

செங்கல்பட்டு
காஞ்சீவரம்
மாயவரம்
கும்பகோணம்
தஞ்சாவூர்
திருச்சினுப்பள்ளி
புதுக்கோட்டை
ராமேஸ்வரம்
தனுஷ்கோடி
மதுரை
திருநெல்வேலி
திருச்செந்தூர்
தென்காசி
வர்க்காலா
திருவனந்தபுரம்
விருதுநகர்
திருச்சினுப்பள்ளி
ஸ்ரீரங்கம்
விருத்தாசலம்
மதராஸ்

மார்க்கம் 3.
மங்களூரிலிருந்து புறப்பட்டு

போத்தனூர்
பழனி
மதுரை
ராமேஸ்வரம்
தனுஷ்கோடி
காரைக்குடி
திருச்சினுப்பள்ளி
தஞ்சாவூர்
கும்பகோணம்
மாயவரம்
செங்கல்பட்டு
காஞ்சீவரம்
மதராஸ் எழும்பூர் அல்லது பீச்
மதராஸ் சென்ட்ரல்
ஜோலார்பேட்டை
திருப்பத்தூர்
சேலம்
ஈரோடு
கள்ளிக்கோட்டை
மங்களூர்

சுற்றுப் பிரயாண கட்டணம்	1-வது வகுப்பு	2-வது வகுப்பு	3-வது வகுப்பு
மார்க்கம் 1	84 14 0	42 7 0	13 2 0
,, 2	134 8 0	67 4 0	20 6 0
,, 3	144 1 0	72 1 0	22 3 0

இந்த டிக்கெட்டுகளை கீழ்க்கண்ட ஸ்டேஷன்களில் புக்கிங் ஆபீஸ்களிலாவது ராம் மோஹன் கம்பெனியாரின் பிரதிநிதிகள் மூலமாகவாவது வாங்கிக்கொள்ளலாம்.

மதராஸ் எழும்பூர் காரைக்குடி மங்களூர்
கும்பகோணம் மதுரை ஜங். கள்ளிக்கோட்டை
திருச்சினுப்பள்ளி ஜங். திருநெல்வேலி ஜங்.

மற்ற ஸ்டேஷன்களிலிருந்து டிக்கெட்டுகள் தேவையானால் திருச்சினுப்பள்ளியிலுள்ள ரெயில்வே சீப் கம்மர்ஷியல் சூப்பரின்டென்டென்டிற்கு எழுதவும்.

மேலும், தென் இந்தியா வட இந்தியா சுற்றுப்பிரயாணங்களைச் சேர்ந்தாற்போல் செய்யக்கூடிய முறையில் திட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

தென் இந்தியா ரெயில்வே

தனுஷ்கோடியில் ரயில் வந்து நின்றதும், இலங்கை செல்ல கப்பல் தயாராக விருக்கிறது. —எம். வி.

கல்கத்தா, பூரி முதலிய இடங்கள் மட்டும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்த 3 திட்டங்களாக அமைந்த சுற்றுப்பிரயாணங்களை தென் இந்தியா ரெயில்வேயிலுள்ள எந்த ஸ்டேஷனிலிருந்தும் ஆரம்பித்து முடிக்கக்கூடிய வகையில் டிக்கெட்டுகள் கொடுக்கப்படுகின்றன. இவை மூன்று மா்தங்களுக்கு செல்லுபடியுள்ளவை.

வட இந்தியாவைப் பொறுத்தவரையில் மேற்கண்ட 3 திட்டங்களும் கூடியவரையில் பிரயாணிகளுக்கு அவரவர் சௌகரியத்திற்குத் தகுந்தாற்போலவும் யாவரும் விரும்பக்கூடிய முக்கிய இடங்கள் விடப்படாமலும் தயாரிக்கப்பட்டிருப்பது விளங்கும்.

இவற்றைப்போலவே தென் இந்தியாவிலுள்ள பல முக்கிய க்ஷேத்திரங்களையும், மற்றும் பார்க்கத் தகுந்த இடங்களையும் கொண்டதாய் 3 விதமான சுற்றுப்பிரயாண திட்டங்கள் இருக்கின்றன. இந்த திட்டங்களுக்கான டிக்கட்டுகள் ஒரு மாதத்துக்கு செல்லுபடியுள்ளவை.

தென்னுட்டிலும் வடநாட்டிலும் இஷ்டமானல் இரண்டிலும் மலிவான கட்டணத்தில் போதுமான சாவகாசத்துடன் சௌகரியமாகப் பிரயாணம் செய்ய இந்தச்சுற்றுப்பிரயாண டிக்கட்டுகள் வரப்பிரசாதமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இந்தச்சுற்றுப் பிராயண திட்டங்கள் மார்க்கம், கட்டண விபரங்களை மற்றேரிடத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் விளம்பரத்திலிருந்து தெரிந்துகொள்ளலாம். மற்றும் விவரம் வேண்டுவோர் ஸ்டேஷன்களில் விசாரிக்கவும்.

BLACKLOCK & MACARTHUR LTD.,
GLASGOW

வெள்ளை வர்ணத்தில் 541 வெள்ளைதான் உயர்ந்தது. வெண்மை மாருது. வெடிக்கவும் செய்யாது. அதிக ஸன்னமாதலால் ஆண்டு வரும். 541 ஈய வெள்ளையை வாங்கி உபயோகித்தால் கூலி மிச்சமாகும். அடிக்கடி வர்ணம் கொடுக்கவேண்டிய அவசியமுமிராது. 541 கெக்கின்பேரில் மான் மார்க்தும் இரண்டு ஈய வில்களும் இருக்கிற கெக்காகப் பார்த்து வாங்குங்கள். போலிகளை வாங்கி ஏமாருதீர்கள். செந்தூரத்தில் "மான் மார்க்" செந்தூரம்தான் உயர்ந்தது. இவைகள் எல்லா வர்ண வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

Sole Agents:—M. R. V. IYER & Co.,
49, பந்தர் தெரு, மதராஸ்.

அநேக தங்கமெடல்கள் பரிசுபெற்றிருக்கும்

டாக்டர் மிஸிஸ் ஜான் பொன்னையா

அவர்களால் செய்யப்படும்

காபிரியேல் மருந்துகள்

(கவர்ன்மெண்டாரால் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.)

1. காபிரியேல் லேகியம்:—அஜீரணம், வாய்வு பொருமல் இவைகளைக் குணப்படுத்தி, பசி தீபனத்தை உண்டாக்கும். இரத்த விர்த்தியை உண்டாக்கி, நரம்புகளுக்குப் பலத்தையும், மனே உற்சாகத்தையும் கொடுக்கும். அரை ராத்தல் 20 நாளைக்கு ரூ. 2—12—0

2. காபிரியேல் தாதுவிருத்தி சோர்ண லேகியம்:—கெட்டுப்போன இரத்தத்தை சுத்திசெய்து, இழந்த இரத்தத்தை திரும்ப சேகரித்து, தளர்ந்துபோன நரம்புகளை முறுக்கேற்றி, தாதுவை கெட்டிப்படுத்துவதில் இது ஓர் தேவாமிர்தம். புட்டி விலை ரூ. 5—8—0

3. காபிரியேல் ரத்த விருத்தி மருந்து:—மேற்கண்ட சொர்ண லேகியத்தின் சத்துக்கள் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறபடியால் அதனுடைய சகல குணங்களும் இதற்குண்டு. விலை ரூ. 3.

4. காபிரியேல் வெள்ளை நீர்கடுப்பு மருந்து:—எப்பேர்ப்பட்ட வெட்டை, நீர்கடுப்பாயிருந்தாலும் இரண்டே நாளில் சுகம்கொடுக்கும் அருமையான மருந்து. விலை ரூ. 1—2—0

5. காபிரியேல் வல்லாரை லேகியம்:—துர்விஷயத்தால் உண்டாகும் ஊரல்கள், கிரந்தி ரோகங்கள், புண்கள், மேகநீர் பற்றுகளையும் இது குணப்படுத்தும். விலை ரூ. 2—6—0

6. காபிரியேல் தன்வந்த ரிஷி செந்தூரம்:—சகல வாய்வுகளுக்கும், வாதங்களுக்கும், ஜன்னிக்கும் இதைவிட கைகண்ட மருந்த கிடைப்பது அரிது. 1 ரூபா எடை ரூ. 3.

7. காபிரியேல் மொழிசூலை, முடக்குசூலை மருந்து:—வாத சூலைகள், வாதங்கள், மொழி, சந்து, தொடை, கைகால், கணுக்கால் இவைகளில் எற்படும் சூலை கட்டுகளுக்கு இது அருமையான சஞ்சீவி. விலை ரூ. 2—12—0

8. காபிரியேல் வெள்ளைக் குஷ்டத்திற்கு மருந்து:—இவ்வியாதிக்கு விசேஷமான மருந்துகள் நம்மிடமுண்டு. விலை ரூ. 3.

9. காபிரியேல் வைகாஷன ரிஷி லேகியம்:—சுவாசகாசம், இளைத்தவர், கிழவர் இவர்களுக்குப் புஷ்டியைக் கொடுக்கும். விலை ரூ. 4—8—0

10. காபிரியேல் மூல லேகியம்:—சகலவித மூல ரோகங்களையும் குணப்படுத்தும மூல வல்லாதி என்று புகழப்படும் உள் மருந்து. விலை ரூ. 2—6—0

11. காபிரியேல் ஜீவாதார லேகியம்:—உஷ்ண வாயுவினுல் உண்டாகும் மலச்சிக்கலைப் போக்குவதில் இது மவகு அருமையான மருந்து. விலை ரூ. 1—0—0

12. காபிரியேல் நீரழிவு செந்தூரம்:—நீரோடு எற்படும் சர்க்கரை 45 தினத்தில் அறவே மறையும். விலை ரூ. 2—12—0

13. காபிரியேல் காய்ச்சல் மருந்து:—கடும் ஜுரம், மலேரியா ஜுரம், தலையிடி, திரேக கடுப்புவலி, இடுப்புவலி இவைகளை ஒரே வேளையில் உடனே குணப்படுத்தும். விலை ரூ. 2

14. காபிரியேல் சந்தானவிர்த்திமருந்து:—கெற்பம் பையிலுண்டாகும் சகல வியாதிகளுக்கும், கெற்பம தரிக்காமல் கலைதலுக்கும், சகல சூதக் கேடுகளுக்கும இதுவே அருமையான மருந்து. விலை ரூ. 3

15. காபிரியேல் சந்திரகாந்த மாத்திரை:—பெண்களுக்கு பிரசவ வலி குறைந்து காணப்பட்டாலும், பிரசவம் தாமதித்தாலும், அல்லது வேறு பக்கமாய் நோக்கியதால், வலி சகிக்க முடியாமல் கஷ்டப்படுகிறவர்களுக்கு இதுவே கைகண்ட மருந்து. சூதக சிக்கல்களைப் போக்கி, முழு சுகத்தைக் கொடுக்கிறது. 60 மாத்திரைகள் விலை ரூ. 2—8—0

16. காபிரியேல் ஸ்நான வடகம்:—வாய்வு மந்தம், மூக்கு நீர்ப்பாய்ச்சல், கபாலவலி, கப்பாலச் சூடு, மேகம், பிரமேகம், கிறுகிறுப்பு, அரோசியம், வியர்வை, தாகம், பீனிசம், ஈளை, குன்மம், வெட்டை, ஜுரம், அஸ்தி ரோகங்கள், அனைத்தையும் கண், செவி ரோகங்களையும் சுகப்படுத்துவதில் இது நிகரற்றது. 6 வடகம் விலை ரூ. 1—1—0

குறிப்பு:—குழந்தைகளுக்கும், ஸ்திரீகளுக்குமுரிய சகல வியாதிகளுக்கும அனுபவமான மருந்துகள் நம்மிடமிருக்கிறது.

கேட்லாக் வேண்டியவர்களுக்கு இனமாக அனுப்பப்படும்.

காபிரியேல் வைத்தியசாலை

தெப்பக்குளம் P. O. திருச்சினுப்பள்ளி.

பூவும் பூவையரும்

—[*]—

(வேள்ளவத்தை ஸ்ரீமான் தூல. சபாநாதன்)

பூப்போற் பொலிவுடையதும், ஆடவர் மகளிர் இளைஞர் முதிஞர் என்றிவர் யாவராலும் மதவேற்றுமை போலன்றி மகிழ்ச்சியும் விருப்பும் ததும்பி வழியுமாறு ஏற்றுக்கொள்ளப் படுவதுமான பொருள் பிறிதொன்றில்லை யென்றே கூறலாம். சுபகாரியங்கட்கு உரியதாய், எக்கிரியையும் அழகு படுத்தும் தானன்றிப்பொலிந்து விளங்காமைக்கேதுவாவது பூவேயாம். காதலர் தம் காதற்கடையாளமாகப் பூவினை வழங்குகின்றனர். மகளிர் தம் வனப்பு மிகுமாறு பூக்களைக் கொய்து சூடுகின்றனர். மெய்யடியாரெனும் பிறிதொரு திருக்கூட்டத்தினர் இறைவனின் கமலமலர்ப் பாதங்களைத் துதித்தற்குப் பூக்களைப் பறித்துச் செல்கின்றனர். நறுமணம் வீசுதலால் நன்கு துயிலலாமென நந்தமிழரசர்கள் பள்ளியறையை நிரப்புதற்குப் பூக்களை விருப்புடன் ஏற்றனர். பல்வேறு மக்களையும் ஒரு கொள்கையினராய் ஓரினமாக்குவது பூவைப்போற் பிறிதொன்றில்லை.

பூ என்பது வடமொழியில் புஷ்பம் என்ப. அலர்மலர், 'வீ' எனும் பல சொற்களும் பூவினைப்பொதுவே குறிக்குமெனினும் ஒவ்வொன்றும் பூக்களது பல்வேறு நிலைமைக்கண் ஆளப்பட்டு வந்தனவென்பது தமிழ்ச் செய்யுட்களைப் படிப்பார்க்கினிது புலனாகும். மலராத வழி அரும்பெனவும், மலரா நிற்புழிப் போதெனவும் மலர்ந்துழி மலர் எனவும் உலர் முன் அலர் எனவும் பின்னர் வீஎனவும் கூறுப, இத்தகைய பாகுபாடு ஒன்றுமே தமிழரின் சிறப்பினைக்காட்டப்போதுமானது.

மேலை நாட்டாரால் நாகரிகச் சின்னமாக விரும்பி . மேற்கொண்டு ஏனை நாட்டார்க்கு வழி காட்டியாதற்கேதுவாய் பல்வேறு திறப்பூக்களினியல்பும் அவற்றது பயனும்மிகமிகப் பண்டைய காலந்தொட்டே கண்டுபிடிக்கப்பட்டுப் பயனுகர்ந்தாழ்ந்து மறக்கப்பட்டனவேயாம். இதுபற்றிய பெருமை தமிழ் நாட்டார்க்கே சிறப்பாகவுடைமையின் ஏனை நாட்டார்க்கு இது வழிகாட்டியாயமைந்துளது. பூவின் பயனை முற்றக்கண்டுபிடித்துப் பயன்படுத்தியது தமிழ்நாடே. அகப்பொருள்இலக்கண வாசிரியர் பூக்களது உயரிய பயன் கருதினமை யாற்றான் மரமென்றொழியாது பூவென்று ஒரு கருப் பொருள் கூறினர். அன்றியும் ஐந்திணைக்கும் பெயரிட்டவாறு பூவானேயாமென்பர் அவற்றுள் ஒரு சாரார். தமிழ்நாடே பூவின் பயனை நன்கறிந்ததென்பதற்குப் பிறிதோர் சான்றுமுளது. தமிழர்கள் போருக்குச் செல்லும் பொழுது பூச்சூடல் வழக்காறு.

"தென்னாட்டாரைப்போல வேறெந்த நாட்டாரும் பூவை மகிழ்ந்தணிதல் இன்றும் வேறெங்கும் காணக்கிடையாதென்பதும் அறியத்தக்கது" என தமிழ்ப்பண்டிதர் திரு. மு. ராகவையங்கார் அவர்கள் ஓரிடத்திற் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

இனி, இயற்கை நலம் நனி வாய்க்கப்பெற்று மிளிரும் உயிர் பெண்ணெனரம் இயற்கைத்தமிழ்ப்புலவர்கள் உணர்ந்தார்கள். உணர்ந்தாராக, இப்பெண்மணியின் உருவத்தினையும் குணத்தினையும் எமது மனத்திற் பசுமரத்தாணிபோற் பதியச்செய்வதற்குப் பெரியதோர்உபாயத்தினைக் கையாண்டனர். உவமைமுகத்தான் விளக்குதலே சிறந்ததென யூகித்தறிந்த இயற்கையாராய்ச்சிப் புலவர்கள் இயற்கைப் பொருட்களுட் சிறந்த மலர்களையே உவமானமாகக் கொண்டார். இயற்கைத் தோற்றங்களின் சிறப்பியல்புகளை நன்குணரவல்ல புலவர்கள் பூவினையே சிறப்பாகத் தெரிந்தெடுத்துப் பலவகையிலும் உவமானமாக வழங்கிய தன் நுட்பத்தினையும் அதன் வழி நந்தமிழ்ப் புலமையின் சிறப்பினையும் சிறிதாராய்வாம்.

பூவும் பூவையரும்.

1. பகுப்பு:—எல்லாம் நான்கே.

மலர்கள் கோட்டுப்பூ, கொடிப்பூ, நிலப்பூ, நீர்ப்பூ என நான்கு வகையாதலை யொப்ப, மகளிரும் பதுமினி, சித்தினி, சங்கினி, அத்தினி யென நான்கு வகையாதல் காண்க. அன்றியும் மகளிரின் குணங்களும் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என நான்கு வகையாதலால் கண்டின்புறுக.

2. பூத்தற் பருவம்:— பூ அவிழ்தலின் முன் அரும்பு, மொட்டு, முதலிய பருவங்களுடன் பூத்தற் பருவமுங் காணப்படுதலை யொப்ப, மகளிர்க்கும் பேதை, பெதும்பை, மங்கைப் பருவங்களுடன் பூத்தற் பருவ மொன்றிருத்தல் உற்று நோக்குவார்க்குத் தெற்றெனப் புலனும். பெண்கள் ருதுவாதலைப் பூத்தல் . என வழைத்த தமிழரின் அறிவும் இயற்கையுடன் முரணாது சொல்லமைக்கும் அழகும் இருந்தவாறென்னே! இத்தகைய வழகினை இப்பருவத்தினை உணர்த்தும் ஆங்கிலச் சொல்லிற் கண்டு மகிழ முடியுமா? இதுவே தமிழ்ச் சொற்களுக்கும் ஆங்கிலச் சொற்களுக்குமுள்ள வேற்றுமை.

3. மணம்:—மலர்கள் அலர்ந்த பின்னரே அதாவது பூத்தற் பருவமடைந்த பின்னரே நிறை மணம் வெளியாதல் (நிகழ்தல்) கண்கூடு. அங்ஙனமே மங்கையர்க்கும் பூத்தற் பருவத்தின் பின்னர் மணம் நிகழ்தல் இயற்கையமைப்புடன் எவ்வளவு இயைந்திருக்கின்றதென்பதைச் சிறிது உற்று நோக்குமாறு கேட்கின்ரேம். இதுவே பழந்தமிழ் முறையாகும்.

பெண்கள் பருவமாதலைப் பூத்தலென வழைத்த தமிழர் அவர்கள் பயனெய்தலைக் குறித்தற்குரிய சொல் மணமென உணர்ந்தனர். அந்நிகழ்ச்சியை மண நிகழ்ச்சியென மகிழ்வுடன் கையாண்டு வந்தனர். அழகிருந்தும் மணமற்ற முருக்கம்பூப்போன்ற மகளிரால் இவ்வுலகிற்குப் பெரிதும் பயனில்லை யென்பது தமிழர் தம் கருத்துப்போலும். மணமெனும் சொல்லொன்றே நந்தமிழறிஞரின் சொல்லாராய்ச்சிவன்மைக்கும் நுண்மாண் நுழை புலமைக்கும் தகுந்ததோர் எடுத்துக்காட்டாமென்றல் புனைந்துரையாகாது.

4. மங்கலப் பொருள்:— எவ்வித மணச் சடங்கும் மலரும் மகளிருமின்றி மன நிறைவுடன் முற்றுப்பெறுதென்பது திண்ணம். மண வீட்டில் நடத்தப்படும் நிகழ்ச்சிகள் பலவற்றிற்கும் மலர் இன்றியமையாது வேண்டப்படும் பொருளாம். பூரண கும்பம் முதலியன தூக்கிச் செல்லுவதற்கு மங்கல நாண் அணிந்த மகளிரையே விடுதல் ஈண்டு ஒப்பிட்டு நோக்கற்பாலது.

5. மேன்மைத் தன்மை:— மலர்களைப்போலவே மகளிரும் மேன்மைத் தன்மையுடையவர்களெனப் புலவர்கள் அறிந்தார்கள். இதனாற்போலும் மகளிரை மெல்லியலார் என வழைத்தனர்.

6. முகையும் நகையும்:— முகையது முகிழ்ப்பினுள்ளதாய்ப் புறத்துத் தோன்றுதனாற்றம்போல பெண்ணின் நகையது முகிழ்ப்பினுள்ளும் உளதாய்ப் புறத்துத் தோன்

முத குறிப்பொன்றிருப்பதைத் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயினார் குறிப்பறிவுறுத்தல், எனும் அதிகாரத்தில் கூறிய குறள் நுட்பத்தால் இனிதுணர்க.

“முகை மொக்கு ளுள்ளது
நாற்றம்போற் பேதை
நகை மொக்கு ளுள்ளதொன்
றுண்டு.”

இங்ஙனம் பூவுக்கும் பூவையர்க்கும் ஒப்புமை கண்டார் தமிழ்ப் புலவர்கள். இப்பெண் மணிகளை வர்ணிக்கவேண்டிய இடங்களிலெல்லாம் பூக்களையே மனங்கோணாது நிறையப் பெய்து தம் கருத்தினைப் புலப்படுத்துவார்கள். தமிழ்ப் புலவர்கள் பெரும்பாலும் உவமானமாகக் கூறும் மலர்களையும் சுருக்கிக் காட்டுகின்றும்.

கண்:—தாமரை மலரின் இதழ், மொட்டு, கருங்குவளை மலரின் இதழ், காக்கணம்பூ.

முகம்:—தாமரை மலர்.

மூக்கு:—குமிழம்பூ, ஜாதி மல்லிகை, எட்பூ, சண்பகப்பூ.

வாய்?—குமுதம், தாமரை மலர்.

பல்:—முல்லை யரும்பு.

அங்கை:—தாமரைப் பூ, செங்காந்தள்.

கொங்கை:—கோங்க மொட்டு; பூங்கமலம்.

இடை:—பூங்கொடி.

அடி:—தாமரை மலர், அசோகம்பூ அனிச்சமலர், இலவம்பூ.

உடம்பு:—தாமரை மலர் சண்பகப்பூ.

தேமல்:—வேங்கைப்பூ.

கூந்தல்:—வாழைப்பூ.
(கொண்டை)

மகளிரின் உறுப்புகட்கு உவமானமாகக் கூறப்பட்ட மலர்களுள் பெருந் தொகுதி உறுப்புகட்குத் தாமரை மலர் உவமானமாக வருதல் உற்று நோக்குவார்க்குத் தெற்றெனப் புலனாகும். இந்நுட்பத்தினையும் தமிழ்ப் புலவர் காணாது விடவில்லை. இதனைக்கண்டு மகிழ்வுற்ற தமிழ்ப் புலவரொருவர்,

“திருமுகங் கமல மிணைவிழி
கமலஞ்
செய்யவாய் கமல
நித்திலந்தாழ்
வருமுலை கமலந் துணைக்கரங்
கமலம்
வலம்புரி யுந்திபொற் கமலம்
பெருகிய வல்குன் மணித்
தடங் கமலம்
பிடிநடைத் தாள்களுங்
கமலம்
உருவவட் கவ்வா முதலி
னன்றே
யுயர்ந்தது பூவினுட்
கமலம்”

எனப் பாடியுள்ளார்.

தமிழருள் ஆடவர், மகளிர் என இருபாலாரும் பூச்சூடலில் விருப்புக்கொண்டிருந்தனர். எனினும் மகளிரே பெருவேட்கையோடு சூடி வந்தனர் என்பது தமிழ் நூல்களால் நன்கறியக் கிடக்கின்றது. மகளிரைப்பற்றிக் கூறுமிடங்களிலெல்லாம் அவர்கள் பூப்பறித்தல், பூமாலை கட்டல், சூடல் முதலிய செயல்களும் பெரும்பாலும் ஒருங்கே கூறப்பட்டிருக்கும். படவேநந் தமிழ்ப் பூவையர் விரும்பிச் சூடியது பூவேயென்பது பெறப்படும். அகப் பொருளிலக்கணத்தில் வண்டோச்சி மருங்கணைதல் எனும் துறையானும் மகளிர் பூவணிந்திருப்பர் என்பது பெறப்படும். இன்னும் பூத்தரு புணர்ச்சி எனும் துறையினை நோக்குமிடத்தும் மகளிரின் பெருவேட்கை மலராதல் தெளிவாகப் புலனாகும். விக்கிரம சோழனுலாவில் பேதைப் பருவப் பெண்ணொருத்தி பாட்டுடைத் தலைவன் பவனி வருவதைக் காணச் சென்றாளெனவும் அவனணிந்து பூமாலை மீது அவளது உள்ளம் சென்றதெனவும் கூறப்பட்டிருத்தல்காண்க. இதனாலும் பூவையர் விரும்புவது பூவேயாமென வுணர்க.

மகளிர்க்கும் மலர்க்கும் இத்தகைய இயைபுகளைக் கண்ட தமிழ்ப் புலவர்கள் தங்கட்குள் ஒரு மரபினைக் கையாண்டனர்.

“மகளிர் தீண்டப் பிரியங்குவும் அவர் வாயினின்று மதுவினை உமிழ வகுளமும், அவர் காலாலுழக்க அசோகமும் அவர் நோக்கத்திலகமும், அவர் தவழுக் குரவமும் அவர் இனிய சொற்குற மந்தாரமும், அவர் மதுவுண்டு களித்துச் சிரிக்கச் சண்பகமும், அவர் வாயால் ஊத மாமரமும் அவர் பாட நமேருவும், அவர் முன்னே ஆடக் கர்ணிகாரமும் மலர்கின்றன” என வருதல் கவி மரபாயிற்று.

பூமகளையும் நாமகளையும் பூவின்மேல் வீற்றிருக்கச் செய்த தமிழ்ப் புலவர்களின் அருவு இருந்தவாறென்னே! இதனாலும் பெண் பாலார் விரும்புவது பூவேயாமென்பது தேற்றம்.

பூவையர் எங்ஙனம் பூவையொத்திருக்கின்றனர் என்பதையும் பூவையர்க்குப் பெருவிருப்பு மலர் என்பதனையும், பூவுக்கும் பூவையர்க்குமுள்ள உள்ள இயைபினைத் தமிழர்கள் நன்கறிந்திருந்தார்கள் என்பதனையும் இயன்றவரையில் எடுத்துக் காட்டினும். பண்டைக் காலத் தண்டமிழ்ப் புலவோர் உயர் தனித் தமிழ் முழுமணிச் சொற்களால் பல பாமாலைகளைப் பூங்கொடியனைய பூவையர்க் கணிந்தனர். ஆனால் இக்காலமகளிரின் செந்நீரற்று வெளுத்து, உடலோம்பாது மெலிந்து காணப்படும் உருவினைக் காணின், நம்புலவர்கள் எத்தகைய பாக்களை எமக் களித்திருப்பார்களோ அறிகிலாம்.

இண்டோ-கமர்ஷியல் பாங்கி லிமிடெட்

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் } மாயவரம்   ஸெண்ட்ரல் ஆபீஸ் } மதராஸ்

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூ. 25,00,000.   வழங்கப்பட்ட மூலதனம் ரூ. 21,25,000.

செலுத்தப்பட்ட மூலதனம் 17,49,650.

மதராஸ் ஆபீஸ்கள் : அரண்மனைக்காரத் தெரு, சைனுபஜார், மாம்பலம், மைலாப்பூர் & திருவல்லிக்கேணி.

கிளை ஆபீஸ்கள்

பெர்ஹாம்பூர்	கும்பகோணம்	தஞ்சாவூர்	தூத்துக்குடி
சிதம்பரம்	மதுரை	திருநெல்வேலி	வேலூர்
கோயமுத்தூர்	நாகப்பட்டணம்	திருப்பத்தூர்	விருதுநகர்
ஏலூர்	பாலக்காடு	திருப்பூர்	விசாகப்பட்டணம்
ஈரோடு	புதுக்கோட்டை	திருவாரூர்	விஜயநகரம்
காரைக்குடி	சேலம்	திருச்சிராப்பள்ளி	

ஸப் ஆபீஸ்கள்

அம்தாலவல்ஸா, அனகபள்ளி, அருப்புக்கோட்டை, பவானி, காஞ்சீபுரம், கோபிசெட்டிப்பாளையம், மாருதேர், பாலக்கோல், பார்வதிபுரம், சாலூர், செவ்வாய்ப்பேட்டை, சீர்காழி, தாடே பள்ளிக்கூடம்.

டைரக்டர்கள்

டி. ஆர். வெங்கட்டராம சாஸ்திரி, ஸி. ஐ. இ.
என். வி. ராகவன், ரிடயர்ட் அக்கவுண்டண்ட் ஜெனரல்.
வி. வெங்கட்டராம அய்யர், எம். ஏ., பி. எல்.
கே. சுப்பய்யர்.
ஆர். விச்வநாத அய்யர், பி. ஏ., பி. எல்.
ஆர். எஸ். ஏ. சங்கர அய்யர்.
கே. சிவஸ்வாமி அய்யர்.
எஸ். என். என். சங்கரலிங்க அய்யர்,
(மானேஜிங் டைரக்டர்.)

காசி யாத்திரை

செய்ய

மலிவான டிக்கட்டுகள்

எம். எஸ். எம். ரயில்வே எல்லா ஸ்டேஷன்களிலும் "ஸ்டாண்டர்டு சுற்றுப் பிரயாண டிக்கட்டுகள்" அகப்படும்.

இந்த டிக்கட்டுகளுடன் துங்கபத்திரா, பண்டரீபுரம், நாஸிக் (பஞ்சவடி), துவாரகை, மதுரா, குருக்ஷேத்திரம், ஹரித்வாரம், நைமசாரண்யம், அயோத்தியை, பிரயாகை, காசி, கயா, பூரி முதலிய க்ஷேத்திரங்களுக்கும்,

பம்பாய், பரோடா, ஆமதாபாத், ஜாம்நகர், ஆஜ்மீர், ஜெய்ப்பூர், ஆக்ரா, டெல்லி, கல்கத்தா மற்றும் பல நகரங்களுக்கும் சென்று வரலாம்.

பிரயாணத்தை மூன்று மாதங்களுக்குள் முடித்துக் கொள்ளவேண்டும்.

ரயில் சார்ஜ் சாதாரண சார்ஜில் சுமார் முக்கால் பாகமே.

மற்ற விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

சீப் கம்மர்ஷியல் மானேஜர்,

எம். எஸ். எம். ரெயில்வே, மதராஸ்.

புண்ணிய க்ஷேத்திரங்கள்

பிரயாண வசதிகள்

இந்தியா, புண்ணிய க்ஷேத்திரங்களும், புராதனக் கோயில்களும் நிறைந்ததொரு தேசமாகும். ஆங்காங்கு நடைபெறும் உத்ஸவங்களுக்குப் பல பாகங்களிலிருந்தும் யாத்ரிகர்கள் சென்று வருகின்றனர். தென்னிந்தியாவிலுள்ள பிரதான க்ஷேத்திரங்களுக்கு வட நாட்டிலிருந்தும் யாத்ரிகர்கள் வருவதை நாம் கண்டிருக்கின்றோம். இவ்வித உத்ஸவங்களுக்கு ரெயில்வே கம்பெனியார் குறைந்த கட்டணங்கள் அளித்து வருகின்றனர். வெகு தூரத்திலுள்ள க்ஷேத்திரங்களுக்கும் சென்றுவர ரெயில்வேக்கள் இப்பொழுது பிரத்யேக வசதிகள் அளித்துவருகின்றன.

2-வது மூன்றாவது வகுப்பு யாத்ரிகர்களுக்கான ஸ்பெஷல் வண்டிகளுக்குப் பிரத்யேகக் குறைந்த கட்டணங்கள் அளிக்கப்படுகின்றன. தவிர இவ் வண்டிகளில் பிரயாணம் செய்யும் ஒவ்வொரு மூன்றாவது வகுப்புப் பிரயாணிக்கும் இரண்டு ஸீட்டுகள் வீதம் கொடுக்கப்படும். சமையல், சாப்பாடு சௌகர்யத்திற்காக ஒரு தனி குட்ஸ் வாகனும் கொடுக்கப்படுகின்றது. க்ஷேத்திரங்களுள்ள இடங்களில் ரெயில் வண்டியிலேயே தங்கப் பிரயாணிகள் அனுமதிக்கப்படுகின்றனர்.

ஒரு ஸ்பெஷல் வண்டிக்கான போதிய பிரயாணிகள் இல்லாவிடில், யாத்ரிகர்கள், ரிஸர்வ் செய்யப்பட்ட வண்டிகளில் ஏற்றிச் செல்லப்படுகின்றனர். இங்கும் கூட குறைந்த கட்டணங்கள் அளிக்கப்படுவதுடன் ஒவ்வொரு மூன்றாவது வகுப்புப் பிரயாணிக்கும் இரண்டு ஸீட்டுகள் கொடுக்கப்படும். ஸ்டேஷன்களின் இந்த வண்டிகளிலேயே தங்கப் பிரயாணிகள் அனுமதிக்கப்படுவர்.

தனியாகப் பிரயாணம் செய்பவர்கள், மூன்று நான்கு பேர்கள் சேர்ந்த தொகுதி இவர்களது சௌகர்யத்தையும் மறந்து விடவில்லை. வட இந்தியாப் பூராவும் போய் சுற்றிவர மூன்று மாதங்கள் செல்லுபடியாகக் கூடிய "ஸ்டாண்டர்ட் ஸர்குலர்" டிக்கட்டுகள் கொடுக்கப்படுகின்றன.

சாதாரண கட்டணத்தில் $\frac{3}{4}$ சார்ஜ்தான் இந்த டிக்கட்டுகளுக்கு வாங்கப்படும்.

ரெயில்வே கம்பனியார் அளித்து வரும் இப்பிரயாண வசதிகளுக்குப் போதிய ஆதரவு இருப்பதாக எம். எஸ். எம். ரயில்வேயிலிருந்து நாம் அறிகிறோம். அனேக ஸ்பெஷல் வண்டிகளும், ரிஸர்வ் செய்யப்பட்ட வண்டிகளும் ஏற்பாடு செய்ததாக நாம் அறிகின்றோம். 'ஸ்டாண்டர்ட் ஸர்குலர்' டிக்கெட்டுகளின் விற்பனையும் திருப்திகரமாக விருப்பதாக அறிவிக்கின்றனர்.

எம். எஸ். எம். ரெயில்வேயில் பிரத்யேக வண்டிகள் ஏற்பாடு செய்யும் பிரதம ஆர்கனைஸர்களான மெஸர்ஸ் ராம் மோஹன் கம்பெனியார் பிரயாணிகளுக்குத் தகுந்த வசதி செய்வதாக அறிகின்றோம். யாத்ரிகர்கள் விரும்பினால் அவர்களுக்குச் சாப்பாடு முதலிய வசதிகளும் செய்து வருகின்றனர். இவ்வண்டிகளில் பிரயாணிகளின் சௌகர்யத்திற்காக தேர்ச்சிபெற்ற வைத்தியரும் கூடச்செல்ல ஏற்பாடு செய்யப்படுகின்றது. எந்த க்ஷேத்திரத்திலாவது மூன்று தினங்களுக்குமேல் தங்கினால் பிரயாணிகள் துணிகளைச் சலவை செய்து கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுளது. ரொக்கம், நகைகள் முதலியவற்றைப் பத்திரமாகப் பாதுகாக்கவும் இவர்கள் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

ரயில்வே கம்பெனிகள் அளித்துவரும் சௌகர்யத்தைப் பொது மக்கள் இன்னும் அதிகமாக உபயோகித்துக்கொள்ளுவார்களென நம்புகிறோம்.



ஜெர்ஸோப்பா நீர் வீழ்ச்சி

நான் பெற்ற இன்ப வெள்ளம்

—:(0):—

(கௌண்டின்யன்)

விஜயதசமியன்று பராசக்தி அபஸ்மாரன் முதலிய அஸுரர்களை வென்று உலகத்திற்கு க்ஷேமத்தை உண்டாக்கின வைபவத்தை நாம் கொண்டாடுகிறோம். ஆயினும் பிணி, வறுமை என்ற பல கொடிய அஸுரர்களின் பாதையிலிருந்து நாம் இன்னும் விடுபடவில்லை. கையில் பணமில்லாததுமட்டும் தரித்திரமல்ல. அழகற்று, ஊக்கமின்றி, செக்கு இழுக்கும் மாடுகள் போல் கட்டுண்டு, உண்பதும், உறங்குவதும் சாரமற்ற வேலைகளை விதியேயென்று செய்வதுமான வாழ்க்கைக்கொப்பான தரித்திரம் வேறு கிடையாது. இப்படி நடைப்பிணமாகக் காலந் தள்ளுபவர் பெரும்பாலும் நகரவாசிகள். இதில் அதிசயிக்கத்தக்கதொன்றுமில்லை. ஒருவன் ஸதாஸர்வகாலமும் தன் இனத்தைத் தவிர வேறு எதையும் காணாமல் உழன்று கொண்டிருந்தால் அவனுக்கு மனிதர்களிடத்திலேயே வெறுப்பு வருவது சகஜம் தான். அதனாலன்றோ நகரவாசிகளை ஆங்கிலப் பேராசிரியரான கார்லைல் என்பவர், குடத்தில் அடைப்பட்டு ஒன்றுக்கு மேல் இன்னொன்று தலையை வெளியே நீட்ட முறுக்கிக் கொண்டு கிளம்பும் பாம்புகளுக்கு ஒப்பிட்டிருக்கிறார். இதை உத்தேசித்தே ஈசுவரன் கற்பனைக்குத்தானே சிகரம் என்று மனிதன் அகந்தையடைந்திருந்தாலும், அவனை மட்டும் உண்டு பண்ணினால் போதும் என்றிராமல் சிருஷ்டி தர்மமானது கொடி, மரம், புஷ்பம், பறவை முதலான இதர ஜீவ வர்க்கங்களைக் குறைவற உண்டுபண்ணி வருகிறது. ஆனால் சாதாரணமாக நகரங்களில் இவைகள் காண்பதரிதாயிருப்பது மனிதன் குற்றமே. இந்தக்குறையை நகரவாசிகள் ஒருவாறு தீர்த்துக்கொள்வதற்குச் சுலபமான உபாயமொன்றுண்டு. அதற்குப் பெயர்தான் தோட்டம்.

"இதென்ன, ஐயா, நீர் சொல்வது விபரீதமாயிருக்கிறதே! வயிற்றிற்குச் சோறு இல்லையென்றால், ஹல்வா சாப்பிட்டால் போச்சு, என்று லகுவாகச் சொல்லுகிறீரே! ஐந்து குடித்தனத்தோடு ஆறாவதாய் ஒண்டிக்குடியிருந்தாலே குடிக்கூலி கொடுக்க முடியாமல் மூன்று மாதத்திற்கொரு தரம் வீடு மாற்ற வேண்டியிருக்கும் ஜனங்களுக்குத் தோட்டம் போட்டு அநுபவிக்கும் இன்பம் எப்படிக் கிடைக்கும்? வசதி உண்டா, ஒழிவுண்டா, பணமுண்டா, கவலையற்று இயற்கையமைப்பின் அழகில் ஈடுபடுவதற்கு வேண்டிய மனவமைதிதானுண்டா" என்று பலபடியாகக் கேட்கக்கூடும்! அந்த ஆக்ஷேபணையைப் பொருட்படுத்தாமலும் இருப்பதற்கில்லை. ஆனாலும் மனமிருந்தால் எவ்வளவு சௌகரியக் குறைவிருந்தாலும், உள்ளத்துக்குள் கொஞ்சம் இதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொள்ளலாம். உதாரணமாக, சொற்பகாலத்திற்கு முன்கூட கிராமங்களிலோ நகரங்களிலோ துளசி மாடமில்லாத வீடுகள் அநேகமாகக் கிடையா. இப்பொழுது அவை கண்ணில் படுவதே அபூர்வம். வெகுவாக மாடங்களிருந்தாலும் அவற்றில் துளசியிருப்பதில்லை. இதற்குக் காரணம் நமது பெண்மணிகளின் சிரத்தைக் குறைவுதான். அவர்கள் மனம் வைத்தால், பழக்கத்திற்குள்ள இடம் சொற்பமாயிருந்தாலும், அதில் துளசி, ரோஜா, காசித்தும்பை முதலானசெடிகளைச் சட்டியில் சுலபமாய் வளர்க்கலாம். ஆனால் அதற்குக் கொஞ்சம் பாடு படவேண்டும். வெயில் வேண்டிய வேளையில் வெயிலிலும் நிழல் வேண்டிய வேளையில், நிழலிலும் தொட்டிகளை மாற்றிவைக்கவேண்டும். காலாகாலத்தில் தண்ணீர் விடவேண்டும். பூச்சி புழு வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நமது நகர மாதர்களோ "இந்தத் தொல்லையெல்லாம் யார் படுவது? வாசலில் நித்தியம் விதம்விதமான பூ விலைக்கு வருகிறது, வாங்கினால்போச்சு. வெள்ளிக்கிழமை பூக்கடைக்குப்போனால் வேண்டிய பூ கொண்டுவரலா"மென்று எண்ணுகிறார்கள். அவர்கள் புருஷர்களும் அதையே வேதவாக்காகக் கொண்டு மணமில்லாததும் பரித்து நாளானதும் வாடி வதங்கியதுமான சாமந்தி முதலான புஷ்பங்களை கழுதை விஷ்டை கை நிறைய என்று வாங்கிக்கொண்டு வந்து தள்ளி விடுகிறார்கள். அதைத் தலையில் சுமந்துகொண்டு ஸ்திரீகளும் களிக்கிறார்கள். இதை விடப் பரிதாபப் படக்கூடியது வேறுண்டோ?

இப்பேர்க்கொத்தவர்களையாவது ஒருவாறு சேர்த்துக் கொள்ளலாம். சில பெண்கள் மலர்ந்து மணம் வீசும் புஷ்பங்கள் நிறைந்த தோட்டத்தைக் கண்டால் காய்ந்த மாடு கம்பில் விழுந்தாற்போல், பூச்செடிகள்மேல் பாய்ந்து மலர்களை வெடுக்கென்று பிடுங்கித் தங்கள் கூந்தல்களை அலங்கரிக்க ஆவல் கொள்ளுகிறார்கள். சிலருக்கு என்ன பூ என்று கூட விசாரிக்கவேண்டிய அவசியமில்லை. புளியம் பூவாயிருந்தாலும் சரிதான், பூவரசம் பூவாயிருந்தாலும் சரிதான். "முகரப்படாத புஷ்பமும், நகத்தால் கிள்ளப்படாத துளிர்களும் எவன் அநுபவிக்கக் கொடுத்து வைத்திருக்கிறானோ" என்று சொன்ன துஷ்யந்தனும், அலங்காரப் பிரியையாயிருந்தும் இளந் துளிர்களைக் கொய்ய மனமில்லாத சகுந்தலையும் சுத்தக் குப்பைக்காட்டுப் பேதைகளென்றே இம்மாதர்கள்—காளிதாஸனென்ற கவி யொருவரிருந்த செய்தி அவர்கள் காதிற்கெட்டும் பக்ஷத்தில் நிச்சயமாகத் தீர்மானிப்பார்கள். இப் பெண் பிசாசுகளைவிடப் பொல்லாத பிரம்மரக்ஷஸுகளும் உண்டு. அவர்கள் அழகான தோட்டத்திற்கு முக்கிய சத்துருக்கள். அதிகாலையில் எழுந்திருந்து குடலையும் கையுமாய் எங்கே மனோகரமான புஷ்பங்கள் இருக்கும், எந்தத் தோட்டக்காரன் தூங்கிக்கொண்டிருப்பானென்று வெகு தந்திரமாகப் பூக்களைக் கொள்ளை கொள்ளும் இவர்களை யாராவது கண்டுவிட்டால் அசட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டு "ஒண்ணுமில்லை, பூஜைக்கு இரண்டு புஷ்பமெடுத்தேன். பகவானுக் கர்ப்பணம் பண்ணத்தானே இதெல்லாம்" என்று வேதாந்தம் படிப்பார்கள். பூ செடியிலிருந்தால் பகவானுக்குத்திருப்தியாகாதோ?

இந்தச் சென்னையிலேயே எனக்குப் பழக்கமுள்ள சிறிய பூந்தோட்டமொன்றுண்டு. அது ஒரு வீட்டிற்கெதிர்ப்புறம் உள்ளது. நமது தேசத்திற்குப் பழமையான பன்னீர், பவழமல்லி, நந்தியாவட்டை, அரளி, செம்பரத்தை முதலிய மரஞ்செடிகளும் இடையிடையே மல்லிகை, ரோஜா, கனகாம்பரம் முதலான சிறு புஷ்பச் செடிகளும், கொழுத்துத் தளதளவென்று வளர்ந்து பல வர்ணங்களின் சித்திர அமைப்பால்கண்ணைப்பறிக்கும் 'குரோடன்'களும் அங்கு காணப்படும். இந்த வீடு ஜன சஞ்சாரம் அதிகமாயில்லாத.

இடத்தில் இருப்பதால் மரங்களில் கப்பியோ வேறு புழுதியோ படிவதில்லை. எங்கே பார்த்தாலும் பச்சென்றிருக்கும். காக்கைகூடக் கண்ணில் படுவது அபூர்வமாயிருக்கும் இந்த ஜன நெருக்கடியான நகரத்தில் காண்பதற்கரிய அனேக பறவைகளை அச்சிறு தோட்டத்தில் காணலாம். பொழுது விடியுமுன் அவைகளின் மதுரமானதும் பல மூர்ச்சனைகள் வாய்ந்ததும் ஜீவகளையுள்ளதுமான பாட்டுக்கிளம்பிவிடும். பாடத் தெரியாத பக்ஷிகளும் தங்கள் சிறகழகை விரித்துப் பிரசிங்கிப்பதுபோல்மரத்துக்கு மரம் தாவும். இவைகளில் முக்கியமாக ஒரு மீன் குத்திக்குருவியைக் கவனித்திருக்கிறேன். அது ஒரு மரத்தில் வந்து உட்கார்ந்தால் அசைவற்று அரை நாழிகையோ ஒரு நாழிகையோ நிஷ்டையிலிருப்பது போல் காணப்படும். செம்பழுப்பேறின தலையும் வெளுத்த கழுத்தும் கண்ணைப்பறிக்கும் இந்திர நீல இறக்கைகளும் பிளந்து கூரிய மூக்கும் அரைவரிசை மூடின கண்களுமுள்ள அந்தப் பக்ஷி வாழை யிலை நிழலில் பதுமைபோலிருப்பதைப் பார்த்தால் வைர மணி டால் வீசும் கார் காலத்துச் செவ்வானம் பிண்டு விழுந்தாற்போல் தோன்றும். இதற்கு மூக்கு எவ்வளவு நீளமோ அதைவிட நீளமான வாலுள்ள பறவையுமொன்று அங்கே அடிக்கடி வரும். மாசடைந்த மேற்கே சொடுக்கு குன்னல் உதித்தாற்போல், இலையடர்ந்த மர நடுவே அதன் தோகை வால் வெண்சாமரம் வீசி நிற்கும் காக்ஷி மனதில் உள்ளுணர்வையும் தட்டி எழுப்பும். இக்காரணம்பற்றியே ''வால் நீண்ட குருவியை வழிநடுவே கண்டால் கால் நடையாகப் போனவன் கனக தண்டியில் வருவான்'' என்ற வசனம் அதற்கு மங்களகரமான குணங்களைச் சாற்றுகின்றது போலும்.

மீன் குத்தி, வால் நீண்ட குருவி இவைகளைப் பக்ஷிவர்க்கத்தின் பரம்பரை பிரபுக்களெனலாம். அவை சேர்ந்து கூட்டம் போடுவதில்லை. ஆடம்பரத்தோற்றத்தோடு கம்பீரத்தன்மையும் கூடியவை. நமதுதோட்டத்திலுள்ளமாதுளைப்பிஞ்சுகளில் துரைப்பணம் போடும் ஆவலோடு கும்பல் கும்பலாக வரும் பச்சைக் கிளிகளோ இதற்கு நேர் விபரீதம். அர்த்தராத்திரியில் குடை பிடிக்கும் புதுப்பணக்கார்களைப்போல் செருக்குண்டு உறக்கக் கூவியழைக்கும் தங்கள் அழகை மற்றவர் மறவா வண்ணம்; சல சலவென்று; சச்சரவிட்டுக் கொண்டு ஆகாயத்தில் ஆல வட்டம் கட்டினதுபோல் பறந்து வரும். பழத்தில் ருசிகண்ட அவற்றிற்கு வெகு தைரியம்; தைரியத்திற்குத் தகுந்த புத்திகூர்மை, மாதுளை மரத்தில் முந்திரிப் பழம் பழுத்தாற்போல் தொத்திக்கொண்டு சிவந்து வளைந்த மூக்கால் பிஞ்சுகளைக்குடையும். இந்தத்திருடர்கள் சட்டென்று கண்ணுக்குப் புலப்படார். ஆனால் நெருங்கித் தாக்கினால், ஒன்றுபோல் நூறு கிளிகள் உடனே எழும்பி 'சோ' வென்று சத்தம் செய்துகொண்டு உல்லாசமாகப் பறந்து செல்லும். இவைகள் தரிசனம் தினம் கிடைப்பதில்லை. மாதுளையின் தித்திப்பை நினைத்தால் அதுவும் ஒரு விதத்தில் நல்லதுதான். தெவிட்டாத ஆனந்தத்தைக் கொடுக்கும் பாடும் பறவைகளோ சாதுக்கள்; பரோபகாரிகள்; நமது தோட்டத்தில் எப்பொழுதும் காணப்படுவன. இவைகளின் கீர்த்தி பெரிதாயிருந்தாலும் மூர்த்தி சிறிதே. சிட்டுக் குருவியும், குயிலும், வாலின் உட்புறம் சிவந்து மற்ற உடல் முழுதும் கருத்த சிறு பக்ஷி வகையொன்றும், 'கௌன்' போட்ட பாரிஸ்டர்போல், எஃகு நிறமுள்ள தலைத் தொப்பியும், வெளுத்த மார்பும், கறுத்த முதுகுமுள்ள இன்னொரு பக்ஷி தினுசும் அங்கே நடமாடினபடியே யிருக்கும். இவைகளில் இரட்டிடையாகவே சஞ்சரிப்பன சில; அவைகள் பாட்டும் இரட்டையாகவே தான் பாடுவது. ஒன்று பல்லவி பாடினால் இன்னொன்று வேதாத்தியயனம் பண்ணும் பிள்ளைகள்போல் சந்தை சொல்லும்; சில சமயம் அனுபல்லவியும் பாடும். ஓரிடத்திலுட்கார்ந்தபடியே பாடும் பழக்கம் இவைகளுக்குக் கிடையாது. ஆனால் நமது சங்கீத வித்வான்கள் பெரும்பாலர் உட்கார்ந்த இடத்திலிருந்தபடி கல்லுரலில் குழவி சுழல்வதுபோல் சுழன்று விகார சேஷ்டைகளைச் செய்கிறார்களே! அந்தக் கோணல்களும் இந்தப் பறவைகளிடம் காணமுடியாது. அவை பாடும் போதே ஆடும். அதாவது, மரத்துக்கு மரமும் கிளைக்குக் கிளையும் அலக்ஷியமாய்த் தாவி கண்ணிமை மூடித்திறப்பதற்குள் அங்கேயுள்ள வேலையை முடித்துக்கொண்டு வேறிடம் சென்று, தமது சரீரம் லேசா, தாமுட்காரும் இலைகள் லேசா என்று பரீக்ஷிப்பதுபோல், நமது புத்திக்கெட்டாத தாளக் கட்டுக்கிசைந்து நர்த்தனம் செய்த வண்ணமிருக்கும். வயிற்றுக்காகாரம் தேடுவதற்காக இப்படிச் செய்கின்

King of Anjanams
Maha Sanjeevi
60 Years Fame & Name

பாம்களுக்கோ—அஞ்சனங்களுக்கோ
அரசன் - அரசன்.
இதை வெல்ல வேறு இல்லை.
அணு 10· அணு 5—சைஸ்கள்.
எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.

இது ஆதி குரு முறை அமைந்த பக்குவம்
நாங்கள் அநேக தலைமுறைகளாய் ஆயுள்வேத
சித்தர் சாஸ்திரத்தில் பாண்டித்தியமுடையவர்கள்.
மூன்று தலைமுறையாய் ஐரோப்பிய
வைத்திய சாஸ்திரத்தில் தேறி பட்டம் பெற்றவர்கள்.
டாக்டர் ஏ. மதுரம், குருமருந்துசாலை,
திருச்சி.
We are Family of Doctors.

Dr. S. MATHURAM
Sub Assistant Surgeon
Diploma 1872. I


Dr. A. MATHURAM
Sub Assistant Surgeon
Diploma 1900. II

Dr. EDWARD MATHURAM
L. M. P.
Diploma 1930. III


Dr. NAOROJI MATHURAM
L. M. P.
Diploma 1935. IV

குழந்தைகளுக்கு : குரு மருந்துகளே உலகப்பிரசித்தம் பெற்று விளங்குகிறது.
ஸ்திரீகளுக்கு : குரு மருந்துகளை வெல்ல வேறில்லை.
டானிக்குகள் : தாதுவிர்த்திக்கோ, ரத்தவிர்த்திக்கோ குரு மருந்துகளுக்கு மேலானது இல்லை.

றன என்று நம்புவதற்கில்லை. மனிதனும் ஓயாமல் உதர நிமித்தம் பாடு படுகிறான்; ஆனால் அவனுக்கு உற்சாக மெங்கே? தெம்பு எங்கே? பார்ப்பவர் மனதைக் கவரும் காந்த சக்தி எங்கே? ஆகாரம் அவசியம்தான். பக்ஷிகள் வாயு பக்ஷணம் பண்ணவில்லை. இரை தேடவேண்டிய முடையிருந்தும் குதூகலமாகக் காலங் கழிக்கும் பறவைகளின் ரகசியத்தை நாம் கற்றால் ஒரு வேளை சுகமாக வாழலாமோ?

அழகிய தோட்ட மென்றால் அது பஞ்சாமிர்தம் போல் பல சுவைகளடங்கியது. ஒவ்வொரு சமயத்தில் ஒரு சுவை மேலிடும். செவிக்கினிமை தரும் பறவைகளின் கொண்டாட்டம் காலை வேளையிலும், கண்ணுக் கானந்தத்தைக் கொடுக்கும் பலவித வர்ணங்கள் வாய்ந்த புஷ்பங்களின் உற்சவம் நடுப்பகலிலும், நறுமணம் வீசும் மலர்களின் மஹிமை வியாபிப்பது மாலையிலுமாக நமது தோட்டத்தில் இடைவிடாது இன்ப வெள்ளம் ஊறிக்கொண்டே இருக்கும். ஆயினும் எனக்கு அது நடுப்பகலில் கொடுக்கும் சுகத்திற்கு ஈடு வேறு எதுவுமில்லை. சாந்தம் குடிகொண்டிருக்கும். வெறுப்பான சத்தம் அடங்கின அவ்வேளையில், மாடப்புறாவின் அன்பு நிறைந்த மந்தச் சொல்லும், மறைவிடத்திலிருந்து மனோ ராஜ்யம் செய்பவன்போல் மாறாது மடித்துவரும் செம்போத்தின் தொண்டைக்கூவலும், அத்தோட்டத்திலுள்ள கொட்டகையின் நிழலில் வட்டமிடும் வண்டின் ரீங்காரமும் பகல் சொற்பனத்தில் பேசினாற் போன்றி உவகைதரும். மெல்லிய காற்றில் அசைந்தாடும் அரளிக்கொத்துகளும், பழைய தந்தம் போன்ற மஞ்சள் பிளந்த பாரிஜாதங்களும், ஜப்பான் விளக்குத் தொங்கவிட்டாப்போல் பந்து பந்தாய் மிதக்கும் அடுக்குச் செம்பரத்தைகளும், நிர்மலமான ஆகாசத்தில் சூரியனுக்கு 'ஸாசிவ்யம்' செய்யும் அத்தருணத்தில் இயற்கையே மோன நிலையில் அமரும். அப்பொழுது செடிக்குச்செடி சந்தடியில்லாமல் சேவைசெய்யும் வண்ணாத்திப் பூச்சிகள் அபூர்வமான நிற விமரிசையும் அதிசயிக்கத்தக்க அலங்காரச் சின்னங்களும் நிறைந்து ஒளிவீசும் தங்கள் தேகவனப்பினால், அம்மோனத்தின் ஆவிதான் இப்படி உலவுகிறதோ என்ற ஏமாற்றத்தை உண்டுபண்ணும்.

இவ்வமைதியில் ஈடுபட்டுத் திண்ணையில் உட்கார்ந்து உறக்கம் விழிப்பு இரண்டுமில்லாத நடு நிலையில் அசைவற்றிருப்பவருக்குச் சாதாரணமாகக் கவனத்தில் வராத பல விஷயங்கள் துலங்கும். கொட்டகையின் உட்புறத்தில் மெல்லிய சிம்பு ஒன்றில் ஒரு பல்லி, ஒற்றை மரப் பாலத்தில் கைப்பிடியைப்பற்றிச் செல்லுவான் போல, நிதானமாகப் பச்சை நரம்பு படைத்த தன் வயிறு உறையும்படி தலைகீழாய் நகர்ந்து செல்வதை இதற்குமுன் குறிப்பாக நான் பார்த்ததில்லை. வண்டின் ரீங்காரம் ஒற்றுதுவதுபோல் ஒரே சுருதியிலிருந்தாலும், அதன் சுறுசுறுப்புக் கெல்லையில்லை. அதோ அந்த விட்டத்தில் காணப்படும் நெருப்புச் சுட்டாற்போல் கறுத்திருக்கும் ஓட்டையில் இந்த வண்டு தலையை உள்ளே விட்டு வால்மட்டும் வெளியே தெரிய அரை நிமிஷம் இருந்து, உடனே வாயில் வந்து காத்தாடிபோற் சுழலும் இறக்கைகளின் வேகத்தால் அந்தரத்தில் நின்று தலையை இப்படியும் அப்படியும் சாய்த்து நுண்ணிய கொம்புகளையாட்டுவதைப்பார்த்தால், ஒரு சிற்பி சில சமயம் தான் தயாரிக்கும் பதுமையைக் கையுளியால் தீவிரக் கூர்மையுடன் செதுக்கியும் பிறகு பின்னால் நகர்ந்து கை யசைவற்றிருக்கப் பொங்கி வரும் மனோபாவங்களை வெளிப்படுத்தும்படி அடுத்த வெட்டு எப்படி விழவேண்டு மென்ற யோசனையில் ஆழ்ந்திருக்கும் காக்ஷி ஞாபகத்திற்கு வருகின்றது இப்போர்க்கொத்த விநோதங்களைக் கவனமும் ஊக்கமும் மட்டும் இருக்கும்பக்ஷத்தில் நாம் அடிவைக்குமிடமெல்லாம் காணலாம். காசு கொடுத்துக் கண்ணெரியப் பார்க்கும் சினிமாக் காட்சிகள் இதற்கு எந்த விதத்தில் ஒப்பாகும்? நாம் வசிக்கும் உலகத்தின் அழகையும் சிறப்பையும் அறியவேண்டுமானால் பூந்தோட்டத்தில் ஒழிந்த வேளையில் பொழுதுபோக்குவதற்கீடான சாதனம் வேறு கிடையாது.

ஸ்ரீமத்
பகவத் கீதை.
விலை ரூ. 3.
★
சரித்ரக்கொத்து
ரூ. 2-8.
★
ஆழ்வார்கள் - - சரித்திரம்
விலை ரூ. 1-8.
"சுதேசமித்திரன்" ஆபீஸ், சென்னை.

பம்பாய் லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

(ஸ்தாபிதம் 1908)

45-47, சர்ச் கேட் தெரு — — போர்ட் பம்பாய்.

அபிவிருத்தி, பத்திரம், நம்பிக்கை

இவற்றிற்கு அடையாளம்.

வருஷங்கள்	பூர்த்தியான புதிய வியாபாரம்	ப்ரீமிய வருமானம்	ஆயுள் நிதி	அமுலிலுள்ள வியாபாரம்
1931	73,00,000	11,00,000	33,00,000	2,27,00,000
1934	1,04,00,000	19,00,000	58,00,000	3,71,00,000
1937	**1.40,00,000**	**31,00,000**	**99,00,000**	**6,00,00,000**

ஆயுள் அஷ்யூரன்ஸில், நவீனமானதுமானவற்றையும் சிறந்ததையும் கம்பெனியார் அளிக்கின்றனர்.

நம்பிக்கையும், கௌரவமுள்ள கனவான்களிடமிருந்தும் சீமாட்டிகளிடமிருந்தும் கிடைக்கும். ஏஜென்ஸிக்கான விண்ணப்பங்கள் கவனிக்கப்படும்.

பூரா விவரங்களுக்குக் கீழ்க்கண்ட எந்த ஆபீஸிற்காவது எழுதவும்;

கொச்சிகார் பிரதர்ஸ் லிமிடெட்.

மதராஸ், பிராஞ்சு காரியதரிசிகள்;

த. பெ. நெ. 337 : : : : மௌண்ட் ரோட் : : மதராஸ்.

(போன் நெ. 8245)

பம்பாய் லைப் பில்டிங், உடுப்பி. | விச்வேச்வரபுரம் ஸர்க்கிள் பெங்களூர் ஸிடி. | சார்னி ரோட், கிர்காம், பம்பாய் 4.

புதியாரா, கள்ளிக்கோட்டை. | ஸென்ட்ரல் ஸ்டேஷன் ரோட், திருவனந்தபுரம். | ஒட்டபாலம், தெ. மலபார். | தேரடித்தெரு, மங்களூர்.



கானரஸம் அறிய பாம்பை விடவா?

(கே. எஸ். என்.)

பல்லாயிர வருஷங்களுக்கு முன் கடலோரத்தில் ஒருகவி கவனஞ் செய்துகொண்டிருந்தான். அவன் கவிதை அற்புதமாக அமைந்து அவன் உள்ளத்தை உருக்கிற்று. அப்படி உருகிய அவன் உள்ளம் கண்ணீராக வெளிப்பட்டுக் கடலில் கலந்தது. கடலில் கலந்த கவியின் கண்ணீர்த் துளிகள் நாளடைவில் முத்துக்களாக மாறின...

சில வருஷங்களுக்குமுன் அம் முத்துக்களில் மிகப் பெரிதாகவும், அழகாகவும் இருந்த ஒன்று மனிதன் கையில் அகப்பட்டது. அது பல கைகள் தாண்டிக் கடைசியில் அரசன் மார்த்தாண்டன் கையில் சிக்கியது. லக்ஷக்கணக்கில் பணங் கொடுத்து அம் முத்தை வாங்கி அரசன், அழகுக்கே அழகு செய்யும் உத்தேசத்துடன், தன் பட்டத்து ராணி ஹைமாவதியிடம் கொடுத்தான்.

ஹைமாவதி அம்முத்தைத் தன்னுடலில் அணிய விரும்பவில்லை; அரசன் எவ்வளவோ சொல்லியும் அவள் கேட்க மறுத்தாள். உண்மையில் அவள் நகைகள் அணிவதே கிடையாது; அணிய விருப்பமில்லையென்றும் சொல்லுவதற்கில்லை. ஆனால் அவளுக்கில்லாத ஒரு பூஷணத்தையே சதா நாடிற்று அவள் மனம்.

''ஸ்திரீகளுக்கு மிகச் சிறந்த அணிகலமாகிய குழந்தையைப் பறிகொடுத்துவிட்ட எனக்கு நகைகள் எதற்கு? இம்முத்துத்தான் எதற்கு?'' என்றாள் ஹைமாவதி அரசனிடம்.

அவளுக்கு மற்ற விஷயங்கள் ஒன்றிலும் குறைவேயில்லை—அரசி: அழகி:—ஆனால் அவளுடைய ஒரே குழந்தை அதனுடைய இரண்டாவது வயதில் இறந்துபோய்விட்டது. அதுதான் அவள் துக்கம். தாயாகிய அவள் அச்சோகக் கடலைக் கடப்பது சாத்தியமாகவில்லை; அதை மறக்கடிக்க அதற்கப்புறம் அவளுக்கு வேறு குழந்தையும் பிறக்கவில்லை. நம் கதை நடந்தபோது அவள் குழந்[illegible]களாகிவிட்டன—இந்தக் கதை நம்பும்படியாக இல்லையேயென்று வாசகர்கள் யோஜிக்கலாம். ஆனால் இது நடந்ததென்னவோ வாஸ்தவந்தான்.

அந்த அழகிய முத்தைக் கையில் வாங்கிய ஹைமாவதி பெருமூச்செறிந்தாள்:

ஆச்சர்யமும் அன்பும் நிறைந்த கண்களுடன் அவளை நோக்கினான் அவ்வாலிபன்......

''முத்தெதற்கு எனக்கு? என் பெட்டியிலிருக்கும் ரத்தின மாலைகள்தானெதற்கு? என்னை 'அம்மா!' என்று சொந்தமாக அழைக்க......!''

அவள் வருத்தத்திலே அரசனுக்கும் வருத்தந்தான். தன் பட்டமகிஷியின் குழந்தை—ராஜ்யத்தின் இளவரசி—இறந்ததற்கு வருந்தாத அரசனும் உண்டோ? ஆனால் அது கரை காணாத சோகமாக இல்லை. அப்படியில்லாமற் பார்த்துக்கொள்ள அவனுக்கு வேறு பல ராணிகளிருந்தனர்; அவர்களுக்குப் பிள்ளைகளும் பெண்களும் ஏராளமாக இருந்தன. ஆனால் அரசனுக்கு ஹைமாவதியிடம் ஒரு தனி அன்பும் பிரேமையும் இருந்தது. அதைக் கலைக்க அவன் மற்ற ராணிகள் எவ்வளவோ முயன்றும் சாத்தியப்படவில்லை.

ஹைமாவதியின் வருத்தங் கண்டு மிகவும் மனம் நொந்தான் அரசன். ஆனால்அதைப் பற்றித் தினம் பேசி மறக்காமல் இருந்து என்ன பயன்? மார்த்தாண்டன் தன் ராணியைத் தன்னால் கூடியவரையில் தேற்றிவிட்டு ராஜ்ய காரியங்களைக் கவனிக்கப் போய்விட்டான். ஹைமாவதி தன் சிந்தனைகளில் ஆழ்ந்தவளாய் அரசன் தன் பக்கத்திலிருக்கிறானென்பதைக் கூடக் கவனிக்கவில்லை. பத்து வருஷங்களாகக் காலியாகக் கிடந்த வெள்ளித் தொட்டிலுக்குப் பக்கத்தில் போய், சோகமே உருவாய், மனது பறி கொடுத்து நின்றாள் அரை நாழிகை.

அஸ்தமித்து இருட்டும் சமயம். சேடியர் பல விளக்குகளை ஏற்றிக்கொண்டு வந்து வைத்தனர். சிந்தனை கலைந்து நிமிர்ந்தாள் அரசி. இவ்வளவு நாழியாக அவள் கையிலிருந்த முத்து தவறித் தொட்டிலில் விழுந்தது. ராணி அதைத் திரும்பவும் எடுக்கவில்லை; தன்னையும் மறந்துவாய்விட்டு ''தொட்டிலில் கிடக்கும் இம்முத்து ஒரு குழந்தையாக இருக்கக் கூடாதா?'' என்று சொல்லிப் பெருமூச்சுவிட்டாள். சேடியரும், துக்கமும் சிந்தனைகளும் சூழ அவள் கடைசியில் அறையைவிட்டு வெளியேறினாள். தொட்டிலில் விழுந்த முத்து தொட்டிலிலேயே கிடந்தது. ராணி அதை எடுத்துப் பெட்டியில் வைத்துப் பூட்ட மறந்து போய்விட்டாள்.

மறுநாள் காலையில் அவ் வெள்ளித் தொட்டிலில் கிடந்தது ஸ்வர்ணவிக்ரஹம்போன்ற ஒரு பெண் குழந்தை. வெண்ணிலவிலிருந்து செதுக்கியெடுத்ததுபோன்ற மேனி; கடலின் ஆழத்தையும் வர்ணத்தையும் கொண்ட கண்கள். உயர்கவிதையின் அமைதியைக் கொண்ட முகம்; அது ராணி ஹைமாவதியைக் கண்டதும் ''என்னை எடுத்துக்கொள்'' என்று சொல்லுவதுபோலக் கைகளை—ஆஹா! எவ்வளவு அழகாக!—அவள் பக்கம் நீட்டிற்று. பதை பதைக்கும் உள்ளத்துடன் குழந்தையை வாரியெடுத்து அணைத்து உச்சி முகந்தாள் ஹைமாவதி.

அக்குழந்தை எப்படி அங்கு வந்தது என்று யாருக்கும் தெரியவில்லை. பலர் பலவிதமாகச் சொன்னார்கள். ராணி மட்டும் கடவுளை தன் பிரார்த்தனைக் கிரங்கித் தன் துக்கத்தை மாற்றத் திருவுளங் கொண்டு அதை அனுப்பினார் என்றாள். சற்றுநேரத்திற் கப்புறம் முதல் நாள் தன் கையிலிருந்த முத்து தொட்டிலில் விழுந்ததும், அது ஒரு குழந்தையாக இருக்கக் கூடாதா என்று தான் ஏங்கியதும் ஞாபகத்திற்குவந்தது. அந்த முத்து எங்கே என்று தேடிப் பார்த்தாள் ராணி. அகப்படவில்லை.

கடைசியில் அந்த முத்துத்தான் தன்னிச்சைப்படியே எப்படியோ பெண்ணாகிவிட்டது என்று ராணி மனப்பூர்வமாக நம்பினாள்.

ஆனால் அரசன் அதை நம்ப மறுத்தான். யாரோ முத்தைத் திருடிப்போக வந்தவன் அரசியின் ஏக்கத்தை அறிந்து கொண்டு, இரவில் தொட்டிலில் ஒரு குழந்தையைக்கொண்டு வந்து போட்டுவிட்டு முத்தைத் திருடிப் போயிருக்கவேண்டும் என்றான் அரசன். ஆனால் அவன் எவ்வளவோ பிரயாசைப் பட்டும், அம் முத்தோ அதைத் திருடியவர்களோ அகப்படவில்லை. அம் முத்தை இழந்ததில் அவன் அடைந்த வருத்தம் அளவிட முடியாது. எனினும் நாளடைவில் அவனும் ஹைமாவதியின் ஆனந்தத்தில் ஆனந்தங் கொண்டு அக்குழந்தையைத் தன் குழந்தையைப் போலவே நடத்தி வந்தான்.

அக்குழந்தைக்கு முத்துலக்ஷ்மி என்று நாமகரணஞ் செய்வித்தாள் அரசி. தன் முதல் குழந்தையையே மறுபடியும் பெற்று விட்டவள் போல் அவள் அதனிடம் அன்பும் மகிழ்ச்சியுங் கொண்டாள். முத்துலக்ஷ்மியின் அழகை வர்ணித்து மாளாது. அதில் அரசி கொண்ட பெருமையையும் சொல்லி மாளாது.

ஹைமாவதி முத்துலக்ஷ்மியை யடைந்த பிறகு, தான் அரசனின் பட்டமகிஷி என்பதைக் கூட மறந்து விட்டாள்: அரச சபைக்குக் கூட அவள் போவதில்லை. இரண்டாவது ராணிதான் கொலுவிருக்கப் போவாள். அரசனும் ஹைமாவதியிடம் முன்னிலும் அதிக அன்பு வைத்து, அவளுக்காக முத்து லக்ஷ்மியைத் தன் சொந்த மகள் போலவே நேசித்து அரசிளங் குமரியாக நடத்திவந்தான்.

“யார் பெற்ற பெண்ணோ? அரண்மனையில் அரசகுமாரியாக வளருகிறது” என்று ஊரில் பலர் பலவிதமாகப் பேசிக் கொண்டனர். பொறாமை நிறைந்த இரண்டாவது ராணியும், மற்ற ராணிகளும் ரகசியமாக “எந்தப் பிச்சைக் காரியின் மகளோ?” என்று அவளை ஏசுவது வழக்கம். ஆனால் இதெல்லாம் ஹைமாவதிக்கோ, மார்த்தாண்டனுக்கோ தெரியவே தெரியாது.

இப்படி இன்பகரமாக நாலு வருஷங்கள் சென்றுவிட்டன.

அவளுடைய நாலாவது வயதில், ஒருநாள், நள்ளிரவில், அரசிக்குப் பக்கத்தில் படுத்திருந்த முத்துலக்ஷ்மி திடீரென்று எழுந்து உட்கார்ந்தாள். அவள் காதில் மதுரமான கீதம் ஒலித்தது. காந்தம் ஊசியை இழுப்பதுபோல ஒரு சக்தி அவள் ஆவியைப் பிடித்திழுத்தது. சந்தடியின்றி ஜன்னலண்டையில் போய் நின்றுகொண்டு அப்பாட்டைக் கேட்டாள். பாட்டு முடிந்ததும் நினைவிழந்து தடாரென்று கீழே விழுந்துவிட்டாள்.

இதற்குள் விழித்துக் கொண்ட ஹைமாவதியும், அவள் சேடியர்களும் ஓடி வந்து சைத்யோபசாரம் பண்ணி அவளைத் தேற்றினர். மூர்ச்சைதெளிந்து கண் விழித்தவுடன் முத்துலக்ஷ்மி மறுபடியும் அப்பாட்டைக் கேட்க ஜன்னலண்டை போக விரும்பினாள். ஆனால் அப்போது பாட்டுக் காதில் விழவில்லை. நிசப்தமாக இருந்தது.

அன்றிரவே முத்துலக்ஷ்மிக்கு ஜுரம் கண்டுவிட்டது. கடுமையான ஜுரம். ஜன்னியில் அவள் கண்டபடியெல்லாம் பிதற்றினாள்.

“நான் என் சொந்த ஊருக்குப் போகவேண்டும். இது என் ஊரில்லை. அம்மா! என்னை அழைத்துக்கொண்டு போயேன்!” என்று அலறினாள். “இதோ வருகிறேன்! வந்து விட்டேன்!” என்று கூப்பாடு போட்டுக்கொண்டே கட்டிலை விட்டிறங்கி வெளியே ஓட முயற்சித்தாள்.

பீதியால் வெளுத்த முகத்துடன் மூன்று நாள் இரவு பகல் தூக்கமின்றி அன்ன ஆகாரமின்றி குழந்தையின் பக்கத்திலேயே இருந்தாள் ராணி ஹைமாவதி. மூன்று நாட்களுக்கப்புறந்தான் ஜுர வேகமும், ஜன்னி வேகமும் தணிந்தன. தன் முத்துலக்ஷ்மி பிழைப்பாள் என்ற நம்பிக்கை ஏற்பட்டது ராணிக்கு. அன்றிரவுதான் சற்றுக் கண்ணயர்ந்தாள்.

ஒரு கனவு கண்டாள் ஹைமாவதி; யாரோ தாடி நரைத்த கிழவர் ஒருவர் வந்தார். அவர் சொன்னார், “உன் முத்துலக்ஷ்மியின் தாய் சங்கீதம்; தகப்பன் கவிதை. இருவரும் தங்கள் குழந்தையை உன்னிடம் கொடுத்துவிட்டது பற்றி வருந்துகிறார்கள். இப்போது சமயம் வாய்க்கும்போது திருப்பியழைத்துக்கொண்டு விடுவார்கள். ஜாக்ரதை.” ராணி இதே கனவை அன்றிரவு மூன்று தரம் கண்டாள்.

சங்கீதம், கவிதை இரண்டு மறியாமல் முத்துலக்ஷ்மியை வளர்ப்பதென்று தீர்மானித்தாள் அரசி. ஆனால் அது நகரில், அரண்மனையில் சாத்தியமாகாத காரியம். மனித சஞ்சாரமற்ற ஒரு தீவில் அரண்மனை கட்டித்தரவேண்டுமென்று அரசனை வேண்டினாள் அரசி. அரசன் முதலில் ஆக்ஷேபித்தான். ஆனால் ராணியிடம் அவனுக்கு இன்னமும் பிரியம் இருந்தது. அவள் வேண்டுகோளைத்

லக்ஷ்மியின் முன்னேற்றம்

30-4-1936-ல் 3-வது மதிப்பீட்டின் முடிவில்

அளிக்கப்பட்ட போனஸ்

பூரா லைப் பாலிஸிக்கு ஆயிரத்திற்கு வருஷத்திற்கு	20 ரூபாய்
எண்டௌமெண்ட் பாலிஸிகளுக்கு ,,	16 ரூபாய்
புதிய வியாபாரம்—1937-38-ல்	ரூ. 1,61,00,000-க் கதிகம்
ஆயுள் நிதி	,, 1 கோடி 2 லக்ஷத்திற்கதிகம்

ஏஜன்ஸி இல்லாத ஜில்லாக்களுக்கு திறமை வாய்ந்தவர்களிடமிருந்து ஆர்கனைஸர்களுக்கான மனுக்கள் கோரப்படுகிறது.

பிராஞ்சு மானேஜர்,

லக்ஷ்மி இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

334, தம்பு செட்டித் தெரு — — சென்னை.

த்திட மனமில்லாமல், மனிதப் பூண்டற்ற ஒரு தீவில் அழகிய சிறு அரண்மனை ஒன்று கட்டித் தந்தான். அதில் குடிபுகுந்தனர் ராணியும் முத்துலக்ஷ்மியும் அவள் தோழிகளும்?

அவ்வரண்மனையில் பன்னிரண்டு ஆண்டு நிம்மதியாக வசித்தனர். மாதமொருமுறை மார்த்தாண்டன் வந்து அவர்களுடன் இரண்டு நாள் தங்கிப்போவான். வெளி யுலகுடன் வேறு எவ்வித சம்பந்தமுமின்றி வளர்ந்தாள் முத்துலக்ஷ்மி. அழகிலும் அறிவிலும் விருத்தியடைந்தாள். யாரும் அவளைக் கண்டதில்லை யெனினும் அவள் புகழ் உலகெங்கும் பரவியிருந்தது. பல தேசத்து ராஜகுமாரர்கள் அவளைக் கலியாணம் பண்ணிக்கொள்ளத் தவங்கிடந்தனர்.

திடீரென்று ஒருநாள் முத்துலக்ஷ்மியின் பதினாறுவது வயது நடந்துகொண்டிருக்கையில், அரசி ஹைமாவதியின் முடிவு நெருங்கிவிட்டது. ஆனால் அவள் இறக்குமுன் உண்மையொன்றையும் மறைக்காமல் முத்துலக்ஷ்மியின் முழு விருத்தாந்தத்தையும் அவளிடம் சொல்லிவிட்டுத்தான் இறந்தாள். பதிலொன்றுமே பேசாமல் முத்துலக்ஷ்மி எல்லாவற்றையும் மனதில் வாங்கிக் கொண்டாள்.

ஹைமாவதி இறந்த பிறகு முத்துலக்ஷ்மி அத்தீவில் பல நாள் தங்கவில்லை. அதற்காக அவள் கஷ்டப் படவுமில்லை. அவள் மனமெல்லாம் தன் சொந்தத் தாய்தகப்பனைப் பற்றிய சிந்தனைகளில் லயித்திருந்தது. தாய் தந்தையரை யறியாத தன் நிலைமையை நொந்துகொண்டாள். அவர்களைச் சென்றடைய வழி செய்ய வேண்டும் என்று எண்ணினாள்.

மன்னன் மார்த்தாண்டன் அவள் மனவாட்டத்தைக் குறிப்பால் உணர்ந்து அதை மாற்றஅவனுக்குத்தகுந்தஅரசகுமாரனைப் பார்த்து மணஞ்செய்து வைக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டான். கடைசியில் கலியாணத்துக்கு ஏற்பாடுஞ் செய்துவிட்டான். ஆனால் முத்துலக்ஷ்மிக்கு மணஞ் செய்துகொள்ளுவதில் விருப்பமேயில்லை. அதைப் பலவிதமாக அரசனிடம் சொல்லிப் பார்த்தாள். அவன் காதில் அவள் சொன்னதெல்லாம் விழவேயில்லை. எல்லா ஏற்பாடுகளையுஞ் செய்துவிட்டு மார்த்தாண்டன் தானே புறப்பட்டு முத்துலக்ஷ்மி யிருந்த தீவிற்குப் போய் அவளையும் தன் கப்பலில் ஏற்றிக்கொண்டு திரும்பினான்.

அன்று வைசாகபௌர்ணமி. நள்ளிரவில் எல்லோரும் அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்கையில் முத்துலக்ஷ்மி எழுந்து மேல் தட்டில் உலாவிக்கொண்டிருந்தாள். அவளுக்குத் தூக்கம் வரவில்லை. மனதிலே பல சிந்தனைகள் கடல்போலக் கொந்தளித்துக்கொண்டிருந்தன.

அவள் மேல் தட்டுக்கு வந்து அரை நாழிகையிருக்கும். ஆனால் அந்த அரை நாழியும் ஒரு உருவம் சற்றுத் தூரத்தில் நின்றபடித் தன்னையே கவனித்துக்கொண்டிருப்பதைப் பார்த்தாள் அவள். சைகை காட்டி அருகில் அழைத்தாள். அது அக்கப்பல் மாலுமிகளில் ஒருவன். அரசகுமாரியை அணுகப் பயந்து, ஆனால் அவள் அழகில் மயங்கி நின்றுகொண்டிருந்தவன் அவன்.

அவனிடம் பேச்சுக் கொடுத்தாள் முத்துலக்ஷ்மி. அவன் ஊர் பெயரெல்லாம் விசாரித்தாள். தன் மயங்கிய கண்களை அவளை விட்டெடுக்காமல் குதூகலத்துடன் தன் தேசத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தான் வாலிப மாலுமியும்.

"வெகு தூரத்துக்கப்பாலிருக்கிறது அத்தேசம். நாகரீகமற்றவர்கள் நாங்கள். ஆனால் எங்கள் சுயேச்சையை என்றும் இழக்காதவர்கள். பணம், பவுன், வெள்ளி யில்லாதவர்கள் நாங்கள். ஆனால் எங்கள் நாடுதான் மிக்க ஐசுவரியம்படைத்தது கவிதையும் சங்கீதமும்......"

திடுக்கிட்டாள் முத்துலக்ஷ்மி. அவன் வாக்கியத்தை முடிக்குமுன் குறுக்கிட்டு பதைபதைக்கும் உள்ளத்துடன் "என்ன? ஏன்?" என்று தடுமாறினாள்.

ஆச்சர்யமும் அன்பும் நிறைந்த கண்களுடன் அவளை நோக்கினான் அவ்வாலிபன். ஆனால் தன் பேச்சை நிறுத்தவில்லை. அவன் தேசபக்தன்: கவிஞன்: பாடகன்: காதலன்: அவன் பேச்சே சங்கீதமாக ஒலித்தது: அவன் வார்த்தைகள் கவிதையாக அமைந்தன.

தன் தேசத்துப் பாட்டுக்கள் பலவற்றைப் பாடிக் காட்டினான். தன் தேசத்து மக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட பல கதைகளைச் சொன்னான். தன்னையும் மறந்து கதை கேட்டுக்கொண்டே உட்கார்ந்திருந்தாள் முத்துலக்ஷ்மி.

அவன் சொன்ன கதைகளில் ஒன்று பின்வருமாறு:—

"பல்லாயிர வருஷங்களுக்கு முன் கடலோரத்தில் எங்கள் கவி ஒருவன் கவனஞ் செய்துகொண்டிருந்தான். அவன் கவிதை அற்புதமாக அமைந்து அவன் உள்ளத்தை உருக்கிற்று. அப்படி உருகிய அவனு உள்ளம் கண்ணீராக வெளிப்பட்டுக் கடலில் கலந்தது. கடலில் கலந்த கவியின் கண்ணீர்த் துளிகள் நாளடைவில் முத்துக்களாக மாறின......"

இதைக் கேட்டவுடனே முத்துலக்ஷ்மி பதினாறு வருஷங்களுக்குமுன் மார்த்தாண்டனுக்கு அகப்பட்ட முத்து இம்முத்துக்களில் ஒன்று என்று

புதிதாய் வெளிவந்தது! புதிதாய் வெளிவந்தது!!

HINDI TUTOR

ஹிந்தி தமிழ் ஆசான்

ஹிந்தி பாஷை கற்றோர் பலராலும் நன்கு மதிக்கப் பெற்றது.

ஹிந்தி பாஷை, நமது தேசத்திற்கே ஒரு பொதுப் பாஷையாகக் கூடிய காலம் வந்துவிட்டது. அனதுபற்றியே கலாசாலைகளிலும் ஹிந்தி பாஷையைக் கட்டாய பாடமாக வைக்கும்படி அரசாங்கத்தார் கட்டளையிட்டுள்ளார்கள். ஆதலால் ஹிந்தி பாஷையை எல்லோரும் கற்றுக் கொள்ளவேண்டியது மிக்க அவசியமாகும்.

இப்புத்தகமானது சிறிது தமிழ் படிக்கத் தெரிந்தவர்களும், உபாத்தியாயர்கள் இல்லாமல், தாமே ஹிந்தியை வெகு எளிதில் கற்றுக்கொள்ளக் கூடிய முறையில் வெளிவந்துள்ளது.

இதில் ஹிந்தி எழுத்துக்களையும், பதங்களையும், தமிழில் உச்சரிக்கும் விதங்களை, ஹிந்தி எழுத்துகளிலும், தமிழ் எழுத்தகளிலும் காட்டி, ஹிந்தி பாஷையிலுள்ள இரண்டெழுத்துச் சொற்கள் முதல், பல எழுத்துகள் அடங்கிய சொற்களையும் விவரித்து, அவற்றிற்குச் சரியான தமிழ் உச்சரிப்புகளையும் தமிழ் அர்த்தங்களையும், அப்பதங்கள் கொண்ட வாக்கியங்களையும், அவற்றின் தமிழ் அர்த்தஙகளையும் படிப்படியாக, யாவரும் சுலபமாகத் தெரிந்துகொள்ளக்கூடிய முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

ஹிந்தியைக் கற்க விரும்புவோர் ஆசிரியரின்றி வெகுசீக்கிரத்தில் கற்றுக்கொள்ளலாம்.

விலை ரூபா 1—4—0

கிடைக்குமிடம்:—

இ. மா. கோபால கிருஷ்ணக்கோன்,

புத்தக வியாபாரி,

மதுரை — சென்னை.

வசீகர

விருத்திக்கு

நீபா

நவீன இரசாயன ஆராய்ச்சியின் படி சரும ஆரோக்யத்திற்கு இன்றியமையாததான

வைடமன் 'F' சோப்

நீபா சோப் வைடமன் 'F' என்ற சரும ஆகாரம் அளித்து பிரியப்படத்தக்க மிருதுவான இளமையின் தோற்றத்தை அளித்து அழகை அதிகப் படுத்தும்.



GANGA WORKS,
ADYAR.

அறிந்துகொண்டாள். தழுதழுத்த குரலில், உள்ளம் பதைக்க "அதென்ன அப்படிப்பட்ட பாட்டு? உனக்கு அது தெரியுமானால் எங்கே பாடிக் காண்பி பார்க்கலாம்" என்றாள்.

வாலிபன் பாட ஆரம்பித்தான். அது அவனுடைய தேசத்து தேசிய கீதம். கோடிக் கணக்கான மனிதர்களின் துடிப்பை எதிரொலித்தது அப்பாட்டு. மனித லக்ஷ்யத்தை நாதத்தால் எட்டிப் பிடிக்க முயன்றது. மனித உள்ளத்தைக் கட்டிப் பிடிக்க முயன்றது. அதைப் பாடியவன் ஒரு கலைஞன். அவனுங் கவி. முத்துலக்ஷ்மியிடம் காதல் கொண்டு அவளை வசப்படுத்த விரும்பிய காதலன். அப்பாட்டின் மேன்மையைச் சொல்லி முடியுமோ!

பாடும் உத்ஸாஹத்திலே அவன் ஒன்றையுங் கவனிக்கவில்லை. முத்துலக்ஷ்மி தன்னெதிரிலிருந்து மறைந்துவிட்டாள் என்று அவனுக்குத் தெரியாது. அவன் கடைசி அடியைப் பாடி முடிப்பதற்குள் கப்பலில் இருந்த எல்லோரும் விழித்துக்கொண்டு அந்த அற்புதமான பாட்டைக் கேட்க அங்கு கூடிவிட்டனர்.

பாட்டு முடிந்ததுந்தான் வாலிபமாலுமியும் தன்னறிவு பெற்றான். அப்போது அவனெதிரே நின்றுகொண்டிருந்தான் மார்த்தாண்டன்.

அவன் தன் காலின் கீழ் தென்பட்ட எதையோ உற்று நோக்கிக்கொண்டிருந்தான். நிலவில் அது முத்துப்போல் உருண்டையாக பள பளவென்று மின்னிக்கொண்டிருந்தது. ஏதோ முத்தென்று அதை எடுக்கப்போன மார்த்தாண்டன் ஏமாந்தான்: கை அதன்மேல் பட்டதும் தெரிய வந்தது: அது முத்தல்ல: ஒரு சொட்டு ஜலம்.

அவ்வாலிபன் முத்து லக்ஷ்மியைப் பற்றிச் சொன்ன பிறகுதான் எல்லோரும் முத்துலக்ஷ்மி எங்கே என்று தேட ஆரம்பித்தனர்.. அவள் கப்பலில் இல்லையென்றறிந்து மார்த்தாண்டன் திடுக்கிட்டான். ஒரு நிமிஷம் தான் முத்தென்று ஏமாந்தது ஞாபகம் வந்தது. அப்புறம் பதினாறு வருஷத்துக்கு முந்திய ஞாபகம் வந்தது. ஆனால் அவன் அதையெல்லாம் அப்பொழுது நம்ப மறுத்தான்: இப்போதும் நம்ப மறுத்தான். அவள் கடலில் தவறி விழுந்திருப்பாளோ? என்று எண்ணினான். உடல்கூட அகப்படவில்லை. பதினாறு வருஷங்களுக்கு முன் ஒரு முத்துத் திருட்டுப்போய்விட்டது என்று நம்பி அதைத் தேடி அலுப்படைந்தது. அரசனுக்கு ஞாபகம் வந்தது. ஆனால் அவன் உண்மையை அறியவில்லை.

உண்மையை அறியக் கவியுள்ளம் வேண்டும்!

ஹிமயமலை குன்றுகளைப்போல்,
சருமம் குளிர்ச்சியாகவும்
வெண்மையாகவுமிருக்க

இந்தியாவில் சூரிய வெப்பத்தில் கிடந்து வாடவேண்டியிருக்கின்றது. காற்றுடன் தூசி கலந்து அடிப்பதால் முக அழகு கெட்டுவிடுகின்றது. ஆகவே சூரிய வெப்பம், படுவன், சிரங்கு முதலியவையின்றி சருமத்தைப் பாதுகாப்பது கஷ்டமாகும். காமினியா ஸ்னோ உபயோகியுங்கள். சருமத்திற்குப் பூரா பாதுகாப்பளியுங்கள்:

இவ்வற்புத க்ரீமை தினசரி தடவுங்கள். குழந்தைகளைப்போல் மிருதுவான சருமம் பெறுவீர்கள். எல்லா மருந்து வியாபாரிகளிடமும், ஜாடி விலை அணா 12. இலவச சாம்பிளுக்கு 0-0-9 ஸ்டாம்பு அனுப்பவும்.

காமினியா ஸ்னோ

(ரிஜிஸ்டர்ட்)

ஆங்கிலோ இண்டியன் டிரக்
& கெமிகல் கம்பெனி, பம்பாய். 2.

மதராஸ் டீலர்கள்:—ஷியாம் & கம்பெனி, 6, பந்தர் தெரு; வி. ஜே. ஷேத், 47, பந்தர் தெரு; ஏ. பி. பரேக், 268, சைனா பஜார் ரோட்; ஜே. எம். ஷேத், 3, பந்தர் தெரு; ஆர். அப்துல் அஜீஸ் அப்துல் சமாத் & கம்பெனி, 58, பந்தர் தெரு.

பொதுஜன அபிமானத்தையும் நம்பிக்கையையும் குறிக்கின்றது
இக் கம்பெனி அடைந்துள்ள அபிவிருத்தி இதைக் குறிக்கின்றது

கார்டியன் ஆப் இந்தியா இன்ஷ்யூரன்ஸ்

கம்பெனி லிமிடெட்,

கம்பெனி ஆரம்பித்து முதல் மூன்று வருஷங்களில் அடைந்துள்ள அபிவிருத்தியைக் கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் நன்கு வெளிப்படுத்தும்.

முதல் பாலிஸி வெளியிட்ட தேதி	: :	3—11—1934.
1937௵ டிஸம்பர்௴ 31௳ முடிய கிடைத்த புரோபோஸல்கள் மொத்தம்	: :	1 கோடி 40 லக்ஷம் ரூபாய்க்கு அதிகம்
பூர்த்தியான வியாபாரம்	: :	1 கோடி 10 லக்ஷம் ரூபாய்க்கு அதிகம்

இக் கம்பெனிக்குக் கிடைத்துள்ள வியாபாரம்—மூன்று வயது பூர்த்தியாயுள்ள குழந்தை—இந்திய வியாபார உலகில் மிகச் சிறந்த வெற்றியாகும்.

இவ்வுயரிய வெற்றிக்கான காரணங்கள் :—

வசீகரமான திட்டங்கள்—குறைவிகித ப்ரீமியங்கள்—மேலான நிர்வாஹம்—ஊழியர்களுக்கு வசீகரமான ஊதியம்.

முன்னேற்றமடைந்துவரும் இந்த ஆயுள் அஷ்யூரன்ஸ் ஆபீஸில் ஒரு பாலிஸி எடுத்தால் சிறந்த ஐவேஜியாகும். அதில் ஏஜன்ஸி யிருந்தால் நல்ல வியாபார தொடர்பாகும்.

அஷ்யூரன்ஸ் திட்டங்கள், ஏஜன்ஸி நிபந்தனைகள் முதலிய விவரங்களுக்கு கம்பெனியின் தலைமை ஆபிஸிற்கு எழுதவும் :—

தலைமை ஆபிஸ் :
எஸ்பிளனேட், மதராஸ்.
(த. பெ. நெ. 89.)

N. நாராயணன்,
மானேஜர்.

ஜிஞணந்தர்

கல்கத்தாவிலுள்ள
பிரபல ஜைனகோவில்

—ஏ. ஜே. பி.



ஜிஞணந்தர் வாசலும்,
உட்புறத் தோற்றங்களும்.
இவற்றின் சிற்ப அழகு பெரிய விசேஷமாகும்.





சென்னை மிருகக்காட்சி சாலை. அங்கு சென்று



பார்க்காதவர்கள் சுலபமாக இங்கு பார்த்து விடலாம்



இலங்கை உங்களுக்களிக்கும் சில விசேஷக் காட்சிகள்

அனுராதாபுரம் இசுர முனிய கோவில். இது மிகப் புராதனமான பௌத்த கோவில்



ஸ்தூபியுடன் அலூவிஹாரா கோவில். கி. மு. 80-வது வருஷத்தில் ஏற்பட்டதெனக் கருதப் படுகிறது.

கதிர்காமத்தில் ஸ்ரீ ஸ்கந்தரின் வருஷாந்த உற்சவம் சமீபத்தில் நடைபெற்றது. இது கதிர்காம கோவிலின் பொதுத்தோற்றம்.



கதிர்காமம் கோவிலில் அலகு குத்திக்கொண்டு காவடி எடுப்பது வழக்கமுண்டு.



சிகிரியாவிலுள்ள சிங்கக்கோட்டை. 1500 வருஷங்களுக்கு முன் காச்யப அரசனால் சிங்கம் போல் தோன்றும்படி இந்தக் கோட்டைக் கட்டப்பட்டதாம்.



போலனுருவாவில் (கால் விஹாரம்) புத்தரின் பலவிதமான சிலை. உட்கார்ந்தபடியும் படுத்தபடியும் நின்றபடியும் சிலைகள் காணப்படுகின்றன. இது 170 அடி நீளமும் 30 அடி உயரமுமிருக்கிறது.

சரணாகதம்

ஸ்ரீமான் தி. ரா. ர. சபேசய்யர்.

1928-ம் வருஷம் ஜனவரி முதல்தேதி "ரங்கூன் செய்தி" என்னும் பத்திரிகையில் பின் வருமாறு செய்தி வந்திருந்தது:—

"இன்று நம் நகர் தனவான் கனகதாஸ் ஸேட் வீட்டில், ரூ. 20000மும், (எல்லாம் நூறு ரூபாய் நோட்டுக்கள்) ரூ. 1000 பெறுமானமுள்ள பத்து வயிரக் கற்களும், களவு போய் விட்டன. களவு காலை எட்டு மணிக்குத்தான் தெரிய வந்ததாம். நெடு நாளாகக் கணக்குப்பிள்ளை வேலை பார்த்து வரும் அருணகிரியையும் காணோம் என்கின்றனர். சேட்ஜீ உடனே போலீசார் வசம், விஷயம் அறிவித்தனராம். கணக்குப்பிள்ளை அருணகிரி, நாளது வரை நாணயத்துடன் வேலை பார்த்து வந்தவராம். அவர் உருவப்படம் ஒன்றும் கிடைக்கவில்லையாம்; இரண்டு விஷயங்கள் மட்டும் குளுவிற்காகத் தெரிவிக்கப்பட்டனவாம். ஒன்று, பெயர் வழி ஆறடி உயரமாம். இன்னொன்று, குரங்கு மூக்கு உடையவராம். முகமும் கிட்டத்தட்ட குரங்கு மூஞ்சிபோலவே இருக்குமாம். சந்தேகிக்கப்பட்ட கணக்குப் பிள்ளையைக் கண்டுபிடிக்கப் போலீசார் மிகப் போற்றும் படியான சுறுசுறுப்பும், ஊக்கமும் காட்டி தக்க ஏற்பாடுகள் செய்திருக்கின்றனராம். அவை யாவன: ஆறடி உயரமும் குரங்கு மூக்கு உடைய ஆட்களைப் போலீசார் தாணுவில் பிடித்து வைக்க வேண்டுமாம். முக்கிய ரயில் ஸ்டேஷன்கள் ரயில் முடிவுகள், ஆகியவற்றிற்கு தந்தி மூலம் உடனே செய்தி போய் விட்டதாம். ஒவ்வொரு ரயில் தொடரிலும் ஒரு ஸ்டேஷனிலிருந்து அடுத்த அடுத்த ஸ்டேஷனுக்குத் தந்தி தொடர்ந்துசென்றதாம். எல்லாக் கப்பல் துறைமுகங்களுக்கும் இச்சமாசாரம் அறிவிக்கப்பட்டதாம்; இன்னமும் ஆகாயக் கப்பல் துறைகளுக்கு இதைப்பற்றி எச்சரிக்கை அனுப்பியிருக்கிறதாம். கடைசியாக கம்பியில்லாத் தந்தி மூலமாயும், இந்தியா முதலிய ஏனைய இடங்களுக்கும் சமாசாரம் போய்விட்டதாம்.

இவ்வேற்பாடுகள் தவிர கனகதாஸ் ஸேட்ஜி, துப்பறிய சொந்த வழியிலும், ஒரு பென்ஷன் போலீஸ் அதிகாரி சகாயத்துடன், செலவைப் பொருட்படுத்தாமல் முயற்சிப்பாராம்."

அன்றே சாயங்காலம் ரங்கூன் மாநகரின் ஒரு சினிமா நோட்டீஸில், இத்தகைய விபரம் வந்தது. "உங்களுக்கு ரூ. 5000 கிடைக்கும் பாக்கியம் இருக்கலாம்; குறிப்பிட்ட ஆளைக் கண்டுபிடிக்கவேண்டும்; இது விஷயம், விவரம் நாளைக் காட்சியில் காணலாம். வரத் தவறுதீர்கள்."

சினிமாவின் பெயர், "தேவேந்திர சினிமா லிமிடெட்" இதுவரையில் நகரத்தில் இவ்வளவு பெரியதாய் ஸினிமாக் கட்டிடம் ஏற்பட்டதில்லை. காற்றோட்டம், ஆஸன வசதிகள், இத்யாதி சௌகர்யங்களில் இனி ஒன்றும் விரும்பத் தேவையில்லை. என்று சொல்லக்கூடியதாய், நிரம்பப் பணம் செலவு செய்து பெரிய கட்டட நிபுணர்களால் நிர்மாணிக்கப்பட்டது.

இக்கூட்டுக் கம்பெனி ஐந்து பிரமுகர்களால் சேர்ந்து துவக்கப்பட்டது; இருவர் பெரிய சேட்டுக்கள்; அவர்களில் ஒருவர் கனகதாஸ் சேட், மூலதனத்தில் பெரும்பாகம்இவர்களது தான். மற்ற மூவரில் ஒருவர் வக்கீல்; இன்னொருவர், அமெரிக்கா, ஐரோப்பா முதலிய அந்நிய நாடுகளில் சினிமா நடத்தும் முறைகளை, நன்கு கற்றறிந்த நிபுணர்; இன்னொருவர் பென்ஷன் போலீஸ் அதிகாரி. பின்சொன்ன மூவர் இச் சினிமாவின் மூளை; சேட்டுக்கள் இருவரும் இம்மூளை-மூவர் சொற்படி நடக்கும் அவயவங்கள்.

சினிமா புதியது; ரங்கூனில் சினிமாக்களுக்குக் குறைவே இல்லை; போட்டா போட்டி அதிகம்; காட்சி காண்கிறவர்களுக்கு, கலர் ரிப்பன், சீப்பு, சோப்பு, செண்ட்பாட்டில், பிஸ்கெட், பெப்பர்மெண்ட், பேனா, பென்ஸில், மணிக்கட்டு கடியாரம், ஸைகிள் இப்படிப் பல வகை அதிர்ஷ்ட பரிசுகள் ஆசை காட்டி இழுப்பதற்காக வழங்கப்பட்டன.

பந்தய ஜயம், பாக்கிய பரிசுகள், குறுக்கெழுத்துப் புதர் இவற்றால் சட்டென்று ஒரே அடியில் பணக்காரர் ஆக வேண்டுமென்பது தான் எல்லாருக்கும் ஆசை. சில புத்திசாலிகள், இவ்வவாவைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொள்கிறார்கள். தேவேந்திர சினிமா மூளை-மூவரும், சினிமா முன்னேற்றத்திற்காக, விளம்பர விஷயங்களைப் பற்றிக் கலந்துகொண்டு காரியங்களைச் செய்தனர்.

சினிமாப் பங்காளி பென்ஷன் போலீஸ் அதிகாரி. தாம், உத்தியோகத்திலிருக்கும் போது, கொலை, களவு துப்பறியும் விஷயத்தில் அதிக உற்சாகம் கொண்டவர்; இத்துறையில் அசாதாரண அனுபவம் பெற்றவர். கனகதாஸ் சேட், காணமற்போன அருணகிரியைப் பற்றி பின்வரும் வாக்குமூலம், அவர் வசம் செய்தார்.

"கணக்குப் பிள்ளை அருணகிரி என்னிடம் இருபத்தைந்து ஆண்டுகளாக வேலை பார்த்து வந்தவர்; நிரம்ப நாணயஸ்தர்; பெருந்தொகை அவர் வசம் இருப்பது சகஜம்; கடவுள் பக்தியுடையவர்; சமீபத்தில் தம் மனைவியையும், ஒரே மகனையும் இழந்த துக்கமுடையவர்; வயது நாற்பத்தைந்து இருக்கலாம்; துர்ப்பியாசங்கள் உடையவருமல்ல; திடீரென்று ஏனைய பேராசை தோன்றியதோ, அல்லது அவரைப் பலாத்காரமாய் கொள்ளைக்காரர் கைப்பற்றிக் கொண்டு போயினரோ? நேற்று பத்து வைரங்களை ஒருவரிடம் காட்டி வரும்படி சொல்லியிருந்தேன். ஒரு சமயம் அவர் களவு செய்திருப்பாரா எனத் தோன்றுகிறது; இன்னொரு சமயம், இவ்வளவு காலம் நன்னடக்கையாயிருந்தவர் இப்படி மோசம் பண்ணியிருக்கமாட்டார். யாரோ கொள்ளைக் கூட்டம் தான் அவரை பலாத்காரமாகக் கொண்டுபோயிருக்குமெனவும் படுகிறது. உண்மை எப்படி இருப்பினும் அவரைக் கட்டாயம் கண்டுபிடிக்க வேண்டியது."

பென்ஷன் போலீஸ் அதிகாரி அருணகிரியினுடைய பழக்க வழக்கங்கள் யாவற்றையும் அறிய விரும்பினார். வீட்டில் தினசரி பூஜை செய்கிறவர் அவருக்கு ஆப்த நண்பராயிருந்ததால் அவர் வரவழைக்கப்பட்டார். பென்ஷன் அதிகாரி அவரிடம் நெடு நேரம் பேசி, விவரமனைத்தும் தெரிந்து கொண்டார்.

நோட்டீஸில் கண்ட மறு தினம், தேவேந்திர சினிமா கொட்டகையில் இடம் காலியில்லை; கும்பல் கொட்டகையைச் சுற்றிச் சூழ்ந்திருந்தது. ஜனங்களின் குதூகலம்சொல்லி முடியாது. தினம் மூன்று



மைலாப்பூர் ஸ்ரீ கபாலீச்வரர் ஆலய தரிசனம்.

காட்சிகள். காட்சிகளின் முடிவில் விவரம் கொஞ்சம் கொஞ்சமாய் அறிவிக்கப்பட்டது. முதல் நாள் காட்சிகளில் இத் துணுக்குகள் வெளி வந்தன.

“கணக்குப் பிள்ளை அருணகிரியைக் கண்டுபிடிப்பவருக்கு அல்லது அவர் இருப்பிடம் சொல்லுகிறவர்களுக்கு ரூ. 5000 பரிசு அளிக்கப்படும். அடையாளங்களைக் கவனியுங்கள்; ஆள் ஆறடி உயரம், குரங்கு மூக்கு உடையவர். முகமும் குரங்கு மூஞ்சி போல் தானிருக்கும். நிறம் சிவப்பல்ல; கருப்போடு சேர்ந்ததுமில்லை; மாநிறம்; ஆகிருதியும் நடுத்தரம்தான்; பருமனல்ல; ஒல்லியாயுமிரார். சிறு குடுமியுண்டு; இளநரை; மீசை இல்லை; நடக்கும்போது, வலப் பக்கத்தை ஒரு குலுக்குக் குலுக்கி நடப்பார். போகும்போது தாமே பேசிக்கொண்டு செல்வார்; வெள்ளை ஆடையே கீழும் மேலும் உடுத்துவார்: கரையில்லாத 1703 நம்பர் மல் கச்சமாகக் கட்டியிருப்பார்: இதர விவரம் நாளைக் காட்சியில் காண்க.”

நகரம் முழுவதும், சந்துபொந்து, சந்தை சாவடி, மூலை முடுக்கு, முச்சந்தி, நாற்சந்தி, தெருவு, திண்ணை எங்கிலும் கனகதாஸ் வீட்டுக் கணக்குப் பிள்ளை பேச்சுதான்.

“ஆஹா! எவ்வளவு நல்ல மனுசன்! சேட்டு அவரை ரொம்ப நம்பிக்கையா வச்சுகிட்டு இருந்தாருங்க! இந்தக் காலத்திலே யாரையும் நம்ப முடியல்லேங்க!” இம்மாதிரி பேச்சு காதில் விழுந்தது.

மறு நாள் முதல் காட்சி டிக்கட்டுக்கள் காலையிலே விற்றுப் போய் விட்டன. நேற்றுப் போலவே, காட்சிகளின் கடைசியில் கணக்குப் பிள்ளையைப் பற்றிய இன்னும் சில குறிப்புகள் தோன்றின.

“காலையில் விடியுமுன் எழுந்திருக்கும் ‘பொழுது முருகா, முருகா, முருகா, என மும்முறை கூவுவார். கருவேலங் குச்சி, வேப்பங்குச்சி, மாவிலை அல்லது உமிக்கரி, இவற்றால் தான், பல் சாவகாசமாக விளக்குவார். காலை ஆகாரம் காப்பி ஹோட்டல்களில்தான். தோசை இரண்டு, இட்டிலி நான்கு, சாம்பார் சட்டினி சகிதம் சாப்பிடுவார். கடைசியில் காப்பி ஒரு சேர்; நித்யம் இதுதான்; இதில் மாறுதலே கிடையாது. ஸ்நானம் பகல் பன்னிரண்டிற்கு மேல்தான். முதலில் இடுப்பின்கீழ் ஜலம் விட்டுக்கொண்டு கால்களைத் தேய்த்தலம்புவார்; பின் உடலில் நீர் வார்ப்பார், மார்பையும், புஜங்களையும் சுத்தம்செய்வார்; கடைசியில்தான் தலையில் தண்ணீர் விட்டுக் கொள்வார். இக்கிரியைகளும் மாறுதலின்றி முறையே நிகழும். மற்ற சங்கதிகள் நாளைக் காட்சிகளில் காண்க.”

ஒவ்வொரு காட்சியிலும் எள் போட்டால் எள் விழாத படி கும்பல். குதிரைப்பந்தயம், குறுக்கெழுத்துப் புதிர் போட்டி: இவற்றில் மோகம் குறைவடைந்தது. படித்தவர், படியாதவர் கோஷ்டிகளில் எல்லாம் அருணகிரி சர்ச்சைதான்; விவாதம்தான். ஒருவர் அருணகிரிதான் களவாடி, ஓடிவிட்டான் என்று கூறுவார்; இன்னொருவர் இவ்வளவு யோக்கியமான நடவடிக்கை உள்ளவர் ஒருபொழுதும் திருடியிரார். அவரை யாரோ கொள்ளைக்காரர்தான் சிறை செய்து சென்று விட்டனர் எனச் சாதிப்பார்.

மூன்றும் நாள் மேற்கொண்டு அருணகிரியின் செயல்கள் அறிவிக்கப் பட்டன.

“பகற் போஜனம் சாலச் சாப்பிடுவார். மீதி பாகல், முட்டை கோஸ், உருளைக் கிழங்கு இவற்றைத் தண்டல் செய்வார்; உண்ணும் பொழுது ஒருவருடனும் சம்பாஷியார். மெள்ள, மெள்ள மென்றுண்பார், இலையில் மிச்சம் மீதி ஒன்றும் வையார். உண்டபின் உறக்கம்தான்; இரண்டு மணி நேரத்திற்குக் குறையாது. நித்திரையில் குறட்டை கட்டாயம் விடுவார். கண்களைச் சாயக்குட்டையால் கட்டியிருப்பார். நாளை மேலும் தொடரும்”

தேவேந்திர சினிமா டிக்கட்டுகள் விலை ஏறிவிட்டது. சிலர் டிக்கட்டுகளை வாங்கி லாபத்திற்கு விற்றனர். நான்காம் நாள் அருணகிரி சாயங்கால சிற்றுண்டி சமாசாரம் கிடைத்தது. “மாலை 5½ மணிக்கு ஹோட்டல்களில் காணலாம். முதலில் நான்கு பூரியும்—கிழங்கும் அப்புறம் தயிர் வடை இரண்டணா—பகோடா இரண்டணா, இனிப்பில் பாதாம் அல்வா ஒரு துண்டு; கடைசியில் காப்பி, பின் தன்னந்தனியே உலாவப் போவார். மணி எட்டுக்குத்தான் திரும்புவார். இரவில் பாலும் பழமும்தான் ஆஹாரம். பழமும் அநேகமாக வாழைப்பழம் தான். வாழையிலும் ராஜ வாழையில் மோகம். அது விற்கும் கடை தேடிப் போவார்.

ஐந்தாம் நாள் காட்சிகளில் அருணகிரியின் சில அப்யாசங்கள் விளம்பரப்படுத்தப்பட்டன. “மதிமயக்கம் தரும் பொருள் ஒன்றையும் தொடார். வெற்றிலை-பாக்கு, புகையிலை சகிதம் பல தரம் போடுவார்; கொட்டைப் பாக்குத் தான் எஞ்ஞான்றும் உபயோகிப்பார்; அடைப்பை அரையிலேயே வைத்திருப்பார்; வெற்றிலை போட்ட பின்பு கீழ் உதட்டை வெளியில் தள்ளித் தள்ளிப் பார்ப்பார். பொடி போடுவார்; முதலில் இடது கைக்கட்டை விரலால் இடதுநாசித்துவாரத்தை

வெஸ்டர்ன் இந்தியா லைப்

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட், ஸடாரா.

பூராவும் சுதேசி ஆயுள் ஆபீஸ்

இவ்வருஷம்

வெள்ளி விழா

கொண்டாடுகின்றது

மிகக் குறைந்த நிர்வாஹச் செலவு
பாலிஸிகள் இழந்து போவது மிகக்குறைவு
நிதிகள் வெகு பத்திரமான இனங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளன

போனஸ்

மூன்று வருஷத்திற்கு ஒரு முறை ஆயிரம் ரூபாய்க்கு

பூரா ஆயுள் ரூ. 75

எண்டௌமெண்ட் ரூ. 60

இன்ஷ்யூர் செய்துகொள்ளவும் பிரதிநிதியாக விருந்து வேலை செய்யவும் சிறந்த ஆயுள் ஆபீஸ்.

E. S. கிருஷ்ணா சாஸ்திரி, எம். ஏ. பிரதம ஏஜண்டு,
13, தம்புசெட்டித் தெரு, மதராஸ்.

6

அடைத்து வலது நாசித்துவாரம் வழி ஒரு சிம்டா சப்தத்துடன் இழுப்பார்; துளிமிச்சம் வைத்து இடது பக்கம் போட்டுக்கொள்வார். பல் விளக்குமுன் ஒரு சுருட்டு. பின் இரவு படுக்குமுன் ஒன்று பிடிப்பார், உடம்பின் அங்கங்களைத் தானே பிடித்துக்கொள்வார்.''

ஆறும் நாள் காட்சிகளில் சம்பாஷணை விசேஷங்கள் வந்தன. ''தமிழ் பேசும்பொழுது ஆச்சுதுங்களா அப்புறம் பாருங்கோ- போடாமல் இரார். என்னங்க நான் சொல்றது, காலம் கலியல்ல—குட்டிச் சுவரு-சுத்த பேவார்சு-முருகன் கிருபையிலே சௌக்கியம் தானுங்க'' இச்சொற்சமாயிருக்கும் நேரம் திருப்புகழ் பாடுவார். சித்த வைத்தியம் தெரியும். சில அரிய பச்சிலைகளை அறிந்தவர். ஒழிந்த வேளைகளில், பொழுது போக்குக்காக, சமாசாரப்பத்திரிகைகள், சித்த வைத்திய நூல்கள், திருப்புகழ் பாடல்கள் இவைகளைப் படிப்பார். ''நீறில்லா நெற்றி பாழ்'' என்பதிற்கிணங்க, நெற்றியில் திருநீறு இட்டிருப்பார்.

எட்டாம் நாள் காட்சியில் ஜனங்களுக்குச்சில எச்சரிக்கைகள் காணப்பட்டன. ''நூறு ரூபாய் நோட்டுகளை எந்தப் பெயர் வழியாவது நிரம்பவாவது, அடிக்கடியாவது மாற்றவரின் கவனிக்கவும்; ஒரு



ஸ்ரீரங்கப் பட்டணத்தில் திப்பு சுல்தானின் வஸந்த மாளிகை.
எஸ். எஸ். எ.

ரூடர்கள் பேச்சின் இடையிடையே வழங்குவார். சினங்கொண்டாலும் சரி அல்லது விஷயங்களை வற்புறுத்திப் பேசும்போதும் சரி வலக்கையை மேலிருந்து கீழ், வாள் போல்வெட்டுவார், சிரிப்பு,குதிரைக் கனைப்புபோன்றிருக்கும். இந்துஸ்தானி நன்குபேசுவார். அச்சா-பராபர்-அதிகம்வரும்'' இன்னும் தொடரும். நாளை வருக.

ஏழாம் நாள்-''படுக்கையில் அநேகமாக வலப்புறமாகச் சாய்ந்து படுப்பார். கொட்டாவி விடும்போது வாயண்டை கை சொடக்கி முருகா முருகா என மொழிவார். தூக்கத்தில் பிதற்றுவார். அருணகிரி உல்லா 'காரட்' எடையுள்ள விலையுயர்ந்த வயிரக் கற்கள் விற்பனைக்கு வந்தாலும் செய்தி தெரிவிக்கத் தவறாதீர்கள்.

மேற்கண்ட விவரங்கள், பர்மாவில் மட்டுமல்ல, இந்தியாவிலுள்ள எல்லாப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டன. சின்னஞ் சிறு குக்கிராமங்களுக்கும் துண்டுப் பிரசுரம் மூலம் சமாசாரம் பரவியது.

அவ்வளவுதான். ஆறடி உயரம் மனிதர் எல்லோரும் உற்று நோக்கப்பட்டனர்; ஒரு ஆளைப்பற்றிப் புள்ளிவிவரங்கள் இவ்வளவு தெரிந்தபின் அந்த ஆள் அகப்படாமல் எங்ஙனம் இருக்கமுடியும்? காணமற்போன கண்க்குப் பிள்ளையைக்

அதிர்ஷ்டம்

(தமிழ்)

சூர்ய குமாரி, செல்லம், தமயந்தி
V. V. சடகோபன், கொத்தமங்கலம்
சுப்பு முதலியோர் நடித்தது

★

தேச முன்னேற்றம்

(தமிழ்)

மாதிரிமங்கலம் நடேசய்யர், M.லெக்ஷ்மணன்,
செல்லம், பேபி ருக்மணி, S. R. பத்மா,
கோகிலம் முதலியோர் நடித்தது

★

பக்த அருணகிரி

(தமிழ்)

தேவாரம் C. சங்கரலிங்கம், T. N. மீனாக்ஷி
முதலியோர் நடித்தது

★

கோகிலா

(ஹிந்தி)

சபிதா தேவி, மோதிலால், மாயா பானர்ஜீ,
சோபனா சம்ரத் முதலியோர் நடித்தது

★

நிரந்தர கீதம்

(ஹிந்தி)

சுரேந்திரநாத், மாயா பானர்ஜீ, சித்தாரா
முதலியோர் நடித்தது

★

பிரதிபா

(ஹிந்தி)

துர்க்காபாய் கோட்டே, ஹீரா, கேசவராவ்
டாட்டே முதலியோர் நடித்தது

விபரங்களுக்கு:

மயூரா பிலிம்ஸ் லிமிடெட்,

7-90, வாலாஜா ரோடு, சென்னை.

தந்தி: **Mayura.** போன்: 8454.

கண்டுபிடிப்பது இலேசான காரியமாகத் தோன்றியது. ஆனால் நாள் எட்டல்ல; பத்தல்ல; ஒரு திங்களும் ஆயிற்று. அருணகிரி இருப்பதாவது, இறந்ததாவது ஒரு செய்தியும் இல்லை.

II

விபத்து ஒண்டி சண்டியாய் வருகிறதில்லை. கனகதாஸுக்கு ஒரே ஒரு மகள்-மகளின் புருஷனுக்கு நாற்பது நாளாய் கடுஞ்சுரம்; ரங்கூனில் மாப்பெரும் டாக்டர்கள், வைத்தியர், ஹகிம்கள் இனித் தேருது எனக் கூறிவிட்டனர்.

கனகதாஸ் வீட்டில் நித்யம் ஈசுவர பூஜை நடைபெறும். பெரும் பொருள் நஷ்டத்தின் பின், கடவுள்பால் விரக்தியடைந்து பூஜையை நிறுத்திவிட்டனர். மருமகள் உயிரை மாந்தரால் இனி காப்பாற்ற இயலாது என வறிந்ததும், மீண்டும் தெய்வம் தொழத் துவக்கினர். நகரத்தின் ஒரு பகுதியில், மகிமை வாய்ந்த ஒரு ஆஞ்சநேயர் கோயில் இருந்தது. வேண்டுதலையைப் பூர்த்தி செய்வதில் இவ்வாஞ்சநேயருக்குப் பெரும் கியாதியுண்டு. கனகதாஸ் மனைவியும், மகளும், தினம் இங்கு வந்து தரிசித்துப் போவார்கள்.

ஒரு நாள் கோவிலில் இருவரும் முழங்காலிட்டு நமஸ்கரித்து, கண்ணீருடன் நின்று வேண்டிக் கொண்டிருந்தனர். அவ்வமயம் ஒரு காஷாயம் தரித்த கிழக்கூனல் சந்நியாசியும் தரிசிக்க வந்தார். பெண்டிரை நோக்கி இந்தியில் "தேவிமார்களே! உங்களுக்கு ஆண்டவன் அருள்புரியட்டும்; சௌபாக்யவதிகளாக வாழ்வீராக" என வாழ்த்திய பின் "ஏன் இவ்வளவு துக்கப்படுகிறீர்கள்? உங்கள் பிரார்த்தனை என்ன? அடியேன் ஒரு ராம பக்தன். ஹரித்வாரத்திலிருந்து இங்கு வந்து ஒரு மாதமாகிறது; எனக்கு மந்திரம்—மூலிகை வயித்தியம் தெரியும்; உங்களது துயர் தெரிவித்தால், என்னாலான உதவி செய்வதோடு கூட, ஸ்ரீராமப் பிரபுவையும், உங்கள் கோரிக்கை நிறைவேறும் வண்ணம் பிரார்த்திப்பேன். என் பெயர் சாது ராமானந்தர்.

கனகதாஸ் மனைவி:—"தங்களைப் பற்றி இன்றுதான் கேள்விப்பட்டேன். இங்கு தாங்கள் வருவது வழக்கம் என்று சொன்னார்கள். ஒரு ஏழைப் பிள்ளைக்குத் தணியாத முறை ஜ்வரத்தைத் தீர்த்து உயிர்ப் பிச்சைக் கொடுத்தீர்களாம். எங்களுக்குச் சமீபத்தில் பெரும் தன நஷ்டம் ஏற்பட்டது. நெடுநாள் நாணயமாயிருந்த கணக்குப்பிள்ளை நம்பிக்கைத் துரோகம் செய்து ஓடிவிட்டான்.. எல்லாம் எங்கள் போராத வேளைதான். ஒரு தங்கமான மனுஷ்யனைப் பணம் என்னும் பேய், நன்னெறி துறக்கத் தூண்டியது. அதைப்பற்றி இச்சமயம் எங்கள் மனம் நோகவில்லை. இச் செல்வப்புதல்வியின் சௌபாக்கியத்திற்கு ஆபத்து வந்துவிட்டது. பெரிய டாக்டர்களெல்லாம் இவள் புருஷன் இனி காய்ச்சலிலிருந்து மீளான்; இகத்தில் வாழ்வு மூன்றே நாள்தான் என்கிறார்கள். தங்களை இங்கு தரிசித்தது ஒரு நற்சகுனமென எண்ணுகிறேன். எங்கள் கார் வந்திருக்கிறது; கூடவே வாருங்கள். "அச்சா-பராபர்" என்று சொல்லிவிட்டுச் சாது ராமானந்தஜீ காரில் ஏறிக்கொண்டு கனகதாஸ் இல்லம் வந்திறங்கினார்.

நோயாளியின் கை நாடி பார்த்தார்; கை ரேகையையும் உற்று நோக்கினார். ராம் ராம்! ராம்கிஜேய்! ராம்கி கிருபா! என ராம நாமத்தை உச்சரித்துப் பின் ஹிந்தியில், "அன்பர்களே, நாடிப் பரீட்சையோடு கூட கை ரேகையும் பார்த்துக்கொண்டேன்; மிருத்யு பயமில்லை. கடுமையான ஜன்னி கண்டிருக்கிறது. உங்களுக்கு ஒன்பது பொட்டலம் தருகிறேன்; இன்றிரவே மூன்று மணிக்கொருமுறை, ஒன்று தேனில் கலந்து நாக்கில் தடவுங்கள்; நாளை நான்கு மணிக்கொரு முறை மூன்றும், அப்படியே அடுத்த நாள் மூன்றும் கொடுத்துவிட்டு, சாயங்காலம் 7½-மணிக்கு ஆஞ்சநேயர் கோயிலில் ஜபம் செய்து கொண்டிருப்பேன். அங்கு வந்து சமாச்சாரம் சொல்லுங்கள். மருந்து சாமான்யமானதல்ல; பெரிய சித்தர் வசமறிந்த சூர்ணம்; இதுவரை கையாண்டதில் பலிக்காமல் இருந்ததில்லை; எனினும் பகவான் கிருபையன்றி ஒன்றும் கைகூடாது. நீங்களும் விடியற்காலை மூன்றுமணிக்கே எழுந்து ஸ்னானம் செய்துவிட்டு, சிரத்தையுடன் ஸ்ரீராம நாமத்தை சூரியோதயம்வரை ஜபிக்க வேண்டும். மெய்யான பக்தியுடன் செய்த பிரார்த்தனையை ஸ்ரீராமப் பிரபு நிச்சயம் அனுக்கிரகம் பண்ணுவார். எவர் எத்தீங்கு செய்திருந்த போதிலும் அவர்களண்டை வைர பாவம் துளிக்கூட பாராட்டாது தூய்மை அகத்துடன், தியானம் செய்யவேண்டும். ஔஷதம் ராமபாணம் ஆகட்டும். எல்லோருக்கும்ஆசீர்வாதம்" என வாழ்த்திவிட்டு விடைபெற்றுச் சென்றார் சாது.

மூன்றும் நாள் கனகதாஸ் மருமகனுக்குக் காய்ச்சலில்லை; ஜன்னியில் மதிமயங்கிக்கிடந்தவர் தெளிவுடன் பேசினார். அன்றுமாலை, குறிப்பிட்ட வேளையில் சாதுவைக் களிப்புடன் தரிசித்து, மீண்டும் மூன்று நாள் மருந்துபெற்றுச் சென்றாள் கனகதாஸ் மனைவி.

நாஷனல் இந்தியன் லைப்
இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

மொத்த ஐவேஜுகள்	ரூ. 67,00,000க் கதிகம்
ப்ரீமியம் வருமானம்	,, 11,00,000 ,,
செலுத்திய உரிமைத் தொகை	,, 61,00,000 ,,
1937க்கான புதிய வியாபாரம்	,, 55,00,000 ,,

31—12—1934உடன் முடிவாகும்

5 வருஷங்களுக்கு போனஸ்

ரூ. 1000த்திற்கு ரூ. 62-8.

சென்ற 31 வருஷங்களாக கம்பெனி நல்ல முறையில் நடைபெற்று அபிவிருத்தியடைந்துவந்திருக்கின்றது. இன்று இந்தியாவிலுள்ள இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளுள் செல்வாக்குள்ள ஸ்தானத்தை அடைந்திருக்கின்றது.

விவரங்களுக்கு எழுதவும் :—

மதராஸ் கிளை ஆபீஸ்:

334, தம்பு செட்டித் தெரு, மதராஸ்.

சீப் ஏஜென்ஸி ஆபீஸ்கள்:

பெஜவாடா, பெங்களூர், தூத்துக்குடி, திருவனந்தபுரம்.

நீங்கள் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள விரும்பினால் இப்புத்தகத்தை உடனே வாங்கி வாசியுங்கள்.

ஆங்கில போதனி

அல்லது

ஆங்கில ஆசான்

தமிழ் நாட்டில் சுமார் ஆறு லட்சம் ஜனங்களுக்குச் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொடுத்து நற்புகழ் பெற்றது.

இதற்கு உபாத்தியாயர் வேண்டியதில்லை. தமிழ்ப் படிக்கத் தெரிந்தவர்கள், உபாத்தியாயர் இல்லாமல் 60 நாளில் வெகு இலகுவில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளலாம்.

தற்காலம் நாகரீகத்திற்கும், ஜீவனோபாயத்திற்கும், மேன்மைக்கும் தலைமைபெற்று விளங்குவது இங்கிலீஷ் பாஷையென்பது யாவரும் அறிந்த விஷயம், இங்கிலீஷ் பாஷையைக் கற்றுக்கொள்ளாதவர்கள் அடையும் கஷ்டங்களை நீக்கும் நோக்கத்துடன் இப்புத்தகம் வெளிவந்துள்ளது.

இதில் இங்கிலீஷ் எழுத்துகளும், சொற்களும், வாக்கியங்களும், உச்சரிக்கும் விதத்தைத் தமிழிலும் இங்கிலீஷிலும் விளக்கிக் காட்டியிருப்பதோடு, அவற்றின் அர்த்தங்களையும் எளிய நடையில் விளக்கப்பட்டிருக்கிறது.

நாம் பார்க்கும் பொருள்கள், உண்ணும் பொருள்கள், குடும்ப விவகாரங்கள், வியாபார விஷயங்கள், சரீரக்கூறுகள், கோர்ட்டு விஷயங்கள், உத்தியோக விஷயங்கள், சம்பாஷணை விஷயங்கள், தொழில் விஷயங்கள், கிராம வாழ்க்கை, நகர வாழ்க்கை, வியாசம் எழுதும் முறை, விண்ணப்பம் எழுதும் முறை, கடிதம் எழுதும் முறை, சிறு கதைகள் முதலிய உலக அனுபவத்திற்கேற்ற சகல விஷயங்களும் இலகுவில் கற்றுக்கொள்ளலாம். இங்கிலீஷில் நன்கு பழகிக் கொள்ளலாம்.

விலை ரூபா 2—0—0

தெலுங்கு இங்கிலீஷ் ஆசான், இதில் தெலுங்கு படிக்கத்தெரிந்தவர்களும், கன்னடம் இங்கிலீஷ் ஆசான், இதில் கன்னடம் படிக்கத் தெரிந்தவர்களும் இலகுவில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளலாம்.

ஒவ்வொன்றும் விலை ரூபா 2—0—0.

கிடைக்குமிடம்:—

இ. மா. கோபால கிருஷ்ணக்கோன்,
புத்தக வியாபாரி,
மதுரை — சென்னை.

ஏழாம்நாள் சாயங்காலம் கனகதாஸ் சேட் வீட்டிற்கு முன் மாப்பெரும் பிச்சைக்காரக் கும்பல்; பூரி, கிழங்கு, லாடு விநியோகம்; மருமகன் தப்பிப்பிழைத்துவிட்டான்; ஒரே கொண்டாட்டமாகத்தானிருந்தது.

இரவு $7\frac{1}{4}$ மணிக்கு சாது ராமானந்தஜீ காரில் அழைத்து வரப்பட்டார். காரிலிருந்து இறங்கியதும், கூனிக் கூனி உள் சென்றார். மாடியில் ஒரு பட்டுச் சோபாவில் அமர்த்தப்பட்டார். மார்பில் பெரிய ரோஜாப்பு மாலையிட்டு மரியாதை செய்யப்பட்டார். கனகதாஸ் குடும்பத்தார் நால்வரும் ஸாது பாதம் விழுந்து நமஸ்கரித்து, ''குருஜீ மகராஜ்!'' தாங்கள் அளித்த உயிர்ப்பிச்சைக்குத் தங்களுக்கு என்ன மரியாதை—கைம்மாறு செய்வது'' என வேண்டினர்.

சாது:—தனம் ஒன்றும் தேவையில்லை, கோரிக்கையை உரைக்கிறேன்; சற்றுப் பொறுங்கள், ஆஞ்சநேயர் கிருபை, மருமகனை மட்டும் மிருத்யுவினின்று மீட்கவில்லை. களவுபோன பொருளையும் கொண்டுவந்து சேர்க்கும்'' என மொழிந்து ஒரு நிமிஷம் கழித்து ஒரு சவுக்கத்தை அவிழ்த்து 100 ரூபாய் நோட்டுக்களை உதறினார். ஒரு சிறு பையினின்று பத்து வயிரக் கற்கள் தோன்றி ஒளி வீசின.

கனகதாஸும் மற்றவரும் பிரமித்துப்போய் வாய் திறக்காமலிருந்தனர். ஒரு நிமிஷம் ஆயிற்று. சாது ராமானந்தஜீ கனகதாஸ் பாதம் விழுந்து ''சரணாகதம் மாம்பாஹி'' எனக் கெஞ்சினார். பின் எழுந்து, நிமிர்ந்து நின்று தம் பெரிய முண்டாசையும் வெள்ளை மீசை தாடியையும் மெழுகு மூக்கையும் கழற்றிவிட்டு ''மறைந்து ஒளிந்திருந்த அருணகிரி நான்தான். சமீபமாய் ஒரு பர்மாக்காரி வேசியுடன் சகவாசம் செய்து வந்தேன். என் சொந்த ஊர் போய் சுகித்திருக்கலாம். தனத்தைச் சுருட்டிக்கொண்டு வா, எனத் தூண்டினாள். பாபி! பிழை செய்தேன். தங்களுடைய அபாரமான விளம்பரம் காரணமாகத் தப்பி ஓட வழியில்லை. பகலெல்லாம் நான்காம் மெத்தையில் இருளடைந்த பரணில் பதுங்கியிருப்பேன். மாலையானபின் இம் மாறுவேடத்துடன் கூனியாய் நடித்து சற்று வெளி உலாவுவேன். எனக்கு நாடக நடிப்பு அனுபவம் உண்டு. என் வேசி மெழுகு பொம்மை செய்வதில் கைதேர்ந்தவள். இம்மூக்கு அவள் வேலைப்பாடுதான். என் மானத்தைக் காப்பாற்ற வேண்டும்'' எனக் கண்ணீர் சொரிந்து கெஞ்சினார்.

''உன் வீழ்ச்சிக்குக்காரணம் நானும் தான்; இருபத்தைந்து வருஷம் தங்கமாய் உழைத்த குமாஸ்தாவின் முதுமை சுக வாழ்வைப்பற்றி நான் சிந்திக்கவேயில்லை. உன்னிஷ்டப்படியே சம்மானத்துடன் உன் சொந்தஊர் சேர்ப்பிக்கிறேன்'' என மனமிரங்கிக் கூறி அருணகிரியைக் கட்டியணைத்தார்.

அருணகிரியை நகரம் மறந்துவிட்டது. சரணாகதம்–சம்பவம் நிகழ்ந்த மறுநாள் தேவேந்திர சினிமா ஒரு அறிக்கையிட்டது. ''அருணகிரி அகப்பட்டுவிட்டார்; அவர் நிரபராதி. விவரம் இன்று மாலைக் காட்சியில் காண்க.''

காட்சியின் முடிவில் இச்செய்தி வெளியாயிற்று. ''மாலை, அருணகிரி, வெளிக்கிளம்புமுன், ஒருவரும் இல்லாச் சமயம், சேட்டுக்கள் போல் மூன்று பேர் தோன்றினராம்; கைத் துப்பாக்கி மூலம், கணக்குப் பிள்ளையைக் கொலை பயம் காட்டி மௌனமாயிருக்கச் செய்து, இரும்புப் பெட்டியினின்று பொருளைப் பறிமுதல் செய்தனர், களவு, கணக்குப்பிள்ளைமேல் ஏற்படுவதற்காக, அவரையும் மோட்டாரில் ஏற்றிச் சென்று ஒரு மலைக் காட்டினுள் இதுவரை சிறையில் வைத்திருந்தனர்; ஒரு குறித்த தினம், குறித்த இடத்தில், கனகதாஸ் தன்னந்தனியே விளம்பரிக்கப்பட்ட பரிசுடன் வரின், அருணகிரியைக் காணலாமெனக் கடிதம் வந்ததன்பேரில், கனகதாஸ் அங்ஙனமே செய்தார். இதனால் அருணகிரி விடுவிக்கப்பட்டாராம். கொள்ளைக்காரர் கொடுமையினாலும், நெடுநாள் சரிவர ஆகாரமின்மையினாலும், அருணகிரி ஆபத்தான தேக நிலையில் இருக்கிறார். அவரை இச்சமயம் ஒருவரும் காணமுடியாது. அவர் உடம்பு சொஸ்தமானதும், சம்மானத்துடன் சொந்த ஊர் அனுப்பிக்கப்படுவார்''

இவ்வறிக்கையைக் கண்டுவிட்டுஊர்வாய் சும்மாஇராமல், ''என்ன, கட்டுக்கதைஉள்ளாள் வேலைபோலிருக்குது—வெளிச்சம்—விளம்பர சூழ்ச்சி-தேவேந்திர சினிமா நல்ல காசு அடிச்சுது'' என இப்படி எல்லாம் மொழிந்தது.



மயர்ஸ்

ஸெல்ப் ஆயிலிங் ஆடோமாடிக்

வாடர் ஸிஸ்டம்கள்

உலகப் பிரசித்தி பெற்றவை.

பங்களாக்கள், தோட்டங்கள், சிற்றுண்டிச்சாலைகள், ஆஸ்பத்திரிகள், தொழிற்சாலைகள், முதலியவைகளுக்கு இன்றியமையாதவைகள்.

எவ்வளவு ஆழத்திற்தும், உயரத்திற்தும் தொலைவிற்தும் மிதுந்த வேகத்துடன் தண்ணீர் சப்ளை செய்யக்கூடியவைகள்.
எலெக்டிரிக் மோட்டாரினால் வேலை செய்வன.
நம்முடைய உதவியன்றியில் தானாகவே ஓடவும், நிற்கவும் எண்ணெய் போட்டுக் கொள்ளவும் கூடியவை.

மற்றும் அநேகவிதமான கை, பவர் & ஸ்பிரே பம்புகள்.
விபரம் தெரிந்தவுடன் கேட்லாக்குகள் அனுப்பப்படும்.

இந்தியாவின் ஸோல் ஏஜண்டுகள்:

வாடர் ஸப்ளை ஸ்பெஷலிஸ்ட்ஸ் லிமிடெட்.

1-173, பிராட்வே, மதராஸ். தபால் பெட்டி, 202.

பாம்பே பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ்

கம்பெனி லிமிடெட்.

(இந்தியாவில் இணைக்கப்பட்டது—1935)

தலைமை ஆபீஸ்: 45-47, சர்ச் கேட் தெரு, போர்ட், பம்பாய்.

எல்லாவித இன்ஷ்யூரன்ஸ் வியாபாரமும் (ஆயுள் தவிர) கவனிக்கப்படும்.

டைரக்டர்கள் போர்ட்:

ஸர் ஹார்மஸ்ஜி கவாஸ்ஜி டின்ஷா, Kt., M. V. O., O. B. E., சேர்மன் (கவாஸ்ஜி டின்ஷா & பிரதர்ஸ்)
ஏ. கெட்டிஸ் Esq, (ஜேம்ஸ் பின்லே & கோ., லிமிடெட்.)
ஆர். டபிள்யூ. புல்லக் Esq, (போர்பஸ், போர்பஸ் காம்பெல் & கோ., லிமிடெட்.)
ஷபூர்ஜி பலன்ஜி மிஸ்திரி Esq, (ஷபூர்ஜி பலன்ஜி & கோ.,)
மனுபாய் டுங்கிர்ஸீ Esq, (டுங்கிர்ஸீ & ஸன்ஸ், பம்பாய் & கராச்சி.)
முகமத் அக்பர் ஏ. பஸுல்பாய் Esq, (பஸுல் பாய் லிமிடெட்.)
பெரோஸ் இ. பருசா Esq,
பிராம்ரோஸ் ஷபூர்ஜி மேத்தா Esq,
எம். எம். முந்துகர் Esq, மானேஜர்.

கௌரவமுள்ளவர்களிடமிருந்து ஏஜன்ஸிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஓரியண்டல் மர்க்கண்டைல் ஏஜன்ஸி,

பிரதம ஏஜண்டுகள்:

19-20, லிங்கி செட்டித் தெரு, மதராஸ்.

லா கன்கார்ட்

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட், பாரிஸ்

(ஒரு அளவுக்குட்பட்ட பொறுப்புடன் பிரான்ஸில் **1905**-ல் இணைக்கப்பட்டது.)

இந்தியா, பர்மா, இலங்கைக்கு பிரான்சு ஆபீஸ்: 6, க்ளைவ் ரோ, கல்கத்தா.

நெருப்பு, கப்பல், மோட்டார், தொழிலாளிகள் நஷ்ட ஈடு இன்ஷ்யூரன்ஸ்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஏஜண்டுகள் தேவை

செல்வாக்கும் கௌரவமுமுள்ள கனவான்களிடமிருந்து
ஏஜன்ஸிக்கான விண்ணப்பங்கள்
கோரப்படுகின்றன.

பூரா விவரங்களுக்கு எழுதவும் :—

ஓரியண்டல் மர்க்கண்டைல் ஏஜன்ஸி,

சென்னை ராஜதானிக்கு பிரதம ஏஜண்டுகள்

19-20, லிங்க செட்டி தெரு, : : மதராஸ்.



ஸ்ரீ வில்லிபுத்தூர் ஸ்ரீ ஆண்டாள் கோவில்.

பகடு பரிசளித்த பாவலன்

ஸ்ரீமான் எஸ். சோமசுந்தர தேசிகர்.
(தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் பண்டிதர்.)

தமிழ் நாட்டிலே பாவலராயுள்ளோர் செல்வவான்களிடஞ் சென்று, அவர்களுடைய சமயம் பார்த்துத் தம்முடைய வறுமையைக் கூறி அச்சீமான்கள் கொடுக்கும் பரிசில்களைப் பெற்றுக் குடும்பத்தைக் காப்பாற்றுவர். பாவலர்கள் தமது குடும்ப வறுமையின் கடுமையால் பரிசிலைச் சிறிது விரைந்து பெற முயலுதலுமுண்டு. எனினும் தனவந்தர்கள் தம்மிடம் வந்த புலவன் அறிவாளியாகவும் சொற் சாதுரியமுடையவனாகவும் இருப்பின் அப்புலவனைத் தன்னோடு பல நாள் வைத்துக்கொண்டு, அவனுக்குப் பரிசில் கொடுக்காது சிறிது காலந் தாமதிப்பதும் வழக்கம். ஒரு புலவன் தான் சென்று கண்ட புரவலன் பரிசில் கொடுக்காது காலந்நீடித்த போது, அப்புலவன் அவசரப்படுவதைக் கண்டு ஏன் பறக்கிறீர் என்றான் புரவலன். அப்போது புலவர்.

கொக்குப் பறக்கும் புறாப்
பறக்கும்
குருவி பறக்குங் குயில்
பறக்கும்
நக்குப்பொறுக்கிகளும்பறப்பர்
நானேன் பறப்பேன்
நராதிபனே
திக்கு விசயஞ் செலுத்தியுயர்
செங்கோ னடாத்து
மரங்காநின்
பக்கமிருக்க வொருநாளும்
பறவேன் பறவேன்
பறவேனே

என்று விடை கூறி அச்சீமானை மகிழ்வுறச் செய்தார் என்று கூறுவர்.

இவ்வாறன்றி புலவர் தாம் அடுத்துச் சென்ற புரவலன் தமக்குத்தக்க பரிசில் கொடாவிடின், அதனைப் பெற்றுக் கொள்ளாது அவனை யிகழ்ந்து வசைபாடிச் செல்லுவதுமுண்டு. இதுவன்றி, பிறர்பாற் சென்று அவர்களைப் பாடி அவர்கள் கொடுக்கும் பரிசிலைக் கொண்டு வந்து முன்னம் தான் வேண்டியவாறு கொடுக்க மறுத்த புரவலனுக்குக் காட்டி அவனை அவமானமடையும்படி செய்து செல்லினுஞ் செல்வர். இது புலவர்களது இயற்கைக் குணம். இவ்வாறாக முன்னாளில் நடந்ததொரு கதையை இங்குக் கூறுவேன்.

சற்றேறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன்னே பெருஞ்சித்திரன் என்றொரு புலவர் இருந்தார். அவருக்குப் பொருட்செல்வம் இல்லையெனினும் மக்கட்செல்வம் நிறைந்திருந்தது. அவருக்குத் தாயுமிருந்தாள். அவள் வயது முதிர்ந்த நரை மூதாட்டி. நூலை விரித்தாற்போன்ற மயிரினையுடையவள்; மூப்பினால் கண் தெரியாதவள். தான் பிடித்த தண்டே காலாகக் கொண்டு ஒன்றற்கொன்று அணுகப் பல அடியிட்டு நடப்பவள். வாசல் முற்றமே தனக்கு உரிய இடமாகவுடையவள்; இன்னும் கூற்றுவன் தன்னைக் கொண்டுபோகாது உயிர் வாழ வைத்திருக்கின்றானே என்று வருந்திக்கொண்டிருப்பாள்.

மனைவியோவெனின் பசியினால் உலர்ந்து வேர்ப்பினையுடைய உடம்பினையுடையவள் பல நாளாயினமையின் முடக்கங்கொண்ட பல வரியையுடைய குடரினையுடையவள். மருங்கிலே எடுத்த பல சிறு பிள்ளைகள் பிசைந்து மெல்லுதலால் உலர்ந்த மார்பினையுடையவள், மாசுபட்ட உடையினள்.

பிள்ளைகளோவெனின் நல்ல உணவு இன்மையின் வளராது மெல்லிய உளைமயிர்போலும் குடுமியையுடையோர், பாலில்லாத வறுவிய முலையைச் சுவைப்பவர். பசி மேலோங்கிய காலத்துக் கூழையும் சோற்றையும் விரும்பி உள்ளே சென்று கலங்களைத் திறந்து பார்த்து அவை வெறுமையாக விருத்தலைக் கண்டு அழுத கண்ணையுடையவர்கள்; அவர்களைக் கண்ட தாய் அச்சிறுவர்களது நினைவை மாற்றப் பகலில் புலிவருவதாகப் பயமுறுத்தியும், இரவில் அம்புலியைக் காட்டியும் நின்று அவர்களைப் பெற்ற கொடுமையை நினைந்து நினைந்தும் தந்தையை நினைந்தும் வருந்துவாள். இவ்வாறு மிக்க துன்பப்பட்ட வாழ்க்கையையுடைய அந்தப் பெருஞ்சித்திரன் வெளிமான் என்ற புரவலனை யடுத்துத் தனது வறுமையைக் கூறினான். அவனும் புலவனை யேற்றுப் பரிசில் கொடுக்க நினைத்தான். இப்பெருஞ்சித்திரனது காலக்கொடுமையால் அந்தப் புரவலனான வெளிமான் என்ற சிற்றரசன் இறந்துவிட்டான். ஆனால் இறக்குமுன் தனது தம்பியான இளவெளிமானைக் கூப்பிட்டுப் பெருஞ்சித்திரனார்க்குத் தகுந்த பரிசில் கொடுத்தனுப்பும்படி சொல்லியிருந்தான். அதனாலாவதென்ன? கொடுக்க வேண்டிய பொறுப்பு இனி இளவெளிமானுடையதல்லவா? 'உடையவன் இல்லாவிட்டால் ஒரு முழங்கட்டை' என்பது போல கொடுக்க விரும்பியவன் இல்லாதபோது வேறொருவன் கொடுப்பதானால் அது குறைந்தே வரும். இந்த உண்மையின்படி பெருஞ் சித்திரனார்க்கு இளவெளிமான் சிறிது பொருள் கொடுத்தான். அதனைப் புலவன் பெற்றுக் கொள்ள மறுத்துவிட்டான். அதனோடு நில்லாது, அவன் தான் வேற்றிடஞ்சென்று பரிசிலாகப் பெற்றுவரும் யானைக் கன்றை அவனுடைய வாயிலிலே கட்டுவதாகக் கூறிப் புறப்பட்டுச் சென்றான்.

சென்றவன் முத்திரமலைக்குத் தலைவனும் பெரும் புகழ் பெற்றவனும் கொடையாளியுமாகிய குமணனைக் கண்டான். அவனிடம் தனது வறுமையைக் கூறினான். குமணன் வேறு வேலையில் அமர்ந்திருந்தாலும், புலவரை வரவேற்று அவரோடு அளவளாவப் போதிய காலமின்மையாலுஞ்சிறிது பரிசில் கொடுத்தான். புலவன் அதனை ஏற்க மறுத்து 'என்னை யழைத்துக் காணாதே தந்த இப்பொருட்கு யான் ஓர் ஊதியமே கருதி நிற்கும் பரிசிலனல்லேன். வந்த பரிசிலனது கல்வி முதலாயின பொருந்திய தலைமையைக் கண்டு கேட்டு தினைத்துணையளவாயினும் கொடுப்பின் விரும்பி ஏற்பேன் என்று சொல்லியனுப்பினான். இச் செய்தியைக் கேட்ட குமணன் பெருஞ் சித்திரனாரை அழைத்துவரச் செய்து அவரோடு அளவளாவியிருந்து யானைக் கன்றும் மற்றவையும் பரிசிலாக ஈந்து போகும்படிச் செய்தான்.

இவற்றைப் பெற்ற பெருஞ்சித்திரன் தனது குடும்ப நிலையை நினைத்து ஊர் சென்றானில்லை. திரும்பி யானைக்கன்று முதலியவற்றோடு இளவெளிமான் இருக்குமிடம் வந்து அவனது காவற் காட்டின் முன்னுள்ள காவல் மரத்திலே யானையைக் கட்டிவிட்டு உள்ளே சென்று இளவெளிமானைக் கண்டான். 'இரப்போர்க்கு ஈந்து பாதுகாப்பவன் நீயுமல்ல. இனி புரப்போரும்—இரப்போர்க்கு இல்லாமற் போகவில்லை. இந்த நிலவுலகிலே இரப்போரும் இடுவோரும் பலருண்டு என்பதை அறிவாயாக. உன்னுடைய ஊரின்கண் காவலையுடைய மரம் வருந்தக் கொண்டுவந்து யாம் கட்டிய உயர்ந்த நல்ல இலக்கணங்களையுடைய யானை எம்முடைய பரிசில். அதனைக் காண்பாயாக இனி யான் போவல்' என்று சொல்லிவிட்டுப் புலவன் தன்னூர் சென்றான்.

வீடு சென்று தனது மனையாளை யழைத்து தங்குடிக்கு வேண்டியதுபோக மற்றவற்றை அவள் விரும்பியவாறு செலவழிக்கவுஞ் சொன்னான்.

என்னே! இவனுடைய கல்வியின் பெருமை!! இவனுடைய சுற்றம் பசியால் வருந்தும் பொழுதும் கொடுத்ததை மகிழ்ச்சியோடு ஏற்காது அதனை மறுத்துரையாடவல்லவரான தன்மையை நோக்கின் 'புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது' என்ற மூதுரை வலிபெறும்.

கணவன்மார் கட்டை மரத்தில் சென்று மீன்பிடித்துவர அவற்றை யெடுத்துக்கொண்டு மார்க்கெட்டிற்கு விரைகின்றனர்.



லக்ஷக்கணக்
கானவர்களுடைய
மனதை
உர்ச்சாகப்படுத்தும்
தேயிலை

ந்திய தேயிலை


இந்தியாவின் சிறந்தபானம்-இ

Issued by
THE COMMISSIONER FOR INDIA
INDIAN TEA MARKET EXPANSION BOARD
7, Church Lane, Calcutta

நிர்வாண தேசம்

—:[]:—

[ஸ்ரீமான் கி. வா. ஜகந்நாதன்]

[குறிப்பு:—சோழ நாட்டில் காவிரிப்பூம்பட்டினம் ஒரு பெரிய நகரமாக இருந்தது. அங்கே கரிகாலன் காலத்தில் கப்பல் வியாபாரம் எவ்வளவோ சிறப்பாக நடந்து வந்ததாம். கலங்கரை விளக்கம் சுங்கமண்டபம் முதலிய இடங்கள் அங்கே இருந்தனவாம். இப்போது உள்ள காவிரிப்பூம்பட்டினத்தில் மீன்படகையும் வலைஞர் குடிசைகளையுமே பார்க்கமுடியும். இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் அப்பட்டினம் இருந்த நிலைமையைப்பற்றிச் சங்க காலத்துத் தமிழ் நூல்கள் விரிவாகக் கூறுகின்றன. அந்நகரத்தில் இருந்த ஒருவணிகனைப்பற்றி ''மணிமேகலை'' என்னும் காவியத்திலே கண்ட வரலாறு ஒன்று பின்கண்ட கதைக்கு ஆதாரம்.]

இயற்கைக்குப் பிசாசுதான் பிடித்துவிட்டதோ? சண்டமாருதம் உலகத்தையே சுழற்றி அடிக்கிறது. அலைகள் மலைகளைப்போலக் குமுறி எழுகின்றன. கப்பலை அம்மானையைப் போல மேலே தூக்கி எறிகிறது கடல். கப்பலில் உள்ளவர்கள் யாவரும் கதிகலங்கி உயிருக்கு மன்றாடிக் கத்துகிறார்கள். அந்தப் பெரும் புயலின் முழக்கத்தில் அவர்களுடைய புலம்பல் யாருக்குக் கேட்கப் போகிறது?

''படார்! படீர்! பட்!'' என்ற சப்தம். கப்பல் உடைந்துவிட்டது. ''ஐயோ! அப்பா! அம்மா!'' என்ற ஒலிகள் அதற்குள்ளிருந்த சிற்றுயிர்களின் உயிராசையை வெளிப்படுத்தின. கரையில்லாமற் படர்ந்து கிடக்கும் கடலுக்கு அந்த உயிர்கள் அன்று பலியாயின. அந்தக் கடலின் பசிக்கு அந்தக் கப்பல் எம்மாத்திரம்?

கடலின் குமுறல் அடங்கியது; சண்டமாருதம் சளைத்து நின்றது. கப்பலையும் அதிலுள்ள உயிர்களையும் விழுங்கிவிட்டுப் பழைய சாந்தியுடன் சமுத்திரம் பிரணவ கோஷம் செய்யத் தொடங்கியது. அந்தக் கப்பலில் பிரயாணம் செய்தவர்களுடைய ஆசைகள் என்ன என்ன விதமாக இருந்தனவோ, அவர்களுடைய வரவை எதிர்பார்த்து யார் யார் ஆவலாகக் காத்திருக்கின்றார்களோ? சமுத்திரத்திலே அடித்த சண்டமாருதம்தான் செய்த படுகொலையை அவர்களுக்குத் தெரிவிக்குமா என்ன? உயிரிழந்தவர்களுடைய சடலங்கள் கடற்பிராணிகளுடைய பசியைத் தணித்தன. அவர்களுடைய உயிர்கள் எல்லையற்ற ஒன்றிலே போய்ச் சேர்ந்தன.

அந்தப் புயலின் கதையை உலகத்துக்குச் சொல்ல ஒரு சாக்ஷிகூட இல்லையென்றுதான் தோற்றியது. அந்தத் தோற்றம் பொய். அதோ ஒரு மனிதன் ஒரு துண்டுக் கட்டையைப் பிடித்துக்கொண்டு கடலிலே மிதக்கிறான். அந்தப் பெரும் புயலின் வேகத்தோடு அவனுடைய விதி போராடி ஜயித்துவிட்டது. அவனுடைய வாழ்க்கை நூலை அந்தக் காற்றால் அறுக்க முடியவில்லை. அவன் கடலில் மிதந்து வந்தான்.

* * * *

அவன் தான் சாதுவன். காவிரிப்பூம்பட்டினத்தில் அவன் ஒரு பெரிய வணிகன். கப்பல் வியாபாரம் செய்பவன். அவனுடைய மனைவி ஆதிரை. சாதுவனுக்கு அம்மனைவியால் மிக்க பெருமை உண்டாயிற்று. அவள் அத்தகைய கற்பரசி.

கையில் இருந்த பணம் செலவழிந்துவிட்டமையால் திரைகடலோடித் திரவியந்தேட எண்ணிப் புறப்பட்டான் சாதுவன். ஒரு கப்பலிலேறினான். கப்பல் கடலுக்கு இரையாயிற்று. அவன் தப்பினான்.

ஆனாலும் என்ன? கடலிலே எவ்வளவு நாளைக்கு மிதக்க முடியும்? ஆகாரம்வேண்டாமா? குடிக்க ஜலம் வேண்டாமா? உடம்பில் பலம் வேண்டாமா? இடையிலே திடீரென்று ஒரு திமிங்கிலம் வந்து அவனை விழுங்கிவிட்டால் என் செய்வது? கடலின் வெள்ளலைக் கைகளோடு அவன் கைகள் போராடின. புத்த தேவனுடைய ஸ்மரணம் ஒன்றுதான் அவனுக்கு உத்ஸாகம் உண்டாக்கியது.

''ஹா!'' என்று அவன் ஸந்தோஷத்தோடு வீரிட்டுக் கத்தினான். அவன் கண்ணுக்கு ஒரு தீவு தெரிந்தது. பச்சைப் பசேலென்று அடர்ந்திருந்த மரங்கள் அவன் கண்ணுக்குப் புலப்பட்டன. அவனுடைய கைகளுக்கு முறுக்கேறியது. தன்னுடைய முழுப் பலத்தோடு நீந்த ஆரம்பித்தான். நீந்த நீந்தத்தீவு விலகிக் கொண்டே போவதுபோல இருந்தது அவனுக்கு. வாஸ்தவத்தில் அது நெருங்கியது. இதோ வந்து விட்டான். இன்னும் பத்துமார் தூரம் இல்லை; அவன் கால் நிலைத்து விட்டது. ஆனால் கால் கீழே ஊன்றவில்லை; அவனுடைய ஸந்தோஷம் அவனுக்கு அதிகப் பலஹீனத்தை உண்டாக்கியது. தட்டுத் தடுமாறிக் கரைக்கு ஓடினான். அங்கிருந்த ஒரு மரத்தடியில் விழுந்தவன் தான். இந்த உலகத்தையே மறந்துவிட்டான்.

* * * *

எவ்வளவு நேரம் அப்படிக் கிடந்தானென்று அவனுக்கே விளங்கவில்லை. ஏதோ ஒரு கடுமையான குரல் அவனை எழுப்பியதுபோல் இருந்தது. கண்ணைத் திறந்து பார்த்தான். சுற்றிலும் அடர்ந்த மயிரும் குரூபமான உடம்பும் நிர்வாண நிலையும் உடைய சிலர் நின்றுகொண்டிருந்தார்கள்.

அந்தக் கோர ரூபங்களைப் பார்த்தவுடன் சாதுவன் திடுக்கிட்டான். உயிருக்காக அலைகளுடன் போராடிய போராட்டத்தில் அவன் மூளை குழம்பியிருந்தது. சுய ஞாபகம் வருவதற்கு நேரமாயிற்று.

தாயும் குழந்தையும்.

அவன் எழுந்து உட்கார்ந்தவுடன் சுற்றிலும் நின்றவர்கள் அவனை மொய்த்துக் கொண்டார்கள். ஒருவன் சாதுவனின் கையைத் தொட்டுப் பார்த்தான்; மற்றொருவன் அவன் காலைத் தொட்டுப்பார்த்தான். கசாப்புக் கடைக்காரன் சந்தையில் ஆடு வாங்கும்போது அதைப் பரிசோதிப்பதுபோல அவர்கள் அந்த வணிகனைப் பரிசோதித்தார்கள்.

அவர்கள் ஒருவரோடொருவர் ஆரவாரித்துப்பேசிய பேச்சில் சாதுவன் சிறிது அறிவைச் செலுத்தினான். அது தமிழன்று. ஆனால், அவர்கள் பேசுவதன் கருத்து அவனுக்கு விளங்கியது; யாரோ ஒரு சந்நியாசியிடம் அவன் அந்தப்பாஷையைக் கற்றுக் கொண்டிருந்தான். தன்னுடைய ஞாபகத்தைச் சற்றே கிண்டிப்பார்த்தான். ஆம்; இப்போது ஞாபகத்துக்கு வருகின்றது. நமக்கு இந்தப் பாஷையைச் சொல்லித் தந்த பிக்ஷு இது நாகர்கள் பாஷையென்றல்லவோ சொன்னார்? இந்தப்பாஷையைப் பேசுகிறவர்கள் நிர்வாணிகள், நரமாமிசப் பக்ஷணிகளென்று அவர் சொல்லியிருக்கிறாரே! இப்படி நினைத்தவுடன் அவன் உடம்பில் ஒரு நடுக்கம் எடுத்தது. 'கடலுக்கு ஆகாரமாக வேண்டிய நாம் இவர்களுக்கு ஆகாரமாகவேண்டுமென்பது விதி போலும்!' என்று அவன் எண்ணினான்.

ஆனாலும் அவர்களோடு அவர்கள் பாஷையிலே பேசிப்பார்த்தால் ஏதாவது நன்மை உண்டாகுமாவென்று ஒரு சபலம் தட்டியது. ''பெரியவர்களே! நீங்கள் யார்?'' என்று மெல்லிய தொனியில் பணிவோடு அவன் கேட்டான்.

பாசி நிறைந்தகுளத்தில் கல்லைப் போட்டால் திடீரென்று அப் பாசி விலகிவிடுவதுபோல் இந்தக் கேள்வியைக் கேட்டதும் அவர்கள் திடீரென்று விலகிக் கொண்டார்கள். மறுபடிமொய்த்துக்கொள்ளவில்லை. அவர்கள் முகத்தில் ஆச்சரியக் குறி தோற்றியது. அப்படியே ஸ்தம்பித்து நின்றார்கள். 'நம்முடைய பாஷையை இவன் பேசுகிறான்! இவன் யார்! இவனைத் துன்புறுத்தக் கூடாது' என்ற எண்ணம் அவர்களுக்கு உண்டாயிற்று. தாய் மொழியின் அன்பு அந்தக் காட்டுமிராண்டி ஜனங்களிடத்தில் கூட இருப்பதைச் சாதுவன் அறிந்து வியந்தான். அப்பால் சிறிது கம்பீரமாகவே பேசத் தொடங்கினான்.

''சகோதரர்களே! நீங்கள் யார்?'' என்று மறுபடியும் கேட்டான்.

'நாங்கள் இங்கே இருக்கும் நாகர்கள்'' என்ற பதில் வந்தது.

அதற்குள் ஒருவருக்கொருவர் ஏதோ பேசலானார்கள். சிறிது நேரங் கழித்து அந்தக் கூட்டத்தில் இருந்த ஒருவன், "நீ எங்களுடன் வா. எங்கள் குரு ஒருவர் இருக்கிறார். அவரிடம் அழைத்துப் போகிறோம்'' என்றான்.

சாதுவன் அவர்களைப் பின் தொடர்ந்தான். எங்கும் காடுகள், கனி மரங்கள், இடையிடையே எலும்புக் குவியல்கள்; இவைகளைத் தாண்டிக்கொண்டு ஒரு மலைக் குகைக்கு யாவரும் சென்றார்கள். அந்தக் குகையில் ஒரு கரடி தன் மனைவியோடு இருப்பதுபோல நாகர்களுடைய தலைவன் தன் ராணியோடு உட்கார்ந்திருந்தான். அவனைச்சுற்றிலும் எலும்புக் குவியல்கள் கிடந்தன.

சாதுவன் அந்தத் தலைவனுக்குமுன் நின்றான், "உங்களைப் பார்ப்பதற்காக என்னை இவர்கள் அழைத்துவந்தார்கள்'' என்றான்.

நாகர் தலைவன் ஸந்தோஷத்தால் பல்லை இளித்துக்கொண்டு இரண்டு முழம் எழும்பிக்குதித்தான். அவன் மனைவி நல்ல ஆகாரம் வந்திருக்கிறதென்று பல்லைத் தீட்டிக்கொண்டாள்.

அந்த நிர்வாண தேசத்தில் அவன்தான் குரு. அவனே அரசன்; அவனது ஆணையின்கீழ் அந்த நிர்வாணப் பிராணிகள் ஸேவகம் புரிந்தன.

சாதுவன் நாக அரசனோடு சிறிதுநேரம் பேசினான். அந்தப் பேச்சைக் கேட்பதில் அந்தத் தலைவனுக்கும் மற்றவர்களுக்கும் உண்டான சந்தோஷத்திற்கு எல்லையில்லை. "நாம் தினந்தோறும் பேசுகிறோம். இவன் பேசும்போது என்ன இனிமையாக இருக்கிறது!'' என்று அவர்கள் வியந்தார்கள். சாதுவன் அழகாகக் கருத்துக்களைக் கோத்துப் பேசினான். "வெட்டு, குத்து, தின்னு, அடி, உதை'' என்பவை போன்ற பிரயோகங்களுக்கே உபயோகப்பட்ட அந்த நாகர் பாஷை நாகரிக மனிதன் ஒருவனுடைய கருத்தை வெளியிட உதவும்போது அந்தப் பாஷைக்கே ஒரு தனி யழகு உண்டாயிற்று. நாள் முழுவதும் பேசிக்கொண்டிருந்தால் கேட்டுக் கொண்டேயிருக்கலாமென்று தோற்றியது நிர்வாண அரசனுக்கு. சாதுவன், பாஷையாகிய காந்தத்தால் அந்த நரமாமிச பக்ஷணிகளின் இதயத்தைக் கவர்ந்தான்.

"அடே! எங்கே இவனுக்கு நிறையக் கள்ளும் மாமிசமும் கொடுங்கள். மிகவும் அழகான பெண் ஒருத்தியை அளியுங்கள்'' என்று உத்தரவிட்டான் நாகர் தலைவன்.

சாதுவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. "அவை எதற்கு?'' என்று கேட்டான்.

"எதற்கா? ஸந்தோஷமாக இருப்பதற்கு!''

"இவைகளால் உடம்புக்கு ஸந்தோஷமே ஒழிய உயிருக்கு என்ன ஸந்தோஷம்?''

"அதென்ன ஸமாசாரம்? உயிர் வேறு, உடம்பு வேறு என்று உண்டா?''

அவனுக்குச் சாதுவன் மெல்ல மெல்ல உபதேசம் செய்யத் தொடங்கினான். உடம்புக்குள் உயிர் என்ற வஸ்து ஒன்று உண்டு என்பதையும் உணவு, துயில் முதலியவைமட்டும் மனிதனுக்குப் போதா என்பதையும் உணர்த்தினான்.

"கப்பல் கரை தட்டி வந்த காலத்தில் அக்கப்பலிலுள்ள ஜனங்களைக் கொன்று தின்று வாழும் எங்களுக்கு இந்த உபதேசம் ஒன்றும் விளங்கவில்லையே'' என்று நாகர் தலைவன் சொன்னான்.

"இனிமேல், நரமாமிச பக்ஷணம் செய்வதில்லையென்ற விரதத்தை மாத்திரம் அனுஷ்டியுங்கள். அதுவே போதும்'' என்று சாதுவன் உபதேசம் செய்தான்.

அவன் வெறும் பழங்களை மாத்திரம் உண்டு பசியாறியதைப் பார்க்கும்போது நாக சாதியினருக்குப் பெரு வியப்பாக இருந்தது.

எவ்வளவோ கப்பல்களின் பாய்மரங்களும் உடைந்த பகுதிகளும் அந்தத் தீவில் சிதறிக்கிடந்தன. அக்கப்பல்களில் வியாபாரிகள் ஈட்டி வந்த மணியும் பொன்னும் மற்றப் பொருள்களும் நாகரிகமற்ற அந்தத் தீவிலே சிந்துவாரற்றுக் கிடந்தன. அவைகளை என்ன செய்வதென்பதே அந்த முரட்டுப்பிராணிகள் அறியார்கள்.

சாதுவன் அந்தக் குவியல்களை மூட்டை கட்டிக்கொண்டான். தினந்தோறும் கடற்கரைக்கு வந்து 'ஏதாவது கப்பல் வராதா' என்று பார்த்துப் பார்த்து ஏங்கி நின்றான். கடைசியில் ஒரு நாள் வந்த கப்பலொன்றைக் கூவி அழைத்து அந்தக் கப்பல் நிறைய மணியையும் பொன்னையும் ஏற்றிக்கொண்டான். நாகர்களின் அரசன் வழியனுப்பினான்; மீண்டும் வரவேண்டுமென்று விரும்பினான். சாதுவன் காவிரிப்பூம்பட்டினத்திற்கு ஒரு பெரிய கோடீசுவரனாகத் திரும்பினான்.

* * * *

நாகர்களுக்கு அவன் செய்த உபதேசம் சில வாரங்கள்தான் நினைவில் இருந்தது. அப்புறம் அவர்களுடைய நாக்குப் 'பழைய பழக்கத்தைப் பிடித்துக்கொண்டது. பழையபடியே அவர்கள் நரமாமிசத்திற்குச் சப்புக்கொட்டலானார்கள்.

டிராபிகல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட், டில்லி.

★

(சேர்மன்: ஸ்ரீஜத் சுபாஷ்சந்திரபோஸ்)
ஹரிபுரா காங்கிரஸ் தலைவர்.

பண்டித மோதிலால் நேரு, ஹக்கீம் அஜ்மல் கான்,
டாக்டர் எம் ஏ. அன்சாரி, டி. ஏ. கே. ஷேர்வானி.

இன்னும் அநேக பிரபல தேசிய தலைவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பூரா சுதேசி ஸ்தாபனம்.

1. 2 கோடிக் கதிகமான பாலிஸிகள் வெளியிட்டுள்ளனர்.
2. ஆரம்பம் முதல் பாலிஸிதாரர்களுக்கு **போனஸ்** அளித்து வருகின்றது.
3. ஏராளமான ஆயுள் நிதி இருக்கின்றது. இவை சொந்தக் கட்டிடங்களிலும், கவர்ன்மெண்ட் இதர முதல்தரமான செக்யூரிடிகளில் முதலீடு செய்யப்பட்டிருக்கின்றது.
4. இந்தியாவிலுள்ள தேசியத் தலைவர்களால் நடத்தப்படுவது.
5. ஐந்து காங்கிரஸ் தலைவர்கள் டைரக்டர்கள் போர்டில் ஸ்தானம் வகித்துள்ளனர்.

ஏஜென்ஸிகளுக்காகவும், ஆர்கனைஸர்களுக்காகவும் விண்ணப்பித்துக்கொள்ளவும்.

கே. எஸ். ராமமூர்த்தி, எம். ஏ.,
பிராஞ்சு காரியதரிசி.
189 - B, மவுண்ட் ரோட், மதராஸ்.

கும்பகோணம் ப்ரொவிஷன் ஸ்டோர்ஸ்

மடத்துத் தெரு, கும்பகோணம்.

புரொப்ரைட்டர்: என். வெங்கட்டராமய்யர்.

★  ★

1935-ல் ஸ்தாபிக்கப்பட்டது.

அசல் சிதம்பரம், நெல்லூர் முதலான அரிசி ரகங்கள், நீலகிரி, ஹாஸன் காப்பி ரகங்கள், முதல் நெம்பர் பெருங்காயம் வகையராக்கள், மற்றும் சகலவிதமான மளிகை சாமான்களும், நேரில் தருவிப்பதால் சவுகரியமாக மொத்தத்திலும் சில்லரையிலும் சப்ளை செய்கிறோம். வியாபாரிகளும், வீட்டிற்குத் தேவையுள்ளவர்களும், நேரில் சரக்கின் மேன்மையையும், நயத்தையும் பார்த்துத் தெரிந்துகொண்டு வாங்கவும்.

இந்தியாவில் தொழிலாளர் முன்னேற்றம்

—[*]—

(ஸ்ரீமான் பி. சிவராவ்)

புதிய அரசியல் சட்டம் சென்ற வருஷம் ஏப்ரல் மாதம் அமுலுக்கு வந்தது முதல் திடீரென இந்தியாவெங்கும் கைத்தொழில் துறையில் தொழிலாளர் கிளர்ச்சி பலமாக ஏற்பட்டது. இது மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு சங்கடத்தையுண்டுபண்ணிற்று. அவற்றிற்கு இதனால் மிகுந்த கவலையுமேற்பட்டது. 1937-ம் வருஷத்தில் இத்தேசத்தில் மொத்தம் 379 தொழிலாளர் சச்சரவுகளேற்பட்டன. இதனால் மொத்தம் ஒரு கோடி வேலை நாட்கள் வீணாயின. 1921-ம் வருஷத்திற்குப்பின் இவ்வளவுதொழிற் சச்சரவுகள் ஏற்பட்டது இப்பொழுதுதான் முதல்நடவை எனக் கூறவேண்டும். வங்காளத்தில் சணல் ஆலைகளில் நீண்ட காலம் வேலை நிறுத்தம் ஏற்பட்டு இதனால் 60 லக்ஷம் வேலை நாட்கள் வீணாயின. பம்பாய், ஐக்கிய மாகாணம், சென்னை ஆகிய மாகாணங்களில் முக்கியமாகக் கிளர்ச்சி அதிகம் நடைபெற்றது. மொத்தம் 379 வேலை நிறுத்தங்கள் நடந்ததில் 221 போல பருத்தி நெசவுத் தொழிலில் நேர்ந்தவை. சம்பளத்தை உயர்த்தவும், சுணக்க காலத்தில் செய்யப்பட்ட கூலிக் குறைவைச் சரிப்படுத்தவும் இந்த வேலை நிறுத்தங்கள் நேர்ந்தவை. 1938-ல் இதையும் விட அதிக வேலை நிறுத்தங்கள் இருக்கும்போல் தோன்றுகிறது. ஏனெனில் இந்தியாவெங்கும் முக்கியமாக ஐக்கிய மாகாணத்திலும் சென்னையிலும் பெரிய வேலை நிறுத்தங்களும் கதவடைப்புகளும் இந்த வருஷத்தில் நேர்ந்திருக்கின்றன. சமரஸக் கமிட்டிகள் மத்தியஸ்த போர்டுகள் ஆகியவற்றின் முடிவுக்குப் பின்னர் கூட இவை நேர்ந்திருப்பதுதான் இதில் ஒரு விசேஷமாகும்.

கிளர்ச்சிக்குக் காரணம்

சென்ற பதினெட்டு மாதங்களில் கைத்தொழில் கிளர்ச்சி இப்படித் திரும்ப ஏற்பட்டிருப்பதற்கான காரணத்தை நாம் எளிதில் அறியக் கூடும். மாகாணங்களில் ஜனப் பிரதிநிதிகளுடைய கவர்ன்மெண்டு ஏற்பட்டது தொழிலாளருக்கு ஒரு நம்பிக்கையையுண்டு பண்ணிவிட்டது. அதிலும் முக்கியமாகக் காங்கிரஸ் கட்சி பெரிய வேலைத் திட்டத்திற்குக் கட்டுப்பட்டிருக்கிறது. காலக்ஷேபக் கூலி, ஒவ்வொரு தொழிலிலும் குறைந்தபக்ஷ கூலி, போதிய வீட்டு வசதி, கடன் நிவர்த்தி, பிரஸவ கால வசதி, வேலையில்லாதவருக்கு உதவி, நோய் இன்ஷியூரன்ஸ், வயது முதியோர் பென்ஷன், இலவசக் கல்வி முதலிய பல பெரிய சீர்திருத்தங்களைச் செய்வதாகக் காங்கிரஸ் கூறியிருக்கின்றது. இது தவிர சங்கம் கூடும் உரிமை, பேச்சு உரிமை முதலியனவும் வாக்களிக்கப்பட்டிருக்கின்றன.

காங்கிரஸ் ஸர்க்கார் அக்கரை

காங்கிரஸ் மாகாண கவர்ன்மெண்டுகள் 16 விசாரணைக் கமிட்டிகளும் மத்தியஸ்த சபைகளும் நியமித்திருப்பது அவற்றிற்குக் கவுரவமளிக்கக் கூடியதாகும். இவை தொழிற் சச்சரவுச் சட்டப்படியே நியமிக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு முன்னிருந்த கவர்ன்மெண்டுகள் செய்கைக்கும் இதற்கும் மிகுந்த வித்தியாசமுண்டு. தொழிற் சச்சரவுச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின் 1929-ம் வருஷ முதல் 1936-ம் வருஷத்திற்குள்ளாக ஏழு வருஷங்களில் முன்னிருந்த கவர்ன்மெண்டார் இச்சட்டத்தை உபயோகித்ததே இல்லையெனலாம்.

கிளர்ச்சியின் பயன்

பல வேறு மாகாணங்களிலும் சமீபத்தில் செய்யப்பட்டுள்ள முயற்சிகளின் பயனாக தொழிலாளர் கூலியிலும் மற்றும் வேலை நிபந்தனைகளிலும் மிகுந்த சீர்பாடு காணப்படுகிறது. தொழிலாளர்கள் சங்கங்கள் அமைத்துக் கொள்ளலாமென்பது இந்த மத்தியஸ்த சபைகளினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்ல. பல சந்தர்ப்பங்களில் முதலாளிகளே கஷ்டமான நிபந்தனைகளின்றி இவ்வுரிமையையளித்திருக்கின்றனர். கூலிகள் உயர்த்தப்பட்டிருக்கின்றன. முக்கியமாக நெசவுத் தொழிலில் இவ்விதம் நேர்ந்திருக்கிறது. சுமார் 100-க்கு 25 விகிதம் நெசவுத் தொழிலில் கூலி உயர்த்தப்பட்டிருக்கிறது. சம்பளத்துடன் விடுமுறை சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. சில விடங்களில் முதலாளிகள் இதை யளித்து விட்டனர். சிக்கு இன்ஷ்யூரன்ஸ் பற்றிய திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. பல மாகாணங்களில் இதை அனுசரித்துச் சட்டமும் செய்யப்படுவதாகவிருக்கிறது. தொழிற்சாலைச் சட்டம் முதலிய தொழிலாளர் சட்டங்கள் கடுமையாக அமுல் நடத்தப்படுகின்றன. காங்கிரஸ் மாகாணங்களில் கவர்ன்மெண்டார் தொழிலாளர் பற்றிச் செய்துவரும் சட்டங்கள் வெகு மும்முரமாகப் போய்க் கொண்டிருப்பதால் இனி இந்தப் பளுவை கைத்தொழில்கள் தாங்க முடியாதென்பதாக முதலாளிகள் இப்பொழுது அச்சம் வெளியிட்டு வருகின்றனர். இக்கொள்கையில் ஏதாகிலும் மாறுதலில்லாத பக்ஷத்தில் இனிக் கைத்தொழில்களெல்லாம் சமஸ்தானங்களுக்குமாறி விடுமென்பதான முதலாளிகளின்பயமுறுத்தல் கான்பூரில் சில முதலாளிகளால் ஏற்கெனவேயே காரியத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தக்காங்கிரஸ் கவர்ன்மெண்டுகள் விஷயத்தில் ஒன்று கூற வேண்டும். இதுவரையில் தொழிலாளருக்கு மறுக்கப்பட்ட வசதிகளை மீண்டும் அளிக்க அவர்கள் முயன்று வருவதுடன் திடீரென வேலைநிறுத்தஞ் செய்வதையும் சட்ட விரோதமாக அமைதியின்றி வேலைநிறுத்தஞ் செய்வதையும் அவர்கள் மட்டுப்படுத்தியிருக்கின்றனர். கூட்டாகவிருந்து பேரஞ்செய்து மனமுவந்து ஒரு சமரஸ ஏற்பாடுகளைச் செய்துகொள்ளுவதென்ற வழக்க முண்டுபண்ணப்பட்டு வருகிறது.

மத்தியஸ்த முறை

1921-ம் வருஷ முதல் இந்தியாவில் நடந்துள்ள கைத்தொழில் சச்சரவுகளைப்பற்றிக் கவனித்தோமாயின் சமரஸப் பேச்சு மூலம் ஒரு மத்தியஸ்த ஏற்பாடு செய்யும் முறையைத் தொழிலாளர் ஆதரித்து வந்திருக்கின்றனரென்பது புலப்படும். 1921-ம் வருஷ முதல் 1928-ம் வருஷத்திற்குள் 1100 தொழிலாளர் சச்சரவுகள் ஏற்பட்டதில் 22-ல் மத்தியஸ்த ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த மத்தியஸ்த ஏற்பாடுகளிலெல்லாம் விசாரணைக் கமிட்டி முடிவை இருதாப்பினரும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். சில சந்தர்ப்பங்களில்



பிரபாத் படங்கள்

மேலான தமாஷிற்குச் சிறந்தவை

வேனிஸில் நடைபெறும் சர்வதேச பொருட்காக்ஷியில் காண்பிக்க
இந்தியாவின் முதல்தர படமெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட படம்

எதிர்பாராதது

சாந்தா ஆப்தே நடித்தது

★ ★

பிரபாத்

தயாரித்த உன்னத புராண படம்

கோபால் கிருஷ்ண

சாந்தா ஆப்தே ... "ராதை"
ராம் மராத்தி ... "கிருஷ்ணர்"
பரசுராம் ... "மன்குஷ்"

('எதிர்பாராதது' என்னும் படத்தில் பிச்சைக்காரனாக நடித்த பையன்)

★ ★

பிரபாத்

தயாரித்து வரும் அடுத்த சமூகப் படம்

எனது மகன்

புத்தப் புதிய கதை - புதிய நடிகர்

மிஸஸ் சாந்தா ஹூப்ளிகர்

★ ★

படம் வேண்டுவோர்:—

FAMOUS PICTURES,

BANGALORE CITY.

Telegram:—"FAMOUS FILM"

Phone: 2158.

விசாரணைக் கமிட்டி நியமித்த தாக அறிவித்தவுடனேயே வேலை நிறுத்தங்கள் முடிவடைந்திருக்கின்றன.

1928 முதல் 1936-ம் வருஷம்வரையில் 11 தகராறுகளில் மத்தியஸ்த ஏற்பாடு செய்து கொள்ளப்பட்டிருக்கிறது. மூன்று சந்தர்ப்பங்களில் தகராறுகள் வந்தபின் தொழிற் சச்சரவு சட்டப்படி கவர்ன்மெண்டார் நடவடிக்கையெடுத்துக்கொண்டிருக்கின்றனர். அப்பொழுது தொழிலாளர் விஷயம் ஒதுக்கப்பட்டதிலாகாவாகும். சென்ற வருஷம்வரையில் அதிகாரத்திலிருந்த மாகாண கவர்ன்மெண்டுகள் அநேகமாக முதலாளிகளைச் சார்ந்தவையாகவே இருந்தன. பல வேறு மத்தியஸ்த சபைகளிலும் தொழிலாளரிடம் பூர்ண அனுதாபமுள்ளவர்கள் அதிகம் இருப்பதற்கில்லை. அவற்றின் முடிவும் அங்கீகரிக்கப்பட்டு வந்ததென்றால் இது முக்கியமாகக் கவனிக்கக்கூடிய விஷயமாகும்.

ஆமதாபாத் உதாரணம்

தொழிலாளர் முதலாளிகள் சேர்ந்து சமரஸமாகத் தகராறுகளைத் தீர்த்துக்கொள்ளுவதனால் எவ்வளவு நன்மையுணடென்பது ஆமதாபாத் நெசவுத் தொழிலைப் பார்த்தால் நன்கு தெரியவரும். அங்கு நிரந்தரமாகவே ஒரு மத்தியஸ்த போர்டு இருந்து வருகிறது. ஆமதாபாத் கூலி கொடுக்கும் விஷயத்தில் முன்னணியிலிருக்கிறது. தென்னிந்தியாவில் அதே மாதிரி வேலைக்குக் கொடுக்கப்படும் கூலியைப்போல் இரண்டு மடங்கு ஆமதாபாத்தில் கொடுக்கப்படுகிறது.

வேலை நிறுத்தத்தின் விபரீதம்

இருப்பினும் ஆமதாபாத்தின் சிறந்த உதாரணம் மற்ற மாகாணங்களில் தகுந்தபடி பின்பற்றப்படவில்லை. தொழிலாளர் சங்கங்கள் கூடும் உரிமையாகிய அடிப்படையான விஷயத்தை முதலாளிகள் அங்கீகரியாததே இதற்குக் காரணமாகும். 1921-ம் வருஷ முதல் 1937-ம் வருஷம் வரையில் இந்தியாவில் மொத்தம் 3000 தொழிலாளர் தகராறுகள் ஏற்பட்டிருக்கின்றன. இதில் 50 லக்ஷம் தொழிலாளர் போல் சம்பந்தப்பட்டிருக்கின்றனர். கைத் தொழில்களுக்கு இதனால் மொத்தம் 11 கோடி தினங்கள் வீணாகிவிட்டன. இப்படிக் கொடுமையான அனுபவமேற்பட்டும் பிரயோசனப்படவில்லை. ஏதோ ஒரு சில முதலாளிகள்தான் மற்றவர்களைப்போலல்லாது தொழிலாளர் சங்கங்களுடன் கூட்டாகக் கலந்து பேசுவதன் பிரயோசனத்தை உணர்ந்திருக்கின்றனர்.

1924-ம் வருஷ வாக்கில் பொருளாதார நிலைமை அதிருப்திகரமாக விருந்த பொழுது கையில் சரக்கு இருப்பு அதிகமிருந்ததாலும், கூலிபளுவைக் குறைக்க அவர்கள் விரும்பியதாலும் தங்கள் ஆட்கள் மூலமே பலவிடங்களில் தொழிலாளர் வேலை நிறுத்தங்களை அவர்கள் ஏற்பாடு செய்து வந்தனர். தொழிலாளர் தலைவர்கள் பலர் அவசரப்பட்டு வேலை நிறுத்தங்களை யுண்டுபண்ணிவிடுகின்றனரென்பதை நான் மறுக்கவில்லை. இவர்கள் இந்திய நிலைமையை நன்குணராது வார்த்தையளவில் கொள்கைகளைக் கேட்டு மாத்திரம் அவசரப்பட்டு வேலை நிறுத்தங்களை ஏற்பாடு செய்து விடுகின்றனர். நம் நிலையில் அவற்றை அமுல் நடத்தக்கூடுமா வென்பதை இவர்கள் நன்கு பரிசிலனை செய்வதில்லை. இதெல்லாம்

''வீர்யம் குன்றி கஷ்டப்படுகையில் ஸனடோஜன் உபயோகித்தேன். நரம்புகளுக்கு வலுவூட்ட ஸனடோஜன் போல் சிறந்தது ஒன்றுமில்லை என தைரியமாய்க் கூறுவேன்'' எனக் கூறுகிறார்.

Dr. K. or D.

ஆண் மக்களின் ஆரோக்யத்தை ஸ்திரீகள் போற்றுகின்றனர்.

வயது ஆக ஆக, பலஹீனம், அசதி ஏற்படுகிறது. வாழ்க்கையின் இன்பங்களை அனுபவிக்க முடிவதில்லை. யௌவனம், ஆரோக்யம், பலம் பெற சுலபமான வழி இருக்கிறது. சரீரத்திற்கு ஆரோக்யத்தையே அளிக்கும் ஸனடோஜன் உட்கொள்ளுங்கள். கொஞ்சம் ஜலத்தில் கலந்து இந்தப் பௌடரை சாப்பிடச் சாப்பிட ஆரோக்யம் அதிகரிக்கிறது.

உங்கள் அருகிலுள்ளோர் யோசனையைப் பின்பற்றுங்கள். அவர்கள் ஸனடோஜன் மூலம்பலம் திரும்பப்பெற்றனர். இனியும் தாமதம் வேண்டாம். இன்றே ஆரோக்யமளிக்கும் ஸனடோஜன் பௌடர் சாப்பிட ஆரம்பியுங்கள்.

SANATOGEN

உண்மையான டானிக் உணவு

எல்லா மருந்து வியாபாரிகளிடமும், கடைகளிலும் கிடைக்கும்.

ஸனடோஜன் தயாராகும்பொழுது எக்காலத்தும் கைபடுவதில்லை. மதத்திற்கு ஆக்ஷேபகரமான வஸ்துக்கள் கிடையாது.

சீகாழி கோவில். இங்கு விமானம் அமைந்துள்ள முறை மற்றவிடங்களைப் போன்றதன்று என்பதைப் படத்தில் காணலாம். உயரே விமானத்தில் இங்கு ஸ்வாமி தரிசனம் செய்வதுண்டு. —எ. வ

பொதுவுடமை இயக்கத்தினால் ஏற்படுவதாகக் கூறுவது நிலைமையைப் புறக்கணிப்பதாகும். சில முதலாளிகளின் பான்மை மிகப் பிடிவாதமாக விருக்கிறது. சட்ட ரீதியான வழியில் இவர்கள் அளிக்க இஷ்டப்படாததைப் பிறகு இவ்வியக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதிகள் பயமுறுத்தலுக்குட்பட்டு அளிக்கின்றனர்.

தொழிலாளரின் அடக்கம்

இந்தியாவில் நேர்ந்துள்ள தொழிலாளர் சச்சரவுகளையும் இவற்றில் தொழிலாளர் பெற்றுள்ள கஷ்டங்களையும், இவர்கள் பலாத்காரத்தில் இறங்குமாறு இவர்கள் ஆத்திர மூட்டப்பட்டதையும் நினைக்குங்கால் தொழிலாளரைப் பாராட்டும்படியே அவர்கள் நடந்துகொண்டிருக்கின்றனரென்பது தெரியவரும்; அவர்கள் பலாத்காரத்தில் இறங்கிய சந்தர்ப்பம் மிகவும் குறைவேயாகும். தொழிலாளர் விசேஷ அடக்கம், தோழமை, உறுதி, தியாகஞ் செய்வதற்கான ஆற்றல் ஆகிய அரிய குணங்களைப் போராட்ட காலத்தில் காட்டியிருக்கின்றனரென்பதை யாரும் ஒப்புக்கொள்ளவேண்டும். இப் போராட்டங்கள் பல சமயங்களில் பல வாரங்களும் சில சமயங்களில் பல மாதங்களுங்கூட நிகழ்ந்திருக்கின்றன.

முதலாளிகள் பான்மை

பதினெட்டு வருஷங்களுக்கு முன் வைஸ்ராயாயிருந்த லார்டு செம்ஸ்போர்டு புதிய இந்தியா சட்ட சபையைத் திறந்து வைத்துப் பேசுகையில் செய்த அழகான ஒரு வேண்டுகோளைப்பற்றி நினைத்துப் பார்க்கும்பொழுதெல்லாம் எனக்கு வருத்தமேற்படுகிறது. முதலாளிகள் அனாவசியமாகப் போராட்டத்தை யுண்டு பண்ணி விட்டுப் பிறகு நிர்ப்பந்தத்தின் பேரில் தொழிலாளருக்கு உட்படுவதான முறைக்கு முதலாளிகள் இடம் கொடுக்கக்கூடாதென அவர் அச்சமயம் பேசினார். இந்த யோசனை தேசமெங்கும் பின்பற்றப்பட்டிருக்குமாயின் சமீப காலத்தில் இத்தேசக் கைத் தொழில் போக்கின் சரித்திரத்தையே இது அடியுடன் மாற்றியிருக்கும். நேர்மையான முறையில் தொழிலாளர் சங்க இயக்கம் இந்நாட்டில் அபிவிருத்தியடைவதில் எவ்விதச் சச்சரவுமிருப்பதற்கில்லை. முதலாளிகள் விரோதம்தான் ஒரு தடையாகவிருக்கிறது. தொழிலாளர் சங்க இயக்கத்தை ஒடுக்கப் பார்க்காமல் வளர்க்கப் பார்த்து தொழிலாளர் முதலாளி தகராறுகளையும் சமரஸமாகத் தீர்க்கப் பார்த்திருந்தால் தொழிலாளர் நிலைமை இப்பொழுது போல் அவ்வளவு அதிருப்திகரமாகவிராது. இப்பொழுது எங்கு பார்த்தாலும் வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டதும் இன்னும் ஏற்பட்டு வருவதும் சென்ற சில வருஷங்களாக அவர்களை அடியுடன் ஒடுக்கி வைத்ததனால் ஏற்பட்டதேயாகும். இப்பொழுது தொழிற் சங்க மூலம் பேச்சு வார்த்தை நடத்துவதென்ற வழக்கம் முதலாளிகளிடையே ஏற்பட்டு வருவதனால் இனி வேலை நிறுத்தத்திற்குப் பதில் மத்தியஸ்த ஏற்பாடு அமுலுக்கு வரக்கூடும். தொழிலாளர் சமரஸமுறையில் தகராறுகளைத் தீர்ப்பதையே விரும்பியிருக்கின்றனர். ஆனால் ஜனப் பிரதிநிதிகளாலான கவர்ன்மெண்டு அதிகாரத்திற்கு வருமுன் இதற்கு அவர்களுக்கு வேண்டிய இடமில்லாமல் போய்விட்டது.

ஒரு எச்சரிக்கை

இவ்வித ரீதியில் பார்க்கும்பொழுது தொழிலாளர் விஷயத்தில் அதிக அனுதாபமேற்படக் கூடுமாயினும், தொழிலாளர் ஒரு வரையறைக்குமேல் பொறுமையில்லாமல் நடந்துகொண்டால் பிறகு இந்நிலைமைக்குக் கெடுதலையே யுண்டுபண்ணக் கூடும். காங்கிரஸ் கவர்ன்மெண்டுகள்கூட எல்லா சங்கத்திலும் முதலாளிகள் உட்படுமாறு செய்ய முடியாமற்போகும். பொறுமை மூலம் எதிர்க்கக்ஷியை வெல்லுவதுதான் ஜனநாயகத்தின் அடிப்படையான கொள்கையாகும். பொதுஜன அபிப்பிராயத்தை வலுவாக வுண்டு பண்ணவேண்டும். காங்கிரஸ் கவர்ன்மெண்டுகள் முக்கியமாக சென்னை, பம்பாய், ஐக்கிய மாகாண கவர்ன்மெண்டுகள் காட்டி வரும் அனுதாபத்தை எல்லாத் தொழிலாளரும் உணர்ந்து அதற்கு ஆதரவளிக்க வேண்டும். திடீரென சட்ட விரோதமாக வேலை நிறுத்தஞ் செய்வது தொழிலாளருக்கும் நன்மையாகாது. தொழில் இலாகா மந்திரிகளுக்கும் வலுவுண்டு பண்ணுவதாகாது. தொழிலாளர் சங்க இயக்கத்தை அபிவிருத்திசெய்வதிலேயே தலைவர்கள் கவனஞ் செலுத்துவது மிகுந்த புத்திசாலித்தனமாகும். அப்படி செய்யும்பக்ஷத்தில் எதிர்காலத்தில், காங்கிரஸ் கவர்ன்மெண்டுகள் அதிகாரத்திலிருந்தாலும் சரி மற்ற கவர்ன்மெண்டுகள் அதிகாரத்திற்குவந்தாலும்சரி, வலுவான தொழிற் சங்கங்கள் இருப்பது தொழிலாளருக்குப் பெரிய பாதுகாப்பாக விருக்கும்.

எல்லாத் தோல் வியாதிகளையும் சீக்கிரமாய் ஆற்றும்படியானது.

நீ ரூபத்தை மாற்றும்படியான தோல் வெடிப்பினால் வருத்தப்பட்டால், உனக்கு வைத்திய சாஸ்திரம் குடிகூராவை (Cuticura) விடசிக்கிரமாய் நோய்தீர்ப்பது ஒன்றும் தரமுடியாது. இந்த மருந்து, தோல்வியாதிகளை அனேக காலமாகப் பார்த்துத் தீர்த்த வைத்தியரால் கண்டுபிடித்துச் செய்யப்பட்டது.

இந்த முறைகளைப்படித்து உபயோகிக்கவேண்டும்.

நோயிருக்கும் பாகத்தை, ராத்திரியிலும், காலையிலும், குடிகூரா சோப்புக்கட்டியால் (Cuticura Soap) வென்னீர் வார்த்துக் கழுவி, மெதுவாய் உலரத்துடைத்து குடிகூரா தைலத்தைத் (Cuticura Ointment) தடவவேண்டும். இந்த தின உபசரணை சொறி நமைச்சலைத் தணித்து, எரிப்பை உடனே நீக்கும். புண்ணாற்றி, நோய்தீர்த்து, சொஸ்தமாக்கும் குடிகூரா (Cuticura) தோல் வெடிப்புகளினுள்ளே புகுந்துவிடும். அது கருமிப் புழுகளை அழித்து, நோய் உண்டாக்கும் பாஷாணத்தை வெளிப்படுத்தி சிலைக்கும் புண்களை ஆற்றி, தோலுக்கு சுகமான வழியை உண்டுபண்ணி முழுதலும் சொஸ்தமாக்கும். முதல் தரம் பூசும்போதே சுகத்தால் பயனாகவரும் ஆனந்தம் உனக்கு ஆச்சரியக் களிப்பை உண்டாக்கும். குடிகூரா தைலமும் (Cuticura Ointment) குடிகூரா சோப்புக்கட்டியும் (Cuticura Soap) வாங்கி இன்றைக்கே உபயோகித்துப்பார்.

Cuticura
OINTMENT AND SOAP

குடிகூரா

தைலமும் சோப்புக்கட்டியும்

எந்த மருந்து கடைகளிலும், பஜார்களிலும் வாங்க அகப்படும்.

பிரிவு

(ஸ்ரீமான் பெ. கோ. சுந்திரராஜன்)

விசாலத்தைச் சுற்றி ஒரே பிரளயமாயிருந்தது. அவள் எதிரில் பெட்டி எரிமலை வாயைப்போல் திறந்திருந்தது. சுற்றிலும், நெருப்புப் பொறிகள்போலவும், எரியும் ஜ்வாலைகள்போலவும், பலவித பாசிகள், மணிகள், ரவிக்கைகள், புடவைகள் பல வர்ணங்களில் சிதறிக் கிடந்தன. ரொம்பவும் கருத்தாகப் புடவைகளையும், ரவிக்கைகளையும் தூசி தட்டி மடித்து மடித்துப் பெட்டிக்குள் வைத்துக்கொண்டிருந்தாள். இரண்டு மூன்று சோப்புப் பெட்டிகளில் நிறைந்திருந்த பாசிகளை யெல்லாம் வர்ணத்திற்குத் தக்கவாறு வகுத்துவைத்தாள். ஒட்டியாணத்தையும் பூ வேலைச் சட்டத்தையும் சேர்த்து எப்படிப் பெட்டியில் வைப்பது என்று முயன்றுகொண்டிருந்தாள்.

அவள் இன்னும் சாப்பிடவில்லை. நான் சாப்பிட்டு ஐந்து நிமிஷம் இருக்கலாம். நானும் அவள் சகோதரனும் சாப்பிட்ட இலைகளைக்கூட அவள் இன்னும் எடுக்கவில்லை. ஏதோ ரவிக்கையைப் பெட்டியில் வைக்க மறந்துவிட்டதை நினைத்துக்கொண்டு திடீரெனப் பெட்டியைத் திறந்து சீர்திருத்த ஆரம்பித்துவிட்டாள். அவள் இன்னும் சாப்பிடவில்லையே என்ற கவலை எனக்கு அதிகமாயில்லை. வழக்கம் போல் சாப்பிட்டவுடன் எனக்குக் குடிக்கத் தண்ணீரும் வெற்றிலைபாக்கும் கொண்டு வருவாள். இன்று அதை மறந்துவிட்டாள்.

இரண்டு நாட்களாக அவள் ஊருக்குப் போவதைப்பற்றித் தான் பேசிக்கொண்டிருந்தாள். மூன்று நாட்களுக்கு முன் அவளுடைய சகோதரன் வந்தது முதல் இதுதான் பேச்சு. வண்டி பகல் 2 மணிக்குத்தான் என்றாலும் அவள் இப்பொழுதே மூட்டை கட்ட ஆரம்பித்துவிட்டாள். தன்னுடைய ஊருக்குப் போவதில் என்னை விட்டுப் பிரிந்து போவதில் அவளுக்கு இருந்த உற்சாகத்தைப் பார்க்க எனக்குப் பிடிக்கவில்லை. இன்றே, இப்பொழுதே என் தேவைகளை மறந்தவளுக்கு, ஊர் போய்ச் சேர்ந்த பிறகு என்ன நினைவு இருக்கப்போகிறது என்ற எண்ணம்தான் எனக்குத் தோன்றிற்று.

அருகில் உட்கார்ந்திருந்த என் மைத்துனனும் நானும் ரொம்ப நேசப் பான்மையுடன் அளவளாவிக்கொண்டிருந்தோம் என்று சொல்லிவிட முடியாது. உண்மையில் முந்திய நாள் இரவு முதலே எங்கள் இரண்டு பேருக்கும் அதிகமாகப் பேச்சு கிடையாது. விசாலத்தை நான் ஊருக்கு அனுப்புவதாகவே இல்லை. புதிதாகக் குடித்தனம் வைத்து கிட்டத்தட்ட ஒரு வருஷமாகிவிட்டதால் அவளை அழைத்துக்கொண்டு போக வேண்டுமென்று அவளுடைய பெற்றோர் ஆசைப்பட்டார்கள். நாங்கள் குடித்தனத் துறையில் இறங்குவதற்குமுன் நடந்த சில சம்பவங்களால் என் மாமனார் வீட்டாரின் மேல் எனக்கு அன்பு அதிகமாக வளர்ந்து விட்டதென்று சொல்லிவிட முடியாது. எப்பொழுது பழி தீர்த்துக் கொள்ளுவோம் என்று எண்ணிக்கொண்டிருந்த எனக்கு நல்ல சந்தர்ப்பம் வாய்த்தது. என் மாமனார் நாலைந்து கடிதங்கள் எழுதியும் நான் தற்சமயம் அனுப்ப முடியாது என்று சொல்லி விட்டேன். ஒவ்வொரு கடிதம் வரும்போதும் விசாலம், "எப்பொழுது அனுப்பப் போகிறீர்கள்?" என்று ஆவலுடன் கேட்பாள். அவளுக்கு ஊருக்குப் போவதில் இருந்த ஆசை என் மனோதிடத்தைக் கலைக்கவும் முயற்சி செய்யும்போலிருந்தது.

"இப்பொழுது வேண்டுமானால் போயேன்" என்று அலக்ஷியமாகச் சொல்லி விடுவேன்.

ஆனால், என் தகப்பனார் குறுக்கே வந்து என்னுடைய அந்தஸ்துக் கோட்டையில் ஒருபுற மதிலை இடித்து விட்டார். என் மாமனார் முயற்சிகள் என்னிடம் பலிக்காமல் போகவே சர்வதேச சங்கத்துக்கு மனுச் செய்துகொள்ளும் தேசத்தைப் போல் என் தகப்பனாரிடம் முறையிட்டார். உடனே என் தகப்பனாரே ஒரு நாள் பார்த்து விசாலத்தை அனுப்பச் சொல்லி எனக்கு எழுதி விட்டார். அவர்மீது ஏற்பட்ட கோபத்தை யாரிடம் செலுத்துவது என்று தீர்மானிப்பதற்குள் என் மைத்துனன் வந்து சேர்ந்தான்.

தன் சகோதரியை அழைத்துப் போக வந்தவன் மரியாதையாய் நடந்து கொள்ளாமல் மைத்துனன் என்ற முறையில் விளையாட ஆரம்பித்துவிட்டான். முதலில் அவனுடைய பரிகாசங்களை நான் அதிகமாக லக்ஷியம் செய்யவில்லை. ஊருக்குப்போகும் எண்ணத்தில் விசாலத்திற்கு ஏற்பட்ட சந்தோஷம் என்னுடைய பிரிவாற்றாமையை வாட்டிற்று. அவள் ஊருக்குப் போனபின் நான் எப்படிக் காலங்கழிப்பது என்பதைப்பற்றி அவள் சிறிதாவது யோசித்ததாகத் தெரியவில்லை. சிறு குழந்தையைப்போல தன் சகோதரனுடன் விளையாடுவதும் என்னைக் கண்டதும் எழுந்து நின்று ஏதோ வெறும் கடமையைச் செய்யும் வேலையாள் போல நடந்துகொண்டதும் எனக்குப் பார்க்கக் கஷ்டமாயிருந்தது.

என் மைத்துனன் வந்த நாளன்று, விசாலத்தை அழைத்துப் போவதைப்பற்றிப் பேச்சு வந்தது.

"பொங்கல் கழிந்ததும் அனுப்பி விடுவதாக அப்பா சொன்னார்" என்றான்.

"எப்பொழுது வேண்டுமானாலும் அனுப்புங்கள். அவளுடைய இஷ்டம்" என்று பதில் சொன்னேன். நான் எவ்வளவு அடக்கிய கோபத்துடன் அந்த வார்த்தைகளைச் சொன்னேனென்று அவர்களிருவரும் உணரவில்லை. அதைப் பரிகாசமாகவே எடுத்துக் கொண்டார்கள்.

"பார்த்தாயா விசாலம், உன் இஷ்டமாம்" என்றான் கோபாலன் சிரித்துக்கொண்டே.

"ஆம், ஆம், எல்லாம் என் இஷ்டப்படிதானே நடக்கிறது" என்று அவள் கொஞ்சம் கொஞ்சலாகப் பேசினாள்.

"இல்லாட்டா என் இஷ்டம் போலயா. பாரு ஊருக்குப் போகணும்னு ஆசைப்பட்டே போறதுக்கு ஏற்பாடாயிடுத்து. நான் எப்படிப் போனா என்ன? உன் சௌகரியம் தானே முக்கியம்" என்றேன்.

"என்ன அத்திம்பேரே! அப்படியானா உங்களுக்கு இஷ்டமில்லையா என்ன? அப்புறம் என்னைக் கோபிச்சுக்காதேங்கோ ரெண்டுபேருமா, நான் நாளைக்கே போயிடரேன் அம்மா" என்று கோபாலன் போலிபயத்துடன் பேசினான்.

நான்தான் போகணும்னு சொன்னேனாக்கும். போக வேண்டாம்னா இருந்துடறேன்" என்றாள் விசாலம்.

"அடேயப்பா, அவ்வளவு நியாயமா இருக்கிறதானா நான் வரல்லேன்னு சொல்லிடறது தானே உங்க அண்ணாகிட்ட. போறது நீ, பொறுப்பு



சென்னை அமீர்மஹால். ஆர்காடு நவாப் ஸந்ததியாரான ஆர்காடு பிரின்ஸ் வஸிக்குமிடம்.

''நானா? நான் எங்கே வரது?'' என்றேன்.

''என்ன சினிமாவுக்குத்தான் வாங்கோ போகலாம். ஏதோ ஒரு நாள்.''

''நான் வரல்லெப்பா, ரொம்ப சிரமமாயிருக்கு.''

''என்ன விசாலம். இப்படிச் சொல்ருரே உங்க ஆத்துக்காரர்.''

''எப்பவுமே இப்படித்தான் சினிமாவுக்குப் போறதுதுன்னலே பிடிக்காது'' என்று நித்திய உண்மை ஒன்றை விளக்குவது உணர்ச்சியின்றி பதில் சொன்னாள்.

''சினிமாப் பிடிக்காதே போனாப் போறது......ஆனா நான் வேணும்னு இங்கேயே இருக்கேன், நீங்க ரெண்டு பேரும் போய் விட்டு வாங்கோ அத்திம்பேரே......என்னை விசாலம்!''

''உனக்கென்ன வேலே!'' என்று விசாலம் பாதி சந்தோஷமாகவும் பாதி அலக்ஷியமாகவும் சொன்னாள்.

கோபாலனுடைய வார்த்தைகள் எனக்கு வெறுப்பாக இருந்தன. என் மனம் இருந்த நிலையில் அவனுடைய முறையற்ற பரிகாசம் ரொம்பவும் கேவலமாயிருந்தது. அவன்மேல் ஏற்பட்ட கோபத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு,

''நீங்க ரெண்டு பேரும் போய் விட்டு வாங்கோ. எனக்கு உடம்பு ஒருமாதிரியாயிருக்கு'' என்றேன்.

''என்ன அத்திம்பேரே, ரொம்ப கர்நாடகமாயிருக்கேள். சம்பாதிக்கிறேள்.

எனக்கு!'' என்று கொஞ்சம் கடுமையாகவே சொன்னேன்.

''ஏதேது, என்னாலே நீங்க ரெண்டுபேரும் சண்டைபிடிச்சிண்டுடுவேள் போலெ இருக்கே. உங்களுக்கு சௌகரியமில்லேன்னா நீங்க வரபோதே அழைச்சிண்டு வாங்கோ அத்திம்பேரே'' என்று பரிகாசமாய் கோபாலன் சமாதானம் கூறினான்.

அவன் என்மேல் சுமத்த முயன்ற பொறுப்பை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லே. என் தகப்பனார் வார்த்தையை மதிக்கவில்லே என்ற பொல்லாப்புக்கு உட்பட இஷ்டப்படவில்லே.

''உனக்கென்னப்பா இப்படித்தனியா திரிஞ்சிண்டிருக்கே. ஒரு கலியாணமாகி குடித்தனம்னு வைச்சிருந்தா தெரியும் நீ படுகிற பாடு'' என்று பேச்சை மாற்றி பரிகாசத்தில் கலந்துகொண்டேன். இது வரை என் வார்த்தைகளை விளையாட்டாகவே மதித்து வந்த இருவருக்கும் இப்பொழுது அந்த எண்ணம் ஊர்ஜிதமாகிவிட்டது. என் மனதில் எழுந்த கவலையையும் கோபத்தையும் அவர்கள் உணர்வதற்கு சந்தர்ப்பமில்லாமற் போய்விட்டது. வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளவும் எனக்குப்பிரியமில்லே. மனதில் மாத்திரம் எரிச்சல் இருந்துகொண்டே இருந்தது.

நேற்று இரவு கோபாலன் சினிமாவுக்குப் போகவேண்டுமென்று ஒரு பிரேரணைகொண்டுவந்தான். விசாலம் அதை மனப்பூர்வமாய் ஆதரித்தாள். ஊரில் ஒரு டூரிங் சினிமா தமிழ்ப்படங்களின் ஆதி நிலைமையைப்பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டுமானுல் அங்குதான் போகவேண்டும். ஏதோ இருக்கும் மூளையை அப்படியே பாதுகாத்து வருவோம் என்ற மனப்பான்மையினால் நான் அந்த சினிமாவுக்குப் போவதேயில்லே. விசாலம் அடிக்கடி அக்கம்பக்கத்துப் பெண்களுடன், சினிமாவுக்குப் போய்வருவதுண்டு. நேற்று அவளும் போகவேண்டுமென்று விரும்பியதைப்பற்றி நான் அதிகம்கவலேப்படவில்லே.

''சீக்கிரம் சாப்பிடு, விசாலம் போகலாம்'' என்ருன் கோபாலன்.

அவன் அவளுடைய சகோதரன் என்பது கூட எனக்குச் சரியாகத் தோன்றவில்லே. இங்கு வந்து என்னை மறந்து இருவரும் சொந்தம் கொண்டாடுவதுதான் என்னை உறுத்திற்று.

விசாலம் உடனே அதிக உற்சாகத்துடன் ''இதோ வந்துட்டேன்'' என்று சொல்லிவிட்டு கால்மணி நேரத்திற்குள் தன் வேலேயை முடித்துக்கொண்டாள். இருவரும், நான் ஒருவன் கல்மாதிரி உட்கார்ந்திருப்பதை அலக்ஷியம் செய்துவிட்டார்களே யென்று திரும்பவும் நினைத்துக்கொண்டிருக்கும்போது கோபாலன்,

''என்ன அத்திம்பேரே, புறப்படலாமா?'' என்ருன்.

ஏதோ வழியில் போகிறவனை திடீரென்று தாக்ஷண்யத்திற்காக அழைப்பதுபோல் தோன்றிற்று எனக்கு.

குழந்தை சரிவர வளரும்

குழந்தைகளுக்கு அழுத்தமான எலும்புகள், ஆரோக்யமான பற்கள் வியாதியை எதிர்க்கப் போதிய சக்தி இவற்றைக் கல்ஸானு அளிக்கிறது.

குழந்தைப் பிறந்ததுமுதல், ஆரோக்யத்திற்கு அவசியமான சரியான சத்துக்களைக் கொடுத்து வாருங்கள். வலுவூட்டும் மினரல்களைக் கொடுங்கள். அவையெல்லாம் கல்ஸானுவி லிருக்கின்றன. மேலான ஆரோக்யத்திற்கான மினரல் உணவு. குழந்தைக்கு ஆரோக்யமான எலும்புகள் ஏற்படவும், பற்கள் சீக்கிரம் முளைக்கவும் ஏற்பாடு செய்வீர்கள். எவ்வித குழந்தைகள் வியாதியும் வராமல் கல்ஸானு பாதுகாக்கும். கட்டி ஏற்படாமலிருக்கும்.

கல்ஸானு உதவியால், ஆரோக்யமான ஸ்திரீ, புருஷர்களாக வளருவார்கள். நீங்கள் பெருமை கொள்ளும் வண்ணம், வாழ்க்கையில் வெற்றி பெறுவார்கள்.

''கல்ஸானு உபயோகித்து பூரா திருப்தியடைந்தேன். முன்னைவிட அதிக தேஹ சக்தியுடனிருக்கிறேன். குழந்தையும், நன்ருகவே வளர்ந்து வருகிறது.

Mrs. M. F., L.

KALZANA

மேலான ஆரோக்யத்திற்கான உலோக ஆகாரம்

எல்லா மருந்து வியாபாரிகளிடமும், கடைகளிலும் கிடைக்கும்.

கல்ஸானு கைபடாமல் தயாரிக்கப்படுவது. (66)



ஆக்ரா கோட்டையின் ஒரு பக்கத்தோற்றம். இந்த சுவரொன்றில் ஒரு கண்ணாடி பதிப்பிக்கப் பட்டிருக்கிறது. இக்கண்ணாடியில் தாஜ் மஹாலின் பிரதி பிம்பம் விழுமாறு இது அமைக்கப்பட்டிருப்பது இதில் ஒரு விசேஷமாகும்.

குடித்தனம் வச்சிருக்கேள், சந்தோஷமாயிருக்கத் தெரியல்லேயே'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான் கோபாலன்.

அவனுடைய அதிகப் பிரசங்கித் தனத்தைவிட விசாலத்தின் நடத்தைதான் எனக்கு ஆச்சரியமாயிருந்தது. என் வார்த்தைகளிலிருந்த அறை கூவலை உணர அவள் முயற்சிக்கவில்லை. நான் சொன்னதற்காக அவனுடன் புறப்பட்டுவிட்டாள்.

எனக்குத் தூக்கம்வரவில்லை. என் அறை கூவலை விசாலம் உணர்ந்துதான் ஏற்றுக்கொண்டாள் என்ற எண்ணமே என் மனசில் குடிகொண்டது. மறு நாள் ஊருக்குப் போகிறவள் தான் பிரியப்போகும் கணவனைப்பற்றிச் சிறிதுகூட நினைக்காமல் தன்னுடைய சந்தோஷமே பெரிதென்று நினைத்து நடந்தது எனக்குப் பெரும் ஏமாற்றமாயிருந்தது. இத்தனை நாள் என்னோடு பழகியும், திரும்பத் திரும்ப தன்னுடைய அன்பைப் பற்றித் தெரிவித்தும் அவளுடைய மனதில், நான் அன்னியன், தன் சகோதரன் தான் நெருங்கிய துணைவன் என்ற எண்ணம் தானே இருக்கவேண்டுமென்று நினைத்தேன். கோபாலன் மீது அடக்க முடியாத கோபம் வந்துவிட்டது. உடன் பிறந்தது ஒரு உரிமையா? அவளுக்கும் முன்பிறந்த நான் தான் அவளுக்குத் துணைவன் என்று விதிக்கப்பட்டிருந்த போது, ஏதோ தற்செயலாக ஏற்பட்ட உடன்பிறப்புக்கு இவ்வளவு பலமா? என்று என் மனதிற்குள் வாதித்துக்கொண்டிருந்தேன்.

கோபாலனுடைய முந்திய நாள் நடத்தையினால் அவனோடு பேசவே எனக்கு இஷ்டமில்லை. உம்மென்று இருவரும் உட்கார்ந்துகொண்டிருந்தோம்.

கோபாலனுக்கும் அன்று காலை முதல் என்னுடைய மனப்பான்மை தெரிந்துவிட்டதோ என்னமோ; தன் வார்த்தைகளில் ஜாக்கிரதையாகவே இருந்தான். என்றுமில்லாத மரியாதையுடன் நடந்துகொண்டான்.

பத்து நிமிஷமாகியும் விசாலம் தன் பெட்டியைவிட்டு வரவில்லை. நான் எழுந்துபோய் குடத்திலிருந்து ஒரு டம்ளரில் தண்ணீர் வார்த்து எடுத்துக்கொண்டு வந்தேன்.

அப்பொழுதுதான் விசாலம் தவறை கோபாலன் உணர்ந்தான்.

''விசாலம், அங்கே என்ன செய்யறே! வெத்திலெ எடுத்து வைக்கல்லெ அத்திம்பேருக்கு'' என்றான்.

''ஐயையோ மறந்துட்டேனே!'' என்று எல்லாவற்றையும் அப்படியே போட்டுவிட்டு விசாலம் ஓடி வந்தாள்.

''பரவாயில்லை. நானே எடுத்துக்கரேன். உன் வேலையைப் பாரு. பிரயாணம் நின்னுபோயிடப்போறது'' என்று சொல்லிக்கொண்டே நான் வெற்றிலைப்பெட்டியை எடுக்கப் போனேன்.

''ஐயோ நினைவேயில்லை. நீங்க போங்க எடுத்துண்டு வரேன்'' என்று என்னிடம் கொஞ்ச முயன்றாள்.

''உனக்கேன் நினைவிருக்கப் போறது. நான் ஒருத்தன் இருக்கேன்கிறது நினைவிருந்தா போதாதா, நாளைக்கி நீதானே வெற்றிலை கொண்டு கொடுக்கப் போறே!'' என்று எரிந்துவிழுந்துவிட்டு வெற்றிலைப்பெட்டியை எடுத்துக்கொண்டுவந்துவிட்டேன்.

அதுவரை விசாலத்தின் நடமாட்டத்தில் இருந்த வேகம் திடீரென்று குறைந்துவிட்டது. என்னுடைய கோபத்தை உணர்ந்து சட்டென நின்றாள். நான் அவளைக் கொஞ்சமும் கவனிக்காமல் வெற்றிலை போட்டுக்கொண்டு வாசலில் போய் உட்கார்ந்துவிட்டேன். நம்மைவிட்டுப் பிரிவதில் சிறிதும் வருத்தமில்லாதவளைப்பற்றி நாம் ஏன் கவலைப்படவேண்டுமென்று மனதைத் திடப்படுத்திக்கொண்டேன். ஆனால் திரும்பவும் அவளுடைய நடத்தை என் மனதை உறுத்திக்கொண்டேதான் இருந்தது. அவளுடைய பழைய பேச்சுக்களும் கடிதங்களும் என் மனதில் தோன்றின. அவளை முதல் முதலில் நான் அழைத்துவருவதற்குமுன் எனக்கு எழுதிய வாக்கியங்கள் என் மனக்கண் முன் ஜ்வலித்தன.

''எனக்கு இங்கே இருக்கவே பிடிக்கவில்லை என்று நாமிருவரும் சேர்ந்திருப்போமென்றே ஏங்கிக்கொண்டிருக்கிறேன்.''

இருக்கப்பிடிக்காத இடத்திற்குத்தானே இன்று இவ்வளவு குதூகலத்துடன் புறப்படுகிறாள்.

என்னுடைய கோபத்தில் ஒரு சிறு சந்தோஷம். விசாலம் இலைகளை எறிய வாசலுக்கு வந்தபோது அவளுடைய முகத்தைப் பார்த்தேன். அவளுடைய உற்சாகம் எல்லாம்

சமையல் பாத்திரங்களினால்,
தேகாரோக்கியம் கெட்டுப்போகும்படி
இருக்காதேயுங்கள்.

உங்கள் சமையல் பாத்திரங்களைச் சுத்தி செய்ய, சாம்பலையாவது மணலையாவது உபயோகித்தால், பக்கங்களில் ஒட்டிக்கொள்ளும் பற்று அணுக்களை முற்றிலும் போக்க முடியாது. இந்த அணுக்கள்தான் தேகாரோக்கியத்துக்கு மிகவும் அபாயகரமானவை. இவைகள் மற்ற ஆகாரங்களைச் சுலபமாகக் கெடுத்துவிடக்கூடும். ஆகவே, உபயோகிக்கும்போதெல்லாம் சமையல் பாத்திரங்களை விம்மினாலேயே சுத்தி செய்யுங்கள். விம் ஒவ்வொரு மாசு மறுவையும் போக்கிப் பாத்திரத்தைப் புதிது போல் வைத்துக்கொள்ளுகிறது. விம் மிகவும் மிருதுவாக வேலைசெய்கிறபடியால், அதை மரவேலைக்கும் வர்ண வேலைக்கும், கைகழுவும் பேஸினுக்கும் ஸ்நான பாத்திரங்களுக்கும் ஓடுகளுக்கும் இன்னும் சகலமானவைகளுக்கும் நிர்ப்பயமாய் உபயோகிக்கலாம்.

விம்

பாத்திரங்களைச் சுத்தப்படுத்துகிறது.

X-V 365-50

LEVER BROTHERS (INDIA) LIMITED
TAMIL

மறைந்துவிட்டது. என் மனோ நிலையை அவள் உணரும்படிச் செய்துவிட்டதற்காகச் சந்தோஷப்பட்டேன்.

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு உள்ளே கோபாலன் ஏதோ கேட்பது காதில் விழுந்தது.

"என்ன விசாலம், சாப்பிடல்லையா?"

"பசிக்கல்லே. சாப்பாடே கொள்ளல்லே"

என்று அவள் சொன்ன பதிலும் என் காதில் விழுந்ததாகக் காட்டிக்கொள்ளவில்லை. ஏதோ கொஞ்சம் பச்சாத்தாப உணர்ச்சி தோன்றும் போலிருந்தது. அவளுடைய நடத்தையெல்லாம் வெறும் கீலித் தனம் என்று என் மனதிற்குச் சொல்லி அந்த உணர்ச்சியை அடக்கிவிட்டேன்.

வண்டியேறி ரயில்வே ஸ்டேஷனுக்குப் போகும்வரையில் நான் விசாலத்தோடோ கோபாலனோடோ அதிகமாகப் பேசவில்லை. கோபாலனும் அனுவசியமாக விளையாடாமல் இருந்துவிட்டான். எங்களிடையில் ஏற்பட்டிருந்த அந்த அசம்பாவித சுற்றுணர்ச்சியைத் தவிர்க்க அவன் முயன்றதற்கு விசாலம்கூட இடம் கொடுக்கவில்லை. ஏதோ கவலைக்குட்பட்டவள்போல் பேசாமல் வந்தாள்.

பிளாட்பாரத்தில் ரயிலுக்காகக் காத்துக்கொண்டிருந்தோம். வெயில் இரக்கமின்றி அடித்துக்கொண்டிருந்தது. கைக்காட்டியைக் கவனித்துக்கொண்டிருந்த நான் தற்செயலாகத் திரும்பினேன். விசாலம் என்மீதிருந்த தன் பார்வையைச் சட்டென அகற்ற முயன்றாள். அவள் முகம் சிவந்துவிட்டது.

"அப்பா! என்ன வேர்வை! முகம் பூரா, இந்தாங்கோ, துடைச்சுக்கோங்கோ" என்று தன் கையிலிருந்த சிறு துண்டை என்னிடம் நீட்டினாள்.

எனக்கு அன்றிருந்த மனப்பான்மையில் சட்டென்று பாக்கெட்டிலிருந்து கைக்குட்டையை எடுக்க மனம் தூண்டிற்று. என்னுடைய கை அவள் நீட்டிய துண்டை வாங்கிற்று.

விசாலத்தின் கண்கள் ஏதோ ரொம்ப தூரத்தில் இருக்கும் வஸ்துவைப் பார்ப்பதுபோல் இருந்தன. என் மனதில் ஏதோ கொஞ்சம் வேதனையாயிருந்தது. என் மனதில் தோன்றிய உணர்ச்சியை முகம் மற்றவர்களுக்குத் தெரிவிக்கக் கூடாது என்று அந்தத் துண்டினால் முகத்தை இரண்டு மூன்று தரம் நன்றாகத் துடைத்துக்கொண்டேன்.

ரயில் வந்துவிட்டது. அந்தக் களைவரத்தில் மற்ற உணர்ச்சிகளுக்கு இடமில்லை. ஒருவிதமாகக் கூட்டத்தில் புகுந்து இருவரும் வண்டிக்குள் உட்கார்ந்தார்கள்.

"கோபால் போனவுடன் லெட்டர் போடு" என்றேன். லெட்டர் யாரிடமிருந்து முதலில் வரும் என்று எனக்குத் தெரியாமலில்லை. இருந்தாலும் வழக்கமாக ஏதாவது பேச வேண்டுமே.

"ஆகட்டும். ஹெல்த் பாத்துக்கோங்கோ, இன்னும் ஒரு மாசத்துக்குள்ளே அனுப்பிடுவா. நான் அப்பாகிட்டெ சொல்றேன்" என்றான்.

விசாலம் ஏதோ சொல்ல முயன்று கொண்டிருந்தாள். அவளைப் பார்த்தேன். என் கண்களை அவளுடைய கண்கள் சந்திக்கவில்லை. என் முகத்தை சோதித்தன.

"உடம்பைப் பார்த்துக்கோங்கோ..." என்றாள். வார்த்தைகள் சரியாகக் கேட்கவில்லை அவளுடையகண்கள் கலங்கிவிட்டன. உதடுகளை மூடிக்கொண்டு தன் நாக்கினால் தன்னுள் எழுந்த உணர்ச்சியை அடக்க முயன்றாள்.

உடம்புக்கென்ன .... காலத்தை வீணாக்காமல் ஏதாவது படி. புஸ்தகம் ஏதாவது வேணும்னா எழுது" என்றேன்.

என் வார்த்தைகளில் தொனித்த மேன்மையைக் கண்டு நானே வியந்தேன். வண்டிக்குள் இருந்த கிழவி ஒருத்தி எங்களிருவரையும் அனுதாபத்துடன் பார்ப்பதைக் கண்டு சட்டென முகத்தைத் திருப்பிக்கொண்டேன்.

வண்டி புறப்பட்டுவிட்டது. கோபாலன் அந்த ரகளைக்கு மேல் தன் குரலை உயர்த்தி "போய்விட்டு வரேன்" என்றான். விசாலம் தன் தலையை ஆட்டி அதே விஷயத்தை வார்த்தைகளின்றி தெரிவித்தாள்.

வண்டி கண்ணுக்கு மறையுமட்டும் நானும் தலையாட்டிக்கொண்டே நின்றுகொண்டிருந்தேன். தூரத்தில் ஒரு வளைவில் ரயில் மறையும்வரை ஜன்னலுக்கு வெளியே நீட்டியிருந்த விசாலத்தின் தலை தெரிந்தது. பெருமூச்சுடன் திரும்பினேன். இரண்டொரு போர்ட்டர்கள் தவிர பிளாட்பாரம் காலியாக இருந்தது. என் நெற்றியிலிருந்து வேர்வை கொட்டிக்கொண்டிருந்தது. கைக்குட்டையை எடுக்க முயன்றேன். அப்பொழுது தான் விசாலம் துண்டை என்னிடமிருந்து வாங்கிக்கொள்ள மறந்துபோனது தெரிந்தது. அந்தத் துணியினால் முகத்தைத் துடைத்துக்கொண்டு ஸ்டேஷனை விட்டுச்சென்றேன்.

புதிய வெளியீடு! புதிய வெளியீடு!!

மதுரைத்தமிழ்

பேரகராதி

மகா மகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர்
உ. வே. சாமிநாதையரவர்கள் முகவுரையுடன் கூடியது.

இதுகாறும் வெளிவந்துள்ள பற்பல அகராதிகளிலுள்ள குறைகளையெல்லாம் நீக்கியும், திருத்தியும், புதுக்கியும், விளக்கியும், அவ்வகராதிகளில் விடுபட்டுள்ள பல்லாயிரக்கணக்கான வார்த்தைகளைப் பற்பல இதிகாச, இலக்கண, இலக்கிய நூல்களினின்றும் ஆராய்ந்தெடுத்துச் சேர்க்கப் பெற்றுள்ளது.

ராயல் 1+8 பெரிய சைசில் சுமார் 2000 பக்கங்கள் கொண்டது. உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப் பெற்றுள்ளது.

இவ்வகராதி தமிழ் மொழி வளர்ச்சியில் விருப்புற்றவர்களுக்கும், தமிழ் நூல் வல்லார்க்கும், வைத்தியர், சோதிடர், மாந்திரீகர், வேதாந்திகள், சித்தாந்திகள் முதலியவர்களுக்குப் பெரிதும் பயன் படுவதோடு, ஆனந்த விகடன், தமிழ் தினசரிப் பத்திரிகை முதலியவற்றில் வெளிவரும் விடுகதை பந்தயம், சித்திரப்போட்டி, தமிழ் போட்டிப்பந்தயங்களிலும் இலகுவில் விடையளிப்பதற்குரிய சாதனமுள்ளதுமாகும்.

அன்றியும் ஒவ்வொரு தமிழ் அறிஞர்களிடத்திலும், வித்தியாசாலையிலும், நூல் நிலையத்திலும் இருக்கவேண்டியது இன்றியமையாததாகும்.

விலை ரூபா 10—0—0

கிடைக்குமிடம்:—

இ. மா. கோபால கிருஷ்ணக்கோன்,
புத்தக வர்த்தகர்,
மதுரை — சென்னை.

நியூ ஏஷ்யாடிக்

லைப் இன்ஷ்யூரன்ஸ்

பாலிஸியை விரும்புவது ஏன்?

குறைந்த பிரிமியம்; புதிய பல திறப்பட்ட பாலிஸி திட்டங்கள்; பாலிஸி தோகை கொடுப்பதில் ஜரூரான நடவடிக்கை; கம்பெனியின் உயர்வான செல்வ நிலை; வியாபாரத் துறையில் பிரக்யாதிபெற்ற பிர்லா பிரதர்ஸ் அவர்களின் திறமையான நிர்வாகம் இவைகள் காரணங்களில் ஒரு சில.

கீழ்க்கண்ட புள்ளி விவரங்களே நாளுக்குநாள் இக்கம்பெனி உயர்வடைந்து வருவதற்குப் போதிய அத்தாட்சியாகும்.

1934-ல்	**பூர்த்தியான பாலிஸி தோகை ரூ.**	**15,38,000**
1935-ல்	,,	**25,01,000**
1936-ல்	,,	**30,61,000**
1937-ல்	,,	**35,58,000**

வருடப் பிரீமியங்களின் மேல் 2½% குறைவு

இது போனஸ் வருஷம்

பாலிஸிதாரராக இன்றே சேருங்கள்

ஊக்கமும் செல்வாக்குமுள்ள ஏஜண்டுகள் நாடெங்கும் தேவை.

தாராளமான பரம்பரை ஏஜன்ஸி கமிஷன்‡

முழு விவரங்களுக்கு:

தலைமை ஆபீஸ்:

நியூ ஏஷ்யாடிக் பில்டிங்ஸ்,
நியூ டில்லி.

பிராஞ்சு ஆபீஸ்:

ஏ. சுப்பையர், பிராஞ்சு மானேஜர்,
289, லிங்கசெட்டித் தெரு, — ஜி. டி., மதராஸ்.

இந்தியாவின் புதிய அரசியல்

—:(o):—

(ஸ்ரீமான் என். டி. வரதாச்சாரி, அட்வகேட்)

சென்ற ஒரு வருஷத்தில் மாகாண சுய ஆட்சி முறையில் ஏற்பட்டுள்ள அனுபவத்தினுலும், சீக்கிரத்தில் சமஷ்டி திட்டம் அமுலுக்கு வரவிருப்பதாலும் இந்திய அரசியல் விஷயமாக இந்திய மக்களிடையே இப்பொழுது ஒரு புதிய அக்கரை யேற்பட்டிருக்கிறது. தலைவர்கள் இவ்விஷயத்தில் அதிகக் கவனம் செலுத்தி வருகின்றனர். 1935-ம்வருஷ இந்தியா கவர்ன்மெண்டு சட்டப்படி ஏற்படுத்தப்பட்டுள்ள மாகாண கவர்ன்மெண்டு முறை ஜனங்கள் தங்கள் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ளப் போதுமானதா? இல்லாவிடில் எவ்வழியில் இதைச் சாதிக்கக் கூடும்? இச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள சமஷ்டி திட்டத்தை அங்கீகரித்து மாகாண சுய ஆட்சி போல் அதை அமுல் நடத்துவது சரியாகுமா? என்ற கேள்விகள் பிறக்கின்றன. இவ்விரு விஷயங்களிலும் மிகுந்த அபிப்பிராய பேதம்காணப்படுகிறது. ஆனால் பொதுவாக ஒன்று நிச்சயமாக விருக்கிறது. 1935-ம் வருஷத்திய அரசியல் சட்டம் அன்னியர் நம்மீது வற்புறுத்தியதென்றும் இடைக்கால ஏற்பாடென்பதல்லாது இதை நாம் சகித்திருப்பதற்கில்லை யென்றும் பொதுவாக ஒரு அபிப்பிராயம் இருந்து வருகிறது. இந்திய மகா ஜனங்களாகச் சேர்ந்து ஒரு அரசியல் தயாரிக்கும் வரையில் தாத்காலிகமாகத் தான் இதை அனுமதிக்கக் கூடுமென்ற ஒரு எண்ணமிருந்து வருகிறது.

உடனே இச்சட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டுமா? அப்படியாயின் எவ்வகையில் திருத்தியமைக்க வேண்டும் என்ற விஷயத்தைப் பற்றி மாத்திரம் இங்கு நாம் பராமர்சிப்போம். இதில் எல்லாக் கக்ஷியினரும் ஒப்புக்கொள்ளக் கூடியதாக முக்கியமான சில பொதுக் கொள்கைகள் இருக்கின்றன. அவை தவிர அவ்வித ஒற்றுமை பாவம் இல்லாத சில அம்சங்கள் இருக்கின்றன. இவற்றிலும் ஒற்றுமை பாவம் இப்பொழுதில்லாவிடினும் பின்னால் ஒரு சமரஸமுண்டுபண்ணக் கூடுமென்ற இடமிருக்கிறது. இவை தவிர சாதாரணமாக ஒருமனப்பட்ட அபிப்பிராயம் ஏற்படக் கூடாததெனத் தோன்றும் சில அம்சங்களுமிருக்கின்றன. இந்தக் கடைசி அம்சத்தில் நிஷ்பக்ஷபாதமான ஒரு மத்தியஸ்தமுடிவுண்டுபண்ண ஒரு சாதனத்தை நாம் தேட வேண்டும்.

இந்தியரே தயாரிக்க உரிமை வேண்டும்

இதில் முதல் விஷயத்தை எடுத்துக்கொள்ளுவோம். அதாவது இந்தியரே தயாரிக்காத எந்த அரசியலையும் இந்தியா ஏற்கமுடியாதென்பதாகும். இந்தியர் இவ்விதம் வெகுநாட்களாகக் கோரி வருகின்றனர். சர்வகக்ஷி மகாநாடு இக்கருத்தை ஒருவாறு நிறைவேற்றுவதாகத்தான் அதன் ஆரம்பத்தில் இங்கிலாந்தில் அதிகாரத்திலிருந்த தொழில் கக்ஷியினால் கருதப்பட்டது. பிரதிநிதித்துவம் வாய்ந்த இந்தியர்கள் ஒன்றுசேர்ந்து தங்களுக்குள் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டும். இதைப் பார்லிமெண்டு ஒரு சட்ட மூலம் நிறைவேற்ற வேண்டுமென்பதுதான் கருத்து. இதில் பிரிட்டிஷ் நிபுணர்கள் தங்கள் அனுபவத்தைக்கொண்டு இந்தியர்களுக்கு உதவிபுரிய வேண்டி இதில் கலந்துகொள்ளுவதென் றிருந்தது. அத்துடன் இந்தியாவில் பிரிட்டிஷார் உரிமையைப் பாதுகாப்பதும் இதில் ஒரு உத்தேசமாயிற்று. ஆனால் காலம் ஆக ஆக பிரிட்டிஷ் கவர்ன்மெண்டிலும் மாறுதல் ஏற்பட்டு தொழில் கக்ஷி கவர்ன்மெண்டிற்குப் பதில் கன்ஸர்வெடிவ் கவர்ன்மெண்டு அதிகாரத்திற்கு வரவே சர்வகக்ஷி மகாநாடு பிரதிநிதித்துவம் வாய்ந்ததென்பது போய்விட்டது. அது மாத்திரமல்ல. இந்த மகாநாடு முடிவாகத் தீர்மானிப்பதென்ற பிராதான்யமும் போய்முடிவானதீர்மானம் பார்லிமெண்டு கூட்டுக்கமிட்டியையே பொறுத்ததென ஏற்பட்டுவிட்டது. இப்பொழுது அமுலிலுள்ள இந்தியா கவர்ன்மெண்டு சட்டம் அதில் தான் உருவாயிற்று. ஆகவே இது எல்லோரும் சேர்ந்து ஒப்புக்கொண்டு தயாரிக்கப்பட்டதான சட்டமாகாது. இந்தியாவில் அரசியல் அமைதியேற்படவேண்டுமாயின் இந்தியா எல்லோரும் சம்மதிப்பதான ஒரு அரசியல் அமைப்பு தயாராக வேண்டுமென்று இந்தியர் கூறிவந்திருக்கின்றனர். இந்தக்



காசியில் கங்காதீரம்.

கொள்கையை இந்தியர் இன்னும் கைவிடவில்லை. இந்தியரே தயாரிக்கும் ஒரு அரசியலை ஏற்பதன்மூலம்தான் இந்தியாவின் அரசியல் பிரச்னை ஒருவாறு தீர்க்கப்படுமென்று காங்கிரஸ், முஸ்லிம் லீக், ஹிந்து மகாசபை ஆகிய எல்லா ஸ்தாபனங்களும் கூறிவருகின்றன.

சமஷ்டி அமைப்பு

இந்தியாவுக்கு ஒரு சமஷ்டி அமைப்பு ஏற்படும் விஷயத்திலும் கொள்கை சம்பந்தப்பட்ட வரையில் இந்தியரிடையே ஒருமைப்பாடு காணப்படுகிறது. முஸ்லிம்கள் அதை வேண்டுகின்றனர். மகாத்மாஜியின் தலைமையில் காங்கிரஸ் அதை ஒப்புக்கொண்டிருக்கிறது. இது தவிர வேறு முறை எதுவும் இப்பொழுது யோசனையிலில்லை. ஒருமுகமான மத்திய கவர்ன்மெண்டு முறைவேண்டுமென்று கூறியவர்கள் இப்பொழுது இருக்குமிடமே தெரியவில்லை. சமஷ்டி யென்றால் கவர்ன்மெண்டு காரியத்தை யுத்தேசித்து தேசம் இருவிதமாக ஏற்பாடு செய்யப்படவேண்டும். தேசத்திற்குப் பொதுவான மிகவும் முக்கியமான பிரச்னைகளை அகில இந்தியாவுக்கும் பொதுவான ஒரு மத்திய தேசியக் கவர்ன்மெண்டு கவனிக்க வேண்டும். ஸ்தல விஷயங்களை மாகாண கவர்ன்மெண்டுகள் கவனிக்கவேண்டும். இவற்றில் இவ்விரு பாகங்களும் தனித் தனியே சுதந்திரமாகவிருக்கவேண்டும். இந்தியாவில் தற்காலமிருந்துவரும் நிலைமையில் ஸமஷ்டிமுறையைப் பின்பற்றுவதென்றால் அதில் மிகுந்த கஷ்டமிருக்கிறது. ஆனால் தங்களுக்குச் சந்தர்ப்பமளிக்கப்படும் பக்ஷத்தில் எல்லா நியாயமான உரிமைகளையும் திருப்திசெய்யும் வகையில் இப்பிரச்னைகளைத் தீர்ப்பது முடியாதகாரியமல்லவென இந்தியர்கள் கருதுகின்றனர்.

சமஸ்தானங்கள் சேர்க்கை

இவை தவிர மூன்றாவது அம்சம் ஒன்று இருக்கிறது. இவ்விரண்டுபோல் அது அவ்வளவு சுலபமாகப்படவில்லை. இந்திய ஒற்றுமையை உருவாக்கவேண்டி இந்திய சமஸ்தானங்களை பிரிட்டிஷ் இந்தியாவுடன் சேர்க்கக்கூடிய ஒரு திட்டத்தை ஏற்பாடு செய்ய வேண்டியிருக்கிறது.

1935-ம் வருஷச்சட்டத்தில் இதற்காகக் கூறப்பட்டுள்ள ஏற்பாடு தான் மிகவும் அதிகமான எதிர்ப்பிற்குட்பட்டிருக்கிறது. சமஸ்தான பிரஜைகளும் பிரிட்டிஷ் இந்தியாவில் போல் அரசியல் பொருளாதார உரிமைகளைப்பெற வேண்டுமென்பது இந்தியர் அபிப்பிராயம். இதனால் சுதேச மன்னர்களின் உரிமை அதிகாரங்கள் குறையக்கூடும். இதில் ஒரு தீவிர கோஷ்டியினர் சுதேச மன்னர் என்ற வகுப்பே ஒழிந்து போக வேண்டுமென்றுகூட கூறுகின்றனர். இவை யெல்லாம் மிகுந்த விவாதத்திற் குரிய விஷயங்களாகும். இந்தியா முழுவதுக்கும் ஒரு முறை யிருக்கவேண்டுமென்ற முக்கிய அம்சத்தில் பிரிட்டிஷ் இந்தியா, சுதேசமன்னர், சமஸ்தானப் பிரஜைகள் ஆகிய எல்லோரும் ஒன்றுபட்டிருக்கின்றனர். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரும் இதில் ஒத்திருக்கின்றனர்.

ஸமஷ்டியில் பொறுப்பாட்சி

அத்தகைய கவர்ன்மெண்டு ஏற்பாடு யாதாக விருக்க வேண்டுமென்பதிலும் அநேகமாக ஒரு மனப்பட்ட அபிப்பிராயம் காணப்படுகிறது. சுதேச சமஸ்தானங்களுக்குள் எத்தகைய கவர்ன்மெண்டு முறை இருந்தாலும் சரி மத்திய கவர்ன்மெண்டு பொறுப்பாட்சி முறையிலேயே இருக்க வேண்டுமென்று சுதேச மன்னர்களும் ஒப்புக்கொள்ளுகின்றனர். அதாவது இந்தியா கவர்ன்மெண்டு நிர்வாக அதிகாரி ஸமஷ்டி சட்டசபைக்கே பொறுப்பாகவிருக்கவேண்டும். சட்டசபை அகற்றக்கூடாத ஒரு நிர்வாக அதிகாரி மத்திய கவர்ன்மெண்டில் இருக்க வேண்டுமென்றும், இதுவே இந்தியாவின் சுபாவத்திற்கு ஏற்றதென்றும் ஒருகாலத்தில் யோசனை கூறப்பட்டு வந்தது. ஆனால் காலக்கிரமத்தில் இதில் நல்ல புத்தி யேற்பட்டது. பொறுப்பாட்சி யளிப்பதற்குப் பதில் வேறு வழியில்லை யென்று உணரலாயிற்று. இதற்கு மாறான யோசனை கூறுவாரும் தேசத்தில் இல்லை.

அதேமாதிரி மாகாண கவர்ன்மெண்டுகளில் பொறுப்பாட்சி முறை இருக்கவேண்டுமென்பதிலும் சர்ச்சை இல்லை. சென்ற சில மாதங்களில் நடந்துள்ள நிகழ்ச்சிகளிலிருந்து இங்கிலாந்தில் போலவே இந்தியாவில் பார்லிமெண்டு முறை அபிவிருத்தியடையவில்லையென்பதைக் கவனித்திருக்கலாம். அரசியல் சம்பிரதாயங்களெல்லாம்மெதுவாகத்தான் உருவாகக்கூடும். நூற்றுக்கணக்கான வருஷங்களிலேற்பட்டுள்ள அரசியல் அபிவிருத்தி இந்தியாவில் பூர்ணமாக ஏற்படச் சிறிது காலம்பிடிக்கக்கூடும் அமெரிக்க பிரஸிடெண்டு நிர்வாக முறை இருக்கிறது. அதைஇங்கு இந்தியாவில் அனுஷ்டிப்பதாக வைத்துக் கொள்ளுவோமே. அதிலும் கஷ்டம்தான் ஏற்பட்டிருக்கும். அதில் இன்னும் அதிகக் கஷ்டமேற்பட்டிருக்குமென்று கூட கூறவேண்டும். இப்பொழுது ஒன்று நிச்சயமாகக் கூறலாம். அதாவது இந்தியாவில் மத்திய கவர்ன்மெண்டிலும்சரி மாகாணங்களிலும் சரி பார்லிமெண்டு முறை கவர்ன்மெண்டே சிறந்ததென ஏற்படுகிறது.

முதலில் ஒற்றுமை பாவமுள்ள அம்சங்களை வரிசையாகக் கூறுவோம். புதிய இந்திய அரசியல், சுதேச சமஸ்தானங்களும் உட்பட்டதாக ஒரு சமஷ்டி தோரணையில் இந்தியர்களாலேயே தயாரிக்கப்பட்டதாக விருக்கவேண்டும். மத்திய கவர்ன்மெண்டிலும் மாகாணக் கவர்ன்மெண்டுகளிலும் பொறுப்பாட்சி ஏற்படுத்துவதாக விருக்க வேண்டும்.

அபிப்பிராய பேதமுள்ள அம்சங்களையும் ஆனால் இந்தியர்களே முடிவு செய்யவேண்டுமென விட்டால் சமரஸமான முடிவேற்படக்கூடியதான அம்சம் அடுத்தபடியாக விருக்கிறது. இதில் இந்த நிபந்தனை அவசியம். ஏனெனில் பிரிட்டிஷார் தங்கள் நன்மைகளையும் கருதி தலையிட்டு வரும்வரையில் இங்கு பலவேறுகக்ஷிகளிடையேயுள்ள வித்தியாசத்தைப் போக்குவது சிரமமாகும். பிரிட்டிஷாருக்குச் சில சவுகரியங்களை அளித்து அதற்குப் பதில் தாங்கள் சில நன்மைகளை அடைய சில கக்ஷிகள் உத்தேசிக்க இதனால் இடமேற்படுகிறது. ஹிந்துக்களாயினும் சரி, முஸ்லிம்களாயினும் சரி, இந்த வாதம் இருவருக்குமே செல்லக்கூடியதுதான். இருதரப்பினரும் முடிவுசெய்யக் கூடாமல் வேறு சுயநலம் கொண்ட ஒரு மூன்றாம் பேர் வழி மத்தியஸ்தஞ் செய்வதென்றால் ஏற்படக்கூடிய ஆபாசங்களெல்லாம் சர்வகக்ஷி மகாநாட்டிலேயே வெளியாகியிருக்கின்றன.

பிரிட்டிஷார் ஒதுங்கி நின்றால்

பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் ஒதுங்கி இருந்து, இந்தியக் கட்சிகளே தங்களுக்குள் அரசியல் பிரச்னைகளில் ஒரு முடிவை செய்துகொள்வதென்றால் இப்பொழுது சிக்கலாகத் தோன்றும் வகுப்புப் பிரச்னைகூடத் தீர்ந்துவிடும். அதிலும் ஒரு சமரஸமேற்பட்டு இருதரப்பினரும் கண்ணியமாக அதை நிறைவேற்றிவிடுவார்கள். எப்படியும் இதில் ஒன்று தெளிவாகிறது. பிரிட்டிஷார்செய்யும் முடிவு வெற்றிகரமாயிற்றென்பதில்லை. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இன்னும் தேசத்தை அதிகமாகப் பிளவுபடுத்தியே இருக்கிறது. இதனால் ஜனங்களுக்குக்

ஸன்லைட் சோப்பைக் கொண்டு வீட்டிலேயே வெளுக்கும் வஸ்திரங்கள் இன்னும் பல வருஷங்கள் உழைக்கின்றன.

இந்தியா தேசமெங்கும், லக்ஷக்கணக்கான குடும்பங்கள் தங்கள் தங்கள் வீட்டில் தங்கள் துணிகளை ஸன்லைட் சோப்பு போட்டு சலவை செய்து கொள்வதினால் பணத்தை மிச்சப்படுத்திக் கொள்வதோடு நல்ல பலனையும் அடைகிறார்கள். நூலுக்கு கெடுதிசெய்யும் அடித்தலும் கசக்கலுமில்லாமலேயே அழுக்கையெல்லாம் வெளிப்படுத்துகிறபடியால், ஸன்லைட் சோப்பு போட்டு வெளுக்கிற துணிகள் நெடுநாள் உழைக்கின்றன. ஸன்லைட் சோப்பு மிகவும் சரியானது. எவ்வித உடுப்பையும் அதைக் கொண்டு சுத்தம் செய்யலாம். ஏனெனில், அது எவ்வித கெட்ட வஸ்துவின் கலப்பில்லாமல் சுத்தமான தாவர எண்ணெயிலிருந்து செய்யப்படுகிறது. உன் உடுப்புக்களை வீட்டிலேயே சுத்தஞ் செய்துகொள்.

ஸன்லைட் சோப்பு



ஸன்லைட் சோப்

இந்தியாவிலேயே, இந்திய தொழிலாளர்களால், சுத்தமான தாவர எண்ணெயால் செய்தது

X-S 1286-50

LEVER BROTHERS (INDIA) LIMITED

TAMIL

By Courtesy *"Grihalakshmi"*

கிரிஜா பரிணயம்

குறுகிய மனோபாவ மேற்பட்டுத் தேசீயத் தோரணையில் சிந்திப்பதென்பதே இல்லாமற் போகிறது.

சமீபகாலமாகத் தேசத்தில் சில நல்ல அம்சங்கள் காணப்பட்டால் அதற்குக் காரணம் ஒத்துழையாமை முதலிய இயக்க காலங்களில் மகாத்மா காந்தி, அலி சகோதரர்கள் ஆகியவர் தலைமையில் வகுப்பு உணர்ச்சியை யடக்கித் தேசீய உணர்ச்சியைப் பெறுவதற்கான ஒரு தேர்ச்சி யுண்டுபண்ணப்பட்டது தான் இந்தியர்களே தங்களுள் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று பிரிட்டிஷார் மாத்திரம் பொறுப்பை நம்மிடம் ஒப்புவித்து விட்டால் பிறகு இந்தியக் கக்ஷிகளுக்குள் ஒரு சமரஸமேற்பட்டு எல்லோரும் அங்கீகரிக்கக்கூடிய ஒரு முடிவேற்பட்டுவிடும்.

வகுப்புப் பிரச்னை.

வகுப்புக் கோரிக்கைகள் முக்கியமாக இரண்டு மூன்று பிரச்னைகளைத் தழுவியதாயிருக்கின்றன. முதன் முதலாகச் சட்டசபையில் பிரதிநிதித்துவமேற்படும் பிரச்னை இருக்கிறது. படித்த விஷயமறிந்தவர்கள் தனித் தொகுதி முறை ஒழிய வேண்டுமென்றும், பொதுத் தொகுதியேற்பட வேண்டுமென்றும் அபிப்பிராயப்படுகின்றனர். இடைக்கால ஏற்பாடாகச் சிறுபான்மையோருக்குப் பொதுத் தொகுதிகளிலேயே ஸ்தானங்கள் ஒதுக்குவதென்பதாகக் கூறுகின்றனர். இவ்வெண்ணம் பொது ஜன ஆதரவு பெறும்படிச் செய்யத் தேசத்தில் மிகுந்த வேலை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் பல வேறு வகுப்புகளிடையே பிற்போக்கு இன்னும் பலமாகவிருக்கிறது. துவேஷம் மாத்சர்யமெல்லாம் போய் இதுதான் சிறந்த ஏற்பாடென இந்தியாவெங்கும்ஒரு உணர்வு ஏற்பட அதிகநாள் பிடிக்குமென்பதாகக் கருதப்படுகிறது. இதில் முக்கியமாக நடக்க வேண்டியது ஒன்றுண்டு. நம் உள்நாட்டைப் பற்றிய இவ்விஷயத்தில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் அடியுடன் ஒதுங்கியிருப்பதென்பது வேண்டும்.

இரண்டாவது அம்சம் சர்க்கார் உத்தியோகங்களில் பிரதிநிதித்துவமளிப்பதைப் பொறுத்ததாகும். எல்லோருக்கும் கல்வி பயிலுவதன் மூலமும் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர் சம்பளத் திட்டத்தைத் திருத்தியமைப்பதனாலும் இதில் போட்டியைக் குறைக்கக் கூடும். வகுப்புத் தோரணையில் சலுகை காட்டுவதென்பதும் அப்பொழுது குறைந்து விடும். தேசிய உணர்ச்சியை வளர்க்கவும் மத சமூகப் பிரிவுணர்ச்சியை ஒடுக்கவும் நாம் முயலவேண்டும். மசூதிமுன் மேளம், ஹிந்துக்கள் கோசம்ரக்ஷணம் முதலிய காரியங்களைப் பார்க்கும் பொழுது தேசீயஉணர்ச்சியேற்படுவது மிகவும் அவசியமென்பது புலப்படும். தேசியம் ஸ்தாபிதமானால் இந்த சிறு அம்சங்களைக்கொண்டு பிளவை அதிகரித்து வர விரும்புவோருக்கு இடமில்லாமல் போய் விடும்.

பிரிட்டிஷ் இந்திய சமஸ்தான உறவு

இதேமாதிரி இந்திய சமஸ்தானங்களுக்கும் பிரிட்டிஷ் இந்தியாவுக்குமிருந்து வர வேண்டிய சம்பந்தமென்னவென்பதைப் பொது சம்மதி மூலம் நாம் நமக்குள் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். சுதேச மன்னர்கள் பிரிட்டிஷ் அதிகார பீடம் மூலமாகவே பேசுவதென்று இருக்கும்வரையில் இந்தப் பேச்சு வார்த்தைகள் உண்மையற்றதாகவே போய்விடும். இதில் முக்கிய பாகத்தினரான பிரிட்டிஷ் இந்தியப் பொது ஜனங்களுடன் ஒரு முடிவு செய்துகொள்ளுவதென்பதே சாத்தியமில்லை. நல்ல வேளையாகச் சமஸ்தானங்களில் நிர்வாகத் தோரணையை இன்னும் அதிகத் தாராளத் தோரணையில் அமைக்கவேண்டுமென்ற எண்ணம் அதிகரித்துவருகிறது. சிலசமஸ்தானங்கள் தாங்கள் பிரிட்டிஷ் இந்தியாவை விட முற்போக்காக விருப்பதாகக் கூடக் கூறுகின்றன. சுதேச மன்னர்கள் யதேச்சாதிபதிகள் என்ற காரணத்தினாலேயே சமஷ்டியில் சேரக்கூடாதென்பதில்லை. இதில் பிரிட்டிஷ் இந்தியர் சில கோரிக்கைகளை வெளியிடலாம். பிரிட்டிஷ் இந்தியாவில் போல் சமஸ்தானங்களிலும் ஜனங்களுக்குப் பிரஜா வுரிமை அளிக்கப்பட வேண்டும். வரி விதிப்பு விஷயத்தில் இஷ்டமென்பதோ அல்லது நிர்ப்பந்தமென்பதோ கூடாது. நிர்வாகத் தோரணையில் அடக்குமுறையென்பது கூடாது. பொது அரசாங்கப் பிரச்னைகளில் ஜனப் பிரதிநிதிகளைப் பகிரங்கமாகக் கலந்துகொள்ளுவதென்பது ஏற்படவேண்டும். நீதி பரிபாலனம் குற்றம் குறைக்கு இடமில்லாமல் செய்யப்படவேண்டும். சமஸ்தானத்திற்குள் எல்லா வகுப்பினரும்நீதிநேர்மையுடன்நடத்தப் படவேண்டும். இக்கோரிக்கைகளெல்லாம் நியாயமானவையே. அரசாட்சி நடத்தும் தற்காலத்தவர் யாரும் இவற்றைக் கொள்கை சம்பந்தப்பட்டவரையில் ஆக்ஷேபிப்பதற்கில்லை. ஆனால் எந்த வழியில் இக்கோரிக்கைகளை நிறைவேற்றிவைப்பதென்பதில் தான் அதிகம் அபிப்பிராய பேதம் காணப்படுகிறது. பிரிட்டிஷ் இந்தியாவுக்கு மிகவும் ஏற்றதெனக் கருதப்படும் பொறுப்பாட்சி முறை புதுமையான

"ஸவுத் இந்தியா" பாலிஸி

திடமான பத்திரம்	நம்பிக்கையான முதலீடுகள்	சுலபமாக புதுப்பித்துக் கோள்வது	உரிமைகள் உடனுக்குடன் செலுத்துவது

விசேஷ அம்சங்கள் :—

1. சக்தியற்ற காலத்தில் அனுகூலம்
2. பாலிஸிகள் கால கெடுவடையாமலிருக்க திட்டம்
3. வருஷாந்திர ப்ரீமியத்தின் பேரில் 2½% தள்ளுபடி

ஸவுத் இந்தியா பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, (கோயமுத்தூர்) லிமிடெட்.

தலைமை ஆபீஸ்:

ரேஸ்கோர்ஸ் ரோட், கோயமுத்தூர்.

பூரா விவரங்களுக்கு எழுதவும்:—

பிராஞ்சு ஆபீஸ் :
27/28, இரண்டாவது லைன் பீச், மதராஸ்.

அல்லது

வி. கே. செட்டி,
மானேஜர்,
தலைமை ஆபீஸ்.

லோத்ரா

ஸ்திரீகளின் நோய்களுக்கு ஏற்ற மருந்து; கர்ப்பாசயத்திற்குச் சிறந்த டானிக்.

கேசரி குடீரம், மதராஸ்.

தென்றும் நமக்கு ஏற்றதல்லவென்றும் சமஸ்தானங்களில் ஆக்ஷேபிக்கப்படுகிறது. பொதுவாகப் பார்க்கப்போனால் இந்த முறையில் விசேஷமிருக்கிறதென்று திட்டமாக யாதும் கூறுவதற்கில்லை. ஜனங்கள் திருப்தியுடன் வாழவேண்டுமென்பதுதான் முக்கிய லக்ஷியமாகும். ஜனங்களுடைய இஷ்டமும் அவர்கள் திறமையுமே அரசியல்முறை வெற்றிக்கு முக்கியக் காரணமாகும். பொறுப்பாட்சி முறை ஜனங்களுக்கு நன்கு தெரியவந்து அதன் மூலம் நன்மை யேற்படுமென்று ஜனங்கள் நினைப்பதனாலேயே அதை அவர்கள் வேண்டுகின்றனர். சில ஐரோப்பிய தேசங்களில் இம்முறை தவறிவிட்டதாயின் அதற்கு அங்கு ஏற்பட்ட காரணங்கள் நம் நாட்டில் இப்பொழுதில்லை. இந்த மேலே கூறிய லக்ஷியங்களுக்குட்பட்டு சமஸ்தானங்கள் எந்தவிதமான அரசியல் பரிசைக்ஷகள் வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். அவை இஷ்டப்படும்பொழுது தங்கள் அரசியல் முறையைத் திருத்தி யமைத்துக் கொள்ள நாம் விட்டுவிடலாம். சமஸ்தான ஜனங்கள் சம்மதியைப் பெற்று நல்லமாதிரி கவர்ன்மெண்டு நடந்து வரவேண்டுமென்பதைத்தான் பிரிட்டிஷ் இந்திய ஜனங்கள் முக்கியமாக வேண்டுகின்றனர். ஸமஷ்டிக்கு இது அத்தியாவசியமான பூர்வாங்கமாகும். காமக்குரோதமின்றி இதில் கவனஞ் செலுத்தினால் இப்பிரச்னையைத் தீர்ப்பது சுலபம், அது மாத்திரமல்ல, இந்திய தேசீயத்தின் எதிர்காலத்திற்கு மிகவும் நன்மையாகவும் முடியும்.

பிரிட்டிஷ் இந்திய சம்பந்தம்

மூன்றாவது அம்சம் சற்று சிக்கலானது. இதைத்தீர்ப்பது கஷ்டமாகவிருக்கிறது. ஆகவே இதை நிஷ்பக்ஷபாதமான மத்தியஸ்தர்களைக் கொண்டே முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. பிரிட்டன் ஏகாதிபத்தியம் ஆகியவற்றிற்கும் இந்தியாவுக்கும் இருந்துவரவேண்டிய சம்பந்தத்தைப்பொறுத்தது இந்த விஷயம்: இத்தேசத்தில் பிரிட்டிஷாருக்குச் சில உரிமைகள் ஏற்பட்டிருக்கின்றன. தாங்கள் இந்தியாவில் இருக்கவேண்டியது அத்தியாவசியமென்றும் இந்த உரிமைகளில் இந்தியர் எவ்விதத்திலும் குறுக்கிடக் கூடாதென்றும் பிரிட்டிஷார் கூறுகின்றனர். இப்படி இவர்கள் கோருவது இந்தியாவுக்கு ஏற்படவேண்டிய சர்வாதிகாரத்தை மறுப்பதாகவே ஆகிறது. பல குடியேற்ற நாடுகளில் பிரிட்டிஷாரின் இத்தகைய கோரிக்கைகள் அங்கீகரிக்கப்படவில்லை. நமக்கேற்பட்டுள்ள நிர்ப்பந்தத்தில் ... நலத்தில் நாம் தலையிடமாட்டோமென்று சொல்லுவது இதற்குச் சரியான சமாதானமாகாது. குறுக்கிடுவதில்லையெனச் சட்டப்படி உறுதிமொழி கொடுங்கள் என்று: அவர்கள் கேட்கின்றனர். ஆனால் உலகிலுள்ள மற்றத் தேசங்கள் போல் நாமும் சுதந்திரமாக விருக்கவேண்டுமென்று நாம் கொண்டுள்ள அபிலாஷைக்கு இது முற்றிலும் மாறானதாகும். இப்படி நேரிடப் பரஸ்பரம் முரண்பட்ட அபிப்பிராயங்கள் இருக்கும்பொழுது இதில் ராஜி யென்பது சாத்தியமில்லை. பிரிட்டிஷாருக்கு ஓரளவு பாதுகாப்பு

சென்னை மந்திரிகள் -



நீங்கள் அதனுள் பார்க்கும்படி

அவ்வளவு பரிசுத்தமானது

பியர்ஸ் ஸோப் ஒவ்வொன்றும் பரிசுத்தத்திற்கு உத்தரவாதமுள்ளது. நீங்கள் அதனுள் பார்க்கும்படி அவ்வளவு பரிசுத்தமாய் இருக்கிறது. அவ்வளவு சுத்தமான ஸோப் இருமுறை சுத்தப்படுத்தப்படும் வழியால்தான் தயாரிக்கக்கூடும். ஆகவே பியர்ஸ் ஸோப்பை உபயோகப்படுத்தி உங்களது சருமத்திற்கு புது உணர்ச்சியையும் முகத்திற்கு வசீகரமும் ஏற்படுவதைப் பாருங்கள்.

Pears

முகத்திற்கு ஒப்பற்றது

LT.G.250A-8 A. & F. PEARS LTD - ISLEWORTH - ENGLAND

TAMIL

அவர்கள் அலுவல்களைக் கவனிக்கின்றனர்.



அளிப்பதாக உறுதி கூறுவதாகவைத்துக்கொள்ளுவோம். அந்த அளவுக்கு நாம் நமது அதிகாரத்தைக் குறைத்துக் கொண்டதாகத் தெரிகிறது. சர்வாதிகாரமென்ற கொள்கைக்கு அதனால் பங்கமேற்பட்டுவிடும். பொதுவாக எல்லாப் பிரஜைகளுடையவும் உரிமைகள் பாதுகாக்கப்படுமென்ற ஜீவாதார உரிமையை அளிக்கிறோமென்றால் இது பிரிட்டிஷாருக்குத் திருப்தியளிப்பதாயில்லை. ஆகவே தகுந்த ஒரு மத்தியஸ்த சபையின் முடிவுக்கு விடக்கூடியதான விஷயமாக இது இருந்து வருகிறது. இந்தியா பூர்ண தேசிய முறையில் தனது அதிகாரத்தைச் செலுத்துமுன்னர் இவ்வழியில் ஒரு இடைக்கால ஏற்பாட்டை நாம் செய்து கொள்ளலாம்.

இந்திய ராணுவம்

இந்திய ராணுவம் ஊழியவர்க்கம் ஆகியவை விஷயத்திலும் இதேமாதிரி ஒரு நிலைமையேற்படுகிறது. இவ்விரு அம்சங்களிலும் இந்தியா இன்னும்சிறிதுகாலத்திற்குப் பிரிட்டிஷ் உதவியை நாடவேண்டியிருக்கும். ஆனால் எந்த விதமான உதவி எந்த அளவுக்குப் பெறுவதென்பதை இந்திய கவர்ன்மெண்டே முடிவு செய்யும்படி விட்டுவிடவேண்டும். இதில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் ஆக்ஞையிடுவதென்பது இந்திய சுயமரியாதை உணர்ச்சிக்கு முற்றிலும் மாறானதாகும். சர்வகக்ஷி மகாநாட்டில்நடந்ததைக்கொண்டு பார்த்தோமானால் இந்த விஷயத்தையும் நிஷ்பக்ஷபாதமான ஒரு மத்தியஸ்தத்திற்கு விடுவதே சரியெனத் தோன்றுகிறது.

மத்தியஸ்த முறையிலுள்ள கஷ்டம்

இத்தகைய ஒரு மத்தியஸ்தத்தை ஏற்பாடு செய்வதில் ஒரு பெரிய கஷ்டமிருக்கிறது. இருதரப்பினரும் ஒப்புக்கொள்ளக்கூடிய மத்தியஸ்தக்காரர்களை எப்படி யேற்படுத்துவது? சர்வதேச மத்தியஸ்த சபைகளில் இந்தியாவுக்கு அதிக நம்பிக்கை கிடையாது. பிரிவிகவுன்ஸிலிடமும்கூட நம்பிக்கை கிடையாது. இன்னும் பல வருஷங்களுக்கு இந்திய சட்ட வியவகாரங்களில் இந்தப் பிரிவிகவுன்ஸிலுக்கு ஆதிக்கியமிருக்குமெனத் தெரிகிறது. அனுதாபத்துடன்நாசூக்கான வழியில் இதை முடிவு செய்யவேண்டும். இவ்விஷயத்தில் பிரிவிகவுன்ஸில் உபயோகப்படுமெனக் கருதுவதற்கில்லை. பிரிட்டனும் இந்தியாவும் தனித்தனியே இரண்டு மத்தியஸ்தர்களை நியமிக்கவேண்டுவதென்றும் அவர்கள் நால்வரும் சேர்ந்து ஐந்தாம் நபரை நியமிக்கவேண்டுவதென்றும் இச்சபை செய்யும் முடிவு இருதரப்பினரையும்கட்டுப்படுத்துவதாக விருக்கவேண்டுமென்றும் மகாத்மாகாந்தி ஒரு யோசனை சொன்னார். ஏகாதிபத்தியத்திற்குள் ஏற்படக்கூடிய சச்சரவைத் தீர்ப்பதற்கென ஏகாதிபத்திய மகாநாட்டில் கூறப்பட்ட முறை பற்றி இப்பொழுது அதிகமாகக் கவனஞ் செலுத்தப்படவில்லை. இதெல்லாம் இனி நாம் கவனித்தாகவேண்டும். சாதாரணமாக ஒரு தேசத்தின் ராணுவப் பரிபாலனமும் ஊழியவர்க்கமும் அதையே பொறுத்தவையாகும். ஆனால் இங்கு இந்தியாவின் பாதுகாப்பு விஷயம் ஏகாதிபத்தியத்திலும் சம்பந்தப்பட்டதாகவிருக்கிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கீழ் பாகத்தின் பாதுகாப்பு வெகு தூரம் இந்திய ராணுவ பாதுகாப்பைப் பொறுத்திருக்கிறது. இதற்காக ஏராளமான பிரிட்டிஷ் படைகளுக்கு நாம் செலவழிக்க வேண்டுமென்று சொல்லக் கூடாதென்பது இந்தியாவின் கக்ஷி. ஆகவே இந்தியாவின் தேவை என்ன? ஏகாதிபத்தியத்தின் தேவை என்னவென்பதை முடிவு செய்யவேண்டும். இதில் இந்தியாவின் சுதந்திரம்பாதுகாப்பு, கீழ்த்திசையில் பிரிட்டனின் நலம் ஆகிய எல்லாவற்றையும் சமரஸப் படுத்திக்கொண்டு போக ஒரு வழி தேடவேண்டும்.

இந்தியாவின் புதிய அரசியலில் முக்கியமாகக் காணப்படும் பிரச்னைகள் இங்கு சுருக்கமாக விவாதிக்கப்பட்டுள்ளன. சுதந்திர தேசத்தின் கவர்ன்மெண்டு நிர்வாகத்திற்கு ஏற்பாடுசெய்வதாகவும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் மனமுவந்து கலந்து கொள்ளுவதாகவும் இருக

முக க்ரீம்கள்

பரீக்ஷிப்பதை நிறுத்திவிட்டேன்

டாக்கட் & ராம்ஸ்டல் முக க்ரீம் பார்த்த பிறகு

அழகிய சருமம் வேண்டுமென்று தினமும் பணத்தையும் காலத்தையும் செலவழிக்காதீர்கள். டாக்கட் & ராம்ஸ்டல் கோல்ட் க்ரீமை ஒருமுறை உபயோகியுங்கள். நீங்கள் எதிர்பார்ப்பதைவிட அதிகீ பலனளிக்கும். இவை தேகத்தில் ஊடுருவிச் சென்று, சருமத்தை சுத்தமாகவும், மிருதுவாகவும் செய்கின்றது. தினமும் காலையிலும், இரவிலும் உபயோகியுங்கள். உங்கள் சருமம் எவ்வளவு மிருதுவாகவும், வழ வழப்பாயும், அழகாயுமிருக்கின்றது என்பதைப்பாருங்கள்.

Look your best with DAGGETT & RAMSDELL

பூர்ண சுயேச்சைபற்றி இங்கு விவாதிக்கப்படவில்லை. அதில் வேறு பல பிரச்னைகள் எழுவதாகவிருக்கின்றன. அவற்றைத் தீர்ப்பதென்ருல் அதற்கான மனோபாவமே வேறு விதமாகவிருக்கவேண்டும். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் இந்தியா தானுகச் சம்மதப்பட்டுக் கலந்து கொள்ளுவதனுல் தனது நாகரீகம் பொருளாதாரம் முதலியவற்றை இந்தியா தன்னிஷ்டப்படியே நிர்ணயித்துக்கொள்ளலாம். இதில் வெளியார் எவ்விதத்திலும் கட்டுப்படுத்த இடமில்லை. அத்தகைய தேசத்தில் புத்திசாலித்தனமான சட்ட பரிபாலன மூலம் தேசத்தின் க்ஷேமத்தை யுண்டுபண்ணக் கூடும். உணவு, ஆடை, முதியோர் உதவி, ஏழ்மை நீக்கம் வேலையில்லாமை நிவர்த்தி, கல்வி கலாபிவிருத்தி, அடக்குமுறை யின்மை, எல்லோருக்கும் சம உரிமை ஆகியவையெல்லாம் நம் அரசாங்கத்திற்குப் பூரண சுதந்திரமேற்படாதவரையில் அர்த்தமில்லாத வெறும் வார்த்தையாகவே இருக்கும். அரசாங்கத்திற்கான அதிகாரம் நல்ல அரசியல் திட்ட மூலமே ஏற்படுகிறது. அத்துடன் ஜனங்கள் தங்கள் உரிமைகளை நிலை நிறுத்தி உபயோகிப்பதில் உற்சாகமுள்ளவர்களாகவிருக்க வேண்டும். பொதுஜனங்களின் புத்தியும் உணர்ச்சியும் இந்தியாவின் புதிய அரசியல் அமைப்பை நிலைநிறுத்தி நன்கு பயன்படுத்திக் கொள்ளுவதில் உபயோகிக்கப்படுவதாகவிருக்கவேண்டும். நாமே ஒரு அரசியலைத் தயாரிக்காவிடில் பிறகு அதற்கு வேண்டிய ஆதரவும் அன்பும் நம்மிடம் ஏற்படாது. அத்தகைய அரசியல் திட்டம் வெறும் காகிதமாகவே போய் விடும்.

அட்வோகேட் ஸ்ரீமான்
என். டி. வரதாச்சாரி.

* * * *

ஒரு பணக்காரன் நல்ல ஆடைகள் கட்டிக்கொள்ளுவதில்லையென அவன் நண்பன் புகார் செய்தான்.

நண்பன்:—40 வருடங்களுக்குமுன் உன் தந்தைதான் இநநகரிலேயே மிகவும் சிறந்த ஆடைகள் அணிவது வழக்கம்.

பணக்காரன்:— இப்பொழுது நான் கட்டியிருப்பதும் என் தந்தை கட்டிய ஆடைகள் தான்.

* * * *

இந்தியா லைப் பெனிபிட் அஷ்யூரன்ஸ் ஸொஸைடி லிமிடெட், கோயமுத்தூர்

1937௵ டிஸம்பர்மீ 31௳ யுடன் முடிவடையும் ஒரு வருஷத்திய கணக்கு விவரம், டைரக்டர்களது யாதாஸ்து இவை நமது பார்வைக்கு அனுப்பப்பட்டுள்ளன. இவற்றைக் கவனிக்குமிடத்து கம்பெனிக்குப் பல துறைகளிலும் விசேஷ அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது தெரியவரும். பிரஸ்தாபவருஷத்தில் சுமார் 15 லக்ஷத்திற்கான புரொபோஸல்கள்கிடைத்ததில்ரூ. 11,38,750க்கான பாலிஸிகள் வெளியிடப்பட்டுள்ளன.

பிராவிடெண்ட் திட்டப்படி ப்ரீமியம், வட்டி முதலிய இனங்களில் ரூ. 1,45,882-5-2-ம் ஆயுள் திட்டப்படி ரூ. 75,377-3-0-ம் வருமானமும் கிடைத்திருக்கின்றன. உரிமைத் தொகைகள் செலுத்துவது சம்பந்தமாக கம்பெனியாரின் அனுபவமும் திருப்திகரமாகவிருக்கின்றது. பிராவிடெண்ட் திட்டப்படி 59 உரிமைப் பத்திரங்களும், ஆயுள் திட்டப்படி 5 உரிமைப் பத்திரங்களும் கிடைத்தன. இது திருப்திகரமான முடிவுதான் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்ளுவார்கள்.

இந்த ஸொஸைடியை, 1912-ம் வருஷத்திய இந்திய கம்பெனிகளின் சட்டப்படி ஆயுள் ஆபீஸாக மாற்றியுள்ளனர். இதன் காரணமாக, ஆக்சுவரியின்யாதாஸ்து கிடைத்தாலன்றி பங்குதாரர்களுக்கு டிவிடெண்ட் கொடுப்பது சாத்தியமில்லை. ஆனல், ஆக்சுவரி யாதாஸ்து கிடைத்தவுடன் பங்குதாரர்களுக்குத் தாராளமான டிவிடெண்ட் கொடுக்க முடியுமென டைரக்டர்கள் எதிர்பார்க்கின்றனர்.

புதிய இன்ஷ்யூரன்ஸ் சட்டம் கூடிய சீக்கிரம் அமுலுக்கு வரும். ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் வியாபாரம் நடத்திவரும் கம்பெனிகள் அனுஷ்டிக்க வேண்டிய முறையை இச் சட்டம் குறிப்பிடுகின்றது என்பது நேயர்கள் அறிந்ததே. அதற்கு அனுகுணமாக டைரக்டர்கள் இக் கம்பெனியின் சட்ட திட்டங்களை ஏற்கனவே திருத்திக் கொண்டு விட்டனர். இன்னும் சில பாகங்களைச் சட்டம் அமுலுக்கு வந்தவுடன் திருத்திவிட டைரக்டர்கள் உத்தேசித்துள்ளனர்.

வியாபார அபிவிருத்திக்காக சென்னை, கல்கத்தா முதலிய இடங்களில் பிராஞ்சுகள் ஸ்தாபிக்கப்பட்டன. பூராவும் தென்னிந்தியர்களால் நடத்தப்பட்டு நிர்வஹிக்கப்பட்டு வரும் இந்த ஸ்தாபனத்தைப் பொது மக்கள் மேன்மேலும் ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேம்.

8 அணு நஷ்டம்

மட்ட ரகமான பாட்டர்களை வாங்குவதால் நீங்கள் செலவழிக்கும் ஒவ்வொரு ரூபாயிலும் பாதியோ அல்லது அதற்கு மேலோ நஷ்டமாகிறது.

16 அணு மதிப்பு
அதிக சக்தி — நீடித்த உழைப்பு

இவைகளுக்கு உலகம் பூராவும் புகழ் பெற்ற எவரெடி பாட்டரிகளையே கேளுங்கள்
உயர்ந்த சரக்கை வாங்குவது லாபகரமானது.



EVEREADY
TRADE MARK
யூனிட் ஸெல்கள் இவை நீடித்துழைக்கின்றன

கமலநாதன் ஆடிய கொலை நாடகம்

—— :[:o:]: ——

(ஸ்ரீமான் எஸ். ரங்கராஜ ஐயங்கார், எம். ஏ., பீ.எல்.)

வக்கீல் கமலநாதனுக்குக் காந்திமதி மீதிருந்த மோகம் தணிந்துவிட்டது. அதுமட்டுமல்ல. அது வெறுப்பாக மாறிவிட்டது. அவளது பந்தத்தினின்று தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டும் என்ற உறுதி அவன் மனதில் ஏற்பட்டுவிட்டது.

ஒரு வருடத்துக்கு முன்னர் காந்திமதி அவனுக்கு ஆசை நாயகியானாள். மனைவி மக்களுடன் கண்ணியமான வாழ்க்கையை நடத்திய அவனை அவளது எழிலே அவளது தாசானு தாசனாக ஆடும்படிச் செய்தது. தரித்திரத்தில் தத்தளித்த அவளை சுக போகத்தில் வைத்தது அவனது பணமே. உற்றார் உறவினரற்று, ஜீவனத்துக்கு வழியின்றி தவித்த அவள் அவனைத் தனது காதலனாக ஏற்றுக் கொண்டதில் யாதொரு அதிசயமும் இல்லை. அவளுக்கு வயது பதினெட்டுக்குமேல் இராது. ஆனால் அவனுக்கோ 35-வயதுக்குமேல் ஆய்விட்டது எனினும் பணத்தின் சக்தியே அவ்விருவரையும் இணைத்தது. அவள் பொருட்டு அவன் தாராளமாகச் செலவு செய்யத் தயங்கவில்லை. ஒரு பெரிய கட்டிடத்தின் மாடியை அவன் அவளது பிரத்தியேகமான வாசத்திற்காக வாடகைக்கு அமர்த்தினான். அவள் உடுப்பதற்காக விதம் விதமான ஆடைகளையும் தரிப்பதற்காக விலையுயர்ந்த ஆபரணங்களையும் வாங்கிக் கொடுத்தான். அவள் உபயோகத்திற்கு வேண்டிய சாமான்களைக் கொடுத்தான். அவளுக்குப் பணிவிடைகள் செய்ய ஒரு வேலைக்காரியை நியமித்தான். இரவு நேரங்களை அவளுடன் இன்பகரமாகக் கழித்தான். தனது ஆபீஸிலிருக்கும்பொழுதும் அவள் ஞாபகம் அவனுக்கு அடிக்கடி தோன்றும். அப்பொழுது தன்னுடைய டெலிபோனை எடுத்து அவளை அழைத்து ஆசையுடன் சம்பாஷிப்பான். அவளுடைய அறைக்கும் அவனது ஆபீஸுக்கும் டெலிபோன் இணைப்பு இருந்தது.

ஆனால் இப்பொழுதோ நிலைமை மாறிவிட்டது. காந்திமதி மீது அவன் கொண்டிருந்த பிரேமை அவன் உள்ளத்தை விட்டு நீங்கியது. அவள்பால் அவன் உண்மையான காதல் கொள்ளாததே அதன் காரணம். அவளது ரூப லக்ஷணத்தாலும் யௌவன சோபையாலும் கவரப்பட்ட அவனது மயக்கம் வெகு சீக்கிரத்தில் தெளிந்துவிட்டது. காதலின்றி ரகத்தைச் சோரக் காமம் எத்தனை காலம் நீடித்திருக்கும்?

முக அழகுபெற்ற காந்திமதியின் அகத்தில் அதற்கேற்ற அழகு இல்லை. அவள் கல்வி தேர்ச்சிபெற்றவளன்று. அவள் சுபாவத்தில் கெட்டவளல்லை. ஆனால் அவளுக்குப் பகுத்தறிவும் புத்தி கூர்மையும் அதிகம் இல்லை. ஆடை ஆபரணங்கள் மீது அவளுக்கு அளவற்ற ஆசை. கமலநாதன் தனக்கு வேண்டியவற்றை அளித்து தன்னைச் சுகபோகத்தில் வைத்ததற்காக அவள் அவனிடத்து உண்மை விசுவாசம் கொள்ள வில்லை. கமலநாதன் எப்படி அவள் மீது அளவற்ற மோகங்கொண்டானோ அப்படியே அவளுக்கு அவன்மேல் உண்மையான காதல் ஏற்படவில்லை. ...

அவளுக்கு வந்தபோல் அவன் ஒரு சுந்தரமான வாலிபன். மங்கையரது உள்ளங்களைக் கவரும் வசீகர சக்தியைப் பெற்றவன். உல்லாசமான வேஷதாரி. டாம்பீகமான வாழ்க்கையை நடத்துவதற்கு ஆசைகொண்டவன். ஆனால் அதற்குத் தேவையான செல்வம் அவனிடம் இல்லை. பேதை ஸ்திரீகளை மயக்கி அவர்களிடமிருந்து பணம் பறிப்பதே அவனது தொழில். அவனது நாட்டம் எப்பொழுது காந்திமதியின் மீது விழுந்ததோ அப்பொழுதே அவளைத் தன் வசப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு உண்டாயிற்று. அவளை இரகசியமாகச் சந்தித்து அன்பையும் ஆசையையும் காவாடிவிட்டான். கமலநாதன் இல்லாத சமயங்களில் அவனை அவளது அறையில் காணலாம். அவனுக்கும் காந்திமதிக்கும் இரகசியக் கடிதப் போக்குவரவு நடந்துவந்தது. கமலநாதன் தனக்கு மாதா மாதம் செலவுக்குக் கொடுக்கும் பணத்தில் ஒரு பாகத்தை காந்திமதி தன் காதலனுக்கு அளிப்பது வழக்கமாகிவிட்டது.

காந்திமதியின் கள்ள நடத்தை எப்படியோ கமலநாதனுக்குத் தெரிந்துவிட்டது. அதனால் அவன் அதிக ஆத்திரமடையவில்லை. அவளை விட்டொழிப்பதற்கு அதுவே சரியான காரணம் என்று அவன் நினைத்தான், "வீணாய் இவளுக்காக நான் மாதா மாதம் நூறு இருநூறு கொட்டவேண்டும்? சுந்தரநாதனுடன் அவள் போகட்டுமே! பீடை ஒழிந்ததென்று இருக்கும்" என்று அவன் தனக்குள்ளே சொல்லிக் கொண்டான்.

அன்று பிற்பகலில் காந்திமதியின் இருப்பிடத்தையடைந்த கமலநாதனின் முகத்தில் ஆத்திரமும் ஆங்காரமும் தென்பட்டன. ஆனால் அவை உண்மையல்ல. அவளது துரோக நடத்தையில் கோபாவேசங்கொண்டு அவளை அவ்விடமிருந்து துரத்த வந்தவன்போல நாடகம் ஆடவேண்டும் என்பது அவனது யோசனை.

ஹாலில் ஸோபாவில் உட்கார்ந்திருந்த காந்திமதி அவனைக்கண்டதும் எழுந்து அவனைத் தழுவிக்கொள்ள ஓடிவந்தாள். ஆனால் அப்பொழுது அவன், "சீ! துஷ்டை! என்னைத் தொடாதே!" என்று அதட்டினான்.

"என்ன! உங்களுக்கு இவ்வளவு கோபம்?" என்று ஒன்றுமறியாதவள்போல் வினவினாள் காந்திமதி.

"அடி நீலி! உன் நாடகத்தையா நான் சொல்லவும் வேண்டுமா? நீ செய்த துரோகம் எனக்குத் தெரியாது என்று நினைத்தாயா? இதற்காகவா உன்னைக் குப்பைத் தொட்டியிலிருந்து எடுத்துக் குபேர போகத்தில் வைத்தேன்!" என்று கமலநாதன் படபடத்துடன் கூவினான்.

"ஐயோ! நீங்கள் சொல்வது புரியவில்லையே!" என்று காந்திமதி ஆச்சரியமும் பயமும் கலந்த குரலில் வினவினாள்.

"துரோகி! என்ன சாகஸம் செய்கிறாய்? உன் கள்ளக் காதலன் யார் என்பது எனக்குத் தெரியாதா?" என்று சீறினான் கமலநாதன்.

அந்த ஸமயத்தில் டெலிபோனில் மணி அடித்தது. காந்திமதி ரிஸீவரை எடுத்து செவியுற்றாள்.

"ஏது! உன் கள்ளக்காதலன் கூப்பிடுகிறானோ?" என்று சொல்லிக்கொண்டே கமலநாதன் கோபமாக நகைத்தான்.

"இல்லை. உங்கள் குமாஸ்தா குமரப்பன் ஆபீஸிலிருந்து இங்கு நீங்கள் இருக்கிறீர்களா என்று கேட்கிறான்" என்று காந்திமதி சாந்தமாய் பதில் கூறினாள்.

"நான் இங்கே இல்லை என்று சொல். இன்று இங்கே வரமாட்டேன் என்றும் சொல்லித்தொலை" என்றான் கமலநாதன். அப்படியே சொல்லிவிட்டு காந்திமதி ரிஸீவரை வைத்தாள்.

"பாரிஸ் மெடல்" தங்க நகைகள்

ஆயிரக்கணக்கானவர்கள் வாங்கி ஆனந்தமடைகிறார்கள். ஏன்? நீங்களும் வாங்கி சந்தோஷமடையுங்கள்.

1. விலை சகாயம்
2. உத்திரவாதமுள்ளது
3. நாணயமுள்ளது
4. பொன்னுக்கு நிகரானது
5. பார்ப்பவர் மனதைக் கவரச் செய்வது
6. ஏழைகள் முதல் பணக்காரர்கள் வரை வாங்கக் கூடியவைகள்.
7. உயர்தரமான வேலைக்காரர்களால் தயாரிக்கப்பட்டவைகள்.



ஏஜண்டுகளும் தேவை!

ஸ்ரீ லக்ஷ்மி ஜுவலரி மார்ட்

184, சைனாபஜார் ரோட் :: சென்னை.

கமலநாதனின் மூர்க்கத்தனமும் ஆங்காரமும் அதிகரித்தனபோல் தோன்றியது. வெறிபிடித்தவன்போல் நின்றஅவன் "அடி பாவி! என் உப்பைத் தின்றுவிட்டு எனக்கே இப்படித் துரோகம் செய்துவிட்டாயே! இது அடுக்குமா? உனக்கு நல்லகதி எது? அந்தப்பயல் சுந்தரநாதனா உன்னை இத்தனை காலம் சம்ரக்ஷித்தான்? அந்த அற்பநாயைக் கொலைசெய்யாவிட்டால் என் பெயர் கமலநாதன் இல்லை" என்று கர்ஜித்தான்.

காந்திமதி ஒன்று மறியாதவள்போல், "ஐயையோ! நீங்கள் சொல்வது எல்லாம் புதுமையாயிருக்கிறதே? விஷயம் எனக்குப் புரியவில்லையே? ஏதோ தப்பான சந்தேகம் உங்களுக்கு ஏற்பட்டு விட்டதே! நான் என்ன செய்வேன்?" என்றாள்.

"அடிப் பாதகி! முழுப் பூசணிக்காயை நீ சோற்றில் மறைக்கப் பார்க்கிறாயே! சுந்தரநாதனுடன் நீ கொஞ்சுவதும் குலாவுவதும் எனக்குத் தெரியாது என்று பார்த்தாயா? இனிமேல் இந்த இடத்தில் இருப்பதற்கு உனக்கு யோக்கியதை இல்லை. நான் கொடுத்த பண்டம், பேழை, நகை, நட்டு எல்லாவற்றையும் வைத்துவிட்டு வெளியே நட" என்று கடுமையான குரலில் கமலநாதன் உத்தரவிட்டான்.

இனி உத்தமியைப்போல் நடிப்பதில் பயனில்லை என்பதை உணர்ந்த காந்திமதி கோபமே உருவெடுத்தது போல் நின்ற கமலநாதனது பாதங்களில் விழுந்து தன்னை மன்னிக்கும்படி வேண்டினாள். தான் இனி அவனுக்கு துரோகம் செய்வதில்லை என்று சத்தியம் செய்தாள்; அழுதாள்; தொழுதாள்; அலறினாள்; கெஞ்சினாள்; ஆனால் கமலநாதனின் சீற்றம் தணியவில்லை. வெறுப்புடன் அவளை உதறித் தள்ளிவிட்டு, அவன், "சனியனே! போ வெளியே! இனி என் முகத்தில் விழிக்காதே! எக்கேடாகிலும் கெட்டுப் போ! இன்றுடன் உனக்கும் நமக்கும் சம்பந்தம் விட்டது. அந்த அற்பப் பயல் சுந்தரநாதனை உயிருடன் விடமாட்டேன் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்" என்று உறுமினான்.

காந்திமதியின் மன நிலைமையை எப்படி விவரிப்பது? அத்தனை நாட்கள் தன்னை ஆதரித்த கமலநாதன் அன்று தன்னைத் தெருவில் நிறுத்த உத்தேசித்தது அவளுக்குச் சொல்லொணுத ஆத்திரத்தையும் அவமானத்தையும் ஏமாற்றத்தையும் அளித்தது. தன்னை அவன் அவ்வளவு கேவலமாய் உதறித் தள்ளியதை அவளால் பொறுக்க முடியவில்லை. ஒரு பக்கம் கோபம், ஒரு பக்கம் துக்கம், ஒரு பக்கம் ஏமாற்றம்—இவற்றால் தாக்கப்பட்ட அவள் தன் நிதானத்தை இழந்துவிட்டாள். கமலநாதனை ஆக்ரோஷத்துடன் நோக்கிய அவள் ஒரு பெண் புலியைப்போல் சீறினாள். பற்களை நறநறவென்று கடித்தாள். அறையிலுள்ள சாமான்களை வீசி யெறிந்தாள். மேஜைமீதிருந்த சிங்காரக் கண்ணுடியை உடைத்தாள். சுவரில் மாட்டப்பட்டிருந்த கமலநாதனின் படத்தைத் தரையில் வீசி யெறிந்தாள். அதன் அருகேயிருந்த கடிகாரத்தைக் கீழே தள்ளினாள். பைத்தியக்காரியைப் போல் அவள் கமலநாதன்மீது விழுந்து அவனைக் கிள்ளியும் கடித்தும் துன்புறுத்தினாள்.

அவ்விதமான மூர்க்கத்தனத்தைச் சற்றும் எதிர்பாராத கமலநாதன் சில விநாடிகள் திகைத்து நின்றான். ஆனால் அவளது உபத்திரவத்தை எத்தனை நேரம் பொறுத்துக்கொண்டிருப்பது? அவள் பிடியிலிருந்து அவன் தன்னை விடுவித்துக்கொள்ள முயன்றான். அவள் கைகளைப் பிடுங்கி உதறித் தள்ளினான். தன் முழு பலத்துடன் அவளை அப்பால் இழுத்தான். அவள் மார்பிலும் மண்டையிலும் ஓங்கி நாலைந்து குத்துகள் விட்டான்.

அவ்வளவுதான்! காந்திமதி செயலற்று தரைமீது சாய்ந்தாள். அவளது மண்டையில் ஏற்பட்ட காயத்திலிருந்து உதிரம் பெருகியது! அவளது கை கால்கள் அசையவில்லை. அவள் கண்கள் மூடிக்கொண்டன. அவளது உதடுகள் மூடிவிட்டன. மரத்திலிருந்து வீழ்த்தப்பட்ட கட்டையைப் போல் அவள் அசைவற்றுக் கீழே கிடந்தாள்.

கமலநாதன் முகத்தில் ஈயாடவில்லை. அவனது மனதில் பயங்கரமான சந்தேகம் தோன்றிவிட்டது. அதை நிவர்த்தித்துக்கொள்ளும் பொருட்டு அவன் குனிந்து கீழே கிடந்தவளின் மூக்கின் அருகே தன் விரலை வைத்துப் பார்த்தான். அவளது மார்பின்மீது தன் செவியை வைத்துக் கவனித்தான். அந்தோ! அவனுக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை. அவளது மூச்சு நின்றுவிட்டது. அவளது ஹிருதயத்தின் ஓட்டமும் நின்றுவிட்டது. அவள் இறந்துவிட்டாள் என்ற நிச்சயம் அவனுக்கு உண்டாகிவிட்டது. என்ன விபரீதம்! அதுவரையில் அவனால் சம்ரக்ஷிக்கப்பட்ட அவளது மரணத்துக்கு ஜவாப்தாரி அவனேயன்றி வேறு யாருமல்ல.

கமலநாதன் தைரியஸ்தன்தான். ஆனால் அந்த ஸமயத்தில் அவன் நெஞ்சம் பயத்தால் துடித்தது. ஆனால் ஒரு நொடியில் அவன் தனது வழக்கமான நிதானத்தையும் திடமான சிந்தையையும் மீண்டும் பெற்றுவிட்டான்.

மைசூர் பாட்டரிகள்



6 மாதங்களுக்கு உத்திரவாதம்

எழுத்து மூலமாய் கொடுக்கப்படும்

சென்னை ராஜதானிக்கு வினியோக

உரிமை பெற்றவர்கள்.

The Modern Automobiles,

167, Mount Foad, Madras.

Telephone: 8497, Telegram: (Mobile)

M. KATHER SAHIB & SONS,

Regd, Elephant Brand

SANDANATHI THYLAM

Cooling & Refreshing oil for the hair.

மூளையின் உஷ்ண சம்பந்தமான வியாதிகளையும், கூந்தல் குற்றம் முதலியவைகளையும் போக்கடித்து குளிர்ச்சியையும், தேஜஸ்ஸையும் தருவதற்கு இணையிலாத் தைலமெனக் கொண்டாடப்படும் ரிஜிஸ்டர் யானைமார்க் சந்தனாதித் தைலத்தை தாங்கள் உபயோகித்து இதன் அபூர்வ குணத்தை அடையும்படியாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

எம். காதர் சாஹிப் அன் சன்ஸ்,
கீழச்சித்திரை வீதி,
மதுரை.

The world famous.

NATIONAL FLOWER DUST

For the ward-robe or pocket, Drawing and Ball Room

உடுப்பு வகையறாக்களுக்கு அந்து, பாச்சை முதலான பூச்சிகளை அணுகவொட்டாமலும், விஷக் காற்றுகளைத் தடுத்தும், தொத்து வியாதிகளை நீக்குவதற்கும் உகந்தது. அநேக கனதனவான்களாலும், கண்காட்சிகளிலும், நற்சாட்சிப் பத்திரங்களும், தங்க மெடல்களும் பரிசு பெற்றது.

மலேயா ஏஜண்ட்:—

ஆர். ஏ. அகமட்ஷா மகம்மட் சுல்தான்,
பினங்கு தெரு, பினங்.

Catalogue free on request: Wanted Agents.

குற்ற வழக்குகளை நடத்துவதில் கமலநாதன் பிரக்கியாதி பெற்றவன். கொலைக் குற்றஞ் சாட்டப்பட்ட எத்தனையோ கக்ஷிக்காரர்களை அவன் யமனது பிடியிலிருந்து மீட்டுள்ளான். தண்டனைக்குத் தப்பமுடியாது என்று ஏங்கிக் கூண்டில் நின்ற எத்தனையோ பேர்வழிகளுக்கு அவன் விடுதலை வாங்கிக் கொடுத்துள்ளான்.

அத்தகைய சக்தி வாய்ந்த அவன் தன் விஷயத்தில்தானா ஏமாறக்கூடிய ஆசாமி? இந்த நினைவு அவனுக்குத் தோன்றவே, அவன் முகத்தில் புன்னகை தென்பட்டது. "காந்திமதியின் கொலைக்கும் எனக்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லை" என்று எல்லாரும் நம்பும்படியான ஏற்பாடுகளை விரைவில் ஜோடனை செய்யவேண்டும். அது ஒரு பிரமாதமல்ல" என்று அவன் தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்.

இப்படித் தன்னைத் தானே திடப்படுத்திக்கொண்ட கமலநாதன் தரையில் தாறுமாறாகக் கிடந்த சாமான்களை ஒழுங்காக எடுத்துவைத்தான். அவற்றின்மீது படிந்திருந்த காந்திமதியின் விரல் அடையாளங்களைத் தன் கைக் குட்டையால் துடைத்தான். காந்திமதிக்கும் அவள் கொலையாளிக்கும் போராட்டம் நடைபெற்று சாமான்கள் இறைபட்டன என்பதை மறைக்க வேண்டும் என்று எண்ணியே கமலநாதன் அப்படிச் செய்தான். "தனக்கு ஆபத்து ஏற்பட்டது என்று காந்திமதிக்குத் தோன்றியவுடன் அவள் தன் எதிரியுடன் போராடின பொழுது ஏன் கூச்சலிடவில்லை? அவள் ஏன் அக்கம் பக்கத்தாரை அழைக்கவில்லை?" என்று கொலை ஆராய்ச்சி செய்பவர்கள் வினவத் தொடங்கினால் அவர்கள் தன்னை சந்தேகிக்க நேரிடும் என்று கமலநாதன் நினைத்தான்.

தரையில் கிடந்த கண்ணாடி தூள் தூளாய் இருந்தது. "அதை கை தவறி விழுந்துவிட்டது என்று சந்தேகிப்பார்களேயன்றி வேறல்ல என்று சமாதானம் சொல்லிக்கொண்டான் கமலநாதன். சற்று தூரத்தில் உருண்டு கிடந்த சுவர் கடிகாரத்தை எடுத்த அவன் அதைத் துடைத்துவிட்டு நோக்கினான். அதன் முட்கள் மூன்றரை மணியில் நின்றிருந்தன. அதன் ஓட்டம் நின்றுவிட்டது. அது காந்திமதியால் கீழே உருட்டப்பட்ட பொழுது மணி மூன்றரை என்றதைக் காட்டியது.

கமலநாதன் குனிந்து காந்திமதியின் வலக் கரத்தில் இணைக்கப்பட்டிருந்த தங்கக் கடிகாரத்தை உற்றுப் பார்த்தான். அது 3-மணி 35-நிமிடத்தில் நின்றிருந்தது. எனவே அவள் கொல்லப்பட்ட நேரம் அதுதான் என்பதில் சந்தேகமேயில்லை. அவள் தரைமீது விழுந்த அதிர்ச்சியால் கை கடிகாரத்தின் ஓட்டமும் அதே சமயத்தில் நின்றிருந்தது.

கமலநாதனுக்கு ஒரு முக்கியமான சங்கதி ஞாபகத்துக்கு வந்தது. அவனது குமாஸ்தா குமரப்பன் டெலிபோனில் காந்திமதியை அழைத்து அவளைப்பற்றி வினவிய பொழுது மூன்று மணி இருபது நிமிஷம். ஏனெனில் அப்பொழுது அவன் சுவரில் மாட்டப்பட்டிருந்த கடிகாரத்தை நோக்கியுள்ளான். பத்து நிமிடங்களுக்குப் பின்னர் அவன் மீது கோபங்கொண்ட காந்திமதியால் அதே கடிகாரம் தரையில் உருட்டப்பட்டது. அதற்கு ஐந்து நிமிடங்களுக்குப் பின்னர் அவளே அவனது குத்துகளின் வேகத்தால் தரையில் விழுந்து மாண்டாள்.

இவற்றை நினைவிற்கொண்ட கமலநாதன் மெதுவாய் நகைத்தான் "காந்திமதி கொல்லப்பட்டது 3-35 மணிக்கல்ல. அவள் மாலை 4½ மணிவரையில் உயிருடன் இருந்தாளென்பதை நான் ஸ்தாபித்துவிடப் போகிறேன்" என்று சொல்லிக்கொண்டே அவன் காந்திமதியின் கரத்தின்மீதுள்ள கைக் கடிகாரத்தை நாலரை மணிக்குத் திருப்பிவைத்தான். பெரிய கடிகாரத்தின் முட்களை 4-32க்கு மாற்றினான்.

"இனி இந்தக் கொலையை ஆராய்ச்சிசெய்யப்போகும் எந்தத் துப்பறிபவனுக்கும் இந்த விஷயத்தில் எள்ளளவும் சந்தேகம் ஏற்படாது. காந்திமதி சரியாய் நாலரை மணிக்குக் கொலை செய்யப்பட்டாள் என்றும் இரண்டு நிமிடங்களுக்குப் பின் அவளைக்கொன்றவன் வெளியே செல்லும் அவசரத்தில் சுவரின் மீதிருந்த கடிகாரத்தைத் தள்ளிவிட்டுச் சென்றான் என்றும் அவன் சத்தியம் செய்யத் தயங்கமாட்டான்" என்று கமலநாதன் தனக்குள்ளே சொல்லிக்கொண்டு சந்தோஷித்தான்.

மற்றொரு விஷயத்தை நினைக்க அவனது குதூஹலம் அதிகரித்தது. சரியாய் மணி 3-20 க்கு குமாஸ்தா குமரப்பனிடம் இறந்தவள் டெலிபோன்மூலம் அவன் அவளது அறையில் இல்லை என்றும் அன்று அவன் அவ்விடம் வரமாட்டான் என்றும் தெரிவித்திருந்தாள். குமரப்பனிடம் டெலிபோன் சம்பாஷணை குறிப்புப் புஸ்தகம் உண்டு. அதில் அவன் தான் காந்திமதியை டெலிபோனில் கூப்பிட்டநேரத்தைக் குறிப்பிட்டிருப்பான் என்பது நிச்சயம். அது பின்னர் கமலநாதனுக்குப் பலமான சாக்ஷிய

வான்கார்டில்
இன்ஷ்யூர் செய்யுங்கள்

சென்னையில் தலைமை ஆபீஸ் உள்ள, தென்னிந்தியாவில் ஆயுள் இன்ஷ்யூரன்ஸுடன் மற்ற இன்ஷ்யூரன்ஸ்களும் செய்துவரும் முதல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி.

ஆயுள், மோட்டார் இன்ஷ்யூரன்ஸ் வகையில் சிறந்தவற்றை அளிக்கின்றது.

வசீகரமான நிபந்தனைகளின் பேரில் வேலை செய்ய ஏஜண்டுகளும், ஆர்கனைஸர்களும் தேவை.

வான்கார்ட் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்,

9--9A, பிளாக்கர்ஸ் ரோட், மவுண்ட் ரோட், மதராஸ்.

போன்: 8558.

மாப் உதவும் என்பதில் சந்தேகமுமுண்டோ?

காந்திமதி தன் சாவை எதிர்பார்க்கவில்லை என்பதும் அவள் திடீரென்று கொல்லப்பட்டாள் என்பதும் அவளது தற்காப்புக்குக்கூட அவகாசமில்லை என்பதும் நிதர்சனப்படுத்தப்படவேண்டுமென்று எண்ணிய கமலநாதனின் நாட்டம் மேஜைமீதிருந்த கூரிய கத்தியின்மீது சென்றது. "அதிகப்பிரசங்கியான துப்பறிபவன் எவனேனும் இந்தக் கத்தியைப்பார்த்துவிட்டு விபரீதமான சந்தேகத்தை எழுப்புவான். காந்திமதிக்கு நன்கு பரிச்சயமான ஒருவன் அவளைக்கொலை செய்தான் என்றும் அவளது செய்கையை எதிர்பாராத அவளுக்குக் கத்தியை எடுக்கக்கூட சந்தர்ப்பம் அகப்படவில்லை என்றும் அந்த மேதாவி முடிவுக்குவருவான். அப்பொழுது என்மீதும் சந்தேகம் ஏற்படக்கூடும்: வீண் வம்பு எதற்கு? இந்தக்கத்தி இங்கே இருக்கக் கூடாது" என்று தீர்மானித்த கமலநாதன் அதையெடுத்துத்தன் சட்டைப் பையில் மறைத்து வைத்துக் கொண்டான்.

மேஜைமீது கத்தி இருந்த இடத்துக்கருகேயுள்ள ஒரு பொந்தில் ஒரு கடிதம் கிடந்தது. அதைக் கமலநாதன் எடுத்துப்பிரித்துப்படித்தான். அதில் காணப்பட்டது பின்வருமாறு:—

5—6—1932

கண்மணி காந்திமதிக்கு,

இன்றைக்கு எனக்கு முக்கியமான அலுவல்கள் இருக்கின்றன. அதனால் இன்று உன்னைச்சந்திக்க இயலவில்லை. நாளை கட்டாயம் மாலை நாலு மணிக்கு உன்னிடம் வருகிறேன். இது நிச்சயம்.

இப்படிக்கு
உன்னைக்கனவிலும் மறவாத
காதலன்
சுந்தரநாதன்.

கடிதத்தைப் படித்த பின் ...ர் கமலநாதனது முகத்தில் ...துவரையிலுமில்லாத பிரகா...ம் ஜுவலித்தது. "பேஷ்! ...ன்று அதிர்ஷ்டம் என் பங்...ல் இருந்து வேலை செய்...றது. இக்கடிதம் அந்தப் ...யல் சுந்தரநாதனல் 21 ...ட்களுக்கு முன் எழுதப் ...ட்ட கடிதம். இன்று 26-ம் ...ததியல்லவா? இக்கடிதத்...ல் காணப்படும் தேதிமுன் ...2" என்ற இலக்கத்தைச் ...சர்த்துவிட்டால் போதும். ...தைக் கைப்பற்றும் போலீஸ் ...க்கு இது நேற்றுதான் ...ழுதப்பட்டது' என்று நிச்ச...ப்பான். இதில் கண்டபடி ...ந்திமதியை இன்று மாலை ...க்கு மணிக்கு சுந்தரநாதன் ...தித்தான் என்பது ஏற்...டுவிடுவதன்றி அரை மணி ...தப் பின், நிகழ்ந்த அவளது ...கொலைக்குக் காரணம் அதே ...ந்தரநாதனே என்பதும் உறுதிப்படும் அல்லவா? அந்தப் பயல் கொலைக்குற்றஞ் சாட்டப்படுவது திண்ணம். அப்புறம் அவன் முடிவு தூக்கு மரத்தில்தான்" என்று எண்ணிய வண்ணம் கமலநாதன் புன்னகை புரிந்தான்.

பென்ஸிலால் எழுதப்பட்ட அக்கடிதத்தில் காணப்பட்ட 5-6-1932 ஐ அவன் 25-6-1932 ஆக் ஆக்கிவிட்டான். ஒரே ஒரு இலக்கத்தைத் தன்பென்ஸிலால் எழுதியது அவனுக்கு ஒரு பிரமாதமான காரியமல்ல. கடிதம் மிகவும் பத்திரமாக மேஜைமீது வைக்கப்பட்டது. சுந்தரநாதன்மீது கொலைக் குற்றம் சுமத்தப்படப்படுவதற்கு இன்றியமையாத ஆதாரம் இவ்விதம் ஜோடனை செய்யப்பட்டது.

"இனி இவ்விடத்தில் தாமதிக்கக்கூடாது" என்று எண்ணிய கமலநாதன் தன் கைக் கடிகாரத்தை நோக்கினான். அப்பொழுது மணி மூன்றே முக்கால். காந்திமதி கொல்லப்பட்டு பத்தே நிமிடங்கள் ஆயின. எனினும் அதற்குள் அவளது கொலையின் உண்மை விவரங்கள் புலனுக்குப் படாத விதமாக மிகவும் அற்புதமான மாறுதல்கள் கொலையாளியால் செய்து முடிக்கப்பட்டன.

இனி கமலநாதன் செய்ய வேண்டிய காரியம் ஒன்று தான். அது என்னவெனில் பிறர் கண்களில் படாமல் அக் கட்டடத்தை விட்டு வெளியேறுவதே. அதில் யாதொரு சிரமுமில்லை. ஏனெனில் அன்று விடுமுறைநாள். காந்திமதி இருந்த மாடிக்குக் கீழேயுள்ளது ஒரு கடை. அது பூட்டப்பட்டிருந்தது. அதன் வாசலிலுள்ள காவற்காரன் கமலநாதன் வந்த சமயம் எங்கேயோ போயிருந்தான். அவன் திரும்பி வந்திருக்க மாட்டான் என்று நம்பிய கமலநாதன் படிக்கட்டு வழியே கீழே இறங்கி தெருவை யடையவேண்டும் என்று தீர்மானித்தான்.

காந்திமதியின் வேலைக்காரி இரவு ஏழு மணிக்குத்தான் வருவாள் என்பதைக் கமலநாதன் அறிவான். சுந்தரநாதன் அவளுக்குப் பரிச்சயமானதுமுதல் அவள் வேலைக்காரியைத் தன்னுடன் வெகு நேரம் வைத்துக்கொள்ளுவதில்லை. எனவே, இருட்டிய பின் வேலைக்காரி அங்கே வந்து தனது எஜமானி பிணமாகக் கிடப்பதை அறிந்த பிறகு தான் கொலையைப்பற்றிய தகவல் வெளிக்கு வரும் என்பதில் சந்தேகமில்லை. அதற்குள் கமலநாதன் தனது தற்காப்புக்காக எவ்வளவோ காரியங்களை முடித்துவிடலாமன்றோ?

பூனையைப்போல் அவன் வெளியே வந்தான். பிணம் கிடந்த அறையின் வெளிக் கதவை மூடினான். அதன் வெளிப்பக்கத்திலுள்ள படிக்

சென்னையிலிருக்கையில், ஞாபகமிருக்கட்டும்.

மைசூர் கேப்

(பிராமணுள் ஹோட்டல்)

★

ரெஸ்டோரண்ட் 4255 போன்: லாட்ஜ் 4257.

சாப்பாடு தங்கவசதி
183, சைனுபஜார் ரோட்,
மதராஸ்.

ரெஸ்டூரண்ட் அண்டு காடரிங் இலாகா.
178/179, சைனுபஜார்,
மதராஸ்.

பஸ், டிராம் போகும்வழியில் இருக்கிறது.

ஒரு குடும்பத்திற்கு ஏற்ற தாராளமான இடவசதி முதல், இரண்டாவது மாடிகளிலிருக்கின்றன.

★

நவீன சானிடரி திட்டங்கள், மின்சார பிட்டிங்குகள், காலாகாலத்திற்குச் சிறந்த மரக்கறி உணவு.

மிதமான சார்ஜுகள்.

உள்ளூரிலும், வெளியூர்களிலும், தோட்டக் கச்சேரிகளுக்கு காடரிங் செய்வதில் புகழ்பெற்றவர்கள்.

★

புரொப்ரைட்டர்கள்.

கே. கோபாலாச்சார் & கே. குருராஜாச்சார்.

எமது சொந்தப் பிரசுரங்கள்

1.	ஹிந்தி முதல் புத்தகம் (தமிழுடன்)	0	2	6
2.	ஷை ,, (ஆங்கிலத்துடன்)	0	3	0
3.	ஹிந்தி இரண்டாம் புத்தகம் (தமிழும் ஆங்கிலமும்)	0	4	0
4.	ஹிந்தி மூன்றாம் புத்தகம்	0	6	0
5.	மறந்தது—புத்துயிர்பெற்றது	0	3	0

சென்னைக் கிறிஸ்தவ கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதராயிருந்த

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.,

இயற்றியவை.

		ரூ.	அ.	ப.
6.	கலாவதி	2	0	0
7.	நாடகவியல்	1	8	0
8.	ரூபாவதி	1	4	0
9.	மான விஜயம்	1	8	0
10.	மதிவாணன்	0	12	0
11.	பாவலர் விருந்து	1	0	0
12.	தமிழ் மொழியின் வரலாறு	1	0	0
13.	தனிப் பாசுரத் தொகை	1	0	0
14.	தமிழ் வியாசங்கள்	0	12	0
15.	தமிழ்ப் புலவர் சரித்திரம்	1	0	0
16.	மணிய சிவனுர் சரித்திரம்	0	4	0

வி. சூ. சுவாமிநாதன்,
புஸ்தக வியாபாரி,
மேலக் கோபுரத் தெரு, மதுரை.

மதராஸ்,
1/9, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு.

திருநெல்வேலி,
ஹைரோடு.

கட்டு வழியே கீழே இறங்கினான். நல்ல வேளையாய் வாசற்புறத்தில் ஒருவரும் இல்லை. கடை வாசலிலுள்ள காவற்காரன் இன்னும் திரும்பி வரவில்லை. தெருவில் ஈ காக்கை கூட இல்லை. சுற்றும் நோக்கிவிட்டு தன்னைக் கவனிப்பவர் யாருமில்லை என்பதை நிச்சயப்படுத்திக்கொண்டு தைரியமும் சந்தோஷமும் மிக்க மனத்தினனாய் கமலநாதன் தெருவின் பின்புறமுள்ள சந்தையடைந்துவிட்டான்.

அச்சந்தில் வீடுகளில்லை. எனவே அவனைக் கவனிக்கும் மனிதன் யாருமில்லை. சந்தின் முனையின் அடுத்த தெருவின் பின்புறம் இருந்தது. அங்கேயும் வீடுகள் இல்லை. குப்பை எடுக்கும் தோட்டிகள் செல்வதற்காகப் பயன்பட்ட அவ்வசுத்தமான பக்கத்தில் ஜன நடமாட்டம் ஏது?

இப்படி ஐந்து நிமிடங்கள் சந்தடியின்றி சந்துகள் வழியே சென்ற கமலநாதன் ஒரு பெரிய ரஸ்தாவை அடைந்தான். அவ்வழியே அலக்ஷியமான பார்வையுடன் நடந்த அவன் தனக்கு அறிமுகமான யாரும் தன்னைக் கடக்கவில்லை என்று உவகை கொண்டான். எதிர்புறத்திலிருந்து சாமான்களை ஏற்றிச்சென்ற ஒரு மோட்டார் வண்டி வேகமாய் அவனைக் கடந்தது. அந்த மோட்டாரை ஓட்டிய சாரதியின் முகம் அவன் நடந்த பக்கத்துக்கு எதிர்ப்புறம் திரும்பியிருந்தது. கமலநாதன் அதிர்ஷ்டசாலியே என்பதில் என்ன சந்தேகம்?

சுமார் பத்து நிமிடங்கள் அவன் ரஸ்தா வழியே சென்றுகொண்டிருந்தான். தன்னை நோக்குபவர் யாருமில்லை என்ற தைரியம் அவனது நடைக்கு ஒரு புதுமையான ஊக்கத்தைக் கொடுத்தது. காந்திமதி கிடந்த இடத்திலிருந்து வெகு தூரம் அப்பால் வந்துவிட்ட அவன் ஒரு பேசும் ஸினிமா கொட்டகை வாசலை அடைந்தான்.

அப்பொழுது மணி நாலு.

விடு முறை தினமாதலால் அன்று மத்தியானம் ஆட்டம் நடந்துகொண்டிருந்தது. அது இரண்டு மணிக்கே ஆரம்பமாகி விட்டபடியால் கொட்டகைக்கு வெளியே யாரும் இல்லை. முற்றிலும் ஒருதடவை தனது நாட்டத்தைச் செலுத்திய பின்னர் கமலநாதன் டிக்கட்டு ஜன்னலுக்கு வெளியே நின்றுகொண்டு ஒரு டிக்கட்டுக்குள்ள கட்டணத்தை உள்ளே நீட்டினான். அவன் தலை ஜன்னலுக்கு மேலே இருந்ததால் அதை உள்ளேயிருந்த டிக்கட் விற்கும் குமாஸ்தாவால் கண்ணுறுவது சாத்தியமில்லை; குமாஸ்தா கட்டணத்தைப் பெற்றுக்கொண்டு ஒரு டிக்கட்டை எடுத்து வெளியேயிருந்து நீட்டப்பட்ட கமலநாதனின் கைக்குள் வைத்தான். கமலநாதன் டிக்கட்டுடன் உள்ளே சென்றான். காக்ஷிசாலையின் வெளிக் கதவுப் பக்கங்களில் ஒரு ஆள்கூட இல்லை. எல்லாரும் உள்ளே திரையில் தென்பட்ட ஸ்வாரஸ்யமான நாடகத்தைக் கவனித்துக்கொண்டிருந்தனர். காக்ஷி சாலைக்குள் புகுந்த கமலநாதனைக் கவனிப்பவர் யாரும் இல்லை.

வெள்ளித் திரையை நோக்கியவண்ணம் நாற்காலியில் உட்கார்ந்திருந்த அவன் மகிழ்ச்சியை என்னென்று கூறுவது? அவனது ஸாமர்த்தியமே ஸாமர்த்தியம்? காந்திமதியின் கொலைக்கும் தனக்கும் யாதொரு ஸம்பந்தமும் இல்லை என்பதைத் தான் மிகவும் எளிதில் நிதர்சனப்படுத்தக்கூடும் என்பதை நினைக்க , நினைக்க அவன் மார்பு பெருமையுடன் விரிந்தது. ஆம்! அவன் பிற்பகல் இரண்டு மணி முதல் படக் காக்ஷிசாலையில் இருந்தான் என்பதை யாரால் மறுக்கமுடியும்? மேலும் மூன்று இருபதுக்கு அவன் காந்திமதியின் அறையில் இல்லை என்பதும் குமாஸ்தா குமரப்பனால் நிரூபிக்கப்படுமன்றோ?

கால் மணி நேரம் கமலநாதன் கொட்டகைக்குள் இருந்துவிட்டு எதையோ ஞாபகப்படுத்திக்கொண்டவன் போல் வெளியேயுள்ள மானேஜரின் ஆபீஸுக்கு வந்தான். அங்கே உட்கார்ந்திருந்த குமாஸ்தாவை நோக்கிய அவன் தான் இடை நேரத்தில் சோடா குடிப்பதற்காக வந்ததாயும் அப்பொழுது தனது கைத்தடியைத் தவறுதலாய் சுவரின் பக்கத்தில் வைத்துவிட்டதாயும் கூறிவிட்டு "கைத்தடி ஏதாகிலும் இங்கே இருக்கிறதா?" என்று வினவினான்.

உடனே குமாஸ்தா காவற்காரனைக் கூப்பிட்டு விசாரித்தான். கைத்தடி எதையும் தான் பார்க்கவில்லை என்று பதில் உரைத்தான் சேவகன்

கமலநாதன் வருத்தம் தேங்கிய முகத்துடன் "அடடா! என் நண்பரின் ஞாபகார்த்தமாக அந்தக் கைத்தடியை வைத்துக் கொண்டிருந்தேன். புத்தி பிசகால் அதைத் தொலைத்து விட்டேனே? இனி அது அகப்படாதா?" என்று குமாஸ்தாவை வினவினான்.

குமாஸ்தாவின் அனுதாபம் ஒலித்தது. "தங்கள் தடி அகப்பட்டாலும் அகப்படலாம். காக்ஷி முடிந்த பிறகு வேலைக்காரர்கள் எல்லாரையும் கூப்பிட்டு விசாரிக்கிறேன். நன்றாய் தேடும்படி உத்தரவு செய்கிறேன். காக்ஷிக்கு வந்தவர் எவரேனும் தங்கள் தடியைத் தவறுதலாய் எடுத்துக் கொண்டு போய் விட்டுப் பின்னர் அதைத் திருப்பிக் கொண்டு வந்து கொடுத்தாலும் கொடுக்கலாம்.

எதற்கும் தங்கள் பெயர், விலாஸம், தடியின் அடை

ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ்

இன்ஷ்யூரன்ஸ் சொஸைடி லிமிடெட்,

விசேஷ வெற்றி ஏற்பட்டுள்ள

மற்றொரு வருஷம்

1937--38 :: 3 கோடிக்கதிகம்

குறைந்த பிரீமியம் வசீகரமான திட்டங்கள்

தொகை செலுத்த முடியாமைக்கான சௌகர்யங்கள்

தாராளமான போனஸ்

விவரங்களுக்கு எழுதவும் :

"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்,"

மதராஸ் பிராஞ்சு.

யாளம் முதலியவற்றை எனக்குக் கொடுங்கள் எழுதிக் கொள்ளுகிறேன்'' என்ருன்.

அப்படியே விவரங்களை எல்லாம் கமலநாதன் கூறவே, அவற்றைக் குமாஸ்தா எழுதிக் கொண்டான். கமலநாதனின் விலாஸத்தையும் தடியின் நிறம், நீளம் பருமன் முதலிய அடையாளங்களையும் குறித்துக் கொண்ட அவன்தான் அவ்விஷயத்தைக் குறிப்பிட்ட நேரத்தையும் எழுதிக் கொண்டான். அதாவது அப்பொழுது மணி 4-18, கமலநாதன் எதிர்பார்த்தபடியே காரியம் நடைபெற்று விட்டது. அவன் அன்று மத்தியான படக் காட்சிக்கு வந்ததற்கும், வெகு தூரத்திலிருந்த காந்திமதி கொலை செய்யப்பட்ட நேரத்துக்கு சில நிமிடங்களுக்குமுன்னர் :அதே காக்ஷிச்சாலையில் இருந்ததற்கும் ஆதாரமான ருஜு குமாஸ்தாவின் கையால் தயாரிக்கப்பட்டுவிட்டது.

இப்படி தனது நிலைமையை மேலும் மேலும் பலப்படுத்திக் கொள்வதில் கண்ணும் கருத்துமாயிருந்த கமலநாதன் ஆபீஸ் அறைக்கு வெளியே வந்தான். அதே ஸமயம் கொட்டகைக்குள்ளிருந்து வந்த பத்திராதிபர் பரமநாதர் அவனைக் கண்ணுற்றதும் ''ஏது கமலநாதரே! நீர் கிரிமினல் கோர்ட்டுகளைத் தவிர மற்ற எந்தக் கட்டடத்திற்குள்ளும் நுழையமாட்டீர் என்றல்லவா நான் இதுவரையில் நினைத்திருந்தேன்'' என்று கூறிவிட்டு நகைத்தார்.

கமலநாதன் புன்னகை புரிந்தான். ''இன்று விடுமுறையல்லவா? பொழுது போக்குக்காக இங்கே வந்தேன். மத்தியானம் இரண்டு மணியிலிருந்து இங்கே நேரத்தைப் போக்கிவிட்டேன்'' என்ருன்.

பரமநாதர் ''சரிதான்! நீர் எங்கே போகவேண்டும்? உமது ஆபீஸுக்குத் தானே? வெளியே எனது மோட்டார் வண்டி நிற்கிறது. நான் பத்திரிகாலயத்திற்குப் போக வேண்டும். என்னுடன் வந்தால் உம்மை உமது ஆபீஸில் விட்டுவிட்டுப் போகிறேன்'' என்ருர்.

மறு நிமிஷம் கமலநாதனும் பத்திராதிபரும் மோட்டாரில் ஏறிக்கொண்டனர். வண்டி உடனே புறப்பட்டது.

சற்றுநேரத்துக்குள் மோட்டார் கமலநாதனது ஆபீஸ் வாசலில் நின்றது. அப்பொழுது வண்டியை விட்டிறங்கிய அவன் தன்னிடம் விடை பெற்றுக்கொண்ட பரமநாதருக்கு வந்தனம் கூறிவிட்டுத் தன் கைக் கடிகாரத்தை நோக்கிக் கொண்டே அவரை ''இப்பொழுது தங்கள் கடிகாரத்தில் என்ன மணி'' என்று வினவ, அவர் தனது கைக் கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, ''இப்பொழுது சரியாக நாலு அடித்து முப்பத்திரண்டு நிமிஷம்'' என்று பதில் உரைத்தார். கமலநாதன் தன் தலையை ஆட்டிக்கொண்டே ''என் கடிகாரத்திலும் அதேதான்'' என்ருன். மறு கணம் பத்திரிகாசிரியரது மோட்டார் அப்பால் மறைந்தது.

ஒருவேளை தன்மீது கொலைக் குற்றஞ் சுமத்தப்பட்டால் பரமநாதர் தன் தரப்பில் சாக்ஷி சொல்லவேண்டும் என்பதே கமலநாதனின் உத்தேசம். காந்திமதி கொலை செய்யப்பட்ட அதே ஸமயம் அவன் பத்திராதிபருடன் மோட்டார் சவாரி செய்து கொண்டிருந்தான் என்பது ருஜுவாய்விட்டால் அவன் விடுதலை நிச்சயமன்ருே?

ஆபீஸுக்குள் சென்ற கமலநாதன் அங்கே தன் குமஸ்தா குமரப்பன் கணக்கு எழுதிக் கொண்டதைக் கண்டான். தன்னைப் பார்த்தவுடன் மரியாதையுடன் எழுந்து நின்ற குமஸ்தாவை விளித்த அவன் ''குமரப்பா! என்ன விசேஷம்? இன்று யாரேனும் கக்ஷிக்காரர் வந்தார்களா?'' என்று வினவ குமரப்பன் இரண்டு மணி சுமாருக்கு காளிங்கபுரம் காளப்ப முதலியார் தங்களைத் தேடிக்கொண்டு வந்தார். அவர்மீது நில சம்பந்தமான கிரிமினல் வழக்கு ஏதோ தொடரப்பட்டிருக்கிறதாம். தங்களை அவசியம் பார்க்கவேண்டுமென்று அவர் சொன்னதால் ஒரு வேளை தாங்கள் அந்த இடத்தில் இருப்பீர்கள் என்று நினைத்து டெலிபோனில் விசாரித்தேன். தாங்கள் அங்கே இல்லை என்ற பதில் வந்தது'' என்று பகர்ந்தான்.

குமரப்பன் இங்கிதம் அறிந்தவன். காந்திமதியைப்பற்றித் தனது யஜமானனிடம் பேசும் பொழுதெல்லாம் அந்த இடம் என்றுதான் சொல்லுவான். கமலநாதன் அவளுக்காக மாதா மாதம் பணம் செலவழிப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை. ஆனல் அவன் மரியாதை தெரிந்தவனுதலால் தன் அபிப்ராயத்தை தனக்குள்ளேயே வைத்துக்கொண்டிருக்க நேரிட்டது. எனினும் கமலநாதன் அவனது மனப்பான்மையை அறிவான்.

அவன் குமரப்பனை நோக்கி, ''காளப்ப முதலியார் சரியாய் எத்தனை மணிக்கு வந்தார்?'' என்று மீண்டும் வினவினன். குமாஸ்தா தன்னிடமிருந்த குறிப்புப்புஸ்தகத்தைப்புரட்டி ஒரு பக்கத்தை யெடுத்துப் பார்த்துவிட்டு அவர் சரியாய் இரண்டே கால் மணிக்கு வந்தார். உங்களைப்பற்றி டெலிபோன்மூலம் நான்விசாரிக்கும் பொழுது மணி இரண்டு இருபது என்று கூறிக்கொண்டே அதைத் தன் யஜமானனிடம் காட்டினன்.

ஆம், குறிப்புப் புஸ்தகத்தில் அதே விவரங்கள் எழுதப்பட்டிருந்தன. கமலநாதனின் கண்

PARVATHI MEDICAL HALL
BUTTERWORTH Rd. TRICHY

பார்வதி மேகராஜ சஞ்சீவி லேகியம்

ஸ்திரீகளுக்கு மகா சஞ்சீவி

சூதக வியாதிகளுக்கு உத்திரவாதம் உள்வது

24 நாளையில் பூரண குணம்

சூதக வாதம், சூதக வலி, அகால சூதகம், சூதக அடைப்பு, அடைப்பு காரணத்தினல் வயறூதல், பெருமல், தூலம் பெருத்தல், உமட்டல், வாந்தி, புளி ஏப்பம், ;விக்கல், அஜீரணம், குடல் வாயுவு, நெஞ்சி வலி, வயத்து வலி, குடல் புரட்டல், சூதகக் கட்டி, வாயுக் கட்டி, அடி வயிற்றில் பக்க நரம்பு தடித்துப் புடைத்து வலி எடுக்கும் வெட்டை வாயு, மலபந்தம், நாள் சென்ற மேக வெள்ளை, வெட்டை நீர்க் கசிவு, நீரில் சுண்ணும்புத் தண்ணீர் போலும், நூல் இழைகள் போலும், எண்ணை போலும், தேன் போலும், அடிக்கடி நீர் போகும் பிரமேகம், நீர்க் குத்தல், நீர்க்கசிவு, அவசர நீர், மயக்கம், தலைச் சுத்தல், நெஞ்செரிவு, வயிற்றில் எரிச்சல், கால் கை எரிவு, சூதகம் வெளியாவதற்கு முன் வயிற்று வலி, குன்ம வலி, எரி குன்மம், சத்தி குன்மம், வலி குன்மம், பெருமலம் போக்கு, இவ்வித மேகக் காரணத்தினல் முகத்தில் கருப்பு படர்தல், அரிப்பு, கெர்ப்பமின்மை, கெர்ப்பப் புழு, கெர்ப்ப விப்புருதி, கெர்ப்ப சின்னம், எலும்புருக்கி, இளைத்த தேகம், பலஹீனம் ஆகிய பித்த வெட்டையினலும், வெட்டை வாயுவினலும், ஏற்படும் சர்வ தொந்த ரோகத்தையும் 24 நாளையில் குணப்படுத்தும். சூதகத்தை ஒழுங்காக உடைத்து கெடுப்படி நிறுத்தும். புத்திர உற்பத்தி உண்டாக்கும். லெக்ஷிமி களையும், அழகும், ஐசுவரியமும் தரும், நம்பிக்கை உள்ளது. ஆயிரக் கணக்காக நற்சாக்ஷிப் பத்திரமும், பரிசும் பெற்றது. இன்றே எழுதுங்கள். சுகமடையுங்கள். பத்தியமே கிடையாது.

24 நாள் சாப்பிடும் ஜாடி 1-க்கு ரூ. 5—0—0.

பார்வதி மருந்துசாலை,

தெப்பகுளம் P. O., திருச்சினுப்பள்ளி,

கள் மகிழ்ச்சியால் பிரகாச மடைந்தன.

"குமரப்பா, நான் மத்தியானம் இரண்டு மணிமுதல் பேசும் படக் கொட்டகையில் இருந்தேன். அங்கிருந்து நேராய் இங்கே வந்தேன்" என்று கூறிவிட்டு அவன் சற்று நேரம் மௌனமாயிருந்தான். அவன் முகம் ஏதோ துக்ககரமான நினைவுகளால் மாறுதல் பெற்றதுபோல் தோன்றியது. மீண்டும் அவன் தன் குமாஸ்தாவைப்பார்த்து, "அப்பா, இனி நான் இவ்விடம் இல்லாத சமயத்தில் என்னை அழைக்க வேண்டுமானால் அந்த இடத்துக்கு டெலிபோன் செய்யாதே! அவளைப்பற்றி எவ்வளவோ பிரமாதமாய் மனதில் எண்ணியிருந்தேன். அது பிசகாய் விட்டது. இனி அவளை நான் மறந்துவிடப்போகிறேன்" என்று சொல்லிவிட்டுப் பெருமூச்செறிந்தான்.

கமலநாதன் ஆடிய நாடகத்தின் அடுத்த கட்டம் அப்பொழுது ஆரம்பமாயிற்று என்று கூறலாம். அன்று மத்தியானம் இரண்டு மணிமுதல் சாயந்திரம் ஐந்து மணிவரையில் அவனது நடவடிக்கைகளைப்பற்றிய ருஜுக்கள் ஒழுங்கான கோர்வையில் அமைந்துவிட்டன. இனி அவன் காந்திமதியுடன் ஏதோ மனஸ்தாபங்கொண்டிருந்தான் என்பதையும் அவள்மீது கொண்ட காதல் நோயால் வேதனையுற்றுன் என்பதையும் எல்லாரும் நம்பும்படி செய்யவேண்டும் என்பதே அவனது உட்கருத்து.

அவனது நடிப்பின் நோக்கம் என்னவென்பதை இங்கு குறிப்பிடவேண்டியது அவசியம். கொலை அம்பலத்துக்கு வருமுன் காந்திமதிக்கும் சுந்தரநாதனுக்கும் இரகசிய நட்பு என்பதை அவன் பக்குவமாய்ப் பிரஸ்தாபித்துவிட்டால் சந்தேகம் சுந்தரநாதன் மீது பலமாக மனத்தில் வேரூன்றிவிடும். காந்திமதியின்மீது காதலால் தூண்டப்பட்டவன்போல் அவளிருந்த தெருவுக்குச் சென்று கொலை விஷயம் வெளிக்கு எட்டிவிட்டதா என்பதையும் அவன் அறிந்துகொள்ளக்கூடும். சுந்தரநாதனது நடவடிக்கைகளையும் அவன் நுட்பமாய் அறிந்துகொள்ளலாம். தன்னால் தயாரிக்கப்பட்ட படுகுழியில் சுந்தரநாதனை வீழ்த்தலாமா என்பதையும் தெரிந்துகொள்ளலாம்.

இன்னொரு விஷயமும் கவனிக்கத்தக்கது. தனக்கும் காந்திமதிக்கும் ஏதோ மனத்தாங்கல் உண்டு என்பதை வெளியிட்டால் அவன்மீது கொலை விஷயமாய் ஏற்படக்கூடிய சந்தேகத்துக்கு ஆக்ஷேபனை தோன்றும். ஏனெனில் உண்மைக் கொலையாளி தனக்கும் இறந்தவளுக்கும் மனஸ்தாபம் உண்டென்பதை பிரஸ்தாபிப்பானு? அது மனுஷ சுபாவத்துக்கு நேர் மாறானதன்றோ? ஒருவேளை கமலநாதன் கைதிக் கூண்டில் நிற்க நேரிட்டால் அவனுக்காக ஆஜராகும் வழக்கறிஞர் "என் கக்ஷிக்காரன் வாஸ்தவமாகவே குற்றஞ் செய்தவனாயின், தனக்கும் கொலையுண்டவளுக்கும் ஏதோ பிணக்கு இருந்தது என்பதை வெளியில் சொல்லுவானு? அதை எப்பாடு பட்டேனும் மறைப்பானேயன்றி வேறல்ல. அதனால் என் கக்ஷிக்காரனது நடத்தையே அவன் நிரபராதி என்பதை நிரூபிக்கிறது" என்று வாதிப்பார். ஜூரிமார் அதை ஏற்றுக்கொள்ளத் தயங்கமாட்டார்கள்.

இப்படியெல்லாம் சிந்தித்த வண்ணம் செயலற்றவன்போல் நாற்காலியில் கமலநாதன் உட்கார்ந்திருந்தான். மணி ஐந்து அடித்தது. உடனே அவன் எழுந்து, "குமரப்பா! நான் போகிறேன். நாளைக்காலை வரை எனக்கு இங்கே வேலை யில்லை. ஆறுமணிவரையில் இங்கேயிருந்துவிட்டு ஆபீஸைப்பூட்டிவிட்டு நீ வீட்டுக்குப்போ" என்று சொல்லிவிட்டு வெளியே கிளம்பினான்.

சற்று தூரத்தில் உள்ளது ஒரு சிற்றுண்டிச்சாலை. அங்கே நுழைந்த அவன் ஒரு நாற்காலியில் அமர்ந்து சிற்றுண்டியும் காப்பியும் வரவழைத்தான். அதே ஸமயத்தில் அங்கேவந்து பக்கத்து நாற்காலியில் உட்கார்ந்த அவனது நண்பன் வக்கீல் வரதராஜன் தனக்கு வேண்டிய உண்டிவகைகளைப்பற்றி உத்தரவு பிறப்பித்தான்.

சிற்றுண்டிகளை அருந்திய வண்ணம் கமலநாதனது முகவாட்டத்தைக்கவனித்த வரதராஜன், "ஏனப்பா! ஒருமாதிரியாக இருக்கிறாயே?" என்று வினவினன்.

"எல்லாம் என் தலைவிதி தான். உன்னிடம் விஷயத்தை என் ஒளிக்கவேண்டும்? எனக்கு வைப்பாட்டி இருப்பது உனக்குத்தெரியுமல்லவா? அவளை இன்னொரு பயல் அடித்துக்கொண்டுபோகப்பார்க்கிறான்? காத்திருந்தவன் இருக்க நேற்று வந்தவன் கொண்டுபோனான் என்ற சமாசாரமாக இருக்கிறது" என்று பதில் உரைத்தான் கமலநாதன்.

"அப்படியா?" என்று அனுதாபத்துடன் வினவிய அவன் நண்பன், "நீ காந்திமதியை சம்ரக்ஷிக்கிறாய் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அந்தப் புது ஆசாமி யார்?' என்று கேட்டான்.

"அவன் ஒரு உதவாக்கரைப் பயல். அவனை உனக்குத் தெரிந்திருக்கலாம். அவன் பெயர் சுந்தரநாதன்" என்று சற்று ஆத்திரத்துடன் கூறினான் கமலநாதன்.

"ஓகோ! அந்தப் பயலா?" என்று தன் தலையை ஆட்டின வரதராஜன் "சரிதான். அவன் இந்தவேலைகூட செய்கிறானு? விட்டுத்தள்ளு கழுதைகளை. அதைப்பற்றி ஏன் மனதில் கஷ்டப்படுகிறாய்?போனால்போகட்டும். அந்தத் துரோகி. அவளை மறந்துவிடு" என்று தேறுதல் கூறினான் வரதராஜன்.

"அப்படியிருக்க முடிகிறதா? காந்திமதிதான் ஸ்திரீ ஜாதி. அவள் விஷயத்தில் எனக்கு அவ்வளவு கோபமில்லை. அவளை என்னால் மறக்க முடியவில்லை. ஆனால் அந்தத் துஷ்டன் சுந்தரநாதனுக்குத் தகுந்தபுத்திபுகட்டப்போகிறேன்" என்று கமலநாதன்சொல்லிவிட்டுப் பற்களை நற நற வென்று கடித்தான்.

சிற்றுண்டியை முடித்துக்கொண்டு வரதராஜனிடம் விடைபெற்று வெளியே வந்த அவன் ஒரு வாடகை வண்டியில் ஏறிக்கொண்டு வண்டிக்காரனை காந்திமதி இருந்த தெருவுக்கு ஓட்டும்படி உத்தரவிட்டான். அங்கே நிலைமை எப்படி இருந்தது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதே அவனது உத்தேசம். காந்திமதியின் பிணம் கண்டெடுக்கப்பட்டிருந்தால் அங்கே போலீஸ் மயமாயிருக்குமன்றோ? விழுந்த சங்கதி பரவிவிடும். தெருவை யடையுமுன் அதைத் தெரிந்துகொண்டு விடலாம். அப்புறம் எப்படி நடந்துகொள்வது என்பதைப் பற்றி முடிவு செய்யலாம் என்று நினைத்தான்.

சற்றுநேரத்துக்குள் வண்டி அந்தத் தெருவை யடைந்தது. காந்திமதி குடியிருந்த கட்டடத்தின் வாசலில் கூட்டமில்லை. தெருவில் கடைக்காவற்காரன் நின்றுகொண்டிருந்தான். கமலநாதனைப் பார்த்ததும் அவன் ஒரு கும்பிடு போட்டான்.

வண்டியிலிருந்தபடியேகமலநாதன், "ஏண்டா, மேலே அம்மாள் இருக்கிறாளா?" என்று வினவினன்.

காவற்காரன், "நான் இங்கே வந்து பத்து நிமிடம் ஆகிறதுங்க. அம்மாவைப் பார்க்கவில்லைங்க. அவுங்க மாடியிலே உள்ளே இருக்கிறாப்போலிருக்குதுங்க. வேலைக்கார அம்மாவும் வரவில்லேங்க. நான் மேலே போய் அம்மா என்ன செய்யுறாங்க என்று பார்க்கட்டுமா?" என்று வினவினன்.

கமலநாதன், "வேண்டாமப்பா. நான் அவசரமாகப் போகிறேன். இந்தக் கடிதத்தை வேலைக்காரி வந்ததும் கொடுத்து அம்மாளிடம் சேர்

ப்பித்துவிடு'' என்று உத்தரவிட்டு ஒரு காகிதத்தை எடுத்து அதில் பின்வருமாறு எழுதினன்:—

''கண்ணுட்டி காந்திமதி,

நான் உன்மீது தவறுதலாய் சந்தேகங்கொண்டேன் என்பது இப்பொழுது தெரிகிறது. போன தடவை கோபத்தால் உன்னிடம் நான் நடந்துகொண்டதை மறந்துவிடு. என் செல்வமே, நான் சென்ற மூன்று நாட்களாய் உன்னைப் பார்க்கவராததற்காக வருத்தப்படாதே! எனக்கு அவசரவேலை யிருப்பதால் இன்று உன்னைப் பார்க்க முடியவில்லை. நாளை மாலை நான் கட்டாயம் வருவேன் என்பதை நம்பு.

உன் பிரியத்தையும் மன்னிப்பையும் கோரும்,

கமலநாதன்.
26—6—1932
மாலை 5½ மணி

மேற்கண்ட கடிதத்தை காவற்காரன் பெற்றுக்கொண்டான். கமலநாதன் வண்டியைத் திரும்பி யோட்டும்படி உத்தரவு செய்தான். வண்டிக்காரனும் அப்படியே ஓட்டினன்.

கமலநாதன் உள்ளம் பூரித்தது. 'ஆம் அதில் சந்தேகமேயில்லை. காந்திமதியின் பிணம் அப்படியே கிடந்தது. அவள் அறைக்குள் யாரும் வரவில்லை. இருட்டிய பின்னர் வேலைக்காரி வந்த பிறகுதான் விஷயம் வெளிவரும்.

அவன் அங்கே வந்து காந்திமதியைப்பற்றி விசாரித்துவிட்டு அவளுக்கு ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டுப் போனது அவனது குற்றமின்மையை நிரூபிக்கும் அறிகுறிகளில் ஒன்றேயன்றி வேறல்ல. அவன் உண்மைக் குற்றவாளியாயின் பிணம் இருந்த தெருப் பக்கம் காலை வைப்பானு? அப்படிச் செய்ய அவனுக்குத் தைரியம் கொஞ்சமேனும் இருக்குமா? ''அவன் குற்றவாளியன்று. காதல் நோயால் பீடிக்கப்பட்டே அவன் காந்திமதியிருந்த வீட்டுக்கு வந்து அவளுக்குக் கடிதம் எழுதிவிட்டுச் சென்ருன் என்று கொள்வதுதான் நியாயம் என்றே அவனது நடத்தைப்பற்றி சிந்திக்கும் எல்லோரும் முடிவு செய்வார்கள்.

இப்படி எண்ணி மகிழ்ந்த கமலநாதன் ''இனி கவனிக்க வேண்டிய விஷயம் எனக்கு ஒன்றுதான் பாக்கி. அந்தப் பயல் சுந்தரநாதனைப் பற்றித் தகவல் விசாரிக்கவேண்டும்'' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்.

சற்று தொலைவில் இருந்த கோவிலுக்குப் பக்கத்தில்தான் சுந்தரநாதனது வீடு இருந்தது. கோவிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்வதைப் போல் நடித்து சுந்தரநாதனைப் பற்றி விசாரிப்பதுதான் சரியான உபாயம் என்று கமலநாதன் தீர்மானித்தான். உடனே அவன் வண்டிக்காரனைக் கோவிலுக்கு ஓட்டும்படி உத்தரவிட்டான்.

கால்மணி நேரத்துக்குள் வண்டி கோவில் வாசலில் நின்றது. வண்டியிலிருந்து இறங்கிய கமலநாதன் வண்டிக்காரனிடம் கூலியைக் கொடுத்து அனுப்பிவிட்டு கோபுர வாசலை அடைந்தான்.

அதே சமயம் அருகிலுள்ள வெற்றிலைப் பாக்குக்கடையிலிருந்து வந்த சுந்தரநாதன் அவன் முன்பு நின்று இன்று மத்தியானம் நாலு மணிக்கு உம்மை ஸினிமாக் கொட்டகையின் வாசலில் பார்த்தேனே! ஏது அத்தனை நேரத்துக்குப்பின் படக்காக்ஷிக்குப் போனது?'' என்று வினவினன்

கமலநாதனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. அவன் கட்டி முடித்த கோட்டையின்மீது இப்படி வெடிகுண்டை சுந்தரநாதன் போடுவானென்பதை அவன் எதிர்பார்க்கவேயில்லை. சனியன்மாதிரி இவன் ஏன் இப்படி குறுக்கிடுகிருன் என்று அவன் சுந்திரநாதனை மனதில் வைதான். பிறகு சற்றுகோபத்துடன் ''என்னடா உளறுகிருய்? என்னையா நீ நாலுமணிக்குக் கொட்டைகைக்கு வெளியே பார்த்தாய். உனக்கு ஏதோ மயக்கம்போலும். இரண்டு மணிமுதல் நாலேகால் மணிவரையில் நான் கொட்டகைக்குள்ளேயல்லவா படத்தைப் பார்த்துக்கொண்டு இருந்தேன்?'' என்ருன்.

சுந்தரநாதன் துடுக்கும் முன்கோபமும் உள்ளவன். தன்னை அவ்வளவு அலட்சியமாய் கருதிய கமலநாதனை அவன் ஆத்திரத்துடன் நோக்கி, ''அடா'' என்று என்னைப் பார்த்துப் பேசாதேயுங்காணும். நான் சொல்வது வாஸ்தவந்தான். இன்று மத்தியானம் நீர் கொட்டகைக்கு வெளியே நின்றுகொண்டு சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு ஒரு டிக்கட் வாங்கிக்கொண்டு உள்ளே நுழைந்ததை என் கண்ணுல் பார்த்தேனே! அப்பொழுது எதிரில் உள்ள வெற்றிலைப் பாக்குக் கடைக்குள் நான் உட்கார்ந்து கொண்டிருந்தேன். அப்பொழுது கடிகாரத்தில் மணி நாலு அடித்தது. உள்ளேயிருந்த என்னை உம்மால் பார்த்திருக்க முடியாது என்று மொழிந்தான்.

கமலநாதனின் ஏமாற்றத்தை எப்படி விவரிப்பது? அவனுள்ளத்தில் கோபம் பொங்கியது. தன்னுல் அவ்வளவு சாமர்த்தியமாக நிர்மாணிக்கப்பட்ட ஏற்பாடுகளையெல்லாம் பாழாக்க வந்தவன்போல் தோன்றிய சுந்தரநாதனை அவன் ஆக்ரோஷத்துடன் விழித்து நோக்கினன். தன்மீது காந்திமதியின் கொலைக்குற்றம் சுமத்தப்பட்டால் அப்பொழுது சுந்தரநாதனின் சாக்ஷியம் தன்னுல் தயாரிக்கப்பட்ட ருஜுவுக்கு விரோதமாகவல்லவா ஏற்படும்? தான் இரண்டு மணிக்குப் பேசும் படக் கொட்டகைக்குள் இருந்தது பொய் என்று கருதப்பட்டால், அப்புறம் அவனது உயிருக்கே அல்லவா ஆபத்து சம்பவிக்கும்.

பொய்யேனடா சொல்லுகிருய்?'' என்று அவன் மீண்டும் சுந்திரநாதனைக் கேட்டுக்கொண்டே நின்ருன்.

''மறுபடியும் என்னை அடா என்று கூப்பிடாதே! அப்புறம் உனக்கு ஏதாவது மரியாதை கிடைத்துவிடும்'' என்று சொல்லிக்கொண்டே சந்தரநாதன் தன் எதிரியை நோக்கி, ''பொய் சொல்லுவதும் பொய்ச்சாக்ஷி தயாரிப்பதுமே உன் அனுபவங்கள். உன்னைப் போல் நான் அவ்வளவு மோசமானவனல்ல'' என்று சுடச்சுடப்பதில் கூறினன். தன்னையுமறியாமல் கமலநாதன் கோபவெறிகொண்டான். ''அடே அற்பப்பயலே! என்னிடமா நீ வாதாடுகிருய்?'' என்று சொல்லிக்கொண்டே அவன் சுந்தரநாதனின் தாடையில் பளீர் பளீர் என்று இரண்டு அறைகள் விட்டான்.

அவ்வளவுதான்! அவ்விருவருக்கும் கடுமையான போராட்டம் ஆரம்பமாயிற்று. பலத்தில் வல்லவனுன சுந்தரநாதன் தன்னெதிரியைக் கீழே தள்ளி அவன் மார்பில் இரண்டு மூன்று குத்துகள் குத்தினன். ஆனல் கமலநாதன் சளைத்தவனன்று. உடனே எழுந்து அவன் சுந்தரநாதனைத் தன் கால்களால் உதைத்தான். அதனுல் வெருண்ட சுந்தரநாதன் கமலநாதனது சட்டைப் பையை இழுத்து அவனைக் கீழே தள்ள முயன்ருன்.

மறுவிநாடி இருவரும் தரையில் புரண்டனர். சுந்தரநாதனின் கை கமலநாதனின் சட்டைப்பைக்குள் சென்றது. ஆனல் அதற்குள் அதிலுள்ள கத்தியை—காந்திமதியின் மேஜைமீதிருந்து எடுக்கப்பட்ட கத்தியை எடுத்த கமலநாதன் அதைத் தன் சத்துருவின் மார்புக்கு முன் நீட்டினன். ஆனல் அந்த வேகத்தில் கத்தி சுந்தரனின் மார்பைக் கீறியது. அதிலிருந்து இரத்தம் அருவிபோல் பாய்ந்தது. மறுவார்த்தையின்றி சுந்தரநாதன் தரைமீது சாய்ந்துவிட்டான். அவன் ஆவி அவனது உடலை விட்டுப் பிரிந்து போய்விட்டது.

மோட்டார் பம்புகள்
எலக்ட்ரிக் பான்கள்
மோட்டார் ஸ்டார்ட்டர்கள்
எலிக்ஸ் பல்புகள்

கிடைக்குமிடம் :—
ஆர். எம். எஸ். அண் கோ.,
எலக்ட்ரிகல் இன்ஜினியர்ஸ்,
ராட்டன் பஜார் : : ஜி. டி., மதராஸ்.

By Courtesy *"Grihalakshmi"*

காவேரி ஜனனம்

அதே ஸமயம் கோபுர வாசலில் வந்து நின்ற வண்டியிலிருந்து இறங்கிய ஸ்திரீ ஒருத்தி அந்தக் கோரமான காக்ஷியைப் பார்த்துவிட்டாள். உடனே அவள் தன் வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டே, "ஐயையோ! தெய்வமே காரியம் மிஞ்சிப்போய்விட்டதே! பாவி கொலைசெய்துவிட்டானே! 'என்ன செய்வேன்!' என்று ஓலமிட்டாள்.

உணர்வையிழந்து கற்சிலையைப் போல் நின்ற கமலநாதன் அவளைக் கண்ணுற்றதும் திடுக்கிட்டான். தான் காண்பது கனவோ நினைவோ என்ற சந்தேகம் அவனுக்குத் தோன்றிவிட்டது.

அழுதுகொண்டே வந்த ஸ்திரீ வேறுயாருமல்ல. அவள் காந்திமதிதான். அவளது மண்டையைச் சுற்றி ஒரு கட்டு காணப்பட்டது. வைத்தியரின் சிகித்ஸை பெற்று விட்டு அவள் அங்கே வந்தாள் என்பது விளங்கியது.

மதியூகியான கமலநாதனுக்கு விஷயங்கள் தெற்றெனப் புலனாயின. அவனால் தரையில் வீழ்த்தப்பட்ட காந்திமதி இறக்கவில்லை. கடுமையான மூர்ச்சையில் ஆழ்ந்து விட்டாள். ஸ்மரணை வந்தபின் அவள் வைத்தியரிடம் சென்று சிகித்ஸை பெற்று அங்கிருந்து சுந்தரநாதனைத் தேடிக் கொண்டு அங்கே ஓடிவந்தாள் என்பதில் சந்தேகமில்லை. அவளது காதலைக் கமலநாதன் கொலை செய்துவிடுவான் என்ற பயமே அவளை அவ்விடம் கொண்டுவந்து சேர்த்தது. சுந்தரநாதனை எச்சரிக்கை செய்யவே அவளது நோக்கம் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

அடாடா! கமலநாதன் ஆடிய கொலை நாடகம் அப்படியா முடியவேண்டும்? தான் காந்திமதியைக் கொலைசெய்துவிட்டதாக எண்ணி, தனது நற்காப்புக்காகவும் சுந்தரநாதனை அக்கொலையில் சம்பந்தப்படுத்தவும் உத்தேசித்து அவனால் முடிக்கப்பட்ட ஏற்பாடுகள், அதே சுந்தரநாதனைக் கொலை செய்ததாக இனி அவன்மீது கொண்டுவரப்படும் குற்றவழக்கில் அவனுக்கு விரோதமான சாக்ஷியமாக அமைந்துவிட்டனவே. அவனது நடத்தையிலிருந்து அவன் தனது காதலில் குறுக்கிட்ட எதிரியைக் கொடூரமாகக் கொலைசெய்ய உத்தேசித்தான் என்பது சந்தேகத்துக்கு இடமில்லாமல் ஏற்பட்டுவிட்டது. காந்திமதியிடம் அவன் கோபமாயும் ஆத்திரமாயும் பேசிய வார்த்தைகளில்தான் சுந்தரநாதனைக் கொலைசெய்யப்போவதாக உறுதிகூறினானல்லவா? பின்னர் அவளைக்கீழே தள்ளிவிட்டு அவன் அவள்மேஜைமீதிருந்த கத்தியை எடுத்துக் கொண்டு சென்றதன் நோக்கம் சுந்தரநாதனைப் பழி தீர்த்துக்கொள்ளவே யென்று தான் எல்லோரும் நினைப்பார்கள். பின்னர் அவன் வக்கீல் வரதராஜனிடமும் தான் சுந்தரநாதனுக்குத் தகுந்த படிப்பினை கற்பிப்பதாகக் கூறியுள்ளான்! இவற்றையெல்லாம் ஆராயுங்கால் அவன் தன் எதிரியைக் கொன்றுவிட முன்னேற்பாடு செய்தான் என்பது விளங்கும். அவற்றைப்பற்றி சமாதானம்கூற அவனுக்குக் காக்ஷியே கிடையாது. குற்றவழக்கில் அவனுக்குத் தண்டனை நிச்சயம். எவ்வளவு ஸாமர்த்தியமான நியாயவாதியாலும் அவனைத் தூக்குமரத்திலிருந்து மீட்க முடியாது.

சுந்தரநாதன் இரத்த வெள்ளத்தில் தரையில் மாண்டு கிடந்த கோரத்தைக் காண அக்கம் பக்கத்தார் அங்கு கூடினர். பிணத்தின் பக்கத்தில் அசைவற்று நின்ற கமலநாதன் அவர்களைக் கவனிக்கவில்லை. காந்திமதியின் பிரலாபமும் வசைச்சொற்களும் அவன் காதில் ஒலிக்கவில்லை. "ஐயையோ! படுபாவி! நீ சொன்னபடி செய்துவிட்டாயே! கொலை நடந்துவிடும் என்று நடுங்கிக் கொண்டே இங்கே ஓடிவந்தேனே! நான் வருவதற்குள் இப்படிச் செய்துவிட்டாயே! அடே கொலைபாதகா! என் சுந்தரத்தைக் கொன்றுவிட்டாயே! என் சுகத்தைக் கெடுத்துவிட்டாயே!" என்று நெஞ்சுவிரி கோலமாய் அவள் புலம்பினாள். ஆனால் அவள் புலம்பலை அவன் செவியுறவில்லை. தன் திட்டமெல்லாம் வீணாகிவிட்டதை நினைத்து நினைத்து அவன் பைத்தியம் பிடித்தவனைப்போலானான். அது தன் தலைக்கே உலை வைத்தது போன்றதை எண்ணும்பொழுது அவனது மூளை வெடித்துவிடும் போல் தோன்றியது. சற்று நேரத்துக்குப் பின் அங்கு வந்த இன்ஸ்பெக்டர் அவனைக் கைது செய்யும்பொழுது அவன், "ஐயா! நான் குற்றவாளிதான்! எனக்குக் காக்ஷி இல்லை" என்று கூறிவிட்டுச் சிரித்தான்.

இதையே கேளுங்கள்.

லாக்ஸ் - ஓ - லாக்ஸ்

புகழ்பெற்ற மலவிரோசனி சாக்லட் போன்ற மணமுள்ளது. பழக்கமாக மாறுது.

ஏக போக டிஸ்டிரிபியூட்டர்கள் :

ROY & COMPANY,
Bombay 2.

எல்லோரும் போற்றும் வெகுமதி
பாத்கேட்ஸ் காஸ்டர் ஆயிலே

மேலான வெகுமதியாக எல்லோரும் ஏற்றுக்கொள்ளுவார்கள். இதுவே எமது வெகு நாளைய அனுபவம். மிகச் சிறந்த தயாரிப்பு என எல்லோரும் ஒப்புக்கொள்ளுகின்றனர்.

எல்லோரும் போற்றும் மேலான வெகுமதி

இந்தியா பூராவும் பாட்டில் அணு 14 விதம் விற்கப்படுகின்றது.

சென்னை, தென்னிந்தியாவிற்கு ஸோல் ஏஜண்டுகள்:

மெஸர்ஸ் ஓக்லி பௌடன் & கம்பெனி,
(மதராஸ்) லிமிடெட்.

15, அரமனைக்காரத் தெரு, மதராஸ்.

உங்களூர் வெள்ளித்திரைக்கு வரும் நன்னாளை எதிர்பாருங்கள்

ஸ்வர்ணலதா

உங்கள் அன்பிற்குரிய நக்ஷத்திரங்கள் Y. V. ராவ், L. நாராயணராவ், வித்வான் சீனுவாசன், M. R. துரைராஜ், ரங்கநாயகி, ஸ்வர்ணம்பாள், மீண்டும் உள்ளத்தை கொள்ளை கொள்ள வருகின்றனர்.

பாட்டு
யானை
வைத்தினாதய்யர்.

வசனம்
ஏ. ஏ.
சோமயாஜுலு.

விஜயம் செய்யுமிடங்கள் :

சுந்திரம் டாக்கீஸ்	... ...	சேலம்
கிருஷ்ணா டாக்கீஸ்	... ...	காரைக்குடி
லக்ஷ்மி டாக்கீஸ்	... ...	பெங்களூர்
வெல்லிங்டன் டாக்கீஸ்	... ...	திருச்சி
ராஜா டாக்கீஸ்	...	அருப்புக்கோட்டை

டைரக்ஷன்

Y. V. ராவ்

ஆர்செஸ்ட்ரா

ஹரிகேச நல்லூர் சகோதரர்கள்

ஒலி பதிவு
டீன்ஷா
தியானி

படப்பிடிப்பு
ஜிதன்பானர்ஜி

ஸ்டுடியோ
நியூடோன்

இதோ வந்துகொண்டிருக்கிறது.

தென்னாட்டின் நடிக திலகங்கள் ;
நவாப் டி. எஸ். ராஜமாணிக்கம்,
எம். ஆர். சந்தான லக்ஷ்மி
நடித்த

" இன்பசாகரன் "

(தமிழ் டாக்கி)

தென்னிந்தியாவின் முதல் ஹிந்தி படம் :

" ப்ரேம்சாகர் "

வடநாட்டு உயர்தர நடிகர்கள் :
ராம்பியாரி, இந்துபாலா, கோகிலா, பனர்ஜி, ஹஸன்தீன் பயில்வான் முதலியோர் நடிப்பது

கண்டுகளியுங்கள்.

—ஸ்டுடியோ எம் பி. டி. ஸி—

" இன்பசாகரன் ", " ப்ரேம்சாகர் " பாட்டுகளை ஹிஸ்மாஸ்டர்வாய்ஸ் ரிகார்டுகளில் கேட்டு ஆனந்தியுங்கள்.

விவரங்களுக்கு :

மகாலெக்ஷ்மி ஸ்டுடியோஸ் லிமிடெட்,

ராயப்பேட்டை, - - - சென்னை.

ஆசார்ய சங்கரர்

(டாக்டர் வே. ராகவன்)

இன்று மேனாடுகளில் பாரத நாட்டின் கல்வியின் பெருமை தெரிந்திருக்குமாயின் அதன் முக்ய காரணம் ஸ்ரீ சங்கராசார்யர் நிலை நிறுத்திய அத்வைதக் கொள்கை யெனக் கூறலாம். பல ஆசார்யர்களிருந்தும், ஸ்ரீ சங்கரருக்கு என்ன தனிப்பெருமை என்றால், இந்து மதமே பௌத்த ப்ரளயத்தினால் விழுங்கப்பட்டுப் போய்விடும் போலிருந்த ஸமயத்தில் அவர் தான் ஹிந்து மதத்தைக் காப்பாற்றினார். குமாரிலர், சங்கரர் உதயனர் முன்ற மீமாம்ஸக வேதாந்தி நையாயிக த்ருமூர்த்திகள், 'ஒன்றுமில்லை' என்ற சூன்யவாதியான பௌத்தனை இந்திய எல்லைக்கு அப்புறப்படுத்தினர். இவர்கள் செய்த தொண்டு இல்லையெனில், இன்று ராமநவமி, கிருஷ்ணா ஜயந்தி என்று நாம் கொண்டாடிக் கொண்டிருக்க முடியாது. ஹிந்து மதத்தையே உயிர்ப்பித்தச் சிறப்பினால் தான் "அத்வைதஸ்தாபனாசார்யர்" என்று மட்டுமில்லாமல் "ஷண்மதஸ்தாபனாசார்யர்" என்று சங்கரருக்குப் பட்டம் விளங்குகிறது.

வேறு எதற்காகவும் இல்லாவிட்டாலும் சங்கரருடைய நூல்களை படிப்பதற்காகவாவது ஸம்ஸ்க்ருதம் கற்க வேண்டும். அவர் இவ்வுலகில் இருந்த காலமோ மிகவும் ஸ்வல்பம்; அதற்குள் அவர் செய்த வேலைக்கோ அளவில்லை. நூல்கள் மட்டும் எழுதினால் பெரிய படிப்பாளிகள்தான் பயன் படுவார்கள். இந்த உண்மையைத் தெரிந்துகொண்டு இவர் நாடெங்கும் சுற்றி அங்கங்கே மடங்கள் ஏற்படுத்தினார்; பல இடங்களில் கோயில்களில் பிரதிஷ்டைகளும் செய்தார்.

நுட்பமான சாஸ்திர நூல்களாக இவர்செய்தவைவருமாறு. முக்யமான பத்து உபநிஷத்துகளுக்கு பாஷ்யம்; பாதராயண மஹரிஷியின் ப்ரம்ம ஸூத்ரங்களுக்கு பாஷ்யம்; பகவத் கீதைக்கு பாஷ்யம். வடமொழி வசன நடையில் சங்கருருடைய நடையை மிஞ்சிய அழகுடையது வேறெதுவுமில்லை; சங்கரருடைய நூலின்மேல் உரை எழுதிய வாசஸ்பதி மிச்ரர் என்பவர், சங்கரருடைய நடையை "ப்ரஸன்ன கம்பீரம்"—தெளிவும் ஆழமும் அமைந்தது என்று வர்ணிக்கிறார். ஆழ்ந்த கருத்து இருக்கும்; ஆங்கிலேய இலக்கண ஆசிரியர்கள் வசன நடைக்குச் சொல்லும் பெரிய குணம் "கணக்காய் எழுதுவது" (Precision) அதாவது சொல்ல வேண்டிய பொருளுக்குப் போதுமான சொல் என்பார்கள். குறைவுமில்லை; மிகுதியுமில்லை. இதிலிருந்து வேறு பொருள் தோன்றும் என்ற கலக்கமோ, நினைத்த பொருள் தோன்றுமென்ற ஐயமோ கிடையாது. பிற்காலத்தில் சாஸ்திர நூல்கள் எழுதியவர்களுடைய நடை வெறுஞ் சப்த ஜாலம்; அதுவும் தார்க்கிகர்கள் மேம்பட்டதும் வடமொழியின் வசன நடையே மாறிவிட்டது. "அச்சுப் பிள்ளையார்"போல ஒரே மாதிரியாய், சுவடு தாண்டாத, நடையாகப் போய்விட்டது. பிற்கால வாத நூல்களில் பிரதிபக்ஷிகளைக் கடுமையாகக் கண்டித்துப் பேசுவதென்பது வழக்கமாயிற்று. ஆனால் தேடித் தேடிப் பார்த்தாலும் சங்கரர் விரஸமாய் எதிரியைத் தூஷித்த இடத்தைக் காணோம். ஒரே ஒரு இடத்தில் மட்டும் தார்க்கிகளைக் கொம்பும் வாலுமில்லா மாடு என்று சொல்லியிருக்கிறார். முக்யமாய் அதிகப்ரஸங்கமே இல்லாத நடை சங்கரரது என்று சொல்லலாம். எளிதான இடங்களில் அவச்யமில்லாத உரை கிடையாது. நுட்பமாயும், விளக்கம் அவச்யமாயுமிருக்கும். தெளிவான உரை. உசிதமான உபமானங்கள் அங்கங்கே காணப்படும்.

மேற்சொன்ன உயர்ந்த சாஸ்திர நூல்களை மட்டுமே சங்கரர் எழுதிப் போயிருந்தால், உலகிற்கு அவர் இவ்வளவு தெரிந்தவராயிருக்கமாட்டார். கொள்கைகளில் மிகவும் நுட்பமானது அத்வைதக் கொள்கை. இருப்பதை இல்லை என்றும் புலப்படாத ஒன்றையே உண்மையென்றும் சொல்லுவது அவருடைய மதம். இவ்வளவு நுட்பமான மதம் ஸர்வ சாதாரணமாக ஆனதற்கு வேண்டிய ஏற்பாட்டையும் அவரே செய்தார். மிகவும் எளிய நடையில் தன் மத ஸம்பந்தமான சிறு நூல்களைச் சங்கரர் அருளிச் செய்தார். விவேக சூடாமணி உபதேச ஸாஹஸ்ரீ அபரோக்ஷானுபூதி, ஸ்வாத்மா நிரூபணம், ஆத்ம போதம் சதுச்லோகி, தசச்லோகி, ஸர்வ வேதாந்த ஸித்தாந்த ஸார ஸங்கிரஹம், ஸ்வாத்மப்ரகாசிகா, மனீஷா பஞ்சகம், அத்வைத பஞ்ச ரத்னம் நிர்வாண ஷட்கம், அத்வைதானுபூதி ப்ரம்மானு சிந்தனம், ப்ரச்னோத்தர ரத்ன மாளிகை, ஸதாசாரானு ஸந்தானம், யோக தாராவளீ, உபதேச பஞ்சகம், தன் யாஷ்டகம், ஜீவன் முக்தாநந்த லஹரீ, அனாத்ம ஸ்ரீ விகர்ஹணம், ஸ்வரூபானு ஸந்தானம், யதி பஞ்சகம், தத்வோபதேசம், ஏகச்லோகி, மாயா பஞ்சகம், ப்ரௌடானுபூதி, ப்ரம்மஞானாவளீமாலை, நிர்வாண மஞ்சரீ முதலிய சிறு ப்ரகரணங்களை ஸாதாரண ஜனங்கள்கூடப் படித்துத் தெரிந்துகொள்ளும்படி எழுதியிருக்கிறார். இவையன்றி அவரால் பாடப்பட்ட ஸ்தோத்திரங்களுக்கு அளவேயில்லை. எல்லாத் தைவங்கள் பற்றியும் பாடியிருக்கிறார். இப்பிரகரண நூல்களிலும் ஸ்தோத்திரங்களிலும் சங்கரரின் கவிதை நன்கு விளங்குகிறது. அவருடைய பெரிய சாஸ்திர நூல்களில் அங்கங்கே பரப்ரம்மத்தை வர்ணிக்குமிடங்களில் சொற்பொழிவும், உயர்ந்த காவ்ய நடையும் காணப்படுகின்றன. ஆனாலும் இந்தச் சிறு நூல்களிலேயே அவர் கவிதையின் அழகு நன்கு அனுபவிக்கப் படும்படி விளங்குகிறது.

"மருந்து, மருந்து" என்று ஒரு ஔஷதத்தின் பெயரை மட்டும் பிதற்றிக்கொண்டு இருந்தால் நோய் தீராது; அதுமாதிரி ப்ரம்மம், ப்ரம்மம் என்னும் பெரும் பேச்சோடும், படிப்போடும் இருந்தால் ப்ரம்மானுபவம் ஏற்படாது." "தானே தனக்கு உதவி," "காதிற்கு இனிய சப்தத்தால் மான் மடிந்தது; நாவிற்குள்ள ருசியினால் மீன் தூண்டியில் மாட்டிக்கொண்டது; கண்ணிற்கு மோஹமாயுள்ள விளக்கில் பூச்சி விழுந்தது; இப்படி ஒவ்வொரு ஜந்துவும் ஒரு இந்திரியத்தால் மடிகிறது; மனிதனோ ஐந்து புலன்களிலும் மோஹித்துக் கிடக்கிறான்; எவ்விதம் பிழைப்பான்?" விஷயம் என்ற சொல் விஷம் என்ற சொல்லைவிட ஒரு மாத்திரை அதிகக் கடுமையானது; விஷத்தைக் குடித்தால்தான் மரணம்; விஷயத்தையோ நினைத்தால் கூட மரணம்" இவை விவேக சூடாமணியின் ஆரம்பத்தில் உள்ள சில பாவங்கள். உபதேச ஸாஹஸ்ரீ என்ற நூலில் வசனமாயும் செய்யுளாயும் நுட்பமான வேதாந்தக் கொள்கைகளை வெகு எளிய நடையில் குரு சிஷ்ய ஸம்வாதரூபமாகச் சொல்லிக் கொடுக்கிறார் "புத்தி செல்லுகிறது; நினைக்கிறது; ஆனால் நாம் ஆத்மா சலிப்பதாயும், நினைப்பதாயும் எண்ணுகிறோம். இது ஒரு கப்பலில் போகிறவனுக்குக் கரையிலுள்ள மரங்கள் நகருவது போலவும் அம்மரங்கள் எதிர்த் திசையில் நகருவது போலவும் தோன்றுகிறது போல்" என்று உபதேச ஸாஹஸ்ரியில் ஓரிடத்தில் சொல்லுகிறார். "கோட்டானுக்குப் பகலில் ஸூர்யன் ஜ்வலித்துக் கொண்டிருக்கும் போதே இருள் என்று தோன்றுவதுபோல, மூடனுக்கும் ஆத்மாவின் ஜ்யோதிஸ் ப்ரகாசித்துக் கொண்டிருக்கும் போதே அக்ஞான இருள் ஒன்றே அனுபவிக்கப்படுகிறது"—ஸ்வாத்ம ப்ரகாசிகை. ப்ரச்னோத்தர ரத்னமாலிகையில் பல கேள்விகளுக்கு ரஸமான பதில்களை அளிக்கிறார்;

ரஸமான கேள்வி பதில்

"மடியாயிருப்பவன் யார்? ஸ்நானம் செய்தவனல்ல; மனம் சுத்தமாகவுடையவன்" "மிகவும்விரும்பத்தக்கது எது? பரோபகாரத்திற்கென்றே எடுத்த பிறப்பே." "சத்ரு யார்? சோம்பல்" "பயங்களில் பெரிய பயம் எது? மரணம்." "முழுப் பொட்டை யார்? காமுகன்." வீரன் யார்? சிற்றின்பங்களினால் ஜயிக்கப்படாதவன்." பெருமைக்கு மூல காரணம் எது? ஒருவரையும் ஒன்று வேண்டுமென்று ஒருநாளும் கேளாதிருத்தல்." "துன்பம் எது? த்ருப்தியில்லாமை," "சந்திரன் பூமியில் உண்டா? உண்டு; நல்லவனே சந்திரன்" நரகம் பூமியில் உண்டா? உண்டு; பிறனுக்கு அடிமையாயிருப்பதே நரகம்" "உண்மை என்றால் என்ன? எல்லா ஜீவராசிகளுக்கும் நன்மை செய்வதே உண்மை." "சாவு என்றால் என்ன? முட்டாளாகவிருப்பதே சாவு." "விலையில்லாக் கொடை எது? ஸமயத்தில் கொடுக்கப்பட்டது சிறிதாயினும் விலையில்லாக் கொடையே." "வாழ்நாள் முழுதும் மனோ வேதனையாயிருப்பது எது? மறைவில் செய்த பாவம்." "உலகை வென்றவன் யார்? உண்மையும் பொறுமையும் படைத்தவன்." "ஜனங்கள் யாருக்கு வசமாகிறார்கள்? உண்மையாயும் இனிமையாயும் பேசி, அடக்கமாய் நடந்துகொள்பவனுக்கு" "ஊமை யார்? சொல்லவேண்டிய ஸமயத்தில் ஒரு இனிய வார்த்தையைச் சொல்லாதவன்." கொடையில் பெரிய கொடை எது? ஒன்றும் ஒருவனிடமிருந்தும் எதிர்பாராமலிருப்பது" "உடம்புக்கு உயர்ந்த ஆபரணம் நன் நடத்தை" "உலகில் நான்கு நல்ல விஷயங்கள் மிகவும் அரிதாகக் காணப்படுகின்றன — இனிய வார்த்தையோடு கொடுக்கப்படும் தானம்; கர்வமில்லா ஞானம்; பொறுமையோடு கூடிய சௌர்யம்; கொடையோடுகூடிய செல்வம்" "தீர்த்தங்களில் உயர்ந்த தீர்த்தம், மனத்தின் அழுக்கைப் போக்குவதே" "ஆயுதங்களில் மிகவும் கூர்மையான ஆயுதம் மனிதனின் யுக்தியே; பசுவே தாய், தைர்யமே ஸைன்யம்; அஜாக்ரதையே மரணம்" "கடன் என்பதுதான் தீட்டு; பற்றற்றிருப்பதே பயமில்லாமை, பணமே பயம்" "தானும் பயமின்றி, பிறருக்கும் யாதொரு விதத்திலும் பயத்தைக் கொடுக்காதவனே கடவுளுக்கு வேண்டியவன்" "நல்லவன் யார்? த்ருப்தி யடைகிறவன்" "அத்ருஷ்டமென்றால் என்ன? நாம் செய்த நல்ல கார்யம்" "மிகவும் வேண்டிய நண்பர் யார்? மனைவி" "அத்ருஷ்டங்களில் மேலானது எது? [illegible]"

"கோபமில்லாதவனுக்கு சோகமே இல்லை" "நாய் என்றால் என்ன? நீசனை அண்டிப் பிழைக்கும் ஜந்து" "கண்ணுக்கு முன் நித்யமிருக்கும் கடவுள் யார்? தாயார்"

"அனாத்ம ஸ்ரீ விகர்ஹணம்" என்ற 18 செய்யுள்களடங்கிய ப்ரகரணத்தில் மனிதன் இவ்வுலகில் என்ன ஆச்சர்யகரமான லீலைகளை நடத்தியும் அநுபவித்தும் இருந்தாலும், ஆத்ம தத்வத்தைத் தெரியாதிருந்தால் என்ன பயன் என்று பாடியிருக்கிறார். 'ஜீவன் முக்தானந்த லஹரீ' என்று 17 செய்யுள்களில் ப்ரம்ம ஞானம் வந்தவன் ஸஞ்சரிக்கும் வழியைப் பாடியிருப்பதைப் பார்த்தால், அக்ஞானிகளான நமக்கும் ஞானியின் ஸ்வரூபம் ஒருவாறு புலப்பட்டு, மனது ஒரு வித மேன்மையை அடைகிறது. இதேமாதிரியாகவே 'நிர்வாண மஞ்ஜரீ' 'யதி பஞ்சகம்' 'பிரம்ம ஞானவளீமாலா' முதலியன. 'ஏக ச்லோகி' அதாவது' 'ஒத்தச் செய்யுள்" என்று நாலு வரியில் அவரது அத்வைதத்தை அடக்கிக்காட்டுகிறார்: "ஏய்! உனக்கு எது வெளிச்சம் கொடுக்கிறது? பகலில் சூர்யன், இரவில் விளக்கு; சூர்யனையும் விளக்கையும் உனக்கு விளக்குவது எது? என் கண்கள், கண்ணை மூடிக் கொண்டபோதும் உனக்கு விஷயங்கள் விளங்குகின்றனவே, அது எதனால், புத்தியினால்; புத்தியெனக்கிருக்கிறதென்று உனக்கே விளக்கிக் காட்டுவது எது? "நான்" புத்திக்குப் பின் ஒரு விளக்கு இருக்கிறது. அது தான் ஆத்மா, ப்ரம்மம்."

ஸ்தோத்திரங்கள்

வேதாந்த தத்வங்களை எளிய நடையில் சங்கரர் வெளியிடுவதற்காக எழுதிய மேற் சொன்ன நூல்களைக் கூடப் பலர் படித்திராவிட்டாலும், சங்கரர் பாடிய கணக்கில்லா ஸ்தோத்திரங்களில் சிலவற்றையாவது சொல்லிக் கொண்டிராதவர் இருக்கமாட்டார். ஆசாரியர் அத்வைதியானதால் மூர்த்தி பேதமோ, மூர்த்தித்வேஷமோ இல்லாமல் எல்லாத் தைவங்கள் பேரிலும் பாடியிருக்கிறார். சிவன்மேல் அரிய துதிகளை எழுதிய சங்கரரே, விஷ்ணு ஸஹஸ்ர நாமத்திற்கு ப்ரஸித்தி பெற்ற பாஷ்யத்தை எழுதினார். சக்தி உபாஸகர்களுக்குச் சிறந்த நூலாக விளங்குகிறது சங்கரர் அம்பாள் மேல் பாடிய ஸௌந்தர்ய லஹரீ. ஸுப்ரமண்யத்தின் மேல் அவர் இயற்றிய புஜங்க ஸ்தோத்திரத்தையும், சிவன்மேல் செய்த சிவானந்த லகரியையும் பெண்களும் பிள்ளைகளும் மனப்பாடம் செய்திருக்கின்றனர். அவர் லக்ஷ்மீ மேல் பாடிய [illegible] மழைந் துதி"—என்றதைத் தினம் படித்து வந்தால் ஸகல ஐச்வர்யங்களும் வரும் என்கிறார்கள். அவரது லக்ஷ்மீ நிருஸிம்ஹ ஸ்துதியைக் கஷ்டகாலங்களில் சொல்லி வந்தால் துன்பங்கள் விலகும் என்று விதிக்கின்றனர். அவரது துதிகளிலுள்ள உயர்ந்த பாவங்களில் சிலவற்றை இங்கு எடுத்துக் காண்பிக்கலாம்.

"ஆழமான ஏரிகளில் நீஞ்சி, மலைகளையும் காடுகளையும் கடந்து மலர்களைப் பூஜைக்குத் தேடுகிறானே மனிதன்? மதியிருந்தால் மனம் என்னும் ஒரு பூவை இருந்த இடத்திலிருந்து கடவுளுக்கு அர்ப்பணம் செய்துவிட்டு சுகமாய் இருக்கமாட்டானா?" என்கிறார் சிவானந்த லஹரியில். "நான் செய்யும் காரியங்கள் எல்லாம், தேவி, உனக்கு அந்தந்த விதமான பூஜையாய் ஆகவேண்டும்" என்று ஸௌந்தர்ய லஹரியின் 27-வது ச்லோகத்தின் பாவம். :'கங்கையில் கலந்த தெருத் தண்ணீரைப்போல், உன்னிடம் கலந்த என் மனம் எப்படி பரிசுத்தமடையாமற் போகும்?" என்று ஒரு துதியில் கேட்கிறார். "இதே கொடுக்கவேண்டிய தருணம்; நானே நல்ல பாத்ரம்; நீ யஜமான், கொடுக்கவேண்டியவன், கொடையாளி; எனக்கு வேண்டியதும் உன்னிடம் பக்தியே; இதைக் கொடுத்தால் நான் க்ருதார்த்தனாகிவிடுவேன்" என்று சிவ புஜங்கத்தில் சிவனை வேண்டுகிறார். "உன் காலின் தூசியினால் கல்லும் கன்னியானால், உன்னடியில் விழுந்த நான்மட்டும் உயர்ந்த சைதன்யமுள்ளவனாக ஏன் ஆகமாட்டேன்?" என்று ராமனை ஒரு புஜங்க ஸ்தோத்திரத்தில் கேட்கிறார். "எப்பொழுதோ அம்மா, என் புலங்கள் அமைதியடையும்? எப்பொழுது நான் ஒருவருக்கும் சத்ருவுமல்ல, மித்ரனுமல்ல என்ற நடுநிலையை அடைவேன்? எப்பொழுது கெட்ட ஆசை என்னும் பிணி என்னை விடும்?"—தேவி புஜங்கம். "அம்மா, நான் உன் குழந்தை; உன்னை வழிபடுவதற்கு எனக்கு மந்திரம், தந்திரம், துதி, தியானம், யோகம் முதலியன தெரியாது. அழுதுகொண்டே உன் காலைச் சுத்திக்கொண்டிருக்கத்தான் தெரியும்." "அம்மா, பிள்ளைகளில் கெட்ட பிள்ளைகள் உண்டு; தாய்களில் கெட்ட தாயே கிடையாதே?" "ஆபத்தில் விழுந்தபோது தான் உன்னை நான் நினைக்கிறேன் என்று என்னிடம் தோஷத்தைக் கண்டுபிடிக்கக் கூடாது. பசித்தபோதுதானே குழந்தை தாயிடம் வருகிறது?" இப்படி தேவியின் மேலுள்ள ஒரு துதியின் பாவங்கள் காணப்படுகின்றன. "என்னுடைய தடித்தனத்தை நீக்கு; என் மனதை அடக்கு, சிற்றின்ப ஆசையை ஒழி; ஜீவன்களிடத்தில்காருண்யத்தைப்பெருக்கு" என்று விஷ்ணுவை ஓரிடத்தில் வேண்டுகிறார். இத்துதிகளில் "பஜகோவிந்தம்" என்று பலருக்கும் தெரிந்த துதியிலுள்ள செய்யுள்கள் எல்லாம் மிகவும் அழகானவை. அதில் பொறுக்குவது அஸாத்யம். அது மாதிரியே நிர்குண மானஸபூஜை என்பதும் அதில் ஆத்ம பூஜையைப்பற்றிச் சொல்லியிருக்கும் எல்லாப் பாவங்களும் மிக உயர்ந்தவை.

* * * *

உலகச் சாரணர்கள்.

உலகிலுள்ள மொத்த சாரணர் 1500000 பேர்களில் மூன்றிலொரு பாகத்தினர் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள்.

தென்னிந்தியாவிற்கு சோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:—
டி. டி. கிருஷ்ணமாச்சாரி, 11-14, அரமனைக்காரத்தெரு, மதராஸ்.
811.

கம்பன் கடல் சித்திரம்

—[*]—

ஸ்ரீமான் எஸ். வி. வரதராஜ அய்யங்கார்,
(சென்னை வெஸ்லி கலாசாலை தமிழ் பண்டிதர்)

இராம பிரான் தூக்கம் இன்றித் தன்னந்தனியே அக்கடற்கரையில் தென் திசை நோக்கி வீற்றிருந்தான்.

கம்பனைக் கவியாக அடையத் தமிழ் செய்த தவம் பெரிது. காவிய பாத்திரங்களின் சிறந்த மனோபாவங்களை உள்ளவாறு வெளிப்படுத்தி, அதன்மூலமாக மக்களுக்கு நல்லறிவு ஊட்டி, அவர்கள் வாழ்க்கையை மாசுபடியாமல் செம்மைப்படுத்த வேண்டும் என்பதே அக்கவிதிலகருடைய நோக்கம். அதற்கு இராமாயணமகாகாவியம் ஏற்றதோர் கருவியாக அவருக்கு அமைந்தது. கற்போர் உள்ளத்தைக் கதையின் போக்கிலே லயப்படுத்தித் தமது கருத்து நிறைந்த வாக்கால் இளகச்செய்து, இன்புறுத்தும் சக்தியைக் கம்பர் பெரிதும் உடையவர். அவருடைய காவியத்தால் தமிழ்மொழியின் இலக்கியவளம் ஒருபடி உயர்ந்தது என்றே சொல்லலாம்.

திருமால் சிவபெருமானுக்கு வாகனமானார் என்றோ, திருமாலின் திருவடியிலிருந்த கங்கையைச் சிவபெருமான் சிரமேற் சூடினார் என்றோ கவிபாடிப் பரவசமாகும் மதவாதியல்ல கம்பர். யமகம் முதலான பத ஜாலங்கள் செய்து புகழ் பெற வேண்டும் என்று முனைந்து, அதற்காக மூச்சுப் பிடித்துக்கொண்டு பதங்களின் கை கால்களை ஒடித்து மண்டையை உடைத்துக்கொள்ளும் கவிஞரும் அல்ல கம்பர். கவிகளிற் சிலர் எதுகை மோனைப் பொருத்தங்களுக்காகப் பதங்களைத் தேடி நிகண்டுகளைப் புரட்டிக் கடின பதங்களைக் கோத்துக் கவி பாடுவதுண்டு. ஆனால், கம்பர் விஷயத்தில் எதுகைக்கும் மோனைக்கும் ஏற்ற பதங்கள் அவர் முன் வந்து கை கட்டி வாய் புதைத்து நின்று, "எமக்கு உமது மகா காவியத்தில் ஓர் இடந்தர வேண்டும்" என்று கேட்பதாகவே தோன்றுகின்றது.

திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த 'நாவல்' என்னும் புனைக் கதைகள் எத்தனையோ நாம் வாசிக்கின்றோம். கடைசி வரையில் படித்தால்தான் அவற்றின் கதைக் கூறு நமக்கு விளங்கும். அவைகளை யாராவது திரும்பத் திரும்ப வாசிப்பதுண்டா? ஒருதரம் தான்; கதை விளங்காவிட்டால் இரண்டாம்தரம்; அதற்குமேல் இல்லை. கொஞ்ச நாள் சென்றால் புத்தகமும் கதையும் 'பழசு' ஆகிவிடும். ஆனால் இராமாயணக் கதை எல்லாருக்கும் தெரிந்தது தானே. கம்பரும் அதைப் பாடிக் கிட்டத்தட்ட ஓராயிரம் வருஷம் ஆகிறதே. அது ஏன் இன்னும் 'பழசு' ஆகவில்லை. படிக்கப் படிக்க அதில் உருசி அதிகரிக்கக் காரணம் என்ன? அது இன்னதுதான் என்று திட்டமாகச் சொல்ல எனக்குச் சக்தியில்லை. ஏதோ இயன்ற வரையில் முயன்று பார்க்கிறேன்.

கம்பர் உள்ளம் கடல்போல விசாலமானது; ஆழமும் பரப்பும் உடையது. அவருடைய நோக்கமோ மிக உத்தமமானது. கற்பனைக்கு அவர் ஒரு களஞ்சியம் ஆவார். இவ்வளவுக்கும் பாத்திரமாக ஒரு கதையும் அவருக்கு வாய்த்தது. கேட்கவா வேண்டும்! எல்லாம் ஒத்திருப்பதில் தானே இன்பம்! அது தானே ஆனந்தம்! கம்பனுடைய காவியம் சிறந்து நிற்பது இவற்றால்தான்.

கம்பரது இராமாயணம் முழுவதுமே சொல்லினாலாகிய சித்திரங்கள். ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒவ்வோர் அழகிய வர்ணப் படம்! பாடல்களைப் படித்துக்கொண்டு போகும் போதே அந்த வர்ணப்படங்கள் கண்முன் தோன்றிக் காட்சியளிக்கும். ஒவ்வொரு காட்சிக்கும் வெவ்வேறு விதமான அழகு. அழகே உருக்கொண்ட அவ்விதக் காட்சியளிக்கும் சித்திரங்களில் இக்கடல் சித்திரம் ஒன்று.

சீதாபிராட்டியை மீட்க, எழுபது வெள்ளம் வானர சேனையுடன் இராமபிரான் தென் கடலின் கரையில் வந்து தங்கினான். இராப்பொழுதும் வந்துற்றது. அலைகளின்மீது நிலவொளி பட, அவை மின்னியெழுந்து ஆரவாரித்துக் கரை நோக்கி வருகின்றன. சேனைக்கடலோ அந் நீர்க்கடலின் கரையிலே பரந்து அயர்ந்து துயில்கின்றது. இராமபிரான் தூக்கம் இன்றித் தன்னந்தனியே அக்கடற்கரையில் ஓர் இடத்திலே தென் திசை நோக்கி வீற்றிருந்தான். பிராட்டியின் பிரிவால் ஏற்பட்ட விரகமும், இவ்வளவு பெரிய சேனையை எவ்வாறு கடல் கடத்தி இலங்கைக்குச் சென்று இராக்கதரை வென்று, சீதையைச் சிறை மீட்பது என்ற சிந்தனையுமே அப் பெருமான் கண் வளராமைக்குக் காரணங்களாயின. இவ்வாறு 'கங்குல் பொழுதும் துயிலாத கண்ணன் கடலைக் கண்ணுற்றான்.'

இங்குக் கம்பர் மனத்தில் உதித்த காட்சி அவரைப் பரவசப்படுத்தி அக்கடல் போலவே பொங்கி எழுகின்றது. அச் சமயம் அவர் மனக் கடலினின்றும் எழுந்த கவி அலைகளில் ஒன்று இது:

"சேய காலம் பிரிந்து
அகலத்
திரிந்தான் மீண்டும்
சேக்கையின் பால்
மாயன் வந்தான்;
இனி வளர்வான்
என்று கருதி
வரும் தென்றல்
தூய மலர்போல்
நுரைத தொகையும்
முத்தும் சிந்திப்
புடை சுருட்டிப்
பாயல் உதறிப்
படுப்பதே
ஒத்த திரையின்
பரப்பம்மா!

[சேய—நீண்ட சேக்கை—படுக்கை]

இராமபிரான் வருகையைக் கண்ட கடல் "பெருமான் நம்மைப் பிரிந்து நீண்டகாலம் ஆயிற்று. வெகுதூரம் அலைந்து திரிந்து அலுத்து வந்துற்றான். பள்ளிகொள்வதில் விருப்பங் கொண்டு எழுந்தருளியுள்ளான். ஆதலின், இனி இங்கே கண் வளர்வான்" என்று எண்ணிற்றும். உடனே அது, வீசுகின்ற தென்றல் காற்றினால் அலைகளாலாகிய படுக்கையை உட்புறத்துச் சுருட்டிப் பின்பு உதறிவிட்டதாம். பாயை உதறினால், அதில் ஏற்கெனவே சிந்தியுள்ள மலர்களும், ஆபரணங்களிலிருந்து உதிர்ந்த முத்தும் கீழே சிதறி விழுமல்லவா? அவைபோல அலைகளினின்று நுரையாகிய மலரும் கடல் முத்தும் சிந்தினவாம். கடலின் அலைகள் நிலவொளியில் காற்றினால்எழுந்து, புறண்டு, நுரை சிதறி, ஒன்றன்பின் ஒன்றாக, அடுக்கடுக்காகக் கரையை நோக்கி வந்து அடங்கியது, கம்பர் மனோபாவத்தில் இவ்விதம் உருக்கொள்ள, அவர் அமைத்த சித்திரம் மிகவும் ஆச்சரியமானது அல்லவா? கடல் திருமகளை

அது ஒரு பலமான கோட்டை

65,000 எண்ணிக்கைக்கு அதிகமாகவேயுள்ள தனது பாலிஸி ஹோல்டர்களுக்கு இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாகவே புரிந்துவந்திருக்கும் உண்மையான சேவை என்னும் அசையாத கற்கோட்டையில் தன் கீர்த்தியை நாட்டியிருக்கும் "நாஷனல்" உறுதியில் நிகரற்றது.

பாலிஸிதாரர்களுக்குத் தாராளமாகச் சலுகை காட்டுவதிலும், உரிமைகளை உடனுக்குடனே தீர்த்துவைப்பதிலும் இது மிகப் பிரசித்திப்பெற்ற ஸ்தாபனம். வியாபார மந்தம் போன்ற பல ஆபத்துக் காலங்களைத் தவிர்த்துக் கொள்ளுவதற்கு இதனுடைய பாலிஸி உண்மையிலேயே மூலதனம்.

நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

(தலைமை ஆபீஸ்—கல்கத்தா)

நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்,
எஸ்பிளனேட், மதராஸ்.



ஈன்று திருமாலுக்கு அளித்த மாமன் முறை கொண்டதால், தன் மருமகனுக்கு அவ்வித உபசாரம் செய்வதற்கு ஏற்ற பாத்திரமும் ஆயிற்று.

எவ்வித இன்பக் காட்சியும் தன்னளவில் இன்பமுடையதாயினும், பிரிவுற்ற தலைமகனுக்கோ தலைமகளுக்கோ துன்பத்தையே பெருக்கும் என்பது பிரசித்தம். அது இராமபிரான் விஷயத்தில் மட்டும் எப்படிப் பொய்யாகும்? இராமபிரான் மன நிலையைக் கம்பர் அச் சித்திரத்தில் தீட்டிக் காட்டுகின்றார். மன்மதன் மலரம்புகளுக்கு இராமபிரான் இலக்காகி வருந்தும் நிலையில், அவ் வருத்தத்திற்குக் காரணமாகித் தானும் வருந்தும் சீதை எவ்வாறு துயரப்படுகின்றனளோ என்ற எண்ணம் சிறிது நேரத்தில் ஒரு தோற்றத்தை அவனுக்கு அளித்தது. "இக்கடல் அவ்வளவு இருக்கும் அவள் பெருக்கும் கண்ணீர். அக் கண்ணீர்ப்பெருக்கின் நடுவிலே வாடி வருந்துகிறாள் அந்த வஞ்சிக்கொடி போன்ற வனிதை. அவள் படும் துயரத்தின் காரணமாக நமக்கு நேர்ந்துள்ள பழியை எப்படிப் போக்கிக் கொள்ளப் போகின்றோம்" என்றெல்லாம் எண்ணினான் இராமபிரான். அச் சித்திரத்தில் இராமபிரானுடைய வதனத்தில் இவ்வளவு எண்ணங்களின் குறிகளையும் கம்பர் தீட்டிக் காட்டுகின்றார்.

இங்ஙனம் சிந்தாக் கிராந்தனாக வீற்றிருக்கும் இராமபிரான் அழகிய தோள்களிலே அலைகளிலிருந்து தென்றல் காற்றால் சிதறப்படும் நீர்த் துளிகள் தெறித்தன. துருத்தி கொண்டு ஊதும்போது கொல்லன் உலையிலிருந்து நெருப்புப் பொறிகள் பறப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? அவை மேலே பட்டால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தனவாம் அந்த நீர்த்துளிகள் பிரிவினால் மெலிந்த பெருமானுக்கு! 'நீர்த் திவலைகள் தோளில்பட்டுச் சுட்டன' என்பதற்கு வீரத்தைத் துயரம் வென்றது என்று கருத்து.

இம் மட்டோடு கம்பர் உணர்ச்சி அடங்கவில்லை. மிக அழகான கற்பனைகள் அவர் மனத்தில் ததும்பி யெழுகின்றன. அவை யாவும் நமக்கு இன்பம் தருவனவே. அவற்றை இனிக் கவனிப்போம்.

அழகிற்கு இருப்பிடமும் கற்புக்கு அணிகலனுமாகிய பெண் ஒருத்தியை ஒருவன் அருமையாகப் பெற்று, அன்பாக வளர்த்து, அவளுக்கு ஏற்ற ஒரு கணவனைத் தேடி விவாகம் செய்து கொடுத்தான். அவளை மணந்தவன் அவளோடு அன்யோன்யமாக வாழும் நாளில், அவளைப் பறி கொடுத்து, மாமனார் இல்லத்திற்கு வந்தான். என்ன நிகழும் என்பதை யோசித்துப் பார்ப்போம். மருமகனைக் கண்டதும், பெண்ணையும் அவனுடன் காணாது, பறி கொள்ளப்பட்டதையும் அறிந்து ஒவென்று மாமன் அலறுகின்றான். பறி கொடுத்தவன் என்ன செய்வான் பாவம்! அவன் உடம்போ நாளுக்கு நாள் மெலிந்து வாடித் தளர்ந்து விட்டது. மாமன் அலறி யழுவது கண்டு, அவனுள்ளத்தில் சிறிது ஆறியடங்கிக் கிடக்கும் துக்கம் மீறி எழுந்து வருகின்றது. பெண்ணை இழந்தது குறித்துத் தந்தை அடையும் துக்கத்தினும், காதலியைப் பறி கொடுத்ததால் காதலன் அடையும் துயரம் பெரிதல்லவா? மருமகன் உடல் மெலிவையும், மனத் தளர்ச்சியையும், முகவாட்டத்தையும் கண்ட பின்னரும், அவனைத் தேற்ற முன்வராமல், தான் தனியே கதறி, அவன் துயரத்தைப் பெருக்குவது முறையாகுமா? அது போகட்டும். மாமன் இங்ஙனம் கதற, குழந்தைப் பருவமுள்ள மைத்துனன் தவழ்ந்து வந்து, வாசனைப் பொடியை எடுத்து மேலே பூசினால், அது பிரிவினால் வருந்தும் மருமகனுக்குப் பின்னும் துயரத்தைப் பெருக்கும் அன்றோ? எனவே, மாமனும் மைத்துனனும் மருமகனுடைய துயரத்தைப் பெருக்கினரே யன்றி, ஆற்றினாரில்லை. இவ்வளவு கருத்துக்களும் நன்கமைந்து பின்வரும் பாடல் திகழ்கின்றது.

"நென்னல் கண்ட
திருமேனி
இன்று பிறிதாய்
நிலைதளர்வான்
தன்னைக் கண்டும்
இரங்காது
தனியே கதறும்
தடங்கடல்வாய்
பின்னல் திரைமேல்
தவழ்கின்ற
பிள்ளைத் தென்றல்
கள்ளுயிர்க்கும்
புன்னைக் குறும்பூ
நறுஞ்சுண்ணம்
பூசாது ஒருகால்
போகாதே"

"நேற்று பார்த்த உடம்பு இன்று (அடுத்த நாள்) இது வேறொரு உடம்பு என்று சொல்லும்படி மிகவும் இளைத்துப்போய், உடம்பின் நிலை தளரப் பெற்றவனான இராமபிரானைக் கண்டும், இரக்கம் கொள்ளாமல், தான் தனியே நின்று பேரொலி செய்து வருத்தத்தை மிகுவிக்கின்ற கடலில், ஒன்றோடொன்று பிணைந்தவண்ணம் உண்டாகின்ற அலைகளின்மீது ஊர்ந்துவருகின்ற மெல்லிய தென்றலானது தேனை உமிழ்கின்ற புன்னை மலர்களின் நறுமணமுள்ள மகரந்தப் பொடியை மேலே ஒரு தரமாவது பூசாமற் போகாது" என்பது இதன் பொருள். [நென்னல்-நேற்று. பிறிது-வேறு.] இங்கே கடல் மாமனாயிற்று. இராமபிரான் மருமகன் ஆகின்றான். இளந் தென்றல் மைத்துனன் ஆகும். கடலொலி புலம்பலாயிற்று. இங்ஙனம் ஒரு பாவத்தை வெளியிடுகின்றார் கம்பர்.

மாமன் ஒரு விவேகியே. எனினும் துக்கம் அவன் விவேகத்தைச் சற்று மறைத்தது. தனியே அலறி யழுது ஓய்ந்ததும், அந்த விவேகம் மீண்டும் முன்வந்தது. "பாவம்! நாமும் புலம்பி யலறி, அவன் துக்கத்தைப் பெருக்குவதால் என்ன பயன்? இனி, அவளை மீட்பதற்கு உரிய வழியை நாடும்படி. மருமகனை வேண்டி, அவனுக்கு நாமும் 'துணைபுரிவது தான் செய்யத் தக்கது" என்று எண்ணினான் மாமன்; மருமகனை நோக்கி "சந்திரன் போன்ற நெற்றியையுடைய சீதை, நீங்காத துன்பத்திற்கு ஆளானாள். மகா பாவியாகிய யான் பெற்ற பெண்ணும் கற்புடையவளுமாகிய அவள் எதிராளியிடம் தனியே இருத்தல் தகுமோ? அவளை மீட்பதற்கு வழி தேடுக" என்று புருஷோத்தமனை மருமகனைப் பிரார்த்திக்கின்றான். இக் கருத்தைச் சமுத்திரத்தின் அலைகள் இராமபிரான் பாதங்களில் வந்து மடங்கிவிழுந்து முத்துக்களைச் சிதறி ஒலிப்பதில் அமைக்கிறார் நம் கவிதிலகர். இது பிறிதொரு பாவம். இதனை வெளியிடும் பாடல் வருமாறு:

"இந்து வன்ன
நுதற்பேதை
இருந்தாள் நீங்கா
இடர்க்கொடியேன்
தந்த பாவை
தவப்பாவை
தனிமை தகவே?
எனத் தளர்ந்து
சிந்து கின்ற
நறுந்தாளக்
கண்ணீர் ததும்பித்
திரைத்து எழுந்து
வந்து வள்ளல்
மலர்த்தாளில்
வீழ்வது ஏய்க்கும்
அணியாழி."

[இந்து-சந்திரன். நுதல்-நெற்றி. பேதை-பெண்; சீதை. தாளம்-முத்து. தவம்-கற்பு.]

வைதேகியின் பிரிவைக் குறித்து வருந்துவோர் பல்லோர். ஆயினும் நாயகன் படும் துன்பம் யாவற்றினும் அதிகமானது அல்லவா? ஆதலால் இராமபிரான் மனத்தில் எழும் தோற்றங்களைக் கம்பர் பின்வருமாறு சிறப்பாக எடுத்துரைக்கின்றார்.

சென்னையிலே
சிறந்த சுதேசி ஜவுளி மாளிகை

★

சகலவிதமான சுத்த சுதேசி பட்டு, நூல் ஜவுளி ரகங்களும் இதர சுதேசி சாமான்களும் அடங்கிய மிகப் பெரிய ஸ்டோர். நம்பிக்கையும் நாணயமும் பொருந்திய இடம்.

★

ஜெனரல் சுதேசிஸ் லிமிடெட்,
ஹைகோர்ட்டுக்கு எதிர், சென்னை.

அக் கரையில் அசோக வனத்தில் இருக்கின்றாள் ஆருயிர். இக் கரையில் இருந்து ஏங்குகின்றது இராமபிரான் உள்ளம். இடையில் கடல் நிற்கின்றது. எட்டிப் பிடித்துவிடலாம் சீதை இருக்கும் இடத்தை என்பது எம் அண்ணலின் எண்ணம். இந்த எண்ணத்தின் பெருக்கினால் எழுந்து நிற்கிறது சீதையின் திருவுருவம். மனத்திற்குத் தோன்றும் அந்த உருவெளியைக் காணக்காண விரகதாபம் அதிகரிக்கின்றது; கடற்கரையிலே கொடியாகப் படர்ந்துள்ள பவளத்தை இராமபிரான் கண்டான். சீதையின் வாயழகை அது நினைப்பூட்டிவிட்டது. சற்று சோகமுற்றுப் பெருமூச்செறிந்து வேறொருபுறம் திரும்பினான். அலைகளால் கொண்டு வந்து சிதறப்படும் முத்துக்கள் அவன் கண்ணுக்கு இலக்காயின. அவை சீதையின் பல்வரிசையை அவனுக்கு நினைவூட்டின. "முத்தே! மயில் போன்ற சாயலையுடைய சீதை தங்கியுள்ள இடம் நெடுந்தூரத்தில் இல்லை என்றகாரணத்தால் மனம் அவளிடம் செல்லப் பார்க்கின்றது. ஆனால் வீரமானது பகைவனை ஒழிக்காமல் அவன் இடத்தில் இருப்பவளிடம் செல்லலாகாது என்று அந்த மனத்தைத் தடுக்கிறது. இந்நிலையில் நீ என்னிடம் அன்பில்லாமல், அரக்கரோடுசேர்ந்துகொண்டு, 'சீதையின் பல்வரிசை இவ்வாறு இருக்கும்' என்று அவள் நினைவை யூட்டி என்னை வருத்தலாமா?" என்று இராமபிரான் கூறி வருந்துகின்றான்.

இராமபிரான் கடலைக் கண்ணுற்றதை உலகியலை ஒட்டி இவ்விதமெல்லாம் புனைந்து அழகுறக் கூறியபின்னர், அவனது சர்வேசுவரத்தன்மையை வெளிப்படுத்திச் சிறிது கூறி இக் காட்சியை முடிக்கின்றார் கம்பர். இராமபிரானைக் கண்டதும் சாதுக்கள் "இராகவன் வந்தான். பிராட்டியின் துயரம் இனித் தீர்ந்துவிடும். அரக்கரால் அமரர்க்கு நேர்ந்துள்ள அபாயத்திற்கு முடிவு ஏற்படும். அழகனும் அதற்கு ஏற்ற கோபத்தை மேற்கொண்டான்" என்று உள்ளம் களிகூர்ந்து, தமது கைகளை உயர்த்தி ஆரவாரம் செய்து மகிழ்ச்சியால் அங்குமிங்கும் ஓடிக்குதி கொள்வதைக் கடலினின்றும் அலைகள் பலவாகத் தோன்றி, உயர்ந்து ஒலித்ததற்கு உவமையாக்கி உரைக்கின்றார். பின்வரும் பாடலால் இது விளங்கும்:

"கொங்கைக் குயிலைத்
துயர் நீங்க
இமையோர்க்கு உற்ற
குறை முற்ற
வெங்கைச் சிலையன்
தூணியினன்
விடாத முனிவின்
மேற் செல்லும்
கங்கைத் திருநாடு
உடையானைக்
கண்டு நெஞ்சம் களிகூர
அங்கைத் திரள்கள்
எடுத்தோடி
ஆர்ப்பது ஏய்க்கும்
அணியாழி."

[தூணி—அம்புப் புட்டில். முனிவு—கோபம். ஏய்க்கும்—ஒக்கும்.]

இவ்வாறு இராமபிரானுடைய சர்வேசுவரத் தன்மையை இடையிடையே வெளிப்படுத்திச் செல்வது கம்பரது இயல்பாகும். ஆகவே, கம்பன் கடல் சித்திரத்தில், முதலில் நிலவொளி மிகுந்த இராப் பொழுதில் இலங்கும் கடலின் இயற்கைக் காட்சியும், அக் காட்சியையும் இராமபிரான் மன நிலையையும் அவர் தமது கற்பனை சக்தியால் பொருத்திப் பலவித மனோபாவங்களை வெளியிடும் சிறப்பும் கற்போர் கண்முன் காட்சியளித்து, மனத்தை உருக்கி இன்புறுத்துகின்றன. என்னே கம்பன் கவிதா சக்தி!

* * * *

ஆங்கில பாஷை மகத்த்வம்

உலகிலேயே ஆங்கில பாஷை பேசுவோர் தொகைதான் அதிகமெனக் கூறப்படுகிறது. 18 கோடி பேர் வழக்கமாக ஆங்கிலம் பேசுகின்றனராம். மற்றும் 4 கோடிப் பேர் ஆங்கிலம் பேசினால் புரிந்து கொள்ளக் கூடுமாம். அடுத்தபடி ஜெர்மன் பாஷை. 8கோடிப்பேர் இதைப் பேசுகின்றனர். மற்றும் 2 கோடிப்பேர் இதைப் புரிந்து கொள்ளக் கூடும். 4½ கோடிப் பேருக்குப் பிரஞ்சு சுயபாஷையாக விருக்கிறது. 7½ கோடிப் பேர் பிரஞ்சு பாஷையைப் புரிந்துகொள்ளுவார்கள். ஸ்பெயின் பாஷை மத்திய தென் அமெரிக்காவிலும் பேசப்படுகிறது. இத்தாலி 4½ கோடி ஜனங்களின் பாஷையாகும்.

ஹிந்தி தென்னிந்தியாவிலும் பூராவாகப் பரவிவிட்டதானால் இன்று இங்கிலீஷ் பாஷைக்குள்ள கவுரவம் ஹிந்திக்கு மாறிவிடும். ஹிந்தியே உலகில் முதல்தர பாஷையாகிவிடும்.

* * * *

தகப்பனார் பையனை ஹோட்டலில் இருக்கச் சொல்லிவிட்டு கடைக்குச் சென்றார். போகும்போது பையனுக்கு வேண்டியதைக் கொடுக்கும்படியும் தான் திரும்பி வந்து பணம் கொடுப்பதாயும் சொல்லிவிட்டுச் சென்றார்.

திரும்பி வந்ததும் ஹோட்டல்காரர் இரண்டேகால் ரூபாய்க்கு ஒரு பில் கொடுத்தார். தகப்பனார் அதைக்கண்டு திடுக்கிட்டு, "பையா! உனக்கு வயிறு வலிக்கவில்லையா?" என்றார்.

பையன்:—இல்லை யப்பா; ரொம்ப தாகமாயிருக்கிறது.

* * * *

New Discovery!
CLEANS FALSE TEETH BETTER



நீங்கள் வாங்கும்பொழுது இருந்ததைப்போல் உங்கள் பிளேட்டுகள் சருமத்தைப்போல் பழுப்பு நிறத்துடனும் பற்கள் சுத்தமாகவும், இயற்கைத்தோற்றத்துடனுமிருந்தால், உங்களுக்கு "ஸ்டெராடெண்ட்" அவசியமில்லை. அவை விகாரமாயும் காவிபடிந்தும் இருந்தால் இது அவசியம் தேவையாகும். ஆரோக்ய வாழ்விற்கு, பற்கள் சுத்தமாகவும், கிருமிகள் இன்றியும் இருக்க வேண்டும். பார்வையாயிருக்க அவை சுத்தமாகவும், இயற்கைத் தோற்றத்துடனுமிருக்கவேண்டிய தவசியம்.

10,000 பல் வைத்தியர்கள் 'ஸ்டெராடெண்ட' சிபார்சு செய்கின்றனர்

பற்களைச் சுத்தம் செய்வதே 'ஸ்டெராடெண்டி'ன் முக்கிய வேலையாகும்.—இதற்குமுன் மற்றவைகள் சுத்தம் செய்வதைவிட இவை நன்கு சுத்தம் செய்கின்றன. இம்மாதிரி தயாரிக்கப்பட்ட மருந்துகளில் மிகச் சிறந்ததென 10,000-த்திற் கதிகமான பல்வைத்தியர்கள் சிபார்சு செய்கின்றனர்.

ஒரு கிளாஸ் வென்னீரில் கொஞ்சம் 'ஸ்டெராடெண்ட்' பவுடர் போட்டு உங்கள் பிளேட்டுகளை அதில் போட்டு வையுங்கள். அவற்றை பிரஷ் செய்ய வேண்டிய அவசியமில்லை. காவி மறையும்; மிகக் கருப்பான வெற்றிலை புகையிலைக் காவியும் சில முறை சுத்தம் செய்தவுடன் மறைந்துவிடுகின்றது. பற்கள் திரும்பவும் சுத்தமாகவும் இயற்கைத் தோற்றத்தையும் அடைகின்றன. நறுமணமுள்ளது; ருசியுள்ளது. பற்களுக்கு மிருதுத் தன்மையையும் குளிர்ச்சியையும் சௌகர்யத்தையுமளிக்கின்றது. "நீங்கள் விளம்பரத்தில் கூறும் குணங்களைவிட அதிகமாக 'ஸ்டெராடெண்ட்' குணத்தை அளிக்கும்' என உபயோகித்தவர் எழுதுகின்றார். பிரபல பல்வைத்தியர் எழுதுவதாவது:— "நான் உபயோகித்தவற்றுள் பற்களைச் சுத்தம் செய்து காவிகளைப் போக்குவதில் 'ஸ்டெராடெண்ட்' மிகச் சிறந்ததாகும்.

செயற்கை பற்களுள்ள ஒவ்வொருவரும் 'ஸ்டெராடெண்ட்' உபயோகிக்கவேண்டும். திருப்திக்கு உத்திரவாதம்; இல்லையேல் பணம் வாபீஸ். இதைப்பற்றி உங்கள் பல் வைத்தியரைக் கேளுங்கள்—பூராவும் நீங்கற்றது.

Agents:
ATLANTIS (East) Ltd,
20/1, Chetla Road,
CALCUTTA

Steradent
REGD. TRADE MARK
CLEANS & STERILISES FALSE TEETH

(No. 104)

ஜாவாத் தீவின் புராதன நாகரீகம்

——:(0):——

(குறள்)

"பையன் பி. ஏ. பாஸ் பண்ணிவிட்டான். உங்களுக்கென்ன குறைச்சல்? அவன் இனி என்ன செய்யப் போகிறான்? எப். எல். எம். ஏ. ஏதாவது படிக்கப் போகிறானா?"

"அதுதான் பெரிய கவலையாயிருக்கிறது. இதுவரையிலும் படிக்க வைத்ததே கஷ்டமாயிருந்தது. இதற்கு மேலேயும் எப்படிமுடியும்?"

"அப்படியானால் என்ன செய்யப் போகிறீர்கள்? அவனுக்கு ஷார்ட்ஹாண்ட், டைப்ரைடிங் தெரிகிறதே. பொம்பாயிக்கோ, ஜம்ஷெட்பூருக்கோ அனுப்புமே! அவனுடைய சாமர்த்தியம்போல சுலபமாக நூறோ இருநூறோ சம்பாதித்து முன்னுக்கு வந்து விடுகிறான்."

"அந்த யோசனை முன்னாலேயே இருந்தது, ஸ்வாமி! அப்புறம் ஆத்திலே பேசிக்கொண்டிருந்தேன். கண் காணாத சீமையிலே முந்நூறு ரூபாய் சம்பாதிக்கிறதைவிட உள்ளூரிலே தாலூகாவிலே யானாலும் முப்பது ரூபாய் சம்பாதித்து சொந்த வீட்டிலே இருந்துகொண்டு காலங்கழிக்கிறது எவ்வளவோ மேல் இல்லையா? நீங்களே சொல்லுங்கள். திடீரென்று கால், தலைவலித்தது. பக்கத்திலே இருந்து யார் உதவி செய்வார்கள்?"

* * * *

இப்படி சாதாரணமாகப் பேச்சு நடப்பதை நாம் கேட்டிருக்கிறோம். ரயில், தந்தி, தபால் முதலியவை இருக்கிற இந்தக் காலத்திலேயே நமது ஜனங்களுக்கு ஊரைவிட்டு வெளியிலே போகப் பயமாயிருக்கிறது. இவை ஒன்றும் இல்லாத காலத்திலே சமுத்திரங்களைத் தாண்டி ஆயிரக்கணக்கான மைலுக்கு அப்பால் முன்பின் தெரியாத இடங்களுக்குப்போக எவ்வளவு பயம் இருந்திருக்கவேண்டும்? ஆனால் உண்மையாக நமது முன்னோர்களுக்கு அப்படி ஒன்றும் பயம் இருக்கவில்லை.

இது ஏறக்குறைய இரண்டாயிரம் வருஷங்களுக்கு முந்திய சமாசாரம். இப்பொழுது பிரிட்டன் முதலிய மேனாடுகளுக்குக் குடியேற்ற நாடுகள் இருப்பது போல் அந்தக்காலத்தில் பாதகண்டத்துக்கும் ஆசியாவின் தென்கிழக்குச் சீமைகளில் பல குடியேற்ற நாடுகள் இருந்தன. அவை இருந்ததற்கு அறிகுறியாக இன்னும் அங்கெல்லாம் நமது குடியேறிய ஜனங்களின் கலைத் தொழில்கள் இருக்கின்றன. "வேங்கை எட்டடி பாய்ந்தால், அதன் குட்டி பதினாறடி பாய்வது" போல் இநதக் கலைத் தொழில்கள் இப்பொழுது மூல நாட்டையே வெட்கிக்கச் செய்கின்றன.

இப்படிப்பட்ட குடியேற்ற நாடு ஒன்றைப் பற்றியது இந்தக் கட்டுரை. 'ஜாவா' என்ற பெயரை அநேகமாய் எல்லோரும் கேட்டிருப்பார்கள். ஜாவா என்பது ஒரு தீவு. அது ஆசியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் மத்தியிலுள்ள தீவுக் கூட்டங்களில் மேற்கிலிருந்து இரண்டாவது. அது இப்பொழுது டச்சு கவர்ன்மெண்டாரால் ஆளப்பட்டு வருகிறது.

சில 'மேனாட்டுப் பாஷை களில், ஜவுக்கும் 'ய'வுக்கும் வித்தியாசம் கிடையாது. ஆகவே ஜாவாவும் யாவாவும் ஒன்றுதான். புராதன ஸம்ஸ்கிருத கிரந்தங்களில் "யவத்வீபம்," என்றும் பழந் தமிழ் நூல்களில் "சாவகம்" என்றும் கூறப்பட்டிருப்பது தற்கால ஜாவாவைக் குறிக்கின்றது. ஸம்ஸ்கிருதத்தில் 'யவம்' என்பது பார்லி அரிசிக்குப் பெயர்; அந்தக் காலத்தில் ஜாவாவில் பார்லி விசேஷமாகப் பயிரிடப்பட்டதால் 'யவத்வீபம்' என்ற பெயர் வந்திருக்கலாம். சில ஆராய்ச்சியாளர் யவத்வீபம் யாவாவைக் குறிக்கிறதில்லை. சுமத்ராவைத்தான் குறிக்கிறது என்கிறார்கள்.

ஜாவா இப்பொழுது எப்படி இருக்கிறது? முன்பு எப்படி இருந்தது? அதன் முந்தியக் கதையை அதன் சரித்திரச் சின்னங்களிலிருந்து எப்படி அறியலாம் என்று சுருக்கமாகப் பார்ப்போம்.

ஜாவா ஒரு சிறிய தீவுதான். அதற்குள் நமது ஜில்லாக்கள் தான் பத்துப் பனிரெண்டு அடங்கும். இயற்கை அமைப்பில் ஜாவாவுக்குக் கடவுள் அதிக சகாயம் ஒன்றும் செய்யவில்லை. டச்சுக்காரர்களுக்குப் பாவம், ஐரோப்பாவில் தங்கள் சொந்த நாடு ஹாலந்தில்தான் மோசம் செய்கிற கடலோரம் என்றால், அவர்களுடைய தலையெழுத்து, ஆசியாவில் கிடைத்திருக்கும் இடத்திலும் கடற்கரைத் தகராறு செய்கிறது. தீவின் கால் பாகத்துக்குமேல் ஜனங்கள் இருப்பதற்குப் பதிலாக எரி மலைகள் இருக்கின்றன. போதும் போதாததற்கு நிஷ் பிரயோஜனமான சதுப்பு நிலங்களும், மணல் பரப்புக்களும் கூட இருக்கின்றன. ஆகவே இவைகளுக்கு மிஞ்சி இருக்கும் நிலம்தான் கைத்தொழிலுக்கு உபயோகப்படுகிறது. இந்தமாதிரியான பிரதிகூலங்களுடன் ஜாவானியக் கைத் தொழில்களை முன்னுக்குக் கொண்டு வந்திருக்கிற டச்சுச் சர்க்கார் பாராட்டத் தகுந்தவர்கள். ஜாவானியருடைய ராஜீய சமூக நிலை ஏறக்குறைய இந்திய நிலையைப் போன்றது. ஜாவானிய மதம் இஸ்லாம் என்று கூறப்பட்டாலும் அதில் ஹிந்து பௌத்த மதங்கள் கொஞ்சம் கலந்திருக்கின்றன என்றுசொல்லுகிறார்கள். ஜாவானியருடைய கூத்துக்களிலும் "பொம்மை" ஆட்டங்களிலும் ராமரும் அர்ஜுனனும் ஆடுகிறார்கள். ஜாவானிய பாஷையில் சுமேரு, வாசுகி, ஸரயு, பாஷை, கவி, ராஜா, பூபதி, அதிபதி, மந்திரி, மண்டபம் முதலிய ஸம்ஸ்கிருத பெயர்கள் இருப்பதை ஆசிரியர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

உலக நாகரிகத்தில் ஜாவானியர் ஸ்தானத்தைப் பற்றி டச்சுக் கவர்ன்மெண்டாருடைய ஒரு புஸ்தகத்தில் இவ்வாறு படிக்கிறோம்:—

"இங்கே வெவ்வேறு ஜாதிகளும் ஜனங்களும் வாழ்ந்து வருகிறார்கள். வெளியிலிருந்து எந்தக் காலத்திலும் யாராவது வந்து குடியேறிக்கொண்டே இருந்தார்கள். முதலில் இந்தியாவிலிருந்து ஹிந்துக்கள் வந்தார்கள். சீனர்கள் எல்லாக் காலங்களிலும் வந்துகொண்டே இருந்தார்கள். ஆனால் அவர்கள் ஆட்சிப் பதவியை எப்பொழுதும் எடுத்துக்கொள்ளவில்லை. பிற்காலத்தில் அராபியர் வந்து முகம்மதிய மதத்தைப் பரப்பினார்கள்.

ஆதியில் ஹிந்துக்கள் ஜாவாவிலும் சுமத்ராவிலும் பலமான ஸாம்ராஜ்யங்களை ஸ்தாபித்து இங்கிருந்து பக்கத்துத் தீவுகளுக்கும் நாடுகளுக்கும் ஹிந்துக்களை அனுப்பினார்கள். இந்த ஹிந்துக்களின் குடியேற்றம் தற்காலத்து ஐரோப்பியர் குடியேறுவது போல் அல்ல. ஹிந்துக்கள் தாங்கள் போன இடங்களில் இருந்த நாட்டு ஜனங்களுடன் கலந்துகொண்டு ஒன்றாயினர். இன்றுகூட ஜாவானியருடைய தேக அமைப்பிலும்

இன்ஜங்ஷன்களுடைய பரவு இத்துடன் தீர்ந்தது!

சகலவிதமான சிகிச்சைகளின்மேல் நம்பிக்கை

அடியோடு ஒழிந்தது!

ஒருமுறை லக்ஷ்மி அண்டு கம்பெனியாரால்

தயார் செய்யப்பட்ட

லெப்பர்கியூர்

என்றதை உபயோகியுங்கள்.

நீடித்துள்ள கஷ்டமான குஷ்டு வியாதிகளையும், மாஜிக்போல் தொலைத்து பழமையான மேக வியாதிகளை அடியோடு மாற்றி புது உயிரை கொடுக்கக்கூடியது

எங்கள்

லெப்பர் கியூர்தான் !!

அற்புத குணம்! 25 வருஷ அனுபவம்!! நிகரற்ற மருந்து!!!

சகலவிதமான வியாதிகளுக்கும்—ரத்த வியாதிகளுக்கும்—மேக வியாதிகளுக்கும்—மற்ற வியாதிகளுக்கும் சரல் கட்டி—ரத்தம் இல்லாமல் இருப்பதற்கும், மற்ற எல்லாவித வியாதிகளுக்கும் உத்திரவாதத்துடன் குணப்படுத்தக்கூடியது. ஒருமுறை பரீக்ஷித்துப் பாருங்கள்.

கிளை ஆபீஸ்கள்:

1. பிராட்வே நெ 22, மதராஸ்.

2 காந்தி நகர், பெஜவாடா.

விலாசம்:

லக்ஷ்மி & கோ,

தலைமை ஆபீஸ்.

வால்டேர் R. S. போஸ்ட்டு.

மனோபாவங்களிலும் அழிக்க முடியாத ஹிந்து முத்திரையைப் பார்க்கிறோம். ஹிந்துக்கள் வலியுற்றிருந்த காலத்தில் ஜாவா தென் கிழக்குத் தீவுகளின் நடுநாயகமாக இருந்தது. இந்த ஹிந்து ஜாவானிய நாகரிகம் எப்படிப் பட்டது என்றால், பக்கத்து போர்னியோ, பிலிபின்ஸ் தீவுகளிலுள்ள காட்டு ஜாதிகளுடைய இயற்கை நிலைக்கும் நடத்து வெள்ளைக்கார நாகரிகத்துக்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரம் இருந்தது. ஆனால் தற்கால ஜாவா நூற்றாண்டுகளாகப் பற்பல மாறுதல்களினால் பாதிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் பழஞ் சின்னங்களின் மீது மேனாட்டு அம்சங்கள் சேர்ந்து ஒரு புதிய ஜாவானிய நாகரிகம் தோன்றுவதற்கான அறிகுறிகள் இருக்கின்றன.''

* * * *

ஹிந்துக்கள் ஜாவாவுக்கு வருவதற்கு முன் ஜாவா எந்த நிலையில் இருந்தது? ஹிந்துக்களில் யார், எங்கிருந்து, எந்தக் காலங்களில் ஜாவாவுக்கு வந்தார்கள்? அவர்கள் எப்படி பூர்விக ஜாவானியருடன் கலந்து, ஹிந்து—ஜாவானிய நாகரிகத்தை உண்டாக்கினார்கள்? இந்தக் கேள்விகளுக்கு நாம் ஆதாரத்துடன் பதில் அளிக்க முடியாது. ஜாவாவின் சரித்திர சாமக்கிரியைகள் எல்லாம் டச்சுப் பாஷையில் இருக்கின்றன. ஹிந்து—ஜாவானிய நாகரிகத்தை ஆராய்பவர்களுக்கு டச்சுப் பாஷை மட்டுமல்ல. ஜாவாவின் முற்காலப் பாஷையும், தற்காலப் பாஷையும், தற்காலப் பழக்க வழக்கங்களும், சமஸ்கிருத நூல்களும், ஹிந்துப் பழக்க வழக்கங்களும் ஸம்பூரணமாகத் தெரிந்திருக்கவேண்டும். வங்காளத்தில் சிலர் இந்தியாவின் வெளிநாட்டு நாகரிகத்தைப்பற்றி முதன்முதல் கேள்விப்பட்டு உடனே அதன் செய்திகளை வெளியிடுவதற்காக (பிருகத்தர பாரத பரிஷத்) என்ற ஒரு சங்கத்தை ஸ்தாபித்துச் சில புஸ்தகங்களை அச்சிட்டார்கள். அவைகளுள் ஜாவாவைப்பற்றிய ஒரு புஸ்தகத்தை டச்சு நிபுணர்கள் படித்துப் பார்த்துவிட்டு "இந்த மாதிரியான புஸ்தகங்கள் வெளி வருவதைவிட வெளி வராமலிருப்பதே மேல்'' என்று வரைந்தார்கள்.

ஆகவே நமக்கு இந்தியாவில் கிடைக்கும் ஆதாரங்களைமட்டும் வைத்துக்கொண்டு, வங்காள உற்சாகத்துக்கு இரையாகாமல், மேலே போவோம். வால்மீகி ராமாயணத்தில் கிஷ்கிந்தா காண்டத்தில் (40-29) சீதையை எங்கெல்லாம் தேடுவது என்று கட்டளையிடும்பொழுது சுக்ரீவன் யவத்வீபத்தின் பெயரையும் சொல்லுகிறான். நமது பழந்தமிழ் நூல் மணி மேகலையில் இரண்டு மூன்று இடங்களில் (15-24) சாவகத்தைப்பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. சாவக நாட்டை ஒரு பஞ்சம் பீடிப்பதாக அங்கிருந்து கடல் வழியாக வந்த சிலர் ஆபுத்திரன் என்பவனிடம் சொல்லுகிறார்கள். ஆபுத்திரன் சாவகம் போகும் கப்பலில் புறப்படுகிறான். வழியில் புயலுக்குப் பயந்து கப்பல் ஒரு தீவில் தங்குகிறது. ஆபுத்திரன் இறங்கியதைக் கவனிக்காமல் கப்பல் புறப்பட்டுவிடுகிறது. அந்த நிர்மானுஷ்யமான தீவில் அவன் அலைந்து இறக்கிறான். பிற்பாடு அவன் சாவகநாட்டில் பிறந்து அந்த நாட்டு அரசனான பூமி சந்திரனால் வளர்க்கப்பட்டு அவனுக்குப் பிறகு புண்ய ராஜன் என்ற பெயருடன் நாகபுரத்தை ஆளுகிறான். அப்பொழுது மணிமேகலை அங்கே வந்து அவனுடைய முற்பிறப்புச் செய்திகளை அவனுக்குச் சொல்லுகிறாள்.

வைகத்துக்கும் தென்னாட்டிற்கும் சம்பந்தமான இன்னும் சில விஷயங்களைக் கூறுவோம். ஜாவாவின் பழைய சிலா சாசனங்கள் தென்னிந்திய கிரந்த எழுத்துக்களைப் போன்றவை என்று ஆசிரியர்கள் கருதுகிறார்கள். தென்னாட்டிற்கு விசேஷமான அகஸ்தியரைப் பற்றி ஜாவாவின் ஒரு சிலாசாசனத்தில் கூறப்படுவதுடன் தென்னிந்தியக் கோவில்களில் உள்ளதுபோன்ற அவருடைய பல உருவச் சிலைகள் அத் தீவில் கிடைத்திருக்கின்றன.

புராதன அரச வம்சங்கள்

ஜாவாவின் சரித்திரத்தை இந்திய சரித்திரத்தைப்போல் மூன்று பாகங்களாகப் பிரிக்கலாம். முதல் நூற்றாண்டில் ஆஜிசகர் என்பவருடைய தலைமையின் கீழ் ஒரு இந்தியக் கூட்டம் தீவில் வந்திறங்கிய கதை அங்கு வழங்குவதாக ஸர் ஸ்டாம்போர்ட் ராபில்ஸ் கூறுகிறார். கி. பி. 412-ல் பா—ஹியன் என்ற சீன யாத்திரிகன் ஜாவாவுக்கு வந்த பொழுது பௌத்தம் பிரபலமாக இல்லையெனினும் "பிராமணமும் மற்றும் தவறான மதங்களுமே'' இருந்தன என்று எழுதியிருக்கிறான். உலகிற் சிறந்த பௌத்த சின்னத்தை உடைய ஜாவாவில் பா—ஹியன் காலத்துக்குப் பிறகுதான் அந்த மதம் வலிமை பெற்றிருக்க வேண்டும்.

இதற்குக் காரணமாக இருந்தது ஒரு ராஜ வம்சம். அது ஜாவாத் தீவை மட்டுமல்ல. மற்றெல்லாத் தென்கிழக்கு நாடுகளையும் தீவுகளையும் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்து வெகு காலம்சிறப்புடன் விளங்கிற்று. மத்திய காலத்திலிருந்து இங்கிலாந்து சமுத்திரத் தலைமை வகித்து வந்தது போல் அந்த சைலேந்திரர் ஹிந்து சமுத்திரத் தலைவர்

வெள்ளித்திரைக்கு விரைவினில்

யயாதி

விஜயம் செய்கிறார்.

'எல்லா வகைகளிலும் நிகரற்ற புராணப் படம் இதுதான்'

எனப் புகழத்தக்கது.

பிரதான நடிக ரத்தினங்கள்:

P. B. ரேங்காச்சாரி — M. V. ராஜம்மா
P. U. சின்னப்பா — C. S. M. சுலோசனா
M. S. சுப்ரமணிய பாகவதர் — T. S. கிருஷ்ணவேணி
C. S. சாமண்ணா — S. C. கோமதி பாய்
K. S. ஹரிஹரய்யர் — M. L. ராஜாம்பாள்

ஸ்டுடியோ:

கல்கத்தா பிலிம் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா.

டைரெக்ஷன்:—M. L டாண்டன்.

'சந்திர மோஹன' அல்லது 'சமூகத் தொண்டு' 'யயாதி' ஆகிய எமது படங்களின் முக்கிய பாடல்களை ஹட்சின்ஸ் ரிகார்டுகளில் கேட்டு மகிழுங்கள். விரைவினில் வெளிவரும்.

For Bookings :- தந்தி : Movietone.

மோஹன் மூவிடோன் கம்பெனி,

1. மந்திரணக்காரத் தெரு, மதுரை.

களாக இருந்தார்கள். அவர்கள் பௌத்த மதப்பற்று மிகுந்தவர்களாயும் இந்திய மன்னர்களுடன் சிநேகமுடையவர்களாயும் இருந்தார்கள். அவர்களுடைய தலை நகரம் சுமத்ராவில் இருந்தாலும் அவர்களுக்கு ஜாவாவின் மீது தான் பிரியம் அதிகம். எந்தக் காலத்திலும் எந்தத் தேசமும் கர்வம் கொள்ள யோக்யமான பரபுதுரின் சிற்ப அதிசயத்தை அவர்கள் மத்திய ஜாவாவில் அமைந்தார்கள். கி. பி. 656-ம் வருஷத்திய சுமத்ராசாசனம் ஒன்றில் மகாராஜாதி ராஜ ஆதித்திய வர்மன் ஜாவாவில் ஏழு அடுக்குகளையுடைய ஒரு பௌத்த ஆலயத்தைக் கட்டியதாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்த ஆலயம் பரபுதுர் ஸ்தூபம் என்று நம்புவோம். சைலேந்திரர் தங்கள் சொந்த ராஜ்யத்தில் மட்டுமல்ல. இந்தியாவிலும் தங்கள் செலவில் இந்திய மன்னர்களின் மூலமாக பௌத்த ஆலயங்களைக் கட்டுவித்து ஆதரித்தார்கள். வட இந்தியாவில் ஒரு காலத்தில் சர்வகலாசாலை இருந்த நலந்தாவில் கிடைத்த செப்புப் பட்டயத்தின்படி தேவபாலன் என்ற இந்திய அரசன் 'ஜாவ பூமி'யின் அரசனை பாலபுத்திர தேவனின் பொருட்டு பௌத்த மடங்களை அமைத்து அவைகளுக்கு மானியங்களை விட்டான். தென்னாட்டிலும் ராஜேந்திரச் சோழனுடைய தஞ்சாவூர்க் கல்வெட்டுக்களில் அவன் சைலேந்திர அரசன் சூடாமணி வர்மனின் பெயரில் நாகப்பட்டினத்தில் ஒரு பௌத்த ஆலயத்தைக் கட்டினான் என்று அறிகிறோம்.

சைலேந்திரருக்குப்பின் ஜாவாவை மதர வம்சத்து அரசர்கள் ஆட்சி செய்தார்கள். சைலேந்திரர் பௌத்த பக்தி மிகுந்து பரபுதுரைக் கட்டியதுபோல் மதர மன்னர்கள் பல ஹிந்துக்கோவில்களைச் செய்வித்தார்கள். அவைகள் ஒன்றில் உள்ள பெயர் பெற்ற ராமாயணச் சிற்பங்களைப் பற்றி பிற்பாடு கூறுவோம். மதர வம்சத்துடன் மத்திய ஜாவாவின் பிராதானியம் முடிகிறது. பிறகு கிழக்குப் பக்கத்தில் மஜபகித ராஜ்யம் தலையெடுத்தது. மஜபகிதர் காலத்திலிருந்து பழைய சுத்தமான இந்திய நாகரிகத்துடன் ஜாவா நாட்டு நாகரிகம் அதிகமாகக் கலக்கத் தொடங்கிற்று. பனதரம் போன்ற கிழக்கு ஜாவாவின் ஆலயச் சிற்பங்களை நோக்கினால் இதன் உண்மை தெரியும்.

மஜபகிதருக்குப்பின் இஸ்லாமிய ராஜ்யங்களின் முறை வந்தது. ஜாவானியரின் மதம் மாறினாலும் நாகரிகம் முந்திய உயர்ந்த நிலையிலேயே இருந்தது. ஜாவானியரை முதல் முதல் கண்ட போர்த்துக்கீசியர் ஜாவானியருக்கும் மற்ற தீவுகளில் உள்ள கடற் கொள்ளைக்காரர்களுக்கும் இருந்த வித்தியாசத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள்.

கடைசியில் டச்சுக்காரர் வந்து ஒரு கோட்டையைக் கட்டிக்கொண்டு நாட்டு ஜனங்களிடம் கொஞ்சகாலம் சிரமப்பட்டுத் தீவின் ஆட்சியைப் பெற்றார்கள். நெப்போலியனுடன் ஐரோப்பாவில் நடந்த யுத்தகாலத்தில் பிரெஞ்சுக்காரர் திடீரென்று ஜாவாவைக் கைப்பற்றினார்கள். யுத்த முடிவில் தீவு பிரிட்டிஷாருக்குக் கிடைத்து, அது இந்தியாவின் ஒரு மாகாணமாக மாறிற்று. லார்ட்மிண்டோ கவர்னர் ஜெனரலாக இருக்கும்பொழுது ஸர் ஸ்டாம்போர்ட் ராபின்ஸ் என்பவர் ஜாவாவின் லெப்டினன்ட் கவர்னராக இருந்து ஜாவானிய ராஜ்ய பரிபாலனத்தில் பல சீர்திருத்தங்களைச் செய்தார். அவருக்குப் பின் ஜாவா டச்சுக்காரருக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டது.

அக்காலத்திலிருந்து இதுவரையில் டச்சு ஆட்சியில் ஜாவானியர் ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றம் அடைந்து வருகிறார்கள்.

* * * *

''ஜாவாவின் எரிமலைகள் கிராமங்களை நாசமாக்கின. ஆயிரக்கணக்கான உயிர்களைப் போக்கின. ஆனால் சிலாசாசன பரிசோதனை சாலை ஒன்றிற்குத்தான் அவை நன்மையைச் செய்தன. உதாரணமாக 1919-ல், கிழக்கு ஜாவாவில் 'கெலுட்' எரிமலையின் அதிர்ச்சியினால் பூமியிலிருந்து சில கற்கட்டடங்கள் வெளி வந்தன'' என்று ஜாவாவின் சிலாசாசன பரிசோதனைசாலைத் தலைவர் ஒரு முறை லண்டனில் உபன்யசித்தார். ஆகவே இப்பொழுது காணப்படும் கலைத் தொழில்கள் ஜாவாவின் சம்பூர்ணமான வேலை என்று சொல்வது தவறு.

மண்ணாலும் மரத்தாலும் செய்யப்பட்ட உருவங்கள் அழிந்து போனதால் அழியாத கல்லில் உருவங்களைச் செய்யும் வழக்கத்தை விசித்திர சித்தன் என்ற ஒரு அரசன் கொண்டு வந்ததாகத் தென்னாற்காடு ஜில்லாவில் மண்டகப்பட்டு என்ற கிராமத்தில் கிடைத்த கல்வெட்டு கூறுகிறது. இதேபோல் ஜாவாவிலும், மலங் ஜில்லா, தினய என்ற ஊரில் கிடைத்த ஒரு சாசனத்தில் ஜாவானிய அரசன் ஒருவன் ஒரு மரவிக்ரகம் விழுந்து போனதால் அதற்குப் பதிலாக எப்பொழுதும் இருக்கக்கூடிய கல் விக்ரகம் ஒன்றைச் செய்வித்ததாகத் தெரிகிறது.

ஓர் அபூர்வ சந்திப்பு

ஸ்ரீமதி எஸ். டி. சுப்புலக்ஷ்மி

பாபநாசம் சிவன்

பேபி சரோஜா

இம்மூவரும் முதன் முறையாக

தியாக பூமி

என்ற சமூகப் படத்தில் சேர்ந்து நடிக்கின்றனர்.

★

கதை

"கல்கி"

★

டைரக்ஷன்:

கே. சுப்ரமண்யம், பி. ஏ., பி. எல்.

தீவின் கலைகள்

ஜாவானியக் கலையில் இரண்டு பிரிவுகளைப் பார்க்கிறோம். தீவின் மத்திய பாகத்தில் காணும் பூர்வ ஜாவாவின் பழைய கலை ஒன்று. கிழக்கு ஜாவாவில் காணும் மத்திய காலத்துப் புதிய கலை இன்னொன்று. பழைய கலை சுத்தமான பாரதக் கலையைப் போன்றது. எல்லாவிதத்திலும் பாரதக் கலையைத் தோற்கடிப்பது புதியகலை. இந்திய விஷயங்களை ஜாவானிய நாட்டு முறைப்படி காட்டுவது பழைய கலையை சைலேந்திரருடைய பரபதூரிலும் மதரமன்னருடைய பிரம்பனனிலும் பார்க்கிறோம். புதிய கலையை மஜபகிதருடைய புனதாத்திலும் தற்கால ஜாவானிய நாடகங்களிலும் "பொம்மை" ஆட்டங்களிலும் பார்க்கிறோம்.

பழைய கலை பாரதக்கலையாயிருந்தாலும் அந்தக் கலைக்கு உதாரணங்களாயிருக்கும் ஆலயங்களின் ஜாவானியப் பெயர்கள் நமக்கு விநோதமாயிருக்கின்றன. சந்தி கல்ஸன், சந்தி பரபுதூர், சந்தி மெந்துத், சந்தி லொரோ ஜொங்ரங், சந்தி ஸெதுண்ட—என்பவைகளுள் பரபுதூர் என்பது உலகப் பிரசித்தியடைந்தது.

பரபுதூர் ஸ்தூபங்கள்

மத்திய ஜாவாவில் பனந்தோப்புகள் நிறைந்த விசாலமான 'பிரகோ' ப் பள்ளத்தாக்கில் பரபுதூர், ஸ்தூபத்தின் எண்ண முடியாத சிகரங்கள் உயரவானை எட்டிய வண்ணம் தெரிகின்றன. பரபதுரை பராபுதூர் என்றும் பொரோ புதூர் என்றும் உச்சரிக்கிறார்கள். அதற்கு அநேக புத்தர்கள் என்று சிலர் அர்த்தம் சொல்லுகிறார்கள், "மேலே உயர்ந்து தோன்றுவது" என்று வேறு சிலர் சொல்லுகிறார்கள். பரபுதுரை க்ரோம் என்ற டச்சு ஆசிரியர் கண்டு இதென்ன ஆச்சரியம்! ஒரு மலையை அப்படியே ஆலயத்தின் அஸ்திவாரமாக வைத்துக் கொண்டு அதற்கு மேல் ஆலயத்தைக் கட்டியிருக்கிறார்கள், என்றார். "பௌத்தம் கடவுள் இல்லாத மதமாயிற்றே. அதற்கு ஆலயம் எதற்கு?" என்று நாம் சந்தேகிக்கலாம். ஸ்தூபம் என்பது புத்தருடைய ஞாபகார்த்தமாக அவருடைய அஸ்தியின் ஒரு பாகமோ, சாம்பலோ, அவருக்குச் சம்பந்தமான பொருளோ ஏதோ ஒன்றை வைத்துக் கட்டப்பட்ட ஆலயம். கோவிலின் மூல விக்கிரகத்தைச் சுற்றியும் உள்ளது போல் ஸ்தூபத்திலும் பிரதக்ஷிணப் பாதைகளும் சிற்பித்த சுவர்களும் இருக்கின்றன. சுவர்களில் சிற்பிக்கப் படுபவை பௌத்தரின் [illegible] கதைகள்.

நாம் ஒரு ஆலயத்தின் வாசலில் நின்றுகொண்டு அங்கிருந்து அதன் மூலஸ்தானத்தை அடைய ஒரு மைலுக்கு மேல் நடக்கவேண்டும் என்றால் நமக்கு எப்படி இருக்கும்? பரபுதூரின் நிலை இப்படிப் பட்டது. பரபுதூரின் பிரதக்ஷிணப் பாதை மலையின்மேல் போகும் பாதைகளைப்போல் மலையைச் சுற்றிச் சுற்றிப் போகிறது. போகிற வழி முழுவதிலும், கீழேயும், வலது பக்கத்திலும், இடது பக்கத்திலும் ஒரே கல். கீழே இருப்பது வெறுங் கல். வலது பக்கத்திலும் இடது பக்கத்திலும் உருவங்களாக நிற்கும் கல்.

வில்லியம் கோன் என்பவர் கூறுவதுபோல், தொழிலின் மேன்மையைப்பற்றி யோசிக்காமல் சிற்ப விஸ்தீரணத்தைக் கொண்டு மாத்திரம் கலையைக் கவனித்தால் பரபுதூருக்கு ஒப்பு இந்தியாவிலும் இல்லை. வேறெங்கும் இல்லை. ஏதன்ஸின் பார்தினன் சிற்பம் 520 அங்குல நீளம். பரபுதூரின் மகாயான பௌத்தச் சிற்பம் 10,000 அங்குல நீளம். லோரோ ஜொங்ரங் கூட்டத்திலுள்ள ராமாயணச் சிற்பம் 3,000 அங்குலம். இவைகளைப் போன்றவை (இந்து-சீனக்) காம்போஜத்தின் அங்கோர்—வாட் ஒன்றுதான். காம்போஜத்தின் அங்கோர் சிற்பத்தின் நீளமும் 3,000 அங்குலம்தான். இப்படி நாம் நீளத்தை மாத்திரம் கணக்கிட்டுப் பார்த்தோம். தொழிலின் மேன்மையில் இவைகளைச் சிறந்த ஐரோப்பிய உதாரணங்களுடன் ஒப்பிடலாம்."

கீழ்நாட்டுக் கலை விஷயத்தில் வின்ஸண்ட் ஸ்மித் ஆசிரியர் மனப்பூர்வமாகப் புகழ்ந்தது இல்லை. அவர் ஒரு ஆக்ஷேபணையும் இல்லாமல் 'நன்றாயிருக்கிறது' என்று தலையை அசைத்தது அமராவதிச் சிலைகளைத் தான். அதற்கு அடுத்தபடியாக அவர் அங்கீகரிப்பது பரபுதூர். கடுமையான மனிதரிடம் பெறும் நற்சாட்சிப் பத்திரத்திற்கு விசேஷ சக்தி உண்டு. ஸ்மித் பரபுதுரைப்பற்றி என்ன சொல்லுகிறார் கேளுங்கள்:—

"ஹெவல் மிகவும் அதிகமாகப் புகழ்கிறார். சாமர்த்தியத்துடன் நிர்மாணிக்கப்பட்டிருந்தாலும் இவைகளைப் பொறுக்கி எடுக்கப்பட்ட புஸ்தகச் சித்திரங்கள் என்றுதான் சொல்ல வேண்டும். இவை மிகவும் நன்றாகவும் அழகாகவும் நமக்குத் தோன்றுகின்றன. ஆனால் இவைகளின் வேலைப்பாட்டை தற்காலச் சிற்பிகள் யாராவது ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்த இரண்டு மைல் வேலையை எவ்வளவு சிற்பிகள் செய்தார்கள்? அவர்கள் எங்கிருந்து வந்தார்கள்? அவர்களுக்கு யார் பயிற்சி அளித்தார்கள்? அவர்கள் எந்த இந்தியக் கலை வகுப்பைச் சேர்ந்தவர்கள்? நிச்சயமாக அவர்கள் சற்று முன்பு மாமல்ல புரத்திலும் பாதாமியிலும் வேலை செய்த முரட்டுச் சிற்பிகளிடம் கற்றுக்கொண்டிருக்கமாட்டார்கள். சிற்பங்களின் தனி உருவங்களில் 'இந்தியக்கலையில் அருமையாயிருக்கிற முக அழகைக் கவனிக்கிறோம். ஒரு மாதிரி இவைகளைப் போல் உள்ளவை 11-ம் நூற்றாண்டின் சோழ விக்ரகங்கள் ஒருவேளை பரபுதூர்ச் சிற்பங்களின் அழகுக்குச் சீனர்கள் காரணமாயிருந்திருக்கலாம்."

ஏது, வின்ஸண்ட் ஸ்மித் திடீரென்று சீனர்களின் மேல் மோகம் கொண்டு விட்டார்!

பரபுதூரில் பிரதக்ஷிணப் பாதையின் முதல் நான்கு சுற்றுகள் நாற் கோணமாகப் போகின்றன. ஐந்தாவது சுற்றிலிருந்து அது வட்டமாக வளைந்து செல்லுகிறது. நான்காவது சுற்றில் நான்கு திசைகளுக்கு உரிய புத்தர்கள் தரிசனம் அளிக்கிறார்கள். கிழக்கே இருப்பவர் பூமி ஸ்பர்ச முத்திரையுடன் இருக்கும் அக்ஷோப்பியர். தெற்கே வரத முத்திரையுடன் ரத்ன ஸம்பவர், மேற்கே பத்மாஸன அமிதாபர். வடக்கே அபய முத்திரையுடன் கூடிய அமோக ஸித்தர் எல்லாத் திசைகளுக்கும் பொதுவான ஐந்தாவது புத்தர் ஒருவர் இருக்கிறார். அவர் தர்ம சக்கர முத்திரையையுடைய வைரோசனர்.

நமது மகாபாரதம் ஹிந்து மதத்தின் அகராதியாய் இருப்பதுபோல் பரபுதூர் பௌத்த மதத்துக்குக் கல்லில் செய்யப்பட்ட ஒரு பேரகராதியாய் இருக்கிறது. லலிதவிஸ்தரம், திவ்யாவதானம், கண்டாவ்யூகம், ஜாதக மாலை முதலிய பௌத்த நூல்களைப் படிக்காமலேயே அவைகளின் சாரத்தை பரபுதூரில் அறிந்துகொள்ளலாம்.

"பரபுதூரைப் பார்த்தால் இதைக் கட்டியவர்களுக்கு மதப்பற்று ஒருமனநிலையல்ல, இவர்களுடைய நாகரீகமே அதுதான் என்று நினைக்கும்படி இருக்கிறது. பரபுதூர்ச் சிற்பங்களின் அழகை அறிந்தவர்கள் அவைகளை எப்பொழுதும் மறக்கமாட்டார்கள்" என்று ஆனந்த குமாரசுவாமி அவர்கள் வரைகிறார். அவர் கூறுவது உண்மையா அல்லவா என்று தெரிந்துகொள்ள இக்கட்டுரையுடன் வெளியாகியுள்ள இரண்டு படங்களைப் பாருங்கள்.

அறுபது வருஷங்களுக்கு முன்பு படாவியாவின் கலா-விஞ்ஞான சங்கத்திற்காக வான் இன்ஸ் பர்கன் என்பவர் பிரதக்ஷிணப் பாதையின் சிற்பங்களைப் போடோ பிடித்தார். அவர் எடுத்த போடோக்களிலிருந்து கடைசியாக அச்-

கஸ்-ராஜ்-ஸோப்

உபயோகியுங்கள்.

எல்லா சரும வியாதிகளையும் தடுக்கலாம். சருமம், மேனி இவற்றின் அழகை அதிகப்படுத்தும். மிகச் சிறந்த சரக்குகளைக்கொண்டு தயாரிக்கப்படுகின்றது.

சுதனன் அரசனும் தண்ணீர் குடங்களுடன் செல்லும் கிராம ஸ்திரீகளும். இதில் பிம்பங்களின் நேர்த்தியை முக்கியமாகக் கவனிக்கவும்.



மாயாதேவி தேரில் செல்லுவதான காட்சி.

[இப்படங்கள் ஜாவா டச்சு இந்திய சிலாசாசன பரிசோதனை சாலையாரால் உதவப்பட்டவை.]

செதுக்கப்பட்டவை இந்த இரண்டு படங்கள். பிரத்தியேகமாக இந்த திருபருக்காக ஜாவாவின் சிலாசாசன பரிசோதனைசாலையின் சர்வாதிகாரி (டாக்டர் டபிள்யூ. எப். ஸ்டட்டர்ஹீம்) இவைகளைக் கிருபை கூர்ந்து அனுப்பினார்.

முதல் உதாரணத்தைப் பாருங்கள். இந்தக் காலத்தின் நமது நவீன சித்திரிகர்களும் போட்டோ எடுப்பவர்களும் "எங்கே அழகான கிராமக் கிணறு இருக்கிறது? அதன் காட்சிகளை நாம் புதிது புதிதாக எடுத்துக் கொண்டால் எக்ஸிபிஷனில் பரிசு கிடைக்கும்" என்று ஒரு கை பார்க்கிறார்கள். கிராமக்கிணறு மிகப் பழைய கலை விஷயம். 1,300 வருஷங்களுக்கு முந்திய இந்த ஜாவானிய கிராமக்கிணற்றை நோக்குங்கள். கிணற்றைச் சுற்றிலும் பெண்கள் கூட்டம். மேலே மரங்கள். பக்கத்தில் ஏதோ ஒரு ஆலயம். ஒரு பெண் ஜலம் இழுத்துக்கொண்டே கிணற்றிற்குள் கொஞ்சம் குனிந்து பார்க்கிறாள். சில பெண்களின் குடம் நிறைந்தாய்விட்டது. அவர்கள் குடத்தைத் தலையில் வைத்துக்கொண்டு மெள்ள நகருகிறார்கள். இன்னும் சில பெண்கள் ஜலத்துக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். அதோ சற்று தூரத்தில் ஒரு பெண் மண்டிபோட்டுக் கொண்டு பயபக்தியுடன் தேவனைப்போல் உள்ள ஒரு யௌவன புருஷன் ஏதோ பேசுவதை அடக்கத்துடன் கேட்டுக் கொண்டிருக்கிறாள்.

இது என்ன கதை? புத்தர் ஒரு முற்பிறப்பில் சுதனன் என்ற ஒரு இளவரசனாகப் பிறந்து வாழ்ந்தார். சுதனன் ஒரு தேவகன்னிகையைக் காதலித்து அவளைப் பிரிந்து இரண்டுபேரும் பல கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். கடைசியில் தேவகன்னிகை ஒரு ரிஷியின் வசம் தன் மோதிரத்தை சுதனனுக்கு அனுப்பி அதன் உதவியால் ஹிமய மலைக்கு மேலே உள்ள தன் உலகத்துக்கு வரும்படி சொல்லியனுப்புகிறாள். நமது சிற்பத்தில் இதோ சுதனன் தேவ கன்னிகையின் உத்யான வனத்துக்கு வந்திருக்கிறான். அவளுடைய ஸ்நாநத்திற்காக அவளுடைய தோழிகள் ஜலம் கொண்டுபோகிறார்கள். அப்பொழுது சுதனன் ஒரு தோழியுடன் பேசிக்கொண்டிருந்து அவளுடைய நீர்க் குடத்தில் மோதிரத்தைப் போட்டுவிடுகிறான். இந்த சந்தர்ப்பம் விளக்கப்படுவதைக் கூறி ஹெவல், "ஹா! அபூர்வம்! சுதன இளவரசனைப் பார்த்தால், நிச்சயமாக இவன் இனிமேல் புத்தராகப் போகிறான் என்று இவன் முக ஒளியிலிருந்து தெரிகிறது. சுதனின் நேர்மை, தாதிப் பெண்களின் பக்தி, எங்கும் சுத்தமான, இளமையான தோற்றங்கள்—இவைகளுடன் இந்திய காலையின் வெளிச்சமும் பக்ஷிகள் பறந்து போவதும் எவ்வளவு ஸ்பஷ்டமாக விளங்குகின்றன" என்றார். இது சரிதானா, இல்லையா என்று படத்தை பார்த்து விட்டு சொல்லுங்கள்.

இந்த இரண்டாவது படத்தின் கதை உங்களுக்கு முன்னாலேயே தெரிந்திருக்கும். புத்தர் இன்னும் பிறக்கவில்லை. கர்ப்பிணியாகிய மகாராணி மாயா தேவி தன்னுடைய லும்பினி என்கிற உத்யான வன அரண்மனைக்கு ரதத்தில் போய்க்கொண்டிருக்கிறாள். அங்குதான் ஸித்தார்த்தர் பிறக்கப்போகிறார். ரதத்துக்கு முன்னே வீரர்கள், பின்னே அந்தப்புர மாதர்கள் எல்லோரும், ரதச் சக்கரம் உருளுவது போல், ஒரே காரியமாய் விரைந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். ஏனெனில் ஒரு கர்ப்பவதியல்லவா பிரயாணம் செய்வது? மாயா தேவியின் முகத்தில் மகாராணி தோரணை இருக்கிறதா என்று உற்றுப் பாருங்கள்.

ராமாயண சித்திரங்கள்

இவற்றைக்கொண்டு பௌத்தச் சிற்பங்களை மாதிரி பார்த்தோம். இனி, ஹிந்துக் கலைக்குப் போவோம். சந்தி லொரோ ஜொங்ரன் என்பது ஒரு சிவாலயம். நமது நாட்டில் நாம் யாரையாவது பார்த்து "நீ சிவன் கோவிலுக்குப் போனாயே, அங்கே என்ன பார்த்தாய்?" என்று கேட்க, அவன் "கோவில் சுவர் முழுவதிலும் ராமாயணச் சிலைகள் இருப்பதைப் பார்த்தேன்" என்று பதில் சொல்வானா? ஆனால் இந்த ஜாவானியச் சிவாலயத்துக்குப் போனவர்கள் இப்படித்தான் சொல்லுவார்கள். மேலே குறிப்பிட்ட டாக்டர் ஸ்டட்டர்ஹீம் இரண்டு தடித்த புஸ்தகங்களைப் பிரசுரித்திருக்கிறார். ஒன்று இந்த ராமாயணச் சிலைகளின் போட்டோக்கள் இருக்கும் படப் புஸ்தகம். மற்றொன்று ஜெர்மன் பாஷையில் எழுதப்பட்ட அவைகளின் விளக்கம்.

பரபுதூர்ச் சிற்பத்துக்கும் இந்தச் சிவாலய ராமாயணச் சிற்பத்துக்கும் கதையைத் தவிர வேறே வித்தியாசம் இல்லை. இந்தச் சிற்பிகள் வால்மீகி முனிவரிடம் நேராக யோசனை கேட்டு யார் யார், எப்படி இருந்தார்கள் என்று விசாரித்துக்கொண்டு சிற்பித்ததுபோல் இந்தப் படங்கள் தோன்றுகின்றன. ராமாயணம் நடந்து, கதை எழுதப்பட்ட நம் நாட்டிலேயே இந்தமாதிரியான உருவங்கள் இல்லை. சாதாரணமாக நாம் கோவில் சிலைகளைப் பார்த்து, ராமர், கிருஷ்ணர் என்று சொல்லிக்கொண்டு தாண்டிப் போகிறோம். ஆனால் இந்த ஜாவானியச் சிலைகள் நம்மை நிற்க வைக்கின்றன. ராமர், சீதை போன்ற உருவங்களில் நிறைந்த கம்பீரமும் அழகும் நமது கவனத்தை இழுத்து நமது கண்முன் உண்மை போன்ற காட்சிகளைத் தருவிக்கின்றன. மனக்கண்ணுக்கு வேலை கொடுப்பது தான் கலை என்பது. ஆகவே ஹிந்து-ஜாவானியக் கலை புகழப்படுவது வெறும் அதிசயோக்தியல்ல. இந்த ராமாயணக் காட்சிகளுள் நமக்கு மிகவும் பிடித்தவை:—தசரதரிடம் விசுவாமித்திரர் வருதல், ராமர் சீதை முன் வில் முறித்தல், கைகேயி தசரதரிடம் கோபித்துக்கொள்ளுதல், கௌஸலை துக்கம், ராம லக்ஷ்மணரும் சீதையும் அயோத்தியிலிருந்து புறப்படுதல், தசரதர் மரணம், சூர்ப்பனகை வரவு, மாரீச வதம், வாலி-சுக்ரீவ யுத்தம், சேது பந்தனம், லங்கையில் வானர சேனை இறங்குதல், ராவண-விபீஷண வாதம் முதலியவை. குரங்குகள் கூத்தாடிக்களிக்கும் காட்சிகள் பார்ப்பவர்களிடையேயும் களிப்பை உண்டாக்குகின்றன.

இந்த மாதிரியாக, நமது சிற்ப (ஸ்தாபத்திய) ஆராய்ச்சிப் பெரியாரான பெர்குஸன் சொன்னபடி, "வெளி நாட்டிலிருந்து குடியேறினவர்கள் ஜாவாத் தீவை ஒப்பற்ற கலைத் தொழில்களால் அலங்கரிக்கத் தயங்கவில்லை. ஆனால் இந்தியாவிலும் அடிக்கடி நிகழ்ந்தது போல், அவரவர்களின் கால முடிவில் ரத்தம் வற்றி வலிமை குன்றிக் கூட்டம் சீர்குலைந்து கடைசியில் அவர்கள் மாய வித்தையைப் போல் உலக நாடகத்திலிருந்து மறைந்து போனார்கள். அவர்களுடன் அவர்களின் கலையும் எப்பொழுதும் திரும்பிவராமல் மறைந்து போயிற்று."

* * * *

81-வது வயதில் 26-வது குழந்தை

ஜியார்ஜ் போர்மன் என்ற பிரிட்டிஷ் கப்பல் கம்பெனி ஊழியருக்கு இப்பொழுது 81 வயது. சென்ற ஜூலை 31-ந் தேதி அவருக்கு 26-வது குழந்தை பிறந்தது. மற்றக்குழந்தைகள் போல் இதுவும் அழகாக விருப்பதாக அவர் பொருமைப்பட்டார். போர்மன் மனைவிக்கு 21-வயது. இது அவளுக்கு முதல் குழந்தை. என் முதல் மனைவி மூலம் 25 குழந்தைகள் பிறந்தன. அவள் 20 வருஷங்களுக்கு முன் இறந்துவிட்டாள். அவள் குழந்தைகளில் 10 அல்லது 12 உயிருடன் இருக்கின்றன. ஆனால் அவர்கள் எல்லோரும் எங்கிருக்கின்றனரென்று எனக்குச் சட்டென ஞாபகத்திற்கு வரவில்லை என்று அறிவித்தார் ஜியார்ஜ் போர்மென்.

காஸ்டபேன்

உங்களுக்கு ஆரோக்கியத்தை திருப்பித் தரும்.

நரம்புத் தளர்ச்சி, மயக்கம், மூர்ச்சையடைதல், தலைவலி இவைகளெல்லாவற்றிற்கும் மலச் சிக்கலே காரணம். இதினின்று விடுபட்டிருக்க பத்திரமும் நிச்சயமுமான நிவாரணி: இனிமையான விளக்கெண்ணெய் சாக்கலேட் காஸ்டபேன்தான். உங்களுடைய கெமிஸ்டினிடமிருந்து இன்றே ஒரு பாட்டில் வாங்குங்கள்.

காஸ்டபேன் மானுபாக்சரிங் கம்பெனி, (இந்தியா)
தபால் பெட்டி, 88 கராச்சி.

ஏஜண்டுகள்:—

சிவராம் அண்டு ஸ்வாமி,
27, செம்புதாஸ் தெரு, சென்னை.

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES

தென்னிந்தியாவிற்கு ஏஜண்டுகள்:—

மெஸர்ஸ் சிவராம் & ஸ்வாமி,
154, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி., மதராஸ்

சிரவணம் அல்லது ஹரிகதை

காயக சிகாமணி ஸ்ரீமான் எல். முத்தய்யா பாகவதர்,

(மைசூர் அரண்மனை வித்வான்)

பக்தி மார்க்கங்கள் ஒன்பது வகை என்று ஸ்ரீமத் பாகவதத்தில் ஸ்ரீ சூதாச்சார்யாள் வர்ணித்திருப்பது லோகப் பிரஸித்தம். அவை, 1. சிரவணம், 2. கீர்த்தனம், 3. ஸ்மரணம், 4. பாதஸேவனம், 5. அர்ச்சனம், 6. வந்தனம், 7. தாஸ்யம், 8 ஸக்கியம், 9 ஆத்மநிவேதனம், இவ்வொன்பதினுள் முதலாவதாக சிரவண பக்தியையே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒருவனுடைய குணத்தைக் காதினால் கேட்பதிலிருந்து அவனுடைய நல்ல குணமோ அவகுணமோ தெரிகிறதல்லவா? இதுபோலவே பகவானுடைய ஒப்பற்ற மாசற்ற அனந்தகல்யாண குணங்களைச் செவியாரக் கேட்பதால், அவ்வுத்தம குணங்கள் மனதில் பதிவதும், மனதில் உள்ளதை வாக்கினால் சொல்வதும், அவ்விதமே நடந்துகொள்வதும் தான் த்ருட பக்தியின் லக்ஷணமாகும். மனது, வாக்கு, காயம் என்ற திருகரணங்களும் ஒன்றுபட்டு அவை பகவத் பரமாய் செலுத்தப்படுவதே ஜென்ம சாபல்யம் என்று பெரியோர்கள் கூறுகிறார்கள். இதனாலேயே நம் முன்னோர்கள் நல்ல விவேகிகள் முகமாக, ஸ்ரீமத் ராமாயணம், பாரதம், பாகவதம், முதலான புராண இதிகாசங்களைக்கேட்டு அதை அனுசரித்து நல்மார்க்கத்தில் நடந்து, தேக ஆரோக்கியத்துடனும், தீர்க்காயுளுடனும் சாந்தம் முதலான உத்தம குணங்களுடனும் வெகு காலம் வாழ்ந்து, சத் கதியை அடைந்திருக்கிறார்கள். இத்தகைய கதாசிரவணமானது, பூர்வ காலங்களில், கிராமாந்தரங்களிலும் நகரங்களிலும் நல்ல விவேகிகளால், பிரசங்கம் செய்யப்பட்டு அதை சகல ஜனங்களும் பக்தி ச்ரத்தையுடன் கேட்டு நன்மார்க்கத்தில் தங்களது வாழ்நாளை நடத்திக்கொண்டிருந்தார்கள். அக்காலங்களில் பெரியோர்களிடம், விசேஷமான பக்தி இருந்தது. அவர்களால் சொல்லப்பட்ட புராண சம்பந்தமான கதைகளில் தோன்றும் புத்தி மதிகளையும் ஜனங்கள் ச்ரத்தையுடன்கேட்டு அனுசரித்து வந்தார்கள். பிறகு வர வர அந்தத் திண்ணைப் புராணங்கள், கதாகாலக்ஷேபங்களாக மாறி, வாத்யங்களுடன், நடத்தப்பட்டு சகல ஜனங்களுக்கும் ஆனந்தத்தைப் பெருகச் செய்தது.

அந்தப் பழைய கால கதாகாலக்ஷேபங்களில் ஸ்ரீ மருதாநல்லூர் மடாதிபதிகளும், கோவிந்தபுரம் மடாதிபதிகளும், பக்தர்களுக்கு நாம ஸங்கீர்த்தன மகிமைகளை உபதேசித்து பக்தியைப் பெருக்கி அநேகம் சிஷ்யர்களைத் தேடிக் கொண்டார்கள். முன் சொன்ன மடத்துச் சிஷ்யர்களுக்கு சிற்சில அடையாளங்கள் உண்டு. அவையாவன:

நாம ஸங்கீர்த்தனம் செய்தது இத்தனை எண்ணிக்கை ஆச்சுது என்று கணக்கிடுவதற்குக் கழுத்தில் ஓர் ஸூத்ரக் கயிறும், பரிசுத்தமான ஆகாரத்தை உட்கொள்ளுவதற்காகச் செய்யும் உஞ்ச வ்ருத்திச் செம்பும் கைத்தாளமும் உண்டு. இவர்களே விசேஷமாய் கதாகாலக்ஷேபங்களைச் செய்து லோக ஜனங்களுக்குப் பக்தியைப் புகட்டி வந்தார்கள். இவர்களில் மருதாநல்லூர் ஸ்ரீமத் பெரிய குழந்தையவர்கள், வரகூர் கோபாலஸ்வாமிகளவர்கள், அண்டமே பாகவதரவர்கள், நரஸிம்மஸ்வாமிகளவர்கள், சாத்தூர் ஸுந்தரஸ்வாமிகளவர்கள் முதலான பெரியோர்களைக் குறிப்பிடலாம். இவர்களுடைய கதாகாலக்ஷேபமானது புராணோக்தமாகவும், அநேக த்ருஷ்டாந்தங்களோடும், கேட்போர் பரவசமாகும்படிச் செய்யும். இதற்குப் பிற்பாடு தஞ்சாவூர் ஸமஸ்தானத்தில் குவாலியரில் இருந்து "மோர் காம்" பாவா வென்று ப்ரசித்திபெற்ற ஓர் மஹாராஷ்டிர கதா காலக்ஷேபம் செய்யும் பெரியார் வரவழைக்கப்பட்டார். அவர் ஹிந்துஸ்தானி ஸங்கீதத்தில் மிகவும் பயிற்சி பெற்றவர். அதோடு பல பாஷைகளிலும் பகவத் குணங்களைப் பிரசங்கம் செய்யும் சதுரர். அவரிடத்தில் தஞ்சாவூர் ஸமஸ்தானாதிபதிகள் அளவிறந்த ப்ரீதியை அடைந்து வருஷத்தில் 4 மாதங்களுக்குக் குறையாமல் பல சரித்திரங்களைக் காலக்ஷேபம் செய்யச் செய்து கேட்பார்கள். இக்காலக்ஷேபங்களுக்குத் தஞ்சாவூரிலுள்ள ஸங்கீத ரஸிகர்களான மஹா ஜனங்கள் போய்க் கேட்டு ஆனந்தித்து வந்தார்கள். அவர்கள் கதையிலுள்ள மஹாராஷ்டிர பத்ததிகளை அனுசரித்த, ஸாகி, தண்டி, ஓவி, பஞ்ச சாமரம், முதலான பல பாடல்கள், சுத்த கர்னாடக ஸங்கீதத்திலேயே முழுகி இருந்த நம்மவர்களுக்கு பெரிய சுரோத்திரானந்தமாயிற்று. அவற்றை நாம் அப்யசிக்கவேண்டும் என்ற மோஹத்தையும் நமக்கு உண்டுபண்ணின. அக்காலத்தில் தஞ்சாவூரிலிருந்த ப்ரும்ம ஸ்ரீ கிருஷ்ணபாகவதரவர்கள் இயற்கையாகவே ஸங்கீதத்திலும் பரத நாட்டியத்திலும் சபையில் கூச்சமறப்ரசங்கிப்பதிலும் திறமை வாய்ந்தவர். அவர்கள் அடிக்கடி "மோர்காம் பாவா" அவர்கள் கதையைக் கேட்டுக் கேட்டு அதில் பூர்ணமாக ஈடுபட்டு தாமும் இத்தகைய கதா காலக்ஷேபத்தைச் செய்ய வேண்டுமென்று முயற்சி செய்தார். அவர் ப்ரயத்தனம் ஸபலமாகவே ஆயிற்று. ஏற்கனவே ஸ்ரீ கிருஷ்ணபாகவதரவர்களுக்கு மஹாராஷ்டிர பாஷையில் அதிகப் பரிச்சயமுண்டு. அதோடு தமிழ், தெலுங்கு, ஸம்ஸ்கிருதம், கன்னடம், முதலிய பாஷைகளையும் நன்றாகக் கற்றுத் தேர்ந்து, அந்தந்த பாஷைகளிலுள்ள, ச்லோகங்களையும் பாட்டுகளையும், அந்தந்த பாஷைகளுடைய ரஸங்கள் தோன்றப் பாடியும் ப்ரவசனம் செய்தும் ஜனங்களை ஆனந்திக்கச் செய்தார். இத்துடன் பரதநாட்டியமும் இருந்ததால் பாவங்களோடும், இனிமையான கானங்களோடும், நர்த்தனத்தோடும், ப்ரசங்கத்தோடும், அவருடைய கதாகாலக்ஷேபமானது தனியான ஒரு சிறப்பு வாய்ந்திருந்தது.

அக்காலத்திலுள்ள ப்ரபுக்களும் வித்வான்களும், அவருடைய கதா காலக்ஷேபங்களைக் கேட்டு ஆனந்த வாரிதியில் மூழ்கினார்கள். தனி மகிமை வாய்ந்த ஸ்ரீ கிருஷ்ண பாகவதரவர்களுடைய கதா காலக்ஷேபமானது நாகரீகத்திலும் முன்னணியில் நின்றது.

ராஜா

(ரிஜிஸ்டர்ட்)

பிரிட்டிஷ் தயாரிப்பு

பௌண்டன் பேனா

இப்பொழுது

வெகு வசீகரமான கலர்களில்

கிடைக்கும். 14 காரட் ரிலீப்

டைப் தங்க நிப் உள்ளது.

உயர்தர பேனா வியாபாரிகளைக்

கேளுங்கள்.

போலிகள் ஜாக்கிரதை.

New Field & Co.,

Presidency Representative,

14, Vaniar St., G. T., Madras.

அவர் புகழ் தமிழ் உலகெங்கும் பரவிற்று. இவ்வுலகமுள்ளளவும் அது வியாபித்திருக்குமென்பதில் சிறிதும் ஐயமில்லை. இவர் காலத்திலேயே அநேக ஸங்கீத வித்வான்களும், வாக்கு வல்லமையுள்ள ஸம்ஸ்கிருத பண்டிதர்களும், ஸ்ரீ கிருஷ்ண பாகவதரவர்களைப் பின்பற்றி, பாகவதர் அவர்களைப்போலவே கதா காலக்ஷேபம் செய்ய ஆரம்பித்தார்கள்.

கதைகளில் மத்தியில் ஸ்ரீ கிருஷ்ண பாகவதரவர்கள் எந்த இடத்தில் எந்த வார்த்தையை உபயோகிப்பாரோ எந்த விதமான பாவத்தைக் காண்பிப்பாரோ அதையேபின் வந்தவர்களும் காபி அடிக்க ஆரம்பித்தார்கள். ஸ்ரீ கிருஷ்ண பாகவதரவர்கள் அதி ஸுந்தர புருஷர். அவர் முகத்தில் ரஸ பாவங்களுண்டு. கால்களில் லய சுத்தமான ஜதி அடவுகளும், அழகாகப் பேசும். மற்றவர்களுக்கு அந்த பாவம் வருவதென்றால் லேசான காரியமா? ஆனாலும் சில பாகவதர்கள் கிருஷ்ண பாகவதராகவே தன்னை நினைத்துக்கொண்டு விசேஷ வரும்படி இல்லாமல் காலத்தைப் போக்கினவர்களும் உண்டு. ஒரு சிறுகதை ஞாபகம் வருகிறது. கிருஷ்ண பாகவதர் காலம் சென்றபிறகு சென்னையில் பார்த்தஸாரதி ஸபையில் ஒரு கோகுலாஷ்டமி வைபவத்திற்காக கிருஷ்ண பாகவதருக்குப் பின்னணியில் வந்த சில பாகவதர்கள் வரவழைக்கப்பட்டார்கள். அந்த பாகவதர்களெல்லோரும் ஒரே ஜாகையில் இருக்கும்படி நேர்ந்தது. நாலு வித்வான்கள் கூடுகிற இடத்தில் பொதுவாக சில வார்த்தைகள் கிளம்புமல்லவா? அதில் ஒரு பாகவதர் சிறு வயதுள்ளவர், மெதுவாய் ஒரு வார்த்தை சொன்னார். அதாவது ஸ்ரீக்ருஷ்ண பாகவதர்களுக்குச் சமானமாய் கதை செய்கிறவர்கள் இப்பொழுது ஒருவரும் இல்லை என்று நினைக்கவேண்டாம். கிருஷ்ண பாகவதரவர்களுக்கு அடுத்தாப்போல் நான்தான் என்று கம்பீரமாய் ஒரு வார்த்தை சொல்லவும், அங்கு இருந்த வயதான பாகவதர் ''அப்பா, அப்படிச் சொல்லாதே. கிருஷ்ண பாகவதருக்கு அடுத்து நீ என்றுசொல்லுகிறாயே! அது வேண்டாம். எங்களைப்போன்ற வயதானவர்களிருக்கிறோம். எங்களுக்குப் பிற்காலம் உன் காரியத்தைப் பார்த்துக்கொள்ளலாம் என்று அழகாகப் பதில் சொன்னார். இதனால் என்ன வெளியாகிறது. கதா காலக்ஷேபம் என்ற ஒரு கலைக்கே ஸ்ரீ கிருஷ்ண பாகவதர்தான் இந்த நாகரீக காலத்தில் ஆதி புருஷராகிறார். இன்றும் கதா ரஸிகர்களான பெரியோர்கள், ஏதாவது ஒரு கதா காலக்ஷேபத்தையைப்பற்றிப் பிரஸ்தாபியாமல் இருக்கமாட்டார்கள். இப்படியே கதா காலக்ஷேபங்கள், பல பாகவதர்கள் மூலமாய் நமது தமிழ் நாடெங்கும் வியாபித்துவிட்டன.

இந்தக் கோஷ்டியில் சேராத ஸங்கீத வித்வான்கள் அபூர்வமென்று சொல்ல நான் தயங்கமாட்டேன். ஸ்ரீமான் அனந்தராம பாகவதரென்ன, கும்பகோணம் ஸ்ரீமான் பஞ்சாபகேச சாஸ்திரிகளென்ன, நரஸிம்ம பாகவதரென்ன, பண்டிட் ஸ்ரீமான் லக்ஷ்மணாசாரியார் என்ன, ஸ்ரீமான் வேதாந்த பாகவதரென்ன, இன்னும் பல ப்ரபலஸ்தர்களும், கதா காலக்ஷேப ஸமுத்திரத்தில் நீந்தினார்கள். அவர்களில் நானும் ஒருவன்தான். எங்களுடைய ப்ரபல காலத்தில் பெண்பாலர் சிலர் கதா காலக்ஷேபம் செய்யத் துணிந்து புறப்பட்டார்கள். புருஷர்களைவிட ஸ்திரீகளென்றால், ப்ரபஞ்சத்தில் சாதாரண ஜனங்களின் அபிமானத்தைச் சுலபமாகப் பெருவார்களல்லவா? அதிலும், குலம், குணம், முதலான விசேஷங்களோடும், நல்ல சாரீரத்தோடும் இரண்டொரு பாஷையில் ஞானமும் ஏற்பட்ட பெண் பாகவதர்கள் கதா காலக்ஷேபம் செய்வதென்றால் நன்றாகத்தானிருக்கும். அதை ஜனங்கள் அபிமானிப்பது யாதொரு தோஷமுமில்லை என்பதுதான் எனது எண்ணம். ஆனால் கதா காலக்ஷேபம் செய்வது பொதுவாக ஜனங்களுக்கு ஸன்மார்க்கத்தைப் போதிக்கும் ஒரு முக்கியமான ஸாதனமாகும். அப்படி பக்தி மார்க்கத்தைப் போதிப்பதற்கும் அருகதையுள்ளவர்கள் சிலரே உண்டு. அதிலும் கல்வியில் மிகுந்த தேற்சியடைந்தும், பலபாஷைகள் பயின்றும், பக்தி என்ற பாவத்தைத் தானே அனுபவித்தும் உபதேசிக்கும்படியான பெரியோர்கள் கிடைப்பது மிகவும் துர்லபம். அப்படி இருக்க, கல்வியறிவில்லாமல், படித்ததைக் கிளிப்பிள்ளைகள் போல் ஒப்புவிப்பது, அது மத்தியில் மறந்தால் அடியைப் பிடியடா பாரத பட்டா என்றபடி மறந்த இடத்திற்கு முன்னடி இருந்தே கதையைத் துடங்குவது, பாட்டு மறந்தால் பின் பாடகர்களை வெறிக்கப் பார்ப்பது இந்தமாதிரி கோஷ்டிகள் வரவர அதிகப்பட்டு, ஹரி கதா காலக்ஷேபம் நடக்கவேண்டுமானால் அது ஸ்திரீஜாதிகளுக்கே உரித்தானதென்று பலரும் எண்ணும்படி நேரிட்டது. ஆனால் நல்லகாலமாக அந்தப் பேச்சு இப்பொழுது கொஞ்ச காலமாக நின்றிருக்கிறது. இப்பொழுது கதா காலக்ஷேபமும் வ்ருதா காலக்ஷேபமாய் விட்டது. [illegible] என்கிறபோல் என்றால், ஆதியில் ஸ்ரீ கிருஷ்ண பாகவதரவர்களிடமிருந்து, கதா காலக்ஷேபமானது கரும்பின் அடிபோல் தொடங்கிஇப்பொழுது சில பெண்கள் செய்யும் கதா காலக்ஷேபங்களிலிருந்து நுணிக்கரும்பாய் முடிந்தன. இப்பொழுது கதா காலக்ஷேபங்கள் கேட்க வேண்டுமானால், அநேகம் ஆண்பாலரும் பெண்பாலருமாக, வேண்டிய பாகவதரவர்கள் கிடைப்பார்கள். ஆனால் அதைக் கதாகாலக்ஷேபமென்று சொல்ல முடியாது. இது ரொம்ப அருமையான கலை. ஸங்கீதத்தில் விசேஷ ஞானம் வேண்டும். பலபாஷை ஸாகித்யங்களின் பொருள்களை அறிந்து ப்ரவசனம் செய்யும் சக்தி வேண்டும். ஜனங்களை ஆகர்ஷிக்கும் ரூபமும், குணமும் வேண்டும். இத்யாதிகுணங்கள் நிறைந்து, சகலவிஷயங்களும் தெரிந்து கதா காலக்ஷேபம் செய்யக் கூடியவர்கள் தற்காலத்தில் துர்லபமானாலும், வரும் காலத்திலாவது ஸர்வேச்வரனை பகவான் உலகத்திற்கு பக்திமார்க்கத்தை உபதேசிக்க மஹா உத்தம புருஷர்களை அவதரிக்கும்படி அனுக்ரகிப்பாரென்பதில் சிறிதும் ஐயமில்லை.

காங்கிரஸ் மகாசபை சரித்திரம்

சுதந்திர சரித்திரத்தைப் போற்றாத நாடு இல்லை. தமிழ் மக்களுக்குக் காங்கிரஸ் மகாசபை சரித்திரத்தை ஆதியோடந்தமாக எழுதி வெளியிடவேண்டுமென்ற ஆவலினால் தூண்டப்பட்டு, இவ்வரும் பெரும் நூல் மூன்று பாகங்களாக வெளியிடப்படுகின்றது. ஒவ்வொரு அத்யாயத்திலும் உருக்கம் நிறைந்த பிரசங்கங்களும், வீரம் நிறைந்த உயர் மொழிகளும், நமது நாட்டு அரும் பெரும் தலைவர்களான மேதாவிகளுடைய சொற்பொழிவுகளும் நிறைந்திருக்கின்றன. சரித்திர வரலாறு கோர்வையாகவும் அழகாகவும் எழுதப்பட்டிருக்கின்றது. காங்கிரஸ் இயக்கத்தின் பிறப்பு, அதன் வளர்ச்சி, அதனை வளர்த்தவர்கள், அவர்கள் செய்த அரிய சேவை, ஆகியவற்றை நீங்கள் அறிய வேண்டாமா?

மூன்று பாகங்கள்

விலை ரூ. 6.

''சுதேசமித்திரன்'' ஆபீஸ்,
சென்னை.

மதராஸ் டி. சி. என்.
கோல்டன் மெடல் ஜ்வெல்லரி மார்ட்

பலவித அழகிய வளையல்கள்



அசல் தங்க வளையல்களைவிட பிரகாசத்திலும் நிறத்திலும் குறைந்ததல்ல.

கறுக்காது.

2வருஷ உத்திரவாதம். மிகவும் அழகாக இருக்கும்

பெரிய சைஸ் 2'' அகலமும் அதற்கு மேற்பட்டதும் ஜதை ரூ. 3 0 0
மத்திய சைஸ் $1\frac{3}{4}$'' முதல் 2''க்குள் ஜதை ரூ. 2 8 0
குழந்தை சைஸ், $1\frac{3}{4}$''க்கு உட்பட்டது ஜதை ரூ. 2 0 0
வி. பி. செலவு 1 ஜதை முதல் 6. ஜதை வரை அணா 8.

* அணிந்திருக்கும் வளையலின் சுற்றளவை இங்கியால் ஒரு காகிதத்தில் குறித்து அனுப்பவும்

டி. சி. நாகலிங்கப்பா அண்டு கோ,
280, வால்டாக்ஸ் ரோடு, பார்க்டவுன், மதராஸ்.

குறிப்பு:—''சுதேசமித்திரன் விஜயதசமி மலர்'' பெயரைக் குறிப்பிட்டு எழுதுகிறவர்களுக்கு மாத்திரம் விலையில் ரூபாய்க்கு ஒரு அணா வீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

2 அணா பெறுமானமுள்ளதும், பல அழகிய படங்களுள்ளதுமான எமது கேடலாக் இனாம்.

குறிப்பு:—ஸிலோன், பர்மாவுக்கு வி. பி. சார்ஜு அணா 12. F. M. S. க்கு ரூ. 2 ஆர்டருடன் முன் பணம் அனுப்பவும்.

(ஸ்ரீமான் கா. ஸ்ரீநிவாஸாசாரியார் மொழிபெயர்ப்பு)

'இராவதி' என்று சொல்லலாமா, அல்லது 'ஐராவதி' என்பதா? எனக்குத் தெரிந்த வரையில், 'இரா' என்னும் புல்லிலிருந்து இந்த நதியின் பெயர் 'ஐராவதி' யாகி இருக்க வேண்டும். இதன் கரையிலுள்ள புஷ்டி தரும் புற்களை மேய்ந்து கொழுத்த யானைகளை ஐராவதமென்று கூறியிருப்பார்கள். அல்லது இந்திரனுடைய ஐராவதத்தைப் போல் வாட்டமும் சாட்டமுமாய் வளர்ந்த, மதயானை போல் நடக்கும் இந்த நதியைக் கண்டு, எந்த பௌத்த பிக்ஷுவுக்காவது, 'இதை ஐராவதி என்று கூறுவதே சரி' என்று தோன்றியிருக்கும்.

சரித்திரத்தின் கற்பனையலைகளிலே விளையாடுவது, ஒரே இடத்தில் உட்கார்ந்து வீண் பொழுது போக்குவோரின் வேலை; பிரயாணிக்கு இந்த வேலை பிடிக்காது.

ஐராவதி இந்தியாவில் இருந்திருக்குமாயின், ஸம்ஸ்கிருதக் கவிகள் அதனுடைய வருணனையில் அதைப் போலவே விஸ்தீர்ணமுள்ள காவிய வெள்ளத்தைப் பெருகவிட்டிருப்பார்கள். பிரம்ம (பர்மா) தேசத்துக் கவிகளும் அநேக காவியங்கள் எழுதியிருக்கலாம்; ஆனால் அது நமக்கு எப்படித் தெரியும்? பர்மிய பாஷை நம் தாய் மொழியல்ல, சாஸ்திர பாஷையல்ல, ராஜபாஷையுமல்ல. நமது அண்டை வீட்டுக்காரனின் பாஷையைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற இயல்பு நம்மிடம் கிடையாது. எவனாவது ஒரு ஆங்கிலேயன் பர்மிய பாஷையைக் கற்று, பர்மியக் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து நமக்குத் தந்தானாயின், ஒரு வேளை அது நமக்குப் படிக்கக் கிடைக்கலாம்.

எந்தத்தேசமும் ஐராவதியைப்போன்ற நதியைப்பற்றிப் பெருமைகொண்டு, அதற்கு நன்றி செலுத்தக்கூடும். நாங்கள் பர்மாவில் ரங்கூனுக்கு வடக்கே மாண்டலே வரையில் புகை வண்டியில் பிரயாணம் செய்தோம். அங்கிருந்து வெகு சமீபத்தில் அமரபுரா சென்று, முதல் தடவையாக நாங்கள் ஐராவதியைத் தரிசித்தோம். அமரபுராவுக்கு அருகிலேயே புத்த பிரானின் பெரிய பெரிய விக்கிரகங்கள் இருக்கின்றனவென்று முன்னமேயே எங்களுக்குத் தெரிந்திருப்பின், நாங்கள் அவரைத் தரிசித்தபின்பே எங்கள் ஐராவதி-யாத்திரையைத் தொடங்கியிருப்போம்.

நீம் சுத்தம் செய்யும் பற்கள், ஈறுகள் எப்பொழுதும் கெடாது

வாயில் அடிக்கடி ஆஸிட் தங்குவதாலேயே பற்கள் சீக்கிரம் கெட்டு விடுகின்றன. இவை அடிக்கடி தங்காமலிருக்க உமிழ் நீர்தான் பெருகுவது அவசியமாகும்.

இம் முக்கிய வேலையைச் செய்ய கோசங்கள் எப்பொழுதும் வேலை செய்ய வேண்டும். கோசங்களைச் சரிவர பாதுகாப்பதற்கு நீம் பற்பசையை விடச் சிறந்தது ஒன்றுமில்லை. பற்களில் பட்டவுடன் உமிழ் நீர் தாராளமாகப் பரவுகின்றது. அவை சுறு சுறுப்புடனிருக்கச் செய்கின்றது. அதனால்தான் நீம் சுத்தம் செய்யும் பற்களும் ஈறுகளும் கெடாமலிருக்கும்.

ஒரு ஸாம்பிள் டியூபிற்கு எழுதுங்கள். சரியான நிலையிலிருக்க அவசியமான முன் ஜாக்கிரதை செய்யுங்கள்.

நீம் டூத் பேஸ்ட்

பற்கள் சுத்தமாகவும், ஈறுகள் ஆரோக்யமாகவுமிருக்கும்

கல்கத்தா கெமிகல், இலவச சாம்பிளுக்கு த. பெ. 1230-க்கு எழுதவும்.

இவ்விடத்திலும் நதிப்பரப்பு அகலமாய் இருக்கிறது. அக்கம்பக்கத்திலுள்ள பூமி சமதரையாயிருப்பதால் நதியும் கம்பீரமாகக் காண்கிறது. அதன் ஓட்டம் தலைமையும் எடுப்புமுடைய யானையின் நடையைப்போலிருக்கின்றது. இவ்வாறான நதியில் படகிலாவது புகைக் கப்பலிலாவது அமர்ந்து யாத்திரை செய்தல், வாழ்க்கையில் ஓர் அதிருஷ்ட சம்பவமாகும்.

அமரபுராவிலிருந்து மாண்டலேக்குத் திரும்பிவந்து, நாங்கள் புகைக்கப்பலிலேறினோம். கடல்யாத்திரை வேறு; நதியாத்திரை வேறு; நதியில் பெரிய பெரிய அலைகள் கிளம்புவதில்லை. இருபக்கத்துக் கரைகளும் நம்மோடு கூடவே வருகின்றன. 'வாழ்க்கை' என்று பெயர்கொண்ட, ஆனால் உயிரை வாங்கும் மஹா பூதத்தின் வலையில் நாம் சிக்கிக்கொண்டிருக்கிறோமென்ற எண்ணம், நமக்கு நதி யாத்திரையில் உண்டாவதில்லை. சூன்ய, முடிவற்ற ஆகாயத்தில் பூமிகோளம் தனது ஸநாதனமான யாத்திரையை அமைதியுடன் நிகழ்த்துவதுபோலவே, நதியின் வெள்ளத்தில் இந்தப் படகுகள் மௌனமாகச்சென்று, அமைதியின் அபூர்வமான இன்பத்தை நமக்குப் பயக்கின்றன. இன்றும், ஐராவதி-யாத்திரையை நினைக்கும்போது சாஞேக்த கர்நாலியின் அருகில் த்ரௌபதியைப் போன்ற நர்மதையின் யாத்திரையும், ஸீதையைப்போன்ற தப்தியின் யாத்திரையும், சமுத்திரத்தோடு கலக்கும் வரையில் காசிதலவாஹினியான பாரதமாதா கங்கையின் யாத்திரையும், மதுரை-விருந்தாவனத்தின் கிருஷ்ண ஸகியான யமுனையின் யாத்திரையும் காச்மீரத்தின் நந்தவனத்தில் பார்வதிபோன்ற விதஸ்தையின் (ஜேலம்) யாத்திரையும், வனலக்ஷ்மியின் காதலன் போன்ற கோமாந்தகப் பிரதேசத்தின் ஜலயாத்திரையும்-எல்லாம் ஒருங்கே என் நினைவுக்கு வருகின்றன. இவை எல்லாவற்றிலும், விதஸ்தை- ஐராவதிகளின் யாத்திரைகள்தான் எனக்குமிகுந்ததிருப்தியளித்த நீண்ட யாத்திரைகள். ஸிந்து, கங்கை, பிரம்ம புத்திரா, நர்மதை—இவைகளோடு பொருத்தமுள்ள நதி இதுதான். ஐராவதியின் பரப்பையும் ஓட்டத்தையும் காணும்போது, 'ஒரு விசாலமான ஸாம்ராஜ்யத்தின் மீது அரசு செலுத்தும் மஹாராணியோ இவள்!' என்ற எண்ணம் உதிக்கிறது. அரகான் மலையும் பெருயோமா மலையும் இதைக் காக்கின்றனவென்பது உண்மையே; ஆயினும் ஐராவதிக்கு மரியாதை செய்யும் நோக்கத்துடன், அலைகள் மிகவும் வணக்கமாகத் தூரத்திலேயே நிற்கின்றன.

எங்கள் கப்பல் புறப்பட்டுவிட்டது. சாயங்காலமானவுடனே, கன்றுகள் பசுவினிடம் ஓடிச்செல்வது போல, அக்கம்பக்கத்திலுள்ள பரந்த வெளிகளில் வசிக்கும், பாட்டாளிகளாகிய குடியானவர்கள் ஐராவதியின் கரையில் வந்து கூடுகிறார்கள். எங்கள் கப்பலை ஒரு நடமாடும் கடைத்தெருவென்றே சொல்லலாம். ஏதாவது ஒரு துறைமுகம்—அது பெரிதாயினும் சரி, சிறிதாயினும் சரி,—வந்து விட்டால், கப்பல் சங்கு ஊதி ஜனங்களை விருந்துக்கு அழைக்கும், ஜனங்கள் எறும்புக்கூட்டம்போல் ஓடி வருவார்கள். கப்பலில், பலவிதத் தின்பண்டங்கள், பிரம்பாற் செய்த பாத்திரங்கள், சிற்ப வஸ்துக்கள் முதலிய பலவகைப் பொருள்களின் கடைகள் கூடிவிடும். கப்பலின் உட்புறத்திலும் யாத்திரை செய்யும் வியாபாரிகள் தத்தம் பண்டங்களுடன் உட்கார்ந்திருப்பார்கள். பறவைகளின் கலகலப்புச் சத்தத்தைப் போல், பண்ட மாற்றம் மும்முரமாயிருக்கும். அவர்களின் பாஷையை அறிந்தவர்களுக்கல்லவா, ஜனங்களின் இந்த இரைச்சலால் வெறுப்பு தட்டும்? எங்களுக்கு என்ன? ஜனங்களின் சண்டை சச்சரவுகள், பேரிரைச்சல்கள்—எல்லாம் எங்களுக்கு சகஜம்தான். ஒரு பெரிய நாடகம் ஆடப்படுவதுபோலத் தோன்றியது எங்களுக்கு. பண்டமாற்றம் முடிந்தவுடன் கப்பல் புறப்படும். அப்போதுதான் கன்று போட்டிருக்கும் எருமையைப் போல் எங்கள் கப்பல் அசைந்துகொண்டே செல்லும். கப்பலிலிருந்த ஒரு நீச, வெள்ளையனான அதிகாரியுடன் ஒரு சிறு தகராறு ஏற்பட்டபடியால், அன்றைய தினம் எங்கள் ஆனந்தம் சிறிது சிதறியிருந்தது. ஆனால் மெல்ல மெல்ல வீசிய காற்றினால் அந்த விரஸம் போய்விட்டது. நாங்கள் இயற்கையைப்போல் முன்போன்ற ஆனந்தமெய்தினோம்.

மறுபடியும் ஒரு துறைமுகம் வந்தது. இவ்விடத்தில் வியாபாரம் அதிகம்போல் காணப்பட்டது. சிறியவையும் பெரியவையுமான கணக்கற்ற படகுகள் நதிக்கரையில் சேற்றில் புரண்டு கிடந்தன. எருமைமாடுகளின் முதுகில் ஈக்கள் 'ஙொய்'யென்று சத்தமிடுவதுபோல, கிராமப் பிள்ளைகள் இந்தப் படகுகளில் குதித்து விளையாடிக்கொண்டிருந்தனர். பர்மியர்களுக்குப் பச்சை குத்திக்கொள்ளுவதில் மிகுந்த ஆசை. இவர்களின் தாழை போன்ற வெண்மையான தோலில், சிவப்பும் நீலமுமான பச்சைகள் மிக அழகாயிருக்

அன்பார்ந்த சினிமா ரஸிகர்களுக்கு நற்செய்தி.

வெற்றி முழக்கத்துடன் பல ஊர்களில் இப்பொழுது நடைபெற்றுவரும் எமது உயர்தர தமிழ் பேசும் படங்கள்:

★ நவீன சாரங்கதரா ★ தாரா சசாங்கம்
★ உஷா கல்யாணம் ★ கிருஷ்ண துலாபாரம்
★ பக்த துளசிதாஸ் ★ விப்ர நாராயணு (தெலுங்கு)

சங்கீத வித்வான் முசிரி - சுப்பிரமணிய ஐயர் நடித்ததும், கோவை சென்ட்ரல் ஸ்டுடியோஸில் தயாரானதுமான ★ **துகாராம்** (தமிழ்)

எதிர்பாருங்கள் ! எதிர்பாருங்கள் !!

தமிழ் டாக்கி உலகில் முதல்தர நடிகர் என சென்னை பிலிம் லீகால் தேர்ந்தெடுக்கப்பட்ட

எம். கே. தியாகராஜ பாகவதர், எம். எஸ். திரிபுராம்பாள்,

மற்றும் ஹாஸ்யக் களஞ்சியங்களான

N. S. கிருஷ்ணன், P. G. வெங்கடேசன், T. A. மதுரம் ஆகியோர் தோன்றும்

எமது அடுத்த படம் எது ? என்பதை ஆவலுடன் எதிர்பாருங்கள் !

கோவை சென்ட்ரல் ஸ்டுடியோஸார் தயாரித்துவரும் மகத்தான புராணப்படம் :

ரம்பையின் காதல்

(K. சாரங்கபாணி, N. S. கிருஷ்ணன், வஸந்தா, T. A. மதுரம், சொக்கலிங்க பாகவதர் உள்பட பல உயரிய நடிகர்கள் நடித்தது)

படத்தின் முழு வினியோக உரிமையையும் பெற்றிருக்கிறோம். கூடிய சீக்கிரம் வெளிவரும் !

விபரங்களுக்கு :

முருகன் டாக்கி பிலிம் கம்பெனி, 8, சின்னக்கடை தெரு, மதுரை.

தந்தி: "Talkofilms." போன்: நே. 53; ஆபீஸ்: 53-A.

கின்றன. இந்த ஜன்மத்தில் உடலில் ஆபரணங்களைப் பச்சை குத்திக்கொள்ளுவதால் அடுத்த பிறப்பில் பொன் நகைகள் கிடைக்குமென்றும், நெற்றியில் சுட்டியும் சந்திரனும் குத்திக்கொள்ளுவதால் அழியாத ஸௌபாக்கியம் கிடைக்குமென்றும், மஹாராஷ்டிர தேசத்திலுள்ள கிராம ஜனங்கள் நம்புகிறார்கள். இங்குள்ள ஜனங்களுக்கும் அதைப் போன்ற ஏதாவது ஒரு நம்பிக்கை இருக்க வேண்டும். அநேகம் பேர் இடுப்பிலிருந்து முழங்கால் வரையில் உடல் முழுவதிலும் நிறநிறமான லுங்கியைப் போல் பச்சை குத்திக் கொண்டிருந்தார்கள். ஆகையினால் அவர்கள் நிர்வாணமாக நதியில் மூழ்க இறங்கியபோதுகூட அம்மணமாயிருப்பதாகத் தோன்றவில்லை. கப்பல் அதிக நேரம் தங்குமிடங்களில், நாங்கள் பக்கத்திலுள்ள கிராமங்களுக்குச் சென்று வருவோம். பர்மிய வீடுகளும் கிராமங்களும் எங்கள் கண்களுக்கு அறிமுகமாகிவிட்டன. அவர்களின் பாஷை எங்களுக்குத் தெரியாதிருந்தபோதிலும்கூட, அந்த அப்பாவியான கிராம ஜனங்களின் வாழ்க்கை எங்களுக்குப் பழகியதுபோலவே யிருந்தது. நாம் அரசியலுலகத்தோர், வியாபாரிகள் ஆகியவர்களின் கோபதாபங்களை நீக்கி விடுவோமாயின், தார்மிகர்கள்—தார்மிகரல்லாதவர்கள் என்பவர்களின் கற்பனை சிருஷ்டியை ஒரு புறமாக ஒதுக்கி வைத்து விடுவோமாயின், மனுஷ்யஜாதி முழுமையும் ஒரே குடும்பம், ஒரே சமூகமாகிவிடும்.

இந்த யாத்திரையில் நடு நடுவே ஸ்தூபங்களும் கோவில்களும் தொடர்ச்சியாகத் தென்பட்டுக் கொண்டே வந்தன. நதியின் பிரவாஹ—ஸங்கீதத்துக்கிடையே இவை தாளம் அடிக்கின்றன போலும்! சாதாரணமாக எப்போதுமே, உயர்ந்த குன்றுகளும் மலையுச்சிகளும் மனிதனுக்குப் பிரியமானவை. பின்னும், நீல நதியைப் போல் விசாலமான ஐராவதி, நாலு திசைகளிலும் தனது அருளின் ஆர்ப்பாட்டத்தைச் செலுத்தும்போது, இந்த உயர்ந்த இடங்கள் புகலிடங்களாகி விடுகின்றன. மனிதன் கோயில்களை நிர்மிப்பதல்லாது, வேறு எவ்விதமாக அதற்கு நன்றி செலுத்த இயலும்? ஊசலாடும் பச்சைப் பசேலென்ற இலைகளில், மஞ்சள் நிறமான பழுத்தபழங்கள் தம்முழு மதத்தையும் வெளியிடுகின்றன வென்பதை, பிரகிருதி நமக்குக் கற்றுக்கொடுத்தது. இந்தக் கல்வியைப் பயன்படுத்தி, மனிதர்கள் மரங்களின் நடுவே கோயில்களை அமைத்து, அதன்மீது ஆகாயத்தின் எல்லையற்ற தன்மையைக் காட்டும் பொன் விரல்களை உயர்த்தியிருக்கின்றனர். 'இயற்கை அழகை மனிதன் விருத்தி செய்ய முடியாது' என்று நினைப்பவர்கள், ஒரு தடவை இங்கு வந்து இந்த உயர்ந்த சிகரங்களை அவசியம் பார்க்க வேண்டும்.

மத்தியான வேளை. ஆங்கிலமறிந்த ஒரு பர்மியக் கலாசாலை மாணவனுடன் நாங்கள் சம்பாஷித்துக் கொண்டிருந்தோம். இதற்குள் ஒரு அமைதியான சத்தம் கேட்டது. சிந்த்வீன் நதி தனது கப்பத்துடன் ஐராவதியோடு கலக்கவந்தது. அவ்விரண்டின் அன்பான சந்திப்பின் அழகை என்னவென்று வர்ணிப்பது? ஸமர்த்த ராமதாஸரும் துகாராமும் சந்தித்ததுபோல, அல்லது சொக்கட்டான் விளையாடும் காளிதாஸனுக்கு பவபூதி தன் 'உத்தராம சரிதத்'தைப் படித்துக் காட்டுவது போல இருந்தது அந்தக் காட்சி!

கற்பனை மூலமாக நான் சிந்த்வீனின் அறிமுகமில்லாத பிரதேசங்களில் சான்-ராஜ்யம் வரையில் கூடப் பிரயாணம் செய்திருக்கிறேன். கையில் வில்லும் அம்பும் ஏந்திய அல்லது கோடாரிகளுடன் திரியும், கவலையில்லாத பயமில்லாத காட்டு மிராண்டி ஜனங்களை அங்கே நான் சந்தித்தேன். சிறிது சந்தேகம் தோன்றினும் நம் உயிரை மாய்க்கும். ஆனால் நம்பிக்கை ஏற்பட்டுவிடின் நமக்காகத் தம் பிராணனையே அர்ப்பணம் செய்யும் இந்தப் பிரகிருதிக் குழந்தைகளின் காட்சி, நாகரீகத்தின் சேற்றைக் கழுவும் மங்களஸ்நானம் போல் தோன்றியது எனக்கு. 'எங்கும் போய்க் கரை காணாது எரிகடல் வாய் மீண்டேயும் வங்கத்தின் கூம்பேறும் மாப் பறவை'யைப் போல், என் கற்பனையும் காடுகளைச் சுற்றிவிட்டு மீண்டும் கப்பலுக்கே வந்து சேர்ந்தது. நாங்கள் 'பகோகு' துறைமுகம் வந்து சேர்ந்துவிட்டோம். பகோகுவினருகில் சேறு நிரம்பிய நதியில் மூழ்கிவிட்டு, ஒரு பர்மிய கனவானின் விருந்தையுண்ட பின்பு, நாங்கள் மறுபடியும் கப்பலேறி, மண்ணெண்ணெய்க் கிணறுகளைக் காண, 'யெனன்ஜாவ்' வரையில் சென்றோம். இங்கே அமெரிக்கத் தொழிலாளிகளின் அரசாங்கம் நடைபெறுகிறதென்று சொல்லலாம். அக்கம் பக்கத்தில் வனத்தின் சோபையே இல்லை. ஒரு புறம் மண்ணெண்ணெய்க் கிணறுகளின் இந்தப் புது இடங்களையும், மற்றொரு புறம்

ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமி தேவஸ்தானம், கும்பகோணம்

1346-வது பசலி, அதாவது 1—7—36 முதல் 30—6—37 முடிய வரவு செலவு கோஷ்பாரா கணக்கு.

நெ.	வருமானம் விவரம்.	ரூ.	அ.	பை.
1	கிராம நெல், கலம் 6863-க்கு கலம் 1-க்கு ரூ. 1-4-0 வீதம் கூடுதல்	8578	12	0
2	கிராம ரொக்க வரும்படி	1788	4	7
3	டவுன் கட்டடங்கள் வாடகை	5778	9	5
4	திருப்பணியாரங்கள் வகையறா காண்டிராக்டுப்படி	383	13	0
5	மோஹினி வரவு	1932	7	8
6	உபய வரவு	266	9	9
7	கட்டளை வரும்படி	63	10	5
8	சித்திரைத்தேர் கமிட்டியார் வரவு	35	0	0
9	நெல் விற்று முதலில் ரூ. 1-4-0-க்கு மேல் உபரியாக விற்றதில் வருமானம்	200	0	7
10	கணக்கு எடுத்ததில் வரவு செலவில் கணக்குக்கு அகப்படாத வித்தியாசம்	1	6	0
11	புலவகை வரவு	273	2	10
		19301	12	3

நெ.	செலவுகள் விவரம்.	ரூ.	அ.	பை.
1	உத்ஸவங்கள் தினப்படி ரொக்கச் செலவுகள்	2557	15	4
2	படித்தனம் நெல் 609 கலத்திற்கு 1-4-0 வீதம்	761	4	0
3	ஸந்நதி நெய் விளக்கு எண்ணெய் விளக்குகள் எலக்டிரிக் லைட், கிரோஸின் விளக்கு, எலக்டிரிக் சாமான் கொள்முதல் உள்பட	1426	1	11
4	i சித்திரைத் தேரிழுத்த செலவு 4995-8-9; ii அதற்கு பொதுஜன வரவு வகையறா 1655-3-3; போக பாக்கி	3340	5	6
5	கட்டளை செலவுகள்	15	7	6
6	கிராம கோவில் செலவுகள்	99	1	0
7	ஸர்க்கார் கிஸ்தி	2616	12	4
8	முனிசிபல் வரி, கட்டட ரிபேர் செலவு வகையறா	1025	2	11
9	சிப்பந்திகள் சம்பளம் ஸாதல்வார். போஸ்டேஜ் பிரயாணம் முதலியது	2197	3	5
10	எண்டோமெண்டு போர்டு தேவஸ்தானம் கமிட்டி சகாயத் தொகை, ஆடிட் பீஸ்	514	2	6
11	கோர்ட்டு செலவு	363	6	6
12	பலவகை ரிபேர்	219	8	8
13	கடன்களுக்கு வட்டிச் செல்லு	772	3	6
14	பலவகைச் செலவு	434	0	5
15	மிகுதியான தொகை	2959	1	1
		19301	12	8

ஸ்ரீசாரங்கபாணி ஸ்வாமி தேவஸ்தானம் 14—9—1938.

"I hereby certify that the above statement is correctly prepared from the books and accounts of the Devastanam and the same represents the true and correct view of the income and expenditure of the temple for the fasli ending 1346.

(Sd.)N. ஹரிராவ், M.A. & B.L.
மானேஜிங் டிரஸ்டி.

(Sd). C. NATESAN, G. D. A. R. A., *Registered Accountant & Auditor.*

குன்றின்மேலுள்ள தொன்மையான சிறு பௌத்தக் கோயிலின் தீர்த்த க்ஷேத்திரத்தையும் கண்டு மனத்தில் பல எண்ணங்கள் பிறந்தன. கோயிலின் சிற்பத்தில், யானை முகமுள்ள ஒரு பறவை மரக் கம்பத்தில் செதுக்கப்பட்டிருந்தது. இம்மாதிரியே கலப்புள்ள பல பொருள்கள் காணப்பட்டன. அருகிலேயே யுள்ள மடத்தில் சில பௌத்த சாதுக்கள் இனிய குரலுடன் மாலைப் பிரார்த்தனை நிகழ்த்திக்கொண்டிருந்தனர். எவ்விதப் பக்ஷபாதமுமின்றி ஐராவதி, இவ்வண்ணம் மண்ணெண்ணெய்க் கிணறுகளின் பம்புகளின் கோலாஹலத்தைப் பொறுத்துக் கொண்டிருப்பதுடன், "அநிச்சா ஸங்காரா உப்பாத வ்யயதாம்மிணோ" வின் அமைதியான பழைய உபதேசத்தையும் தன்னிடம் வைத்துக் கொண்டிருக்கிறது. அமெரிக்காவின் பலத்துக்கு வேறொரு இணையில்லாமலிருக்கலாம். ஆயினும் அந்தப் பூகண்டம் ஒரு சிறு குழந்தைதானே! அதற்கு வாழ்க்கையின் ரகசியம் இவ்வளவு விரைவில் எப்படிக் கை கூடும்? நதிக் கரையில் மூவாயிரம் அடிகள் ஆழமான கிணறுகள் தோண்டி, மண்ணெண்ணெய் எடுக்கும் வித்தைதான் அதற்குத் தெரியும். 'உலகத்துப் பொருள்களெல்லாம் உண்டாகின்றன. அழிந்து போகின்றன. எல்லாம் அழிபவை, வீணானவை; ஸாரமற்றவை; இவைகளிலிருந்து தப்பி நிர்வாண மடைவதில்தான் ஸாரமிருக்கிறது'—என்ற தத்துவார்த்தத்தை எந்த அமெரிக்கன் ஒப்புக்கொள்ளுவான்? ஆனால் ஐராவதியோ தன் ஊக்கத்தின் காரணமாக ஞானத்தை எப்போதும் மறக்காது; ஞானத்தின் பளுவினால் தன் ஊக்கத்தையும் இழக்காது. மஹாஸாகரத்தில் கலப்பதும், அக்கலப்பின் ஆனந்தத்தை எப்போதும் அகண்டமாக வைத்துக் கொள்வதுமே அதன் வேலை.

யெனன் ஜான்விலிருந்து நாங்கள் 'ப்ரோம்' வரையில் சென்று, அங்கு ஐராவதியினிடமிருந்து விடை பெற்றுக் கொண்டோம். இங்கிருந்து மேலே சென்றவுடன் இந்த மஹாநதி பல தாரைகளாகப் பிரிந்து கடலில் கலக்கிறது. உண்மையில், ஐராவதி பொன்னாட்டின் தாய்!

* * * *

திருடியதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட ஒருவன் கோர்ட்டில் கொண்டுவந்து நிறுத்தப்பட்டான்.

மாஜிஸ்திரேட்:—உனக்காகப் பேச யாராவது வேண்டுமா?

கைதி தலையை அசைத்துவிட்டு, "எனக்கு வேண்டுவது இரண்டு நல்ல சாக்ஷிகள்தான்" என்றான்.

நீங்கள் வாங்கும் இரும்பு உயர்ந்தது என்பதற்கும், இந்தியத் தயாரிப்பு என்பதற்கும் டாட்டா என்ற பெயரே உத்திரவாதமாகும்.

டாடா இரும்பு

தயாரிப்பின்பொழுது ஒவ்வொரு முறையும் நன்கு பரீக்ஷிக்கப்படுகின்றன.

சட்டம், திரணை, சதுரம், ஆங்கில்கள், டீ ஆங்கில்கள், கர்டர்கள், சானல்கள், பிளேட்டுகள், கருப்புத் தகடுகள், கலாய் தகடுகள், கோடாறிகள், மண் வெட்டிகள், சுத்திகள், கடப்பாறை முதலியன.

THE

TATA IRON & STEEL Co., Ltd.,

"Oriental Buildings"

108, Armenian Street, :: MADRAS.

Telephone : 2701. Telegrams : Ironco, Madras.

உங்கள் மேனியைப் பாதுகாத்து, அபிவிருத்தி செய்கின்றது.

மார்கோ ஸோப் உபயோகித்து சரும தோஷங்கள் ஏற்படாமல் பாதுகாருங்கள். அதன் கிருமி நாச மருந்து பூர்வமான நுரை மேல் சருமத்தை சுத்தம்செய்வதுடனில்லாது, ஒவ்வொரு சருமத் துவாரத்திலுள்ள தூசி, அழுக்கு இவற்றை வெளிப்படுத்துகின்றது. இதன் பிறகு சருமம் மிருதுவாகவும், புத்துயிருடனும் விளங்கும்.

வேப்பம் (நீம்) ஆயிலைக்கொண்டு தயாரிக்கப்படும் ஸோப் மார்கோ ஒன்றுதான். சருமத்திற்குச் சிறந்த உணவு என சரும நிபுணர்கள் கொண்டாடுகின்றனர்.

மார்கோ ஸோப் உபயோகித்து சரும அழகைப் பாதுகாருங்கள்.

மார்கோ ஸோப்

டாய்லெட் & மருந்து பூர்வமானது.

MARGO SOAP
TOILET & MEDICINAL

கல்கத்தா கெமிகல்

இலவச சாம்பிளுக்கு சென்னை, த. பெ. 1230-க்கு எழுதவும்.

பஸ் பிரயாணம்

(சங்கீத வித்வான் ஸ்ரீமான் முசிரி சுப்ரமணிய அய்யர்)

அலுப்பு வந்தால் அதற்குப் பிரயாணம்தான் 'டானிக்'. அதுவும் பஸ் பிரயாணம் மிகவும் சிலாக்கியம். கட்டை வண்டி—ஸ்ரீ சாமிநாதன் ரொம்ப இனிமையாக அதைச் செய்து விட்டாலும்—கட்டை வண்டிதான். எறும்பு ஊறி, கல் தேய்கிற சங்கதி அது. சொந்த மோட்டார் பிரயாணம் நல்லதுதான்; ஆனால் பெட்ரோல் செலவை மட்டும் வேறு யாராவது ஏற்றுக்கொண்டால், அது பிரம்மானந்தமாயிருக்கும். அப்பேர்ப்பட்ட பிரபு யார் இப்பொழுது இருக்கிறார்? அய்யலூர் விபத்திற்குப் பிறகு, ரயிலில் பிரயாணம் என்றால், பார்க்க முடியாத அந்தராத்மாகூட திடுக்கிட்டு ஸ்தம்பித்துவிடும் போலிருக்கிறது.

எனவே, எல்லா வகைகளிலும் யோசித்துப் பார்த்தால், பிரயாணத்துக்கு (மோட்டார்) பஸ் தான் லாயக்கு என்று ரிஷிகள் கூட ஒப்புக்கொள்ளுவார்கள். பஸ் சிக்கனத்துக்கு சிக்கனம்; சௌகரியத்துக்கு சௌகரியம். குறிப்பிட்ட இடத்துக்கு சீக்கிரமாகவும் போய்ச் சேரலாம்; அதாவது ஆபத்து நேராமலிருந்தால். நேர்ந்தாலோ கைலாசத்துக்கு நேர் பாதை கண்ணுக்குத் தெரியும். என்ன சொல்லுகிறீர்கள்? அதுவும் ஒரு லாபம் தானே? அலுப்புக்குப் பிரயாணம் டானிக்; வாழ்க்கையிலே அலுப்பு ஏற்பட்டவர்களுக்கு கைலாசம்தான் கடைசிப் புகலிடம்!

என்ன நேர்ந்தாலும் சரி, விகடகவி சொல்லுவதுபோல என்ன நேராவிட்டாலும் சரி, எனக்கு பஸ் பிரயாணம்தான் ரொம்பவும் பிடித்தம். பஸ்களில், ஏழை பணக்காரன் என்ற வித்தியாசமே கிடையாது. ஆண் பெண் பாகுபாடு என்பதில்லை. பத்து வயதுக்கு மேற்பட்டால் நூறு வயதுக்குள் யாராயிருந்தாலும் எல்லாரும் ஒன்றுபோலத்தான். பூரண ஜனநாயகம் நர்த்தனம் செய்யும் பஸ்ஸில் பிரயாணம் செய்வதற்கு, மனிதர்களுக்கு (எத்தனையோ ஜன்மங்களாகச் செய்த புண்ணிய காரியங்களின் பலனாக!) கொடுத்து வைத்திருக்க வேண்டுமே! பூரண ஜனநாயகம் என்று சொன்னேனே, அதில் கொஞ்சம் தவறு ஏற்பட்டிருக்கிறது. பூரண சந்திரனுக்கும் களங்கம் இல்லையா? அதுபோலவே பஸ்ஸில் நடனமிடும் பூரண ஜனநாயகத்துக்கும் ஒரு பங்கம் உண்டு. அதைப் பின்னர் விண்ணப்பம் செய்துகொள்ளுகிறேன்.

எந்த ஸ்தாபனத்துக்கும் நிர்வாகிகள் உண்டு. பஸ்ஸுக்கு ஓட்டுகிறவர் (ட்ரைவர்) ஒருவர்; அதை நடத்துகிறவர் (கண்டக்டர்); இந்த வார்த்தையைக் கிராம வாசிகள் கண்ட்ராக்டர் என்று அழகுபடுத்தி பிடிவாதமாக உச்சரிக்கிறார்கள். இங்கிலீஷ் வார்த்தைகளை எப்படி உச்சரித்தாலும், அழகும் அர்த்தமும் கெடாது என்பது அவர்கள் எண்ணமோ என்னமோ! கண்டக்டருக்கு காசு குறி; ட்ரைவருக்கு பெட்ரோலிலே லட்சியம். இவர்கள் இரண்டு பேர்கள் வைத்ததுதான் (பஸ்) சட்டம்.

ட்ரைவர்:—இடமிருக்கிறதா?

கண்டக்டர்:—இல்லை.

ட்ரைவர்:—நெருக்கிப் பாரேன்!

கண்டக்டர்:—நெருக்கிப் பார்க்கலாம்; ஆனால் போலீஸ் பார்த்தால்—?

ட்ரைவர்:—பாத்தா கேட்பாங்க; கேட்டால் கொடுத்துட்டுப் போறது.

கண்டக்டர்:—சரி! அண்ணன் சொல்லுகிறபடி!

பஸ்ஸிலே இவர்கள் இரண்டு பேரும் வைத்ததுதான் சட்டம் என்று ருசுப்படுத்தப் போலீஸ் சாட்சி தேவையில்லையே!

* * * *

பதினெட்டு பேர்கள் இருக்க என்று எழுதியிருக்கும் பஸ். அந்த பஸ்ஸிலே ஒரு நாள், (டானிக்குக்காக அல்ல) உண்மையான வேலையாக, ஒரு ஊருக்குப் போக ஏறினேன். இந்தியாவின் தரித்திரம் உலகப் பிரசித்தமான சங்கதி என்று அப்பொழுதுதான், பஸ்ஸில் ஏறினதும் எனக்கு ஸ்பஷ்டமாகத் தெரிந்தது. பஸ்களைத் தயார் செய்யும் அந்நியர்கள் (அமெரிக்கா, இங்கிலாந்து) நமது தேகங்களைக் கணக்கெடுத்து வைத்திருக்கிறார்கள். ஐந்து பேர் உட்காருகிற ஸீட்டாம்! ஸயாம் தேசத்து இரட்டையர்களைப்போல, பிரயாணிகள் தோளோடு தோள், காலோடு கால், காதோடு காது ஒட்டிக்கொண்டு உட்கார்ந்தால்தானே, ஐந்து பேர்கள் உட்காரமுடியும்? சதா பஞ்சத்திலடிபடுகிற இந்தியர்களின் சராசரி தேகம் இவ்வளவுதான் பருமன் இருக்க வேண்டும் என்று வெள்ளைக்காரர்கள் கணக்கு எடுத்துத்தான் பஸ்களைத் தயார் செய்திருப்பார்கள்!

பின் பக்கத்தில் கூட்டம் நெரிசலாக இருக்கவே, ட்ரைவருக்குப் பக்கத்திலே காலியாக இருந்த இடம் என் கண்களில் பளிச்சென்று பட்டது. அங்கே போகிறேன் என்றேன் "அந்த ஸீட் (இடம்) போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு ரிஸர்வ் செய்திருக்குங்க" என்றார் கண்டக்டர். "பஸ்ஸிலே ரிஸர்வ் ஆவது என்ன?" என்றேன். "உங்களுக்குத் தெரியாதுங்க. போலீஸ் எங்களுக்குப் புருசனுங்க. நாங்க அவுங்களுக்கு பெண்சாதியிங்க" என்று கண்டக்டர் பங்கிடாகப் பதில் சொன்னார். கலிகாலத்திலே அற்புதம் இல்லை என்று சொல்லலாமா? மீசை கொழு கொழுவென்று வளர்ந்திருக்கிற கண்டக்டர், போலீசை நினைத்ததும் பெண்ணாக அதுவும் பெண்சாதியாகப் போகும் அற்புதத்தைக் காட்டிலும் விசித்திரமானது வேறு ஒன்று இருக்கமுடியுமா?

"நான் என் ஆண்பிள்ளை மாதிரி நடந்துகொண்டு, முன் ஸீட்டில் போய் உட்காரக் கூடாது" என்று எனக்குத் திடீரென்று ஆவேசம் உண்டாயிற்று. அந்த ஆவேசம் அரை நிமிஷம்தான் இருந்தது. எதையும் தீர்க்கமாய் யோசித்துத் தானே செய்ய வேண்டும்? யோசித்துப் பார்த்தேன். "நான் அங்கே போய் உட்காருவதால், ட்ரைவருக்கு இடைஞ்சல் இல்லை. பிரயாணிகளுக்கும் இடைஞ்சல் இல்லை. ஆனால் நாம் செய்கிற அற்ப காரியத்தினால், பாவம் "பெண் சாதி" கண்டக்டர், போலீஸ் புருஷனிடம் அவஸ்தைப்பட்டால், அது நல்லதா? பிறருக்கு நம்மால் உபத்திரவம் வரப்படாது" என்ற பரோபகார சிந்தனையால், முன் ஸீட் யோசனையை விட்டுவிட்டேன். நீங்கள் நம்பாமலிருக்கலாம். காங்கிரஸ் ராஜ்யம் வந்த பிறகு கூட, அனாவசியமாகப் போலீசுக்கு நான் பயப்பட வேண்டுமென்பதுண்டா!

கண்டக்டர் அடிக்கடி பெண்ணாய் மாறுவதாலோ என்னமோ, அவருக்கு ஞாபக சக்தி அதிகமாக இருப்பதில்லை. அதுவும் நாம் முழு ரூபாயையோ, நோட்டையோ கொடுத்துவிட்டு, டிக்கட் கேட்டால், டிக்கட்டுக்குப் போக பாக்கி அவர் கொடுக்க மறந்துவிடுகிறார். அடிக்கடி ஞாபகப்படுத்திக்கொண்டேயிருக்கவேண்டும். ஞாபகப்படுத்தினால், அவருக்குக் கோபம் வரும். "பணம் ஓடிப் போய்டுமா" என்பார். "ஓடிப் போகாது; அவர் கையிலிருந்து அது நம்ம கைக்கு வராது" என்பதுதான். அவருக்கு நினைவு இருப்பதில்லை.

இந்த 'சில்லறை விஷயத்தில் தான் கண்டக்டருக்கு கவனமிருக்காதே யொழிய, வேறு சில்லறை விஷயங்களில் அவ

வெட்டுக்காயம்

தீப்புண்

இவற்றை தழும்பின்றி குணப்படுத்துகின்றது

ஜாம்பெக் சமனமூட்டும் கிருமிநாசினி

வெட்டுக் காயமோ, தீப்புண்ணோ ஏற்பட்டவுடன் ஜாம்பெக் தடவினால் அவை கெடாது. ஜாம்பெக்கிலுள்ள அற்புத மூலிகை எண்ணெய் சருமத்திற்குள் சென்று, வலியை சமனப்படுத்தும். வீக்கம் குறையும். அனாவசியமாக சீழ் வடிதலை நிறுத்தும். விஷக் கிருமிகளைக் கொன்று, சீக்கிரம் குணப்படுத்தும். அசங்கியமான தழும்பு இராது. எல்லா மருந்து வியாபாரிகளும் பெட்டி ரூபா 1 அல்லது 2-4 வீதம் விற்கின்றனர். ஏஜெண்டுகள்: தாதா அண்டு கம்பெனி, பி. டி. மதராஸ்.

எப்பொழுதும் ஜாம்பெக் உபயோகியுங்கள்.

ZAM-BUK

மிருகக் கொழுப்பற்றது.

ஜ்வாலாசிங் & ஸன்ஸ்

மின்சார எஞ்ஜினியர்கள் & கன்ட்ராக்டர்கள்

வெலிங்டன் ஸினிமா கட்டிடம்

மவுன்ட் ரோட். — மதராஸ்.

ரீவைண்டிங்குகள்:

மின்சார விசிறிகள், ஏ. ஸி. அல்லது டி. ஸி. மோட்டார்கள், ஹீட்டர்கள், ஸ்டார்ட்டர்கள், ரேடியோ டிரான்ஸ்பார்மர்கள் ரீவைண்ட் செய்யப்படும்.

ஸ்டாகிஸ்டுகள்:

மரத்தில் ஸ்விச்பெட்டிகள், பில்லட்டுகள், காபிங்குகள், கேஸிங்குகள், பிளாக்குகள், பிளக்குகள் முதலியன கைவசமுள்ளன.

ஸர்வீஸ்:

எல்லாவித ரேடியோக்களும், தியேட்டர் தொனி பரப்பும் கருவிகளும் ஸர்வீஸ் செய்யப்படும்.

நிர்மாணிப்பு:

ஸ்விச் போர்டுகள், சகலவிதமான மின்சார இயந்திரங்களும் நிர்மாணிக்கப்படும்.

ஒயரிங்:

ஆபிஸ்கள், வீடுகள், அரண்மனைகள், கட்டிடங்கள் முதலிய சகல இடங்களில் உயர்ந்த ரக ஒயரிங் செய்யப்படும்.

அதிக வெளிச்சம் போடுவது:

விவாக காலங்களுக்கும், இதற்கு கச்சேரிகளுக்கும் அதிகப்படி லைட்டுகள் போடப்படும்.

ஒரு முறை பரீக்ஷித்துப் பாருங்கள்.

ருசிகரமான சமையலுக்கும், ஆரோக்யமான ஆகாரத்துக்கும் இதுதான் ரகசியம். ஒவ்வோரு சமையல் அறையிலும் இருக்கவேண்டியது.

வர்ஜீவன்தாஸ் ஹிர்ஜீ & கோ., மதராஸ்.

ஹெட் ஆபீஸ்: பம்பாய்.

பிராஞ்சுகள்: கும்பகோணம், மதுரை.

உங்கள் போட்டோக்கள்..

- என்லார்ஜ்மெண்டுகள், சம்பந்தமான சகல வேலைகளையும் பூரண திருப்தியளிக்கக்கூடிய முறையில் முதல்தரமாகவும், குறைந்த சார்ஜிலும், குறிப்பிட்ட நேரத்திலும் பூர்த்தி செய்து கொடுக்கப்படும். இரவு, பகல் எந்நேரத்திலும் ஸ்டுடியோவில் படங்கள் நேர்த்தியாக எடுக்கப்படும்.
- வெளியூர் ஆர்டர்கள் சிரத்தையுடன் கவனிக்கப்படும்.

- கூடிய சீக்கிரம் **காரைக்குடியில்** எமது ஸ்டுடியோ பிராஞ்சு திறப்பு விழாவை எதிர் பாருங்கள்.

எம். கைலாஸ் பிரதர்ஸ்,

நியூ ஸ்டுடியோ

வித்வான் பொன்னுசாமி பிள்ளைத் தெரு (பள்ளத்தெரு),

மதுரை.

நம்பிக்கைக்கு பாத்திரமானது

H. M. V. ரெப்ரிஜிரேடரே

உங்கள் தேக நலத்தைக் கெடுத்துக்கொள்ளக் கூடாது. அது நல்லதல்ல. கீழ் நாட்டில் தேகநலத்தைப் பாதுகாக்க முதன் முதலாகச் செய்யவேண்டிய கடமை ரெப்ரிஜிரேடரை உபயோகிப்பதே. மட்டமான ரெப்ரிஜிரேடரை வாங்குவதைவிட சும்மா இருப்பதே மேல். ஆனால் **H.M.V.** ரேப்ரிஜிரேடர் விசேஷமான பாதுகாப்பு அளிக்கவல்லது; நம்பிக்கையானது.



இந்த ரெப்ரிஜிரேடர்கள் தங்கள் வேலையைச் சிறப்பாகச் செய்கின்றன. இந்த ரெப்ரிஜிரேடரில் வைத்திருந்தால் பானங்கள் குளிர்ச்சியாக இருக்கும்; ஸலாடுகள், பழங்கள் கெடாமல் இருக்கும்; உணவு சுத்தமாயிருக்கும்.

டிஸ்டிரிபியூட்டர்கள் :

மகமத் இப்ராகீம் கம்பெனி,

(மே. த. கவர்னர் நியமனம் பெற்றவர்கள்.)

26-27, ரட்டான் பஜார், : : மதராஸ்.

H.M.V. REFRIGERATORS

ருக்கு மிருந்த கவனம் உண்டு. 'நகருங்க' என்று சொல்லுவதில், அவர் வாய் சலிக்கமாட்டார். ''டிக்கட்'' என்பது அவருடைய மற்றொரு ஜபம். பிரயாணிகள் இறங்கவேண்டிய இடங்களில் அவர் ரொம்ப உஷார். இவ்வளவு ஜாக்கிரதையுடனிருக்கும் கண்டக்டரைக் கண்காணிப்பதற்காக, இன்ஸ்பெக்டரை நியமனம் செய்திருப்பது தான் எனக்குப் பிடிக்கவில்லை. எத்தனை இன்ஸ்பெக்டர்களை நியமித்தால் என்ன? நமக்குக் கிடைக்கவேண்டிய சில்லறையை, நாம் கேட்டுத்தான் வாங்கவேண்டியிருக்கிறது. டிக்கட் கேட்பதற்குத்தான் அவர்கள் பொறுப்பாளிகள்.

பஸ்ஸாயிருந்தால் என்ன? பிரயாணமாயிருந்தால் என்ன? சுபாவமாயிருக்கிற சங்கதிகள் நடந்துதானே தீரும்? பக்கத்திலிருக்கிற இளைஞன்—ஏன், அந்த நரைத்த கிழவரும் கூடத்தான்—எதிரே யிருக்கும் பெண்ணை, 'கடைக்கண்ணாலும், மேல் கண்ணாலும், முழுக் கண்ணாலும் பார்க்கத்தான் செய்கிறான். பார்ப்பதில் எனக்கு ஆட்சேபம் இல்லை. யாருக்குமே இருக்காது. ஆனால் பார்க்காததுபோலும், ஏதோ அகஸ்மாத்தாகப் பார்த்தது போலும், பார்க்க விருப்பமில்லாமல் பார்ப்பது போலும் கொட்டாவி முதலிய சேஷ்டைகளைச் செய்துகொண்டும் பார்ப்பதுதான் அவ்வளவு நாகரிகமாக எனக்குப் படவில்லை. ஆசை வெட்க மறியாது என்று பெரியார்கள் சொல்லியிருக்கிறபடி, ஏதோ ஒரு தடவை நன்றாகப் பார்த்துவிட்டு, அத்துடன் நிறுத்திக்கொள்ளக் கூடாதா?

இரண்டு மூன்று பெண் பிள்ளைகள் பஸ்ஸில் சேர்ந்து கொண்டால், அவர்களுக்கு ஆண்பிள்ளைகள் கூட இருப்பதாகவே நினைவு இருக்காது போலிருக்கிறது. ''ஏம்மா! நீங்கள் கட்டிக்கொண்டிருக்கிறது எந்த ஊர்ப்புடவை'' என்பதிலே பேச்சு ஆரம்பமாகும். பிறகு அது எப்பொழுது ஓயும் என்று சொல்ல முடியாது. அவர்கள் பஸ்ஸை விட்டுக்கீழே இறங்குகிற வரையிலும் பேசிக்கொண்டுதான் இருப்பார்கள்.

இந்த சமயத்திலே, எனக்கு ஆச்சரியமாக ஒன்று தோன்றுவதுண்டு. ஆண்பிள்ளைகள் பெண்களை அடக்கியாள்கிறார்கள் என்று பொதுவாகக்கூறப்படுவது உண்மையா என்று எனக்கு யோசனை வரும். தன் மனைவியாக இருந்தால்கூட, எந்தப் புருஷனும் அந்த சமயத்தில் வாயைப் பொத்திக்கொண்டு, பெண்களின் பேச்சுப்பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறானே! இதன் மர்மம் என்ன? இரண்டு பெண்களும் ஒரு இளைஞனும் ஒரு கிழவரும் இருக்கிற இடத்திலே, நூறு ஆண் மகன்கள் என்ன கட்சி சொன்னாலும் அது பலிக்காது என்ற உண்மை நன்றாக அப்பொழுது தான் விளங்குகிறது. சண்டைக்கு வர இளைஞனும், சமாதானம் செய்யக் கிழவரும் இருக்கிறவரையில், ஏனைய ஆண்மகன்களின் ''பாச்சா'' ஒன்றும் செல்லாது.

இதனுடனே, ஓசிப்பொடியும் ஓசிவெற்றிலையும் போடுபவர்கள் மற்றவர்களிடம் உறவு கொண்டாடி, அன்புடன் விசாரணைசெய்யும் விதரணையைப் பார்க்க வேண்டுமே! ''நீங்கள் காட்டு மெரட்டூர் இல்லே'' என்று கேட்பார். இல்லை என்றாலும் விடமாட்டார். தொடர்ந்து கேள்விகளைப் போட்டுக்கொண்டும் தனக்குள்ளாகவே சமாதானம் செய்துகொண்டும், உள்ளங்கையைத் தடவிக்கொண்டும் பொடி கேட்பார். ''இல்லை; பொடி போடுவதில்லை'' என்று நாம் சொல்லிவிட்டால் போதும், பிறகு அவர் நம்மை விட்டுவிடுவார். முதலிலேயே ஆள்வருகிற ஆர்ப்பாட்டத்தைப் பார்த்து, ஜாடையாகப் பொடி போடுவதில்லை என்று குறிப்பிட்டுவிட்டால், எவ்வளவோ பேச்சு வளர விடாமலிருக்கலாம்.

''வர வர ஜீக்கோர்ட்டு தீர்ப்பு ரொம்ப மோசங்க'' என்று சொல்லி, ஒருவர் பிரசங்கம் செய்யும்பொழுது அவர் தோற்ற கட்சி என்று எளிதிலே தெரிந்து கொள்ளலாம். ஜயித்த கட்சிக்காரர் எப்படிப் பேசி இருப்பார் என்று உங்களுக்குச் சொல்லவும் வேண்டுமா?

இதுவரையிலும் பேசாத ஒருவர் திடீரென்று பேச வேண்டும் என்று நினைத்துக் கொள்ளுவார். பேசுகிறதற்கு தொண்டை இருக்கோ இல்லையோ என்று அவர் சந்தேகப் பட்டாரோ என்னமோ! ''அதோ தெரிகிற அந்தப் பாழ் மண்டபம், அந்த இடத்தில்........'' என்று நிறுத்தினார். மேலே என்ன சொல்லப்போகிறாரோ என்று நான் பயந்து கொண்டிருந்தேன். அவர் மேலே ஏதாவது சொன்னால்தானே? தொண்டையைச் சுத்தி செய்து கொள்ளுவதற்காக செய்த சத்தம் போலிருக்கிறது.

இருந்தாலும், அவரை, பக்கத்திலிருந்தவர் சும்மா விட்டுவிடவில்லை. ''அந்தப் பாழ் மண்டபத்திலருகே, என்ன நேர்ந்தது'' என்று கிண்டலாகவும் சற்று ஆவலுடனும் கேட்டார். அவர் மறுபடியும் தனது தொண்டையைச் சிக்கல் அறுத்துக்கொண்டார். சங்கீத வித்வான்கள் செய்வதைக் காட்டிலும் அதிகமாகவே, அவர் சிரமப்பட்டார் என்று சொல்லவேண்டும். கடைசியாக, திடீரென்று இடி முழக்கத்தைப்போல பேசத்துவக்கிவிட்டார்.

''என்ன நேர்ந்தது என்றா கேட்கிறீர்கள்? போன வருஷம் இதே மாதத்தில், அந்தப் பாழ் மண்டபத்தினருகே, ஆனந்தமாக, நான் கொண்டு வந்திருந்த கட்டுசாதத்தைச் சாப்பிட்டேன்'' என்றார். எல்லோரும் ''படபட'' என்று சிரித்துவிட்டார்கள்.

போன வருஷம் அந்த இடத்தில் கட்டுசாதம் சாப்பிட்டது உலகத்துக்குத் தெரியவேண்டிய முக்கியமான விஷயம் என்று அவர் எண்ணியதுதான் ஆச்சரியம். இந்தப் பேர்வழி, மதிமயக்கத்தில் ஹிட்லரைக் காட்டிலும் உயர்ந்தவராகத்தான் இருக்கவேண்டும். இவர் அந்த இடத்தில் சாப்பிட்ட சங்கதி உலகத்துக்குத் தெரியாவிட்டால், உலகம் நடக்காதல்லவா?

கடைசியாக, இறங்குகிற இடம் வந்துவிட்டது. அந்த இடத்துக்கு வந்ததும், கண்டக்டர் அடக்க ஒடுக்கமாக நடந்துகொள்ள முயல்வதைக் கண்டேன். காரணம் என்னவென்று வெளிப்பக்கம் எட்டிப் பார்த்தேன். கண்டக்டர் ஆரம்பத்தில் சொன்னாரே தமது புருஷன் என்று, அந்த வர்க்கத்தைச் சேர்ந்த ஒருவர் (ஏடய்யா,) கம்பீரமாக நின்று கொண்டிருந்தார். புருஷன் பெண்சாதியின் அந்தரங்கமான சந்திப்பு சமயத்தில் ''நாம் ஏன் இருக்க வேண்டும்'' என்று நான் கீழே இறங்கிப் போய்விட்டேன்.

இளநீர் விற்பவன்:—இந்த இளநீர் மிகவும் இனிப்பாகவிருக்கும். எதிரிலிருக்கிற பெயர் பெற்ற தோட்டத்தின் காய்கள்.

வாங்க வந்தவர்:—அவ்வளவு காய்களுமா?

''ஆமாம்.''

''இவைகள் உனக்கு எப்படிக் கிடைத்தன?''

''சொந்தக்காரரிடமிருந்து வாங்கினேன்.''

''நான் யார் தெரியுமா? நான் தான் அந்தத் தோட்டச் சொந்தக்காரன்.''

''நான் யார் தெரியுமா? நான் தான் இவ்வூரிலுள்ள பெரும்பொய்யன்.''

* * * *





இன்னுமொரு அரிய வெற்றி

எர்கோ

தென்னிந்தியாவிலுள்ள மிகச் சிறந்த தியேட்டர்

கோயமுத்தூர்

ராஜா தியேட்டருக்கு

இப்பொழுது

எர்கோ

டபிள் எக்விப்மெண்ட் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

எர்கோ படத்திற்கு பிரகாசமூட்டுகின்றது—தொனியும்
வெகு திருப்திகரமாகவிருக்கின்றது.
மற்ற மெஷின்களைவிட மலிவானவை.

திருச்சி — ரீகால் டாக்கிஸிலும்
எர்கோ டபிள் எக்விப்மெண்ட் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றது.

ஸோல் ஏஜண்டுகள்

The Sound Products Company,

162, Mount Road, Madras. | H. O. P. O. Box 78, Bombay. | 7, Brigade Road, Bangalore.

Branches at : Calcutta, Delhi & Karachi.

டயமண்ட் ரிகார்டுகள்

விசேஷ புகழ் பெற்ற
பிரபல ரிகார்டுகள்

இந்தியா பூராவும் பிரபலமானவை

இந்திய சங்கீதத்திற்கு புகழளித்த இந்திய ரிகார்டு

பிரபல வித்வான்கள்

உயரிய பாடல்கள்

டயமண்ட் ரிகார்டுகளை

க் கொண்டு உங்கள் குடும்பத்தினருக்கு சந்தோஷமளியுங்கள்.

தலைமை ஆபீஸ் :

THE DIAMOND RECORDING COMPANY,

199-5 Harrison Road Calcutta.

காட்லாக்கிற்கும், ஏஜன்ஸி நிபந்தனைகளுக்கும் எழுதவும்.

ESTABLISHED 1760

CHAS. MORGAN & Co., Ltd.,

(Incorporated in Great Britain)

314-5, Linghi Chetti Street, : : MADRAS.

Depots:—**Tuticorin & British Cochin.**

Write to us for all your requirements in paper. We hold large and varied stocks.

THE EMBLEM



OF QUALITY

Always ask for Paper Carrying "Gun" Brand-Label.
It is the Guarantee for GOOD Papers.

We Specialise in **Banks and Bonds, Tints, Kraft and Wrappings, Glazed and Unglazed Printings.**

Sole Agents in South India for

MANDER BROS' Printing Inks, & Roller Compositions

L. & C. Hardtmuth--Pencils Etc.

Telephone : 3054. **Telegrams : CANNON**

அகில இந்தியா காத்திருந்த மலிவான ஸெட்

பிலிப்ஸ்

5-வால்வ் அகில இந்திய ரிஸிவர்

இதற்குள் இந்தியா முழுவதும் மிகவும் பாராட்டப்படுகிறது

பிலிப்ஸ் 217 ஐ வாங்க அநேகர் அவசரப்படுவதன் காரணத்தை அறிந்துள்ளீர்களா ! ஏ. ஸி. அல்லது டி. ஸி. யில் வேலை செய்யக்கூடிய அதிக விலையில்லாத இந்த ஸெட் இந்தியாவிலுள்ள எல்லா ஸ்டேஷன்கள் தொனியும் அற்புதமாகக் கேழ்க்கும்.

இவ்வுயரிய சாதனங்களே முக்கியக் காரணமாகும்: 3 காங் மாறும் கன்டென்ஸர்; ஆக்டோட் பிரீக்வென்ஸி சேன்ஜர்; ஆடோமாடிக் வால்யூம் கண்டிரோல். நீடித்த அலைகள் 13 மீட்டரிலிருந்து 590 மீட்டர் வரையில் மின்சாரச் செலவு 66 வாட்கள் தான்.

பிலிப்ஸ் உத்திரவாதமிருக்கின்றது.

ரூ. 180/- அல்லது 12 மாதாந்திரவிதிப்படியும் பெறலாம்

பிலிப்ஸ்

உத்திரவாதம் ! பிலிப்ஸ் கம்பெனியார், தங்களது அதிகாரம் பெற்ற வியாபாரிகள் மூலம் விற்கப்படும் ஸெட்டுகளுக்குத்தான் உத்திரவாதமளிக்கின்றனர்.

நியூ இந்தியா

THE NEW INDIA ASSURANCE C

அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

உலகம் முழுவதும் பிரசித்தி பெற்றதும், உன்னதமான செல்வ நிலையும், உயர்தரமான நிர்வாக அங்கத்தினர்களும், சிக்கனமான பரிபாலனமும், விரிவான பாலிஸி விகிதங்களும், இணையற்ற பற்பல பாலிசி திட்டங்களும், உரிமை (Claims) கொடுப்பதில் பெரு நோக்கமும், கண்ணியமான நடத்தை அமைந்துள்ளதும், மேல் நாட்டாராலுங்கூடப் பெரியதென ஒப்புக்கொள்ளப்பட்ட, இந்திய சாம்ராஜ்யத்திலுள்ள மிகப் பெரிய இன்ஷ்யூரன்ஸ் ஸ்தாபனம்.

தலைமை ஆபீஸ் : பம்பாய்

மதராஸ் பிராஞ்சு : 4 & 5 முதல் லைன் பீச்சு, சென்னை.

சேர்மன்:—ஸர் சுனிலால் V மேடா, K. C. S. I.

ஆயுள், தீ, விபத்து, கப்பல், பஸ்ஸுகள், வாடகை மோட்டார்கள், லாரிகள், வேலையாட்களுக்கு நஷ்ட ஈடு, களவு, ஜாமீன் பத்திரங்கள், விபத்து, சாமான்கள் இன்ஷ்யூரன்ஸ், விலையுயர்ந்த சாமான்கள், நகைகள் இவற்றிற்கு பந்தோபஸ்து பாலிஸி, ஆகாயத் தபால்மூலம் அனுப்பும் சாமான்களுக்கான பாலிஸிகள் முதலிய எல்லா வகையான இன்ஷ்யூரன்ஸ்களும் நடத்துகிறது.

பொருளாதார புள்ளி விவரங்கள்

வாக்களிக்கப்பட்ட மூல தனம்	ரூபா	3,56,05275
செலுத்தப்பட்ட மூல தனம்	,,	71,21,055
மொத்தம் நிதி (31-12-1937)	,,	2,28,07,602
கொடுத்துள்ள உரிமைத் தொகை (Claims)	,,	7,00,00,000 க்கு மேல்
அமுலிலுள்ள ஆயுள் பாலிஸிகள்	,,	6,86,14,612

குறிப்பிட்ட தேவைகளுக்கான பிரத்யேக திட்டங்கள்

குடும்ப வருமான பாலிஸி: இன்ஷ்யூர் செய்துகொண்டவர் பாலிஸி முதிர்ச்சியடையுமுன் மரணமடைந்தால் மாதா மாதம் வார்சுகளுக்கும் செக் அனுப்பப்படுவதுடன் இன்ஷ்யூர் செய்த தொகை முற்றிலும் பாலிஸியில் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு கொடுக்கப்படும்.

ஐடியல் எண்டௌமெண்ட் பாலிஸி: இந்தத் திட்டத்தின்படி பாலிஸி எடுத்துள்ளவர்களுக்கு முதுமைப் பருவத்தில் பாலிஸித் தொகையும், பாலிஸி முடிவடையும் தேதி வரை சேர்ந்துள்ள லாபமும், (Bonus) சேர்த்துக் கொடுக்கப்படும். தவிர பாலிஸிதாரர் இறந்த பிறகு அந்தப் பாலிஸி மூலம் அனுகூலமடைபவர்களுக்கு எவ்வளவு தொகைக்குப் பாலிஸி எடுத்துக்கொள்ளப்பட்டதோ அதற்கு 100-க்கு 25 வீதமும் கொடுக்கப்படும்.

உத்திரவாதமான போனஸ் பாலிஸி : அவ்வப்பொழுது கம்பெனியார் அளிக்கும் போனஸ் தொகை நீங்கலாக ஒவ்வொரு ரூபா 1,000 பாலிஸிக்கும் வருஷம் 1-க்கு ரூபா 10 வீதம் உத்திரவாதமான போனஸ் அளிக்கப்படும்.

இஷ்டப்படி உரிமைத் தொகையை மாற்றிக்கொள்ள அனுகூலமளிக்கும் ஐடியல் ஆப்ஷன் பாலிஸி : எண்டௌமெண்ட், பூரா ஆயுள் (Limited) திட்டம் இரண்டும் சேர்ந்தது. பாலிஸி முடிவடையுமுன்னர், இதை எண்டௌமெண்ட் பாலிஸியாகவாவது அல்லது பூரா ஆயுள் (Limited) பாலிஸியாகவாவது அல்லது அவரவர்கள் செல்வ நிலைக்குத் தக்கபடி இரண்டும் சேர்ந்ததாகவுமாவது மாற்றிக்கொள்ளவும் செய்யலாம்.

பிரத்யேக பாலிஸி அனுகூலங்கள்

பாலிஸி காலாவதி ஆகாமல் பாதுகாப்பது, நீடிக்கப்பட்ட அஷ்யூரன்ஸ், நிரந்தரமாய் அசக்தராய்விட்டால் கிடைக்கும் அனுகூலங்கள். விபத்துக்காக பாதுகாப்பு. (விபத்து ஏற்பட்டு மரணமேற்பட்டால் அஷ்யூர் செய்த தொகையைப்போல் இருமடங்குகள் தொகை கொடுக்கப்படும்)

புதிய பாலிஸி எடுப்பதானாலும் அதிகப்படி பாலிஸி எடுப்பதானாலும்

இன்றே **நியூ இந்தியாவிடம்** இன்ஷ்யூர் செய்யுங்கள்

பூரா விவரங்களுக்கு எழுதவும்.

K. K. ஸ்ரீனிவாஸன், பிராஞ்சு மானேஜர்.

REO

எல்லையற்ற
மைல்கள் ஓடும்


ரியோ ஸ்பீட் வாகன்.


ரியோ ஸ்பீட் டெலிவரி டிரக்.


ரியோ நடுத்தர டியூட்டி டிரக்.


ரியோ கனத்தை ஏற்றிச்செல்லும் டிரக்.

ரியோ டிரக்குகள் — அதிக பளுவை ஏற்றிச்செல்லவும் — பத்திரத்திற்கும் — சௌகர்யத்திற்கும்—வேலை செய்வதில் ஏற்படும் சிக்கனத்திற்கும் — மற்றவைகளைவிட முன்னணியிலிருக்கின்றன.

அழகிய புதிய கார்களைப் பாருங்கள். பிரயாணிகள் சவாரி செய்யும் வண்டியை மாற்றியமைத்தவையில்லை. டிரக்குகளுக்குள்ள பிரத்யேக தேவைகளுக்காகவே ஒவ்வொன்றும் அமைக்கப்பட்டு கட்டப்பட்டன.

இன்றே எமது காக்ஷியறைக்கு வந்து இவற்றைக் காணும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம். இல்லையேல் இலவச புத்தகத்திற்கு எழுதவும்.

டிஸ்டிரிபியூட்டர்கள் :

ராணி (மதராஸ்) லிமிடெட்

ஜெனரல் பாட்டர்ஸ் ரோட்,
மவுண்ட்ரோட், — மதராஸ்.

நகைகள் வாங்க இதுவே சரியான சமயம்

இவ்வருஷத்திற்குள், நேரிலோ அல்லது தபால் மூலமோ நகைகள் வாங்குவோருக்கு, **சுராஜ்மல்ஸ்** ரூ. 1,000 வரை வெகுமதி யளிப்பார்கள்.

நடுவே உள்ள தரகர்கள்—நகைகளை மதிப்பிடுபவர்கள், நகைகளின் குணத்தைப்பற்றிய நிபுணர்கள் காரணமாக நகைவாங்குவதே மிகப் பிரயாசையானதாகிவிட்டது. சென்ற அரை நூற்றாண்டாக சுராஜ்மல், பொது மக்களுக்கு நேரடியாகவே ஊழியம் புரிந்து வருவது உங்களுக்குத் தெரிந்ததே—இது மிகவும் சுலபமான மார்க்கமுமாகும்.

இந்த அரை நூற்றாண்டில் தபால் மூலம் நகைகளை அனுப்பி வியாபாரம் செய்து வந்திருப்பதிலிருந்து பொது மக்கள் இந்த ஸ்தாபனத்திடம் வைத்துள்ள நம்பிக்கை தெரியவரும்—ஸ்தாபனத்தின் நம்பிக்கை, அவர்களது யோக்யப்பொறுப்பு, ஊழியத்தின் தன்மை இவற்றிற்கான உயரிய அத்தாக்ஷி இதைவிட வேறு இல்லை.

ஒரே விலை என்ற காரணமாகத்தான் 'தபால் மூலம்' வியாபாரம் செய்வது சாத்தியமாயிற்று. பாமர மக்களாயினும், அதிக விவரம் தெரிந்தவர்களாயினும் சரி, எல்லோருக்கும் ஒரே விலை இதனால் நடுவேயுள்ள தரகர்கள் லாபமடைய இடமில்லை.

சுராஜ்மல்ஸ்

வெளியூர்களில் நகைகள் வாங்குவது கஷ்டமான காரியமாகும். நீங்கள் கொடுக்கும் அதிக விலைக்கு கொஞ்சமும் மதிப்பில்லாதமட்ட ரக சரக்குகள், உங்கள் ஸ்நேகிதர்களாகச் சொல்லி வரும் இத்தரகர்கள் உதவியால் விற்கப்பட்டு வருகின்றன. உங்களுக்கு பூரா திருப்தி—உத்திரவாதம் சரியான விலைக்கான சரியான நகைகளை அளிக்கும், சென்னையிலுள்ள இப்பெரிய ஸ்தாபனத்திற்கு ஏன் நேரடியாக ஆர்டர் செய்யக் கூடாது?

313 ESPLANADE MADRAS.

இலவசம்

ரூ. 1,000 வெகுமதி

உங்களுக்காகக் காத்துக்கொண்டிருக்கின்றது.

இந்த இலவச திட்டம் சம்பந்தமான தகவல்கள் கேட்போருக்கு அனுப்பப்படும்.

Printed and Published by T. S. Viswanatha Iyer B. A., at the "Swadesamitran" Power Press, Mount Road, Madras.
Editor—C. R. Srinivasan, B. A.